முன்றுறையரையர்

இயற்றிய

# பழமொழி நானூறு

பதினெண் கீழ்க்கணக்கு

முன்றுறையரையர்

இயற்றிய

# பழமொழி நானூறு

EDITED BY

T. Chelvakesavaroya Mudaliyar, M.A.

*Pachaiyappa's College, Madras*

MADRAS

PRINTED AT THE DIOCESAN PRESS, VEPERY

*Registered.* 1929 விலை ரூ. 2



பதிப்பாசிரியர்

திருமணம். செல்வக்கேசவராய முதலியார், M.A.

# Prefatory Note

'THERE is a great mass of noble writing ready to hand in Tamil and Telugu folk-literature, especially in the former. To raise these books in public estimation, to exhibit the true products of the Dravidian mind, would be a task worthy of the ripest scholar and the most enlightened government. I would especially draw attention to the Eighteen Books that are said to have received the sanction of the Madura College, and are among the oldest specimens of Dravidian literature. Any student of Dravidian writings would be able to add a score of equally valuable books. If these were carefully edited, they would form a body of Dravidian classics of the highest value.' Thus wrote Mr. Charles E. Gover, member of the Royal Asiatic Society, in his introduction to the Folk-Songs of Southern India, printed in 1871.

*Palamoli Nánúru* is one of the two yet unpublished of these Eighteen Books. The author of this book is a Jain King of Munrurai in the Pandiyan kingdom. The book is so called because every stanza has a *palamoli* (proverb) tacked to it at the end. The proverbs are found altered here and there so as to suit the metre.

Though some of the proverbs lost currency in the course of time, most of them continue to this day. Proverbs are found occasionally used in other books of the series, and also in later works. But there is not to be found any other work in the ancient or the medieval

classics in which proverbs are used so predominantly. This is the most characteristic feature of this work.

A *sútram* in Tolkàppiyam explains the nature and usage of proverbs. The four hundred proverbs used in this work were current in the time of the Last Academy at Madura. They are said to be 'ancient proverbs' in the author's preface. This work must, therefore, prove a valuable record for the antiquary interested in the ancient civilization of the Tamils.

In almost every stanza the author addresses a king (perhaps the then Pandiyan) or some lady in the third line. The first two lines generally contain what the author wants to inculcate. The last line is a proverb. The analogy between the subject matter and the proverb in many stanzas is remarkable, and in some instances ingenious, though occasionally it is obscure as the usage of some of the proverbs is not now understood. In some stanzas the proverbs serve as similes; in others the truth of the proverb is illustrated by some classical allusion.

Though classical usages find a place here and there, the diction in this work is not so happy as in *Náladi* and *Kural*. The style is pointed—characterized by distinctness of meaning and pithiness of expression. The author is more a scholar than a poet. What charm there is in the book is afforded by the proverbs which rivet the attention of the reader to what is said in every stanza.

The author, though a Jain, is not of the orthodox; in some stanzas where he refers to religious truth, he appears to be free from all prejudice. His reference to certain chieftains famous for liberality and to certain kings of the

age of the Sangam and his borrowing from *Kural* and *Náladi* lead us to infer that *Palamoli* might have been one of the later works of the Eighteen *Kilkanakku*. Some stanzas from this work are quoted by Nachinarkiniyar in his commentaries. About one hundred and fifty stanzas are found included in an old yet unpublished poetical anthology named *Purathirattu*.

Like the others of the series, this work treats of *Purushártham* (objects suitable for a man). The work, as it is found in the manuscripts, is only a collection of notes from life, some of which are very valuable and practical hints and suggestions not found even in *Náladi* and *Kural*. It is matter for regret that the author did not himself classify and arrange his notes. The note under 'இருகயவுண்கள்' (See the Tamil preface) by the anonymous commentator who paraphrased the whole book, also shows that there was no attempt made at classification and arrangement.

Mr. Subbaraya Chettiar, Tamil Pandit of the old Normal School (now Teachers' College), printed the bare text for the first time in 1874, classifying the contents into thirty-nine chapters of ten stanzas each (his manuscript copy was perhaps incomplete). Mr. Arumukam Nainar, Tamil Pandit of the National High School, Trichinopoly, printed the text in 1904 as found in the manuscripts. Some of the stanzas in both these editions are not in accordance with the old paraphrase.

Having on hand my father's manuscript copy, I entertained the idea of publishing this work with the old paraphrase many years ago. As the old paraphrase is of very little use to ordinary students, I prepared

*Padavurai* and *karuthurai*, and added notes wherever necessary. To enable them to grasp the contents comprehensively, all the stanzas are classified under five sections, each comprising a number of minor divisions, and a heading is given to each stanza.

All the manuscripts, so far as I have seen and heard of them, are incomplete. Wherever the paraphrase is incomplete, I have inserted dots. My thanks are due to Messrs. S. Anavarata Vinayakam Pillai, M.A., L.T., University Tamil Reader, A. Singaravelu Mudaliar, Tamil Pandit of Govindu Naicker's School, Madras, and T. Kanakasundaram Pillai, B.A., Superintendent of Vernacular Studies, Christian College, Madras, for lending their manuscript copies, and to Mr. V. O. Chidambaram Pillai, for the help rendered while the work was passing through the press.

PERAMBUR, T. C.
*December 1, 1916*

# CONTENTS


## WORSHIP OF THE DEITY

### I

#### 1. Learning

1. Learn when young : you cannot when old.
2. The more you learn, the more you realize your ignorance.
3. Study books which would be instrumental in destroying birth.
4. Many are the advantages of learning.
5. Better gather from the discourses of the great than from the cold page.
6. Family vocation comes by instinct.
7. The learned know the value of the learned.
8. The learned know the excellence of the learned.
9. Modest are the learned; themselves praise the illiterate.
10. Blamable deeds of the learned appear conspicuously like the spot in the moon.

#### 2. Illiterate Men

11. An abstruse meaning given by an illiterate man is not worth attention.
12. No learning: no ingenuity.
13. An illiterate man cannot well express an idea, however ingenious.
14. A subtle idea explained to the illiterate is only misunderstood.
15. Good advice to the illiterate ends in harm to the adviser.
16. A challenge of the illiterate, to the learned, though armed with a few chosen words, brings dishonour to themselves.

### 3. Knowing the Tone of an Assembly

17. Understand the capability and inclination of an assembly before you speak.

18. Two persons should not speak simultaneously in a debate.

19. An answer which has no bearing whatever upon the question, is like dressing the nose when the knee is bruised.

20. The illiterate who presume to speak in a learned assembly ought to be dreaded and avoided.

21. The speech of the illiterate in a learned assembly is like a song of a yokel sung in a village of bards.

22. The sounding by the illiterate of the knowledge of the learned is ridiculous like examining the teeth of an elephant.

23. The illiterate speaking despicably of the learned do themselves harm.

24. An illiterate man who praises himself in an assembly of the ignorant is like a coward who, dreading the valour of his enemies on the field, darts his arrows on old pots at home.

25. Giving advice to any one of an assembly of fools, is like pouring mango juice into the sea.

### 4. Knowledge

26. The greatness of knowledge is pre-eminent.

27. One who has knowledge shines better than a thousand who have no knowledge.

28. Learning is of no avail without commonsense.

29. With the wise associate the wise.

30. The wise do not approach the ignorant.

31. The wise know their own nature.

32. The merit of the wise cannot be eclipsed.

33. Knowledge is better than wealth.

### 5. Good Manners

34. Persons of high birth and their good conduct.

35. Do not despise the good words of others.

36. Conduct yourself in accordance with your good nature.

37. Conduct yourself so as not to be misunderstood by others.

38. Rectify yourself before you attempt to rectify others.
39. Avoid scandalous deeds even when your good is at stake.
40. Deprive scandal of its tongue by virtuous conduct.
41. Scandal is no scandal to those who do not feel the shame thereof.
42. Slanderers are not in want of words.

6. Avoid Inflicting Evil

43. Do no evil to the poor.
44. Do nothing that will cause sorrow to others.
45. Do not despise and distress poor relations depending upon you.
46. Evil inflicted on others in the forenoon will recoil on you in the afternoon.
47. The tears of the oppressed prove fatal to the oppressor.
48. Attempt not to ruin the wealthy and influential, for you draw evil on yourself.
49. Distress not those who distressed you.
50. Return not evil for evil.

7. Avoid Anger

51. The great are not provoked by the evil deeds of the mean.
52. He is a fool whose anger cannot be appeased. Avoid him.
53. Guard against anger and all evils vanish.
54. Do not be provoked by false reproaches directed against you.
55. Do not mind the reproach of fools.
56. Why should you be affected when a person slanders you to please your enemy who obliged him ?
57. Would the learned return the base words of fools ?
58. Do not lose patience and revile one who reviled you.
59. Bearing patiently the cruel deeds of others begets praise.

8. Avoid Offence to the Great

60. Do not pass through an assembly of the great.
61. Do not fall out with the great uttering harsh words.
62. Do not vex the great.

63. Would the great bear patiently more than once?
64. One who taxes the patience of the great meets with destruction.

### 9. Praise

65. Impropriety of praising oneself.
66. Do not accept undeserving praise.
67. Avoid praising despicable persons who flatter themselves.
68. To praise a person in terms inappropriate is as bad as to praise one among the deserving many.

## II

### 1. Nature of Great Men

69. The greatness of the great is not surpassed.
70. They persist in rectitude even in adversity.
71. From magnanimity they swerve not even in adversity.
72. Even in distress they do not fall short in the estimation of the wise.
73. They excel in magnanimity even though they be illiterate.
74. Even feigned ignorance adorns them.
75. They do not wound any one's feelings in an assembly.
76. They do no dishonourable deeds in private.
77. They avoid friendship with the wicked.
78. They do not covet others' property even in distress.
79. The faults of the great are as glaring as the brand on a white bull.
80. The faults of the vulgar are unnoticed while even a single fault of the great glares as a beacon light.

### 2. Deeds of Great Men

81. They fulfil established duties even when in want.
82. They fulfil established duties even incurring debt.
83. They speak the truth impartially.
84. They continue to be friends even with those who have wronged them.
85. They continue to do good even to friends who are not good-natured.
86. They are kind even to enemies when they suffer misery.

87. They would condescend to live even with the vulgar for their sake.
88. They would condescend to allow the vulgar to move in their company.
89. The adversity of the great is better than the prosperity of the vulgar.

### 3. Nature of the Vulgar

90. Though they move in good company, they do not improve in their nature.
91. Though they associate with the great, the vulgar should not be mistaken for the great.
92. They are incapable of doing what the great do.
93. The vulgar cannot be taught wisdom.
94. The vulgar are stubborn.
95. Their nature never changes.
96. They never rectify the vicious course of their lives.
97. They fear not scandal.
98. They persist in scandalous deeds without finding means to avoid them.
99. They rejoice at the sight of drink.
100. Though chastized they persist in evil.
101. Always they do sinful deeds.
102. Notoriety of the vulgar.
103. None good among the vulgar.
104. The evil of forsaking the good and fostering the vulgar.
105. They do not deserve honours that are due to the great.
106. They cannot acquire greatness, though wealth they may acquire.

### 4. Deeds of the Vulgar

107. Their slandering the great is like the barking of dogs at the moon.
108. They preach heterodoxy.
109. Doing good to them is like removing the tick from the face of the tiger.
110 Irreclaimable even to those who suffered for them.
111. The vulgar turn against the person who intervenes in their quarrel with their enemy.

112. Provoking them in their own house is like removing the linch-pin from the carriage you are driving in.
113. Do not live with them.
114. They bring misery upon themselves by their own words.
115. Back-biters never mend.
116. They cannot be silenced.
117. They make the innocent who point out their faults, appear to be guilty.
118. They reveal not the truth except in a law court.
119. All fear their bad conduct as they fear a mad man.
120. They annoy others like the gravel-stone in one's shoe.
121. They dismiss faithful servants without any cause.
122. The prosperity of the vulgar and the adversity of the virtuous are as unnatural as the floating of a grinding stone and the submerging of a gourd.
123. Is there no poison for the extirpation of the vulgar ?

5. Friendship

124. The virtuous feel as if their friends are incorporated with themselves.
125. Thoughts and words agree among friends.
126. Separation from friends is very painful.
127. Mere words cannot relieve friends from their distress.
128. Accept friendship whoever the person may be that offers it.
129. Do not avoid new friends for the sake of old friends who have no affection for you.
130. Do not expose the weakness of your chosen friends.
131. Do not be indignant so as to cause ruin to a friend whom you have established in life, though he is really in fault.
132. Bear patiently the evil done by a friend as though you were the cause of it.
133. Reveal your wants to those who can sympathize and afford relief.
134. The impoverished have no friends.

6. Forbidden Friendship

135. Those who befriend with a purpose.
136. Those who help not in distress.

137. Those who pray for their friends after their death, without rendering help when they were alive.

138. The vulgar readily believe the scandal against their friends, and thus their friendship ends in evil.

139. Friendship with those who are not friendly produces no good.

140. Give up the friendship of those who are indifferent.

141. Persons who pretend to be friendly with both the parties who are enemies, and increase their enmity, are like a brand burning at both ends.

7. Discerning Others' Nature

142. Discerning one's nature by one's deeds.

143. Sharpness of the eye.

144. Face is the index of the mind.

145. Those who can read one's face understand one's thoughts.

146. One's birth reveals one's disposition.

147. One's disposition reveals one's birth.

148. Know one by one's company.

III

1. Perseverance

149. Every one must help himself.

150. Though illiterate, the wise man accomplishes what he undertakes.

151. Without pains no one prospers.

152. One never thrives unless one makes the best of what one owns.

153. Nothing impossible to the indefatigable.

154. Before undertaking to do anything, scrutinize your resources, your friends' resources and the result of the attempt.

155. With proper means nothing is impossible.

156. Do nothing which will stand in the way of approaching fame. Persevere and you will find the necessary ability latent in you.

157. One who does not stick to one patron never thrives.

158. What you have undertaken will end in loss, if you leave it in the hands of an unsteady person.

159. Do not think of entrusting to another what you can do yourself.
160. Do not bemoan your fate, but try to remove your misery.
161. Miscellaneous.

## 2. Accomplishing One's Purpose

162. Accomplish your purpose by acting according to the nature of the persons concerned.
163. The evil of making an enemy of one who has been your support.
164. Use kind words so as to get your work done by others cheerfully, even though they are your intimate friends.
165. Get your work done by others without finding fault with them.
166. Get your work done by others by doing what will endear you to them.
167. A business in which an idler is employed is never accomplished.
168. No man will do your work without compensation.
169. Supervise frequently those who do your work.
170. Do not entrust your business to the vulgar.
171. Engage intelligent persons to do your work.
172. What is given to an educated employee is never lost.
173. Do not engage dishonest persons to do your work.
174. Get rid of useless employees without exposing their faults.
175. A dishonest employee sent on your business to a distant place never returns.
176. Business undertaken without a knowledge of its defect fails even when you are advised by an intelligent man.

## 3. Preserving Secrets

177. Confide in none in a business requiring secrecy.
178. Remove the ignoble when you hold secret council.
179. Do not reveal secrets to one before sounding one's sincerity.
180. Do not reveal secrets to the vulgar.

181. Secrets are preserved by the wise, but they are made public by the vulgar.
182. If those who reveal secrets to friends without scrutinizing them suffer, what about those who confide in the insincere?

### 4. Acting with Discrimination

183. Every man is the cause of his misery.
184. Even educated persons of good birth sometimes speak indiscriminately.
185. Be guarded in speaking out even what you have seen.
186. There is no use of a man interfering in a quarrel between two persons, who would not take his words.
187. Seek the good near at hand, however small it may be.
188. Do what the people want you to do, even though it is forbidden by the great.
189. Avoid deeds which are likely to bring in misery.
190. There are those who take an ell if you give them an inch.
191. Sweet words never cause misery.
192. Preserve your character, though you may have to use tact in dealing with the good and the bad.
193. A man who has lost anything is apt to suspect even great persons near him; do not therefore take offence when he suspects you.
194. Beware of hypocrites.
195. Miscellaneous.

### 5. Wealth

196. Influence of wealth.
197. The business of the wealthy prospers.
198. Men who have anything to accomplish will of their own accord go to the wealthy.
199. All praise the wealthy.
200. Wealth and its possessor protect each other.
201. A little saved daily swells into a large fortune.
202. Do not despise a person having a small capital; he may eventually become wealthy.

203. The wealth of persons with a large income is inexhaustible.
204. The wealthy do not stoop even when impoverished.

### 6. Safeguarding Wealth

205. Earn and save enough to sustain you and your relations.
206. Safeguard your property yourself; do not entrust it to others.
207. Keep your valuable property in a safe place.
208. Savings left with the vulgar for custody are lost for ever.
209. Your property left with the vulgar is not fruitful to you.
210. It is impossible to recover property once let slip out of your hands.
211. What is lent never returns.
212. Demanding a debt produces unpleasantness.

### 7. Wealth that Profits Not

213. Ill-got wealth will not do for charity.
214. Wealth acquired by the uneducated brings only misery to them.
215. Even some educated persons are close-fisted, neither giving their wealth to others nor enjoying it themselves.
216. A miser's wealth is robbed by others.
217. Wealth loses its charm when it is not spent in charity.
218. What though they fear sin or not—those who do not spend their wealth in relieving the needy?
219. The wealth of persons not spent in charity, will not serve them in their next birth.
220. It is not commendable to help strangers in preference to your distressed friends and relations.
221. Even the bad acquire wealth as the result of good deeds in their former birth.
222. Some pretend to help, but do not.
223. Some promise to help while they cannot.
224. They get nothing who beg of the hard-hearted.

225. One who does not give to the poor who expect his help cannot obtain beatitude.
226. That which is given to the discontented is only so much lost.

### 8. Fate

227. Perseverance is of no avail when fate prevails.
228. Our actions are influenced by our fate.
229. Miseries doomed to happen do happen.
230. Whatever is doomed will happen, will ye nill ye.
231. Fortune approaches only those for whom it is destined.
232. One cannot acquire large wealth in this birth unless one had laid up good deeds in one's former birth.
233. Wealth arrives only at the time destined.
234. People escape any danger if they are destined to live.
235. Fate transforms even evil into good.
236. One prospers according to the good deeds done in one's former birth.
237. No good to those who are ill-starred.
238. Distress caused by enemies is the effect of deeds done in one's former birth.
239. There are none who do not reap the benefit of good deeds done in their former birth.
240. The wise do not fear impending evils.

## IV

### 1. Royalty

241. The king should chastise the guilty though they be dear to him.
242. Youth and old age are left out of consideration in the dispensation of justice.
243. The king must be impartial to the rich and the poor.
244. Collect tax without teasing the subjects.
245. Collect tax in whatever form, without leaving arrears.
246. To collect oppressive tax from the subjects and protect them is not good policy.
247. There is no remedy for the subjects if the king turns out a tyrant.

248. Those kings are impoverished who do not quell their enemies and dispense impartial justice to their subjects.
249. Enemies even with powerful armies cannot conquer a king who is kind to his subjects.
250. A kind sceptre quells the might of enemies.
251. No man's authority can overwhelm the sovereign's authority.
252. Kings can make or unmake their faithful dependants.
253. It would prove dangerous to the king, if he raises to his level those who are bent on self-aggrandizement.
254. You cannot but submit when the king unjustly enslaves you.
255. Do not entrust mean persons with authority.
256. Kings can by their words make very submissive even those who did immense evil to them.
257. Those who approach the great never go unbenefited.

### 2. Ministers

258. The king's court is an index of his capability.
259. As is the king so are his ministers.
260. The decision arrived at in a crisis by the king who has not many wise ministers, is not good.
261. A king should attract capable ministers to his service.
262. Ministers who are masters of their minds, words and deeds are the cause of people's prosperity.
263. A king should accept the advice of his ministers though it may be disagreeable at first.
264. If the king swerves from the right path, the ministers redeem him even by means of deception.
265. The learned will not do anything which will provoke the king, even if he should do sinful deeds productive of evil.

### 3. How to Serve under a King

266. What is the good of idling away your time without doing what you have been ordered by the king?
267. One who does what was ordered by the king is eventually benefited.
268. Relations requested to do something by the king should do it at any risk.

269. They obtain very valuable things who do what pleases the king without breaking off from him when he frowns.

270. The credit and benefit go to him who has successfully accomplished a task ordered by the king.

271. Those who are attached to powerful kings never fear others.

272. The people esteem those whom the king esteems.

273. Those who are attached to the king need not ask for any favour.

274. It is not desirable to obtain favours through servants when you are familiar with the king.

275. Objects can be realized when properly represented to the king at the proper moment; hence a servant in the zenana can help better than a minister in the court.

276. Do not aim at things desired by kings.

277. Do not despise a fallen king ; he may yet have the power to harm you.

278. He who intercedes between two kings suffers evil.

279. Some win over the king by money unlawfully earned in his service.

280. To murder treacherously the king who had favoured and advanced you is to bring down ruin upon yourself.

281. Do nothing which may arouse malice in the king.

282. To frown upon the king is to put an end to oneself.

283. Do not tax the patience of the king by repeating what would offend him.

284. When a person is falsely slandered before a king, try to convince the king of the falsehood.

### 4. Enemies

285. They attain no fame who have no strength of their own, though they have powerful friends.

286. Nip your enemy in the bud.

287. Do not wait till your enemy harms you.

288. Extirpate your enemies by any means.

289. Your enemies will have no confidence in you even if you protect them.

290. You cannot make peace with enemies who hate you bitterly.

291. Do not voluntarily make an enemy of one who is more powerful than you.

292. Do not incur the enmity of those who are friends of the powerful.
293. It is wrong to fight with the strong.
294. It is not good to provoke powerful enemies.
295. Braggarts who provoke the stronger enemy lose their lives.
296. Old enemies never become faithful friends.
297. Feigned friendship is worse than open enmity.
298. Are open enemies so dangerous as feigned friends?
299. To seek passionately the death of an enemy already conquered is not commendable.
300. It is not worth your while to make the weak your enemy.

5. How to Put Down Enemies

301. Personal beauty is potent in winning over enemies.
302. Submitting silently to the strong and behaving overbearingly to the weak make you appear strong though you are weak.
303. In spite of your personal bravery, secure the help of many persons to win your enemies, weak though they be.
304. When a strong enemy prepares to attack you, seek an ally who will press him in the rear.
305. Try to win over to your side those who are capable of helping your enemy.
306. Create an enemy to your enemy: you may then easily conquer him.
307. Crush your enemy with the help of his enemy.
308. Root out your enemy with the help of his feigned friend.
309. Do not befriend the enemy whom you failed to conquer.
310. Four ways of winning your enemy.

6. Warriors

311. True warriors prove their valour by open fight in the battle-field.
312. One who would die for his king would not go over to the enemy's side.

313. One who cannot fight against the enemy, and yet complains that he is not honoured by the king, goes to ruin.
314. Warriors fight out bravely to the end whether the king recognizes their valour or not.
315. Let others but not yourself praise your victory.
316. Deeds, not words, to put down your enemy.
317. However strong one may be, it is dangerous to attack an enemy far stronger.
318. Having once boasted before the king's assembly that you will conquer, do not shrink from the enemy without venturing for victory.
319. It is ignoble to overwhelm the weak mercilessly, while you yield without resistance to the strong.
320. Cowards, though secure in a well-fortified place, fall into the hands of the enemy out of fear.
321. Braggarts seek the patronage of the king by boasting of their valour.
322. Some obtain their bread by boasting of their heroic ancestors.
323. A fool can never become a hero.
324. A king, who has no enemy stronger than himself, is not in quest of young warriors.
325. Those who are weak ought to make their army appear portly rather than attack the enemy.
326. Having refused to give their daughter in marriage to the king, the women of the warrior clan declare war against him.

## V

### 1. Household Life

327. Miscellaneous.
328. Be contented with what you obtain from your friend who heartily supports you.
329. Though dire poverty oppresses you at home, keep up decent appearance in public.
330. Those well-to-do persons are fortunate whose wives do things untold and treat guests hospitably.
331. A father must anyhow make his children walk in virtuous ways.
332. Mothers are partial to some of their children.

333. A lady refusing the intervention of a bard on behalf of her husband.

334. Keep away from women; their looks quell one's bashfulness.

335. Do not enter all alone even a friend's house.

336. There is no good of keeping watch over a woman who will not guard herself.

337. Let not the rich go to the poor as guests, as it taxes their resources heavily.

338. Without kind words all the help rendered to relieve the poor becomes useless.

339. It is real penance to be equitable to all whether they treat you ill or well.

340. Return anything entrusted to you without delay when the owner wants it.

341. It is good to have one to help you.

342. It is not commendable that one who has renounced the world should eat flesh when affected by disease.

343. Why resort to animal sacrifice, when you can obtain salvation by kindness to all creatures.

344. Be ever grateful to one who has done you any good, however small.

345. Even though one who has done good offends you, it is not desirable that you should offend that man.

346. To plot evil against your benefactor is to lay the axe on the branch that supports you.

347. To join the enemy of your benefactor and slander him is to set fire to the house which gave you shelter.

### 2. Relations

348. What is the good of the persons who do not sympathize with those who seek their help?

349. What are the poor to do if they are not helped by their rich relations? They must only help themselves.

350. One's true relations are those that relieve him in distress.

351. However indifferent relations may appear to be yet they render help eventually.

352. Relations, though unkind before, will not stand aloof when they find you in overwhelming distress.

353. Take advice from relations though their remarks be cutting.
354. Render help like a relative to one who regards you as such.
355. It results in unpleasantness even if brothers live long together.
356. Do not gamble with your relations.

### 3. Doing Virtuous Deeds

357. It is commendable that the wealthy should do virtuous deeds, and at the same time be merciful.
358. Real treasure is not money hoarded, but what is spent in doing virtuous deeds after satisfying one's wants.
359. When one gets wealth, let one spend it in doing virtuous deeds so as to benefit one in the next birth also.
360. One who does virtuous deeds gets praise in this world and blessings in the other world.
361. Do virtuous deeds before you die.
362. Induce a wealthy man to do deeds of virtue.
363. The good induce others to do deeds of virtue if they be negligent.
364. Deeds of virtue, when directed towards the deserving, bring benefits in the next world.
365. Do deeds of virtue as far as possible.
366. Do deeds of virtue uninterruptedly.
367. Do excellent deeds of virtue at least for a short time, though you have been negligent for a long while.
368. Spend your money in deeds of charity, because many are ready to usurp it.
369. You cannot prevent Death by the money saved; spend it in deeds of charity.
370. Mercy is the source of virtue. Virtuous deeds without mercy are of no avail.
371. Simulation of saintly virtue brings scandal in this birth, and also tethers one to a next birth.

### 4. Liberality

372. Spend a little in this birth and get a large return in the next.

373. Relieve the miserable. What you save and hide will not serve you but only the king.

374. Riches, lying idle, when discreetly utilized in charity, produce everlasting good.

375. Noble are those who relieve the wants of the poor without being asked.

376. Those who are accustomed to be liberal relieve the poor even when in straitened circumstances.

377. However poor you be, give what you can spare to the needy, though they may deprecate your gift. Alms-giving never made any man poor.

378. The more you spend in charity, the more your wealth increases.

379. Gifts are in accordance with the nobility of the donors; not in accordance with the state of the recipients.

380. Those who are naturally liberal give their best without desiring praise.

381. Even in straitened circumstances, the liberal give their best.

382. True liberality consists in giving away whatever one has to any that asks for it.

383. Those who give for fame are like those who work for wages.

384. When more than one ask for anything simultaneously, even a benevolent man hides it.

385. A person who aims at anything great should not seek the patronage of one who cannot fulfil his desire.

386. There can be no remedy when the king takes away the surplus wealth of his subjects.

### 5. Salvation

387. Even the estimation of kings is not desirable. Self-control is all-in-all for this as well as the next world.

388. Do the needful in time for the next world.

389. What is the good of this body, if after successfully performing household duties, you do not assume the duties of an ascetic?

390. Those who waver between household life and ascetic life, do not get the blessings either of this world or of the next.

391. Death is not scared away by one's wealth, fame, strength, beauty, youth and birth. (The wise, therefore, renounce the world).

392. Give up your desires so as to attain salvation.

393. Infatuated by transitory pleasures, some continue in household life without embracing ascetic life.

394. If you adhere to household life, you are undone. Wives and children are so many fetters.

395. Why do you have regard for the body after forsaking your relations and riches ?

396. One's good deeds, however numerous, are not enough to cancel one's bad deeds.

397. Birth disappears when the causes thereof are ripped off.

398. Habit becomes second nature; avoid, therefore, any habit which will stand in the way of salvation.

399. Hold fast what is good among the tenets of the various religions ; it gives you the greatest blessing.

# பதினெண் கீழ்க்கணக்கு விளக்கம்

## பதினெண் கீழ்க்கணக்கு

*வனப்பிய றூனே வகுக்குங் காலைச்*
*சின்மென் மொழியாற் றூய பனுவலோ*
*டம்மை தானே அடிநிமிர் பின்றே*

"சிலவாக என்பது எண்ணுச் சுருங்குதல். மெல்லியவாய்ச் சிலவாய சொற்கள்" எழுத்தினுன் அகன்று காட்டாது சிலவெழுத்தினுன் வருவது. அடிநிமிராதென்றது ஐந்தடியின் ஏறாதென்றவாறு. தாயபனுவலோ டென்றது—இலக்கணஞ் சொல்ல எடுத்துக்கொண்ட அறம் பொருள் இன்பமென்னும் மூன்று மன்றியும் வேறு இடையிடைதாய்ச் செல்வது என்றவாறு. அஃதாவது பதினெண் கீழ்க்கணக்கு எனவுணர்க. "அதனுள் இரண்டடியானும் ஐந்தடியானும் ஒரோ செய்யுள் வந்தவாறும், அவை சிலவாய மெல்லிய சொற்களான் வந்தவாறும், அறம் பொரு ளின்பமென அவற்றுக்கு இலக்கணங்கூறிய பாட்டுப் பயின்றுவருமாறும், கார் நாற்பது களவழி நாற்பது முதலாயின வந்தவாறும் கண்டுகொள்க".—தொல்காப்பியம்—பொருளதிகாரம்—செய்யுளியல்—236—ரு.

*அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதி*
*அறம்பொரு ளின்பம் அடுக்கி அவ்வகைத்*
*திறம்பட வருவது கீழ்க்கணக் காகும்*

—பன்னிரு பாட்டியல்

## நாற்பது

*கால மிடம்பொருள் கருதி நாற்பான்*
*சால வுரைத்தல் நானூற் பதுவே.*

காலமும் இடமும் பொருளும்பற்றி நாற்பது வெண்பாப் பொருந்த வுரைத்தல் நாலூற்பதாம். காலம்பற்றி வருவது கார்நாற்பது. இடம்பற்றி வருவது

களவழிநாற்பது. பொருள்பற்றி வருவன இன்னாநாற்பது இனியவைநாற்பது. இன்னலாக்குதலை இன்னாவென்றும் இனிமையாக்குதலை இனியவை யென்றுங் கூறினர்.—இலக்கண விளக்கம்—பாட்டியல்—91—சூ.

## ஐந்திணைச்செய்யுள்

உரிப்பொரு டோன்ற வோரைந் திணையும்
தெரிப்ப தைந்திணைச் செய்யு ளாகும்.

புணர்தல் முதலிய ஐந்து ஒழுக்கமும் விளக்கும் குறிஞ்சி முதலிய ஐந்து திணையினையும் தெரித்துக் கூறுவது ஐந்திணைச் செய்யுளாம்.—இலக்கண விளக்கம்—பாட்டியல்—89—சூ.

## முதுமொழிக்காஞ்சி

பலர்புகழ் புலவர் பன்னின தெரியும்
உலகியல் பொருண்முடி புணரக் கூறின்று.

எல்லாரும் கொண்டாடும் அறிவுடையோர் குற்றம் நீக்கி ஆராயும் உலகத்தியலுள் முடிந்த பொருளாகிய அறம்பொருளின்பத்தை அறியச்சொல்லியது.—புறப்பொருள் வெண்பாமாலை — பொதுவியற் படலம்—காஞ்சிப்பொதுவியற் பால—1.

ஏதமி லறமுதல் இயல்பிவை யென்னும்
மூதுரை பொருந்திய முதுமொழிக் காஞ்சி.

—இலக்கண விளக்கம் - 619 - சூ.

கழிந்தோர் வினை ஒழிந்தோர்க்குக் காட்டிய
முறைமையாகும் முதுமொழிக்காஞ்சி.

—திவாகரம் - ஒலிபற்றிய பெயர்த்தொகுதி - 126.

காஞ்சியின் பொதுவிலக்கணமாவது:

பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே.

—தொல் - புறத்திணை - 23 - சூ.

# பதினெண் கீழ்க்கணக்கு

**நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்**
**பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்**
**இன்னிலைசொல் காஞ்சியுடன் ஏலாதி யென்பவே**
**கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.**

1 **நாலடியார்**—(ஜைனமுனிவர்கள்)—நானூறு வெண்பாக்களை யுடையது. பதுமனார் என்பவர் இவைகளை முப்பாலாய் நாற்பது அதிகாரங்களாகப் பகுத்து உரையும் இயற்றினார். கடவுள் வாழ்த்தும் அவரே இயற்றிய தென்பர்.

2. **நான்மணிக்கடிகை**—(விளம்பிநாகனார்)—கடவுள் வாழ்த்துட்பட நூற்றொரு வெண்பாக்களை யுடையது. ஒவ்வொன்றும் நந்நான்கு பொருளைக் கூறும்.

3. **இனியவைநாற்பது**—(மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார்)—இன்னதின்னது இனிதென்றுரைக்கும் நாற்பது வெண்பாக்களை யுடையது.

4. **இன்னா நாற்பது** — (கபிலர்) — இன்னதின்னது துன்பந்தரும் என்றுரைக்கும் நாற்பது வெண்பாக்களை யுடையது.

5. **கார்நாற்பது**—(மதுரைக் கண்ணங் கூத்தனார்)—கார்காலத்து வருவேனென்று வினைமேல் சென்ற தலைவன் வாராமையின் தலைவி பிரிவாற்றாமல் வருந்துவதைக் கூறும் நாற்பது வெண்பாக்களை யுடையது.

6. **களவழிநாற்பது** — (பொய்கையார்) — போர்செய்து தோல்வியடைந்த கணைக்காலிரும்பொறையைப் பற்றிப்போய்ச் சோழன் செங்கணான் சிறையிலிட்டபோது பொய்கையார் களம்பாடி வீடுகொண்டார். இந்நூலின் பொருள், மேற்படி போர்க்கள வர்ணனை. அங்கங்கே காட்டியிருக்கும் உவமைகள் நிரம்ப அழகானவை.

7. **ஐந்திணையைம்பது** — (மாறன்பொறையனார்) — ஒவ்வோர் அகப்பொருட்டிணைக்கும் பப்பத்தாகப் பாடிய ஐம்பது வெண்பாக்களை யுடையது.

8. **திணைமொழியைம்பது** — (சாத்தந்தையார் மகனார் கண்ணஞ்சேந்தனார்)—ஒவ்வோர் அகப்பொருட்டிணைக்கும் பப்பத்தாகப் பாடிய ஐம்பது வெண்பாக்களை யுடையது.

9. ஐந்திணையெழுபது — (மூவாதியார்). அகப்பொருளைந்திணைக்கும் பதி னான்கு பதினான்காகப்பாடிய எழுபது வெண்பாக்களை யுடையது.

10. திணைமாலை நூற்றைம்பது—(மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார் மாணாக்கர் கணிமேதாவியர்)—அகப்பொருளைந்திணைக்கும் முப்பது முப்பதாகப் பாடிய நூற்றைம்பது வெண்பாக்களை யுடையது.

11. முப்பால்—திருக்குறள்-திருவள்ளுவப்பயன்—(திருவள்ளுவ நாயனார்)—அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பா லாய், நூற்று முப்பத்துமூன்று அதிகாரங்களாய், ஆயிரத்து முந் நூற்று முப்பது குறள் வெண்பாக்களை யுடையது. பரிமேலழகர் உரை பயில வழங்குகின்றது. இந்நூலின் பெருமையை உணர்த்து வது திருவள்ளுவமாலை.

12. திரிகடுகம்—(நல்லாதனார்)—மும்மூன்று பொருள்களை விளக்கும் வெண் பாக்கள் (கடவுள் வாழ்த்துட்பட) நூற்றொன்றுடையது. திருக்கோட் டியூர் இராமாநுசாசாரியார் உரை பயில வழங்குகின்றது.

13. ஆசாரக்கோவை—(பெருவாயின்முள்ளியார்) - இருடிகள் சொல்லிய ஆசாரங்களைக் கோத்துரைக்கும் பலவகை வெண்பாக்கள் (தற்சிறப்புப் பாயிர முட்பட) நூற்றொன் றுடையது.

14. பழமொழி — (முன்றுறையரையனார் — ஜைனர்) — ஒவ்வொரு பழ மொழியை இறுதியில் பெற்ற நானூறு வெண்பாக்களை யுடையது.

15. சிறுபஞ்சமூலம் — (காரியாசான்—ஜைனர்) — ஐவைந்து பொருளைக் கூறும் தொண்ணூற்றெட்டு வெண்பாக்களை யுடையது.

16. இன்னிலை — (பொய்கையார்)—மதுரை யாசிரியர் பூதனார் தொகுத்தது. கடவுள் வாழ்த்து, பாரதம் பாடிய பெருந்தேவனார் இயற்றியது. அறப்பால் பத்தும் பொருட்பால் ஒன்பதும் இன்பப்பால் பன்னிரண் டும் வீட்டிலக்கப்பால் பதினொன்கும் ஆகிய நாற்பத்தைந்து வெண்பாக் களை யுடையது. [சிலர் கைந்நிலை என்பர்.]

17. முதுமொழிக்காஞ்சி — (மதுரை கூடலூர்க் கிழார்) — பத்ததிகாரமாய் ஒவ்வோரதிகாரமும் பப்பத்து முதுமொழியால் அமைந்தது. [சிலர் இரும்பல்காஞ்சி என்பர்.]

18. ஏலாதி — (தமிழாசிரியர் மகனார் மாக்காயனார் மாணாக்கர் கணிமேதா வியர் — ஜைனர்) — அவ்வாறு பொருளுரைக்கும் வெண்பாக்கள் (கட வுள் வாழ்த்து நீங்கலாக) எண்ப துடையது.

# பதிப்புரை

ஒவ்வொரு பழமொழியை ஈற்றில் தொடுத்துள்ள நானூறு வெண்பாக்களையுடைய இந்நூல் பாண்டிநாட்டில் முன்றுறையென்னும் பதியின் அரசர் இயற்றியது. இது கடைச்சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்று. அக்காலத்து நூல்களிலும் இடைக்காலத்து நூல்களிலும் பழமொழிகள் ஒவ்வோரிடத்து வழங்கப்பெற்றுள்ளன. ஆயினும் பழமொழிகளின் சார்பை முற்றுங்கொண்டு பொருளுணர்த்திய வேறு நூல் எதுவும் இவ்வாசிரியருக்குமுன் இருந்ததாகப் புலப்படவில்லை. இந்த முதன்மை இந்நூலுக்கே உரியது.

இந்நூலில் காட்டிய பழமொழிகளில் எதுகை மோனை முதலியவற்றிற் கேற்ப மாறுதலுற்றிருப்பன பல: இக்காலவரையிலும் சிதைவுறாமல் வழங்கிவருவன பல: வழக்கிழந்தனவாகக் காண்பவை சில. சில பழமொழிகளைச் சில பொருள்களோடு பொருத்தியிருக்குமாறு மிகவும் வியக்கத்தக்கது. சில பழமொழிகளின் அக்காலப் பிரயோகம் நன்கு விளங்காமையால், உத்தேசமாத்திரமாகவே அவைகளைப் பொருத்தியறிதல் கூடும். எடுத்துரைக்கும் பொருள்களுக்குச் சில பழமொழிகள் மேற்கோள்க ளாகின்றன. எடுத்துரைக்கும் பொருள்கள் சில பழமொழிகளுக்கு எடுத்துக்காட்டுக ளாகின்றன. சில பழமொழிகள் உவமானங்களாகின்றன. சிற்சில பழமொழிகள் ஒப்புமைக்கூட்டத்தில் அடங்கிவிடுகின்றன.

திருக்குறள் நாலடியார் முதலியவற்றிலும் காணப்படாமல் ஆசிரியர் அநுபவசித்தமாக நுனித்தறிந்த அநேக அரிய விஷயங்கள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு வெண்பாவும், முதலிரண்டடியில் ஆசிரியர் கூற விரும்பும் பொருளும், நான்காமடியில் ஒரு பழமொழியும், மூன்றுமடியில் பெரும்பாலும் ஆடூஉ முன்னிலையும் சிறுபான்மை மகடூஉ முன்னிலையுமாகக்கொண்டு நடைபெறுகின்றது. ஆடூஉ முன்னிலைகளில் அநேகம் அக்காலத்துப் பாண்டியனை நோக்கியனபோலும். ஆகவே அவை உபகாரஸ்ம்ருதியாக இருக்கலாம். உள்

ளுறையுவமம் கொள்ளத்தக்க முன்னிலைகளும் சில உண்டு. அதனால் அவைகளை நின்றுபயனின்மை என்னும் குற்றத்தின் பாற்படுத்தல் ஆகாது. இவை நீங்கலாக வேறே வீணான அடைமொழித்தொடர்கள் எங்கும் புலப்படவில்லை. சுருங்கச் சொல்லுதலும் ஆழமுடைத்தாத லுமான அழகுகள் இந்நூலில் மிக்குள்ளன. பொருளையும் பழமொழி யையும் பொருத்தியிருப்பது பலவிடங்களில் உய்த்துணரவைப்பாக இருக்கின்றது. விளங்குதாரணத்ததாகும் சில அரிய பிரயோகங்களும் அங்கங்கே உண்டு. நச்சினார்க்கினியர் இந்நூலினின்றும் சில மேற் கோள்களைக் காட்டியிருக்கின்றனர்.

தமிழ்மொழியின் புராதனத்தையும் தமிழர்களுடைய புராதன நாக ரிக நிலைமையையும் விளக்குதற்குக் குன்றின்மேலிட்ட விளக்குப் போல இன்றளவும் சான்றான பழமொழிகளையே சார்பாகக் கொண்டி ருத்தலால், தமிழர்களுடைய புராதன நிலைமையை ஆராய்வதற்கான சாதனங்களில் இந்நூல் தலையான சாதனம். கடைச்சங்கமிருந்த கால த்துப் புலவரான இந்நூலாசிரியர் இப்பழமொழிகளைப் "பண்டைப் பழமொழி" என்று கூறுதலால், தமிழருடைய பூர்வகால சரித்தி ரத்தை ஆராயப் புகுவார்க்கு இந்நூலைக்காட்டிலும் மேலான சாதனம் இல்லையென்பது துணிவு.

புராணேதிகாசங்களில் சில விஷயங்களையும், சரித்திர காலத் துக்கு முற்பட்ட சில சேர சோழ பாண்டியர்களையும், கடையெழுவள் ளல்களில் சிலரையும் இந்நூல் அங்கங்கே சுட்டுகின்றது. இந்நூலில் சில செய்யுள்கள் நாலடியாரில் சில செய்யுள்களோடு அடியொத்தும் பொருளொத்தும் இருக்கின்றன. சில செய்யுள்கள் சில திருக்குறட் பாக்களின் கருத்துக்களைத் தழுவியிருக்கின்றன. இங்ஙனம் உய்த் துணர்ந்து பார்க்கையில் இந்நூலானது பதினெண் கீழ்க்கணக்கில் பிற் பட்டவைகளில் ஒன்றாக இருத்தல் கூடும் என்று ஊகிக்கலாம்.

திருவள்ளுவர்போல இவ்வாசிரியர் தமது நூலைப் பாலியல்களாக வகுத்துரைக்கவில்லை: அப்போதப்போது கண்டும் கேட்டும் ஊகித்தும் தெளிந்த பொருள்களை ஒவ்வொரு பழமொழியோ டியைத்து ஒவ் வொரு வெண்பாவாகப் பாடிச் சேர்த்துவந்தா ராதல்வேண்டும். "இரு

கயலுண்கண்" என்னும் வெண்பாவின் உரையில் உரையாசிரியர் "'முத்தகம் குளகம் தொகைதொடர் நிலையென, எத்திறத்தனவும் ஈரி ரண்டாகும்' என்பதனுல் உலகத்துண்டான செய்யுட்களெல்லாம் நால்வகையான் அடங்கும் இந்த நானூறும் முத்தகச்செய்யுள் ஆத லால் தனியே நின்று ஒரு பொருள் பயந்து முற்றுப்பெற்றன என வறிக" என உரைத்திருப்பதே இதற்குச் சான்று. பலமுனிவர் இயற் றிய நாலடியாரிற்போல இந்நூலில் கூறியது கூறல் மாறுகொளக் கூறல் முதலியன இல்லை. இந்நூலாசிரியர் ஜைனராயினும் இதர மதங்களில் துவேஷமுள்ளவராகப் புலப்படவில்லை.

வழங்கும் பழைய வுரையில் இரண்டோரிடத்து உள்ள குறிப் புக்களால் இதற்கு முற்பட்ட ஓர் உரையும் உண்டு, உரையாசிரியர் காலத்தே பாடபேதமும் உண்டு என்னும் செய்தி விளங்கும். புறத் திரட்டில் தழுவியுள்ள பழமொழி வெண்பாக்களில் பாடபேதங்கள் பலவாக உள்ளன.

பழைய நார்மல் காலெஜில் தமிழாசிரியராக இருந்த தி. சோடசாவ தானம்—சுப்பராய செட்டியார் 1874-ஆ இந்நூலைப் பாலியல்களாக வகுத்து மூலபாடத்தை அச்சிட்டார். அதில் பப்பத்து வெண்பாக்கள் அடங்கிய முப்பத்தொன்பது அதிகாரங்கள் உண்டு. பத்து வெண்பாக் கள் விடுபட்டுப்போயின. நாலடியாரின் அதிகாரவடைவில் உள்ள சில குறைகள் இந்தப் பதிப்பில் உண்டு. அப்பால் திரிசிரபுரம் நாஷ னல் ஹைஸ்கூல் தமிழாசிரியர் தி. ச. ஆறுமுகம் நயினர் 1904-ஆ பழைய பிரதிகளில் உள்ள முறையாகவே இந்நூலின் மூலபாடத்தைப் பூரணமாக அச்சிட்டார். இவ்விரண்டு பதிப்பிலும் பழையவுரையோடு ஒவ்வாத பாடங்கள் சில இடங்களில் காணப்படுகின்றன.

பழைய பொழிப்புரை தமிழ்கற்கு மாணாக்கர்களுக்கு எளிதின் விளங்காமையால், பதவுரையும் கருத்துரையும் சேர்த்து இந்நூலை அச்சி டுதலான கருத்து நெடுநாளாக உண்டு. இங்ஙனம் சேர்த்தும், ஓரின மான பொருள்களை ஒருவழிவைத்து வகைப்படுத்தாவிட்டால் இந்நூ லைப் படிப்பது மாணாக்கர்க்கு இனிதாகுதென்று, கடவுள்வாழ்த்து நீங் கலான முந்நூற்றுத் தொண்ணூற்றொன்பது செய்யுள்களையும் ஐந்து

பெரிய பிரிவுகளாகவும், அவைகளில் ஒவ்வொன்றையும் ஏற்றபெற்றி சிறிய உட்பிரிவுகளாகவும் பிரித்துவைத்தேன். இங்ஙனம் பிரிப்பதில் எல்லாரும் ஒருமனப்படார் என்பது உரைக்கவேண்டா. அதன் மேல் இன்றியமையாத சில குறிப்புக்களையும் மேற்கோள்களையும் காட்டி, ஒவ்வொரு வெண்பாவுக்கும் சுருக்கமாகத் தலைப்பிட்டு, கிடைத்தமட்டில் நேர்நேரான சில இங்க்லிஷ் பழமொழிகளையும் சேர்க்கலானேன்.

ஈதெல்லாம் செய்வதற்கு ஆதாரமாயிருந்தது பச்சையப்பன் (சென்னை) ஹைஸ்கூலில் தமிழாசிரியராக இருந்த என் தந்தை திருமணம்—கேசவ சுப்பராய முதலியார் (மயிலை அண்ணுசாமி உவாத்தியாருடைய பிரதியைப் பார்த்தெழுதிய) பிரதியே. அச்சுவேலை ஆரம்பஞ் செய்வதற்குமுன் சந்தேகமான சில இடங்களில், துரைத்தனக் கையெழுத்துப் பிரதிகள்சாலையில் உள்ள சிதிலமான ஒரு பிரதியோடு ஒப்பிட்டுப் பார்த்தேன். சில சந்தேகங்கள் மாத்திரமே அந்தப் பிரதியால் நிவர்த்தியாயின. அச்சுவேலை ஆரம்பமானபிறகு கோவிந்த நாயகர் பாடசாலையில் தமிழாசிரியர் ஸ்ரீ. ஆ. சிங்காரவேலு முதலியாரவர்களும், யூனிவர்ஸிடி ரீடர் ஸ்ரீ. அநவரதவிநாயகம் பிள்ளை எம்.ஏ, எல். டி. அவர்களும், சென்னை கிரிஸ்தியன் காலேஜ் தமிழாசிரியர் ஸ்ரீ. தி. கனகசுந்தரம் பிள்ளை, பி. ஏ. அவர்களும் தங்களிடம் உள்ள பிரதிகளை உதவினர். இவைகளும் பூரணமான பிரதிகள் அல்ல. இவைகளில் உள்ள குறை ஏனையோருடைய பிரதிகளிலும் மிக்கும் குறைந்தும் உள்ளனவாகக் கேட்டறிந்து, கிடைத்தவைகளைக்கொண்டு இயன்றமட்டில் சுத்தபாடமாக இந்நூலை அச்சிடத் துணிந்தேன். மேல் கூறிய புலவர்கள் செய்த உதவி காலத்தாற் செய்ததாகலின், வந்தனமளிப்பதன்றி, அவர்களுக்குச் செய்யலான கைம்மாறு வேறில்லை.

நூல் அச்சேறுகையில் அப்போதப்போது ஆக்ஷேபனைகள் செய்து நுட்பமான சில பகுதிகளை விளங்கவைத்தற்குக் காரணராக இருந்த ஸ்ரீ. சிதம்பரம்பிள்ளையவர்களிடம் நான் நன்றிபாராட்டக் கடவேன்.

பிரம்பூர், சென்னை.<br>
1916—ஆ டிஸெம்பர் மீ 1௳ } தி. சே.

# பொருளடக்கம்

தற்சிறப்புப்பாயிரம்

கடவுள் வணக்கம்

## I

### 1. கல்வி


1. இளமையிற் கற்றல்
2. மேன்மேற் கற்றல்
3. ஞானநூல் கற்றல்
4. கல்வியின் சிறப்பு
5. கேள்வியின் சிறப்பு
6. குலவித்தை கல்லாமல் வருதல்
7. கற்றோ ரருமை கற்றோ ரறிதல்
8. கற்றார் நலத்தைக் கற்றார் உணர்தல்
9. கற்றா ரடக்கம்
10. கற்றவர் பழிபாய செய்தல்


### 2 கல்லாதார்


11 கல்லாதான் கண்ட மெய்ப்பொருள்
12. கல்வி முந்துறாத கழிநுட்பம் இல்லை
13. கல்லாதான் கண்ட கழிநுட்பத்தைக் காட்டுத லரிது
14. கல்லார்முன் சொல்லிய கழிநுட்பம்
15. கல்லாரிடம் கட்டுரைத்தல் பொல்லாதாம்
16. கல்லார் கற்றவரைக் கறுப்பித்தல்


### 3. அவையறிதல்


17. அவையின் செவ்வி யறிதல்
18. வாதக்கிரமம்
19. வார்த்தையில் விடைவழு
20. கற்றாரவையில் கல்லார் சொல்லாடுதல்
21. கற்றோரவையில் கல்லார் புன்சொல் விளம்பல்
22. கற்றாரவையில் கல்லார் ஞானம் வினாவியுரைத்தல்
23 கற்றாரைக் கல்லார் எள்ளிக் கூறல்
24. புல்லவையுள் கல்லார் புகழ்ந்து கொள்ளல்
25. கல்லாரவையில் உறுதியுரைத்தல்


### 4. அறிவுடைமை


26. அறிவின் மாண்பு
27. அறிவினர் மாண்பு
28. இயற்கையறிவின் சிறப்பு
29. அறிவுடையாரிடம் அறிவுடையார் சேர்தல்
30. அறிவிலாரிடம் அறிவுடையார் புகாமை
31. அறிவுடையோர் தம் குறைகுணங்களைத் தாமே அறிதல்
32. பரந்த திறலாரைக் கரந்து மறைக்கலாகாமை
33. அறிவு செல்வத்தினும் சிறத்தல்

## 5. ஒழுக்கம்

34. குடிப்பிறந்தோ ரொழுக்கம்
35. பிறருரைக்கும் நல்லுரையை இகழாமை
36. தத்தம் இயல்பின்படி ஒழுகுதல்
37. குற்றம்படாமல் ஒழுகுதல்
38. தம் குற்றம் நீக்கல்
39. வடுவல்ல செய்தல்
40. பழியை ஒழுக்கத்தால் பரிகரித்தல்
41. பழியை அஞ்சிப் பாதுகாவாதவர்
42. பழிப்பவர்க்குச் சொன்முட்டில்லை

## 6. இன்னா செய்யாமை

43. எளியார்க்கு இன்னா செய்யாமை
44. பிறர்க்கு இன்னா செய்யாமை
45. உறவினரை இகழ்ந்து நலியாமை
46. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்
47. நலியப்பெற்ற எளியார் அழுத
48. மதிப்பு மிக்கவரை அழிக்க முயலுதல்
49. நலிந்தாரை நலியாமை
50. தீமைக்குத் தீமை செய்யாமை

## 7 வெகுளாமை

51. இன்னா செயினும் வெகுளாமை
52. ஆறுச் சினத்தினை அகன்றொழுகுதல்
53. கோபத்தை அடக்கலால் தீமை தானே கெடுதல்
54. அடாது சொன்னவனைக் கோபியாமை
55. மூடருடைய நிந்தையைப் பொறுத்தல்
56. பொய்யாக அவதூறு பேசினும் அதைப் பொறுத்தல்
57. புல்லுரைக்கு எதிர் சொல்லாமை
58 பொறுமை வைவதின் கெடுதி
59. பொறுத்தல் புகழாதல்

## 8. பெரியாரைப் பிழையாமை

60. மன்றாடறுத்துப் போகாமை
61. பெரியாரோடு மாறுகொள்ளல்
62. பெரியாரைக் கைப்பித்தல்
63. சான்றோர் பொறையின் அளவு
64. பெரியார் வருந்த ஒழுகலின் பயன்

## 9 புகழ்தலின் கூறுபாடு

65. தம்மைப் புகழ்தல் தகுதியன்று
66. அமராத புகழை அகற்றல்
67. தம்மைத் தாமே புகழ்வோரைப் பிறர் புகழ்தல்
68. பலர்நடுவில் ஒருவனைப் புகழுமாறு

## II

### 1. சான்றோ ரியல்பு

69. சான்றோர் பெருமை
70. வறுமையுற்றினும் நின்ற நிலையில் வழுவாமை
71. பீடிலா விடத்தும் பெருந்தகைமையில் வழுவாமை
72. இடருற்ற விடத்தும் மதிப்பிற் குறையாமை
73. கல்வி யில்லாவிடத்தும் மாட்சிமை மிகுதல்
74. அறிமடமும் அணியாதல்
75. எவரையும் பழியாமை
76. மறைவிலும் தீவினை செய்யாமை
77. தீயாரை விட்டு நீங்குதல்
78. வெஃகாமை
79 உயர்ந்தோரிடத்துக் குற்றம்
80. சிறியார் பெரியார் குற்றங்கள்

### 2. சான்றோர் செய்கை

81. பொருள் இன்றெனினும் ஒப்புரவுசெய்தல்
82. கடன்பட்டும் ஒப்புரவுசெய்தல்
83. நடுவுநிலைமையில் நின்று மெய பேசுதல்
84. குற்றஞ் செய்த நண்பினரைத் திருத்தல்
85 நற்குணமில்லாத நண்பினர்க்கும் நன்மைசெய்தல்
86. பகைவரிடத்தும் கண்ணோடுதல்
87. சிறியாரிடத்தும் சேர்ந்துவாழ்தல்
88. சிறியா ரினமாய் ஒழுகுதல்
89. சிறியார் செல்வமும் பெரியார் வறுமையும்

### 3. கீழ்மக்க ளியல்பு

90. இனநலம் பெற்றும் மனநலம் பெறாமை
91. பெரியாரோடு சேர்ந்தாலும் பெரிய ராகாமை
92. பெரியார் செய்வன சிறியார் செயலாகாமை
93. உரைத்தாலும் உணர்வு தோன்றாமை
94. கொண்டது விடாமை
95. இயற்கை மாறாமை
96. தீயொழுக்கம் திருந்தாமை
97. பழியஞ்சாமை
98. பழியில் மிக்கெழுதல்
99. கள்ளினைக் கண்டு களித்தல்
100. ஒறுத்தாலும் தீமை ஒழியாது செய்தல்
101. எக்காலமும் பாவமே செய்தல்
102. எல்லாராலும் கீழோர் அறியப் படுதல்
103. கீசரில் நல்லார் இல்லாமை
104. தீயாரைப் பெருக்குதலின் தீமை
105. பெரியோர் சிறப்புக்குச் சிறியோர் அருகராகாமை
106. குடியாகாமை

### 4. கீழ்மக்கள் செய்கை

107. பெரியோரை அடாத வார்த்தை சொல்லுதல்
108. துர்ப்போதனை செய்தல்
109. நன்மை செய்தவர் இடருறுதல்
110. தம்பொருட்டு வருந்தினோர்க்கும் வயப்படாமை
111. விலக்குவார்மேல் வெகுண்டெழுதல்

112. கீழ்மக்களை முனிவித்த லாகாது
113. கீழ்மக்களோடு உடனுறைதலாகாது
114. தன்சொல்லாலே தன்னைத் துயர்படுத்தல்
115. புறங்கூறுவார் திருந்தாமை
116. கீழ்மக்களை நாவடக்குதல் முடியாமை
117. வெள்ளரைக் கள்ளராகக் காட்டுதல்
118. நியாயசபையி லன்றி உண்மையுரையாமை
119. கீழ்மக்க ளொழுக்கத்தைப் பலரும் அஞ்சுதல்
120. கீழ்மக்களில் விலக்கத்தக்கவர்
121. காரியஞ் செய்பவரைக் காரணமின்றித் தவிர்த்தல்
122. பெரியோர் ஒடுங்கிச் சிறியோர் ஓங்குதல் அநியாயம்
123. பாவிகள் ஒழிதலின் அவசியம்


## 5. நட்பின் இயல்பு


124. நட்பினரை நல்லார் உடலாகக் கொள்ளல்
125 நட்பினரிடம் உரையும் பொருளும் ஒத்தல்
126. நட்பினரைப் பிரிதல் ஒல்லாமை
127. துன்புற்ற நட்பினர்க்குப் பொருளுதவி செய்தல்
128. நட்டற்குத் தக்கார் தகார் என்பதில்லை
129. அன்பிலார் நட்பின் பழமைபற்றிப் புதுநட்பை நீக்காமை
130. நட்பினர் பழியைத் தூற்றாமை
131. நட்பினரிடம் குற்றங் கண்டு கோபியாமை
132. நட்பிற் பிழை பொறுத்தல்
133. தீர்க்கத் தக்கவரிடம் உற்ற குறை உரைத்தல்
134. கெட்டார்க்கு நட்டார் இல்லாமை


## 6. நட்பில் விலக்கு


135. காரியம் பற்றி நட்பவர்
136. உற்றுழி உதவாமை
137. இறுதியில் உதவாமல் இறந்தபின் தவஞ்செய்தல்
138. பேதையார் நட்பு
139. நன்றொழுகா நண்பினரால் நன்மை யின்மை
140. நட்பின்மை செய்வாரிடம் தாமும் அது செய்தல்
141. விசுவாச பாதகர்


## 7. பிற ரியல்பைக் குறிப்பா லறிதல்


142. குணங்களைச் செய்கையா லறிதல்
143. கண்ணின் கூர்மை
144. கருத்தை முகம் அறிவித்தல்
145. முகத்தையறிவார் கருத்தையறிதல்
146. குலத்தால் குணத்தை அறிதல்
147. முகத்தால் குலத்தை அறிதல்
148. இனத்தால் இயல்பை அறிதல்


MARAIMALAI LIBRARY MADRAS-1

# III

## 1. முயற்சி

149. தாம் நன்மை யடைதற்குத் தாமே காரணம்
150. கற்ற தின்றியும் கரும முடிப்பவன்
151. வருந்தாதார் வாழ்க்கை திருந்தாமை
152. ஒருவகையாலும் முயலாதவர் ஒருநாளும் வாழார்
153. வெறாது முயல்பவர் விரும்பிய தடைவர்
154. காரியசித்தி அடையும் வழி
155. முடியுந் திறத்தால் முயலுதல்
156. பெறலாகும் பெருமையை முயன்று பெறுதல்
157. தொழின்முயற்சியில் நிலையாதவர் நன்மை பெறார்
158. தங்கருமத்தைத் தாமே கடைப்பிடித்தல்
159. தம்மால் முடிவதைத் தாமே செய்தல்
160. அல்லலை முயற்சியால் நீக்கல்
161. பொது

## 2. கருமம் முடித்தல்

162. ஏற்றபெற்றி ஒழுகிக் கருமம் முடித்தல்
163. ஆதரவானவரை விரோதித்தலால் வினையும் கெடுதி
164. பதறாமல் நல் வார்த்தையால் கருமங் கொள்ளல்
165. உளையவுரையாது உறுதிகொள்ளல்
166. பிறரிடம் பெறலான நன்மையைச் சமயமறிந்து பெறுதல்
167. சோம்பனை ஏவிய காரியம் முடிவுபெறாது
168. காணி கொடாமல் காரியம் முடியாமை
169. காரியம் செய்பவனை எச்சரித்தல்
170. கயவர்மேல் காரியம் வைத்தவர் நன்மையடையார
171. கருமஞ்செய்ய அறிவுள்ளாரை நியமித்தல்
172. கற்றவனுக்குக் கொடுத்த பொருள்
173. கருமஞ்செய்ய அயோக்கியரை வையாமை
174 நன்மையில்லாதவனைக் காரியத்தினின்று களையுமாறு
175. வஞ்சகர் தூரத்தில் ஏவப்பட்ட கரும முடித்துத் திரும்பார்
176. நுண்ணறிவுடையானுக்கும் கருமங் கெடுதல்

## 3. மறை பிறரறியாமை

177. மறைவான காரியத்தில் எவரையும் நம்புதலாகாமை
178. மறைவான சூழ்ச்சியில் மாண்பி
179. அன்பறியுமுன் மறையை வெளியிடாமை
180. கயவர்க்கு மறையுரையாமை
181. சிறியா ரறிந்த மறை வெளிப்படுதல்
182. பிறரை நம்பி மறையை வெளியிட்டவன் கெடுதல்

## 4. தெரிந்து செய்தல்

183. அவரவர் துன்பத்துக்கு அவரவரே காரணர்
184. சொற்சோராமையின் அருமை
185. கண்டதையும் எண்ணிச் சொலல்
186. சொல்கேளாதவனைத் திருத்தப் புகலாகாது
187. அண்மையிற் கொள்ளும் நன்மையை நாடல்
188. சனங்கள் உவந்தன செய்தல்
189 துன்பம் படவருவன செய்யாமை
190. இருக்க இடம் பெற்றால் படுக்க இடம் பெறுவார்
191. இன்சொல் இடர்ப்படுக்காமை
192. தம்தம் தன்மையராய் ஒழுகுதல்
193. தம்மை ஐயுற்றவனைப் பொறுத்தல்
194. மயில்போலும் கள்வர்
195. பொது

## 5. பொருள்

196. பொருளின் வலிமை
197. பொருளுடையார காரியம் நன்குமுடிதல்
198. பொருளுடையாரிடம் கருமமுள்ளவர் தேடிவருவர்
199. பொருளுடையாரை எல்லாரும் புகழ்தல்
200. பொருளும் உடையானும்
201. சிறிது சிறிதாய்ச் சேர்ந்து பெருஞ் செல்வமாதல்
202. சிறிய முதற்பொருளால் பெரிய தனிகளுதல்
203. வற்றாத செல்வம்
204. பெருஞ்செல்வர் தரித்திரப்பட்டாலும் தாழார்

## 6. பொருளைப் போற்றுதல்

205. வேண்டு மளவாகப் பொருள் செய்து பாதுகாத்தல்
206. தம்பொருளைத் தாமே போற்றல்
207. அரிய பொருளை அரணான இடத்தில் வைத்துக் காத்தல்
208. கீழ்மக்களிடம் வைத்த பொருள் திரும்பாமை
209. கீழ்மக்களிடம் வைத்த பொருள் தமக்குப் பயன்படாமை
210. கைவிட்ட பொருளைத் தேடிக் கொள்ளுதல் முடியாது
211. கடன் கொடாமை
212. கொடுத்த கடன் கேட்டால் கைப்பாதல்

## 7. நன்றியில் செல்வம்

213. பாவத்தால் வந்த பொருள் அறத்துக்கு ஆகாமை
214. அறிவில்லார் செல்வம் பெறுதல் துன்பம் பெறுதலே
215. இவறன்மை
216. லோபி செல்வம்
217. ஈயாதான் செல்வம் பொலிவு பெறாது
218. ஈயாத பொருள் இருந்தும் பயன்படாமை
219. ஈயாது பொருளைவைத் திறப்பவர்

220. உற்ற்குறவினர்க்கு உதவாமல் வம்பர்க் குதவுதல்
221. பூர்வ புண்ணியத்தால் பொல்லார் பொருள் பெறுவார்
222. உதவிசெய்வார்போல் காட்டி ஒன்றும் செய்யாமை
223. இயலாததை இயல்வதாக ஒட்டுதல்
224. வன்னெஞ்சரிடம் இரந்தவர் ஒன்றும் பெறார்
225. நம்பிவந்தவனை ஆதரியாதவனுக்கு மோக்ஷம் இல்லை
226. திருப்தி யடையாதவர்க்கு ஈந்த பொருள் இழந்த பொருளே

## 8 ஊழ்

227. முயற்சியினும் முன்னைவினை வலிதாதல்
228. கருமங்கள் வினையின் வகையினவாதல்
229. உறற்பால உறுதல்
230. உறற்பால நீண்டாது விடாமை
231. நீண்டுதற்குரியாரை இலக்குமி நீண்டுதல்
232 பெரிய செல்வம் பெறுதற்கு முன்வினை காரணம்
233. கூடுங்காலத்தில் செல்வம் வந்து கூடுதல்
234. உய்வதற்கு உய்யுமிடம் உளதாதல்
235. ஆவார்க்குத் தீமையும் நன்மையாதல்
236 விதிவழியல்லது வேண்டியன கைகூடாமை
237. ஆகாதாக்கு ஆகுவ தில்லாமை
238. பகைவர் துன்புறுப்பது பழவினைப் பயனே
239. உயிருடையார் எய்தா வினையில்லை
240. அறிவுடையார் உறுகண் அஞ்சாமை

## IV

## 1. அரசியல்பு

241. குற்றஞ்செய்தவரை ஒறுத்தல் அரசியல்பு
242. மூப்பிளமை முறைமையில் பரிகார மாகாமை
243. நடுவுநிலைமை
244. வருத்தாமல் வரிவாங்குதல்
245. நிலுவை வைக்காமல் வரிதண்டுதல்
246. அதிகப்படி வரிகொண்டு அளிசெய்தல்
247. கொடுங்கோலுக்குக் குடிகள் செய்யும் பரிகாரம் இல்லை
248. பகைவரை அடாதவரும் நீதி தவறினவரும் எளியராவர்
249. பகைவரை வெல்லும் படை அரசனுடைய அன்பே
250. பகைவர் வலியைக் கெடுப்பது கோலின் தட்பமே
251. அரச ளுணையின்கீழ்ப் பிறராணை நடவாமை
252. அரசர் ஆக்கலும் அழித்தலும்
253. தலைமை கருதுவோரை நேர் செய்திருத்தலின் அபாயம்

254. அரசன் அடிமை கொண்டால் ஒருப்படுதல்
255. அற்பரிடத்தில் அதிகாரங் கொடார்
256. பொல்லாங்கு செய்தாரும் வணங்கும்படி செய்தல்
257. பெரியாரைச் சார்ந்து பயன் பெறுதல்

## 2. அமைச்சர்

258. அரசன் திறத்துக்கு அவன் சபை அறிகுறி
259. அரசனெப்படி அமைச்சருமப்படி
260. அமைச்சரைக் கண்ணுகக் கொள்ளாத அரசன்
261. அமைச்சரை ஆராய்ந்து வசப்படுத்தல்
262. உயிர்கள் இனிது வாழ்தற்கு அமைச்சர் காரணம்
263. அமைச்சர் சொல்லை அரசன் கொள்ளுதல்
264. பொய்யுரைத்தாயினும் அரசனை நல்வழிப்படுத்தல்
265. அரசன் செய்த தீங்கைக் கல்விமான்கள் பொறுக்க

## 3. மன்னரைச் சேர்ந்தொழுகல்

266. பேரரசர் ஏவியதைச் சோம்பாமற் செய்தல்
267. அரசன் ஏவியது செய்வோர் நன்மை பெறுதல்
268. அரசன் ஏவியதைத் தமர் செய்யாமை தவறு
269. அரசருவப்பன செய்பவர் அரிய பொருள் பெறுவர்
270. கருமமுடித்தவன்மேல் முடித்த புகழ் நிற்கும்
271. பேரரசரை யடைந்தவர் பிறரை யஞ்சார்
272. மன்னன் மதித்தவனை மாந்தரும் மதிப்பர்
273. அரசனை யடைந்தவர் ஒன்றும் வேண்டாமை
274. சேவகரால் காரியங்கொள்வது செவ்விதன்று
275. காலமறிந்து சொல்வோர்க்குக் கருமம் முடிதல்
276. மன்னர் விரும்புவதைத் தாமும் விரும்பற்க
277. அரசன் சீர்கெட்டவிடத்தும் அவனை இகழார்
278. அரசர் இருவரிடையில் புகுந்தவன் தீமையடைவான்
279. அரசனிடம் கவர்ந்த பொருளால் அவனை வசப்படுத்தல்
280. தம்மை யாக்கிய அரசனை வஞ்சித்துக் கொன்றவர்
281. அரசன் கறுவு கொள்ளாத்தக்கன செய்யார்
282. அரசனைக் கோபிப்பது உயிர்க்கிறுதி தரும்
283. அரசன் பொறுத்தானென்று மேலும் பொருதன செய்தல்
284. குறளையைப் பொய்யென்று அரசனைத் தெருட்டல்

## 4 பகைத்திறம்

285. தம்வலியில்லார் புகழெய்தாமை
286. உண்டான போதே பகையைக் களைதல்
287. நலிந்த பகைவரை உடனே நலிதல்
288. பகைவரை வேரறுத்தல்
289. பகைவர் ஒட்டாமை

290. பகைவரை வசப்படுத்த லாகாமை
291. பெரியாரோடு பகைகொள்ளாமை
292. பெரியாரைச் சார்ந்தாரோடு மாறுகொள்ளாமை
293. வலியாரோடு பொருதல் குற்றம்
294. வலிய பகைவருக்குக் கோபம் உண்டாக்காமை
295. வலியாரை வெகுள்வித்து உயிரிழத்தல்
296. பழம் பகைவரை நள்ளாமை
297. உட்பகை துன்பந்தரும்
298. வெளிப்பகை தீயதன்று
299. வென்ற பகைவரை வெகுளல்
300. வலியிலாரோடு பகைகொள்ளல் பயனின்று

## 5. பகையறுக்கும் உபாயம்

301. உருவு பகை தவிர்த்தல்
302. வலியாரிடம் அடங்கி மெலியாரை மீதூர்தல்
303. பலரைத் துணையாகக் கொள்க
304 வலிய பகைவனைத் தமது துணைவலியால் தவிர்த்தல்
305. பகைவரைச் சார்ந்தாரை வசப்படுத்தல்
306. பகைவனுக்கும் மற்றொருவனுக்கும் பகையாக்கல்
307. தம் பகைவரை அவர் பகைவரைக்கொண்டு களைதல்
308 உட்பகை யுடையாரைக் கொண்டு பகைவரைக் களைதல்
309. நலிந்தவிடத்துத் தளராதவனை நட்டல் நன்றன்று
310. சத்துருவை வெல்லும் சதுர்வித உபாயம்

## 6. படைவீரர்

311. பகைவரைத் தாக்கி வெல்பவரே வீரர்
312. தன் அரசனுக்குத் தன் உடம்பை உதவல்
313. வீரமில்லாதார் சிறப்படையார்
314. அரசன் நன்கு மதிக்காவிட்டாலும் வீரர் வினை செய்க
315. தம் வீரத்தைத் தாமே புகழ்தலாகாது
316. சொல்லாலன்றிப் பகைவரைச் செயலால் அடுதல்
317. வலிய பகைவர்மேல் எளியவீரர் படைவிடுதல்
318. வலியடங்கியபின் பகைவரை வெல்வோ மென்பது வீண்
319. எளிய பகைவரை இரக்கமின்றி அடுதல் இழிவே
320. ஆற்றுதார் பகைவர் கையில் அகப்படுதல்
321. ஆடம்பரங்காட்டி அரசனிடம் சோறுண்ணல்
322. முன்னோர் பெருமையைச் சொல்லி வயிறுவளர்த்தல்
323. பேதை தறுகணன் ஆகான்
324. வலிய பகைவரில்லாதார் படைவீரரை வேண்டார்
325. வலியிலார் தம் படையைப் பொலியச் செய்தல் நன்று
326. மகண் மறுத்து மொழிதல்

## V

### 1. இல்வாழ்க்கை

327. பொது
328. பெற்ற அளவால் உவக்க
329. புறத்தாற் பொலிவுறல்
330. நன்மனைவிய ருடையார்
331. நெறிமேல் மக்களை நிற்பச்செய்தல்
332. தாயர்க்குச் சில பிள்ளைகளிடம் கண்ணோட்டம்
333. பாணற்குத் தலைமகள் வாயின் மறுத்தது
334. மகளிரைச் சார ஒழுகாமை
335. பிறர் மனையில் தமியராய்ப்புகாமை
336. நிறை காவாரைச் சிறை காவாமை
337. வறியாரிடம் செல்வா விருந்து செல்லவேண்டா
338. ஏனைய ஈந்தும் இன்சொல் ஈயாமை
339. நடுவுநிலைமை
340. அடைக்கலப் பொருளைக் கொள்ளாது கொடுத்தல்
341. துணையுடைமை
342. புலான் மறுத்தல்
343. அருள் புரியாது உயிர்ப்பலி கொடுத்தல்
344. நன்மை செய்தவர்க்கு உறுதி சூழ்தல்
345. நன்மை செய்தவர் காயினும் அவரைக் காயாமை
346. உபகாரத்துக்கு அபகாரம்
347. நன்மை செய்தவரைப் புறங்கூறுதல்

### 2. உறவினர்

348. அனுதாபம் இல்லாதவர் உறவு
349. வறுமையை உறவினர் தீராவிடத்துச் செய்யத்தக்கது
350. சுற்றத்தா ரிலக்கணம்
351. உதவுவோர் உறவினரே
352. உறவினர் பிரியாமல் பொருந்துதல்
353. உறவினர் உரைக்கும் உறுதியைக் கேட்டல்
354. உறவினர் செய்வதை உற்றார் செய்க
355. நெடுநாள் சேர்ந்துறைதலால் நேரும் துன்பம்
356. சுற்றத்தாரோடு சூதாடலாகாது

### 3. அறஞ்செய்தல்

357. செல்வர் அறஞ்செய்து அருளுடைய ராகுதல்
358. செய்த அறமே எய்ப்பினில் வைப்பாம்
359. அறத்தால் மறுமையின்பம் பெறுதல்
360. அறம் இம்மைப் புகழும் மறுமை யின்பமும் தரும்
361. இறக்குமுன்னே அறஞ்செய்க
362. உடையானை அறஞ் செய்யத் தூண்டுதல்
363. நல்லோர் மற்றவரை அறநெறிப் படுத்தல்
364. பொருளை அறத்துறையில் செலவிடுதல்
365. ஆற்றுந் துணையும் அறஞ்செய்தல்
366. இடை தவிர்தலின்றி அறஞ்செய்தல்
367. சிலநாளாயினும் சிறந்த வழிகளில் அறஞ்செய்தல்

368. பொருளைக் காத்தலைவிட அறஞ் செய்தல் நன்று
369. பொருளைப் போற்றாது தக்க வழியில் அறஞ்செய்தல்
370. அருளொடு படாத அறம்
371. அறநெறியினும் தவநெறியினும் படிற்றொழுக்கம்

## 4. ஈகை

372. சிறிய பொருள் கொடுத்துப் பெரிய பேறு பெறுதல்
373. வறியவர்க் கீதல்
374. பாத்திர மறிந்து கொடுத்தல்
375. குறிப்பறிந்து கொடுத்தல்
376. பிறர் துன்பம் நீக்க வல்லவர்
377. ஏழைகளுக்குக் கொடுத்து ஏழையாவா ரில்லை
378. கொடுக்கக் கொடுக்கச் செல்வம் பெருகும்
379. கொடையளவு கொடுப்போருடைய சீர்மையின் அளவே
380. சேரன் குட்டுவனுடைய கொடை
381. பாரிமகளுடைய கொடை
382. வள்ளன்மை
383. இசைநோக்கி ஈதலின் பயன்
384. ஒருவனிடத்தில் பலர் ஒன்றிரத்தல் ஆகாது
385 தம் விருப்பத்தைத் தீர்க்காத வரை அடைதல் ஆகாது
386. செலவாகாமல் மிகுதியாக உள்ள செல்வம்

## 5. வீட்டு நெறி

387. தம் மனத்தைத் தம்வயப்படுத்தல்
388. மறுமைக்கானவைகளைக் காலத்தாலே செய்க
389. இல்லறம் நடத்திப் பின் துறவறம் மேற்கொள்க
390. இல்லறமேனும் துறவறமேனும் தழுவாதவர்
391. செல்வ முதலியன நிலையாமை
392. ஆசையைத் தவிர்த்தல்
393. துறவாமல் இல்லிருந்து வாழ்தல்
394. இல்வாழ்க்கையில் அழிவுறாமல் துறத்தல்
395. எல்லாப் பற்றுக்களும் நீங்கித் தேகாபிமானம் நீங்காமை
396. தீவினை கழிவதற்கு நல்வினை போதாமை
397. வினையற்றால் பிறப்பறுதல்
398. யாதொரு நெறியிலும் பயிலாமை
399. சமயக் கொள்கைகளில் நல்லவைகளை மேற்கொள்க

# பழமொழி நானூற்றில் புராண இதிகாசங்களிலிருந்தும், பழைய தமிழிலக்கியங்களிலிருந்தும் எடுத்துக்காட்டிய விஷயங்கள்


1. அரக்குமாளிகையிலிருந்து பாண்டவர் தப்பியது ... ... 284
2. உமையாளைச் சிவன் ஒரு கூறாகக் கொண்டது... ... ... 124
3. கரிகாலன் நரை முடித்து முறை செய்தது ... ... ... 6
4. கரிகாலனைக் கழுமலத்திலிருந்து வந்த களிறு கொண்டுபோய் அரசிற் குரிமை செய்தது ... ... ... ... 230
5. கரிகாலன் சுடப்பட் டுயிருய்ந்ததும் மாமனை இரும்பிடர்த் தலையா ருதவியால் செங்கோல் செலுத்தியதும் ... ... 239
6. கருடனால் தேவர் அமிழ்து கோட்பட்டமை ... ... ... 207
7. கௌரவ பாண்டவர் சூதாடி வேறுபட்டது ... ... ... 356
8. தருமன் பொய்யுரைத்து நிரையம் புக்கது ... ... ... 288
9. திங்களும் (பாம்பினால்) தீங்குறுதல் ... ... ... ... 229
10. திரிவிக்கிரமன் (உலகம் தாவின அண்ணல்) ... ... ... 177
11. தூங்கெயிலெறிந்த செம்பியன் ... ... ... ... 155
12. நப்பின்னை மாயவனை மயக்குறுத்தியது ... ... ... 334
13. பலராமன் (பான்மேனியான்) ... ... ... ... 137
14. பல்யானைச் செல்கெழுகுட்டுவன் பாலைக் கௌதமனார்க்கு வீடளித்தது ... ... ... ... ... ... 380
15. பாரி முல்லைக்குத் தேர் கொடுத்தது ... ... ... ... 74
16. பாரிமடமகள் பாணனுக்குப் பொன்னைச் சோறாக நல்கியது ... 381
17. புகார்ப்பூமி குறிகாண்டல் ... ... ... ... ... 185
18. பேகன் மயிலுக்குப் போர்வை கொடுத்தது ... ... ... 74
19. பொற்கைப் பாண்டியன் (கைகுறைத்தான் தென்னவனும்) ... 76
20. மதுகைடவர் மாயனைக் கொல்லுதல் தவிர்ந்தது ... ... 301
21. மநுநீதிச் சோழன் கன்றூர்ந்த புதல்வனைத் தேரால் ஊர்ந்தது ... 242
22. மாவலி வாமனனுக்கு நீர்வார்த்து உலகமெல்லாம் இழந்தது ... 188
23. விபீஷணன் இராமனைத் துணைகொண்டு இலங்கைக்கிறையாயது... ... ... ... ... ... ... 257

குறிப்பு—புறத்திரட்டில் நன்றியில் செல்வம் என்னும் அதிகாரத்தில் அடியிற்கண்ட செய்யுள் பழமொழி வெண்பாவாகச் சேர்த்திருக்கிறது: கிடைத்த எந்தப் பிரதியிலும் இது காணப்படவில்லை.

அறியாமை யோடிளமை யாவதா மாங்கே
செறியப் படுவதாஞ் செல்வம்—சிறிய
பிறைபெற்ற வாணுதலாய் தானேயா மெம்பேய்
பறைபெற்ற லாடாதோ பாய்ந்து.

# பழமொழி நானூறு

## தற்சிறப்புப் பாயிரம்

பிண்டியி னீழற் பெருமா னடிவணங்கிப்
பண்டைப் பழமொழி நானூறும் —கொண்டினிதா
முன்றுறை மன்னவன் நான்கடியும் செய்தமைத்தான்
இன்றுறை வெண்பா இவை.

(பதவுரை). முன்றுறைமன்னன் — முன்றுறையரசர், பிண்டியின் நீழல் பெருமான்—அசோகமரத்து நிழலின்கண் அமர்ந்திருந்த கடவுளின், அடி—திருவடிகளை, வணங்கி—தொழுது, இன்றுறை—இனிய பொருட்டுறைகள் வாய்ந்த, வெண்பா—வெண்பாக்களாகிய, இவை நானூறும் — இவை நானூற்றையும், பண்டை பழமொழி கொண்டு — முற்காலத்துப் பழமொழிகளை (இறுதியில்) தழுவி, நான்கு அடியும்—நான்கு அடிகளையும், இனிதா(க)—சுவைதோன்ற, செய்தமைத்தான்—செய்தமைத்தார்.

பிண்டியின் நீழற் பெருமான்—அருகன், சினன்.

பிண்டியினீழற் பெருமானடி வணங்கலால் இந்நூலாசிரியரான முன்றுறையரையர் சைனசமயத்தின ரென்பது தெளிவு.

"சம்பந்தர் சடகோபர் முதலாயினோரும் திவாகரரும் பதினெண் கீழ்க்கணக்குச் செய்தாரும் முன்னாகப் பின்னாகப் பதிகம் கூறுவது காண்க" எனப் பிரயோக விவேகமுடையார் கூறுதலால் இந்தப் பாயிரம் முன்றுறையரையரே கூறியதுபோலும்.

# கடவுள் வணக்கம்.

அரிதவித் தாசின் றுணர்ந்தவன் பாதம்
விரிகடல் சூழ்ந்த வியன்கண்மா ஞாலத்
துரியதனிற் கண்டுணர்ந்தா ரோக்கமே போலப்
பெரியத னாவி பெரிது.

உலகத்தின்கண் கெடுத்தற்கரிய குற்றத்தைக் கெடுத்துச் சிறிதும ஒழியாமல் முழுதும் உணர்ந்தவன் பாதத்தைத் தமக்கு உரிமைப்பட ஆராய்ந்து உணர்ந்தவர்க்கு ஒக்கமே உளதாவது; பேருடம்பினை யுடையதன் ஆவி பெரியது போன்று.

குற்றம்—முக்குற்றம். ஒக்கம்—உயர்வு.

இதுவரையில் கடவுள் வணக்கம் பல பிரதிகளிலும் உரையளவாகவே காணப்பட்டிருந்தது. இந்த வெண்பாவை நன்னூலின் பழைய உரைகாரர் கொண்டுகூட்டுப் பொருள்கோளுக்கு மேற்கோளாகக் காட்டியிருப்பதை மஹா மஹோபாத்யாயர் ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் கண்டுபிடித்ததாய்ச் செந்தமிழ், 14 தொகுதி, 11 பகுதியில் தெரிவிக்கின்றது.

# பழமொழி நானூறு

## I

## 1. கல்வி

### 1. இளமையிற் கற்றல்

*ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்*
*போற்று மெனவும் புணருமோ?—ஆற்றச்*
*சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லையே. இல்லை*
*மரம்போக்கிக் கூலிகொண் டார்.* 60

(பழைய பொழிப்புரை). கற்கலாம் இளமைக்கண் கற்கலாகாதான், மூப்பு வந்த காலத்துக் கல்வியைக் கற்றுப் போற்றும் என்று சொல்லப்படுவதும் ஒருவர்க்குக் கூடுமோ? மிகவும் சுமந்து வழியைக் கடக்கப் போக விட்டு ஒருவனைச் சுங்கங்கொண்டார் இல்லை. ஓடத்தினின்றும் போக்கிக் கரையேற்றி நின்று கூலிகொண்டாரும் இல்லை.

(பதவுரை). **சுரம் ஆற்ற போக்கி**—ஆயத்துறையின் வழியை மிகவும் கடக்கவிட்டு, **உல்கு கொண்டார்**—(வாணிகச் சரக்குகளின் மீது ஒருவனிடம்) கடமை கொண்டவர், **இல்லை**—இலர். **மரம் போக்கி**—ஓடத்தினின்றும் போக்கி(க்கரையேற்றி நின்று), **கூலி கொண்டார்**—(ஓடத்தில் ஏறி வந்தவரிடம்) கூலிகொண்டவரும், **இல்லை**—இலர். (அங்ஙனமே), **ஆற்றும் இளமைக்கண்**—கற்கக்கூடிய இளமைப்பருவத்தில், **கற்கலான்**—கல்வி கற்காதவன், **மூப்பின்கண்**—மூப்பு வந்த காலத்தில், **போற்றும் எனவும்**—கல்வியைக் கற்றுப் போற்றுவான் என்று சொல்லப்படுவதும், **புணருமோ**—ஒருவருக்குக் கூடுமோ? [ஏ—அசை].

(கருத்து). ஆயத்துறையைக் கடக்கவிட்ட பிறகு ஆயம் வாங்குவது இயலாது; ஓடம்விட் டிறக்கியபிறகு ஓடத்தி லேறிவந்தவர்களிடம் சரியான கூலி வாங்குவது இயலாது. அங்ஙனமே, இளமையை வீணில் கடக்கவிட்டவர்கள் அப்பால் கல்வி கற்பது இயலாது.

பழமொழி.—சுங்கம் மாறினால் சுண்ணும்பும் கிடையாது. ஓடம் விட்டு இறக்கினால் ஓடக்காரனுக்கு ஒரு சொட்டு.

2. மேன்மேற் கற்றல்

சொற்றொறும் சோர்வு படுதலாற் சோர்வின்றிக்
கற்றொறும் கல்லாதே னென்று வழியிரங்கி,
உற்றொன்று சிந்தித் துழன்றொன் றறியுமேல்,
கற்றொறுந் தான் கல்லாத வாறு. 332

(ப—பொ). சொல்லுந்தோறும் சோர்வுபடுதலான், மடிதலின்றிக் கற்குந்தோறும் கற்றிலெனென்று பின்னையும் இரங்கி, அதன்கண்ணே உற்று ஒருமைப்படச் சிந்தித்து முயன்று வருந்தி ஒரு நூலை அறியுமாயின், அது கற்குந்தோறும் தான் கல்லாதவாறாகக் கருதுமாறு போலும்.

(ப—ரை). சொல் தொறும்—(ஆசிரியன்) சொல்லுந்தோறும், சோர்வு படுதலால்—மறதி உண்டாதலால், சோர்வு இன்றி—சோம்பலின்றி, கல்தொறும்—(ஒருவன்) கற்குந்தோறும், கல்லாதேன் என்று—தான் கல்லாதவனென்று கருதி, வழி இரங்கி—பின்னையும் பரிந்து, உற்று—அதன் கண்ணே மனம் பொருந்தி, ஒன்று சிந்தித்து—ஒருமைப்படச் சிந்தித்து, உழன்று—முயன்று வருந்தி, ஒன்று—முன்பு அறிந்திராத ஒரு பொருளை, அறியுமேல்—அறிவானாயின், கல்தொறும் தான் கல்லாத ஆறு—(அது) கற்குந்தோறும் தான் கல்லாதவாறாகவே கருதுமாறு போலும்.

(க—து). சோம்பலின்றி ஒருவன் நூல்களைக் கற்கும்போது, அந் நூற்பொருள்களைப் பலமுறையும் சிந்தித்துவருவானாயின், அவன் முன்பறியாத பொருள்களை அறிவான். இங்ஙனம் கற்று முன்பறியாத பொருள்களை அறியுந்தோறும், தான் கல்வி நிரம்பாதவன் என்பது

தோன்றும். அங்ஙனம் தோன்றுதலால் மேலுமேலும் கற்றலான ஊக்கம் பிறக்கும்.

"அறிதோறறியாமை கண்டற்றால்" என்பது இக்கருத்தே. இதன் பொருள் "நூல்களாலும் நுண்ணுணர்வாலும் பொருள்களை அறிய அறிய முன்னையறியாமையைக் கண்டாற்போலும்" என்பது. "அறிவிற்கு எல்லையின்மையால் மேன்மேல் அறிய அறிய முன்னையறிவு அறியாமையாய் முடியும்." ஆகவே, கல்வியில் விருப்பமுள்ளவன் கற்றவளவில் அமையாது மேன்மேலும் கற்பான் என்பது தெளியப்படும்.

3. ஞானநூல் கற்றல்

விளக்கு விலைகொடுத்துக் கோடல் விளக்குத்
துளக்கமின் றென்றனைத்தும் தூக்கி.—விளக்கு
மருள்படுவ தாயின், மலைநாட! என்னை?
பொருள்கொடுத்துக் கொள்ளா ரிருள். 334

(ப—பொ). விளக்கினுல் ஒன்றனைக் காணுமிடத்து ஐயம் வாராதெனக் கருதி, விளக்கிற்குக் காரணமாகிய நெய் முதலாயினவற்றை விலைகொடுத்துக் கொண்டு, விளக்கினை ஒருவர் உண்டாக்குவது. அவ்விளக்குத் தெளிவாகக் காட்டாதே ஐயத்தைச் செய்யுமாயின், மலைநாடனே! அதனால் பயன் எதுண்டாம்? இருளை யாவரும் பொருள்கொடுத்துக் கொள்ளார் ஆதலான்.

என்றது ஆசிரியனுக்குப் பொருள்கொடுத்துப் பிறப்பறுதற்குக் கருவியாகிய நூல்களை ஓதுக என்றும், உலக மயக்கத்தைச் செய்வதாகிய நூல்களைக் கற்கவேண்டா என்றும் கூறியதாம். அவ்வாறு கல்லாத நூல் ஐயமே தந்து பிறப்பறுது என்பது தோன்ற "மருள்படுவதாயின் என்னை" என்றார்.

(ப—ரை). மலைநாட—மலைநாடனே! விளக்கு துளக்கம் இன்றென்று தூக்கி—விளக்கினுல் (ஒன்றைக் காணுமிடத்து) ஐயம் உண்

டாகாதென்று கருதியே ஆகும், அனைத்தும்—விளக்கிற்குக் காரணமா கிய நெய் முதலாயினவற்றை, விலைகொடுத்து—விலைகொடுத்துக் கொண்டு, விளக்கு கோடல்—விளக்கினை ஒருவர் உண்டாக்குவது. விளக்கு மருள்படுவது ஆயின்—அவ்விளக்கானது (தெளிவாகக் காட்டாமல்) மயக்கத்தைச் செய்வதாயின், என்னை—அதனால் என்ன பயன் உண்டாகும்? இருள் பொருள் கொடுத்து கொள்ளார்—இருளை (எவரும்) பொருள்கொடுத்து வாங்கார்.

குறித்த பொருளை மறைத்து அதனோடொத்த வேறொரு பொருளைக் கூறுதலால் இச்செய்யுள் பிறிது மொழிதல் (ஒட்டு) என்னும் அணியாகும். குறித்த பொருளாவது, பிறப்பறுதற்குக் கருவியாகிய நூல்களை ஆசிரியனுக்குப் பொருள்கொடுத்து ஓதுதல்.

"அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லா
துலகநூல் ஓதுவ தெல்லாம்—கலகல
கூஉந் துணையல்லால் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்."—நாலடியார்.

4. கல்வியின் சிறப்பு

ஆற்றவும் கற்றார் அறிவுடையார். அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை. அந்நாடு
வேற்றுநா டாகா: தமவேயாம். ஆயினால்
ஆற்றுணா வேண்டுவ தில். 55

(ப—பொ). அறிவுடையாராவார் மிகவும் கற்றார். கல்வியாலாய அறிவினையுடையார்க்கு நான்கு திசையின்கண்ணும் சொல் செல்லாத நாடு இல்லை. சென்ற நாடுகள் வேற்றுநாடாகா: தம்முடைய நாடுகளேயாம். ஆயினால் அவ்வழிக்கு உணாக் கொண்டுபோக வேண்டுவதில்லை அவர்கட்கு.

(ப—ரை). அறிவுடையார்—அறிவுடையராவார்; ஆற்றவும் கற்றார்—மிகவும் கற்றவர். அஃது உடையார்—அக்கல்வியாலாகிய அறிவினை உடையாருக்கு, செல்லாத—சொல் செல்லாத, நாடு—நாடு, நால் திசையும்—நான்கு திசையின்கண்ணும், இல்லை—இல்லை. அ நாடு—சென்ற

நாடுகள், வேறு நாடு ஆகா—வேற்று நாடுகள் ஆகா; தமவே ஆம்—தம்மு டைய நாடுகளே யாம். ஆயினால்—அங்ஙனமானால், ஆறுஉணா—அவ்வ ழிக்கு உணவு, வேண்டுவது—அவர்கள் கொண்டுபோக வேண்டுவது, இல்—இல்லை.

"கற்றார்க்குத் தம்மூரென் றூரில்லை"—நான்மணிக்கடிகை.

"யாதானு நாடாமால்; ஊராமால்; என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு?"—திருக்குறள்.

பழமொழி.—சென்ற விடமெல்லாம் சிறப்பே கல்வி. He who has an art, has everywhere a part. An artist lives everywhere.

5. கேள்வியின் சிறப்பு

உணற்கினிய இன்னீர் பிறிதுழிஇல் லென்னும்
கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார்:—கணக்கினை
முற்றப் பகலும் முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று. 61

(ப—பொ). உண்ணுதற்குரிய இன்னீர் பிறிதோரிடத் தில்லை எனக்கருதிக் கிணற்றகத்தே வாழும் தவளைபோல ஒழுகலாகாது; நூல் ஒன்றினையே முடியும்படி நாடோ றும் வெறாதே இனிதாக ஓதிக் கற்றலின், பல நூல்களை யும் கேட்டலே நன்றாதலான்.

(ப—ரை). உணற்கு இனிய இன் நீர்—உண்ணுதற்கினிய நன் னீர், பிறிது உழி இல் என்னும்—(தானுள்ள இடம் தவிர) வேறோரி டத்தில் இல்லை என்றெண்ணும், கிணறு அகத்து தேரைபோல்— கிணற்றினுள்ளே வாழும் தவளைபோல், ஆகார்—ஒருவர் ஒழுகாது, கணக்கினை—நூலொன்றினையே, முற்ற—முடியும்படி, பகலும்—நாள் தோறும், முனியாது—வெறாமல், இனிது ஓதி—இனிதாக ஓதி, கற்ற லின்—கற்றலைக்காட்டிலும், கேட்டலே—(பல நூற்பொருள்களைக்) கேட்டறிதலே, நன்று—நன்றாம்.

(க—து). கிணற்றிலுள்ள தவளை அக்கிணற்று நீர்போல வேறு நீர் இல்லையென்று நினைக்குமாறு, ஒரு நூலிலே அழுந்தியிருப்பவன்

அதுபோல வேறு நூல் இல்லையென்று அதையே பெரிதாக எண்ணி யிருப்பான்: பல விஷயங்களை அறியான். ஆதலால், ஒரு நூலையே தான் கற்றலைக்காட்டிலும் பல நூல்களைக் கற்ற பல பெரியோரிடத் தில் பல விஷயங்களைக் கேட்டறிதலே நன்றாம்.

ஒரு நூலையே கற்று அடைதலான புலமையினும் பல நூல் களைக் கற்றறிந்தவர் கூறக் கேட்டு அடைதலான புலமையே சிறந்தது என்பதாம்.

“கற்றலிற் கேட்ட லினிது” என்பது புறத்திரட்டில் கண்ட பாடம்.

> “எனைத்தானும் நல்லவை கேட்க. அனைத்தானும்
> ஆன்ற பெருமை தரும்.”—திருக்குறள்.

## 6. குலவித்தை கல்லாமல் வருதல்

> உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
> நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
> சொல்லால் முறைசெய்தான் சோழன். குலவிச்சை
> கல்லாமல் பாகம் படும். 21

(ப—பொ). தம்முள் மறுதலையாயினா ரிருவர் தமக்கு முறைமை செய்யவேண்டி வந்து சில சொன்னால் அச் சொல்லின் முடிவுகண்டே ஆராய்ந்து முறைசெய்ய அறிவு நிரம்பாத இளமைப்பருவத்தான் என்றிகழ்ந்த நரைமுது மக்கள் உவக்கும் வகை நரை முடித்துவந்து, முறை வேண்டி வந்த இருதிறத்தாரும் சொல்லிய சொற் கொண்டே ஆராய்ந்தறிந்து முறை செய்தான், கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழன். ஆதலால், தத்தம் குலத்துக்குத் தக்க விச்சைகள் கற்பதற்கு முன்னே செம் பாகம் உளவாம்.

(ப—ரை). உரைமுடிவு காணான் இளமையோன் – உரைத்துக் கொண்ட வழக்கினது வார்த்தை முடிவைக் கண்டறியக் கூடாதவனை

பாலியன், என்ற—என்றிகழ்ந்த, நரைமுது மக்கள்—நரைமயிருள்ள முதியோர், உவப்ப – உவக்கும் வகை, நரை முடித்து—நரைமயிரை முடித்துவந்து, சொல்லால்—வழக்குரைத்தவர்களுடைய சொற்களைக் கொண்டே ஆராய்ந்தறிந்து, முறைசெய்தான் – முறைசெய்தான், சோழன்-கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழன். குலவிச்சை—தத்தம் குலத்துக்குரிய வித்தைகள், கல்லாமல் பாகம் படும்—கற்பதற்கு முன்னே செம்பாகமாக உளவாம்.

பழமொழி.—குலவித்தை கற்றுப் பாதி கல்லாமல் பாதி.

இச்செய்தி பொருநராற்றுப் படையுள் (187–88 வரி) "முதி யோர், அவைபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்" என்று குறித்திருக்கின்றது. அதற்கு நச்சினார்க்கினியர் "என்றது வழக்கு மாறுபட்டு வந்தோர்க்கு அவ்வழக்கு வீடறப்பன் என்றவாறு. 'உரை முடிவு காணான்' என்னும் பழமொழி கூறினார்" என்று உரையெழுதி யிருக்கின்றனர். மணிமேகலை—பளிக்கறை புக்க காதையில் (107–8 வரி) "இளமை நாணி முதுமை யெய்தி, உரை முடிவு காட்டிய உரவோன்" என்று வருவதும் இச்செய்தியையே குறிக்கின்றது.

7. கற்றோரருமை கற்றோரறிதல்

புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம்:—நலமிக்க
பூம்புன லூர! பொதுமக்கட் காகாதே.
பாம்பறியும் பாம்பின கால். 5

(ப–பொ). அறிவுமிக்கவரை அம்மிக்க அறிவினை ஆராய்ந்தறிதல் அறிவுமிக்கவர்க்கே உளதாம்; நன்மை மிக்க புனலூரனே! சிறப்பில்லாத மக்கட்குத் தெரிதல் அரிது: பாம்பினுடைய கால்களைத் தமக்கினமாகிய பாம்புகள் அறியும், அதுபோல.

(ப–ரை). நலம் மிக்க பூ புனல் ஊர—நன்மை மிக்க அழகிய நீர் வளம் உள்ள ஊரனே! பாம்பின கால் பாம்பு அறியும்—பாம்பினுடைய

கால்களைத் தமக்கு இனமாகிய பாம்புகள் அறியும். (அதுபோல), புலமை மிக்கவரை புலமை தெரிதல்—அறிவுமிக்கவரது அறிவினை ஆராய்ந்தறிதல், புலமை மிக்கவர்க்கே புலன் ஆம்—அறிவுமிக்கவர்க்கே உளதாம்: பொதுமக்கட்கு ஆகாது – சிறப்பில்லாத மக்களுக்கு அது முடியாது. [ஆகாதே என்பதில் ஏ அசை].

கல்வியறிவில்லார் மக்களுள் சிறப்பாக வைத்து அறிவுடையோரால் எண்ணப்பெறுர் ஆதலால், "பொதுமக்கள்" என்றுர்.

பழமொழி.—பாவலர் அருமை நாவலர் அறிவார். வித்துவான் அருமையை வித்துவான் அறிவான்; விறகுதலையன் அறிவானு?

8. கற்றுர் நலத்தைக் கற்றுர் உணர்தல்

நல்லார் நலத்தை உணரின் அவரினும்
நல்லார் உணர்ப: பிறருணரார். நல்ல
மயிலாடு மாமலை வெற்ப! மற்றென்றும்
அயிலாலே போழ்ப அயில். 337

(ப–பொ). கற்று நல்லாரது நலத்தை உணரின் அவரினும் கற்று நல்லாரே உணரவல்லர்: பிறர் உணரமாட்டார். நல்ல மயிலாடும் மாமலை வெற்பனே! என்றும் கூரிய இரும்பாலே இரும்பைப் போழ்வர் ஆதலான்.

(ப–ரை). நல்ல மயில் ஆடும் மாமலை வெற்ப—அழகிய மயில்கள் கலாபம் விரித்தாடும் பெரியமலை வெற்பனே! என்றும்—எக்காலத்தும், அயில் அயிலாலே போழ்ப-இரும்பைக் கூரிய இரும்பாலே பிளப்பர். (ஆகவே), நல்லார் நலத்தை உணரின்—கற்று நல்லவராயினுர் நன்மையை உணர்வதாயின், அவரினும் நல்லார் உணர்ப—அவரினும் கற்ற நல்லாரே உணரவல்லார்: பிறர் உணரார்—பிறர் உணரமாட்டார். [மற்று-அசை].

"இரும்பின் இரும்பிடை போழ்ப"—நான்மணிக்கடிகை.

பழமொழி.—அரத்தை அரங்கொண்டும் வயிரத்தை வயிரங்கொண்டும் அறுக்கவேண்டும். Diamonds cut diamonds.

9. கற்றோ ரடக்கம்

கற்றறிந்தார் கண்ட அடக்கம். அறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பர்—தெற்ற.
அறைகல் அருவி அணிமலை நாட!
நிறைகுடம் நீர்தளும்ப லில். 243

(ப–பொ). நூல்களைக் கற்றறிந்தவர்கள் அறிந்தன அடக்கத்திற்குக் காரணமாம். கற்றறியாதார் மறந்து தம்மைப் புகழ்ந்துரைப்பர் தெளிய. பாறைக்கல்லிலே அருவி வந்து வீழும் அழகிய மலைநாடனே! நிறைகுடம் நீர்தளும்புதல் இல்லை (குறைந்த குடமே தளும்புவது).

(ப–ரை). அறைகல் அருவி அணி மலைநாட—பாறைக்கல்லிலே அருவி வந்து வீழும் அழகிய மலைநாடனே! கற்றறிந்தார் கண்ட அடக்கம்—நூல்களைக் கற்றறிந்தார் தங்கள் அறிவால் கண்டனவே அடக்கத்துக்குக் காரணம். அறியாதார்—கற்றறியாதார், பொச்சாந்து—மறந்து, தம்மை—தங்களை, தெற்ற—தெளிவாக, புகழ்ந்துரைப்பர்—தாங்களே புகழ்ந்துரைப்பர். நிறைகுடம் நீர் தளும்பல் இல்—நிறைந்த குடம் நீர் தளும்புதல் இல்லை (குறைகுடமே தளும்புவது).

"பணியுமா மென்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து."—திருக்குறள்.

பழமொழி.—குறைகுடம் கூத்தாடும். Empty vessels give the greatest sound. Deep rivers move in silence, shallow brooks are noisy.

10. கற்றவர் பழியாய செய்தல்

விதிப்பட்ட நூலுணர்ந்து வேற்றுமை யில்லார்
கதிப்பவர் நூலினைக் கையிகந்தா ராகிப்
பதிப்பட வாழ்வார் பழியாய செய்தல்
மதிப்புறத்துப் பட்ட மறு. 258

(ப–பொ). நெறிப்பட்ட நூலின் பயனை உணர்ந்து நெறியின் வேறுபடாதார், அந்நூற்கு மாறாய்க் கழறு

மவர் நூலைத்தேறாது கைகடந்தாராய் நிலைமைப்பட்டொழுகுமவர், பழியாயினவற்றையே செய்தல், மதிப்புறத்து மறுப்போல விளங்கித் தோன்றும்.

(ப—ரை). விதிப்பட்ட நூல் உணர்ந்து வேற்றுமை இல்லார்-நெறிப்பட்ட நூலின் பயனை உணர்ந்து (உற்றறியின்) வேறுபடாதவராய், கதிப்பவர் நூலினை கையிகந்தார் ஆகி-அந்நூலுக்கு மாறாய் ஒழுகுவோராது நூலைத் தேறாது அகன்றுநின்று, பதிப்பட வாழ்வார்—நிலைமைப்பட்டொழுகுமவர், பழியாய செய்தல்—பழியாயினவற்றையே செய்தல், மதி புறத்து பட்ட மறு—சந்திரனிடத்துள்ள களங்கம்போல் விளங்கித் தோன்றும்.

(க—து). நெறிப்பட்ட நூல்களைக் கற்று நிலைமைப்பட்டொழுகுமவர் பழியான காரியங்களைச் செய்தல், சந்திரனிடத்துக் களங்கம் போல விளங்கித் தோன்றும்.

இந்த உவமானம் திருக்குறளில் "குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின், மதிக்கண் மறுப்போ லுயர்ந்து" என வருகின்றது.

## 2. கல்லாதார்

11 கல்லாதான் கண்ட மெய்ப்பொருள்

*கற்றானும் கற்றார்வாய்க் கேட்டானும் இல்லாதார்*
*தெற்ற உணரார் பொருள்களை —எற்றேல்,*
*அறிவில்லான் மெய்தலைப் பாடு பிறிதில்லை;*
*நாவற்கீழ்ப் பெற்ற கனி.* 138

(ப—பொ). நூல்களைக் கற்றறிந்தவனும் கற்றார்வாய்க் கேட்டறிந்தவனு மல்லாத பிறர் தெளியப் பொருள்களின் உண்மையை அறியமாட்டார். எற்றேல், அறிவில்லாதான் ஒரு நுண்மைப்பொருளை அறிந்து சொல்லுதல், பிறிதொன்றில்லை; நாவலின் கீழ் வீழ்ந்ததொரு பழம் ஒருவன் பெற்றது போலும்.

(ப-ரை). கற்றானும் கற்றார்வாய் கேட்டானும் இல்லாதார்—தானே கற்றவனும் கற்றவரிடம் கேட்டவனும் அல்லாதவர், பொருள்களை தெற்ற உணரார்—நூற்பொருள்களைத் தெளிவாக அறியார். அறிவு இல்லான்—நூற்பொருளை அறிதலில்லாதவன், தலைப்பாடு மெய்—தானே பெறுதலாகிய மெய்ப்பொருள், எற்றேல்—எத்தன்மையதெனில், நாவல் கீழ் பெற்ற கனி—நாவல் மரத்தின் அடியில் (ஒருவன்) பெறுதலான பழம் போல்வதன்றி, பிறிது இல்லை—வேறொன்றில்லை.

பெரிய திருமொழி, 10-ம் பத்து, 9-ம் திருமொழி, 5-ம் பாசுரம், "திருமொழி யெங்கள் தேமலர்க் கோதை சீர்மையை நினைந்திலை அந்தோ, பெருவழி நாவற் கனியினு மெளிய ளிவளெனப் பேசுகின்றாயே" என இப்பழமொழியை உதகரித்திருக்கின்றது. "பெருவழிக் கரையில் நாவலில் விழுந்த பழமானது குனிந்தெடுக்கவுமாம்; தவிரவுமாயிருக்கும்" என்பது இப்பழமொழியின் பொருள்.

(க-து). கல்வி கேள்வி யில்லாதவன் தலைப்பட்ட மெய்ப்பொருளைக் கொள்ளலுமாம் தவிர்தலுமாம்.

அறிவில்லான் மெய்த்தலைப்பாடு, "தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால், தேரின் அருளாதான் செய்யு மறம்" எனத் திருக்குறளில் உவமானமாக வந்திருக்கிறது.

12. கல்வி முந்துறாத கழிநுட்பம் இல்லை

கல்லாதான் கண்ட கழிநுட்பம் கற்றார்முன்
சொல்லுங்கால் சோர்வு படுதலால், —நல்லாய்!
வினைமுந் துறாத உரையில்லை, இல்லை
கனைமுந் துறாத வினை. 2

(ப-பொ). கற்றுவல்லாதான் ஆராய்ந்துகண்ட மிக்க நுண்மை, கற்றார் முன்பு தான் சொல்லுங்கால் சோர்வு படுதலால், நல்லாய்! வினை முற்படாத செப்பும் இல்லை, கனை முற்படாத வினையும் இல்லை யாதலால், அவைபோலக் கல்வி முந்துறாத நுண்மையுணர்வும் இல்லை.

(ப-ரை). நல்லாய்—நலமுடையாளே! கல்லாதான் கண்ட கழிநுட்பம்—கல்லாதவன் ஆராய்ந்துகண்ட மிக்க நுண்பொருளை, கற்றார்

முன் சொல்லுங்கால்—கற்றவ ரெதிரில் சொல்லும்போது, சோர்வுபடு தலால்—அப்பொருள் வலியிழத்தலால்; வினு முந்துறுத உரை இல்லை—வினு முன்னர் உளதாகாத விடை இல்லை, கனு முந்துறுத வினை இல்லை—கனு முன்னர் உளதாகாத செயலும் இல்லை; (ஆதலால் அவை போலக் கல்வி முந்துறுத நுண்ணுணர்வு இல்லை).

(க—து). எழுந்த வினுவுக் கேற்ப விடை உண்டாகும்: கண்ட கனுவுக் கேற்பச் செயல் உண்டாகும்: அங்ஙனமே கற்ற கல்விக் கேற்ப ஒருவனிடம் நுண்பொருள் தோன்றும். வினுவின்றி விடையில்லை: கனுவின்றிச் செய்ய லில்லை: கல்வியின்றி நுண்பொருள் தோன்றுவ தில்லை.

நுட்பமான ஒரு பொருளைக் கண்டறிந்தாலும், கற்றறிந்தவருக்கு அதனை விளங்க உரைக்கும் திறம், கல்லாதவனிடத்தில் இல்லை.

பரிமேலழகர் திருக்குறளில் பொழுதுகண்டிரங்கல் என்கிற அதிகாரத்தை விளக்குமிடத்தில் "மாலைப்பொழுது வந்துழி அதனைக் கண்டு தலைமகள் இரங்குதல், கனுமுந்துறுத வினையில்லை' என்பது பற்றிப் பகற்பொழுது ஆற்றியிருந்தாட்கு உரியதாதலின், இது கனவு நிலை யுரைத்தலின்பின் வைக்கப்பட்டது" என்று இப்பழமொழியை உதகரித்திருக்கின்றனர்.

13. கல்லாதான் கண்ட கழிநுட்பத்தைக் காட்டுத லரிது.

கல்லாதான் கண்ட கழிநுட்பம் காட்டரிதால்,
நல்லேமியாம் என்றொருவன் நன்கு மதித்தலென்?
சொல்லால் வணக்கி வெகுண்டடு கிற்பார்க்கும்
சொல்லாக்கால் செல்லுவ தில். 367

(ப—பொ). பல நூல்களையும் கல்லாதான் தானுகக் கண்டதொரு நுண்ணிய பொருள் பிறர்க்கு மேற்காட்டுதல் அரிதாகலான், நல்ல பொருள்விளக்கம் உடையமென்று ஒருவரையும் மதியாமல் ஒருவன் தன்னைத் தானே நன்குமதித்ததனுல் என்ன பயன் உண்டு? தம்மை இகழ்ந்தவரைத் தாழ்வித்து வெகுண்டு தம் சொல்லால்

கெடுக்கவல்ல முனிவர்க்குமே, பிறர்க்கேற்கச் சொல்லாக் கால், சொல்லுஞ் சொல்லால் பயனில்லை, ஆதலான்.

(ப—ரை). கல்லாதான் கண்ட கழி நுட்பம்—(பல நூல்களையும்) கல்லாதவன் தானாகக் கண்ட மிகவும் நுண்ணிய தொருபொருளை, காட்டு—பிறருக்கு விளங்கும்படி காட்டுதல், அரிதால்—அரிதாகையால், ஒருவன்—சொல்வன்மை யில்லாத ஒருவன், நல்லேம் யாம் என்று நன்குமதித்தல்—நல்ல பொருள் விளக்கம் உடையேம் என்று (ஒருவ ரையும் மதியாமல்) தன்னைத் தானே நன்குமதித்தல், என்—என்ன பயனைச் செய்யும்? வணக்கி வெகுண்டு சொல்லால் அடுகிற்பார்க் கும்—(தம்மை இகழ்ந்தவரைத்) தாழ்வித்துக் கோபித்துத் தமது சொல் லால் கெடுக்கவல்ல முனிவருக்கும், சொல்லாக்கால்—சொல்லக் கருதி யதைப் பிறருக் கேற்கச் சொல்லாவிடத்து, செல்லுவது இல்—(சொல் லும் சொல்லால்) உண்டாவதான பயன் இல்லை.

(க—து). முனிவரேயாயினும் தாம் கருதியதை விளக்கும் வலி இல் லாவிடின் அவர் வார்த்தையால் பலன் இல்லை. ஆகவே, தான் கண்ட சூட்சமப் பொருளைப் பிறருக்கு விளக்குதல் முடியாத மூடன் தன் னைத்தானே நன்குமதித்தலால் என்ன பலன் உண்டு?

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயும் காத்த லரிது" ஆதலால், முனிவரை "வெகுண்டடுகிற்பார்" என்றார். கழி நுட்பம் காட்டுதலாவது, "எண்பொருளவாகச் செலச் சொல்லுதல்".

14. கல்லார்முன் சொல்லிய கழிநுட்பம்

கல்வியா னாய கழிநுட்பம் கல்லார்முன்
சொல்லிய நல்லவும் தீயவாம்,—எல்லாம்
இவர்வரை நாட! தமரையில் லார்க்கு
நகரமும் காடுபோன் றாங்கு. 3

(ப—பொ). கல்வியானாய மிக்க நுண்மையறிவால் ஒரு வன் கல்லார்முன்பு சொல்லிய நல்ல பொருள்களும் தீய வாம்; எல்லாப் பொருள்களாலும் விரும்பப்படாநின்ற வரைநாடனே! தமரை யில்லாதார்க்கு நகரமும் காடு போன்றது போல.

(ப—ரை). எல்லாம் இவர் வரைநாட—எல்லாப் பொருள்களும் விரும்புதலான மலைநாடனே! தமரை இல்லார்க்கு – உறவினரைப் பெற்றிலார்க்கு, நகரமும்—நகரமும், காடு போன்றுங்—காடு போன் றதுபோல; கல்வியான் ஆய கழி நட்பம்—கல்வியாலாகிய மிக்க நுண் மையறிவால், கல்லார்முன் சொல்லிய நல்லவும—கல்லாதார் முன்பு சொல்லிய நல்ல பொருள்களும், தீயவாம்—தீயனவாம்.

(க—து). காட்டை அடைந்தவர் திசை தடுமாறி அச்சமடைந்து இடர்ப்படுவர்: ஆபத்துகளுக்கும் உள்ளாவர். உற்றார் உறவினர் இல் லாத நகரை அடைந்தவரும் இன்ன இடத்தில் இருப்பது இன்ன இடம் செல்வது இன்னது செய்வது என்றறியாமல் இடர்ப்படுவர்: ஆபத்து களுக்கும் உள்ளாவர். உற்றார் உறவினர் உள்ள நகரை அடைந்தவர் பல நன்மைகளை அடைவர். ஆகவே உற்றார் உறவினர் இல்லார்க்கு நல்ல நகரமும் காடுபோல்வ தாகின்றது. இங்ஙனமே, கற்றறிந்தவர் கல்லாரிடம் உரைக்கும் நல்ல பொருள்கள் தீயனவாகவே முடியும். நுண்ணறிவால் கண்ட பொருளை மூடரிடம் சொல்லலாகாது என்பதாம்.

"அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால், தங்கணத்த
ரல்லார்முன் கோட்டி கொளல்."—திருக்குறள்.

"இன்னு தினனில்லூர் வாழ்தல்."—திருக்குறள்.

பழமொழி.—உற்று ரில்லாத வூரும் வூரோ?

## 15. கல்லாரிடம் கட்டுரைத்தல் பொல்லாதாம்

கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை ஒருவற்கு.—நல்லாய்!
இழுக்கத்தின் மிக்க இழிவில்லை: இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு 64

(ப—பொ). கல்லாதார் முன்பு சொல்லும் கட்டுரை யின் மிக்கதொரு பொல்லாமை இல்லை: ஒருவற்கு, நல் லாய்! இழுக்கத்தின் மிக்கதோர் இழிவும் இல்லை; ஒழுக் கத்தின் மிக்கதோர் உயர்வும் இல்லை ஆதலான்.

(ப—ரை). நல்லாய்—நல்லாய்! ஒருவற்கு—ஒருவனுக்கு, இழுக்கத்தின் மிக்க இழிவு இல்லை—இழுக்கத்தைப்பார்க்கிலும் மிக்கதோர் இழிவும் இல்லை. ஒழுக்கத்தின் மிக்க உயர்வு இல்லை—ஒழுக்கத்தைப் பார்க்கிலும் மிக்கதோர் உயர்வும் இல்லை. (ஆதலால்), கல்லாதவரிடை கட்டுரையின்—கல்லாதார் முன்பு சொல்லும் கட்டுரையைப் பார்க்கிலும், மிக்கது ஓர் பொல்லாதது—மிக்கதொரு பொல்லாமை, இல்லை—இல்லை.

(க—து). "ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை. இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி". கற்றார் இதனை அறிவார். கல்லாதாரிடம் கட்டுரைத்தால் அது பொல்லாதாகவே முடியும்.

"ஒழுக்கத்தின் ஊதிய மற்று" என்பது புறத்திரட்டில் கண்ட பாடம்.

"புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார்".—திருக்குறள்.

"அருளின் அறமுரைக்கும் அன்புடையார் வாய்ச்சொல்
பொருளாகக் கொள்வர் புலவர்.—பொருளல்லா
ஏழை அதனை இகழ்ந்துரைக்கும், பாற்கூழை
மூழை சுவையுணரா தாங்கு."—நாலடியார்.

"வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்ளார்
கன்றிக் கறுத்தெழுந்து காய்வாரோ—டொன்றி
உரைவித் தகமெழுவார் காண்பவே கையுள்
சுரைவித்துப் போலுந்தம் பல்."—நாலடியார்.

## 16. கல்லார் கற்றவரைக் கறுப்பித்தல்

கற்றுற்று வாரைக் கறுப்பித்துக் கல்லாதார்
சொற்றுற்றுக் கொண்டு சுனைத்தெழுதல்—எற்றெனின்
தானுங் கடவான் முடவன் பிடிப்பூணி
யானையோ டாடல் உறவு. 192

(ப—பொ). கற்றுவல்லாராய்க் கல்வியை நடத்தவல் லாரை வெகுள்வித்துக் கல்லாதார் சொற்களைக் கொழித் துக்கொண்டு மனவெழுச்சியான் மிக்கெழுதல் எத்தன் மைத்தெனின், ஒருவன் தானும் நடக்க ஆற்றலிலன், முடவனாய்க் கைப்பாணிகொண்டு தவழ்வானொருவன், யானையோடாடி விளையாடலுறுதலோ டொக்கும்.

(ப—ரை). கற்று ஆற்றுவாரை—கற்றுவல்லராய்க் கல்வியை நடத்த வல்லவரை, கறுப்பித்து—கோபமூட்டி, கல்லாதார்—கல்லாதவர், சொல் தாற்றுக்கொண்டு—சொற்களைக் கொழித்துக்கொண்டு, சுனைத்து எழு தல்—மனவெழுச்சியால் மிக்கெழுதல், எற்று எனின்—எத்தன்மைய தென்றால்; தானும் நடவான் முடவன்—தானும் நடக்கமுடியாத முட வனாய், பிடிப்பூணி—கைப்பாணிகொண்டு தவழ்வா னொருவன், யானை யோடு ஆடல் உறவு—யானையோடு விளையாடலுறுதலோ டொக்கும்.

(க—து). தம்முடைய சொல்லால் வென்றுவிடலாமென் றெண் ணிக் கல்லாதார் கல்விமான்களுக்குக் கோபமூட்டி எழுதலானது, கைப்பாணிகொண்டு தவழ்கின்ற முடவன் யானையோடு விளையாட லுறுவது போலாம். முடவன் உயிரிழப்பான். கல்லார் அவமான மடைவர்.

"சொற்றாற்றுக் கொண்டு சுனைத்தெழுதல் காமுறுவர்
கற்றாற்றல் வன்மையும் தாந்தேறார்."—நாலடியார்.

## 3. அவையறிதல்

### 17. அவையின் செவ்வி யறிதல்

கேட்பாரை நாடிக் கிளக்கப் படும்பொருட்கண்
வேட்கை அறிந்துரைப்பார் வித்தகர்.—வேட்கையால்
வண்டு வழிபடரும் வாட்கண்ணாய்! தோற்பன
கொண்டு புகாஅ ரவை. 4

(ப—பொ). தாம் உரைக்கின்ற பொருளைக் கேட்கவல் லாரை நாடித் தாம் சொல்லப்படும் பொருட்கண் அவர்

விரும்புவா ரென்பதனை அறிந்து சொல்லுவர் தெள்ளி யார்; தம் காதலாலே வண்டுகள் பூவென்று பின்செல்லா நின்ற ஒளியினையுடைய கண்ணாய்! தோற்பவை கொண்டு அவையின்கண் புகார் ஆதலால்.

(ப—ரை). வேட்கையால் வண்டு வழிபடரும் வாள் கண்ணாய்—(தம்முடைய) விருப்பததாலே வண்டுகள் (பூவென்று) பின்செல் லாநின்ற ஒளியினையுடைய கண்ணாய்! கேட்பாரை நாடி—தாம் உரைக் கின்ற பொருளைக் கேட்கத்தக்கவரை நாடி, விளக்கப்படும் பொருள் கண் வேட்கை அறிந்து—தம்மால் சொல்லப்படும் பொருளின்கண் அவருக்கு விருப்பம் இருப்பதை அறிந்து, உரைப்பர்—சொல்லுவர், வித்தகர்—அறிஞர். தோற்பன கொண்டு அவை புகார்—தோற்பதற்குக் காரணமானவைகளைக் கொண்டு சபையின்கண் புகார்.

(க—து). ஒருவர் ஒரு சபையில் ஒரு விஷயத்தைச் சொல்லப் புகு முன் அச்சபையில் அவ்விஷயத்தை அறியத்தக்கவர் உளரா, அவ்விஷ யத்தைக் கேட்க அவருக்கு விருப்பம் உளதா என்பதை அறிந்து கொண்டே அச்சபையில் அவ்விஷயத்தைச் சொல்லவேண்டும். அப்ப டிச் சொல்பவரே வித்தகர்.

இவ்வாறு ஆராய்ந்து, தாம் சொல்லிய நல்லனவற்றைத் தீயனவாகாத படி பயன்படுத்தும் அறிவினராதலால் அவரை "வித்தகர்" என்றார்.

"அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்."—திருக்குறள்.

## 18. வாதக்கிரமம்

ஒருவ ருரைப்ப உரைத்தால், அதுகொண்
டிருவரா வாரும் எதிர்மொழியற் பாலா.
பெருவரை நாட! சிறிதேனும் இன்னா
திருவர் உடனாடல் நாய். 352

(ப—பொ). ஒருவர் ஒரு பொருளை, 'இப்பொருள் இப் பெற்றித்தே' என்றுரைப்ப, அப்பொருளை, 'அஃது இப் பெற்றித்து' என்று ஒருவர் உரைப்பனவெல்லாம் உரைத் தால், அந்தப்பொருளை உட்கொண்டு அது முடிந்தால், இருவராவாரும் எதிர்மொழியல் தகும்பகுதியை உடை யனவல்லன. பெருவரைமேல் உண்டாகிய நாடனே! அது சிறிதாயினும் பொல்லாது. எவ்வண்ணமெனில், இரு வர் தனித்தனியேயன்றி ஒரு காலத்திலே ஒரு நாயைக் கொண்டு வேட்டையாடுதல் பொல்லாதாம் அதுபோல.

(ப—ரை). பெருவரை நாட—பெரிய மலைமேல் உண்டாகிய நாட னே! இருவர் நாய் உடனுடல் (இன்னாது)—இருவர் தனித்தனியே யன்றி ஏககாலத்தில் ஒரு நாயைக்கொண்டு வேட்டையாடுதல் பொல் லாதாம். (அதுபோல), ஒருவர் உரைப்ப—ஒருவர் ஒரு பொருளை இத் தன்மைத்தென உரைப்ப, உரைத்தால்—அப்பொருளை அஃது இத்தின் மையதென்று மற்றொருவர் உரைப்பனவெல்லாம் உரைத்தால், அது கொண்டு—அந்தப் பொருளை உட்கொண்டு (அது முடிந்தபோது), இரு வராவாரும் எதிர்மொழியல்—வாதம் செய்யலுற்ற இருவரும் தம்முள் ஏககாலத்தில் எதிர்மொழியல்; பாலா—தகுதியாகுமா? சிறிதேனும்— அது சிறியதாயினும், இன்னாது—பொல்லாது.

ஒரு பொருளைப் பற்றிய வாதத்தில், ஒருவர் அது இத்தன்மைத் தென்று சொல்ல, மற்றவர் அது இத்தன்மைத்தென்று வேறாகச் சொல்வதைச் சொல்லிய பின், அவ்விருவரும் அப்பொருளைப்பற்றி ஏககாலத்தில் எதிர்வார்த்தை பேசுதல் ஆகாது. அது, தனித்தனியே யன்றி, ஏககாலத்தில் இருவர் ஒரு நாய் கொண்டு வேட்டையாடுதல் போல், பொல்லாதாம்.

(க—து). வாதஞ்செய்வோ ரிருவர் தத்தம் கட்சியை ஒருவர்பின் ஒருவராக எடுத்துப் பேசவேண்டும். ஏககாலத்தில் இருவரும் ஒன் றாகக் கூவுவதனால் நன்மை உண்டாகாது: கெடுதியே உண்டாகும்.

## 19. வார்த்தையில் விடைவழு

துன்னி இருவர் தொடங்கிய மாற்றத்திற்
பின்னை உரைக்கப் படற்பாலான்,—முன்னி
மொழிந்தால், மொழியறியான் கூறல், முழந்தாள்
கிழிந்தானை மூக்குப் பொதிவு. 347

(ப—பொ). கடாவுவானும் விடைகொடுப்பானும் ஆகிய இருவர் தம்முள்கூடிச் சொல்லத்தொடங்கிய மாற்றத்தின்கண், பின்னாக விடைகூறத் தகுவான், முன்னுரைத்துக் கடாவினால் அந்த உரையின் பெற்றி அறியாதே தான் மற்றொன்றை விடையாகக் கூறுதல், முழந்தாள் கிழிந்து புண்பட மூக்கை இழைகொண்டு பொதிவதனோ டொக்கும்.

(ப—ரை). இருவர் துன்னி தொடங்கிய மாற்றத்தின்—வினவுவானும் விடைகொடுப்பானு மாகிய இருவரும் தம்முள் கூடிச் சொல்லத் தொடங்கிய வார்த்தையின்கண், பின்னை உரைக்கப்படற்பாலான்—பின்னாக விடைகூறத் தக்கவன், முன்னி மொழிந்தால் மொழி அறியான் கூறல்—முன்னுரைத்து வினவினால் அந்த வார்த்தையின் தன்மையை அறியாமல் தான் மற்றொன்றை விடையாகக் கூறுதலானது, முழந்தாள் கிழிந்தானை மூக்கு பொதிவு—முழந்தாள் கிழிந்து புண்பட்டவனுக்கு மூக்கை இழைகொண்டு கட்டுவதோ டொக்கும்.

(க—து). இருவர் வார்த்தையாடுவதில், ஒருவனுடைய வினவின் தன்மையை அறியாமல் மற்றவன் மற்றொன்றை விடையாகக் கூறுதலானது, முழங்காலில் அடிப்பட்டவனுக்கு மூக்கில் கட்டுக் கட்டுவது போலும்

"பட்டுக் கோட்டைக்கு வழி எதென்றால், கொட்டைப் பாக்குப் பத்துப் பணம் என்கிறான்". "I am talking of hay, and you of horse beans". "I ask for a fork, and you bring me a rake". இவை போல்வன இச்செய்யுட் பொருளுக்கு உதாரணமாகும்.

## 20. கற்றா ரவையில் கல்லார் சொல்லாடுதல்

கல்லாதும் கேளாதும் கற்றா ரவைநடுவண்
சொல்லாடு வாரையும் அஞ்சற்பாற்.—றெல்லருவி
பாய்வரை நாட! பரிசழிந் தாரோடு
தேவரு மாற்ற லிலர். 350

(ப-பொ). ஒரு நூலைக் கற்பதும் செய்யாராய்க் கற்றாருடன் கேட்டுணராருமாய்க் கற்றுவல்லவர் இருக்கும் அவை நடுவே இருந்து சில சொல்லும் தன்மையுடையாரை (மூர்க்கராகிப் பழிக்கு அஞ்சாதார்க்கு அஞ்சுமாறுபோல) அஞ்சுதல் பகுதியுடைத்து; விளங்கிய அருவி பரந்த வரை நாடனே! பண்பழிந்தாரோடே தேவர்களும் ஒரு வார்த்தை சொல்லுமா றில்லையாய் அஞ்சுமாறு போல.

(ப-ரை). எல் அருவி பாய் வரைநாட—விளங்கிய அருவி பாயும் மலைநாடனே! பரிசு அழிந்தாரோடு—பண்பழிந்தாரோடு, தேவரும்—தேவர்களும், மாற்றல் இலர்—ஒரு வார்த்தை சொல்லார். (ஆதலால்). கற்றார் அவை நடுவண்—கற்றுவல்லவர் இருக்கும் சபையின் நடுவிலிருந்து, கல்லாதும் கேளாதும் சொல்லாடுவாரையும்—ஒரு நூலையும் கற்பதும் செய்யாராய்க் கற்றாரிடம் கேட்டுணராருமாய்ச் சில வார்த்தை சொல்லும் தன்மையுடையாரையும், அஞ்சல் பாற்று—அஞ்சுதல் தகுதியுடையது.

## 21. கற்றோரவையில் கல்லார் புன்சொல் விளம்பல்

அகல முடைய அறிவுடையார் நாப்பண்
புகலறியார் புக்கவர் தாமே.—இகலினால்
வீண்சேர்ந்த புன்சொல் விளம்பல் அதுவன்றோ
பாண்சேரிப் பற்கிளக்கு மாறு. 115

(ப—பொ). விரிந்தகன்ற அறிவினையுடையார் நடுவே புகுதற்குத் தகாதார் புக்கு, அவர்தாம் மாறுபாட்டினால் பயனில்லாத புல்லிய சொற்களை வலியத் தாமே சொல்லுத லதுவன்றோ, பாணரிருந்த சேரியினுள்ளே புக்குப் பிறனொருவன் பாடுவேமென்று பல்தோன்ற வாயைத்திறந்து பாடும் நெறி.

(ப—ரை). அகல முடைய அறிவு உடையார் காப்பண்—விரிந்த கன்ற அறிவினையுடையார் நடுவிலே, புகல் அரியார் புக்கு—புகுதற்குத் தகாதவர் புகுந்து, இகலினால் – விரோதத்தால், வீண் சேர்ந்த புன்சொல்—பயனில்லாத அற்பமான வார்த்தைகளை, அவர்தாமே விளம்பல் அது—அவர் வலியத் தாமே சொல்லுதலாகிய அச்செய்கை, பாண்சேரி பல் இளக்கும் ஆறு அன்றோ—பாணரிருந்த சேரியில் புகுந்து வேறொருவன் தான் பாடுவதாகப் பல்தோன்ற வாயைத் திறந்து பாடும் விதமன்றோ.

(க—து). அறிவுடையார் கூட்டத்தில் அறிவிலார் புகுந்து அவர்களோடு மாறுபட்டு வீண்வார்த்தை சொல்லுதல், பாட்டில் வல்ல பாணர் சேரியில் பிறனொருவன் சென்று தான் பாட்டில் வல்லவனென்று பல்தோன்ற வாயைத்திறந்து பாடுவதனோ டொக்கும்.

பழமொழி.—Enchantments to Egypt: Indulgences to Rome. You bring owls to Athens.

22. கற்றூரவையில் கல்லார் ஞானம் வினாவியுரைத்தல்

மானமும் நாணும் அறியார் மதிமயங்கி,
ஞான மறிவா ரிடைப்புக்குத் தாமிருந்து
ஞானம் வினாஅ யுரைத்தல், நகையாகும்,
யானைப்பல் காண்பான் பகல். 298

(ப—பொ). தம்முடைய மானம் அழிதலையும் நாணம் அழிதலையும் அறியாராய் நெஞ்சம் மயங்கி, பல நூல்களையும் அறிவார்நடுவே புகுந்திருந்து, பகலே யானையைப்

பல்பிடித்துப் பார்ப்பார்போல, அவர் துணையைத் தெரியாதே, நூல்களை வினவியுரைத்தல் நகையாகும்.

(ப-ரை). மானமும் நாணும் அறியார்—தம்முடைய மானம் அழிதலையும் நாணம் அழிதலையும் அறியாராய், மதிமயங்கி—புத்திமயங்கி, ஞானம் அறிவாரிடை தாம் புக்கு இருந்து—பலநூல்களையும் அறிவார் நடுவில் தாம் புகுந்திருந்து, ஞானம் வினய் உரைத்தல்-(அவர் அறிவின் அளவை அறியாது) நூல்களை வினவியுரைத்தலானது, பகல் யானைப்பல் காண்பான்—பகலே யானையைப் பல் பிடித்துப் பார்ப்பார்போல், நகையாகும்—யாவர்க்கும் நகை தருவதாகும்.

யானைப்பற் காண்டல்—அளவிடுதற் கருமை சொன்னதாம்.

(க-து) கல்விமான் வினவிடையால் ஒருவருடைய ஞானத்தின் அளவை அறியலாம்: கல்லார் அது செய்தல் நகைப்புக் கிடமாம்.

## 23. கற்றாரைக் கல்லார் எள்ளிக் கூறல்

அல்லவையுள் தோன்றி அலவலைத்து வாழ்பவர்
நல்லவையுள் புக்கிருந்து நாவடங்கக்—கல்வி
அளவிறந்து மிக்கா ரறிவெள்ளிக் கூறல்,
மிளகுளு வுண்பான் புகல். 326

(ப-பொ). நல்ல குழுவல்லாத குழூவின்கண் புக்குத் தோன்றி நாணமில்லாத தன்மையைச் செய்து வாழ்பவர், நன்றாகிய அவையின்கண்ணே புக்கிருந்து, பிறர் நா அடங்கும்படி கல்வியால் அளவினைக் கடந்து மிக்கோருடைய அறிவை இகழ்ந்து சொல்லுதல், நன்றாக விளைந்த வினைபயனை உண்ணுமல் மிளகின் உளுவை உண்பான் வேண்டிப் புகுந்தவதனோ டொக்கும்.

(ப-ரை). அல் அவையுள் தோன்றி—நல்லதல்லாத சபையுள் புகுந்து, அலவலைத்து வாழ்பவர் – நாணங்கெட்டு வாழ்பவர், நல் அவையுள் புக்கிருந்து — நன்றாகிய சபையிலே புகுந்திருந்து, நா அடங்க கல்வி அளவிறந்து மிக்கார் அறிவு—பிறர்நா அடங்கும்படி

கல்வியால் அளவினைக் கடந்து மிக்கோருடைய அறிவை, எள்ளிக் கூறல்—இகழ்ந்து சொல்லுதல், மிளகு உளு உண்பான் புகல்—(நன்றாக விளைந்த விளைவினை உண்ணாமல்) மிளகின் உளுவை உண்ணப் புகுவதனோ டொக்கும். [உளு—புழு].

மிளகு சாதிக்காய் ஏலக்காய் முதலியவற்றில் உள்ள புழுவை உண்டவர் பிழைத்த லரிதென்பர்.

24. புல்லவையுள் கல்லார் புகழ்ந்துகொள்ளல்

நல்லவை கண்டக்கால் நாச்சுருட்டி, நன்றுணராப்
புல்லவையுள் தம்மைப் புகழ்ந்துரைத்தல்;—புல்லார்
புடைத்தறுகண் அஞ்சுவான், இல்லுள்வில் லேற்றி
இடைக்கலத் தெய்து விடல். 249

(ப—பொ). கற்றறியும் நல்லவையத்தாரைக் கண்டால் ஒன்றைச் சொல்லாதே தம்முடைய நாவை மடக்கி, நன்றறியாத புல்லிய அவையத்தாரிடைத் தம்மைத்தாமே புகழ்ந்துரைத்தல், தம்பகைவர்மாட் டுள்ள தறுகண்மையை அஞ்சுவா னொருவன், தன் மனையின்கண் நின்று, தன் வில்லை ஏற்றிக் கருங்கலங்களிடையே அம்பை விடுவதனோ டொக்கும்.

(ப—ரை). நல்லவை கண்டக்கால் நா சுருட்டி—கற்றறிந்தவருடைய நல்ல சபையைக் கண்டால் ஒன்றும் சொல்லாமல் தம்முடைய நாவை மடக்கி, நன்று உணரா புல்லவையுள் — நன்றறியாத கேவலமானவருடைய சபையில், தம்மை புகழ்ந்துரைத்தல்—தம்மைத் தாமே புகழ்ந்து பேசுதலானது, புல்லார் புடை தறுகண் அஞ்சுவான் — தன் பகைவரிடத்துள்ள தறுகண்மையை அஞ்சுவா னொருவன், இல்லுள் — தன் மனையின்கண் நின்று, வில் ஏற்றி—தன் வில்லை ஏற்றி, கலத்து இடை எய்துவிடல் — கருங்கலங்களின் இடையே அம்பை எய்வதனோ டொக்கும்.

"பகையகத்துப் பேடிகை யொள்வாள், அவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல்."—திருக்குறள்.

## 25. கல்லாரவையில் உறுதியுரைத்தல்

நடலை இலராகி நன்றுணரா ராய
முடலை முழுமக்கள் மொய்கொ ளவையுள்
உடலா ஒருவற் குறுதி யுரைத்தல்,
கடலுளால் மாவடித் தற்று. 72

(ப—பொ). மனத்தின்கண் கவலையில்லாராய் நன்மை யறியாராகிய மனம்வலிய முழுமக்கள் மொய்கொண்ட அவையின்கண் இருந்த ஒருவற்கு அறிவிற் குடலாகிய உறுதியாயினவற்றை உரைத்தல், கடலுள்ளே மாங்கனியை வடித்தாற்போலும்.

(ப—ரை). நடலை இலராகி—மனத்தில் கவலை இல்லாதவராய், நன்று உணரார் ஆய—நன்மை அறியாராகிய, முடலை முழுமக்கள்—மனவலிமையுள்ள மூடர், மொய்கொள் அவையுள்—நெருங்கியுள்ள சபையில், ஒருவற்கு—ஒருவனுக்கு, உடலா(க) உறுதி உரைத்தல்—உடலாக உறுதிகளை உரைத்தலானது, கடல் உள் மாவடித்தால் அற்று—கடலுள்ளே மாங்கனியை வடித்தாற்போலும். [ஆல்—அசை].

"பன்றிக்கூழ்ப் பத்தரிற் றேமா வடித்தற்றால்
நன்றறியா மாந்தர்க் கறத்தா—றுரைக்குங்கால்."—நாலடியார்.

பழமொழி.—நுளையன் அறிவானா ரத்தினத்தின் பெருமையை?
To throw pearls before swine.

# 4. அறிவுடைமை

## 26. அறிவின் மாண்பு

அறிவினால் மாட்சியொன் றில்லா ஒருவன்
பிறிதினால் மாண்ட தெவனாம்?—பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணியெல்லாம் ஆடையின் பின். 271

(ப—பொ). அறிவினால் ஒரு மாட்சிமையும் இல்லாத ஒருவன், செல்வம் குலம் முதலாயினவற்றால் மாட்சிமைப்பட்டன என் செய்ய வல்லன்? ஆம் பொறிச்செய்கையையுடைய மணியும் பொன்னும் சாந்தும் பூமாலையும் என்று சொல்லப்பட்ட இன்ன அணியெல்லாம் ஒருவருக்கான ஆடையின் பின்னை விரும்பப்படுவன ஆதலான்.

(ப—ரை). ஆம்—நன்மையாகிய, பொறியின்—பொறிச்செய்கையை யுடைய, மணி(யும்) பொன்னும்—இரத்தினாபரணமும் பொன்னாபரணமும், சாந்தமும் மாலையும்—சந்தனக்குழம்பும் பூமாலையும், இன்ன அணியெல்லாம்—என்று சொல்லப்பட்ட இவைபோன்ற அணிகளெல்லாம், ஆடையின் பின்-(உடுக்கும்) ஆடைக்குப் பின்னே விரும்பப் படுவன. (ஆதலால்), அறிவினால் ஒன்று மாட்சி இல்லா ஒருவன்—அறிவினால் ஒரு பெருமையும் இல்லாத ஒருவன், பிறிதினால் மாண்டது எவன்—மற்றச் செல்வம் குலம் முதலானவற்றால் மாட்சிமைப்படுதல் இல்லை

பொறித்தல் – பொலிவுபெறச் செய்தல். எவன் என்னும் வினா வினைக்குறிப்பு இல்லை என்னும் பொருள்மேல் நின்றது.

(க—து). 'ஆடை யில்லாதவன் அரை மனிதன்'. ஆகவே ஆபரணங்களைக் காட்டிலும் ஆடையே மேலானது. அங்ஙனமே செல்வம் குலம் முதலியவைகளைக் காட்டிலும் அறிவே மேலானது.

"மாலையுமற் றின்ன" என்பது புறத்திரட்டில் கண்ட பாடம்.

"அறிவுடையார் எல்லா முடையார். அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்."—திருக்குறள்.

27. அறிவினர் மாண்பு

ஆயிரவ ரானும் அறிவிலார் தொக்கக்கால்
மாயிரு ஞாலத்து மாண்பொருவன் போல்கலார்.
பாயிருள் நீக்கும் மதியம்போல் பன்மீனும்
காய்கலா வாகு நிலா. 47

(ப—பொ). அறிவில்லாதார் ஆயிரவர் திரண்டாராயினும், மாயிருஞாலத்து அறிவால் மாட்சிமைப்பட்ட ஒருவன்போல விளங்கமாட்டார்; பரந்த இருளை நீக்கும் திங்களைப்போல நிலாவை எறிக்கமாட்டா, பலமீனுமாய்த் திரண்டாலும், அதுபோல.

(ப—ரை). பல்மீனும் (தொக்கக்கால்)—பல நக்ஷத்திரங்கள் திரண்டாலும், பாய் இருள் நீக்கும் மதியம்போல்—பரந்த இருளை நீக்கும் சந்திரனைப்போல, நிலா காய்கலாவாகும்—நிலவை எறிக்கமாட்டா. (அதுபோல), மா இரு ஞாலத்து—மிகவும் பெரிய பூமியில், அறிவிலார் ஆயிரவரானும் தொக்கக்கால்—அறிவில்லாதவர் ஆயிரம்பேர் திரண்டாராயினும், மாண்பு ஒருவன் போல்கலார்—அறிவால் மாட்சிமைப்பட்ட ஒருவன்போல் விளங்கமாட்டார்.

(க—து). 'ஆயிரம் நக்ஷத்திரம் கூடினாலும் ஒரு சந்திரன் ஆகா.' பலபேர் அறிவிலார் கூடினாலும் அறிவுள்ளவன் ஒருவனுக்கு ஒப்பாகார்.

> "கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழ்கினுநூல்
> வல்லா னொருவனையே மானுவரோ?—அல்லாரும்
> எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
> வெண்ணிலா ஆமோ விளம்பு."—நீதிவெண்பா.

## 28. இயற்கையறிவின் சிறப்பு

> நற்கறி வில்லாரை நாட்டவு மாட்டாதே
> சொற்குறி கொண்டு துடிபண் ணுறுத்துவபோல்,
> வெற்பறைமேல் தாழும் இலங்கருவி நன்னாட!
> கற்றறிவு போகா கடை. 270

(ப—பொ). மிகவும் அறிவில்லாதாரை ஆக்கவும் ஆகாது; சொல்வல்லவர் சொல்லும் சொற்குறிகளைக் கொண்டு சிலர் பண்ணுறுத்துகின்ற துடியேபோல: மலை

யினின்றும் பாறைமேல் விழாநின்ற இலங்கருவி நாடனே!' இயற்கையாலுண்டான அறிவின்றிக் கல்வியான் வந்த அறிவு கடைபோக நில்லாதாதலான்.

(ப-ரை). வெற்பு அறைமேல் தாழும் இலங்கு அருவி நாட-மலையினின்றும் பாறைமேல் விழாநின்ற விளங்கும் அருவிகளையுடைய நல்ல நாடனே! கற்றறிவு கடைபோகா(து)-(இயற்கையால் உண்டான அறிவன்றிக்) கல்வியான் வந்த அறிவு கடைபோக நில்லாது. (ஆதலால்), துடி-(பண்ணினியல்பு அமையாத) உடுக்கையில், சொல்குறி கொண்டு – (சொல்லவல்லவர் சொல்லும்) சொற்குறிகளைக் கொண்டு, பண்ணுறுத்துவ போல்-சிலர் பண்ணுறுத்துதல் போல, நன்கு அறிவு இல்லாரை-மிகவும் இயற்கையறிவு இல்லாதவரை, காட்டவும் மாட்டாது-அறிவுடையாராக்கவும் முடியாது. [ஏ-அசை].

நற்கறிவு என்பதில் நன்கு என்பது நற்கு என வலித்தல் விகாரம் பெற்றது.

(க-து). இயல்பில் பண்ணமையாத துடியில் சொற்குறிகளைக் கொண்டாயினும் சிலர் பண்ணுறுத்துவர்: இயற்கை யறிவில்லாத கற்றறிமோழைகளை நுண்ணறிவின ராக்குதல் எவ்வாற்றானும் ஆகாத காரியம்.

29. அறிவுடையாரிடம் அறிவுடையார் சேர்தல்

ஆணை முடைய அறிவினர் தந்நல
மாணும் அறிவி னவரைத் தலைப்படுத்தல்,
மானமர் கண்ணாய்! மறங்கெழு மாமன்னர்
யானையால் யானையாத் தற்று. 223

(ப-பொ). உள்ளத்தி னயப்புடைத்தாகிய அறிவினையுடையார் தமது நலத்தையொத்த அறிவாளிகளைத் தம் முடனே கொண்டு சென்று தலைப்படுக்குமது, மானமர் கண்ணாய்! மறத்தொடு கெழுமிய மன்னர் தங்கள் யானைகளாலே காட்டி யானைகளைப் பிணித்துக்கொண்டதனோடொக்கும்.

(ப-ரை). மான் அமர் கண்ணாய் – மான் கண் வைத்திருந்தாற் போன்ற கண்ணாய்! ஆணம் உடைய அறிவினர்–உள்ளத்தில் நயப்புடைத்தாகிய அறிவினையுடையார், தம் நலம் மாலும் அறிவினவரை– தமது நலத்தை ஒத்த அறிவாளிகளை, தலைப்படுத்தல்–தம்மோடு சேர்த்தலானது, மறம் கெழு மா மன்னர் – வீரம்பொருந்திய பேரரசர், யானையால்–தங்கள் யானைகளால், யானை–காட்டு யானைகளை, யாத்தற்று–கட்டிக்கொண்டதனோ டொக்கும்.

(க-து). அறிவுள்ளோர் தம்மைப் போன்ற அறிவுள்ளோரையே தம்மோடு சேர்த்துக்கொள்வர்.

பழமொழி.—கைக குருவியைக் கொண்டு காட்டுக் குருவியைப் பிடிக்கவேண்டும்.

30. அறிவிலாரிடம் அறிவுடையார் புகாமை

தெரிவுடையா ரோடு தெரிந்துணர்ந்து நின்றார்
பரியா ரிடைப்புகார் பண்பறிவார் மன்ற.
விரியா இமிழ்திரை வீங்குநீர்ச் சேர்ப்ப!
அரிவாரைக் காட்டார் நரி. 244

(ப-பொ). ஆராய்ந் துணர்ந்துநின்ற பண்பறிவார், ஆராய்ச்சியுடையாரோடு கூடி, நுண்ணிய அறிவில்லாதாரிடைப்புகார்; விரியா இமிழ்திரை வீங்குநீர்ச் சேர்ப்பனே! நெல்லரிவார்க்கு நரியைக் காட்டி வினைகெடப் பண்ணுவோர் இல்லை, அதுபோல.

(ப-ரை). விரியா இமிழ் திரை வீங்குநீர் சேர்ப்ப- பரந்தொலிக்கும் அலைகளுள்ள கடலின் கரையை உடையானே! அரிவாரை நரி காட்டார்–நெல்லரிவார்க்கு நரியைக் காட்டி அவ்வேலை கெடும்படி செய்வோர் இல்லை. (அதுபோல்), தெரிந்து உணர்ந்து நின்றார் பண்பறிவார் – ஆராய்ந்துணர்ந்து நின்ற பண்பறிவார், பரியார் இடை – நுண்ணறிவில்லாரிடம், தெரிவுடையாரோடு–ஆராய்ச்சியுடையாரோடுகூடி, புகார்–புகமாட்டார். [மன்ற–தேற்றப்பொருளில் வந்த இடைச்சொல்].

(க—து). அறிவுடையார் அறிவுடையாரை அறிவிலாரிடம் கூட்டிக் கொண்டு போகார். நெல்லரிவார்க்கு நரியைக் காட்டினால் நெல்லரிகிற வேலை கெடும். அறிவுள்ளார்க்கு அறிவில்லாரைக் காட்டினால் அவருடைய நன்மை கெடும்.

31. அறிவுடையோர் தம் குணகுணங்களைத் தாமே அறிதல்

பொற்பவும் பொல்லா தனவும் புனைந்திருந்தார்
சொற்பெய் துணர்த்துதல் வேண்டுமோ?—விற்கீழ்
அரிபாய் பரந்தகன்ற கண்ணாய்! அறியும்
பெரிதாள் பவனே பெரிது. 82

(ப—பொ). நல்லனவற்றையும் தீயனவற்றையும் மருங்கிருந்தார் புனைந்து சொற்களைப் பெய்து உணர்த்துதல் வேண்டுமோ? விற்போலும் புருவத்தின்கீழ் அரிபாக்கப் பட்டுப் பரந்தகன்ற கண்ணினையுடையாய்! பெரிதும் முதன்மையை யுடையனாய் ஆளுமவனே மிகவும் அறியும்.

(ப—ரை). வில்கீழ் அரி பாய் பரந்தகன்ற கண்ணாய்—வில்போன்ற புருவத்தின்கீழ்ச் செவ்வரி பரந்த மிகவும் அகன்ற கண்ணையுடையாய்! பொற்பவும் பொல்லாதனவும்—(ஒருவனிடத்து அமைந்துள்ள) நல்லவற்றையும் தீயவற்றையும், இருந்தார்—அருகில் இருந்தவர், சொல் பெய்து புனைந்து உணர்த்துதல்—சொற்களில் அமைத்து அலங்கரித்து உணர்த்துதல், வேண்டுமோ—அவசியமோ? பெரிது ஆள்பவனே—பெரிதும் முதன்மையை உடையவனாய் ஆளுமவனே, பெரிது அறியும்—மிகவும் அறிந்துகொள்வான்.

(க—து). கல்வியறிவால் முதன்மையுள்ளவர் தம்முடைய குணகுணங்களைத் தாமே நன்கறிவர்: பிறர் அவற்றை அவருக்கு உணர்த்தல் வேண்டா.

32. பரந்த திறலாரைக் கரந்துமறைக்க லாகாமை

பரந்த திறலாரைப் பாசிமே லிட்டுக்
கரந்து மறைக்கலும் ஆமோ?—நிரந்தெழுந்து
வேயிற் றிரண்டதோள் வேற்கண்ணாய்! விண்ணியங்கும்
ஞாயிற்றைக் கைம்மறைப்பா ரில் 34

(ப-பொ). எங்கும் பரந்து வெளிப்பட்ட திறலினை யுடையாரைப் பாசிபோலேயிருக்கும் சில சொற்களையும் செய்கைகளையும் இட்டுக் கரந்து மறைக்கல் ஆகுமோ? நிரந்தெழுந்த வேயின் திரண்ட தோள் வேற்கண்ணாய்! விண்ணின்கண் செல்லாநின்ற ஞாயிற்றைத் தம்கையால் மறைப்பார் இல்லை, ஆதலான்.

(ப—ரை). நிரந்து எழுந்து—தசை நிரம்பி உயர்ந்து, வேயின் திரண்ட தோள்—மூங்கில்போல் திரண்ட தோளையும், வேல் கண்ணாய்—வேல்போன்ற கண்ணையும் உடையாளே! விண் இயங்கும் ஞாயிற்றை—ஆகாயத்தில் செல்லும் சூரியனை, கைம்மறைப்பார்—தமது கையால் மறைப்பவர், இல்—இல்லை. (ஆகவே), பரந்த திறலாரை—எங்கும் பரவி வெளிப்பட்ட வலிமையுடையவரை, பாசி மேல் இட்டு—பாசி போலே இருக்கும் சில சொற்களையும் செயல்களையும இட்டு, கரந்து மறைத்தலும்—தெரியாது ஒளித்துவைத்தலும், ஆமோ—கூடுமோ?

(க—து). சூரியனைக் கையால் மறைத்தல் முடியாமைப் போலப் புகழ் பெற்றவரது திறமையை மறைத்துவைத்தல் முடியாத காரியம்.

ஒருவருடைய திறமையைப் பிறர் சொல்லாலும் செயலாலும் மறைப்பது நீரைப் பாசியால் மறைப்பதுபோலும் என்று சொல்வதைப் "பாசிமேலிட்டு" என்றது உருவகம்.

பழமொழி.—சூரியனைக் கையால் மறைத்தது போல.

33. அறிவு செல்வத்தினும் சிறத்தல்

அருவிலை மாண்கலனும் ஆன்ற பொருளும்
திருவுடைய ராயின் திரிந்தும்—வருமால்.
பெருவரை நாட! பிரிவின் றதனால்
திருவினும் திட்பம் பெறும். 136

(ப—பொ). அரிய விலைகளையுடைய மாட்சிமைப்பட்ட அணிகளும், நிரம்பிய பொருளும், புண்ணியமுடையரா யின், பிரிவின்றியே செல்வத்துக்குத் தகுதியில்லார் மாட்டும் வராநிற்கும். ஆதலால், பெருவரை நாடனே!

இப்பெற்றிப்பட்ட செல்வத்தினும் தம்மனம் கலங்காத அறிவின் செல்வமே நன்று.

(ப—ரை). பெரு வரைநாட—பெரிய மலைநாடனே! திரு உடையராயின்—ஒருவர் புண்ணியம் உடையாரானால், அரு விலை மாண்கலனும்—அரிய விலையுள்ள சிறந்த ஆபரணமும், ஆன்ற பொருளும்—நிரம்பிய பொருளும், திரிந்தும்—இடம் மாறியும் (அதாவது தகுதியில்லாதவரிடத்தும்), வரும்—வராநிற்கும்: அதனால்—தகுதியில்லாமையால், பிரிவின்று—அவை அவரைவிட்டுப் பிரிதல் இல்லை. திருவினும்—இத்தன்மையுள்ள செல்வத்தைக்காட்டிலும், திட்பம்—மனங்கலங்காத அறிவின் செல்வமே, பெறும்—நன்று. [ஆல்—அசை].

(க—து). புண்ணியம் பலிக்கின்ற காலத்தில் தகுதியில்லாதாரிடத்தும் செல்வம் வந்து சேர்ந்து நிலைபெற்றிருக்கும் (புண்ணியம் கழிகின்ற காலத்தில் போய்விடுமே). அறிவின் செல்வம் இங்ஙனம் வருவதும் போவது மின்றி நிலைபேறுடைய தாகையால், அது பொருட்செல்வத்தினும் சிறந்தது.

## 5. ஒழுக்கம்

34. குடிப்பிறந்தோ ரொழுக்கம்

விழுத்தொடைய ராகி விளங்கித்தொல் வந்தார்
ஒழுக்குடைய ராகி ஒழுகல்,—பழத்தெங்கு
செய்த்தலை வீழும் புனலூர! அஃதன்றோ
நெய்த்தலைப்பா லுக்கு விடல். 339

(ப—பொ). சீரிய தொடர்ச்சியை உடையராகி விளங்கிய பழைய குடியுள்ளே தோன்றிவந்தார் ஒழுக்கமுடையராகி ஒழுகும் தன்மை எவ்வண்ண மென்னின், தெங்கம் பழம் செய்யின்கண்ணே விழும் புனலூரனே! அஃதன்றோ நல்ல நெய்யின்கண்ணே பால் சிந்திவிடும் தன்மை.

(ப—ரை). பழத்தெங்கு செய் தலை வீழும் புனல் ஊர—தெங்கம் பழம் புலத்தின்கண்ணே விழும் புனலூரனே! விழு தொடையர் ஆகி

விளங்கி—சிறந்த தொடர்ச்சியை உடையாராய் விளங்கி, தொல்வந்தார்—பழைய குடியுள்ளே தோன்றிவந்தவர், ஒழுக்கு உடையராகி—ஒழுக்கம் உடையவராகி, ஒழுகல் அஃது—ஒழுகும் தன்மை, நெய் தலை—நல்ல நெய்யின்கண்ணே, பால் உக்குவிடல்—பால் சிந்திவிடும் தன்மையோ டொக்கும்.

(க—து). நல்ல சம்பந்தம் உடையராய் பழைய குடியில் பிறந்தவரிடம் ஒழுக்கம் சேர்ந்திருப்பது, நெய்யினிடம் பால் சிந்திய தன்மையோ டொக்கும்.

### 35. பிறருரைக்கும் நல்லுரையை இகழாமை

கள்ளி யகிலும் கருங்காக்கைச் சொல்லும்போல்
எள்ளற்க யார்வாயின் நல்லுரையைத்.—தெள்ளிதின்
ஆர்க்கும் அருவி மலைநாட! நாய்கொண்டால்
பார்ப்பாரும் தின்பர் உடும்பு. 87

(ப—பொ). கள்ளியின்கண் பிறக்கும் அகிலையும் கருங்காக்கை வாயின்கண் சொல்லையும் போலக் கீழாயினார் வாயில் பிறந்ததேயாயினும், நல்லுரையாயின் அதனை இகழா தொழிக; மிகவும் ஆர்க்கும் அருவியையுடைய அணி மலை நாடனே! நாய் கொண்ட உடும்பினைப் பார்ப்பாரும் தின்பர், அதுபோல.

(ப—ரை). தெள்ளிதின் ஆர்க்கும் அருவி மலைநாட—மிகவும் ஒலிக்கும் அருவியையுடைய மலைநாடனே! பார்ப்பாரும் — பார்ப்பாரும், நாய் கொண்டால் — நாய் கொண்டதாயினும், உடும்பு — உடும்பினை, தின்பர் — தின்பர். (அதுபோல), கள்ளி அகிலும் — கள்ளியினிடம் உண்டாகும் அகிலையும், கருங்காக்கைச் சொல்லும்போல்—கருங்காக்கை வாயின்கண் உண்டாகும் சொல்லையும்போல், யார் வாயின் நல்லுரையை—கீழாயினார் வாயிற் பிறந்ததேயாயினும் நல்லுரையாயின் அதனையும், எள்ளற்க—இகழாதொழிக.

(க—து). பார்ப்பாரும் நாய் கௌவிக்கொண்டுவந்த உடும்பை உண்பர். கள்ளிவயற்றில் உண்டானதென்று அகிலை இகழ்வா

ரில்லை. சன்னிமித்தமாகக் கொள்வதன்றிக் காக்கை கரைவதை இகழ்வாரில்லை. ஆகவே நல்ல வார்த்தை எவர் வாயிலிருந்து வந்தாலும் அதனை இகழ்தலாகாது.

"கள்ளியகில்" என்பது "கள்ளிவயிற்றின் அகில் பிறக்கும்" என நான்மணிக்கடிகையில் உரைத்திருப்பதால் விளங்கும்.

வீட்டிலிருந்து காக்கை கரைவதை விருந்ினர் வருவதற்கு நிமித்தமாகக் கொள்வது தமிழ்நாட்டில் வழக்கம். பெரிய திருமொழி பதினோராம்பத்து முதல் திருமொழியில்,

> "கரையாய் காக்கைப் பிள்ளாய்
> கருமா முகில்போல் நிறத்தன்
> உரையார் தொல்புகழ் உத்தமனைவரக்
> கரையாய் காக்கைப் பிள்ளாய்."

என்று காக்கையை நோக்கி உரைத்ததாகப் பாசுரம் உண்டு.

ஐங்குறுநூற்றில் 391-வது அகவல்,

> "மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை!
> அன்புடை மரபின் கிளையோ டாரப்
> பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
> பொலம்புனை கலத்தில் தருகுவன் மாதோ:
> வெஞ்சின விறல்வேல் காளையொ
> டஞ்சில் லோதியை வரக்கரைந் தீமே."

என உடன்போகிய தலைமகள் மீடற்பொருட்டுத் தாய் காகத்திற்குப் பராய்க்கடன் உரைத்ததாக உரைக்கின்றது.

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருக்குறள்.

## 36. தத்தம் இயல்பின்படி ஒழுகுதல்

> தந்நடை நோக்கார், தமர்வந்த வாறறியார்,
> செந்நடை சேராச் சிறியார்போல் ஆகாது,
> நின்னடை யானே நடஅத்தா! நின்னடை
> நின்னின் றறிகிற்பா ரில். 288

(ப—பொ). தம்முடைய முன்புள்ள ஒழுக்கத்தைப் பாராது தம் சுற்றத்தார் வரலாற்றையும் பாராது செவ்விய நடையைச் சேராத சிறியாரைப்போல ஒழுகாது, நினக்கியல்பாகிய ஒழுக்கத்தானே செல்வாயாக: அத்தனே! நினக்கியல்பாகிய ஒழுக்கங்களை நின்னின்று அறிவார் பிறர் இல்லை; நீயே அறிதி யாதலான்.

(ப—ரை). அத்தா—அத்தனே! நின் நடை—உனக்கு இயல்பாகிய ஒழுக்கங்களை, நின்னின்று—உன்னிடத்தில் நின்றும், அறிகிற்பார்—அறியக்கூடியவர், இல்—பிறர் இல்லை (நீயே அறிவாய் ஆதலால்); தம் நடை நோக்கார்—தம்முடைய முன்புள்ள ஒழுக்கத்தைப் பாராது, தமர் வந்தவாறு அறியார்—தம் சுற்றத்தார் வரலாற்றையும் பாராது, செம்நடை சேரா சிறியார்போல் ஆகாது-செவ்விய நடையைச் சேராத சிறியாரைப்போல ஒழுகாது, நின் நடையானே நட — உனக்கு இயல்பாகிய ஒழுக்கத்தின்படியே நடப்பாயாக.

(க—து). சிறியார்போல் ஒழுகாமல் உன் இயல்பின்படி ஒழுகுக.

*பழமொழி*.—To thine own self be true. Every man is best known to himself.

## 37. குற்றம்படாமல் ஒழுகுதல்

நீர்த்தன் றொருவர் நெறியன்றிக் கொண்டக்கால்,
பேர்த்துத் தெருட்டல் பெரியார்க்கும் ஆகாதே.
கூர்த்தநுண் கேள்வி யறிவுடையார்க் காயினும்
ஓர்த்த திசைக்கும் பறை. 195

(ப—பொ). நீர்மையுடைத்தாக வன்றியே நெறியன்றி ஒருவர் தம்மை மனத்தின்கண் கொண்டக்கால், அக் கொண்ட பாட்டினின்று மீட்டுத் தெருட்டுதல் தவத்தால் பெரியார்க்கும் முடியாது. மிக்க கேள்வியால் நெறியறிவுடையார்க்கே யாயினும், கருதிய அநுகரணத்தை

ஒலிக்கும் பறை. (ஆதலால், தம்மை ஒருவர் பிறழக் கொள்ளாதபடி, ஒரு குற்றமும் படாமல் ஒழுகுக).

(ப—ரை). நீர்த்து அன்று நெறியன்றி ஒருவர் கொண்டக்கால்—குணமுடையதாக வன்றியே நெறியன்றி ஒருவர் தம்மை மனத்தின் கண் கொண்டக்கால், பேர்த்து தெருட்டல்—அக்கொண்ட கொள் கையினின்றும் மீட்டும் தெளிவித்தல், பெரியார்க்கும்—தவத்தால் பெரியார்க்கும், ஆகாது—முடியாது. கூர்த்த கேள்வி நுண் அறிவுடையார்க்கு ஆயினும்—மிக்க கேள்வியால் நுண்ணறிவுடையார்க்கே ஆயி னும், ஓர்த்தது பறை இசைக்கும்—தாம் கருதிய அனுகாரணத்தைப் பறை ஒலிக்கும்.

(க—து). ஒருவர் கொண்ட கெட்ட கொள்கையை மாற்றித் தெளி விப்பது முனிவர்க்கும் முடியாது. அறிவுடையார்க்கும், தாம் கருதிய அனுகாரணத்தையே பறை ஒலிப்பதாகத் தோன்றுவதுபோல், தமது கருத்தின் போக்காகவே பிறருடைய ஒழுக்கம் தோன்றும். ஆத லால், தம்மை ஒருவர் வேறுகக் கொள்ளாதபடி, ஒரு குற்றமும் படாமல் ஒழுகுக.

> "போற்றின் அரியவை போற்றல்; கடுத்தபின்
> தேற்றுதல் யார்க்கு மரிது"—திருக்குறள்.

பழமொழி—As the fool thinks the bell clinks.

## 38. தம்குற்றம் நீக்கல்

> தங்குற்றம் நீக்கல ராகிப் பிறர்குற்றம்
> எங்கேனும் தீர்த்தற் கிடைப்புகுதல்,—எங்கும்
> வியனுலகின் வெள்ளாடு தன்வளி தீரா
> தயல்வளி தீர்த்து விடல். 124

(ப—பொ). தாம் செய்யும் குற்றத்தை நீக்காமே பிறர் செய்யும் குற்றத்தைக் கற்பித்து நீக்குதற்குத் தாம் எங் கெங்கும் இடைபுகுதல், பெரிய உலகின்கண் எங்கும் வெள்ளாடு தன் வாதம் தீர்க்கமாட்டாது வேற்றுயிரின் வாதநோயைத் தீர்க்குமதனோ டொக்கும்.

(ப—ரை). தம் குற்றம் நீக்கலார் ஆகி—தாம் செய்யும் குற்றத்தை நீக்காமல், பிறர் குற்றம் தீர்த்தற்கு—பிறர் செய்யும் குற்றத்தைக் கற்பித்து நீக்குதற்கு, எங்கேனும் இடைப்புகுதல்—எங்கெங்கும் இடைப்புகுதலானது; வியன் உலகின் எங்கும்—பெரிய உலகின்கண் எங்கும், வெள்ளாடு—வெள்ளாடு, தன் வளி தீராது—தன் வாதத்தைத் தீர்க்கமாட்டாது, அயல்வளி — வேற்றுயிரின் வாதநோயை, தீர்த்துவிடல் — பால் முதலியவற்ருல் தீர்க்குமதனே டொக்கும்.

(க—து). ஒவ்வொருவரும் தத்தம் குற்றங்களையே முன்னர்க்களைதல் வேண்டும்.

> "தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
> என்குற்ற மாகும் இறைக்கு."—திருக்குறள்.

பழமொழி.—தன் குற்றம் இருக்கப் பிறர் குற்றம் பார்க்கிறதா? Point not at another's spots with a foul finger. Physician, heal thyself.

39. வடுவல்ல செய்தல்

> கெடுவல் எனப்பட்ட கண்ணும் தனக்கோர்
> வடுவல்ல செய்தலே வேண்டும்.—நெடுவரை
> முற்றுநீ ராழி வரையகத் தீண்டிய
> கற்றேயும்; தேயாது சொல். 394

(ப—பொ). இவர்க்கு இந்த வடுவைச் செய்யாதொழித்தால் யாம் கெடுவேம் என்பது கருதப்பட்டவிடத்தும், தனக்கு அதனுல் வடுவாகாதனவற்றைச் செய்தலே வேண்டும்: பெரிய சக்கரவாளமாகிய மலைசூழ்ந்த வட்டமாகிய எல்லையிடத்துத் தொக்க மகமேரு முதலாகிய மலைகள் தேயும்; வடுப்பட்ட சொல் தேயாது ஆதலான்.

(ப—ரை). நெடு வரை—பெரிய சக்கரவாளமாகிய மலை, முற்று—சூழ்ந்த, ஆழிநீர் வரையகத்து—வட்டமாகிய எல்லையிடத்து, ஈண்டிய—தொக்க, கல்—மகமேரு முதலாகிய மலைகள், தேயும்—தேய்வடையும்; சொல்—வடுப்பட்ட சொல், தேயாது—தேயாது. (ஆதலால்), கெடுவல்

எனப்பட்ட கண்ணும்–(இவர்க்கு இந்த வடுவைச் செய்யாதொழிந்தால்) யான் கெடுவேன் என்பது கருதப்பட்டவிடத்தும், தனக்கு ஓர் வடுவல்ல வ–தனக்கு அதனால் யாதொரு வடுவும் உண்டாகா தனவற்றையே, செய்தல்வேண்டும்–செய்தல்வேண்டும்.

(க–து). தான் அழியவரினும் பழியொடு பட்டவைகளைச் செய்ய வேண்டா.

"கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்."—திருக்குறள்.

"பாவமும் ஏனைப் பழியும் படவருவ
சாயினும் சான்றவர் செய்கலார்.—சாதல்
ஒருநாள் ஒருபொழுதைத் துன்பம், அவைபோல்
அருநவை ஆற்றுத லின்று."—நாலடியார்.

பழமொழி.–காலம் போம் வார்த்தை நிற்கும்: கப்பல் போம் துறை நிற்கும். வார்த்தை இருந்துபோம், வழி தூர்ந்துபோம். A wounded reputation is seldom cured.

40. பழியை ஒழுக்கத்தால் பரிகரித்தல்

பொருந்தாப் பழியென்னும் பொல்லாப் பிணிக்கு
மருந்தாகி நிற்பதாம் மாட்சி—மருந்தின்
தணியாது விட்டக்கால், தண்கடல் சேர்ப்ப!
பிணியீ டழித்து விடும். 355

(ப–பொ). தமது தலைமைக்குப் பொருந்தாத பழியென்று சொல்லப்படும் பொல்லாத பிணிக்கு மருந்தின் தன்மையாய் நடப்பதே மாட்சிமையாவது. மருந்தினால் தாம் கொண்ட பிணியைத் தணியாது விட்டக்கால், தண்கடல் சேர்ப்பனே! அப்பிணி தம்மை ஈடழித்துவிடுமாதலான் அதுபோல.

(ப–ரை). தண்கடல் சேர்ப்ப–தண்கடல் சேர்ப்பனே! மருந்தின் தணியாது விட்டக்கால் – மருந்தினால் தணிக்காவிட்டால், பிணி – ஒருவர் கொண்ட பிணி, ஈடழித்துவிடும்–தம்மை ஈடழித்துவிடும். (அது போல்), பொருந்தா பழி என்னும் பொல்லா பிணிக்கு–(தமது தலை

மைக்குப்) பொருந்தாத பழியென்று சொல்லப்படும் பொல்லாத வியாதிக்கு, மருந்தாகி நிற்பது—மருந்தின் தன்மையாய் நடப்பதே, மாட்சி ஆம்—மாட்சிமையாகும்.

(க—து). ஒருவன் உற்ற நோய் அவன் வலியை அழிக்கு மாகையால், தக்க மருந்துகொண்டு அதனை ஒழித்தல்வேண்டும். ஒருவன் உற்ற பழி அவன் மாட்சியை அழிக்குமாகையால், தக்க ஒழுக்கத்தால் அதனைப் பரிகரித்தல் வேண்டும். மருந்தால் உடல்வலி அழியாமை போல ஒழுக்கத்தால் மாட்சி அழியாது என்பதாம்.

41. பழியை அஞ்சிப் பாதுகாவாதவர்

உரிஞ்சி நடப்பாரை உள்ளடி நோவ
நெருஞ்சியும் செய்வதொன் றில்லை.—செருந்தி
இருங்கழித் தாழும் எறிகடல் தண்சேர்ப்ப!
பெரும்பழியும் பேணுதார்க் கில். 170

(ப—பொ). தம்மடியினுல் உரிஞ்சி நடப்பாரை உள்ளடிநோவ நெருஞ்சிமுள்ளும் செய்வதொன் றில்லை. அது போல், செருந்திமரங்கள் இருங்கழியிலே வந்து தாழத் தழைக்கும் எறிகடல் தண்சேர்ப்பனே! பெரும்பழியும் அஞ்சிப் பாதுகாவாதார்க்கு இல்லை.

(ப—ரை). செருந்தி—செருந்திமரங்கள், இரு கழி தாழும்—பெரிய கழியிலே வந்து தாழத்தழைக்கும், எறிகடல் தண் சேர்ப்ப—எறிகடல் தண் சேர்ப்பனே! உரிஞ்சி நடப்பாரை—தம் அடியினுல் உராய்ந்து நடப்பவரை, உள்ளடி நோவ—உள்ளடி நோவும்படி, நெருஞ்சியும்—நெருஞ்சிமுள்ளும், செய்வது ஒன்று இல்லை—ஊறுசெய்வது ஒன்றும் இல்லை. பெரும்பழியும் – பெரும்பழியும், பேணுதார்க்கு – அஞ்சிப் பாதுகாவாதவர்க்கு, இல்லை—இல்லை.

(க—து). நெருஞ்சிமுள்ளுக்கு அஞ்சாமல் காலை உராய்ந்து நடப்பவர்க்கு நெருஞ்சிமுள்ளால் கால் ஊறுபடுதல் இல்லை: பழிக்கு அஞ்சாமல் நடப்பவர்க்குப் பழியால் மனம் வருந்துதல் இல்லை. நல்லோர் பழிக்கு அஞ்சி நடப்பார்: பொல்லார் அதற்கு அஞ்சார்.

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையர், நெஞ்சத் தவல மிலர்" ஆதலின், "பெரும்பழியும் பேணுதார்க் கில்" என்ருர்.

## 42. பழிப்பவர்க்குச் சொன்முட் டில்லை

ஆவிற் கரும்பனி தாங்கிய மாலையும்
கோவிற்குக் கோவல னென்றுலகம் கூறுமால்.
தேவர்க்கு மக்கட் கெனல்வேண்டா. தீங்குரைக்கு
நாவிற்கு நல்குர வில். 152

(ப—பொ). ஆநிரைக்கு வந்த அருந்துயரைக் கெடுத்த திருமாலையும் பசுநிரைக்கே தக்க இடையனென்று உலகத்தார் கூறுநிற்பர். ஆதலால், தேவர்க்கு உரைக்கும் உரை இது, மக்கட்கு உரைக்கும் உரை இது என்று வேறுபடுக்க வேண்டுவதில்லை. ஒருவரைத் தீங்குரைக்குமிடத்து நாவிற்கு நல்குர வில்லை.

(ப—ரை). ஆவிற்கு அரும்பனி தாங்கிய மாலையும்—ஆநிரைகளுக்கு வந்த அரிய துன்பத்தைக் கெடுத்த திருமாலையும், கோவிற்கு கோவலன் என்று—பசுநிரைக்கே தக்க இடையனென்று, உலகம் கூறும்—உலகத்தார் கூறுநிற்பர். (ஆதலால்) தேவர்க்கு மக்கட்கு எனல் வேண்டா — தேவர்க்கு உரைக்கும் வார்த்தை இது மக்கட்கு உரைக்கும் வார்த்தை இது என்று வேறுபடுக்க வேண்டுவதில்லை. தீங்கு உரைக்கு—ஒருவரைத் தீங்குரைக்குமிடத்து, நாவிற்கு—நாவினுக்கு, நல்குரவு—சொல் முட்டுப்பாடு, இல்—இல்லை. [ஆல்—அசை].

சொல்முட்டு—(முட்டு—குறைவு)—வார்த்தைக் குறைவு.

(க—து). பழிப்பவர்க்குச் சொல்முட் டில்லை: இவர் தேவர் இவர் மனிதர் என்ற வேறுபாடின்றியே எவரையும் அவர் பழிப்பர்.

பிரதிபேதம்—நாவிற்கு நல்கூர்வ தில்.

ஆவிற்கரும்பனி தாங்கியது.—போகி பண்டிகையில் இடையர் இந்திரனுக்கிடும் பொங்கலை ஒரு காலத்தில் கண்ணன் ஏற்றுக் கொள்ள, அதுகண்ட இந்திரன் கோபங்கொண்டு கல்மழை பெய்யும் படி மேகங்களை ஏவினன். அப்போது பசுக்களையும் இடையர்களையும் கண்ணன் ஒரு மலையைக் குடையாகப் பிடித்துக் காத்தான்.

## 6. இன்னா செய்யாமை

### 43. எளியார்க்கு இன்னா செய்யாமை

பூவுட்கும் கண்ணாய்! பொறுப்பர் எனக்கருதி
யாவர்க்கே யாயினும் இன்னா செயல்வேண்டா.
தேவர்க்கும் கைகூடாத் திண்ணன்பி னார்க்கேயும்
நோவச்செய் நோயின்மை யில். 335

(ப-பொ). தாமரை உள்ளஞ்சப்பட்ட கண்ணையுடையாய்! இவர் நான் செய்தனவற்றைப் பொறுப்பரென்று விசாரித்து, எத்துணையும் எளியராயினார்க்கும் பொல்லாதன செய்யவேண்டா: தேவர்க்கும் இயலாத சிக்கென்ற அன்பினையுடையார்க்கே யாயினும் நோவச்செய்தால் பொறுக்கும் பொறை இல்லையாதலான்.

(ப-ரை). பூ-தாமரைப்பூ, உட்கும்-(ஒப்பாவதற் கில்லையே என்று) உள்ளஞ்சப்பட்ட, கண்ணாய்-கண்ணையுடையாய்! தேவர்க்கும் கைகூடா திண் அன்பினார்க்கேயும்-தேவர்க்கும் இயலாத சிக்கென்ற அன்பினை யுடையார்க்கேயாயினும், நோவச் செய் நோயின்மை-நோவச் செய்தலால் பொறுக்கும் பொறை, இல்-இல்லை. (ஆதலால்), பொறுப்பர் என கருதி-இவர் நாம் செய்தனவற்றைப் பொறுப்பரென்று விசாரித்து, யாவர்க்கேயாயினும்-எத்துணையும் எளியராயினாருக்கும், இன்னா-பொல்லாதனவற்றை, செயல்வேண்டா-செய்யவேண்டா.

(க-து). மிக்க அன்புடையாரும் நோவச்செய்தால் பொறார். ஆதலால் எவர்க்கும் பொல்லாதன செய்யவேண்டா.

"பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்.—வெறுத்தபின்
ஆர்க்கு மருவி அணிமலை நன்னாட!
பேர்க்குதல் யார்க்கு மரிது."—நாலடியார்.

44. பிறர்க்கு இன்னா செய்யாமை

வினைப்பயன் ஒன்றின்றி வேற்றுமை கொண்டு
நினைத்துப் பிறர்பனிப்ப செய்யாமை வேண்டும்.
புனப்பொன் அவிர்சுணங்கிற் பூங்கொம்ப ரன்னாய்!
தனக்கின்னா இன்னா பிறர்க்கு. 266

(ப—பொ). தான் செய்யத் தொடங்குகின்ற வினையினாலே ஒரு பயன் காணாது, பகைமை கொண்டு, பிறர் துயருறுவனவற்றை ஆராய்ந்து செய்யாதொழிதல் வேண்டும்: புனத்திற்படும் பொன்போல் விளங்குகின்ற சுணங்கினையுடைய பூங்கொம்ப ரன்னாய்! தன் கண்ணே வந்த இன்னா பிறர்க்கும் இன்னாவாம் ஆதலான்.

(ப—ரை). புனம் பொன்-வயலில்படும்பொன்போல, அவிர்-விளங்கும், சுணங்கின்—தேமலையுடைய, பூங்கொம்பர் அன்னாய்—பூங்கொம்பைப் போன்றாய்! தனக்கு இன்னா—தன்னிடம் வந்த துன்பம், பிறர்க்கு இன்னா – பிறர்க்கும் துன்பமாம். (ஆதலால்), வினைப்பயன் ஒன்று இன்றி—தான் செய்யத் தொடங்குகின்ற வினையினாலே ஒரு பயன் காணாது (அதாவது, வீணாய்), வேற்றுமை கொண்டு—பகைமை கொண்டு, பிறர் பனிப்ப—பிறர் துயருறுவனவற்றை, நினைத்து—ஆராய்ந்து, செய்யாமை வேண்டும்—செய்யாதொழிதல் வேண்டும்.

(க—து). தனக்குத் துன்பந் தருவது பிறர்க்கும் துன்பந் தருவதே. பிறர் தமக்குத் துன்பம் செய்வதை எவரும் விரும்பார்: ஆகவே தாமும் வீணாகப் பகைமைகொண்டு பிறர்க்குத் துன்பஞ் செய்யவேண்டா.

"தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்?"—திருக்குறள்.

45. உறவினரை இகழ்ந்து நலியாமை

ஆற்றா ரிவரென் றடைந்த தமரையும்
தோற்றத்தா மெள்ளி நலியற்க—போற்றான்
கடையடைத்து வைத்துப் புடைத்தக்கால் நாயும்
உடையானைக் கௌவி விடும். 252

(ப—பொ). தம்மை யடைந்த தமரையாயினும் வலி யிலரென்று பிறர்க்கு வெளிப்படத் தாம் இகழ்ந்துரைத்து நலியாதொழிக: பாதுகாவாது வாயிலை அடைத்துவைத்துத் தான் வளர்த்த நாயைப் புடைத்தால், அந் நாயும் வளர்த்தவனையே கவ்வும், அது காரணத்தால்.

(ப—ரை). போற்றான்—பாதுகாவாது, கடை அடைத்துவைத்து—வாயிலை அடைத்துவைத்து, புடைத்தக்கால்—புடைத்தால், நாயும்—வளர்த்த நாயும், உடையானை — வளர்த்தவனையே, கௌவிவிடும் — கௌவும். (ஆகவே), அடைந்த தமரையும்—தம்மையடைந்த உறவினரையாயினும், இவர் ஆற்றார் என்று—இவர் வலியிலரென்று, தோற்ற—பிறர்க்கு வெளிப்பட, தாம் எள்ளி நலியற்க—தாம் இகழ்ந்துரைத்து நலியாதொழிக.

(க—து). நன்றாய்ப் பாதுகாவாமல் வாயிலை அடைத்துவைத்து அடித்தால், தான் வளர்த்த நாயும் தன்னைக் கடிக்கும். தம்மையடைந்த உறவினர் எளியரென்று அவரைப் பலரறிய இகழ்ந்து நலிந்தால், அவரும் தன்னை நலிதல் கூடும்.

பிரதிபேதம்—தோற்றத்தா னெள்ளி.

46. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்

நெடியது காண்கிலாய் நீயெளியை: நெஞ்சே!
கொடியது கூறினாய்: மன்ற—அடியுளே
முன்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பின்பகல் கண்டு விடும். 130

(ப—பொ). பின்பு நெடுங்காலத்தின் மிக்குவரும் துன்பத்தை அறியமாட்டாய்: பிறரைக் கேடு சூழுதுமென்று நமக்குக் கொடியதனைக் கூறினாய்காண், நெஞ்சே! ஒன்று மறியாப் பிறனொருவன் கெடுங்கேட்டை முன்பொழுது கண்டவன், அந்நிலையுளே தான் கெடுங்கேட்டினைப் பின் பொழுது காணும். [பாடபேதம்—அறியமாட்டாயாய்.]

(ப—ரை). நெஞ்சே! நெடியது காண்கிலாய்-நெஞ்சே பின்பு நெடுங் காலத்தில் மிக்குவரும் துன்பத்தை அறியமாட்டாமல், கொடியது கூறி

னாய்—(பிறரைக் கேடு சூழ்வோமென்று) நமக்குக் கொடியதனைக் கூறி னாய்: நீ எளியை—நீ ஒன்றும் அறியாய். பிறன்கேடு—பிறனொருவன் கெடும் கேட்டை, முன்பகல் கண்டான்—முன்பொழுது கண்டவன், அடியுளே—அக்கணத்திலேயே, தன்கேடு—தான்கெடும் கேட்டினை, பின் பகல்—பின்பொழுது, மன்ற—நிச்சயமாக, கண்டுவிடும்—காணுவான்.

(க—து). முற்பகல் செய்யின் பிற்பகல் விளையுமாதலால் பிறரைக் கெடுக்க எண்ணவேண்டா.

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்."—திருக்குறள்.

பழமொழி—Whoso diggeth a pit shall fall therein.

## 47. நலியப்பெற்ற எளியார் அழுத கண்ணீர்

தோற்றத்தால் பொல்லார் துணையில்லார் நல்கூர்ந்தார்
மாற்றத்தால் செற்றார் எனவலியார் ஆட்டியக்கால்,
ஆற்றா தவரழுத கண்ணீ ரவை,அவர்க்குக்
கூற்றமாய் வீழ்ந்து விடும். 166

(ப—பொ). பிறந்த குடியால் பொலிவில்லாதார், தமக் கொரு துணையில்லாதார், தாம் வறியார், தாம் சொல்லும் மாற்றங்களால் நமக்குப் பகைவர் என்று கருதி, அவரின் வலியார் அவரை நலிந்தக்கால், அந்நலிவினை ஆற்றமாட் டாது மற்றவர் அழுத கண்ணீராகிய அவை, அந்நலிந் தார்க்குக் கூற்றமாய்விடும்.

(ப—ரை). தோற்றத்தால் பொல்லார்—பிறந்த குடியால் பொலிவில் லாதவரும், நல்கூர்ந்தார்—வறியாரும், மாற்றத்தால் செற்றார் என— தாம் சொல்லும் வார்த்தைகளால் நமக்குப் பகைவருமாவரென்று கருதி, வலியார்—அவரின் வலியார், ஆட்டியக்கால்—அவரை நலிந்தக்கால், ஆற்றாது—அந்நலிவினைப் பொறுக்கமுடியாமல், அவர்—மற்றவர், அழுத கண்ணீர் அவை—அழுத கண்ணீராகிய அவை, அவர்க்கு—அந்நலிந் தார்க்கு, கூற்றமாய் வீழ்ந்துவிடும்—கூற்றமாய் விழும்.

(க—து). வலியாரால் நலியப்பெற்ற எளியார் அழுத கண்ணீர் அவ் வலியார்க்கு மிக்க துன்பம் செய்யும்.

கூற்றமாய் வீழ்ந்துவிடும்—வீழ்ந்து யமன்போல் வருத்துவதாம்.

பழமொழி.—ஏழை அழுத கண்ணீர் கூரிய வாள் ஒக்கும். எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் அடிக்கும்.

## 48. மதிப்பு மிக்கவரை அழிக்க முயலுதல்

மிக்குடைய ராகி மிகமதிக்கப் பட்டாரை
ஒற்கப் படமுயறும் என்றல் இழுக்காகும்.
நற்கெளி தாகி விடினும், நளிர்வரைமேல்
கற்கிள்ளிக் கையுய்ந்தா ரில். 36

(ப—பொ). முதன்மையாய் மிக்க பொருள் உடையராகிப் பிறரால் மதிக்கப்பட்டாரை வறியராம்படி முயல்வேம் என்று நினைத்தல், தமக்கு இழுக்காகும்: மிகவும் சிறிதாய் எளிதாயிற்றாயினும், பெரிய வரைமேல் உள்ள கல்லைக் கிள்ளிக் கைவருந்துதலைத் தப்பினார் இல்லையாதலால்.

(ப—ரை) நற்கு எளிதாகிவிடினும்—மிகவும் சிறிதாய் எளிதாயிற்றாயினும், நளிர் வரைமேல்—பெரிய மலைமேலுள்ள, கல்—கல்லை, கிள்ளி—கிள்ளி, கை உய்ந்தார்—கைவருந்துதலைத் தப்பினார், இல்—இல்லை. (ஆதலால்), மிக்கு உடையராகி—முதன்மையாய் மிக்க பொருளுடையராகி, மிக மதிக்கப்பட்டாரை—பிறரால் மிகவும் மதிக்கப் பட்டாரை, ஒற்கப்பட — வறியராம்படி, முயறும் என்றல்—முயல்வோம் என்று நினைத்தல், இழுக்கு ஆகும்—தமக்குக் குற்றமாம்.

முயறும்—(முயல்+தும்)—தன்மைப் பன்மை முற்று. நற்கு—நன்கு.

(க—து). மிக்க பொருளுடையராய் அதிக மதிப்புற்றவர்களை அழிக்க முயல்வது கல்லைக் கிள்ளிக் கைவருந்துதல் போலும். தமக்குத் துன்பமல்லது அவர்க்கு ஒன்றும் உண்டாகாது என்பதாம்.

"கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்
காற்றாதா ரின்னா செயல்."—திருக்குறள்.

"தங்கண் மரபில்லார் பின்சென்று தாமவரை
எங்கண் வணக்குதும் எனபவர்—புன்கேண்மை
நற்றளிர்ப் புன்னை மலரும் கடற்சேர்ப்ப!
கற்கிள்ளிக் கையிழந் தற்று."—நாலடியார்.

பழமொழி.—An ass that kicketh against the wall, receives the blow himself.

49. நலிந்தாரை நலியாமை

நீர்த்தக வில்லார் நிரம்பாமைத் தந்நலியின்,
கூர்த்தவரைத் தாநலிதல் கோளன்றுல் சான்றவர்க்குப்
பார்த்தோடிச் சென்று கதம்பட்டு நாய்கவ்வின்
பேர்த்துநாய் கவ்வினு ரில். 375

(ப—பொ). நீர்மைத் தகுதி யில்லாதார் அறிவு நிரம்பாமையால் தம்மை நலிந்தாராயின், தாம் அவர்க்கு உள்ளங்கொண்டு நலிதல் சான்றவர்க்குக் கோட்பா டன்று: கோபம் பொருந்தி நாய் கவ்வியவிடத்து அதனைப் பார்த்தோடிச் சென்று மீண்டும் அந்த நாயைக் கடித்தவர்கள் இல்லை, அதுபோல.

(ப—ரை). நாய் கதம்பட்டு கவ்வின்—நாய் கோபம் பொருந்திக் கவ்வினுல், பார்த்து ஓடி சென்று—அதனைப் பார்த்து ஓடிச்சென்று, பேர்த்து—மீண்டும், நாய்—அந்நாயை, கவ்வினுர்—கடித்தவர்கள், இல்—இல்லை. (அங்ஙனமே), நீர் தகவு இல்லார்—நற்குணமாகிய தகுதியில்லாதவர், நிரம்பாமை—அறிவு நிரம்பாமையால், தம் நலியின்—தம்மை வருத்திஞராயின், கூர்த்து—மனமிக்கு, தாம் அவரை நலிதல்—தாமும் அவரை வருத்துதல், சான்றவர்க்கு—சான்ருேருக்கு, கோள் அன்று—கோட்பாடன்று.

"கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினுர் ஈங்கில்லை.—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு."—நாலடியார்.

## 50. தீமைக்குத் தீமை செய்யாமை

காழார மார்ப! கசடறக் கைகாவாக்
கீழாயோர் செய்த பிழைப்பினை மேலாயோர்
உள்ளத்துக் கொண்டுநேர்ந் தூக்கல், குறுநரிக்கு
நல்லநா ராயங் கொளல். 80

(ப-பொ). வடமாகக் கோக்கப்பட்ட முத்தினையுடைய மார்ப! குற்றமற ஒழுக்கங்களைப் பாதுகாவாத கீழ்மக்கள் செய்த பிழைப்பினை மேன்மக்கள் தம்மனத்தின்கண் கொண்டு, மற்றதற்கு நேர்ந்து அக்கீழாயினாரை இடும்பை செய்தற்கு ஊக்குதல், சிறிய நரியின்பொருட்டு நாராயணமென்னும் அம்பினை எய்தற்கு வாங்கிக்கொண்டதனோ டொக்கும்.

(ப-ரை). காழ் ஆரம் மார்ப—வடமாகக் கோக்கப்பட்ட முத்தினையுடைய மார்பனே! கசடு அற—குற்றம் அற, கை காவா—ஒழுக்கங்களைப் பாதுகாவாத, கீழாயோர்—கீழ்மக்கள், செய்த பிழைப்பினை—செய்த தவறுகளை, மேலாயோர்—மேன்மக்கள், உள்ளத்து கொண்டு—தம்மனத்தில் கொண்டு, நேர்ந்து—அக்கீழோரை எதிர்த்து, ஊக்கல்—தீங்குசெய்ய முயலுதல், குறுநரிக்கு—சிறிய நரியின்பொருட்டு, நல்ல—திவ்ய சக்தியுள்ள, நாராயம்—நாராயணம் என்னும் அம்பினை, கொளல்—எய்தற்கு வாங்கிக்கொண்டதனோ டொக்கும்.

(க-து). நரியின்மேல் நாராயணாஸ்திரம் தொடுப்பா ரில்லை. கீழோர் தவறு செய்தால் மேலோர் அதற்கு எதிராகத் தீங்குசெய்ய முயலார்.

"கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்."—திருக்குறள்.

## 7. வெகுளாமை

### 51. இன்னா செயினும் வெகுளாமை

*இறப்பச் சிறியவர் இன்னா செயினும்*
*பிறப்பினால் மாண்டார் வெகுளார்.—திறத்துள்ளி*
*நல்ல விறகின் அடினும் நனிவெந்நீர்*
*இல்லம் சுடுகலா வாறு.* 370

(ப—பொ). மிகவும் சிறியவர் பொல்லாது செய்தாராயினும் குடிப்பிறப்பின்கண்ணே மாட்சிமைப்பட்டார் அவரைச் சிறிதும் கோபியார்: கூறுபாடாக விசாரித்து நல்ல விறகினாலே அடப்பட்டதாயினும் மிகவும் வெந்நீர் இல்லத்தைச் சுடுதலில்லாத வாறு போல.

(ப—ரை). இறப்ப சிறியவர்—மிகவும் சிறியவர், இன்னா செயினும்—பொல்லாது செய்தாராயினும், பிறப்பினால் மாண்டார்—குடிப்பிறப்பின்கண்ணே மாட்சிமைப்பட்டவர், வெகுளார்—அவரைச் சிறிதும் கோபியார். (அது), திறத்து உள்ளி—கூறுபாடாக விசாரித்து, நல்ல விறகின் அடினும்—நல்ல விறகிட்டுக் காய்ச்சினாலும், நனி வெந்நீர்—மிகவும் வெப்பமான நீர், இல்லம்—வீட்டை, சுடுகலா ஆறு—சுடுதலில்லாத தன்மை போலாம்.

(க—து). வெந்நீரினால் வீடு வேகாதவாறு போலக் கீழ்மக்கள் செய்யும் துன்பத்தால் பெரியோர் கோபியார்.

### 52. ஆறாச் சினத்தனை அகன்றொழுகுதல்

*ஆறாச் சினத்தன் அறிவிலன். மற்றவனை*
*மாறி யொழுகல் தலையென்ப.—ஏறி*
*வளியால் திரையுலாம் வாங்குநீர்ச் சேர்ப்ப!*
*தெளியானைத் தேற லரிது.* 385

(ப—பொ). ஆறாத வெகுளியை யுடையனாவான் அறிவிலன். மற்றவனை நீங்கியொழுகுதல் தலைமையென்று நல்லார் சொல்வர். காற்றாலே கரைமேல் ஏறித் திரை உலா

வாநிற்ப வளைந்த நீர்ச் சேர்ப்பனே! மனத்துத் தெளி வில்லாதானை எவ்விடத்தும் தேறல் அரிது.

(ப-ரை). வளியால்—காற்றால், திரை—அலைகள், ஏறி—கரை மேல் ஏறி, உலாம்—உலாவாநின்ற, வாங்கு நீர் சேர்ப்ப—வளைந்த நீர்ச்சேர்ப்பனே! ஆறா சினத்தன் அறிவிலன்—ஆறாத கோபத்தை யுடையவன் அறிவிலனாவான். அவனை மாறி ஒழுகல் தலை என்ப—அவனை நீங்கியொழுகுதல் சிறந்ததென்று நல்லார் சொல்வர். தெளி யானை-மனத்துத் தெளிவில்லாதவனை, தேறல்—எவ்விடத்தும் தேறல், அரிது—அரிதாம். [தேறல்-தெளிதல், நம்புதல்].

(க-து). அதிக கோபமுள்ளவனை மூடனைத் தெளிதல் முடியாதா கையால் அவனை அணுகாமல் அகன்றொழுகுவதே மிகவும் நல்லதாம்

"பேதையோ டியாதும் உரையற்க—பேதை
உறைப்பிற் சிதைந்துரைக்கும். ஒல்லும் வகையால்
வழுக்கிக் கழிதலே நன்று."—நாலடியார்.

53. கோபத்தை அடக்கலால் தீமை தானே கேடேதல்

உற்றதற் கெல்லாம் உரஞ்செய்ய வேண்டுமோ?
கற்றறிந்தார் தம்மை வெகுளாமைக் காப்பமையும்.
நெற்செய்யப் புற்றேய்ந்தாற் போல நெடும்பகை
தற்செய்யத் தானே கெடும். 83

(ப-பொ). உற்றதற்கெல்லாம் தனித்தனியே தம்மை வலிசெய்ய வேண்டுமோ? கற்றறிந்தவர்கள் தம்மை வெகு ளாமைக் காப்பதே அமையும். நெல் செய்யப் புல் தேய்ந் தாற்போலப் பெரிய பகை தானே கெடும், தன்னை வலி பண்ண.

(ப-ரை). நெல் செய்ய—நெற்பயிர் செய்ய, புல்—வயலில் இருந்த புல், தேய்ந்தாற்போல — தானே அழிந்தாற்போல, தன் செய்ய — (ஒருவன்) தன்னை வலிபண்ண, நெடும்பகை—பெரிய பகை, தானே கெடும்—தானே கெட்டுவிடும். (ஆதலால், உற்றதற்கெல்லாம்—நேரிட்ட தற்கெல்லாம், உரம் செய்ய வேண்டுமோ—தனித்தனியே தம்மை வலிசெய்ய வேண்டுமோ? கற்றறிந்தார்—கற்றறிந்தவர்கள், வெகுளாமை

—கோபங் கொள்ளாமல், தம்மை காப்பு — தம்மைக் காப்பதே, அமையும்—போதும்.

(க—து). நெற்பயிரிட்டு அதனைக் காத்தால் வயலிலுள்ள புல் தானே அழிவதுபோல், தன் மனத்தைக் கோபம் வராமல் அடக்கிக் காத்தால் எல்லாத் தீமைகளும் தாமே கெடும்.

"வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு"—திருக்குறள்.

54. அடாது சொன்னவனைக் கோபியாமை

எய்தா நகைச்சொல் எடுத்துரைக்கப் பட்டவர்
வைதாராக் கொண்டு விடுவர்மன். அஃதால்
புனற்பொய்கை ஊர! விளக்கெலி கொண்டு
தனக்குநோய் செய்து விடல். 189

(ப—பொ). தமக்கு உள்ளதன்றியிருந்த இகழ்ச்சிச் சொல்லைப் பிறரால் எடுத்துரைக்கப்பட்டவர், அவ்வெடுத்துரைத்தார் தம்மை வைதாராக மனத்திற்கொண்டு வெகுள்வர் அறிவின்மையானே. அஃது, புனற்பொய்கை ஊரனே! விளக்கினை எலி கொண்டு ஏறி, அவ்வெலி தனக்கு நோய் செய்ததனோடொக்கும்.

(ப—ரை). புனல் பொய்கை ஊர—நீர் நிறைந்த தடாகங்கள் உள்ள ஊரனே! எய்தா—தமக்குப் பொருந்தியிராத, நகைச்சொல்—இகழ்ச்சி வார்த்தையை, எடுத்துரைக்கப்பட்டவர்—பிறரால் எடுத்துச் சொல்லப் பட்டவர், வைதாரா(க)—(அங்ஙனம் எடுத்துச் சொன்னவர்) தம்மை வைதாராக, கொண்டுவிடுவர்—(அறிவின்மையால்) மனத்திற் கொண்டு கோபிப்பர். அஃது—அச்செய்கை, எலி விளக்கு கொண்டு—எலி விளக்கினைக் கொண்டேறி, தனக்கு நோய்செய்துவிடல்—தனக்கு நோய் செய்ததனோ டொக்கும். [மன்—ஆல்—அசை].

(க—து). தமக்குப் பொருந்தாத இகழ்ச்சி வார்த்தையைச் சொன்ன ஒருவன் தம்மை வைததாக (அறிவின்மையால்) கோபிப்பவர், விளக்கினைக் கொண்டேறி எலி தனக்கு நோய் செய்துகொள்வதுபோல், தாமே தமக்குத் துன்பத்தை வருவித்துக்கொள்பவ ராவர்.

55. மூடருடைய நிந்தையைப் பொறுத்தல்

தெரியா தவர்தம் திறனில்சொல் கேட்டால்
பரியாதார் போல இருக்க. பரிவில்லா
வம்பலர் வாயை அவிப்பான் புகுவாரே
அம்பலம் தாழ்க்கூட்டு வார். 135

(ப-பொ). அறிவில்லாதார் தம்மைச் சொல்லும் திறப்பாடில்லாத சொற்களைக் கேட்டால் அதற்குத் துன்புறாதாராய்ப் பொறுத்திருக்க. பிறன்மேல் அன்பில்லாத ஏதிலர் வாயை அடக்கப் புகுவார் அம்பலந் தாள்கூட்டு வாரோ டொப்பர்.

(ப-ரை). தெரியாதவர் தம் திறனில் சொல் கேட்டால்—அறிவில்லாதவர் தம்மைச் சொல்லும் திறப்பாடில்லாத வார்த்தைகளைக் கேட்டால், பரியாதார்போல இருக்க—அதற்குத் துன்புறாதவராய்ப் பொறுத்திருக்க. பரிவு இல்லா வம்பலர் வாயை அவிப்பான் புகுவார்—பிறன் மேல் அன்பில்லாத அயலார் வாயை அடக்கப்புகுவார், அம்பலம் தாழ்க்கூட்டுவார்—அம்பலம் தாள்கூட்டுவாரோ டொப்பர். [ஏ—அசை].

அம்பலம்—பலரும் கூடுவதான பொதுவிடம்.

(க-து). பலரும் வந்து கூடும் பொதுவிடத்தில் ஒருவரும் வராத வண்ணம் தாளிடத் துணிதல் முடியாத காரியம். மூடருடைய வாயை அடக்கலும் முடியாத காரியமே. அவருடைய நிந்தையான வார்த்தையைக் கேட்டால் துன்புறமல் பொறுக்க.

பிரதிபேதம்.—அம்பலத்தாள் கூட்டுவார்.

"நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது
தாரித் திருத்தல் தகுதி."—நாலடியார்.

56. பொய்யாக அவதூறு பேசினல் அதைப் பொறுத்தல்

கையார உண்டமையால் காய்வார் பொருட்டாகப்
பொய்யாகத் தம்மைப் பொருளல்லார் கூறுபவேல்,
மையார உண்டகண் மாணிழாய்! என்பரிவ?
செய்யாத எய்தா வெனின். 44

(ப—பொ). தம்மைக் காய்வார் கைப்பொருளை அவர் கொடுக்க நிறையக் கொண்டு சிலர் உண்டமையால், அக் காய்வார்க்காக உண்மையன்றிப் பொருளல்லாத குற்றங் களைச் சொல்லுவாராயின், மையார உண்ட கண் மாணி ழாய்! அதற்கு என்ன காரணத்தால் பரிவதாம்? செய் யாத குற்றங்கள் தமக்குக் குற்றமாகாவா மாயின்.

(ப—ரை). ஆர மை உண்ட கண் மாண் இழாய்—நிரம்ப மையிட்ட கண்களும் மாட்சிமைப்பட்ட ஆபரணங்களும் உடையாய்! கை ஆர உண்டமையால்—தம் பகைவருடைய கைப்பொருளை அவர் கொடுக்க நிறையக்கொண்டு உண்டமையால்; காய்வார் பொருட்டாக — அப் பகைவர் நிமித்தமாக, பொருளல்லார்—அற்பர்கள், தம்மை பொய்யாக கூறுபவேல்—தம்மீது உண்மையின்றிப் பொய்யாக அவதூறு பேசி னால், செய்யாத எய்தா எனின்—ஒருவர் செய்யாத குற்றங்கள் அவ ரைச் சாரா என்பது உண்மையாயின், பரிவது—அதற்காக மனம் வருந் துவது, என்—என்ன காரணம்? [கை—கைப்பொருள்].

(க—து). ஒருவர் செய்யாத குற்றங்கள் அவரைச் சாரா. ஆகை யால், தமது பகைவருடைய பொருளை நிரம்ப உண்டவர், பகைவர் நிமித்தமாகத் தம்மைப் பொய்யாக அவதூறு பேசினால், அதன்பொ ருட்டு வருந்தவேண்டா.

57. புல்லுரைக்கு எதிர் சொல்லாமை

ஆய்ந்த அறிவின ரல்லாதார் புல்லுரைக்குக்
காய்ந்தெதிர் சொல்லுபவோ கற்றறிந்தார்?—தீந்தேன்
முசுக்குத்தி நக்கு மலைநாட! தம்மைப்
பசுக்குத்தின் குத்துவா ரில். 268

(ப—பொ). ஆய்ந்த அறிவின ரல்லாதார் தம்மைச் சொல்லிய புல்லுரைக்கு மாறாக வெகுண்டு அவ்வறிவில் லாதா ரெதிரே சொல்லுபவோ கற்றறிந்தார்? இனிய தேன் பொதியை முசுக்கலை பாய்ந்து நக்கு மலைநாடனே! தம்மைப் பசுப்பாய்ந்தால் அப்பசுவை எதிரே பாய்வா ரில்லை ஆதலான்.

(ப—ரை). தீம் தேன்—இனிய தேன்கூட்டை, முசு குத்தி—மந்திகள் குத்தி, நக்கும்—நக்குகின்ற, மலைநாட—மலைநாடனே! தம்மை பசு குத்தின்—தம்மைப் பசு இடித்தால், குத்துவார் இல்—தாமும் அதனை இடிப்பவர் இல்லை. (ஆதலால்), ஆய்ந்த அறிவினர் அல்லாதார்—ஆய்ந்த அறிவினரல்லாத கீழோர், புல் உரைக்கு—தம்மைச் சொல்லிய புல்லுரைக்கு மாறாக, கற்றறிந்தார்—கற்றறிந்த மேலோர், காய்ந்து—கோபித்து, எதிர் சொல்லுபவோ-எதிருரை சொல்லுவரோ (சொல்லார்). [மந்தி-குரங்கு].

(க—து). அறிவிலார் நிந்தைவார்த்தை சொன்னால், கல்விமான்கள் அதைப் பொறுப்பதன்றி அதற்கு எதிராகத் தாமும் நிந்தை வார்த்தை சொல்லார்.

"நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்."—நாலடியார்.

"கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு."—நாலடியார்.

58. பொறாமல் வைவதின் கேடு

நோவ உரைத்தாரைத் தாம்பொறுக்க லாகாதார்
நாவின் ஒருவரை வைதால் வயவுரை,
பூவிற் பொலிந்தகன்ற கண்ணாய்! அதுவன்றோ
தீயில்லை ஊட்டும் திறம். 45

(ப—பொ). தம்மைத் துன்புறும்படி வெகுண்டு வைதாரைத் தாம் பொறுக்கமாட்டாதார், தம்முடைய நாவினால் தாம் பிறரொருவரை வெகுண்டு வைதால், அவ் வைத வயவுரை, பூவிற் பொலிந்தகன்ற கண்ணாய்! தம்மில்லைத் தாமே தீக்கு உணவாக ஊட்டிய திறத்தோடொக்கும்.

(ப—ரை). பூவின் பொலிந்து அகன்ற கண்ணாய்—தாமரைபோல் விளங்கி விசாலமான கண்ணையுடையாய்! நோவ உரைத்தாரை—தமது மனம் நோம்படி கோபித்து வைதவரை, தாம் பொறுக்கலாகாதார்—தாம் பொறுக்கமாட்டாதவர், நாவின்—தம்முடைய நாவினால், ஒருவரை வயவுரை வைதால்—தாம் அவரைக் கோபித்து வயவுரை சொல்லி

வைதால், அது—அச்செய்கை, இல்லை தீ ஊட்டும் திறம் அன்றே—தம் இல்லைத் தாமே தீக்குணவாக ஊட்டிய திறத்தோ டொக்கும்.

(க—து). "தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற், றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை, எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று, பரிவதூஉம் சான்றோர் கடன்" ஆகியிருக்க, தம்மை இகழ்ந்த வரைத் தாம் இகழ்வது தம்மை எரிவாய் நிரயத்து வீழ்விக்கும் செய்கை யாதலால், அங்ஙனம் செய்வது, தாம் குடியிருக்கும் வீட்டில் தாமே கொள்ளிவைப்பதை ஒக்கும். பொறுக்காமல் வைவது தம்முடைய தன்மையைத் தாமே கெடுத்துக்கொள்வதாகும் என்பதாம்.

59. பொறுத்தல் புகழாதல்

*கறுத்தாற்றித் தம்மைக் கடிய செய்தாரைப்*
*பொறுத்தாற்றிச் சேறல் புகழால்.—ஒறுத்தாற்றின்,*
*வானோங்கு மால்வரை வெற்ப! பயனின்றே.*
*தானோன் றிடவரும் சால்பு.* 19

(ப—பொ). கோபத்தின்கண்ணே மிக்குத் தமக்குக் கொடிய வாயிருப்பன செய்தாரையும் பொறுத்துச் செலுத்துவது புகழாவது. ஒறுப்பின்கண்ணே மிக் கொழுகின், வானோங்கும் மால்வரை வெற்பனே! அதனால் ஒருபயன் இல்லை. தான் பிறரைப் பொறுக்கும் பொறை யான் வருவது சால்பாவது.

(ப—ரை). வான் ஓங்கு மால்வரை வெற்ப—வானில் ஓங்கிய பெரிய மூங்கில்களையுடைய வெற்பனே! கறுத்து—கோபித்து, ஆற்றி—மிகவும், தம்மை—தமக்கு, கடிய செய்தாரை—கொடியவைகளைச் செய்தவரையும், பொறுத்து—(கோபியாது) பொறுத்து, ஆற்றி—நன்மை செய்து, சேறல்—ஒழுகுதல், புகழ்—புகழாகும். ஒறுத்து—தாமும் கோபித்து, ஆற்றின்—கொடுமை செய்தால், பயன் இன்று—அதனால் ஒரு பயனும் இல்லை. தான் நோன்றிட—தான் பொறுத்தலினால், சால்பு—சால்பாகிய குணம், வரும்—உண்டாகும். [ஆல்-ஏ-அசை].

(க—து). கொடுமை செய்தாரைக் கோபியாமல் பொறுத்தவர்க்கே புகழும் சால்பும் உண்டாம்; கோபித்துக் கொடுமை செய்தலால் ஒரு நன்மையும் உண்டாகாது.

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம். பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்."—திருக்குறள்

## 8. பெரியாரைப் பிழையாமை

### 60. மன்றூடறுத்துப் போகாமை

அறிவன் றழகன் றறிவதூஉ மன்று,
சிறிய ரெனப்பாடும் செய்யும்:—எறிதிரை
சென்றுலாம் சேர்ப்ப! குழுவத்தார் மேயிருந்த
என்றா டறுப்பினு மன்று. 207

(ப—பொ). தமக்கு அறிவும் அன்று, அழகும் அன்று, அறநெறியும் அன்று; குடிப்பிறப்பால் சிறியர் எனப்படுதலையும் செய்யும்: எறிதிரை சென்றுலாம் சேர்ப்பனே! என்றாடறுத்துப் போனாராயினும் குழுவத்தார் மேவியிருந்த மன்றை ஊடறுத்துப் போகலாகாது.

(ப—ரை). எறிதிரை சென்றுலாம் சேர்ப்ப – எறியும் அலைகள் சென்று உலாவுதலான கடற்சேர்ப்பனே! என்று ஊடறுப்பினும்-சூரியனை ஊடறுத்துப் போயினாராயினும், குழுவத்தார் மேயிருந்த மன்று—கூட்டத்தார் பொருந்தியிருந்த சபையை ஊடறுத்துப்போதல் ஆகாது. (அது), அறிவு அன்று – தமக்கு அறிவும் அன்று; அழகு அன்று – அழகும் அன்று; அறிவதும் அன்று—அறநெறியும் அன்று; சிறியர் எனப் பாடும் செய்யும்—கீழ்மக்கள் எனப்படுதலையும் செய்யும்.

(மன்று) ஊடறுத்துப்போதல் ஆகாது என்றது இசையெச்சம்.

(க—து). பெரியோர் கூடியிருக்கும் சபையிலே ஊடறுத்துப்போதல் ஒழுக்கத்தவறும்.

"இடையறுத்துப் போகிப் பிறனொருவற் சேரார்
கடைபோக வாழ்துமென் பார்".—ஆசாரக்கோவை.

61. பெரியாரோடு மாறுகோள்ளல்

ஆமாலோ என்று பெரியாரை முன்னின்று
தாமாச் சிறியார் தறுகண்மை செய்தொழுகல்,
போமா றறியா புலன்மயங்கி ஊர்புக்குச்
சாமாகண் காணாத வாறு. 233

(ப—பொ). நமக்கு இவரோடு மாறுபடல் ஆமோ வென்று தாமாக வலியப் பெரியாரைச் சிறியார் தறுகண்மை சொல்லி மாறுபட்டொழுகுதல், போம்வழி அறியாவாய்ப் புலத்தை மயங்கவுணர்ந்து ஊரிலேபுக்குச் சாவக்கடவ மாக்கள் காணாதவாறு போலும்.

(ப—ரை). ஆம் ஓ என்று—நமக்கு இவரோடு மாறுபடல் ஆமோ வென்று, தாமா முன் நின்று—தாமாக வலிய எதிரே நின்று, சிறியார்—சிறியார், பெரியாரை தறுகண்மை செய்து ஒழுகல்—பெரியாரைத் தறு கண்மைசொல்லி மாறுபட்டொழுகுதலானது, போம் ஆறு அறியா(து)-போம்வழி அறியாவாய், புலன் மயங்கி—புலத்தை மயங்க உணர்ந்து, ஊர்புக்கு—ஊரிலே புகுந்து, சாம் மா—சாகக்கடவ மாக்கள், கண்காணாத ஆறு—காணாதவாறு போலும். [ஆல்-அசை].

(க—து). தமக்கு இறுதி வருவதை உணர்வார் பெரியாரோடு மாறு கொள்ளார்.

62. பெரியாரைக் கைப்பித்தல்

எல்லாத் திறத்தும் இறப்பப் பெரியாரைக்
கல்லாத் துணையார்தாம் கைப்பித்தல் சொல்லின்,
நிறைந்தார் வளையினாய்! அஃதால் எருக்கு
மறைந்தியானை பாய்ச்சி விடல். 376

(ப—பொ). எல்லாவகையானும் மிகவும் பெரியவரை அறிவு நிரம்பக் கல்லாத அளவினையுடையவர் வெறுக்கப் பண்ணுதல் சொல்லுவேமாயின், தகுதி நிறைந்து பொருந்திய வளையையுடையாய்! எருக்கந்தூற்றிலே மறைந்து நின்று யானையை மதம்பாய்ச்சி வெகுள்விப்பதனோ டொக்கும்.

(ப—ரை). நிறைந்த ஆர் வளையினாய்—தகுதி நிறைந்த பொருந்திய வளையையுடையாய்! சொல்லின்—சொல்லுமிடத்து, எல்லா திறத்தும் இறப்ப பெரியாரை—எல்லா வகையாலும் மிகவும் பெரியவரை, கல்லா துணையார் கைப்பித்தல் அது—கல்லாத அளவையுடையார் வெறுக்கப்பண்ணுதலானது, எருக்கு மறைந்து—எருக்கம் புதரிலே மறைந்து நின்று, யானை பாய்ச்சிவிடல்—யானையை மதம்பாய்ச்சி வெருள்விப்பதனோ டொக்கும்.

(க—து). எருக்கம் புதரிலே மறைந்து நின்று யானையை வெருள் விப்பவன் உயிரிழப்பது நிச்சயம்: கல்லாமையில் மறைந்து நின்று மிகப் பெரியாரை வெறுப்புறுவிக்கும் சிறியோர் கெடுவது நிச்சயம்.

பிரதிபேதம்.—யானை காய்ந்துவிடல்.

63. சான்றோர் பொறையின் அளவு

முன்னும் ஒருகால் பிழைப்பானை ஆற்றவும்
பின்னும் பிழைப்பப் பொறுப்பவோ?—இன்னிசை
யாழின்வண் டார்க்கும் புனலூர! ஈனுமோ
வாழை இருகால் குலை? 221

(ப—பொ). முன்னும் ஒருகாலத்துப் பிழைத்த பிழைப்பினைச் சான்றோர் பொறுக்கவும், பின்னும் பிழை செய்தால்பொறுப்பார்களோ? இனிய இசையை உடைத்தாகிய யாழ்போல் வண்டுகள் ஆர்க்கும் புனலை யுடைய ஊரனே! வாழை இருகாலாவது குலையை ஈனுமோ? ஈனாது.

(ப—ரை). இன் இசை யாழின் வண்டு ஆர்க்கும் புனல் ஊர—இனிய இசையையுடைய யாழ்போல வண்டுகள் ஒலிக்கும் புனலை யுடைய ஊரனே! முன்னும் ஒருகால் பிழைப்பானை—முன்னும் ஒருகாலத்துக் குற்றம் செய்தவனை, ஆற்றவும்—சான்றோர் பொறுக்கவும், பின்னும் பிழைப்ப—பின்னையும் குற்றம்செய்தால், பொறுப்பவோ—பொறுப்பார்களோ? வாழை இருகால் குலை ஈனுமோ—வாழை இருமுறை குலை ஈனுமோ (ஈனாது).

(க-து). குலையின் பாரத்தை ஒருமுறை பொறுத்தீன்ற வாழை இரண்டாமுறை அது செய்வதில்லை. செய்த குற்றத்தை ஒருமுறை பொறுத்தருளிய சான்றோர் இரண்டாமுறை அது செய்யார்.

## 64. பெரியார் வருந்த ஒழுகலின் பயன்

நெடுங்காலம் வந்தார் நெறியின்மை கண்டு
நடுங்கிப் பெரிதும் நலிவார் பெரியர்.
அடும்பார் அணிகானற் சேர்ப்ப! கெடுமே
கொடும்பா டுடையான் குடி. 194

(ப-பொ). தீநெறிக்கண்ணே நெடுங்காலம் ஒழுகிப் போந்தோர் நெறியின்மையைக் கண்டு பெரியோர் மிகவும் நடுங்கி ஒரு குறையை மேலிடுவாராகில், அடும்பைப் பூவால் அழகுபெறும் கானல் சேர்ப்பனே! கொடிய தன்மையையுடையான் குடி கெடும்.

(ப-ரை). அடும்பு அணி ஆர் கானல் சேர்ப்ப-அடும்பைப் பூவால் அழகுபெறும் கானல் சேர்ப்பனே! நெடுங்காலம் நெறியின்மை வந்தார் கண்டு-நெடுங்காலம் தீநெறிக்கண்ணே ஒழுகிப் போந்தாரைக் கண்டு, பெரியர்-பெரியோர், பெரிதும் நடுங்கி-மிகவும் நடுங்கி, நலிவார்-ஒரு குறையை மேலிடுவர்: (அங்ஙனம் மேலிடுவாராகில்), கொடும்பாடு உடையான்-கொடிய தன்மையை உடையான், குடிகெடும்-குடிகெடும்.

(க-து). கொடியவன் நெடுங்காலமாகக் கெட்ட வழியிலே நடப்பதைக் கண்டு அதனால் என்ன கெடுதி நேரிடுமோ என்றஞ்சிப் பெரியோர் வருந்துவர்: அங்ஙனம் அவர் வருந்தலுற்றால் அவன் குடி கெடும்.

"குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து."—திருக்குறள்.

## 9. புகழ்தலின் கூறுபாடு

65. தம்மைப் புகழ்தல் தகுதியன்று

செய்த கருமம் சிறிதானும் கைகூடா.
மெய்யா உணரவுந் தாம்படார்—எய்த.
நலத்தகத் தம்மைப் புகழ்தல், புலத்தகத்துப்
புள்ளரைக்கால் விற்பே மெனல். 132

(ப—பொ). தாம் செய்யத் தொடங்கிய கருமங்கள் சிறிதாயினும் தமக்குக் கைகூடுவதும் செய்யா. அவை கூடாவாயினும் அவை செய்துமுடிக்க வல்லரென்று பிறரால் மெய்யாக மதிக்கவும் படார். இத்தன்மையாயுள்ளார் நிரம்ப நன்மையிலே தகத் தாமே தம்மைப் புகழ்தல், தகைக்கப்படாதே புலத்தின்கண் இருக்கின்ற பறவையை அரைக்காற் பொன்னுக்கு விற்பேமென்று சொல்லுமதனே டொக்கும்.

(ப—ரை). செய்த கருமம்—தாம் செய்யத் தொடங்கிய கருமங்கள், சிறிதானும்—சிறிதாயினும், கைகூடா—கைகூடுவதும் செய்யா. மெய்யா உணரவும் தாம் படார்—(அவை கைகூடாவாயினும்) அவற்றைச் செய்து முடிக்க வல்லவர் என்று பிறரால் மெய்யாக மதிக்கவும் படார். எய்த நலம் தக தம்மை புகழ்தல்—(இத்தன்மையாயுள்ளார்) நிரம்ப நன்மையிலே பொருந்தத் தாமே தம்மைப் புகழ்தலானது, புலத்தகத்து புள்—தமக்கு அகப்படாமல் புலத்தின்கண் இருக்கின்ற பறவையை, அரைக்கால் விற்பேம் எனல்—அரைக்கால் பொன்னுக்கு விற்பேமென்று சொல்லுமதனே டொக்கும்.

(க—து). எடுத்த காரியத்தை முடிக்கக்கூடாமலும் முடிக்க வல்லவரென்று மதிக்கப்படாமலும் இருப்பவர், தாம் அக்காரியத்தை முடிப்பதாகத் தம்மைப் புகழ்ந்துகொள்வது, கையிலகப்படாமல் புலத்திலிருக்கிற பறவையை ஒருவர் அரைக்கால் பொன்னுக்கு விற்பேம் என்பதுபோலும்.

பழமொழி.—Make not your sauce till you have caught the fish. Catch the bear before you sell his skin.

## 66. அமராத புகழை அகற்றல்

தமரேயும் தம்மைப் புகழ்ந்துரைக்கும் போழ்தில்
அமரா ததனை அகற்றலே வேண்டும்.
அமையாரும் வெற்ப! அணியாரே தம்மைத்
தமவேனும் கொள்ளாக் கலம். 232

(ப—பொ). தம்மால் உதவிபெற்ற தமராயினும் தம்மைப்புகழ்ந்து சொல்லும் பொழுது, தம்மோடு பொருந்தாத புகழை அவர் சொல்லாமை நீக்கல் வேண்டும்: அமையாரும் வெற்பனே! தமக்குத் தகாத அணிகலங்களைத் தாம் உடையரேயாயினும் நல்லார் தம்மை அணியார், அதுபோல.

(ப—ரை). அமை ஆரும் வெற்ப—மூங்கில் நிறைந்த வெற்பனே! கொள்ளாகலம்—தமக்குத் தகாத அணிகலங்களை, தம எனும்—தாம் உடையரேயாயினும், தம்மை அணியார்—நல்லார் தம்மை அணியார். (அது போல), தமரேயும்—தம்மால் உதவிபெற்ற உறவினரேயாயினும், தம்மை புகழ்ந்து உரைக்கும் போழ்தில்—தம்மைப் புகழ்ந்து சொல்லும் பொழுது, அமராததனை—தம்மொடு பொருந்தாத புகழை, அகற்றலே வேண்டும்—அவர் சொல்லாதபடி நீக்கலே வேண்டும். [அணியாரே—ஏ—அசை].

(க—து). தமக்குச் சொந்தமாயினும் தமக்குத் தகுதியில்லாத ஆபரணங்களை ஒருவர் அணிந்துகொள்ளார். தமக்கு உறவினரேயாயினும், தமக்குப் பொருந்தாதவைகளைச் சொல்லிப் புகழ்ந்தால், அவைகளை நல்லார் அங்கீகரிக்கமாட்டார்.

## 67. தம்மைத் தாமே புகழ்வோரைப் பிறர் புகழ்தல்

தாயானும் தந்தையா லானும் மிகவின்றி
வாயின்மீக் கூறு மவர்களை ஏத்துதல்,
நோயின் றெனினும் அடுப்பின் கடைமுடங்கும்
நாயைப் புலியா மெனல். 117

(ப-பொ). தம்மைப் பெற்ற தாயாலேயாகத் தந்தையாலேயாக யாதுமொரு சிறப்பின்றித் தம் வாயாலே

தம்மை மீக்கூறுமவர்களைப் பிறர் ஏத்துதல், நோயில்லை யாயினும் அடுப்பின் மருங்கே முடங்கும் நாயினைப் புலி யென்று சொல்லுதலோ டொக்கும்.

(ப—ரை). தாயானும் தந்தையானும்—தம்மைப்பெற்ற தாயாலேயா வது தந்தையாலேயாவது, மிகவு இன்றி—யாதுமொரு சிறப்பின்றி, வாயின்—தம் வாயால், மீக்கூறுமவர்களை—தம்மை உயர்த்திச் சொல் வோரை, ஏத்துதல்—பிறர் ஏத்துதலானது, நோய் இன்று எனினும்—நோய் இல்லையாயினும், அடுப்பின்கடை முடங்கும் நாயினை—அடுப்பின் பக்கலில் முடங்கியிருக்கும் நாயை, புலியாம் எனல்—புலியென்று சொல்லுதலோ டொக்கும்

தாயானும்........ஏத்துதல் = புதல்வர் செய்த தீச்செயல்களை மறைத்து அவர்களைப் பாதுகாக்கும் அன்பினையுடைய தாய் தந்தைய ராலும் நன்குமதிக்கப்படுதலின்றித் தம்மைத் தாமே வியந்துகூறும் பேதையருடைய மொழியை நம்பி அவரைப் பிறர் புகழ்தல்.

68. பலர் நடுவில் ஒருவனைப் புகழுமாறு

பல்கிளையுள் பார்த்துறு னாகி ஒருவனை
நல்குரவான் வேறாக நன்குணரான்—சொல்லின்
உரையுள் வளவியசொல் சொல்லா ததுபோல்
நிரையுள்ளே இன்னா வரைவு 366

(ப—பொ). பலகிளைநடுவே ஒருவன் ஆராயானாகி மிக வும் உணர்விலாதான், ஒருவனை வேறாகச் சிறப்பித்தே அதனை ஆராய்ந்து சொல்லுமேயாயின், எல்லாச் சொற் களுள்ளும் சிறப்புடையதென்று நல்லாரால் மதிக்கப் பட்ட நல்ல சொல்லை நல்குரவான் சொல்லாததுபோல், பத்தியா யிருந்தோர் பலருள் ஒருவனையே வரைந்து சிறப்புச்செய்தல் இன்னாது.

(ப—ரை). பல்கிளையுள் பார்த்துறான் ஆகி—பல சுற்றத்தார் நடுவே ஆராயானாகி, நன்கு உணரான்—நன்குணராத ஒருவன், ஒருவனை—ஒருவனைப்பற்றி, வேறு ஆக—ஒரு சிறப்பியல்புடையவனாக, சொல் லின்—சொல்லின், நல்குரவான்—தரித்திரத்தால், உரையுள் வளவிய

'சொல் — சொற்களுள் சிறப்புடையதென்று மதிக்கப்பட்ட நல்ல சொல்லை, சொல்லாதது போல்—சொல்லாதது போலவே, நிறையுள்—பத்தியாயிருந்தோர் பலருள், வரைவு—ஒருவனையே வரைந்து சிறப்புச் செய்தல், இன்னு—இன்னாது.

(க—து). ஒருவனுடைய சிறப்பியல்பை உணராமல், பல சுற்றத்தார் நடுவில் அவனைக் குறித்துப் பேசலுற்றவன், வறுமை காரணமாக வளவிய வார்த்தை சொல்லாமையும் தீது: வரிசையா யிருந்த பலரில் ஒருவனை மாத்திரம் சிறப்பித்தலும் தீதே.

II

# 1. சான்றோ ரியல்பு.

## 69. சான்றோர் பெருமை.

*நீறூர்ந்தும் ஒட்டா நிகரில் மணியேபோல்*
*வேறாகத் தோன்றும் விளக்கம் உடைத்தாகித்*
*தாறாப் படினும் தலைமகன் தன்னொளி*
*நூறா யிரவர்க்கு நேர்.* 214

(ப—பொ). பொதுப்படாது சிறப்புப்படத் தோன்றும் ஒளியை யுடைத்தாய் நீறூர்ந்தும் அந்நீறோடு ஒட்டா நிகரில் மணியே போலத் தாற்றிப் போகப்பட்டதாயினும் தலைமகன் தன்னொளி நூறாயிரவ ரொளிக்கு நேராம்.

(ப—ரை). வேறாக தோன்றும் விளக்கம் உடைத்தாகி—பொதுப்படாமல் சிறப்புப்படத் தோன்றும் ஒளியை உடைத்தாய், நீறு ஆர்ந்தும்—நீறிலே படிந்தும், ஒட்டா—அந்நீறோடு ஒட்டாத, நிகர்இல்—சமானமில்லாத, மணியே போல்—மாணிக்கமே போல, தலைமகன்தன் ஒளி—தலைமகனுடைய ஒளியானது, தாறா படினும்—தாற்றிப் போகப்பட்டதாயினும், நூறாயிரவர்க்கு—நூறாயிரவர் ஒளிக்கு, நேர்—சமானமாம்.

தாற்றுதல்—கொழித்தல், புடைத்தாற்றிக் கழித்தல்.

(க—து). நீறிலே படிந்தாலும் அதனோ டொட்டாமல் மாணிக்கம் மிகச் சிறந்த ஒளியை உடைத்தாதல்போல், சிறியரோடு பொருந்தினாலும் அவரோ டொட்டாமல் சான்றோன் மிகச்சிறந்த பெருமையை உடையவனாவான். புடைத்தாற்றிக் கழித்த பிறகும் அப்பெருமை அநேகம் ஆயிரவருடைய பெருமைக்குச் சமானமாகும்.

பெருமையைப் புடைத்தாற்றிக் கழித்தலாவது, உள்ள சில குற்றங்களை நீக்கிக் கழித்தல் என்பதாம். "நீறூர்ந்தும் ஒட்டா" என்பது.

"தீயவரோ டொன்றிய திறத்தரு நலத்தோர்
ஆயவரை அந்நிலை அறிந்தனர் துறந்தாங்
கேயவரு தண்பொடி படிந்துடன் எழுந்தொண்
பாய்பரி விரைந்துதறி நின்றன பரந்தே".—கம்பராமாயணம்.

என்ற கருத்தை ஒத்தது.

70. வறுமையுறினும் நின்ற நிலையில் வழுவாமை

ஒற்கந்தாம் உற்ற விடத்தும் உயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல்.—வற்பத்தால்
தன்மேல் நலியும் பசிபெரி தாயினும்
புன்மேயா தாகும் புலி. 119

(ப—பொ). வறுமை தாம் உற்றவிடத்தும், உயர்ந்தார் நின்ற நிலையின்கண் வழுவாதே நிற்பர்: பஞ்சத்தால் மிகவும் தன்மாட்டு நலியும் பசி பெரிதாயினும், புலி புல்லினை மேயாதாகும், அது போல.

(ப—ரை). வற்பத்தால்—பஞ்சத்தால், தன்மேல் நலியும் பசி—தன்னிடம் வருத்தும் பசி, பெரிதாயினும்—அதிகரித்தாலும், புலி—புலியானது, புல் மேயாதாகும்—புல்லினை மேயாதாகும். (அது போல), தாம் ஒற்கம் உற்றவிடத்தும்—தாம் வறுமை அடைந்தாலும், உயர்ந்தவர்—பெரியோர், நின்ற நிலையின்மேல் நிற்பவே—நின்ற நிலையின்கண் வழுவாதே நிற்பர்.

நின்ற நிலையாவது, மேற்கொண்டொழுகும் ஒழுக்கம்.

(க—து). புலி புல்லை மேயாமை போலப் பெரியோர் இழிவான செய்கையை விரும்பார்.

"உடுக்கை யுலறி உடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப் பாளர்தம் கொள்கையிற் குன்றார்
இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா
கொடிப்புற் கறிக்குமோ மற்று".—நாலடியார்.

71. பீடிலாவிடத்தும் பெருந்தகைமையில் வழுவாமை

மாடம் அழிந்தக்கால் மற்றும் எடுப்பதோர்
கூடம் மரத்திற்குத் துப்பாகும். அஃதேபோல்
பீடிலாக் கண்ணும் பெரியோர் பெருந்தகையர்.
ஈடில் லதற்கில்லை பாடு. 96

(ப-பொ). மாடம் செய்கையன்றி அழிந்தக்கால் அதன் கண் மாமுதலாயின உறுப்புகள் பின்னையும் எடுப்பதொரு கூடத்து உதவும். அதுவேபோலப் பெரியோர் தம் செல்வம் அழிந்தவிடத்துத் தம் பெருந்தகைமையின்கண் வழுவார்; வலியிலதற்குப் பெருமையில்லை ஆதலான்.

(ப-ரை). மாடம்—வீடு, அழிந்தக்கால்—செய்கைகெட்டு அழிந்தாலும், மரம்—அதிலுள்ள மாமுதலாயின உறுப்புகள், மற்றும் எடுப்பதோர் கூடத்திற்கு துப்பு ஆகும்—பின்னையும் கட்டுவதான ஒரு வீட்டிற்கு உதவியாகும். அஃது போல் ஏ—அதுபோலவே, பெரியோர்—பெரியோர், பீடு இலாக்கண்ணும்—தம் செல்வம் அழிந்தவிடத்தும், பெருந்தகையர்—தமது பெருந்தகைமையின்கண் வழுவார். ஈடு இல்லதற்கு பாடு இல்லை—வலியில்லாததற்குப் பெருமை யில்லை.

மரத்திற்கு என்பதன் உருபைப் பிரித்துக் கூடம் என்பதனோடு கூட்டிக்கொள்ளல் வேண்டும்.

(க-து). வீட்டை ஆதாரவாகக் கொண்டிருந்த மரம் முதலிய உறுப்புக்கள், வீடழிந்தவிடத்தும், பின்னையுங் கட்டப்பட்ட வேறொரு வீட்டை ஆதாரவாகக் கொண்டு சிறப்படைதல்போல், செல்வத்தை ஆதாரவாக உடைய பெரியோர், அஃதழிந்தவிடத்தும், வேறு ஆதாரம் பெற்று உயர்வு குறையாதிருப்பர். உறுப்புக்களின் வலியால் விளங்கியிருந்து, வீடழிந்த விடத்து உதவாமற்போகும் மண் கல் முதலியன போல், கீழ்மக்கள் ஆதாரமானதை இழந்தவிடத்து உதவியற்றவராய்ப் பெருமை யிழப்பர்.

72. இடருற்ற விடத்தும் மதிப்பிற் குறையாமை

இணரோங்கி வந்தாரை என்னுற்ற கண்ணும்
உணர்பவர் அஃதே உணர்ப.—உணர்வார்க்
கணிமலை நாட! அளறாடிக் கண்ணும்
மணிமணி யாகி விடும். 78

(ப—பொ). தொடர்ச்சியறாது உயர்ந்துவந்தாரை அவர்கள் எல்லா இடர் உற்ற காலத்தும், அறிவுடையார் அப்பெற்றியே அவர்களை உணர்ந்து மதிப்பர்: அணிமலை நாடனே! சேறாடியவிடத்தும், உணர்வார்க்கு, நல்ல மணி மணியேயாய்த் தோன்றும், அதுபோல.

(ப—ரை). அணிமலைநாட—அடுக்கடுக்காக உள்ள மலைகளையுடைய நாடனே! அளறு ஆடியக்கண்ணும்—சேறாடியவிடத்தும், உணர்வார்க்கு—இரத்தின பரீக்ஷை தெரிந்தவர்க்கு, மணி மணியாகிவிடும்—நல்ல மாணிக்கம் மாணிக்கமேயாய்த் தோன்றும். (அதுபோல), இணர் ஓங்கி வந்தாரை—தொடர்ச்சியறாது உயர்ந்துவந்தவரை, என் உற்ற கண்ணும்—அவர்கள் எல்லா இடரும் உற்ற காலத்தும், உணர்பவர்—அறிவுடையார், அஃதே உணர்ப—அப்பெற்றியே அவர்களை உணர்ந்து மதிப்பர்.

ஆடிய என்பது ஆடி என ஈறு தொகுத்தலாயிற்று.

(க—து). சேறு படிந்திருப்பினும் இரத்தினமானது அதன் இலக்கணத்தை அறிந்தவர்க்கு இரத்தினமேயன்றி வேறாகாத வாறுபோல, இடையறாது கௌரவத்துடனே ஒழுகிவருகின்றவர் பலவித துன்பம் உற்ற காலத்தும் கௌரவத்தாழ்வு உடையராகார். அவருடைய அருமையை அறிந்தவர் அத்துன்பத்தின் காரணமாக அவரை இகழாது முன்போலவே சிறப்பாக மதிப்பர்.

"மாசு படினும் மணிதஞ்சீர் குன்றாவாம்".—நான்மணிக்கடிகை.

பழமொழி.— குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி நிறம் போகுமா? A diamond is valuable, though it lies on a dunghill. A myrtle among thorns is a myrtle still.

73. கல்வியில்லாவிடத்தும் மாட்சிமை மிகுதல்

கற்றதொன் றின்றி விடினும் குடிப்பிறந்தார்
மற்றொன் றறிவாரின் மாண்மிக நல்லரால:
பொற்ப உரைப்பான் புகவேண்டா. கொற்சேரித்
துன்னூசி விற்பவ ரில். 50

(ப—பொ). நற்குடிப்பிறந்தார், கற்றதொன் றில்லையாயினும், குடிப்பிறவாது கற்றாரின் மிக நல்லார். மாட்சிமைப்பட்ட உரை சொல்லவேண்டுவ தில்லை. கொற்சேரிக்கண்ணே துன்னூசியை விற்பார் ஒருவரும் இல்லை, அதுபோல.

(ப—ரை). கொல்சேரி—கருமாருடைய சேரியில், துன் ஊசி—தையலூசியை, விற்பவர்—சென்று விற்பவர், இல்—ஒருவரும் இல்லை. (அது போல), குடி பிறந்தார்—நற்குடிப்பிறந்தார், கற்றது ஒன்று இன்றி விடினும்—கற்றதொன்றில்லையாயினும், மற்றொன்று அறிவாரின்—குடிப்பிறவாமல் கற்றாரைக்காட்டிலும், மாண் மிக்க நல்லார்—மாட்சிமைமிக்க நல்லவராவார். (ஆதலால்), பொற்ப—பொலிவுறும்படி, உரைப்பான் புகவேண்டா—(அவரிடம் ஒன்றை) உரைக்கும்பொருட்டுச் செல்லவேண்டா [ஆல்—அசை. மற்று—வினைமாற்று].

(க-து). உயர்குடியில் பிறந்தவரிடம் கல்வியறி வில்லையாயினும் பெருந்தன்மை இயல்பாகவே பொருந்தியிருக்கும். அவரிடத்தில் கல்வியறி வுள்ள ஏனையோர் சென்று பெருந்தன்மையை விரித்துரைப்பது, கொல்லரிடம் சென்று ஊசி விற்பதுபோ லாம்.

"கொண்டுழிப் பண்டம் விலையொரீஇக் கொற்சேரி
நுண்டுளைத் துன்னூசி விற்பாரின்."—ஐந்திணையைம்பது.

பழமொழி.—கொல்லத் தெருவில் ஊசி விலைபோமா?

74. அறிமடமும் அணியாதல்

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்.—சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப!
அறிமடமும் சான்றோர்க் கணி. 361

(ப—பொ). தேரைத் தொடங்கிய முல்லைக் கொடிக்குத் தன் தேரையும், குளிர்ந்து ஒடுங்கி நின்ற மயிலிற்குப் பெறற்கரிய பட்டுநூலேயும் போர்வையையும் பண்டு கொடுத்தாரைக் கேட்டறிவோம். ஆதலால், சொல்லின், நெறித்த மடல்களையுடைய பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்பனே! அறிவின்கண் உள்ள மடமும் சான்றோர்க்கு அழகேயாம்.

(ப—ரை). நெறி மடல் பூ தாழை நீடுநீர் சேர்ப்ப—நெறித்தலான மடல்களையுடைய அழகிய தாழைகள் பொருந்திய கடற்சேர்ப்பனே! முல்லைக்குத் தேரும்—சக்கரத்தில் சிக்கிய முல்லைக்கொடிக்குத் தன் தேரையும், மயிலுக்கு போர்வையும்—குளிரால் ஒடுங்கி நின்ற மயிலுக்கு அருமையான தன் போர்வையையும், தொல்லை—முன்னாளில், அளித்தாரை—கொடுத்தாரை, கேட்டறிதும்—கேட்டறிவோம். (ஆதலால்), சொல்லின் — சொல்லுமிடத்தில், அறிமடமும் — அறிமடமும், சான்றோர்க்கு அணி—சான்றோர்க்கு அழகேயாம்.

அறிமடம்—அறிந்தும் அறியார்போ னிருத்தல்.

புறப்பொருள் வெண்பாமாலையில்

"முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்—தொல்லை
இரவாம லீந்த இறைவர்போல் நீயும்
கரவாமல் ஈகை கடன்" என்றும்

சிறுபாணாற்றுப்படையில்

"வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திற லணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கட னுடன் பேகனும்

சுரும்புண
நறுவீ யுறைக்கும் நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரல்
பறம்பிற் கோமான் பாரியும்" என்றும்

புறநானூற்றில்

"இவரே, பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்"

"ஊருட னிரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்" என்றும்

"உடாஅ போரா அ ஆகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக் கீத்த எங்கோன்
கடாஅ யானைக் கலிமான் பேகன்"

"மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேகன்" என்றும்

இச்செய்தி குறித்திருக்கின்றது

75. எவரையும் பழியாமை

பல்லா ரவைநடுவண் பாற்பட்ட சான்றவர்
சொல்லார் ஒருவரையும் உள்ளூன்றப்—பல்லா
நிரைப்புறங் காத்த நெடியோனே யாயினும்
உரைத்தால் உரைபெறுதல் உண்டு. 345

(ப-பொ). நல்லோர் பலரும் கூடியிருக்கப்பட்ட அவை நடுவே நெறிப்பட்டொழுகும் சான்றவர் புன்சொல்லால் ஒருவரை மனத்தின்கண் தங்கச் சொல்லார்: பலவாகிய ஆநிரையைக் காத்த நெடியோனேயாகினும் பிறனொருவனை ஒருவடுச் சொன்னால் தாமும் அவனாலே வடுச்சொல் பெறுதல் உண்டு ஆதலான்.

(ப-ரை). பல் ஆநிரை புறங்காத்த நெடியோனே ஆயினும்—பலவாகிய பசுமந்தையைக் காத்த நெடியோனேயாகினும், உரைத்தால்—

(பிறனொருவனை) ஒரு வடுச் சொன்னால், உரைபெறுதல் உண்டு—(தாமும் அவனாலே) வடுச்சொல் பெறுதல் உண்டு. (ஆகையால்), பால்பட்ட சான்றவர்—நெறிப்பட் டொழுகும் சான்றவர், பல்லார் அவை நடுவண்—நல்லோர் பலரும் கூடியிருக்கும் சபைநடுவில், ஒருவரையும்—எவரையும், உள் ஊன்ற சொல்லார்—(புன்சொல்) மனத்தின் கண் தங்கும்படி சொல்லார்.

நிரைப்புறங் காத்த நெடியோன்—வாசுதேவன்.

(க—து). எவரேயாயினும் பிறரைப் பழித்தால் பிறர் அவரைப் பழிப்பார். ஆகையால் சான்ருேர் ஒரு சபையிலே ஒருவரையும் மனத்தில் தைக்கும்விதம் நிந்தைசொல்லார்.

## 76. மறைவிலும் தீவினை செய்யாமை

எனக்குத் தகவன்ருல் என்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் தானய்த் தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் தென்னவனும். காணர்
எனச்செய்யார் மாணு வினை. 102

(ப—பொ). எனக்கு இது தகுதியன்று என்பதனைப் பார்த்து, தான் செய்த குற்றந் தனக்குச் சான்று தானய்த் தான் பிறனொருவன் மனையாளைத் தனியிடத்தே பிடித்த குற்றத்தை நினைத்து, மற்றதற்குத் தண்டமாகத் தன்கையைத் தென்னவனும் குறைத்தானுதலால், பிறர் காணுரென்று தீவினைகளைச் செய்யார் நல்லார்.

(ப—ரை) தென்னவனும்—பாண்டியனும், எனக்கு தகவு அன்று என்பதே நோக்கி—இது எனக்குத் தகுதியன்று என்பதனைப் பார்த்து, தனக்குக் கரியாவான் தானய்—தான் செய்த குற்றத்துக்குச் சாட்சி தானேயாய், தவற்றை நினைத்து—(பிறனொருவன் மனையாளைத் தனியிடத்தே பிடித்த) குற்றத்தை நினைத்து, தன் கை குறைத்தான்—(அதற்குத் தண்டமாகத்) தன் கையை வெட்டினுன். (ஆதலால்), காணர் என—பிறர் காணுரென்று, மாணு வினை—தீவினைகளை, செய்யார்—(நல்லவர்) செய்யார்.

இச்செய்தி சிலப்பதிகாரம் கட்டுரைகாதையில்

"உதவா வாழ்க்கைக் கீரந்தை மனைவி
புதவக் கதவம் புடைத்தன ளொருநாள்.
'அரச வேலி அல்ல தியாவதும்
புரைதீர் வேலி இல்லென மொழிந்து
மன்றத் திருத்திச் சென்றீர் அவ்வழி.
இன்றவ் வேலி காவா தோ?'வெனச்
செவிச்சூட் டாணியிற் புகையழல் பொத்தி
நெஞ்சம் சுடுதலின் அஞ்சி நடுக்குற்று,
வச்சிரத் தடக்கை அமரர் கோமான்
உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை
குறைத்த செங்கோல் குறையாக் கொற்றத்
திறை"

என விரித்திருக்கின்றது. அஃதாவது:—

கீரந்தை என்னும் அந்தணனொருவன், "அரசன் நீதிமானாதலால் அஞ்சற்க" எனத் தன் மனையாட்டியைத் தேற்றிக் காசியாத்திரை சென்றபோது, அப்பார்ப்பனிக்கு யாதொரு தீங்கும் நேராதபடி அவளை யறியாமல் காத்துவாத பாண்டியன், அந்தணன் திரும்பியதை அறியாது, உள்ளே ஆணரவம் கேட்பதறிந்து கதவைத் தட்டினான். கதவைத் தட்டினவன் கள்வனோ என்று அந்தணன் அஞ்ச, அவன் மனைவி "நீர் யாத்திரை போனபோது, 'அரசனுடைய காவலன்றி வேறு காவல் இல்லை' யென்று சொல்லிப் போயினீரே. இப்போதும் அரசனுடைய காவல் காவாதோ?" என்றுளாக, அவ்வார்த்தை கேட்ட அரசன் அந்தணனுடைய ஐயத்தை அகற்றும்பொருட்டுக் கதவைத் தட்டிய தன் கையைக் குறைத்துவிட்டான்.

இது காரணம்பற்றி இவன் அரசாண்ட நகரம் கொற்கை என வழங்கப்பெற்றது என்பர். அப்பால் பொற்கை பெற்று நெடுநாள் ஆட்சிசெய்திருந்தனன் எனவும் பொற்கை என ஒரு நகரம் நிறுவினன் எனவும் கூறுகின்றனர்.

பழமொழி. — Do in the hole as thou wouldst do in the hall.

பிரதிபேதம்.—எனக்குத் தகவன் றெனப்படுதல் நோக்கி

77. தீயாரை விட்டு நீங்குதல்

தீப்பால் வினையினைத் தீரவும் அஞ்சாராய்க்
காப்பாரே போன்றுரைத்த பொய்குறளை—ஏய்ப்பார்முன்
சொல்லோ டொருப்படார் சோர்வின்றி மாறுபவே
வில்லோடு காக்கையே போன்று. 193

(ப—பொ). தீப்பான்மையுடைய செய்கையை மிகவும் அஞ்சாராய்த் தம்மைக் காப்பாரே போலச் சில உரைத்துப் பொய்யையும் குறளையையும் பொருந்திச் சொல்லுவார் முன்பு சொல்லும் சில இனிய சொற்களால் அவரைத் தம்மோடு நட்புக்கொள்ளாதே மறவியின்றியே மாறிநீங்குவர், வில்லோடு காக்கையே போன்று.

(ப—ரை). தீ பால் வினையினை—தீய தன்மையையுடைய செய்கையை, தீரவும் அஞ்சாராய்—மிகவும் அஞ்சாராய், காப்பாரே போன்று—தம்மைக் காப்பாரே போல, உரைத்த பொய் குறளை ஏய்ப்பார்—சில உரைத்துப் பொய்யையும் குறளையையும் பொருந்தச் சொல்லுவார், முன் சொல்லோடு—முன்பு சொல்லும் சில இனிய சொற்களால், ஒருப்படார்—அவரைத் தம்மொடு நட்புக்கொள்ளாதே, சோர்வு இன்றியே—மறவியின்றியே, மாறுப—மாறிநீங்குவா; வில்லோடு காக்கையே போன்று—வில்லைவிட்டு நீங்கும் காக்கையைப் போன்று.

(க—து). வில்லின் கொடுமையை அறிந்தபிறகு காக்கை அதனிடம் தங்காமல் நீங்குவதுபோல், தீயார் தீமையை அறிந்தபின் நல்லோர் அவரிடம் நெருங்கார்.

78. வெஃகாமை

மடங்கிப் பசிப்பினும் மாண்புடை யாளர்
தொடங்கிப் பிறருடைமை மேவார்.—குடம்பை
மடலொடு புட்கலாம் மால்கடற் சேர்ப்ப!
கடலொடு காட்டொட்ட வில். 372

(ப—பொ). தம்முடைய உடம்பு ஒடுங்கும்படி பசித்தாராயினும், மாட்சிமையைத் தமக்கு உடைமையாக உடையவர், பிறருடைய பொருளைத் தாம் கொள்ளத் தொடங்கி விரும்பார்: தாம் உறையும் கூடு பொருந்திய பனைமடல்களோடு புட்கள் விரவாநின்ற பெரிய கடற் சேர்ப்பனே! கடலோடு துரால் பொருந்துதல் இல்லாததே போல.

(ப—ரை). குடம்பை மடலொடு புள் கலாம் மால் கடல் சேர்ப்ப—(தாம் உறையும்) கூடு பொருந்திய (பனை) மடல்களோடு பறவைகள் விரவாநின்ற பெரிய கடற்சேர்ப்பனே! கடலொடு காடு ஒட்டல் இல்—கடலோடு துரால் பொருந்துதல் இல்லை. (அதுபோல), மடங்கி பசிப்பினும்—(தம்முடைய உடம்பு) ஒடுங்கும்படி பசித்தாராயினும், மாண்புடையாளர்—மாட்சிமையைத் தமக்கு உடைமையாக உடையவர், பிறர் உடைமை தொடங்கி மேவார்—பிறருடைய பொருளைத் தாம் கொள்ளத் தொடங்கி விரும்பார்.

காடு—துரால்—செத்தை—துரும்பு: "காட்டுக் களைந்து" என ஆசாரக் கோவையில் வருகின்றது.

(க—து). தன்னிடம் சேர்ந்த துரும்பைக் கடல் வைத்துக்கொள்ளா மல் ஒதுக்கிவிடுவதுபோல், தம்மிடம் வந்த பிறர் பொருளைப் பெரியோர் தாம் வைத்துக்கொள்ளாமல் நீக்கிவிடுவர்.

பழமொழி.—கடலிலே துரும்பு கிடந்தாலும் மனதிலே ஒரு சொல் கிடவாது.

79. உயர்ந்தோரிடத்துக் குற்றம்

நிரைதொடி தாங்கிய நீடோள்மாற் கேயும்
உரையொழியா வாகும். உயர்ந்தோர்கட் குற்றம்,
மரையாகன் றூட்டும் மலைநாட! மாயா:
நரையான் புறத்திட்ட சூடு. 48

(ப—பொ). நிரைத்த கடகத்தைத் தாங்கிய நீண்ட தோளையுடைய மால் குற்றத்தைச் செய்தானாயினும் அம்மானுக்குக் குற்றஞ்செய்தான் என்னும் உரை ஒருநா

ளும் ஒழியாவாகும். ஆதலால், நரையான் புறத்திட்ட சூடுபோல் உயர்ந்தோர் மாட்டுள்ள குற்றம் ஒருநாளும் மாயா: மரையா கன்றூட்டும் மலைநாடனே!

(ப—ரை). மரை ஆ கன்று ஊட்டும் மலைநாட—பெண்மான் கன்றை ஊட்டும் மலைநாடனே! நிரை தொடி தாங்கிய நீள் தோள் மாற்கேயும்—வரிசையாகக் கடகத்தை அணிந்த நீண்ட தோளையுடைய திருமாலுக்கேயாயினும், உரை—குற்றஞ்செய்தான் என்னும் வார்த்தை, ஒழியாவாகும்—ஒருநாளும் ஒழியாவாகும். (ஆதலால்), நரை ஆன்புறத்து இட்ட சூடு—வெண்மையாகிய மாட்டின்மேல் இட்ட சூடுபோல், உயர்ந்தோர் கண் குற்றம்—உயர்ந்தோரிடம் உள்ள குற்றம், மாயா—ஒருநாளும் மாயா.

(க—து). ரக்ஷககர்த்தாவே யாயினும் திருமால் இன்ன இன்ன அவதாரத்தில் இன்ன இன்ன குற்றம் செய்தான் என்கிற பழிச்சொல் ஒழிவதில்லை. வெள்ளை மாட்டின்மேல் இட்ட சூடு பலநாள் ஆனபிறகும் மறையாமைபோல், பெரியோர் செய்த குற்றம் மறைபடாது.

"பெருவரை நாட! பெரியார்கட் டீமை
கருநரைமேல் சூட்டேபோல் தோன்றும்"—நாலடியார்.

பழமொழி.—The fairer the paper, the fouler the blot.

80. சிறியார் பெரியார் குற்றங்கள்

கன்றி முதிர்ந்த கழியப்பன் னாள்செயினும்
ஒன்றும் சிறியார்கண் என்றானும்—தோன்றாதாம்.
ஒன்றாய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின்மேல் இட்ட விளக்கு. 204

(ப—பொ). வெகுண்டு முதிர்ந்த தீவினைகளை மிகப்பல நாள் செய்யினும், அவற்றுள் ஒரு குற்றமும் சிறியார் மாட்டு ஒன்றும் தோன்றாதாம். உயர்ந்தார்க்கு உளதாம் குற்றம், ஒன்றாயினும், குன்றின்மேல் இட்ட விளக்குப்போல் விளங்கும்.

(ப—ரை). கன்றி முதிர்ந்த—வெகுண்டு முதிர்ந்த செயல்களை, கழிய பல் நாள் செயினும்—மிகப் பல நாள் செயயினும், ஒன்றும்—அவற்றுள்

ஒரு குற்றமும், சிறியார்கண்—சிறியாரிடம், என்றானும்—எவ்வளவாகவும், தோன்றாது—தோன்றாது. உயர்ந்தார் படும் குற்றம்—உயர்ந்தார்க்கு உளதாகும் குற்றம், ஒன்று ஆய்விடினும்—ஒன்றேயாயினும், குன்றின் மேல் இட்ட விளக்கு-(அது) குன்றின்மேல் இட்ட விளக்குப்போல் விளங்கும். [ஆம்-அசை].

(க—து). சிறியோர் பல நாள் பல குற்றம் செயினும், அவைகளை எவரும் கவனிப்பதில்லை. பெரியோர் ஒரு குற்றம் செயினும், அது குன்றின்மே லிட்ட விளக்கைப்போல் யாவரும் அறிவதாகும்.

"கருநரையைக்
கொன்றன்ன இன்னா செயினும் சிறியார்மேல்
ஒன்றானும் தோன்றா கெடும்".—நாலடியார்.

சிந்தாமணி நாமகளிலம்பகம் 233—ம் பாட்டு "தோன்றினான் குன்றத்துச்சிச் சுடர்ப்பழி விளக்கிட்டன்றே" என இக்கருத்து உள்ளிட்டு வருகின்றது.

## 2. சான்றோர் செய்கை

### 81. பொருள் இன்றேனினும் ஒப்புரவு செய்தல்

ஈட்டிய ஒண்பொருள் இன்றெனினும் ஒப்புர
வாற்றும் மனைப்பிறந்த சான்றவன்.—ஆற்றவும்
போற்றப் படாதாகிப் புல்லின்றி மேயினும்
ஏற்றுக்கன் றேறாய் விடும். 217

(ப—பொ). தன்னால் ஈட்டிய ஒண்பொருள் இல்லையாயினும், குடிப்பிறந்த சான்றவன் ஒப்புரவினைப் பிறர்க்குச்செய்ய வல்லனாம். மிகவும் பிறரால் பாதுகாக்கப் படாதாகித் தின்னும் புல்லு மின்றி யாதானும் ஒன்றை மேயினும், நல்ல ஏற்றிற்குப் பிறந்த கன்று பின்னையும் ஏறாகிவிடும்.

(ப—ரை). ஏற்றுக் கன்று—நல்ல எருதிற்குப் பிறந்த கன்று, ஆற்றவும் போற்றப்படாதாகி—மிகவும் பிறரால் பாதுகாக்கப்படாதாகி, புல் இன்றி—தின்னும் புல்லும் இன்றி, மேயினும்—யாதாயினும் ஒன்றை

மேயினும், ஏறு ஆய்விடும்—பின்னையும் எருதாகிவிடும். மனை பிறந்த சான்றவன்—குடிப்பிறந்த சான்றவன், ஈட்டிய ஒண்பொருள் இன்று எனினும்—தான் தேடிய மிக்க பொருள் இல்லையாயினும், ஒப்புரவு ஆற்றும்—ஒப்புரவினைப் பிறருக்குச் செய்யவல்லனும்.

ஒப்புரவு—உலகநடை—இது அறநூல்களுள் கூறப்படுவதின்றித் தாமே அறிந்து செய்யும் தன்மையது. ஒப்புரவு என்பது ஒப்பு ஊர்தல்: அதாவது மேலோர் மேற்கொண்டொழுகும் நடையை மேற்கொண்டு நடத்தல்: முறைமை—கடமை—கடப்பாடு. இக்கடப்பாடு கைம்மாறு வேண்டாமல் செயற்பாலன செய்தலாம்.

"எவ்வம் உழந்தக் கடைத்தும் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை".—நாலடியார்.

## 82. கடன்பட்டும் ஒப்புரவு செய்தல்

அடர்ந்து வறியராய் ஆற்றாத போழ்தும்
இடங்கண் டறிவாமென் றெண்ணி யிராஅர்.
மடங்கொண்ட சாயல் மயிலன்னாய்! சான்றோர்
கடங்கொண்டும் செய்வார் கடன். 216

(ப—பொ). வறுமையால் அடர்க்கப்பட்டு வறுமையராய் ஒருவர்க்கு ஒன்றைச் செய்யவே மாட்டாத காலத்தும், 'நமக்குச் செய்யலாங் காலம் கண்டால் ஒப்புரவு செய்வேம்' என்றெண்ணி ஒப்புரவு செய்யாதிராதே, மடங்கொண்ட சாயல் மயிலன்னாய்! சான்றோரா யுள்ளார் வேறொருவர் கையில் தனிசு கொண்டாயினும் தாம் செய்யக் கடவனவற்றைச் செய்வர்.

(ப—ரை). மடம்கொண்ட—மடமாகிய குணம் கொண்ட, சாயல்—அழகுள்ள, மயில் அன்னாய்—மயில்போன்றவளே! சான்றோர்—சான்றோராயுள்ளோர், அடர்ந்து வறியராய்—வறுமையால் நெருக்கப்பட்டு எளியராய், ஆற்றாத போழ்தும்—ஒருவர்க்கு ஒன்றைச் செய்யவேமாட்டாத காலத்தும், இடம் கண்டு அறிவாம்—தமக்குச் செய்யக்கூடிய காலம் வந்தால் ஒப்புரவு செய்வோம், என்று எண்ணி இரார்—என்

றெண்ணி ஒப்புரவு செய்யாதிரார்: கடம் கொண்டும்—வேறொருவர் கையில் கடன் வாங்கியாயினும், கடன் செய்வார்—தாம் செய்யக்கடவன வற்றைச் செய்வர்.

"கடங்கொண்டும் செய்வன செய்த லினிதே". இனியவை நாற்பது.

"இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்."—திருக்குறள்.

"நரம்பெழுந்து நல்கூர்ந்தா ராயினும் சான்றோர்
குரம்பெழுந்து குற்றங்கொண் டேறார்—உரங்கவறா
உள்ளமெனு நாரினால் கட்டி உளவரையால்
செய்வர் செயற்பா லவை".—நாலடியார்.

பிரதிபேதம்.—செய்வ கடன்.

## 83. நடுவுநிலைமையில் நின்று மெய்பேசுதல்

மொய்கொண் டெழுந்த அமரகத்து மாற்றார்வாய்ப்
பொய்கொண் டறைபோய்த் திரிபவர்க் கென்கொலோ?
மையுண் டமர்ந்தகண் மாணிழாய்! சான்றவர்
கையுண்டும் கூறுவர் மெய். 241

(ப—பொ). ஒருவரு மொருவரும் தம்முள் மாறு கொண்டு போர்செய்யத் தொடங்கிய போரிடத்து, அவருள் ஒரு பக்கத்தாருடைய மாற்றரசர் "எமக்காக நின்றால் ஒரு சிறப்புச் செய்கின்றேம்" என்ற பொய்யைக் கேட்டுக் கீழற்று, மற்றவர்க்காகப் போய்த்திரியும் கீழ் மக்கட்கு மெய்யுரையால் என்ன பயன் உண்டாம்? மையுண்டு முகத்துக்குப் பொருந்திய கண்ணையும் மாட்சிமைப்பட்ட ஆபரணத்தையும் உடையாய்! அமைந்த அறிவுடையார் பிறர் கைப்பொருளை உண்டாராயினும், அவர்க்காக ஒருபொய் சொல்லார்; நடுவு நின்று மெய் சொல்லுவர்.

(ப—ரை). மை உண்டு அமர்ந்த கண் மாண் இழாய்—மையுண்டு முகத்துக்குப் பொருந்திய கண்ணையும் சிறந்த ஆபரணத்தையும் உடையாய்! மொய்கொண்டு எழுந்த அமர் அகத்து—(ஒருவரும் ஒருவரும்)

தம்முள் பகைகொண்டு போர்செய்யத் தொடங்கிய போரிடத்து, மாற்றார்வாய் பொய் கொண்டு—பகையரசர் (எமக்காக நின்றால் ஒரு சிறப்புச் செய்கிறோம் என்ற) பொய்யைக் கேட்டு, அறைபோய் திரிப வர்க்கு—கீழறுத்து அவர்க்காகப் போய்த் திரியும் கீழ்மக்கட்கு, என்—மெய்யுரையால் என்ன பயன் உண்டு? சான்றவர்—பெரியோர், கை உண்டும்—பிறருடைய கைப்பொருளை உண்டாராயினும், மெய் கூறுவர்—(அவர்க்காக ஒரு பொய் சொல்லார்: நடுவுநின்று) மெய் சொல்லுவர். [கொல்—ஓ—அசை].

அறைபோதல்—கீழறுத்தல்—அரசனைவிட்டுப் பகையரசனை அடைதல்.

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி".—திருக்குறள்.

## 84. குற்றஞ்செய்த நண்பினரைத் திருத்தல்

ஆண்டீண் டெனவொன்றோ வேண்டா அடைந்தாரை.
மாண்டிலா ரென்றே மறைப்பக் கிடந்ததோ?
பூண்டாங் கிளமுலைப் பொற்றொடி! பூண்ட
பறையறையா ராயினா ரில். 112

(ப—பொ). அன்றொரு குற்றம் செய்தாரென்று அடைந்தாரைச் சொல்லவேண்டா. அவர்கள் மாட்சிமை உடையா ரல்லரென்று நட்புத்தவிர்கைக்குக் கிடந்த தொரு நீதி உண்டோ? பொறுத்து நட்பாகவே கொண்டு வேண்டுவன செய்க. பொற்றொடி! தாம் பூண்ட பறையை அறையாது இடையே தவிர்ந்தார் இல்லை, ஆகலான்.

(ப—ரை). பொற்றொடி—பொற்றொடி உடையாய்! பூண்ட பறை அறையாராயினார் இல்—தாம் பூண்ட பறையை அறையாது இடையே தவிர்த்தார் இல்லை. (ஆதலான்), ஆண்டு ஈண்டு என அடைந்தாரை ஒன்று ஓ வேண்டா—அன்றொரு குற்றம் செய்தாரென்று அடைந்தா

ரை ஒன்றும் சொல்லவேண்டா. மாண்டிலார் என்று மறைப்ப கிடந்ததோ—அவர்கள் மாட்சிமையுடையா ரல்லரென்று நட்பை விடுதற்குக் கிடந்ததொரு நீதி உண்டோ? (ஒறுத்து நட்பாகவே கொண்டு வேண்டுவன செய்க).

(க—து). தாம் பூண்ட பறை குற்றமுடையதென்று அறையாமல் இடையே தவிர்ப்பாரில்லை தாம் நட்பாகக் கொண்டவர் மாட்சிமையில்லாதவரென்று, அவருடைய நட்பைத் தவிர்த்தலாகாது பறையைத் திருத்தி நன்றாகக் கொள்வதுபோல், அவரை ஒறுத்து நட்பாகக் கொண்டு வேண்டுவன செய்க.

"தமரென்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தா ராயின் அவரைத்
தமரினு நன்கு மதித்துத் தமரன்மை
தம்மு ளடக்கிக் கொளல்".—நாலடியார்.

"நல்லா ரெனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினும் அடக்கிக் கொளவேண்டும்".—நாலடியார்.

பிரதிபேதம்.—மாண்டில ரென்று மறுப்பக்......பறையறையார் போயினரில்.

## 85. நற்குணமில்லாத நண்பினோர்க்கும் நன்மை செய்தல்

பரியப் படுபவர் பண்பிலா ரேனும்
திரியப் பெறுபவோ சான்றோர்.—விரிதிரைப்
பாரெறியும் முந்நீர்த் துறைவ! கடனன்றே
ஊரறிய நட்டார்க் குணு? 101

(ப—பொ). தம்மால் காதலித்துப் பாதுகாக்கப்படுவார் குணமில்லாராயினும், சான்றோர் தமது தன்மையின் வழுவப்பெறார். விரிதிரை பாரில் எறியும் முந்நீர்த் துறைவனே! ஊரிலுள்ளார் எல்லாரும் அறியத் தம்மோடு உறவுசெய்தார்க்கு உணுக்கொடுக்கை கடனன்றோ?

(ப—ரை). விரிதிரை பார் எறியும் முந்நீர் துறைவ—அகன்ற அலைகள் பாரி லெறியும் கடற்றுறைவனே! பரியப்படுபவர்—தம்மால் விரும்பிப்

பாதுகாக்கப்படுபவர், பண்பு இலாரேனும்—குணம் இல்லாராயினும், சான்றோர்—சான்றோர், திரிய பெறுபவோ—தமது தன்மையின் வழு வப்பெறுர். ஊர் அறிய நட்டார்க்கு உணு கடன் அன்றோ—ஊரி லுள்ளார் எல்லாரும் அறியத் தம்மோடு உறவுசெய்தார்க்கு உணவு கொடுக்கை கடனன்றோ.

(க—து). நட்டார் குணமில்லாராயினும் பெரியோர் அவர்களுக்கு நன்மை செய்வதன்றி வேறு செய்யார்.

## 86. பகைவரிடத்தும் கண்ணோடுதல்

தெற்றப் பகைவ ரிடர்ப்பாடு கண்டக்கால்
மற்றுங்கண் ணோடுவர் மேன்மக்கள்.—தெற்ற
நவைக்கப் படுந்தன்மைத் தாயினும் சான்றோர்
அவைப்படின் சாவாது பாம்பு. 313

(ப—பொ). தெளியத் தமக்குப் பகைவராயினுர் மிக வும் இடர்ப்படுவதனைக் கண்டவிடத்து, முன்பு தமக்கு எல்லாப் பிழையும் செய்தாராயினும், மீண்டும் கண் ணோட்டம் செய்வார் குடிப்பிறந்தோர்: தெளியத் துயர் செய்யப்படும் தன்மைத்தாயினும் சான்றவ ரவைக்களம் புகின் பாம்பு சாவாத வாறுபோல.

(ப—ரை). தெற்ற நவைக்கப்படும் தன்மைத்து ஆயினும்—தெளியத் துயர் செய்யப்படும் தன்மையுடைய தாயினும், பாம்பு—பாம்பானது, சான்றோர் அவை படின்—சான்றவர் கூட்டத்தில் புகுந்தால், சாவாது—சாவாது. (அதுபோல), தெற்ற பகைவர் இடர்ப்பாடு கண்டக்கால்—தெளியத் தமக்குப் பகைவராயினுர் மிகவும் இடர்ப்படுவதனைக் கண் டால், மற்றும்—முன்பு தமக்குப் பல பிழையும் செய்தவராயினும், கண்ணோடுவர்—மீண்டும் கண்ணோட்டம் செய்வர், மேன்மக்கள்—குடிப் பிறந்தோர்.

பிரதிபேதம்.—கண்டக்கண்.

"போராண்மை யென்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு".—திருக்குறள்.

"தாங்காச் சினத்தொடு காட்டி உயிர்செகுக்கும்
பாம்பும் அவைப்படில் உய்யுமாம்"—கெய்தற்கலி.

பழமொழி.— கல்லவர் கண்ணில் நாகம் அகப்பட்டாலும் கொல்லார்.

## 87. சிறியாரிடத்தும் சேர்ந்து வாழ்தல்

இறப்ப எமக்கீ திழிவரவென் றெண்ணூர்,
பிறப்பிற் சிறியாரைச் சென்று—பிறப்பினுல்
சாலவு மிக்கவர் சார்ந்தடைந்து வாழ்பவே:
தால வடைக்கலமே போன்று. 198

(ப—பொ). மிகவும் இச்செயல் எமக்கு இளிவரவென்று பாராது, குடிப்பிறப்பால் சிறியாரைக் குடிப்பிறப்பினுல் மிகவும் பெரியார் சென்று சார்ந்தடைந்து வாழ்தல் குற்றமில்லை, ஒருவர்மாட்டு வைத்த தால வடைக்கலமே போன்று ஒளிமழுங்கியாயினுமே.

(ப—ரை). பிறப்பினுல் சாலவும் மிக்கவர்—குடிப்பிறப்பினுல் மிகவும் பெரியார், சென்று—போய், பிறப்பின் சிறியாரை சார்ந்து அடைந்து—பிறப்பால் சிறியாரைச் சார்ந்தடைந்து, ஈது எமக்கு இறப்ப இழிவரவு என்றெண்ணூர்—இச்செயல் எமக்கு மிகவும் இழிவைத் தருவது என்று பாராமல், தால அடைக்கலமே போன்று—ஒருவரிடம் வைத்த தாலவடைக்கலமே போல், வாழ்ப—(ஒளிமழுங்கியாயினும்) வாழ்வர். (அதனுல் குற்றம் இல்லை). [முதல் ஏ—அசை].

தாலம் என்னும் பலபொருளொருசொல் இங்கு நிலம் குறித்து நின்றது.

(க—து). உடையவனிடத்தில் பொலிவுற்றிருந்த நிலம் அடைக்கலமாக வைக்கப்பெற்றவனிடத்தில் ஒளிமழுங்கியிருக்கும். வறுமையோ காரியமோ காரணமாய்ப் பிறப்பின் மிக்கார் பிறப்பிற் சிறியாரிடம் அமைந்து (ஒளிமழுங்கி) வாழ்வதை இழிவாக எண்ணூர், "கரும வரிசையால் கல்லாதார் பின்னும், பெருமை யுடையாரும் சேறல்—அருமரபின், ஓத மாற்றும் ஒலிகடற் றண்சேர்ப்ப! பேதைமை யன்றதறிவு" ஆதலான்.

88. சிறியாரினமாய் ஒழுகுதல்

பெரிய குடிப்பிறந் தாரும் தமக்குச்
சிறியா ரினமா யொழுகுதல்,—எறியிலே
வேலொடு நேரொக்கும் கண்ணாய்! அஃதன்றோ
பூவொடு நாரியைக்கு மாறு. 356

(ப—பொ). பெரிய குடிப்பிறந்தவர்களும் தமக்குக் கீழ்மக்கள் இனமாய் ஒழுகுதல், எறியிலே வேலோடு நேரொக்கும் கண்ணாய்! அதுவன்றோ பூவோடு நாரைச் சேர்க்கு நெறி.

(ப—ரை). எறி—ஒளிவீசும், இலே—இலேபோல் அச்சமான, வேலொடு—வேலோடு, நேர் ஒக்கும்—நேராக ஒக்கும், கண்ணாய்—கண்ணை யுடையாய்! பெரிய குடிபிறந்தாரும்—உயர்ந்த குடியிலே பிறந்தவர்களும், சிறியார் தமக்கு இனமாய் ஒழுகுதல் அஃது—கீழ்மக்கள் தமக்கு இனமாக ஒழுகுதலான அச்செய்கை, பூவொடு நார் இயைக்கும் ஆறு அன்றோ—பூவோடு நாரைச் சேர்க்கும் நெறி அன்றோ.

(க—து). பூவோடு சேர்ந்த நார் மணம் பெறுவதுபோல், குடிப்பிறந்தாரோடு சேர்ந்த சிறியார் நற்குணம் பெறுவர்.

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட புன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே."

—கம்பராமாயணம்.

89. சிறியார் செல்வமும் பெரியார் வறுமையும்

சிறியவ ரெய்திய செல்வத்தின் மாணப்
பெரியவர் நல்குரவு நன்றே.—தெரியின்
மதுமயங்கு பூங்கோதை மாணிழாய்! மோரின்
முதுநெய்தீ தாகலோ வில். 70

(ப—பொ). கீழ்மக்கள் பெற்ற செல்வத்தின் மாட்சிமைப்பட்ட பெரியோர் பெற்ற வறுமை உலகத்துப் பயன்படும்: ஆராய்வேமாயின், தேன்மிடைந்த பூங்கோதையை யுடைய மாணிழாய்! மோர்போலப் பழைய நெய் தீதாகமாட்டாது, நன்றேயாம், அதுபோல.

(ப—ரை). மது மயங்கு—தேன் மிக்க, பூ கோதை—பூமாலையும், மாண் இழாய்—மாட்சிமைப்பட்ட ஆபரணமும் உடையாய்! தெரியின்—ஆராய்வோமாயின், மோரின்—மோர்போல, முதுநெய்—பழைய நெய், தீது ஆதலோ இல்—தீதாவதில்லை (நன்றேயாம்). சிறியவர் எய்திய செல்வத்தின்—கீழ்மக்கள் பெற்ற செல்வத்தைக்காட்டிலும், மாண பெரியவர் நல்குரவு ஏ—மாட்சிமைப்படப் பெரியராயினார் பெற்ற வறுமையே, நன்று—உலகத்தில் பயன்படும்.

(க—து). மோர் பழையதாய்க் கெட்டால் உதவாது; அற்பர் செல்வங்கெட்டால் கவைக்காகார். நெய் பழையதாயினும் கெடாது நன்றேயாம்; பெரியோர் கெட்டாலும் நன்மைசெய்வர்.

வியாதியால் உடல்மெலிந்தோர்க்கு மோர் கெடுதிசெய்யும்; சிறியோர்க்குச் செல்வம் கெடுதிசெய்யும். நெய் எல்லார்க்கும் நன்மை செய்யும்; பெரியோருடைய வறுமைதானும் அவர்க்கும் பிறர்க்கும் தீமைசெய்யாது நன்மையே செய்யும.

பெரியோர் வறுமையடைந்த காலத்தும் செய்தற்குரிய கடன்களைச் செய்தலாலும், சிறியோர் செல்வமடைந்த காலத்தும் அவற்றைச் செய்யாமல் தீயவற்றையே செய்தலாலும், இவர் செல்வத்தினும் அவர் வறுமை நன்மை தருவதாகும்.

செல்வம் சிறியாரைக் கெடுக்க வறுமை பெரியாரைக் கெடாது நிற்றலால்

"நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்ட திரு."—திருக்குறள்.

என்ற கருத்தே இச்செய்யுளின் கருத்தாம்.

"எறிநீர்ப் பெருங்கடல் எய்தி யிருந்தும்
அறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர்.
மறுமை யறியாதா ராக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை."—நாலடியார்.

"மிகப்பே ரெவ்வம் உறினும் எனைத்தும்
உணர்ச்சி யில்லோர் உடைமை உள்ளேம்.
நல்லறி வுடையோர் நல்குர
வுள்ளுதும் பெருமையாம் உவந்துநனி பெரிதே."—புறம்.

## 3. கீழ்மக்களியல்பு

**90. இனநலம் பெற்றும் மனநலம் பெறுமை**

*மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்*
*உப்பொழிதல் செல்லா ஒலிகடல்போல்—மிக்க*
*இனநலம் நன்குடைய வாயினும் என்றும்*
*மனநல மாகாவாம் கீழ்.* 11

(ப—பொ). மிகப் பெருகி ஆறுகளின் மிகுநீர் புகப் பாய்ந்தாலும், ஒலிகடல் உவர்ப்பு நீங்காத வாறுபோல, மிக்க இனத்தின் நன்மை மிக உண்டாயினும், எஞ்ஞான்றும் மனத்தால் நல்லவ ராகமாட்டார் கீழ்மக்கள்.

(ப—ரை). மிகு புனல்—(ஆறுகளின்) மிகுதலான நீர், மிக்கு பெருகி பாய்ந்தாலும்—மிகப் பெருகி வந்து பாய்ந்தாலும், ஒலிகடல்—ஒலிக்கின்ற கடல், உப்பு ஒழிதல் செல்லா(து)—உவர்ப்பு நீங்கப் பெறாது. போல்—அது போல, மிக்க இனம் நலம்—மிக்க இனத்தின் நன்மை, நன்கு உடையவாயினும்—மிகவும் உள்ளவராயினும், கீழ்—கீழ்மக்கள், என்றும்—எக்காலத்தும், மனம் நலம் ஆகா—மனத்தால் நல்லராகமாட்டார். [ஆம்—அசை].

(க—து) பல ஆறுகளின் நன்னீர் இடைவிடாமல் பாயப் பெறினும், கடலினீர் உவர்ப்பு நீங்கி நன்னீ ராவதில்லை. அங்ஙனமே, பல நல்லோருடைய நன்மை இடைவிடாமல் கிடைக்கப்பெற்றும், கீழோர் தீமை நீங்கி நல்ல மனத்தினர் ஆவதில்லை.

"தத்தம்
இனத்தனைய ரல்லர் எறிகடற்றண் சேர்ப்ப
மனத்தனையர் மக்களென் பார்.—நாலடியார்.

**91. பெரியரோடு சேர்ந்தாலும் பெரிய ராகாமை**

*தக்காரோ டொன்றித் தமராய் ஒழுகினும்*
*மிக்காரா லென்று சிறியாரைத் தாம்தேறார்.*
*கொக்கார் வளவய லூர! தினலாமோ*
*அக்காரம் சேர்ந்த மணல்.* 18

(ப—பொ). தக்காரோடு பொருந்தி மற்றவர்க்கு உறவாய் ஒழுகினு ராதலால் அவருடைய மிக்க குணத்தையுடையார் இவரென்று கருதிச் சிறியகுணத்தை யுடையாரைத் தாம் தேறலாகாது. மாஞ்சோலையால் நிறையப்பட்ட வளவயல் ஊரனே! அக்காரமாகிய பாகினோடு சேர்ந்த மணலைத் தின்னலாமோ, ஆதலான்.

(ப—ரை). கொக்கு—மாஞ்சோலை, ஆர்—நிறைந்த, வளவயல்—வளமாகிய வயல்களையுடைய, ஊர—ஊரனே! தக்காரோடு ஒன்றி—தக்காரோடு பொருந்தி, தமராய் ஒழுகினுர்—(அவர்க்கு) உறவாய் ஒழுகினுர் (ஆதலால்), மிக்கார் என்று—மிக்க குணத்தை யுடையார் (இவர்) என்று கருதி, சிறியாரை—சிறிய குணத்தை யுடையாரை, தாம் தேறுர்—தாம் தெளிந்து நட்புக்கொள்ளார். அக்காரம் சேர்ந்த மணல் தினலாமோ—அக்காரமாகிய பாகினோடு சேர்ந்த மணலைத் தின்னலாமோ? [ஆல்—அசை].

(க—து). சர்க்கரை உண்பவர் அதனோடு கலந்துள்ள மணலை நீக்கிவிடுவரேயன்றி அதனைச் சர்க்கரையோ டொப்ப உண்ணுர். அதுபோல, அற்பர் பெரியாரோடு சேர்ந்திருந்தாலும், அவர்களை அற்பரென் றொழிப்ப தல்லது பெரியாரோ டொப்பக் கொள்ளார்

பழமொழி.—சர்க்கரையும் மணலும் சரியாமா?

92. பெரியார் செய்வன சிறியார் செய்யலாகாமை

தந்தொழி லாற்றும் தகைமையார் செய்வன
வெந்தொழில ராய வெகுளிகட்குக் கூடுமோ?
மைந்நிறை கொண்ட மலைமார்ப! ஆகுமோ
நந்துழுத வெல்லாம் கணக்கு. 245

(ப—பொ). தம் தொழில்களை ஆற்றி முடிக்கவல்ல தன்மையார் செய்வன, வெய்ய தொழிலாராய வெகுளிகட்கும் செய்யக்கூடுமோ? வலி தங்கிய மலை மார்பனே! நத்தை உழுது வரைந்ததெல்லாம் எழுத்தாகவே அறியாதார்க்குத் தோன்றும், அதுபோல.

(ப-ரை). மைந்து—வலிமை, இறைகொண்ட—தங்கிய, மலைமார்ப—மலைபோலும் மார்பனே! தம் தொழில்—தம் தொழில்களை, ஆற்றும் தகைமையார்—செய்து முடிக்கவல்ல தன்மையார், செய்வன—செய்யும் காரியங்கள், வெங்தொழிலர் ஆய வெகுளிகட்கு—கொடுந்தொழிலராகிய வெகுளிகளுக்கும், கூடுமோ—செய்யக்கூடுமோ? நந்து உழுத எல்லாம்—நத்தை உழுது வரைந்தவெல்லாம், கணக்கு ஆதமோ—(அறியாதார்க்கு எழுத்தாகத் தோன்றுவ தல்லது) அறிந்தார்க்கு எழுத்தாகுமோ.

(க—து) மேன்மக்கள் செய்யும் காரியம் கீழ்மக்களுக்குச் செய்யக் கூடுமா?

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்" —திருக்குறள்.

## 93. உரைத்தாலும் உணர்வு தோன்றாமை

பூத்தாலும் காயா மரமுள: மூத்தாலும்
நன்கறியார் தாமு நனியுளர் பாத்தி
விதைத்தாலும் நாறாத வித்துள: பேதைக்
குரைத்தாலும் தோன்றா துணர்வு. 399

(ப—பொ). பூத்தவிடத்தும் காயாமலிருக்கும் பாதிரி முதலாகிய மரங்கள உள. மக்கள் மூத்தவிடத்தும் கருமஞ்செய்யும் நன்மையை அறியாதார் மிகவும் உண்டு. பகுதிபண்ணி விதைத்தவிடத்தும் முளையாத வித்துக்களும் உண்டு: அதுபோல, அறிவில்லாதார்க்கு அநேகமுகமாகப் பொருள்களைச் சொன்னாலும், அப்பொருளுணர்வு உண்டாகாது.

(ப—ரை). பூத்தாலும்—பூத்தவிடத்தும், காயா—காய் விடாத, மரம்—பாதிரி முதலாகிய மரங்கள், உள—உள்ளன: (அதுபோல), மூத்தாலும்—மூத்தவிடத்தும், நன்கு அறியார் உம்—கருமம் செய்யும் நன்மையை அறியாத மக்களும், நனி உளர்—மிகவும் உளர்.

பாத்தி—(பதர் முதலியன நீக்கிப்) பகுதிபண்ணி, விதைத்தாலும்—விதைத்தவிடத்தும், நாறாத—முளையாத, வித்து—வித்துக்களும், உள—உண்டு. (அதுபோல), பேதைக்கு—அறிவில்லாதார்க்கு, உரைத்தும்

னும்—பல விதமாகப் பொருளைச் சொன்னாலும், உணர்வு—அப்பொருளுணர்வு, தோன்றாது—உண்டாகாது. [தாம்—அசை.]

"கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினும்—கீழ்தன்
மனம்புரிந்த வாறே மிகும்."—நாலடியார்.

பூவாது காய்க்கு மரம் வடமொழியில் வநபதி என்றும் வானபத்தியம் என்றும் வழங்கும்: பலா முதலியன:

இக்கருத்தை இவ்விதமாகவே வேறு ஆசிரியர்களும் பாடியிருக்கின்றனர்.

"பூத்தாலுங் காயா மரமுள. நன்றறியார்
மூத்தாலு மூவார்நூல் தேற்றாதார்.—பாத்திப்
புதைத்தாலும் நாறாத வித்துள. பேதைக
குரைத்தாலும் செல்லா துணர்வு".—சிறுபஞ்சமூலம்.

"பூவாது காய்க்கு மரமுள. நன்றறிவார்
மூவாது மூத்தவர் நூல்வல்லார்.—தாவா
விதையாமை நாறுவ வித்துள. மேதைக்
குரையாமை செல்லு முணர்வு"—சிறுபஞ்சமூலம்.

"பூவாதே காய்க்கு மரமுமுள. மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே, பேதைக்
குரைத்தாலும் தோன்றா துணர்வு".—நல்வழி.

## 94. கொண்டது விடாமை

ஓர்த்த கருத்தும் உணர்வும் உணராத
மூர்க்கர்க்கு யாதும் மொழியற்க.—மூர்க்கன்றான்
கொண்டதே கொண்டு விடானாகும். ஆகாதே
உண்டது நீலம் பிறிது. 168

(ப—பொ). தான் ஓர்த்த கருத்தினையும் உலகொழுக்கத்தினையும் அறியாத மூர்க்கர்க்கு மனத்தால் இகழ்ச்சியின்றி இகழ்ந்ததுபோல நகையாடி உரைக்கும் உரையைத் தவிர்க. அம்மூர்க்கன் தான் கொண்டதனையே

மனத்தின்கண் கொண்டு விடானாகும்: நீல நிறத்தை உண்டதொன்று பிறிதொரு நிறம் ஆகாது, அதுபோ லும்.

(ப—ரை). ஓர்த்த—தான் ஆராய்ந்து தெளிந்த, கருத்தும்—கருத்தினை யும், உணர்வும்—உலகவொழுக்கத்தினையும், உணராத மூர்க்கர்க்கு—அறி யாத மூர்க்கருக்கு, யாதும் மொழியற்க—யாதொன்றும் உரையாமல் தவிர்க. நீலம் உண்டது பிறிது ஆகாது—நீல நிறத்தை உண்ட பொருள் வேறு நிறம் ஆகாது. (அதுபோலும்), மூர்க்கன்—மூர்க்கன், தான் கொண்டதே கொண்டு—தான் கொண்ட அதனையே மனத்தின்கண் கொண்டு, விடானாகும்—விடான். [ஏ-அசை].

"தன்சொல்லே மேற்படுப்பான் தண்டி தடிபிணக்கன்
புன்சொல்லே போதரவு பார்த்திருப்பான்—இன்சொல்லை
என்றிருந்தும் கேளாத ஏழை எனவிவர்கட்
கான்றவர்கள் கூறார் அறம்.—அறநெறிச்சாரம்.

"காணாதாற் காட்டுவான் தான்காணான். காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு."—திருக்குறள்.

பழமொழி.—மூர்க்கரும் முதலையும் கொண்டது விடா. கறுப்பு வெளுப்பாகாது கசப்பு இனிதாகாது.

95. இயற்கை மாறாமை

தெற்ற ஒருவரைத் தீதுரை கண்டக்கால்
இற்றே அவரைத் தெளியற்க.—மற்றவர்
யாவரே யாயினும் நன்கொழுகார். கைக்குமே
தேவரே தின்னினும் வேம்பு. 114

(ப—பொ). தெளிய ஒருவரை ஒருவர் தீதுரைக்கும் உரையைக் கேட்டால், அத்தீதுரைக்கின்ற அவரை நம் மையும் இப்பெற்றியே உரைப்பரென்று உறவாகத் தேறு தொழிக. யாவரே நட்புக் கொண்டாராயினும் மற்றவர் நன்கொழுகார். தேவரே தின்றாராயினும் வேம்பு கைக் கும், அதுபோல.

(ப—ரை). தெற்ற ஒருவரை தீதுரை கண்டக்கால்-தெளிய ஒரு வரை ஒருவர் பொல்லாங்குரைக்கும் உரையைக் கேட்டால், அவரை— பொல்லாங்குரைக்கின்ற அவரை, இற்றே தெளியற்க—நம்மையும் இப் பெற்றியே உரைப்பரென்று உறவாக நம்பாதொழிக. தேவரே தின் னினும் வேம்பு கைக்கும்—தேவரே தின்றாராயினும் வேம்பானது கசக் கும். (அதுபோல), யாவரே ஆயினும் அவர் நன்கு ஒழுகார்—யாவரே நட்புக்கொண்டாராயினும் அவர் நன்றாக ஒழுகார். [மற்று—அசை].

(க—து). தேவர் தின்றாலும் வேம்பின் இயற்கை மாறாது: நல்லோர் நட்டாலும், பிறரை நிந்தைகூறும் தீயோ ரியற்கை மாறாது. ஆகையால் தீயவரை உறவாக நம்பாதொழிக.

பிரதிபேதம்.—எற்றே அவரைத் . . . மற்றவர்வாய், யாவ ரே வேண்டினும் நன்கொழுகார்.

"தக்காரும் தக்கவ ரல்லாரும் தந்நீர்மை
எக்காலும் குன்றல் இலராவர்.—அக்காரம்
யாவரே தின்னினும் கையாதாம்: கைக்குமாம்
தேவரே தின்னினும் வேம்பு"—நாலடியார்.

96. தீயொழுக்கம் திருந்தாமை

காடுறை வாழ்க்கைக் கருவினை மாக்களை
நாடுறைய நல்கினும் நன்கொழுகார்.—நாடோறும்
கையுள தாகி விடினும் குறும்பூழ்க்குச்
செய்யுள தாகு மனம். 121

(ப—பொ). காடுறையும் வாழ்க்கையையுடைய கொ லைத்தொழிலையுடைய மாக்களை நாட்டின்கண் உறைய ஒருவர் நல்கினும், கொலைத்தொழில் முதலானவற்றைத் தவிர்ந்து நன்றாக ஒழுகமாட்டார்: நாடோறும் கையுளே மருவி வளரினும் குறும்பூழ்க்குச் செய்யின்கண்ணே உறையவேண்டும் மனமே உள்ளதுபோல.

(ப—ரை). நாள்தொறும் கை உளதாகிவிடினும்—நாடோறும் கையு ளே பொருந்தி வளர்ந்தாலும், குறும்பூழ்க்கு—காடைக்கு, மனம்—மனமா

னது, செய் உளதாகும்-வயலில் வசிப்பதிலேயே பொருந்தியிருக்கும். (அதுபோல), காடு உறை வாழ்க்கை கருவினை மாக்களை—காட்டில் வசிக்கும் வாழ்க்கையையுடைய கொலைத்தொழிலை மேற்கொண்ட மாக்களை, நாடு உறைய நல்கினும்—நாட்டின்கண் வசிக்க ஒருவர் இடங் கொடுத்தாலும், நன்கு ஒழுகார்—(கொலைதொழில் முதலானவற்றை ஒழித்து) நன்றாக ஒழுகமாட்டார்.

(க—து). கீழ்மக்களை எவ்விடத்தில் கொண்டு வைத்தாலும் நல்லொழுக்கம் உண்டாகாது: சன்மவாசனை நீங்குவது அரிது. என்ன செய்தாலும் கீழ்மக்கள் திருந்தப்பெறார் என்பதாம்.

97. பழியஞ்சாமை

கருந்தொழில ராய கடையாயார் தம்மேல்
பெரும்பழி யேறுவ பேணார்.—இரும்புன்னை
புன்புலால் தீர்க்கும் துறைவ! மற் றஞ்சாதே
தின்ப தழுவதன் கண். 262

(ப—பொ). கொலைத்தொழில் செய்வாராகிய கீழ்மக்களா யுள்ளார் தம்மிடத்துப் பெரிய பழி வந்தேறுவன வற்றைப் பாதுகாக்கமாட்டார்: பெரிய புன்னை புல்லிய புலாலை நீக்கும் துறைவனே! அழுவதன்கண் உடைய புன்கண்மையைத் தின்பது அஞ்சாதே, அதுபோலும்.

(ப—ரை). இரு புன்னை—பெரிய புன்னை, புன் புலால்—புல்லிய புலால் நாற்றத்தை, தீர்க்கும்—நீக்கும், துறைவ—துறைவனே! அழுவ தன் கண்—(பெரிய பிராணிக்கு இரையாய் அகப்பட்டு) அழுகின்ற சிறிய பிராணிக்குண்டான துன்பத்தைக் கண்டு, தின்பது—அதைத் தின்னும் பெரிய பிராணி, அஞ்சாது—அத்துன்பத்துக் கஞ்சி அந்தப் பிராணியைத் தின்னுமல் விடாது. கரு தொழிலராய கடையாயார்—கொலைத்தொழில் செய்பவரான கீழ்மக்கள், தம்மேல் ஏறுவ பெரும் பழி—தம்மீது வந்தேறுவனவான மிக்க பழிகளை, பேணார்—(வராதபடி) பாதுகாக்கமாட்டார்.

(க—து). கொலைத்தொழில் செய்யும் கீழ்மக்கள் தமக்கு வரும் பழிக்கு அஞ்சி அவ்விழிதொழிலைச் செய்யாமல் விடார்.

98. பழியில் மிக்கெழுதல்

மிக்க பழிபெரிதும் செய்தக்கால் மீட்டதற்குத்
தக்க தறியார் தலைசிறத்தல்,—எக்கர்
அடும்பலரும் சேர்ப்ப! அகலுணீ ராலே
துடும்ப லெறிந்து விடல். 202

(ப—பொ). தாம் மிக்க பழியை மிகவும் செய்தால் பின்னை அது தீர்க்கத்தக்கதனை அறிந்து ஒழுகாது அப் பழி வருவனவற்றிலே மிக்கொழுகுதல், மணலின்மேலே அடும்பு அலரும் சேர்ப்பனே! ஊர்வாரி நீரிலே உடம்பு தூய்மைபெறுதற்குக் குளித்துத் திளைத்ததனோ டொக்கும். [அல்லதூஉம் அகலினீரின்கண் திளைத்ததனை ஏய்க்கும்].

(ப—ரை). எக்கர் அடும்பு அலரும் சேர்ப்ப — மணலின்மேலே அடும்பு அலரும் சேர்ப்பனே! மிக்க பழி பெரிதும் செய்தக்கால்—தாம் மிக்க பழியை மிகவும் செய்தால், மீட்டு அதற்கு தக்கது அறியார்—பின்னை அதனைத் தீர்க்கத்தக்கதனை அறிந்தொழுகாமல், தலைசிறத்தல்—அப்பழி வருவனவற்றிலே மிக்கொழுகுதலானது, அகலுள் நீராலே—ஊர்வாரி நீரிலே, துடும்பல் எறிந்துவிடல்—உடம்பு சுத்தம் பெறுதற்குக் குளித்துத் திளைத்ததனோ டொக்கும். [(ஊர்) வாரி—வெள்ளம்].

"அதற்குத் தக்கது" என்பது பிணிக்கு மருந்து என்பது போல் வேற்றுமை மயக்கம்.

(க—து). செய்த பழியை நீக்க வகையறியாமல் பின்னும் பழியிலே மிக்கொழுகுதல், முன்னமே அசுத்தமானவன் ஊர்வாரி நீரிலே நீராடினதை ஒக்கும்.

99. கள்ளினைக் கண்டு களித்தல்

மாணாப் பகைவரை மாறொறுக் கல்லாதார்
பேணா துரைக்கும் உரைகேட் டுவந்ததுபோல்,
ஊணார்ந் துதவுவதொன் றில்லெனினும் கள்ளினைக்
காணாக் களிக்கும் களி. 256

(ப—பொ). தம்மோடு மாட்சிமையில்லாத பகைவரை அவர்க்கு மாறாய் நின்று ஒறுக்கமாட்டாதார், அவரைப் பாதுகாவாதே பிறர் இகழ்ந்துரைக்கும் உரை கேட்டு இன்புற்றுச் சிலர் உவப்பதுபோலே, தனக்கு ஊண் நிரம்ப உதவுவதொன் றில்லையாயினும் கள்ளிருந் ததனைக் கண்டால் களிக்கும் களிமகன்.

(ப—ரை). மாணு பகைவரை—மாட்சிமையில்லாத பகைவரை, மாறு ஒறுக்கல்லாதார்—அவருக்கு மாறாக நின்று தண்டிக்கமாட்டாதார், பேணுது—அவரைப் பாதுகாவாமல், உரைக்கும் உரை—பிறர் இகழ்ந்து சொல்லும் வார்த்தையை, கேட்டு—கேட்டு, உவந்ததுபோல்—சிலர் உவப்பதுபோல், ஊண் ஆர்ந்து உதவுவது ஒன்று இல்லெனினும்—தனக்கு உணவாக நிரம்பும் தன்மை இல்லையாயினும், கள்ளினை காணு—(தன் எதிரில்) கள்ளைக் கண்டால், களி—களிமகன், களிக்கும்—உண்டானைப் போலக் களிக்கும்.

(க—து). அடக்கமுடியாத தம் பகைவரை ஒருவர் இகழ்ந்துரைக்கக் கேட்டால், தாம் பெறலான நன்மை ஒன்றும் இல்லையாயினும், அதனைக் கேட்டபோது நன்மை யடைந்ததுபோலச் சிலர் உவகையடைவர். அங்ஙனமே களிமகன் தன்னெதிரில் கள்ளிருக்கக் கண்டால், அது தனக்கு உணவாக நிரம்புவதொன் றன்றாயினும், அதனை உண் டதுபோல் களிப்படைவான்.

100. ஒறுத்தாலும் தீமை ஒழியாது செய்தல்

உழந்ததூஉம் பேணு தொறுத்தமை கண்டும்
விழைந்தார்போல் தீயவை பின்னரும் செய்தல்,
தழங்கண் முழவிரங்கும் தண்கடற் சேர்ப்ப!
முழங்குறைப்பச் சாணீளு மாறு. 211

(ப—பொ). முன்னர்த் தாம் செய்த சில பிழை கண்டால் அவற்றைப் பேணுதே, தம்மோடு வருந்திப் போந்த பழைய நட்பும் பாராதே, தம்மை ஒறுத்தது கண்டு வைத்து, பின்னையும் அவர் தம்மை விரும்பினர்போலத்

தீயவற்றைச் செய்தல், தழங்கும் கண்ணையுடைய முழவு போல ஆரவாரிக்கும் குளிர்ந்த கடற்சேர்ப்பனே! சாண் நீளமா யிருப்பதொன்றைக் குறைத்த பின்னர் அது முழநீளமாக நீளும் என்று கோடல்போலும்.

(ப—ரை). தழங் (கு) கண் முழவு இரங்கும்—ஒலிக்கும் கண்ணையுடைய முழவுபோல ஆரவாரிக்கும், தண்கடல் சேர்ப்ப—குளிர்ந்த கடற்சேர்ப்பனே! உழந்ததும் பேணாது—தம்மோடு வருந்திப்போந்த பழைய நட்பும் பாராமல், ஒறுத்தமை கண்டும்—தம்மை ஒறுத்ததைக் கண்டிருந்தும், பின்னரும்—பின்னையும், விழைந்தார்போல்—அவர் தம்மை விரும்பினவர்போல்,தீயவை செய்தல்—தீயவற்றைச்செய்தல்,சாண் குறைப்ப முழம் நீளும் ஆறு—சாண் நீளமா யிருப்பதொன்றைக் குறைத்தபின்னர் அது முழநீளமாக நீளுவது போலும்.

(க—து). சாண் குறைத்தாலும் அவ்வளவோ டொழியாது மீண்டும் முழம் வளர்தலான பொருள்போல, ஒறுத்தாலும் அவ்வளவோ டொழியாது மீண்டும் தீமை செய்வர் கீழோர்.

பிரதிபேதம். — பேணரொறுத்தமை........முழவியம்பும்.. .......
.முழங்குறையச்......

## 101. எக்காலமும் பாவமே செய்தல்

அல்லவை செய்ப அலப்பின்: அலவாக்கால்
செல்வ தறிகல ராகிச் சிதைத்தெழுப:
கல்லாக் கயவர் இயல்.போல் நரியிற் கூண்
நல்யாண்டும் தீயாண்டு மில். 290

(ப—பொ). பாவங்களைச் செய்துண்பார் வறுமை உற்ற விடத்து: அஃதன்றிச் செல்வம் உற்றவிடத்து மறுமைக்குச் செல்லும் வழி அறியாராகித் தருமத்தைக் கெடுத்தொழுகுவர்: இது கல்லாக் கீழ்மக்க ளியல்பு. நரியிற் குணவு பெறுதல் நல்யாண்டும் உணவுபோம் தீயாண்டும் இல்லை, அதுபோல.

(ப—ரை). அலப்பின்-வறுமையுற்றால், அல்லவை செய்ப-பாவங்களைச் செய்துண்பார்: அலவாக்கால்—வறுமையின்றிச் செல்வம் பெற்றால், செல்வது அறிகலராகி—மறுமைக்குச் செல்லும் வழியை அறியாராகி, சிதைத்து எழுப—தருமத்தைக் கெடுத்தொழுகுவர்: கல்லா கயவர் இயல்—இது கல்லாத கீழ்மக்களது இயல்பு. நரியிற்கு ஊண் நல்யாண்டும் தீயாண்டும் இல் போல்—இது நரிக்கு உணவு பெறுதலான நல்ல காலமும் உணவு பெறாத கெட்ட காலமும் இல்லையாதல் போலும். [யாண்டு—காலம்].

(க—து). நரிக்கு க்ஷேமகால மென்பதும் க்ஷாமகால மென்பதும் இல்லை: எக்காலத்தும் பிணமுதலியவற்றைத் தின்று உயிர்வாழும். கயவருக்கு வறுமைக்கால மென்பதும் செல்வக்கால மென்பதும் இல்லை: எக்காலத்தும் பாவங்களையே செய்தொழுகுவர்.

## 102. எல்லாராலும் கீழோர் அறியப்படுதல்

கூரறிவி னார்வாய்க் குணமுடைச்சொல் கொள்ளாது
காரறிவு கந்தாக் கடியன செய்வாரைப்
பேரறியா ராயின பேதைகள் யாருளரோ?
ஊரறியா மூரியோ இல். 351

(ப—பொ). உண்மை ஞானம் உடையார் வாயால் சொல்லும் பழிபாவ மஞ்சும் குணத்தையுடைய சொல்லை உட்கொள்ளாது, அஞ்ஞானமே துணையாகக் கொண்டு, கடியனவாகிய தீங்குகளைச் செய்வாரைப் பேரறியாதே இருக்குமவராகிய அறிவிலாதார் உலகத்துள் யாவர்? உள்ளூரிலே வாழ்வார் அறியாத உழாத மூரியெருது இல்லை. [அதுபோலக் கயவர் எல்லாராலும் அறியப் படுவர்].

(ப—ரை). கூர் அறிவினார்—உண்மை ஞானம் உடையார், வாய்—வாயால்சொல்லும், குணம் உடை சொல்—(பழிபாவம் அஞ்சும்) குணத்தையுடைய சொல்லை, கொள்ளாது—உட்கொள்ளாது, கார் அறிவு—அஞ்ஞானமே, கந்து ஆ(க) — துணையாகக் கொண்டு, கடியன செய்வாரை—கடியனவாகிய தீங்குகளைச் செய்வாரை, பேர் அறியாராயின பே

தைகள்-பேரறியாதவராகிய அறிவிலார், யார் உளர்—உலகத்துள் எவர் உள்ளார்? ஊர் அறியா மூரியோ இல்—ஊரிலே வாழ்வார் அறியாத உழாத மூரியெருது இல்லை. [ஓ—ஓ—அசை].

103. நீசரில் நல்லார் இல்லாமை

*நிரந்து வழிவந்த நீசரு ளெல்லாம்*
*பரந்தொருவர் நாடுங்கால் பண்புடையார் தோன்றார்.*
*மரம்பயில் சோலை மலைநாட! என்றும்*
*குரங்கினுள் நன்முகத்த வில்.* 58

(ப—பொ). இடையறாது குடியாகப் பிறந்துவந்த கீழ் மக்களுளெல்லாம் பரந்து ஆராயுங்கால் பண்புடையா ரொருவர் தோன்றார்: மரம்பயில் சோலை மலைநாடனே! குரங்கினத்தில் நன்முகத்தவா யுள்ள குரங்குகள் இல்லை, அதுபோல.

(ப—ரை). மரம் பயில் சோலை மலைநாட-மரங்கள் உள்ள சோலைகள் பொருந்திய மலைநாடனே! என்றும்-எக்காலத்தும், குரங்கினுள்—குரங் கினத்தில், நல்முகத்த—நல்ல முகமுள்ள குரங்குகள், இல்—இல்லை, (அதுபோல), நிரந்து வழிவந்த நீசருள் எல்லாம்—இடையறாமல் குடியா கப் பிறந்துவந்த கீழ்மக்க ளெல்லாருள்ளும், பரந்து நாடுங்கால்—பரந்து ஆராயுங்கால், பண்புடையார் ஒருவர்—குணமுள்ளவர் ஒருவரும், தோன்றார்—காணப்படார்

(க—து). குரங்கு முகமெல்லாம ஒரு முகம்: நீசர் அனைவரும் ஒரு தன்மையரே. குரங்குகளில் நல்லமுக முள்ளது ஒன்றுதானும் காணக்கிடைக்காது: நீசரில் நல்லோர் ஒருவரும் காணப்பெறார்.

பழமொழி.—One devil is like another.

104. தீயாரைப் பெருக்குதலின் தீமை

*ஊழாயி னாரைக் களைந்திட் டுதவாத*
*கீழாயி னாரைப் பெருக்குதல்—யாழ்போலும்*
*தீஞ்சொல் மழலையாய்! தேனார் பலாக்குறைத்துக்*
*காஞ்சிரை நட்டு விடல்.* 371

(ப—பொ). முறைப்படவே தமக்கு நல்வழி ஒழுகுவாரைக் கைவிட்டுத் தமக்கு ஓரிடர் வந்துற்றால் உதவியாகாத கீழ்மக்களாயினாரை ஆக்கிச்செய்தல், யாழ்போலும் இனிய சொல்லையுடையாய்! தேன் நிறைந்த பலாமரத்தை வெட்டிக் காஞ்சிமரத்தை வைத்தாக்கும் தன்மை போலும்.

(ப—ரை). யாழ்போலும் தீம் சொல் மழலையாய்—யாழ்போலும் இனிய மழலைச் சொல்லை யுடையாய்! ஊழாயினாரை களைந்திட்டு—முறைப்படவே தமக்கு நன்மையாகிய வழியிலே ஒழுகுவாரைக் கைவிட்டு, உதவாத கீழாயினாரை பெருக்குதல்—(தமக்கு ஒரு துன்பம் வந்துற்றால்) உதவியாகாத கீழ்மக்களை மிகுவித்தல், தேன் ஆர் பலா குறைத்து—தேன் நிறைந்த பலாமரத்தை வெட்டி, காஞ்சிரை நட்டு விடல்—எட்டிமரத்தை வைத்து வளர்க்கும் தன்மையை ஒக்கும்.

(க—து). நல்லாரைக் கைவிட்டுத் தீயாரைப் பெருக்குதல், பலாவை வெட்டியெறிந்து எட்டியை வளர்ப்பது போலாம்.

105. பெரியோர் சிறப்புக்குச் சிறியோர் அருகராகாமை

பெரியார்க்குச் செய்யும் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல்,—பொறிவண்டு
பூமேல் இசைமுரலும் ஊர! அதுவன்றோ
நாய்மேல் தவிசிடு மாறு.

(ப—பொ). பெருமைக்குணம் உடையார்க்குச் செய்யக் கடவ சிறப்பினை விரும்பிச் சிறுமைக்குணம் உடையார்க்குச் செய்துவிடுதல், பொறிவண்டு பூமேல் படிந்து இசைமுரலா நின்ற ஊரனே! அதுவன்றோ குதிரைமேல் இடக்கடவ பண்ணினை நாய்முதுகில் இடுநெறி.

(ப—ரை). பொறிவண்டு பூமேல் இசைமுரலும் ஊர—பொறிவண்டு பூமேல் படிந்து இசை இசைக்காநின்ற ஊரனே! பெரியார்க்கு செய்யும் சிறப்பினை—பெருமைக்குணம் உடையார்க்குச் செய்யக்கடவ சிறப்பினை, பேணி—விரும்பி, சிறியார்க்கு செய்துவிடுதல் அது—சிறுமைக்

குணம் உடையார்க்குச் செய்தவிடுதலானது, தவிசு–குதிரைமேல் இடுதலான கல்லணையை, நாய்மேல் இடுமாறு அன்றோ–நாய் முதுகில் இடுவதாகு மன்றோ.

(க–து). பெரியோருக்குச் செய்யத்தக்க சிறப்பைச் சிறியோருக்குச் செய்வது பொருந்தாது.

சீவகசிந்தாமணியில், "அடிகளிற் றெருத்தி னிட்ட, வண்ணப்பூந் தவிசு தன்னை ஞமலிமே லிட்டதொக்கும், கண்ணகன் ஞாலங் காத்தல் எனக்" கெனக் கட்டியங்காரன் சச்சந்தனிடம் கூறுகின்றனன்.

106. குடியாகாமை

பேதுறவு தீரப் பெருக்கத் தலையளித்
தாசறு செய்யாராய் ஆற்றப் பெருகினும்
மாசற மாண்ட மனமுடைய ராகாத
கூதறைக ளாகார் குடி. 360

(ப–பொ). துன்பம் நீங்குமாறு மிகத் தலையளி செய்து குற்றமற்றவைகளைச் செய்யாராய் மிகப் பெருகினும், குற்றமற்ற மாட்சிமைப்பட்ட மனத்தையுடையா ரல்லாத முறைமையின் ஒழுகார் தங்குடியிற் படார்.

(ப–ரை). பேதுறவு தீர–துன்பம் தீருமாறு, பெருக்க தலையளித்து–மிகவும் காத்து, ஆசு அறு–குற்றம் நீங்கியவற்றை, செய்யாராய்–செய்தொழுகாதவராய், ஆற்ற பெருகினும்–மிகப் பெருகினும், மாசு அற–குற்றமற, மாண்ட மனம் உடையராகாத கூதறைகள்–மாட்சிமைப் பட்ட மனத்தையுடையா ரல்லாத கீழோர், குடி ஆகார்–தம் குடியிற் படார்.

கூதறை–(கிழியல்–கூட்டற்றது–இழிந்தது)–முறைமையின் ஒழுகாதவர்.

(க–து). மாட்சிமைப்பட்ட மனமில்லாத கீழோர் மிக்க செல்வம் பெறினும் நற்குடியிற் பட்டவ ராகார்.

## 4. கீழ்மக்கள் செய்கை

### 107. பெரியோரை அடாத வார்த்தை சொல்லுதல்

*நெறியா லுணரா்து நீர்மையு மின்றிச்,*
*சிறியார், எளியரா லென்று—பெரியாரைத்*
*தங்கணோர் வைத்துத் தகவல்ல கூறுதல்,*
*திங்களை நாய்குரைத் தற்று.* 149

(ப—பொ). *நெறிமையால் உணராதே தகுதியும் இன்றிப் பெரியாரை எளியரென்று கருதி, சிறியார் தங்கட்கு நேராகக்கொண்டு பெரியார்க்குத் தகவல்லாதன கூறுதல், திங்களை நாய் குரைத்தாற்போலும்.*

(ப—ரை). *பெரியாரை—பெரியாரை, சிறியார்—சிறியார், நெறியால் உணராது—நெறியால் உணராமல், நீர்மையும் இன்றி—தகுதியுமில்லாமல், எளியர் என்று—எளியரென்று எண்ணி, தங்கள் நேர் வைத்து—தங்களுக்குச் சமானமாகக் கொண்டு, தகவு அல்ல கூறுதல்—தகுதியல்லாத வார்த்தைகளைச் சொல்லுதல், நாய் திங்களை குரைத்தற்று—நாய் சந்திரனைப் பார்த்துக் குரைத்தாற்போலும். [ஆல்—அசை].*

(க—து). *பெரியோரைப் பார்த்துக் கீழ்மக்கள் அடாதன சொல்வது சந்திரனைப் பார்த்து நாய் குரைப்பது போலும்.*

*கீழ்மக்கள் தகுதியல்லாத வார்த்தை உரைப்பக் கேட்டும் பெரியோர் அவ்வார்த்தையைப் பொருட்டுசெய்யார். அது அவருடைய பெருந்தகைமை. இங்ஙனம் உரைப்பது இவருடைய இழிதகவு.*

*பழமொழி.—சந்திரனைப் பார்த்து நாய் குலைத் தாலதென்ன?* The moon does not heed the barking of dogs.

### 108. துர்ப்போதனை செய்தல்

*மறுமையொன் றுண்டோ மனப்பட்ட எல்லாம்*
*பெறுமாறு செய்ம்மினென் பாரே—நறுநெய்யுள்*
*கட்டி யடையைக் களைவித்துக் கண்சொரீஇ*
*இட்டிகை தீற்று பவர்.* 158

(ப—பொ). 'மறுபிறப்பு என்பதொன் றுண்டோ? மனத்தால் காதலித்தனவற்றை யெல்லாம் நுகரப்பெறு மாற்றைச் செய்ம்மின்' என்று ஒருவர்க்கு உறுதியாக உணரச் சொல்லுவார், நறுநெய்யுள்ளே தோய்த்த பாகு பெய்த அடையை நுகராமல் காத்துக் கண்ணினைச் சொருகுவித்து ஒருவனை இட்டிகையைத் தீற்றுவிப்பா ரோ டொப்பர்.

(ப—ரை). 'மறுமை ஒன்று—மறுமையென்ப தொன்று, உண்டோ—உளதோ? மனப்பட்டது எல்லாம்—மனத்தால் விரும்பின எல்லாவற்றையும், பெறும் ஆறு—அநுபவிக்கப்பெறும் விதத்தை, செய்ம்மின்—செய்யுங்கள்,' என்பார்—என்று மற்றவர்க்கு உறுதியாக உபதேசிப்பவர், நறுநெய்யுள் கட்டி அடையை—வாசனையுள்ள நெய்யுள் தோய்த்த பாகு பெய்த அடையை, களைவித்து—உண்ணாமல் காத்து, கண்சொரீஇ—கண்ணினைச் சொருகுவித்து, இட்டிகை தீற்றுபவர்—ஒருவனை இட்டிகையை உண்பிப்பவரோ டொப்பர். [ஏ—அசை]. இட்டிகை—செங்கல்.

(க—து). "மறுமைக்கு வேண்டிய புண்ணியங்களைச் செய்க" என்று வற்புறுத்தாமல், "மறுமையென்ப தொன்றில்லை. மனம் விரும்பினபடி செய்க" என்று துர்ப்போதனை செய்வோர், ஒருவரது கண்ணை மூடுவித்து அவரைப் பணிகாரம் உண்ணாமல் காத்துச் செங்கல்லை உண்பிப்பவரோ டொப்பர்.

## 109. நன்மை செய்தவர் இடருறுதல்

கண்ணில் கயவர் கருத்துணர்ந்து கைமிக
நண்ணி யவர்க்கு நலனுடைய செய்பவேல்,
எண்ணி, இடர்வரும் என்னார், புலிமுகத்
துண்ணி பறித்து விடல். 74

(ப—பொ). கண்ணோட்ட மில்லாத கீழ்மக்கள் கருத்தின் கண் விரும்பிய துணர்ந்து செயல்மிக்கு அவரோடு நண்புகொண்டு நன்மையாயின செய்வாராயின், ஆராய்ந்து இது செய்தால் நமக்கு இடர்வரும் என்னாதே, புலிமுகத்தின் உண்ணியை அருளினாலே பறித்த தனோ டொக்கும்.

(ப—ரை). கண் இல் கயவர் கருத்து உணர்ந்து—கண்ணோட்ட மில்லாத கீழ்மக்கள் கருத்தின்கண் விரும்பியதை அறிந்து, கை மிக நண்ணி—செயல்மிக்கு அவரோடு நண்புகொண்டு, இடர்வரும் என்னார்—(இது செய்தால்) துன்பம் உண்டாகும் என்றெண்ணாராய், அவர்க்கு நலன் உடைய எண்ணி செய்பவேல்—அவர்க்கு நன்மையாயினவற்றை ஆராய்ந்து செய்வாராயின், (அது), புலிமுகத்து உண்ணி பறித்து விடல்—புலிமுகத்தில் உள்ள உண்ணியை (அருளினாலே) பறித்ததனோடொக்கும்.

உண்ணி—(உண்பது)—இரத்தத்தை உண்ணும் பூச்சி. tick.

(க—து). புலிமுகத்தில் உள்ள உண்ணியை அருளினால் பறிக்கப் புகுவோர் புலியால் கொலையுண்பர். கயவர்க்கு இரங்கி நன்மைசெய்யப் புகுந்தவர் அவரால் துன்பமடைவர்.

110. தம்பொருட்டு வருந்தினார்க்கும் வயப்படாமை

திருந்தாய்நீ ஆர்வத்தைத் தீமை யுடையார்
வருந்தினா ரென்றே வயப்படுவ துண்டோ?
அரிந்தரிகால் பெய்தமையக் கூட்டியக் கண்ணும்
பொருந்தாமண் ணாகா சுவர். 9

(ப—பொ). அவர்மேல் ஆர்வத்தை விட்டுத் திருந்தாய் நீ நெஞ்சமே! நம்மேல் தீயமனத்தையுடையார் இவர் வருந்தினாரென்று வயமாவ துண்டோ? அரிதாளை அரிந்துபெய்து சேரக்கூட்டியவிடத்தும் சுவரெடுக்கின்றபொழுதே பொருந்தாத மண் பின்னைப் பொருந்திச் சுவராகாததுபோல், அவரும் பொருந்தார்.

(ப—ரை). நீ—நெஞ்சமே நீ, ஆர்வத்தை திருந்தாய்—அவர்மேல் ஆசையைவிட்டுத் திருந்துக. பொருந்தா மண்—(சுவர் எடுக்கின்றபோதே, பொருந்தாத மண், அரிகால் அரிந்து பெய்து—அரிதாளை அரிந்து கலந்து, அமையக் கூட்டியக்கண்ணும்—சேரவமையக் கூட்டிய விடத்தும், சுவர் ஆகா—பின்னைப் பொருந்திச் சுவராகாது. (அதுபோல்), தீமை உடையார்—நம்மேல் தீய மனத்தையுடையார், வருந்தினார்

என்று இவர் தம்பொருட்டு வருந்தினாரே என்று நம்மேல் இரங்கி, வயப்படுவது உண்டோ—வசமாகிப் பொருந்துவ துண்டோ? பொருந் தார். [அரிதாள்—ஒட்டு—கதிர்கொய்த தாள்].

(க—து). 'இவர் நம்பொருட்டு வருந்தினாரே' என்றிரங்கிக் கீழ்மக்கள் நமக்கு வசமாகி மனம்பொருந்தி நடவார். ஆகவே அவர்மேல் ஆசை வைப்பது வீணே.

## 111. விலக்குவார்மேல் வெகுண்டெழுதல்

குலத்துச் சிறியார் கலாந்தணிப்பான் புக்கு
விலக்குவார் மேலும் எழுதல்—நிலத்து
நிலையழுங்க வேண்டிப் புடைத்தக்கால் வெண்மாத்
தலைகீழாக் காதி விடல்.

(ப—பொ). பிறரோடு தாம்கொண்ட கலாத்தைத் தணிக்கல் வேண்டி இடைப்புகுந்து விலக்குவார் மேலும் குலத்தாற் சிறியார் வெகுண்டெழுதல், நிலத்தின்கண் ஓடாதே நிற்கின்ற நிலை தவிரவேண்டி இருந்தவன் மத்தி கையால் புடைத்தால் கற்பனை கொள்ளாதே வெள்ளிய மாவேறியவன் தலைகீழாக விழுவதனோடொக்கும்.

(ப—ரை). கலாம் தணிப்பான் புக்கு விலக்குவார்மேலும்—பிறரோடு தாம் கொண்ட பகையைத் தணிக்கல்வேண்டி இடைப்புகுந்து விலக்கு வார்மேலும், குலத்து சிறியார்—குலத்தால் சிறியார், எழுதல்—வெகுண் டெழுதலானது, நிலத்து நிலை அழுங்கவேண்டி—நிலத்தின்கண் ஓடா மல் நிற்கின்றநிலை தவிரவேண்டி, புடைத்தக்கால்—இருந்தவன் சாட் டையால் அடித்தால், வெண்மா தலைகீழா(க) காதிவிடல்—சவாரிபண் ணக் கற்றுக்கொள்ளாமல் வெள்ளிய குதிரை ஏறியிருப்பவன் தலை கீழாக விழுவதனோ டொக்கும்.

*கோபத்தை அடக்கமுடியாத கீழ்மகனுக்குச் சவாரிபண்ணக் கற் காதவன் உவமானம்.*

(க—து). ஓடாது நிற்கும் குதிரையை அடித் தோட்டினபோது, சவாரிபண்ணக் கற்காதவன் தலைகீழாக விழுந்து இடர்ப்படுவதுபோல், தான் பிறரிடம் பகைகொண் டிருந்தபோது, கீழ்மகன் தன்னைத் தணிக்க வந்தவன்மீது வெகுண்டெழுந்து துன்பமடைவான்.

காதுதல் வருத்துதல் என்று பொருள்படுதலால், சவாரிபண்ணத் தெரியாதவனைக் குதிரை தலைகீழாகத் தள்ளி வருத்துவதுபோல், கீழ் மகன், தன் கோபத்தைத் தணிக்க வந்தவன்மீது வெகுண்டெழுந்து, அவனை வருத்துவான் என்று பொருள்கொள்வதும் பொருந்தும்.

## 112. கீழ்மக்களை முனிவித்த லாகாது

சொல்லெதிர்ந்து தம்மை வழிபட் டொழுகலராய்க்
கல்லெறிந்தாற் போலக் கலாந்தலைக் கொள்வாரை
இல்லிருந் தாற்ற முனிவித்தல், உள்ளிருந்
தச்சாணி தாங்கழிக்கு மாறு. 276

(ப—பொ). தம்முடைய சொல்லை ஏற்றுக்கொண்டு தம்மை வழிபாடு செய்கலராய்க் கல்லை யெறிந்தாற் போலே சில வார்த்தைகளைச் சொல்லி மாறுபாடு கொள் வாரை, அவர்களில்லின் கண்ணே இருந்து தாம் அவரை முனியப்பண்ணுதல், தேரினுள்ளேயிருந்து அச்சாணி யைத் தாம் கழிக்கு மதனோ டொக்கும்.

(ப—ரை). சொல் எதிர்ந்து—தம்முடைய சொல்லை ஏற்றுக்கொண்டு, தம்மை வழிபட்டு ஒழுகலராய்—தம்மை வழிபாடு செய்யாராய், கல் எறிந்தாற்போல — கல்லை எறிந்தாற்போல, (சில வார்த்தைகளைச் சொல்லி). கலாம் தலைக்கொள்வாரை—மாறுபாடு கொள்வாரை, இல் இருந்து—அவர்களுடைய இல்லின்கண்ணே இருந்து, ஆற்ற முனிவித் தல்—தாம் அவரை மிகவும் கோபிக்கும்படி செய்தல், உள் இருந்து— தேரின் உள்ளே இருந்து, அச்சாணி—அச்சாணியை, தாம் கழிக்கும் ஆறு—தாமே கழிக்குமதனோ டொக்கும்.

(க—து). கடுமையான வார்த்தை சொல்லி விரோதங் கொள்பவரை அவருடைய வீட்டிலிருந்து கோபமூள்வித்தலானது, தேரிலிருந்து கொண்டே ஒருவர் அச்சாணியைக் கழற்றிவிடுவதற்கு ஒப்பாகும்.

இச்செய்கை தாமே கேட்டைத் தேடிக்கொள்வதாகும் என்பதாம்.

113. கீழ்மக்களோடு உடனுறைத லாகாது

நாணார் பரியார் நயனில செய்தொழுகும்
பேணா அறிவிலா மாக்களைப் பேணி
ஒழுக்கி அவரோ டுடனுறை செய்தல்,
புழுப்பெய்து புண்பொதியு மாறு. 142

(ப—பொ). பழிநாணாது, பிறர்மேல் அன்பின்றி, நன்மையில்லாதனவற்றைச் செய்தொழுகும் பிறரால் விரும்பப்படாத அறிவில்லாத மாக்களை விரும்பி நடாத்தி, அவரோடு தாம் உடனுறைதலைச் செய்தல், நிலமூழ்கிய புழுவை உள்ளே பெய்து தம் புண்ணைப் பொதிந்ததனோடொக்கும்.

(ப—ரை). நாணார்—பழிக்கு நாணாமல், பரியார்—பிறர்மேல் அன்பு கொள்ளாமல், நயன்இல செய்தொழுகும்—நன்மையில்லாதனவற்றைச் செய்தொழுகும், பேணா—பிறரால் விரும்பப்படாத, அறிவிலாமாக்களை—அறிவில்லாத மக்களை, பேணி ஒழுக்கி—விரும்பி நடத்தி, அவரோடு உடனுறை செய்தல்—தாம் அவரோடு உடனுறைதலைச் செய்தல், புழு பெய்து—புழுவை உள்ளே பெய்து, புண்—தம் புண்ணை, பொதியும் ஆறு—மூடிவைத்ததனோடொக்கும்.

(க—து). கீழ்மக்களோடு ஒன்றாக வசித்தல் புழுவை உள்ளே விட்டுப் புண்ணை மூடிவைத்ததனோடொக்கும். அதனால் பொல்லாங்கு விளையும் என்பதாம்.

"உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று."—திருக்குறள்.

114. தன் சொல்லாலே தன்னைத் துயர்ப்படுத்தல்

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்.—நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயால் கெடும். 184

(ப—பொ). நன்மை யில்லாதனவற்றைப் பிறரைச் சொல்லிக் கரந்தொழுகும் பேதை, தான் சொல்லும்

சொல்லாலே தன்னைத் துயரின்கண் அகப்படுக்கும்: நல்லாய்! மணலுள்ளே முழுகியே ஒளித்துறையும் நுணலும் தன் குரலைக் காட்டித் தன் வாயாலே தன்னைத் தின்பார்க்கு அகப்படும், அதுபோலும்.

(ப—ரை). நல்லாய்—நல்லாய்! மணலுள் முழுகி மறைந்து கிடக்கும் நுணலும்—மணலுள்ளே முழுகி ஒளித்து உறையும் தவளையும், தன் வாயால் கெடும்—தன் குரலைக் காட்டித் தன் வாயாலே தன்னைத் தின்பார்க்கு அகப்படும். (அதுபோல), பொல்லாத சொல்லிமறைந்து ஒழுகும் பேதை—பிறரைப் பொல்லாதனவற்றைச் சொல்லி ஒளித்தொழுகும் அறிவிலான், தன் சொல்லாலே—தான் சொல்லும் சொல்லாலே, தன்னை துயர்ப்படுக்கும்—தன்னைத் துன்பத்தின்கண் அகப்படுக்கும்.

(க—து). மணலில் மறைந்திருக்கின்ற தவளையானது சும்மாவிராமல் கத்தித் தான் இருக்கிற இடத்தைத் தானே வெளியிடுதலால், தன்னைத் தின்னும் பிராணி அறிந்துவந்து தன்னைப் பிடித்து விழுங்குவதற்கு இடமுண்டாவதுபோல, மூடன் சும்மாவிராமல் புறங்கூறித் தன்னியல்பைத் தானே வெளியிடுதலால் தீங்குகள் வந்தடைந்து தன்னைக் கெடுக்க இடமுண்டாகின்றது.

பழமொழி. — தவளையும் தன் வாயால் கெடும். Birds are entangled by their feet, and men by their tongues.

115. புறங்கூறுவார் திருந்தாமை

தாக்குற்ற போழ்தில் தமரேபோல் நன்குரைத்துப்
போக்குற்ற போழ்திற் புறனுரீஇ மேன்மைக்கண்
நோக்கற் றவரைப் பழித்தலென்? என்னானும்
மூக்கற்ற தற்கில் பழி. 250

(ப—பொ). யாவரொருவரைத் தலைப்பட்ட பொழுதின்கண் அவர்க்கு நட்பாயினரைப்போல நன்றாகப் புகழ்ந்துரைத்து, மற்றவர் அவ்விடத்துநின்று நீங்கிய பொழுது புறங்கூறுதலை யுடையராய், இவர் மேன்மைக்

குணத்தின்கண் உள்ளாராயிருந்தாரென்று ஒருவரால் விசாரிக்கப்படாதவரைப் பழித்துச் சொல்வது என்னை? எப்படியானாலும் மூக்கற்றதற்குப் பழியில்லை, அது போல.

(ப—ரை). என்னுனும் – எப்படியானாலும், மூக்கற்றதற்கு பழி இல்—மூக்கற்றதற்குப் பழிப்பில்லை. (அதுபோல), தாக்குற்றபோழ்தில்—ஒருவரை எதிர்ப்பட்டபோது, தமரேபோல் நன்கு உரைத்து—அவருக்கு நண்பானவர்போல் நன்றாகப் புகழ்ந்துரைத்து, போக்குற்ற போழ்தில்—அவர் அவ்விடத்திலிருந்து நீங்கியபொழுது, புறன் அழீஇ—புறங்கூறுதலை யுடையராய், மேன்மைக்கண் நோக்கற்றவரை—மேன்மைக் குணத்தின்கண் நோக்கமில்லாதவரை, பழித்தல் என்—பழித்தலால் பயன் என்ன?

(க—து). பழித்தாலும் அற்ற மூக்குப் பற்றுது. அங்ஙனமே, பழித்தாலும் புறங்கூறுவார் திருந்தார்.

"முன்னின் றொருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்
றிழித்துரைக்கும் சான்றோரை அஞ்சியே தேவர்
விழித்தஇமையா நின்ற நிலை." அறநெறிச்சாரம்.

பிரதிபேதம்—புறனழீஇ. பழிப்பதென் ஒன்றுனும்.

116. கீழ்மக்களை நாவடக்குதல் முடியாமை
கோவாத சொல்லும் குணனிலா மாக்களை
நாவா யடக்கல் அரிதாகும்.—நாவாய்
களிகள்போல் தூங்கும் கடற்சேர்ப்ப! வாங்கி
வளிதோட் கிடுவாரோ இல். 79

(ப—பொ). பொருந்தாதனவற்றைச் சொல்லவல்ல குணனில்லாத மாக்களை நாவினிடத்தை அடக்குதல் பிறர்க்கு அரிதாகும். கள் நுகர்ந்து ஆடும் களிகள்போல நாவாய்கள் தூங்கும் கடற்சேர்ப்பனே! காற்றை வாங்கித் தம்முடைய தோள்மேலே இட்வல்லா ரில்லை.

(ப—ரை). களிகள்போல்—கள்ளுண்டு ஆடும் குடியர்போல், காவாய் தூங்கும்—கப்பல்கள் ஆடும், கடல் சேர்ப்ப—கடற்சேர்ப்பனே! கோவாத சொல்லும்—பொருந்தாதனவற்றைச் சொல்லவல்ல, குணன் இலா மாக்களை—குணமில்லாத மாக்களை, நாவாய் அடக்கல்—நாவினிடத் தடக்குதல், அரிதாகும்—பிறருக்கு அரிதாகும். வளிவாங்கி—காற்றை வாங்கி, தோட்கு இடுவார் இல் — தோளின்மேல் இடவல்லார் இல்லை. [ஓ—அசை].

நாவாய் — (வாய்—இடம்) — நாவினிடம். நாவாய்—(நவ்வி—நவ்வு—தோணி): நாவ்—நாவிகா என்னும் வடசொல்லின் திரிவு.

(க—து). காற்றை ஒரு கொள்கலத்தில் வாங்கித் தோளின்மேல் இடவல்லார் இல்லை: அதுபோல வீண்வார்த்தை சொல்லும் வீணரை நாவடக்கி யிருக்கச்செய்தல் முடியாது.

காற்றைத் தம்வயப்படுத்தி யாள்வார் இல்லை. கீழ்மக்களுடைய நாவை யடக்கி யாள்வாரும் இல்லை. இரண்டும் ஆகாதகாரியம். "காற்றைப் பிடித்துக் கடத்திலடைத்துக் கடியபெருங், காற்றைக் குரம்பைசெய்வார் செய்கைபோலும்" என்பது சிலப்பதிகார வுரைச் சிறப்புப் பாயிரம்.

## 117. வெள்ளரைக் கள்ளராகக் காட்டுதல்

*தெரியாதார் சொல்லும் திறனின்மை தீதாப்*
*பரியார், பயனின்மை செய்து, பெரியார்சொல்*
*கொள்ளாது, தாந்தம்மைக் காவா தவர்,பிறரைக்*
*கள்ளராச் செய்குறு வார்.* 310

(ப—பொ). நன்மை தீமை ஆராயாதார் கற்பிக்கும் திறனின்மையைத் தீங்கென்று கருதாராய், அவர்கள் சொன்ன பயனின்மையைச்செய்து, பெரியார் சொல்லிய உறுதிச் சொற்களைக் கொள்ளாராய், தம்மைத் தாம் பாதுகாவாதவர், தாம் செய்த குற்றத்தைச் சொல்லுகின்ற பிறர் வெள்ளராயினும் அவர்களைக் கள்ளராகச் செய்வார்.

(ப—ரை). தெரியாதார்—நன்மை தீமை தெரியாதவர், சொல்லும்—கற்பிக்கும், திறனின்மை—திறப்பாடில்லாத காரியத்தை, தீதா—தீங்காமென்று, பரியார்—கலையாராய், பயனின்மை செய்து—அவர் சொன்ன பயனில்லாத காரியத்தைச் செய்து, பெரியார் சொல் கொள்ளாது—பெரியார் சொல்லிய உறுதிச்சொற்களைக் கொள்ளாராய், தம்மை தாம் காவாதவர்—தம்மைத் தாம் பாதுகாவாதவர், பிறரை கள்ளரா(க) செய்குறுவார்—(தாம் செய்த குற்றத்தைச் சொல்லுகின்ற) பிறர் (வெள்ளராயினும் அவரைக்) கள்ளராகச் செய்வார்.

(க—து). பெரியார் சொல்லைக் கொள்ளாமல் அறிவிலார் சொல்லைக் கேட்டு வீண்காரியம் செய்கின்றவர், தமது குற்றத்தை எடுத்துக் காட்டும் வெள்ளரைக் கள்ளராக எடுத்துக்காட்டுவர்.

கள்ளராச் செய்குறுவார் என்பது நிரபராதிகளை அபராதிகளாகக் கொள்ளும்படி செய்வர் என்பதாம்.

118. நியாயசபையிலன்றி உண்மையுரையாமை

செய்த கொடுமை யுடையான் அதன்பயம்
எய்த உரையான் இடரினால்.—எய்தி
மரிசாதி யாயிருந்த மன்றஞ்சு வாற்குப்
பரிகாரம் யாதொன்று மில். 388

(ப—பொ). பிறர்க்குத் தான் செய்யத்தகாத கொடுமையை மறையச் செய்தானொருவன், பிறர் தன்னை அலைத்து வினவில் அவ்வலைப்பிற் கஞ்சிச் செய்தபடியை மெய்யாகச் சொல்லுவானல்லன், மெய்யாகச் சொன்னால் தனக்கு இடராம் தண்டம் செய்வாராதலான். பலரும் திரண்டிருந்த மன்றினைக் கண்டு வெருவித் தான் செய்தபடி சொல்லுவாற்குப் பரிகாரம் யாது மில்லை.

(ப—ரை). செய்த கொடுமை உடையான்—பிறர்க்குத் தான் செய்யத்தகாத கொடுமையை (மறைய)ச் செய்தா னொருவன், அதன் பயம் எய்த உரையான்—(பிறர் தன்னை வருத்திக் கேட்டால் அவ்வருத்தத்திற் கஞ்சிச்) செய்தபடியை மெய்யாகச் சொல்லான், இடரினால்—

(மெய்யாகச் சொன்னால்) தனக்குத் துன்பமாகத் தண்டம் செய்வா ராதலால். மரிசாதியாய் எய்தியிருந்த மன்று அஞ்சுவாற்கு—பலரும் திரண்டிருந்த சபையைக் கண்டு பயந்து தான் செய்தபடி சொல்லுவா னுக்கு, பரிகாரம் யாதொன்றும் இல்—பரிகாரம் யாதும் இல்லை.

மரிசாதி—(மரியாதை—நீதிவழி நிற்றல்)—நீதி.

(க—து). கீழோர் தாம் மறையச் செய்த கொடுமையை நியாய சபை யில் உள்ளபடி சொல்லுவர்: தண்டம் செய்வாரென்று பிறரிடம் சொல்லார்.

119. கீழ்மக்களொழுக்கத்தைப் பலரும் அஞ்சுதல்

*முதுமக்க ளன்றி முனிதக்கா ராய*
*பொதுமக்கள் பொல்லா வொழுக்கம்—அதுமன்னும்*
*குன்றத்து வீழும் கொடியருவி நன்னாடா!*
*மன்றத்து மையல்சேர்ந் தற்று.* 209

(ப—பொ). அறிவால் நிரம்பிய மக்களன்றி மக்களிற் சொல்லப்படாது யாவராலும் வெறுக்கத்தக்கவராய்ச் சிறப்பில்லாத மக்களுடைய பொல்லாத ஒழுக்கமாகிய அது, குன்றத்தினின்று வீழும் கொடிநுடங்குவது போன்ற அருவியையுடைய நன்னாடனே! மன்றத்திலே நின்றொருவன் பித்தேறியது போலும்.

(ப—ரை). மன்னும் குன்றத்து வீழும் கொடியருவி நன்னாடா—நிலைபெற்ற குன்றத்துநின்று வீழும் கொடி நுடங்குவது போன்ற அருவியையுடைய நன்னாடனே! முதுமக்கள் அன்றி—அறிவால் நிரம்பிய மக்களன்றி, முனிதக்கார் ஆய பொதுமக்கள்—யாவராலும் வெறுக்கத்தக்கவராய்ச் சிறப்பில்லாத மக்களுடைய, பொல்லா ஒழுக்கம் அது—பொல்லாத ஒழுக்கமாகிய அது, மன்றத்து மையல் சேர்ந்தற்று—மன்றத்திலே நின்றொருவன் பித்தேறியது போலும்.

(க—து). பித்தேறியவனைக் கண்டு பலரும் அஞ்சுவதுபோல், கீழோருடைய பொல்லாத ஒழுக்கத்தைக் கண்டு பலரும் அஞ்சுவர்.

120. கீழ்மக்களில் விலக்கத்தக்கவர்

தருக்கி யொழுகித் தகவல்ல செய்தும்,
பெருக்க மதித்தபின் பேணாத செய்தும்,
கரப்புடை யுள்ளங் கனற்று பவரே,
செருப்பிடைப் பட்ட பரல். 224

(ப—பொ). தகவல்லனவற்றின்மேலே தருக்கியொழுகுதலைச் செய்தும், தன்னைப் பிறர் பெருக மதித்த காலத்துப் பிறர் பேணாத வில்லாதனவற்றைச் செய்தும், இவ்வாறு கரப்புடைத்தாகிய உள்ளத்தினை யுடையவராய்ப் பிறரை வருத்துமவர்கள், செருப்பிடைப் பட்ட பரலோடொப்பர்.

(ப—ரை). தகவு அல்ல தருக்கி ஒழுகி செய்தும் — தகுதியல்லாதனவற்றின்மேலே அகங்கரித்து ஒழுகுதலைச் செய்தும், பெருக்க மதித்தபின் பேணாத செய்தும்—தன்னைப் பிறர் அதிகமாக மதித்த காலத்துப் பிறர் பேணாத வில்லாதனவற்றைச் செய்தும், கரப்புடை உள்ளம் கனற்றுபவர்—(இவ்வாறு) மறைவாகிய மனதினையுடையராய்ப் பிறரை வருத்துமவர்கள், செருப்பிடை பட்ட பரல்—செருப்பில் அகப் பட்ட பரலோ டொப்பர். [ஏ—அசை]. பரல்—பருக்கைக்கல்.

(க—து). செருப்பி லகப்பட்ட பரலை விலக்கவேண்டும். அது போல இக்கீழ்மக்களை விலக்கவேண்டும்.

121. காரியஞ் செய்பவரைக் காரணமின்றித் தவிர்த்தல்

உறுமக்க ளாக ஒருவரை நாட்டிப்
பெறுமாற்ற மின்றிப் பெயர்த்தே யொழிதல்,
சிறுமைக் கமைந்ததோர் செய்கை. அதுவே
குறுமக்கள் காவு நடல். 172

(ப—பொ). தனக்கு உறுதிசெய்தான் ஒரு மகனாக ஒருவனை ஒரு கருமத்திலே நிறுத்தி, அவன் செய்ததொரு குற்றம் உண்டென்னும் சொல் இன்றியே அவனைக் கருமத்தினின்று தவிர்த்தொழிதல், சிறுமைக் குணத்துக்கெல்லாம் அமைந்ததொரு செய்கையாம்.

அது பிள்ளைகள் காவு நடுதலோ டொத்துப் பயன்படாதாம்.

(ப—ரை). உறுமக்களாக ஒருவரை காட்டி—தனக்கு நன்மை செய்தவராக ஒருவரை ஒரு கருமத்திலே நிறுத்தி, பெறுமாற்றம் இன்றியே—அவர் செய்ததொரு குற்றம் உண்டென்னும் சொல் இன்றியே, பெயர்த்து ஒழிதல்—அவரை அக்கருமத்தினின்று தவிர்த்தல், சிறுமைக்கு அமைந்ததோர் செய்கை—சிறுமைக் குணத்துக்கெல்லாம் அமைந்ததொரு செய்கையாம். அது—அச்செய்கை, குறுமக்கள் காவு நடல்—பிள்ளைகள் சோலை வைப்பதுபோல் பயன்படாதாம். [ஏ—அசை].

(க—து). தமக்கு நன்மை செய்தவரென்று ஒருவரை ஒரு காரியத்தில் நிறுத்தி, அவர் யாதொரு குற்றமும் செய்யாமலிருக்கவும் அவரை அக்காரியத்தினின்றும் தவிர்த்தல், கீழ்மக்களுடைய இயற்கை. சோலை வைக்கப் புகுந்த சிறுவர்கள் செடிகளை நட்ட இடத்தில் தரிக்கவொட்டாராதலால் அவர்கள் செய்கை பயன்படாதவாறு போல, இக்கீழ்மக்கள் செய்கையும் பயன்படாதாம்.

பிரதிபேதம்.—குறுமக்கள் காஅ நடல்.

122. பெரியோர் ஒடுங்கிச் சிறியோர் ஓங்குதல் அநியாயம்

உரைசான்ற சான்றோர் ஒடுங்கி யுறைய,
நிரையுள ரல்லார் நிமிர்ந்து பெருகல்,
வரைதாழ் இலங்கருவி வெற்ப! அதுவே
சுரையாழ அம்மி மிதப்பு.

(ப—பொ). புகழமைந்த சான்றோர் விளங்காது ஒடுங்கியுறையத் தூய குடிமரபின் உளரல்லாத கீழோர் செல்வத்தால் ஓங்கிப் பெருகுதல், வரைதாழ் இலங்கருவி வெற்பனே! அஃதன்றோ சுரை ஆழ அம்மி மிதந்ததனோடொப்பது.

(ப—ரை). வரை தாழ் இலங்கு அருவி வெற்ப—மலையினின்றும் தாழ்வதாய் விளங்கும் அருவியையுடைய வெற்பனே! உரைசான்ற சான்றோர்—புகழமைந்த சான்றோர், ஒடுங்கி உறைய—விளங்காது ஒடுங்கி உறைய, நிரை உளர் அல்லார்—நல்ல குடிமரபின் வரிசையில் சேராதவரான கீழோர், நிமிர்ந்து பெருகல் அது—செல்வத்தால் ஓங்

கிப் பெருகுதலானது, சுரை ஆழ அம்மி மிதப்பு—தண்ணீரிலே சுரை ஆழ அம்மி மிதப்பதை ஒக்கும்.

(க—து). நீரில் சுரை ஆழ்வதும் அம்மி மிதப்பதும் இயற்கையில் பொருந்தாத வாறுபோலப் பெரியோர் ஒடுங்கியிருக்கச் சிறியோர் ஓங்கிப் பெருகுதல் பொருந்ாது.

"புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே:
உணர்வ துடையா ரிருப்ப—உணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரே
பட்டும் துகிலும் உடுத்து."—நாலடியார்.

"சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய, யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப, கானக நாடன் சுனை" எனவருவது மொழிமாற்று. (நன்னூல்—413—சூ.)

## 123. பாவிகள் ஒழிதலின் அவசியம்

தேர்ந்துகண் ணோடாது தீவினையும் அஞ்சலராய்ச்
சேர்ந்தாரை யெல்லாம் சிறிதுரைத்துத்—தீர்ந்த
விரகர்கட் கெல்லாம் வெறுப்பனவே செய்யும்
நரகர்கட் கில்லையோ நஞ்சு. 27

(ப—பொ). ஆராய்ந்து ஒருவர்மாட்டும் கண்ணோடாது, தீவினைகளும் அஞ்சாது செய்து, தம்மைச் சேர்ந்தாரை யெல்லாம் சிறுமைப்பட உரைத்து, தமக்குக் கிளையானமிக்க சுற்றத்தார்க்கெல்லாம் வெறுப்பனவே செய்யாநிற்கும் நரகர்கட்குச் சாவக் கொல்லவல்லதொரு நஞ்சில்லையோ?

(ப—ரை). தேர்ந்து—ஆராய்ந்து, கண்ணோடாது — ஒருவரிடத்தும் தாட்சண்ணிய மில்லாமல், தீவினையும் அஞ்சலராய்—தீவினைகளையும் அஞ்சாது செய்து, சேர்ந்தாரை எல்லாம்—தம்மைச் சேர்ந்தார் எல்லாரையும், சிறிது உரைத்து—சிறுமைப்பட உரைத்து, தீர்ந்த விரகர் கட் கெல்லாம்—தமது கிளையான மிக்க சுற்றத்தா ரெல்லாருக்கும், வெறுப்பனவே செய்யும் நரகர்கட்கு—வெறுப்பானவைகளையே செய்யும் நரகர்களுக்கு, நஞ்சு—சாவக் கொல்லவல்லதான ஒரு நஞ்சு. இல்லையோ—இல்லையோ?

(க—து). இக்கீழ்மக்கள் சாதற்பாலர்: சாவராயின் உலகம் செவ்வி பெறும் என்பதாம்.

## 5. நட்பின் இயல்பு

### 124. நட்பினரை நல்லார் உடலாகக் கொள்ளல்

ஒட்டிய காதல் உமையாள் ஒருபாலாக்
கட்டங்கம் வெல்கொடி கொண்டானும் கொண்டா
விட்டாங் ககலா முழுமெய்யும் கொள்பவே [னே.
நட்டாரை ஒட்டி யுழி. 85

(ப—பொ). பொருந்திய அன்பினையுடைய உமையாளைத் தனதொரு கூறாகக் கட்டங்க வெல்கொடியைக் கொண்ட முதல்வனும் கொண்டான். அதுபோலத் தம்மை அங்கு விட்டகலாத தம்முடம்பு முழுதினும் கலந்துகொள்ள வல்லர் அவர் தம்மொடு நட்டாரை அவர்கள் வந்தடைந்தவிடத்து.

(ப—ரை). கட்டங்கம் வெல்கொடி கொண்டானும்—கட்டங்க வெல்கொடியைக் கொண்ட முதல்வனும், ஒட்டிய காதல் உமையாள்—பொருந்திய அன்பையுடைய உமையவளை, ஒருபாலா (க) ஏகொண்டான்—தனக்கு ஒரு கூறாகவே கொண்டான். ஒட்டிய உழி—தம்மை வந்தடைந்த விடத்து, நட்டாரை—தம்மொடு நட்டாரை, ஆங்கு விட்டகலா முழுமெய்யும் கொள்பவே—தம்மை அங்கு விட்டகலாத தம்முடம்பு முழுவதினும் கலந்துகொள்ள வல்லர்.

கட்டங்கம்—தண்டம்—திருவோடு தொடுத்துச் சிவனடியார் பிடிக்கும் தண்டம். 'கட்டங்கம் வெல்கொடி கொண்டவன்—சிவபெருமான்.

(க—து). தன்னிடம் அன்புள்ள உமையைச் சிவபெருமான் தன் உடலில் ஒருகூறாகக் கொண்டான். தம்மை யடைந்த நட்பினரை நல்லோர் தம்முடல் முழுவதுமாகக் கொள்வர். (வேற்றுமையணி).

தாம்வேறு அவர்வேறு என்னும் வேறுபாடு இலராவர் என்பதாம்.

125. நட்பினிடம் உரையும் பொருளும் ஒத்தல்

புரையின்றி நட்டார்க்கு நட்டார் உரைத்த
உரையும் பொருண்முடிவும் ஒன்றால்.—உரைபிறிது
கொண்டெடுத்துக் கூறல், கொடுங்கழித் தண்சேர்ப்ப!
ஒன்றேற்றி வெண்படைக்கோ ளொன்று. 196

(ப–பொ). குற்றமின்றி நட்டார்க்கு நட்டார் சொல்லுஞ் சொல்லும் அச்சொல்லின் பொருண்முடிவும் தம்முள் ஒன்றாயே இருக்கும். தாம் உரைக்கும் உரையைத் தாம் செய்யும் செய்கையோடு வேறுபட வஞ்சனையால் கொண்டெடுத்துக் கூறுதல், கொடுங்கழித் தண்சேர்ப்பனே! ஒருவனது பாவினை ஏற்றி மற்றொருவன் பாவாகக் கட்டுதலோ டொக்கும்.

(பு–ரை). கொடுங் கழி தண் சேர்ப்ப–வளைவான கழியின் குளிர்ந்த சேர்ப்பனே! நட்டார் நட்டார்க்கு புரையின்றி உரைத்த உரையும்—நண்பினர் நண்பினருக்குக் குற்றமின்றிச் சொல்லும் சொல்லும், பொருள் முடிவும்–பொருள்முடிவும், ஒன்று–தம்முள் ஒன்றாயேயிருக்கும். உரை–தாம் சொல்லும் சொல்லை, பிறிதுகொண்டு–தாம் செய்யும் செய்கையோடு வேறுபட, எடுத்துக்கூறல்—வஞ்சனையாற் கொண்டு எடுத்துக்கூறல், ஒன்று ஏற்றி—ஒருவனது பாவினை ஏற்றி, ஒன்று வெண்படைக் கோள்—மற்றொருவன் பாவாகக் கட்டுதலோ டொக்கும். [ஆல்–அசை].

(க–து). சிநேகரிடம் சிநேகர் பேசும்போது தாம் கருதிய பொருளும் முடிபும் அதனைச் சொல்லும் சொல்லும் ஒத்திருக்கும். தம்முடைய செய்கையோடு பொருந்தாமல் வஞ்சனையாகச் சொல்லுதலானது, மற்றொருவனுடைய பாவை யேற்றி ஒருவன் பாவாகக் கட்டுவதை ஒக்கும்.

126. நட்பினரைப் பிரிதல் ஒல்லாமை

விலங்கேயும் தம்மோ டுடனுறைதல் மேவும்
கலந்தாரைக் கைவிடுதல் ஒல்லா. இலங்கருவி
தாஅ யிழியு மலைநாட! இன்னாதே
பேஎயோ டானும் பிரிவு. 122

(ப-பொ). விலங்காயினும் தம்மோடு உடனுறைதல் மேவும் கலந்தாரைக் கைவிடுதல் மாட்டா ஆதலால், இலங்காநின்ற அருவிகள் பாய்ந்து இழியாநின்ற மலை நாடனே! பேயோடாயினும தான் கலந்தபின்பு பிரிவு இன்னாது.

(ப-ரை). இலங்கு அருவி தாய் இழியும் மலைநாட—விளங்கும் அருவிகள் பாய்ந்து இழியாநின்ற மலைநாடனே! விலங்கேயும்—மிருக மாயினும், தம்மோடு உடனுறைதல் மேவும் கலந்தாரை—தம்மோடு ஒன்றாக வசித்தலைப் பொருந்திய நட்பினரை, கைவிடுதல் ஒல்லா—கைவிடுதல் மாட்டா. (ஆதலால்), பேயோடு ஆ(யி)னும் பிரிவு இன்னாதே—பேயோடாயினும் தான் கலந்தபின்பு பிரிவு துன்பந்தருவதேயாம்.

(க-து) தம்மோடு கலந்து பழகினவர்களை விட்டுப் பிரிதல் துன்பந் தருவதான காரியம்.

"இன்னா செயினும் இனிய ஒழிகென்று
தன்னையே தானோவி னல்லது,—துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல், கானக நாட!
விலங்கிற்கும் விள்ள லரிது."—நாலடியார்.

"பரீஇ யுயிர்செகுக்கும் பாம்பொடு மின்னா
மரீஇப் பின்னைப் பிரிவு"—நாலடியார்.

127. துன்புற்ற நட்பினர்க்குப் பொருளுதவி புரிதல்

இனியாரை யுற்ற இடாநீர் உபாயம்
முனியார் செயினும் மொழியால் முடியா.
துனியால் திரையுலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப!
பனியால் குளநிறைத லில். 236

(ப-பொ). தம்முடைய நட்டாரைப் பற்றிய வருத்தம் விடுதற்குச் செய்யும் முயற்சி வெறுப்பின்றியே மொழியாலே செய்தா ராயினும், மெய்வருத்தம் நீங்காது. அஃது என்போல என்னின், கடல் தனக்கு

உடையாமல் பற்றி உலாவும் திரைச்சேர்ப்பனே! மழை யாலன்றிப் பனியானது பெய்ததனால் குளம் நிறையாது, அதுபோல.

எனவே வார்த்தையால் பயன் இல்லை: கொடைப் பயனே வேண்டும் என்றவாறு.

(ப—ரை). திரை துனியால் உலா(வு) ம் துங்குநீர் சேர்ப்ப—அலை கள் உக்கிரமாக உலாவுதலான கடற்சேர்ப்பனே! பனியால் குளம் நிறைதல் இல்—(மழைபெய்தா லன்றிப்) பனிபெய்ததனால் குளம் நிறை யாது. (அதுபோல), இனியாரை உற்ற இடர்—தம்முடைய நட்டாரைப் பற்றிய வருத்தம், தீர் உபாயம்—தீர்தலான முயற்சியை, முனியார்—வெ றுப்பின்றி, மொழியால் செயினும்—மொழியாலே செய்தாராயினும், முடியா—மெய்வருத்தம் நீங்காது.

(க—து). பனி பெய்து குளம் நிறையாது; மழை பெய்தே நிறையும். நட்டார்க்குத் துன்பம் உண்டானால், வாயுபசாரத்தால் பயனில்லை; பொருளுதவி செய்தல் வேண்டும்.

பொருளால் முடியும் என்பது இசையெச்சம்.

*பழமொழி.*—Fair words butter no parsnips. The belly is not filled with fair words.

128. நட்டற்குத் தக்கார் தகார் என்பதில்லை

தாநட் டொழுகுதற்குத் தக்கார் எனல்வேண்டா.
யார்நட்பே யாயினும் நட்புக் கொளல்வேண்டும்.
கானட்டு நாறும் கதுப்பினாய்! தீற்றுதோ
நாய்நட்டால் நல்ல முயல்? 14

(ப—பொ). தாம் பிறரொடு நட்புக்கொண் டொழுகு தற்குத் தகுவர் தகார் என்று ஆராயவேண்டுவ தில்லை; யாவர் நட்பேயாயினும் நட்பைக் கொளல் வேண்டும். எல்லாப் பூக்களையும் உடைய காட்டினைவென்று நாறு கின்ற மயிரினையுடையாய்! தம்மைத் தீற்றுதோ நா யோடு நட்டால் அந்நாய் நல்ல முயலினை.

(ப—ரை). கான் அட்டு நாறும் கதுப்பினுய்—காட்டினை வென்று நாறுகின்ற மயிரினை யுடையாய்! நட்டால் நாய் நல்ல முயல் தீற்ரு தோ—தன்னேடு சிநேகம் பண்ணினுல் நாயானது நல்ல முயலினை உண்பியாதோ? தாம் நட்டு ஒழுகுதற்கு—தாம் பிறரோடு நட்புக்கொண் டொழுகுதற்கு, தக்கார் என வேண்டா—தக்கவரா என்று ஆராய்தல் வேண்டுவதில்லை. யார் நட்பே ஆயினும்—யாவர் நட்பேயாயினும், நட்பு—அந்நட்பை, கொளல் வேண்டும்—கொள்ளுதல் வேண்டும்.

(க—து). தன்னேடு நட்புக்கொண்டால் நாயானது நல்ல முயலின் மாமிசத்தை உண்பிக்கு மன்ரே. ஒருவர் தாம் ஈகை முதலிய நற் குணம் உடையவராயின், தம்மோடு எவர் நட்புக்கொள்ள விரும்பி னும், அவர் நட்புக்கொள்ளத் தக்கவரா அல்லரா என ஆராயத்தக்க அவசியம் இல்லை.

பழமொழி.—நாயோடு சேர்ந்தாலும் நல்ல முயல் கிடைக்கும்.

பிரதிபேதம்.—தானட்....யார்நட்ப தாயினும்.

## 129. அன்பிலார்நட்பின் பழமைபற்றிப் புதுநட்பை நீக்காமை

தீர்ந்தே மெனக்கருதித் தேற்ரு தொழுகித்தாம்
ஊர்ந்த பரிவும் இலராகிச்—சேர்ந்தார்
பழமைகந் தாகப் பரியார் புதுமை.
முழுநட்பிற் சாணுட்கு நன்று. 386

(ப—பொ). இவர்க்கு மிகத் தீர்ந்த நட்பினம் என்று கருதித் தெளிவில்லாதன செய்தொழுகி மனத்தின்கண் செல்கின்ற அன்பும் தம்மேல் இலராகித் தம்மைச் சார்ந் தொழுகினுர் பழமையே பற்ருகிய நட்பாகக் கொண்டு புதிய நட்பை நீக்கார். முழுநீளம் பொதுநட்பிற் சாணீ ளம் பொதுவுட்கே நன்று.

(ப—ரை). தீர்ந்தேம் என கருதி—(இவர்க்கு மிகத்) தீர்ந்த சிநேக முடையோம் என்று கருதி, தேற்ருது ஒழுகி—தெளிவில்லாதன செய் தொழுகி, தாம் ஊர்ந்த பரிவும் இலராகி—மனத்தின் கண் செல்கின்ற

அன்பும் தம்மேல் இலராகி, சேர்ந்தார்—தம்மைச் சேர்ந்தொழுகினு ருடைய, பழமை கந்தா (க)—பழமையே பற்றுகிய நட்பாகக் கொண்டு, புதுமை பரியார்—புதிய நட்பை நீக்கார். முழும் நட்பின்—முழுநீளம் பொதுநட்பைக் காட்டினும், சாண் உட்கு—சாணளம் பொதுவுட்கே, நன்று—நன்றும். [உட்கல்—அஞ்சல்—வெட்கல்].

(க—து). வேறுபாடான செய்கை யுடையவராய் மனத்தில் அன் பில்லாதவரை, இவர் நமக்குத் தீர்ந்த சினேகரென்று நினைத்து, அவரது பழமையையே நட்புக்குப் பற்றுகக் கொண்டு புதிய நட்பினரை நீக்கவேண்டா.

புதிய நட்பினன் நட்புக்குரியவனே அல்லனே என்று அஞ்சி யிருக்கினும் இருக்கலாம்: பழமையான நட்பாக இருந்தும் மனப் பற் றில்லாதவனிடத்தில் பொதுநட்பாக இருத்தல் ஆகாது என்று விளக்கவந்தவர் "முழுநட்பிற் சாணுட்கு நன்று" என்ற மூதுரையைக் காட்டினர்.

"தொன்மை மறவேல்" என்பது உண்மையேயாயினும், பழைய நட்பினரிடத்தில் விசுவாசம் இல்லாமையை அறிந்தவிடத்து அவரை நட்பினர் கணக்கில் சேர்க்கவேண்டா; கொள்ளத்தக்க புதிய நட்பி னரை நீக்கவேண்டா. அவரை நெகிழவிடுக; இவரைத் தழுவுக என்றவாறு.

## 130. நட்பினர் பழியைத் தூற்றுமை

கொழித்துக் கொளப்பட்ட நண்பி னவரைப்
பழித்துப் பலர்நடுவண் சொல்லாடார். என்கொல்?
விழித்தலரும் நெய்தற் றுறைவா! உரையார்
இழித்தக்க காணிற் கனு. 182

(ப—பொ). ஆராய்ந்து தம்மால் கொள்ளப்பட்ட நண்பினை யுடையாரைப் பலர் முன்னே பழித்துச் சொல் லாடல் ஆகாது. அது என்னை காரணம் எனின், விழித் தாற்போல அலராநின்ற நெய்தற் றுறைவனே! பிறர்க்கு உரைக்கத்தகாது இழிக்கத்தக்கனவற்றைக் கனவின் கண் காணின், அவற்றைப் பிறர்க்கு உரையார், அது போல.

(ப—ரை). விழித்து அலரும் நெய்தல் துறைவா—விழித்தாற்போல அலராநின்ற நெய்தல் துறைவனே! கொழித்து கொளப்பட்ட நண்பின் வரை—ஆராய்ந்து தம்மால் கொள்ளப்பட்ட நண்பினையுடையாரை, பலர் நடுவண்—பலர் முன்னே, பழித்து சொல்லாடார்—பழித்துச் சொல்லாடல் ஆகாது. என்கொல்—அது என்ன காரணம் எனின், இழித்தக்க—பிறர்க்கு உரைக்கத்தகாமல் இழிக்கத்தனவற்றை, கனு காணின்—கனுவின்கண் காணின், உரையார்—அவற்றைப் பிறர்க்கு உரையார் (அதுபோல).

(க—து). கனுவில் அனுசிதமானவைகளைக் கண்டால் பிறருக்கு வெளியிடார். அங்ஙனமே தேர்ந்துகொள்ளப்பட்ட சிநேகரிடத்தில் பழிக்கத்தக்கதைக் கண்டால் பிறரிடம் தூற்றார்.

"இலங்குநீர்த் தண்சேர்ப்ப! இன்னா செயினும்
கலந்து பழிகாணார் சான்றோர்."—நாலடியார்.

## 131. நண்பினரிடம் குற்றங்கண்டு கோபியாமை

கண்பொன்றித் தம்மாலே நாட்டப்பட் டார்களைக்
கண்கண்ட குற்றம் உளவெனினும் காய்ந்தீயார்.
பண்கொண்ட தீஞ்சொல் பணைத்தோளாய்! யாருளரோ
தங்கன்று சாக்கறப் பார். 16

(ப—பொ). நண்புசெய்து தம்மாலே நாட்டப்பட்டார்களைத் தம் கண் காண அவர்கள் செய்த குற்றம் உளவாயினும் வெகுளார். பண்கொண்ட தீஞ்சொல் பணைத் தோளாய்! தம் கன்றிற்குப் பால்கொடாதே அது சாம் வகைப் பசுவினைக் கறப்பார் யாவர் உளர்?

(ப—ரை). பண்கொண்ட தீம்சொல் பணைத்தோளாய்—பண்ணின் இயல்பைக் கொண்ட இனிமையான வார்த்தையும் மூங்கில்போன்ற தோள்களும் உடையாய்! நண்பு ஒன்றி தம்மாலே நாட்டப்பட்டார்களை — சிநேகம்பண்ணித் தம்மாலே நிலைநிறுத்தப் பெற்றவர்களை, கண் கண்ட குற்றம் உள எனினும்—பிரத்தியட்சமான குற்றம் அவரிடம் உண்டாயிருந்தாலும், காய்ந்தீயார்—கோபியார். தம் கன்று

சா(க)க் கறப்பார் யார் உளர்—தம் கன்றிற்குப் பால்விடாமல் அது சாகும் வகையாகப் பசுவினைக் கறப்பவர் எவர் உளர். [ஓ—அசை].

(க—து). தம்முடைய கன்றினிடம் குற்றங்கண்டு வெறுப்புற்று அதற்குப் பால்விடாமல் அது சாகுமாறு இரக்கமின்றி எவரும் பசுவினைக் கறவார். அதுபோல், தம்மால் நிலைநிறுத்தப்பெற்ற சினேகரிடம் குற்றங்கண்டு வெறுப்புற்று அவர்கள் கேடடையுமாறு தாட்சணியமின்றி எவரும் கோபியார்.

'காய்ந்தியார்' என்பது, சிலப்பதிகாரம் புறஞ்சேரி யிறுத்தகாதை 85—வது வரியில் 'கைவிடலீயான்' என்பது போன்றது: இதில் காய்ந்தி பகுதி. காய்ந்தி என்பது காய் என்னும் முன்னிலையேவற் றிரிசொல். கலித்தொகையில் 'மதித்தித்தை' என்பதை மதியென்னும் முன்னிலையேவற் றிரிசொல் என்றனர் நச்சினார்க்கினியர். "வல்லை நீ துறப்பையேல் வகைவாடு மிவளென, ஒல்லாங்கியா மிரப்பவும் உணர்ந்தியாயாயின்" என்னும் கலியில் 'உணராய்' என்பது 'உணர்ந்தியாய்' என வருகின்றது. "காய்ந்திலார்" என்றும் பாடம். சா(க)க் கறப்பார்—சாக்கறப்பார்: விகாரம். "கன்றுசாவப் பால் கறவாமை" என்பது சிறுபஞ்சமூலம்.

"வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே.
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு."—நாலடியார்.

பழமொழி.—கன்று சாகப் பால் கறப்பாரா.

பிரதிபேதம்.—நடக்கப்பட் டார்களை.

132. நட்பிற் பிழைபொறுத்தல்

தந்தீமை யில்லாதார் நட்டவர் தீமையையும்
எந்தீமை யென்றே உணர்பதாம்—அந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப!
ஒருவர் பொறையிருவர் நட்பு. 247

(ப—பொ). நட்டார்க்குத் தம்மால் செய்யப்பட்டதொருதீமை இல்லாதார், தமக்கு நட்டார் செய்த தீமையும் எம்மால் செய்யப்பட்ட தீமையென்றே நினைத்துத் தாம் பொறுப்பர்: அந்தண் பொருதிரை வந்துலாம்

பொங்குநீர்ச் சேர்ப்பனே! ஒருவர் பொறுக்கும் பொறை இருவர்க்கு நட்பாம் ஆதலான்.

(ப—ரை). பொரு—கரையோடு பொருதலான, அம்—அழகிய, தண்—குளிர்ந்த, திரை—அலைகள், வந்து உலா(வு)ம்—வந்து உலாவும், பொங்கு—பொஙகுதலான, நீர்ச்சேர்ப்ப—நீர்ச்சேர்ப்பனே! ஒருவர் பொறை—ஒருவர் பொறுக்கும் பொறுமை, இருவர் நட்பு—இருவர்க்கு நட்பாம். (ஆதலால்), தம் தீமை இல்லாதார்—(நட்டார்க்குத்) தம்மால் செய்யப் பட்டதொரு தீமையில்லாதவர், நட்டவர் தீமையையும்—தமக்கு நட்டார் செய்த தீமையையும், எம் தீமை என்றே—எம்மால் செய்யப்பட்ட தீமையென்றே நினைத்து, தாம் உணர்ப—தாம் பொறுப்பர்.

(க—து). சினேகிதர்க்குத் தாம் யாதொரு தீமையும் செய்யாதிருப்பவும், அவர் ஒரு தீமை செய்தால் அந்தத் தீமை தம்மால் வந்ததாகவே எண்ணிப் பொறுப்பர் நல்லோர்.

"பேதைமை யொன்ரோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்."—திருக்குறள்.

"இறப்பவே தீய செயினுந்தன் னட்டார்
பொறுத்தல் தகுவதொன் றன்றோ—நிறக்கோங்
குருவவண் டார்க்கும் உயர்வரை நாட!
ஒருவர் பொறையிருவர் நட்பு."—நாலடியார்.

*பழமொழி* —When one will not, two cannot quarrel.

133. தீர்க்கத்தக்கவரிடம் உற்ற குறை உரைத்தல்

தெற்றப் பரிந்தொருவர் தீர்ப்ப ரெனப்பட்டார்க்
குற்ற குறையை உரைப்பதாம்.—தெற்ற
அறையார் அணிவளை யாய்! தீர்த லுறுவார்
மறையார் மருத்துவர்க்கு நோய். 88

(ப—பொ). மிக இரங்கித் தன் துன்பத்தைக் கேட்டால் தீர்ப்பாரென்று தாம் கருதப்பட்டார்க்குத் தாம் காதலுற்ற காரியத்தை மறையாதே தாமுரைப்பர்:

அறுத்துச் செய்யப்பட்ட அணிவளையை யுடையாய்! நோய்தீர வேண்டுவார் அந்நோயை மருத்துவர்க்கு மறையார், அதுபோல.

(ப—ரை). அறை ஆர் அணி வளையாய்—அறுத்துச் செய்யப்பட்ட அழகிய வளையை யுடையாய்! தீர்தல் உறுவார் மருத்துவர்க்கு நோய் மறையார்—நோய் தீர வேண்டுவோர் மருத்துவர்க்கு அந்நோயை மறையார். (அதுபோல), தெற்ற பரிந்து தீர்ப்பர் எனப்பட்டார் ஒருவர்க்கு—மிகவும் பரிந்து தம் துன்பத்தைக் கேட்டால் தீர்ப்பரென்று தம்மால் எண்ணப்பட்டார் ஒருவரிடத்தில், தாம் உற்ற குறையை உரைப்பர்—தாம் விரும்பிய காரியத்தை மறையாமல் உரைப்பர்.

(க—து). நோயைத்தவறாமல் தீர்ப்பாரென்று துணியப்பட்ட வைத்தியரிடம் தமது நோயை மறையாமல் விளக்குவர்: தமது துன்பத்தைத் தீர்ப்பாரென்று துணியப்பட்டவரிடம் ஒருவர் தாம் விரும்பிய காரியத்தை மறையாமல் உரைப்பர்.

"வற்றிமற் றுற்றப் பசிப்பினும் பண்பிலார்க்
கற்ற மறிய உரையற்க—அற்றம்
மறைக்குந் துணையார்க் குரைப்பவே"—நாலடியார்.

"என்பா யுகினும் இயல்பிலார் பின்சென்று,
தம்பா டுரைப்பரோ தம்முடையார்?—தம்பா
டுரையாமை முன்னுணரும் ஒண்மை யுடையார்க்
குரையாரோ தாமுற்ற நோய்."—நாலடியார்.

## 134. கெட்டார்க்கு நட்டார் இல்லாமை

முட்டின் றொருவர் உடைய பொழுதின்கண்
அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே.
கட்டலர்தார் மார்ப! கலியூழிக் காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோ இல். 59

(ப—பொ). ஒருவர் குறைவின்றிச் செல்வமுடைய பொழுதின்கண் அவர் அட்டிலின்கண் உள்ளவதனைத் தின்பவர் ஆயிரவர் உள்ளாராவர்: கட்டலர்தார் மார்

பனே! கலியூழியாகிய காலத்துக் கெட்டார்க்கு நட்டார் ஒருவரும் இல்லை ஆதலான்.

(ப—ரை). கட்டு அலர்தார் மார்ப—கட்டிய பூமாலை தரித்த மார்பனே! ஒருவர் முட்டு இன்றி உடைய பொழுதின்கண்—ஒருவர் குறைவின்றிச் செல்வமுள்ள காலத்தில், அட்டிற்று—அவருடைய சமையலறையில் உள்ள உணவை, தின்பவர்—உண்ணுமவர், ஆயிரவர் ஆப—மிகப்பல ராவர். கலியூழி காலத்து—கலியுகமாகிய காலத்தில், கெட்டார்க்கு நட்டார் இல்—பொருள் கெட்டார்க்கு நண்பினர் ஒருவரும் இல்லை [ஓ—அசை].

அட்டிற்று—(அடு—சமை, அட்டில்—சமையல் வீடு)—சமையல் வீட்டிலுள்ளது—உணவு.

(க—து). வறுமை யடைந்த காலத்தில் எவரும் நெருங்கார்: செல்வமுள்ள காலத்தில் ஒருவ ருணவை உண்பவர் பலராவர்.

"காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர்—ஏலா
இடரொருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட!
தொடர்புடையேம் என்பார் சிலர்."—நாலடியார்.

"உண்டாய போழ்தின் உடைந்துழிக் காகம்போல்
தொண்டா யிரவர் தொகுபவே—வண்டாய்த்
திரிதருங் காலத்துத் தீதிலிரோ என்பார்
ஒருவரு மிவ்வுலகத் தில்."—நாலடியார்.

"கல்லோங் குயர்வரைமேல் காந்தள் மலராக்கால்
செல்லாவாம் செம்பொறி வண்டினம்.—கொல்லைக்
கலாஅற் கிளிகடியும் கானக நாட!
இலாஅர்க் கில்லை தமர்."—நாலடியார்.

பழமொழி.—He that is down, down with him. இப்பழமொழி திருக்குறளிலும் "கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ நெஞ்சே நீ, பெட்டாங் கவர்பின் செலல்" என்று உதகரித்திருக்கின்றது.

## 6. நட்பில் விலக்கு

### 135. காரியம்பற்றி நட்பவர்

*கண்ணுள் மணியேபோல் காதலால் நட்டாரும்*
*எண்ணுந் துணையிற் பிறராகி நிற்பரால்.*
*எண்ணி உயிர்கொள்வான் வேண்டித் திரியினும்*
*உண்ணுந் துணைக்காக்குங் கூற்று.* 89

(ப—பொ). ஒருவன் தன் கண்ணுள் மணியேபோல் அன்பினால் நண்புகொள்ளப் பட்டாரும் தம் காரியம் முடிய எண்ணிய அளவு வந்தவாறே பின்னை ஒருபொழுதும் நில்லாதே நட்பைவிட்டுப் பிறராய் நிற்பார்: ஆராய்ந்து ஒருவனுயிரைக் கொள்ளவேண்டித் திரியா நின்றதாயினும், அவ்வுயிரைத் தான் உண்ணுங்காலம் வருமளவும் அவ்வுயிர்க்குப் பிறிதோர் இடையூறுவராமல் காத்து, அக்காலம் வந்த அளவிலே கூற்றுவன் உண்ணும், அதுபோல.

(ப—ரை). கூற்று—யமன், எண்ணி உயிர்கொள்வான் வேண்டி திரியினும்—ஆராய்ந்து ஒருவனுயிரைக் கொள்ளவேண்டித் திரிந்து கொண்டிருந்தாலும், உண்ணும் துணை காக்கும்—தான் உண்ணுங்காலம் வருமளவும் (அவ்வுயிர்க்கு வேறோர் இடையூறும் வராமல்) காத்து (அக்காலம் வந்தவளவிலே) உண்ணுவான். (அதுபோல), கண்ணுள் மணியேபோல் காதலால் நட்டாரும்—ஒருவனைத் தம் கண்ணுள் கருமணியேபோல அன்பினால் நண்புகொண்டவரும், எண்ணும் துணையில்—(தம் காரியம் முடிய) எண்ணிய காலம் வந்த அளவில், பிறராகி நிற்பர்—(பின்பு ஒருபொழுதும் அந்நட்பின்கண் நில்லாதே நட்பை விட்டுப்) பிறராய் நிற்பர். [ஆல்—அசை].

(க—து). காலம் வருகிற வரையில் யமன் காத்திருப்பான். காரியம் ஆகிற வரையில் சிலர் சினேகமாயிருப்பர்: அப்பால் வேறுவர்.

"செறிப்பில் பழங்கூரை சேறணை யாக
இறைத்துநீ ரேற்றுங் கிடப்பர்—கறைக்குன்றம்
பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாட!
தங்கரும முற்றுந் துணை."—நாலடியார்.

## 136. உற்றுழி உதவாமை

எய்ப்புழி வைப்பாம் எனப்போற்றப் பட்டவர்
உற்றுழி ஒன்றுக் குதவலார், பைத்தொடீஇ!
அச்சிடை யிட்டுத் திரியின், அதுவன்றே
மச்சேற்றி ஏணி களைவு. 291

(ப—பொ). தமக்குத் தளர்வு வந்த காலத்துக்கு ஒரு வைப்பாம் இவரோடு நட்புக்கோடல் என்று கருதிப் பாதுகாத்து ஒருவரால் ஒழுகப்பட்டவர், அவ்வொழுகினார்க்கு ஓரிடர் உற்றுழி ஒன்றிற் குதவாராய், பசுந் தொடியை யுடையாய்! உதவாமைக்கு இடையூறாக ஓரச்சத்தின்மேலிட்டு மறுத்தொழுகின், ஒருவனை ஒருவன் மச்சேற்றிவைத்து ஏணியை வாங்கும் அதனோடொக்கும்.

பைங்தொடி என்பது பைத்தொடி என வலித்தல் விகாரம் பெற்றது. அச்சிடையிட்டுத் திரிதல்—மாறாக நீங்கி வேறுபடுதலுமாம்.

(ப—ரை). பைந்தொடீஇ—பசுந்தொடியை உடையாய்! எய்ப்பு உழி வைப்பு ஆம் என போற்றப்பட்டவர்—நமக்குத் தளர்வு வந்த காலத்து ஒரு நிதியாம் (இவரோடு நட்புக்கொள்ளுதல்) என்று கருதி நம்மால் ஆதரிக்கப்பட்டவர், உற்ற உழி—நமக்கு ஓரிடர் உற்றபோது, ஒன்றுக்கு உதவலார்—ஒன்றிற்கும் உதவாராய், அச்சு இடையிட்டு—(இடையில்) ஓர் அச்சத்தினை மேலிட்டு, திரியின்—மறுத்தொழுகின், அது—அச்செய்கை, மச்சு ஏற்றி ஏணி களைவு அன்றே—ஒருவனை ஒருவன் மச்சின்மீது ஏற்றிவைத்து ஏணியை வாங்கும் செய்கையோடொக்கும்.

(க—து). ஒருவனை மச்சின்மேல் ஏறவிட்டு ஏணியை நீக்கிவிட்டால், அங்கு நின்றும் இறங்குதற்கு வேறு வழியில்லாமல் அவர் இடர்ப்படுவர். ஆபத்தில் உதவுவார் என்று நம்பியிருந்த சினேகர், ஆபத்தில் உதவிபெறாதவிடத்து வேறுசெய்ய வழியறியாமல் இடர்ப்படுவர்.

பழமொழி.—ஏறவிட்டு ஏணியை வாங்கினாற்போல.

## 137. இறுதியில் உதவாமல் இறந்தபின் தவஞ்செய்தல்

பாப்புக் கொடியாற்குப் பான்மேனி யான்போலத்
தாக்கி யமருள் தலைப்பெய்யார்—போக்கி
வழியாய் நட்டார்க்கு மாதவம்செய் வாரே,
கழிவிழாத் தோளேற்று வார். 13

(ப—பொ). பாம்புக் கொடியையுடைய குருகுல வேந்தற்குப் போரின்கண் உதவிசெய்வதற்குத் தொடர்புடையனாகிய பால்வண்ணன் போல, நட்டார்க்காகத் தாக்கிய போரின்கண் தலைப்பெய்யாதே, தம்முடைய நட்டார் பட்டதற்பின் அவர்க்கு நன்றாகவென்று பெருந் தவஞ் செய்வார், விழாக்கழிந்த ஊரில் புதல்வரை விழாக் காண்டற் பொருட்டுத் தோள்மேல் ஏற்றுவாரோ டொப்பர்.

(ப—ரை). பாம்பு கொடியாற்கு—சர்ப்பக்கொடியையுடைய குருகுல வேந்தனுக்கு, பால் மேனியான்போல—(போரில் உதவிசெய்தற்கு உரியவனாகிய) பால்வண்ணன்போல, தாக்கி(ய) அமருள் தலைப்பெய்யார்—தாக்கிய போரின்கண் தலைகாட்டாமல், போக்கி வழியாய் நட்டார்க்கு மாதவம் செய்வார்—தம்முடைய நட்டார் இறந்தபின் அவர்க்கு நன்றாகவென்று பெருந்தவம் செய்பவர், கழி விழா தோள் ஏற்றுவார் ஏ—விழாக்கழிந்த ஊரில் புதல்வரை விழாக் காணுதல் நிமித்தமாகத் தோளின்மேல் ஏற்றுவாரோ டொப்பார்.

பாப்புக்கொடியான் — துரியோதனன். பான்மேனியான் — பலராமன்.

(க—து). வினைகள் துன்ப முற்றபோது உதவாமல் இறந்தபின் அவர்பொருட்டுத் தவம்செய்வோர், விழா நடந்தபின் விழாக்காணும் நிமித்தம் புதல்வனைத் தோளின்மேல் ஏற்றுவாரோ டொப்பர்.

'திருநாள் கழித்துத் தேரிழுக்க வந்தார்' என்கிற பழமொழிக் கிணங்கக் "கழிவிழாத் தேரேற்று வார்" என்றும் பாடபேதம் உண்டு என்று காட்டுகின்றது செந்தமிழ்ப்பதிப்பு.

"நறுமலர்த் தண்கோதாய்! நட்டார்க்கு நட்டார்
மறுமையுஞ் செய்வதொன் றுண்டோ?—இறுமளவும்
இன்புறுவ தின்புற் றெழீஇ யவரொடு
துன்புறுவ துன்புறுக் கால்."—நாலடியார்.

## 138. பேதையார் நட்பு

இடையீ டுடையார் இவரவரோ டென்று
தலையாயார் ஆராய்ந்தும் காணார்.—கடையாயார்
முன்னின்று கூறும் குறளை தெரிதலால்
பின்னின்ற பேதையார் நட்பு. 113

(ப—பொ). தமக்கு நட்பாயினாரைச் சிலர் குறளை உரைத்தால், அவரோடு இவர் வேறுபாடுடையராய் உரைத்தாரென்று கருதி, தலையாயினார் அக்குறளையை ஆராய்ந்து காணார். இனிக் கடையாயினார், தம் நட்டாரைப் பிறர் வந்து குறளை சொல்லியக்கால் அதனை மெய் யாகக்கொண்டு அந்நட்பை விடுவர் ஆதலால், கடைக் கால் இன்னாதாயே விடும் பேதையாரோடு கொண்ட நட்பு.

(ப—ரை). (தம்முடைய நண்பர்மேல் சிலர் கோள் சொன்னால்), தலையாயார்—தலையாயினார், இவர் அவரோடு இடையீடு உடையார் என்று—இவர் அவரோடு விரோதமுடையவராய்ச் சொன்னாரென்று கருதி, ஆராய்ந்தும் காணார்—அச்சொல்லை ஆராய்ந்தும் பாரார். கடையாயார்—கடையாயினார், முன்னின்று கூறும் குறளை தெரிதலால்—தம் நண்பர்மேல் பிறர் வந்து சொல்லும் கோளை மெய்யாகக்கொண்

வர். ஆதலால், பேதையார் நட்பு பின் இன்னா—பேதையரோடு கொண்ட நட்பு முடிவில் துன்பந்தருவதே யாகும்.

(க—து). மேலானவர் தம்முடைய சிநேகர்மீது பிறர்சொன்ன கோள் வார்த்தையைக் கவனியார். கீழானவரோ அங்ஙனம் சொன்ன கோள் வார்த்தையை நம்பிச் சிநேகத்தை விடுவர். ஆதலால் கீழானவரோடு கொண்ட சிநேகம் முடிவில் துன்பந்தருவதே யாகும்.

139. நன்றொழுகா நண்பினரால் நன்மையின்மை

தாமகத்தால் நட்டுத் தமரென் றொழுகியக்கால்
நாணகத்துத் தாமின்றி நன்றொழுகா ராயினென்?
மான்மானும் கண்ணாய்! மறந்தும் பரியலரால்.
கானகத் துக்க நிலா. 210

(ப—பொ). சிலர் தாம் நெஞ்சொடுகூடி நட்புச்செய்து சுற்றமென்னும்படி ஒழுகிய விடத்து நட்புக் கொள்ளப் பட்டார் தம்முடைய மனத்து நாணமின்றி நட்புக்குத் தக்க தன்மையின்கண்ணே நின்றொழுகாராயின், விடவே. மான்போலும் முகத்துக்கமர்ந்த கண்ணையுடையாய்! அந் நட்புக்கொண்டார் மறந்தும் இரங்குவாரல்லர். ஆதலால் அதுவன்றோ காட்டில் எறித்த நிலாப் போல்வது.

(ப—ரை). மான் மானும் கண்ணாய்—மான்போலும் முகத்துக் கமர்ந்த கண்ணையுடையாய்! தாம் அகத்தால் நட்டு—சிலர் தாம் மனப் பூர்வமாய்ச் சிநேகம்பண்ணி, தமர் என்று ஒழுகியக்கால்—உறவினரென்னும்படி ஒழுகியவிடத்தும், தாம் அகத்து நாண் இன்றி—தம்மால் சிநேகிக்கப்பட்டவர் தமது மனத்தில் நாணமின்றி, நன்று ஒழுகாராயின்—சிநேகத்துக்குத் தக்க நன்மையின் கண்ணே நின்றொழுகாராயின், என்—அந்தச் சிநேகத்தால் பலன் என்ன? மறந்தும் பரியலர்—அந்தச் சிநேகத்தைக் கொண்டார் மறந்தும் இரங்கார். கானகத்து உக்க நிலா—அந்தச் சிநேகம் காட்டில் எறித்த நிலவை ஒக்கும். [ஆல்—அசை].

(க—து). காட்டில் எறிக்கும் நிலவு காட்டினர்க்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும்; தானும் புகழ்பெறும்: நல்லாரோடு நட்புக்கொண்டவர் அவர்க்கும் மகிழ்ச்சியைக் கொடுப்பர்; தாமும் சிறப்படைவர். காட்டில் எறிக்கும் நிலவு ஒருவர்க்கும் மகிழ்ச்சியைக் கொடுப்பதில்லை; தானும் புகழ்பெறுதலில்லை: கீழ்மக்களிடம் நட்புச்செய்தவர் அவர்க்கும் மகிழ்ச்சியைக் கொடுப்பதில்லை; தாமும் சிறப்படைவதில்லை.

மான்மாணும்—மானமர்! பாடபேதம்.

140. நட்பின்மை செய்வாரிடம் தாமும் அதுசெய்தல்

கண்டறிவார்போலார்கெழீஇயின்மைசெய்வாரைப்
பண்டறிவார் போலாது தாமும் அவரேபோல்
விண்டொரீஇ மாற்றி விடுதல், அதுவன்றோ
விண்டற்கு விண்டல் மருந்து. 251

(ப—பொ). கண்டுவைத்துக் கண்டறிவார் போலாதே நட்பின்மை செய்வாரைத் தாமும் பண்டறிவார் போலாதே அவரைப்போலச் செய்து பிரிந்து நீங்கி நட்பினை மாற்றிவிடுதல் அதுவன்றோ ஒருவன் அன்பு விட்டதற்குத் தானும் அன்புவிடுதல் மருந்தாவது.

(ப—ரை) கண்டு அறிவார் போலாகார்—தம்மைக் கண்டுவைத்தும் கண்டறிவார் போலாகாமல், கெழீஇயின்மை செய்வாரை—நட்பின்மை செய்வாரை, தாமும் பண்டு அறிவார் போலாது — தாமும் அவரை முன் அறிவார் போலாகாமல், அவரே போல் விண்டு ஒரீஇ—அவரைப் போலவே செய்து பிரிந்து நீங்கி, மாற்றிவிடுதல்—நட்பினை மாற்றிவிடுக. அது — அச்செய்கை, விண்டற்கு விண்டல் மருந்து அன்றோ—ஒருவன் அன்புவிட்டதற்குத் தானும் அன்புவிடுதல் மருந்தாவது போலுமன்றோ.

"தம்மை யிகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க:
என்னை யவரோடு பட்டது."— நாலடியார்.

141. விசுவாசபாதகர்

பெரியநட் டார்க்கும் பகைவர்க்கும் சென்று
திரிவின்றித் தீர்ந்தார்போல் சொல்லி அவருள்
ஒருவரோ டொன்றி ஒருப்படா தாரே,
இருதலைக் கொள்ளியென் பார். 10

(ப—பொ). மிகத் தம்மை நட்பாகச் சேர்ந்து நட்புக் கொண்டார்க்கும் பகைவர்க்கும் சென்று, மனத்தால் ஒரு வேறுபாடின்றி மிக நட்பாயினார்போல இருதிறத்தாரையும் வேறுபடுக்கும் சில சொற்களைச் சொல்லி, மற்றவருள் ஒருவரோடு பொருந்தி ஒருப்பட்டு உறுதியாயின செய்யாதார், இரண்டு தலையானும் சுடுகொள்ளியோ டொப்பர்.

(ப—உரை). பெரிய நட்டார்க்கும் – தம்மை மிகவும் சிநேகித்தவருக்கும், பகைவர்க்கும்—தம்முடைய பகைவருக்கும், திரிவின்றி தீர்ந்தார்போல் – ஒரு வேறுபாடும் இன்றி மிகவும் சிநேகமானவர்போலே, சொல்லி – இருதிறத்தாரிடத்தும் சென்று இருதிறத்தாரையும் வேறுபடுக்கும் சில சொற்களைச் சொல்லி, அவருள் ஒருவரோடு ஒன்றி ஒருப்படாதாரே – அவருள் ஒருவரோடும் பொருந்தி ஒன்றுபட்டு உறுதியாயின செய்யாதவரே, இருதலைக் கொள்ளி என்பார் – இரண்டு தலையானும் சுடுகொள்ளியோ டொப்பர்.

திரிவின்றித் தீர்ந்தார் – மனமொத்த நண்பினர்.

(க—து). தம்மோடு நட்புச்செய்தவரிடத்தும் அவருடைய பகைவரிடத்தும் சென்று, தனித்தனியே இருவருக்கும் உரிய நட்பினர்போல் நடித்து, அவ்விருவருடைய பகையை அதிகப்படுத்துவதன்றி, அவ்விருவருள் ஒருவரிடத்தாயினும் மனம்பொருந்தி நன்மை தரத்தக்க காரியங்களைச் செய்யாதவர், இருதலையாலும் சுடுகின்ற கொள்ளியோ டொப்பர். இப்படிப்பட்டவர்க்கு இடங்கொடுத்தலாகாது என்பதாம்.

முதலிரண்டடியின் கருத்தாவது–To be Jack on both sides.

## 7. பிறரியல்பைக் குறிப்பாலறிதல்

**142.** குணங்களைச் செய்கையால் அறிதல்

பேருலையுள் பெய்த அரிசியை வெந்தமை
ஓர்மூழை யாலே உணர்ந்தாங்—கியார்கண்ணும்
கண்டதனால் காண்டலே வேண்டுமாம். யார்கண்ணும்
கண்டது காரணமா மாறு. 348

(ப—பொ). கொதிக்கின்ற பெரிய உலையின்கண்ணே பெய்த அரிசியை வெந்தவண்ணம் ஒரு மூழையினாலே முகந்து அதனை உணர்ந்தவாறுபோல, யாவர்மாட்டும் கண்ட செய்கையைக் கொண்டே அவர் மாட்டுள்ள மற்றைக் குணங்களையும் அறியவேண்டுமாகும்: யாவர் மாட்டும் யாதொரு பொருட்கும் காணப்பட்ட குணமே, காணாத குணங்களை அறிதற்குக் காரணமாம் ஆதலான்.

(ப—ரை). யார் கண்ணும் — யாவரிடத்தும், கண்டது — ஒரு பொருளினிடம் காணப்பட்ட குணமே, காரணம் ஆமாறு — காணாத குணங்களை அறிதற்குக் காரணமாம் விதம். (ஆதலால்), பேருலையுள் பெய்த அரிசியை — கொதிக்கின்ற பெரிய உலையின்கண்ணே போகட்ட அரிசியை, வெந்தமை—வெந்தவிதம், ஓர் மூழையாலே உணர்ந்தாங்கு— ஓர் அகப்பையாலே அறிந்த விதம்போல, யார் கண்ணும் — யாவர் மாட்டும், கண்டதனால் ஏ—கண்ட செய்கையைக் கொண்டே, காண்டல் வேண்டும் — அவரிடமுள்ள மற்றக் குணங்களையும் அறிய வேண்டும்.

(க—து). உலையிலிட்ட அரிசி வெந்ததை ஓரகப்பையாலே அறிவதுபோல, ஒருவருடைய குணங்களை அவரிடம் கண்ட ஒரு செய்கையால் அறியலாம்.

143. கண்ணின் கூர்மை

யாந்தீய செய்த மலைமறைத்த தென்றெண்ணித்
தாந்தீயார் தந்தீமை தேற்றரால்.—ஆம்பல்
மணவில் கமழும் மலிதிரைச் சேர்ப்ப!
கணையிலுங் கூரியவாம் கண். 174

(ப—பொ). யாம் செய்த தீவினைகளைப் பிறர்க்கு வெளிப்படாமல் மலை மறைத்ததென்று கருதித் தீயார் தாம் செய்த தீமையைத் தெளியார். ஆம்பற்பூக்கள் கலியாணம் செய்யும் மனைபோலக் கமழாநின்ற மலிதிரைச்

சேர்ப்பனே! அம்பினும் கூரியவாய், உட்புக்கு, கண்கள், மறையச் செய்த பொருள்களைக் காணவல்லவாம்.

அம்பு குறித்தெய்த தானமொழித்துப் படாது: கண் பலவிடத்தும் படும் என்பதாம்.

(ப—ரை). ஆம்பல்—அல்லி, மண இல்—கலியாண வீடுபோல, கமழும்—கமழாநின்ற, மலி திரை சேர்ப்ப—மிக்க அலைகளையுடைய சேர்ப்பனே! யாம் செய்த தீய — யாம் செய்த தீவினைகளை, மலை மறைத்தது என்று எண்ணி—(பிறர்க்கு வெளிப்படாமல்) மலை மறைத்தது என்று கருதி, தீயார் — தீயவர், தம் தீமை தாம் தேற்றார் — தாம் செய்த தீமையைத் தெளியார். கண் கணையிலும் கூரியவாம்—மறையச் செய்த பொருள்களைக் கண்கள் அம்பினும் கூரியவாய் உட்புக்குக் காணவல்லனவாம்.

(க—து). அம்பு குறித்தெய்த இடமன்றி வேறிடத்தில் படாது: காணுதலான பலவிடத்தும் கண் படும். ஆகவே பிறர்க்கு வெளிப் படாவென்று நினைத்துத் தீயார் செய்யும் தீமைகளைக் குறிப்பால் அறியக் கண்ணே சிறந்த கருவியாம்.

> "குறிப்பின் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
> என்ன பயத்தவோ கண்."—திருக்குறள்.

## 144. கருத்தை முகம் அறிவித்தல்

> வெள்ளம் வருங்காலை ஈரம்பட் டஃதேபோல்
> கள்ள முடையாரைக் கண்டே அறியலாம்.
> ஒள்ளமர் கண்ணாய்! ஒளிப்பினும் உள்ளம்
> படர்ந்ததே கூறும் முகம். 41

(ப—ரை). அமர் ஒள் கண்ணாய்-பொலிவுற்ற ஒள்ளிய கண்ணாய்! வெள்ளம் வரும் காலை—வெள்ளம் வருகிற காலத்தில், ஈரம்பட்டஃதே போல்—ஆற்றின் நிலத்தில் ஈரம் உண்டானதினால் வெள்ளம் வரப் போகிறதென்று அறிவதுபோல், கள்ளம் உடையாரை — வஞ்சனையான எண்ணம் உடையார்களை, கண்டே அறியலாம்—முகத்தைக் கண்டே அறிவுடையார் அறிதல் கூடும். ஒளிப்பினும்—ஒருவர் தம்

கருத்தை வெளித்தோன்றுமல் மறைப்பாராயினும், உள்ளம் படர்ந்ததே—அவர் மனத்தில் நினைப்பதையே, முகம் கூறும்—அவருடைய முகம் வெளிப்படுத்தும்.

(க—து). ஆற்றில் முன்னே உண்டாகிற ஈரத்தினுல் பின்னே வெள்ளம் வருமென்று அறியலாம். அதுபோல ஒருவர் முகக்குறிப்பினுல் மனதில் உள்ள வஞ்சனையான எண்ணத்தை அறிந்துகொள்ளலாம், அவர் மறைக்கலுற்றாலும் முகம் வெளிப்படுத்து மாதலால்.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டு முகம்."

"முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும்."—திருக்குறள்.

பழமொழி.—"In the forehead and the eye, the lecture of the mind doth lie."

145. முகத்தையறிவார் கருத்தையறிதல்

நோக்கி அறிகல்லாத் தம்முறுப்புக் கண்ணுடி
நோக்கி அறிப. அதுவேபோல்—நோக்கி
முகனறிவார் முன்னம் அறிப. அதுவே
மகனறிவு தந்தை யறிவு. 301

(ப—பொ). தம் கண்ணுல் நோக்கி அறிகில்லாத தம் உறுப்பாகிய முகத்தைக் கண்ணுடிக்கண்ணே நோக்கி அறிவர். அதுபோல நோக்கி ஒருவன் முகத்தை அறிவார் அவனைக் கருத்தை அறிவார். அத்தன்மை, மகனறிவு அவன் தந்தையறிவுபோன் றிருக்கும்.

(ப—ரை). நோக்கி அறிகல்லா தம் உறுப்பு—தம் கண்ணுல் நோக்கி அறியமுடியாத தம்முறுப்பாகிய முகத்தை, கண்ணுடி நோக்கி அறிப—கண்ணுடியில் நோக்கி அறிவர். அதுபோல் ஏ—அதுபோலவே, நோக்கி முகன் அறிவார்—நோக்கி ஒருவன் முகத்தை அறிவார், முன்னம் அறிப—அவன் கருத்தை அறிவார். அது—அத்தன்மை, மகன் அறிவு தந்தையறிவு —மகனறிவு அவன் தந்தையறிவுபோன் றிருக்கும்.

(க—து). மகனறிவை அறிதற்குத் தந்தையறிவை அறிவது போதும். ஒருவர் மனக்குறிப்பை அறிதற்கு முகக்குறிப்பை அறிவது போதும். கண்ணாடி முகத்தைக் காட்டுவதுபோல முகம் அகத்தைக் காட்டு மாதலால்.

"முன்னம் முகம்போல முன்னுரைப்பதில்."—நான்மணிக்கடிகை.

"மகனறிவு தந்தை யறிவு" என்னும் பழமொழி இங்கே உவமா னமாக வந்திருக்கிறது. நாலடியாரில் அது

"செந்நெல்லா லாய செழுமுளை மற்றுமச்
செந்நெல்லே யாகி விளைதலால்,—அந்நெல்
வயனிறையக் காய்க்கும் வளவய லூர!
மகனறிவு தந்தை யறிவு."

என உவமேயமாக வருகின்றது.

146. குலத்தால் குணத்தை அறிதல்

ஒருமொருவர் ஒருவர்தம் உள்ளத்தைத்
தேரும் திறமரிதால்: தேமொழி!—யாரும்
குலக்குல வண்ணத்த ராகுப: ஆங்கே
புலப்புல வண்ணத்த புள். 340

(ப—பொ). ஒருவ ருள்ளக் கிடைப்பாட்டை ஒருவ ரால் ஆராயு மளவு அரிதாகலான், தேன்போலும் மொழி யையுடையாய்! யாவரும் தாம் பிறந்த குலத்துக்குத் தக்க தன்மையாய் இருப்பர்: தாம் வாழும் புலத்துக் குத்தக்க தன்மையாய் இருக்கும் புட்கள், அதுபோல.

(ப—ரை). தேம் மொழி—தேன்போலும் மொழியை யுடையாய்! ஒருவர்தம் உள்ளத்தை – ஒருவருடைய உள்ளத்தின் தன்மையை, ஒரும் ஒருவர்—அறிய விரும்பும் ஒருவரால், தேரும் திறம் அரிது— ஆராயும் திறம் அரிது. புலப்புல வண்ணத்த புள் – தாம் வாழும் புலத்துக்குத் தக்க தன்மையாயிருக்கும் புட்கள். ஆங்கே—அதுபோல, யாரும்—யாவரும், குலக்குல வண்ணத்தர் ஆகுப—தாம் பிறந்த குலத் துக்குத் தக்க தன்மையா யிருப்பர். [ஆல்—அசை].

(க—து). பறவைகள் தாம் வாழும் புலத்துக்குத் தக்க தன்மையா யிருப்பதுபோல, மனிதர் தாம்பிறந்த குலத்துக்குத் தக்க தன்மையரா யிருப்பர். ஆகவே ஒருவருடைய உள்ளத்தின் தன்மையை அறிவதற் குக் குலம்போல மற்றவை நல்ல சாதன மாகா.

"குலத்தளவே யாகுங் குணம்."—ஔவையார்.

## 147. குணத்தால் குலத்தை அறிதல்

காப்பான் மடமகள் காப்பான்கைப் பட்டிருந்தும்
மேய்ப்பாட்ட தென்றுண்ணா ளாயினாள்.—தீப்புகைபோல்
மஞ்சாடு வெற்ப! மறைப்பினும் ஆகாதே
தஞ்சாதி மிக்கு விடும். 285

(ப—பொ). நிரைகாக்கும் இடையனுடைய மடமகள், மண்காக்கும் மன்ன னொருவனுக்குத் தேவியாயிருந்தும், ஒருநாள் பால் உண்கின்றாள், "மேயாநின்ற ஆட்டினைக் கறந்த பால் இதுவாதலான் மதுரமாயிருந்ததில்லை" என்று அப்பாலை உண்ணாளாயினாள், தான் பிறந்த குலத்தை அறிவித்தாள். தீயினது புகையைப் போலும் மஞ்சு சென்று உலாவும் வெற்பனே! தான் மறைத்தா ளாயினும், அம்மறைப்பின் வழியாகாது, தம் சாதித்தன்மை மிக்குப் பிறந்த குலத்தை அறிவித்துவிடும், அவள் அறி வித்தவாறு போல.

(ப—ரை). தீ புகைபோல்—தீயினது புகையைப்போலும், மஞ்சு ஆடு — மேகம்சென்று உலாவும், வெற்ப — வெற்பனே! காப்பான் மட மகள் — மந்தைகாக்கும் இடையனுடைய இளம்பெண், காப்பான் கைப்பட் டிருந்தும் — பூமிகாக்கும் அரசனொருவனுக்கு மனைவியாயி ருந்தும், (ஒருநாள் பால் உண்ணும்போது), மேய்ப்பு ஆட்டது என்று உண்ணாள் ஆயினாள் — 'மேய்வதாகிய ஆட்டினதுபால் இது ஆதலால் மதுரமாயில்லை' யென்று அப்பாலை உண்ணவில்லை மறைப்பினும்— ஒருவர் மறைத்தாராயினும், ஆகாது—மறைத்தலாகாமல், தம் சாதி — தம் சாதித்தன்மை, மிக்குவிடும் — மேற்பட்டுப் பிறந்த குலத்தை அறிவித்துவிடும்.

பழமொழி.—சாதிக்குத் தக்க புத்தி, குலத்துக்குத் தக்க ஆசாரம்.

## 148. இனத்தால் இயல்பை அறிதல்

முயலவோ வேண்டா முனிவரை யானும்:
இயல்பினர் என்ப தினத்தால் அறிக.
கயலியலும் கண்ணாய்! கரியரோ வேண்டா.
அயலறியா அட்டூணோ இல். 237

(ப—பொ). இத்தன்மையாகிய இயல்பினையுடையர் என்றறிதற்கு மற்றொன்றால் முயன்று அறியவேண்டுவ தொன்றில்லை. வெறுத்தவரையாயினும் வெறாதவரையா யினும் அவர் கூடிய இனத்தாலே அறிந்துவிடுக. கயலி னோடு மாறுபடும் கண்ணினையுடையாய்! அதற்கு நடுச் சொல்வார் வேண்டுவதில்லை (அந்த இனத்தாரே சொல் வர்): அயல் மனையாரால் அறியப்படாத அட்டூண் இல்லை, அதுபோல.

(ப—ரை). கயல் இயலும் கண்ணாய் – சேல்மீனோடு மாறுபடும் கண்ணினையுடையாய்! அயல் அறியா அட்டூண் இல்லை – அயல் மனை யாரால் அறியப்படாத அட்டூண் இல்லை. (அதுபோல), இயல்பு இ(ன்)னர் என்பது – இத்தன்மையாகிய இயல்பினையுடையார் என் றறிதற்கு, முயலவோ வேண்டா – மற்றொன்றால் முயன்றறிய வேண் டுவதொன் றில்லை. முனிவரை யானும் இனத்தால் அறிக – முனி வரையேயாயினும் அவர் கூடிய இனத்தாலே அறிந்துவிடுக. கரியர் வேண்டா – அதற்குச் சாட்சிசொல்வார் வேண்டுவதில்லை. [கரியரோ— ஓ—அசை].

இயல்பினர் – இயல்பு இன்னர்: இன்னர் என்பது தொகுத்த லாயிற்று. அட்டூண் – சமைத்த உணவு.

"மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி. இனத்தானாம்
இன்னா னெனப்படும் சொல்."—திருக்குறள்.

பழமொழி.—அடுத்ததன் தன்மை ஆத்துமா ஆகும். Tell me the company you keep, and I will tell you what you are. Tell me with whom thou goest, and I will tell thee what thou doest. "You may know him by his company."

# III

## 1. முயற்சி

### 149. தாம் நன்மையடைதற்குத் தாமே காரணம்

*எமக்குத் துணையாவார் வேண்டுமென் றெண்ணித்*
*தமக்குத் துணையாவார்த் தாந்தெரிதல் வேண்டா.*
*பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோ!மற் றில்லை.*
*தமக்கு மருத்துவர் தாம்.* 56

(ப—பொ). எமக்கு ஓரிடர் வந்தால் துணையாவார் வேண்டுமென்று கருதித் தமக்குத் துணையாவாரைத் தாம் தேடல் வேண்டா. பிறர்க்குப் பிறர்செய்வது ஒன்றுண் டோ? ஆதலான் மற்றுத் துணையாவாரைக் கண்டிலேம்: தமக்கு மருத்துவர் தாமே ஆதலான்.

(ப—ரை). தமக்கு மருத்துவர் தாம்—தமக்கு மருத்துவராவார் தாமே. (ஆதலால்), எமக்கு துணையாவார் வேண்டும் என்றெண்ணி—எமக்கு (ஒரு துன்பம் வந்தால்) துணையாகின்றவர் வேண்டுமென்று கருதி, தமக்கு துணையாவார் — தமக்குத் துணையாவாரை, தாம் தெரிதல் வேண்டா—தாம் தேடல்வேண்டா. பிறர்க்கு பிறர் செய்வது உண்டோ—பிறர் ஒருவருக்குப் பிறர் செய்யலாவது யாதேனும் ஒன்று உண்டோ? மற்று இல்லை — (துணையாவாரைக் கண்டிடினும்) ஒரு நன்மையும் உண்டாகாது.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய, தற்றதுபோற் றியுணின்" என்பவாதலின், நோய் வராமல் பரிகரித்துக்கொள்ளு தல் ஒவ்வொருவருக்கும் இயலும். "தன்னுயக்குத் தானே மருந்து." முற்பிறப்பில் செய்த வினைகட் கேற்றவாறு இப்பிறப்பில் நன்மை தீமை நடப்பதை அறிந்தவன், இப்பிறப்பில் நன்மையே செய்து வருபிறப்பில் நன்மையே அடையலாம். எவர் துணை நிற்பினும் நில்லாவிடினும் ஊழ் தவறாது.

(க—து). தம்முடல் நோய் நீங்கியிருப்பதற்குத் தாமே மருத்துவ ராதல்போலத் தாம் நன்மை பெறுவதற்குத் தாமே காரண மாதலால் பிறர்துணை வேண்டுவதின்று. ஆகவே நன்மையின் பொருட்டே முயற்சிசெய்க என்பதாம்.

"தானே தனக்குப் பகைவனு நட்டானும்:
தானே தனக்கு மறுமையு மிம்மையும்:
தானேதான் செய்த வினைப்பயன் துய்த்தலால்,
தானே தனக்குச் சுரி."—அறநெறிச்சாரம்.

பழமொழி.—Every man is his own doctor.

150. கற்றதின்றியும் கருமமுடிப்பவன்

கற்றதொன் றின்றி விடினும் கருமத்தை
அற்ற முடிப்பான் அறிவுடையான்:—உற்றியம்பும்.
நீத்தநீர்ச் சேர்ப்ப! இளையானே யாயினும்
மூத்தானே யாடு மகன். 186

(ப—பொ). காலநிகழ்ச்சியும் தேசநிகழ்ச்சியும் முதலாயின அறியத்தக்க நூல்களைக் கற்குந் தன்மை ஒன்றின்றி இருந்தானாயினும், மடியின்றியே எக்காலமும் காரியத்தின்கண்ணே முயலுவான், அறிவுடையான்: கருமத்தைக் குறையறவே உற்றுச் சொல்லாநிற்பன். பிரளயகாலம் போலப் பரக்கும் நீரையுடைய சேர்ப்பனே! இளையனேயாயினும் ஆடுமகன் மூப்பனாயினாற்போல.

அஃது கல்வி வேறு கருமச்சூழ்ச்சி வேறு. இளையனாயினும் மூத்தான், மடியின்றிக் காரியத்தின்கண் முயல்வான் என்றுமாம்.

(ப—ரை). நீத்தம் நீர் சேர்ப்ப—பிரளயகாலம்போல் பரக்கும் நீரையுடைய சேர்ப்பனே! கற்றது ஒன்று இன்றிவிடினும்—கற்றது சிறிதும் இல்லாவிட்டாலும், கருமத்தை அற்றம் முடிப்பான்—காரியத்தின்கண் சோம்பலின்றி முயல்பவன், அறிவுடையான்—அறிவுடையா

னுவன்: உற்று இயம்பும்—கருமத்தைக் குறையறவே சூட்சமித்துச் சொல்லாநிற்பான். ஆடு மகன்—கருமம் செய்பவன், இளையானே ஆயினும்—வயதில் இளையவனேயாயினும், மூத்தானே—முதிர்வயதுடையவனே யாவான்.

பழமொழி. — அறியாப் பிள்ளையானாலும் ஆடுவான் மூப்பு. Grey head over green shoulders.

151. வருந்தார் வாழ்க்கை திருந்தாமை

வேளாண்மை செய்து விருந்தோம்பி வெஞ்சமத்து
வாளாண்மை யாலும் வலியராய்த்—தாளாண்மை
தாழ்க்கு மடிகோ ளிலராய் வருந்தாதார்
வாழ்க்கை திருந்துத லின்று. 175

(ப—பொ). பிறர்க்கு உபகாரஞ்செய்து, வந்த விருந்துகளையும் ஓம்பி, வெய்ய போரின்கண் வாளால்செய்யும் ஆண்மையாலும் வலியராய், தாளாண்மையைக் குறைவிக்கும் சோம்பு கோடலை இலராய் முயன்று வருந்தாதாருடைய மனைவாழ்க்கை திருந்துதலில்லை.

(ப—ரை). வேளாண்மை செய்து—பிறர்க்கு உபகாரம்செய்து, விருந்து ஓம்பி—வந்த விருந்தினரை உபசரித்து, வெஞ்சமத்து வாளாண்மையாலும் வலியராய்—வெய்ய போரின்கண் வாளால்செய்யும் ஆண்மையாலும் வலியராய், தாளாண்மை தாழ்க்கும் மடிகோள் இலராய்—முயற்சியைக் குறைவிக்கும் சோம்பலைக் கொள்ளுதல் இல்லாதவராய், வருந்தாதார் வாழ்க்கை—முயன்று வருந்தாதாருடைய மனைவாழ்க்கை, திருந்துதல் இன்று—செப்பமடைதல் இல்லை.

(க—து). சோம்பலுக் கிடங்கொடாமல் முயன்று வருந்தினால் மனை வாழ்க்கை செப்பமடையும்.

பழமொழி.—வருந்தினால் வாராத தில்லை. It is perseverance that prevails.

152. ஒருவகையாலும் முயலாதவர் ஒருநாளும் வாழார்

ஒன்றால் சிறிதால் உதவுவதொன் றில்லையால்
என்றூங் கிருப்பின் இழுக்கம் பெரிதாகும்.
அன்றைப் பகலேயும் வாழ்கலார், நின்றது
சென்றது பேரா தவர். 297

(ப-பொ). பொருள் ஒன்றென்றும், சிறிதென்றும், நாம் எடுத்துக்கொண்டது முடிக்கப் போதாதென்றும், முயலாது மடிந்திருப்பின், குற்றம் பெரிதாகும். ஒரு நாளும் வாழமாட்டார், தம்மாட்டு நின்ற பொருளைப் பிறர்மாட்டுப் பெயர்த்தும், பிறர்மாட்டுச் செல்லப் பெயர்த்த பொருளைத் தம்மாட்டு வரப்பெயர்த்தும் ஒரு வகையான் முயலவுமாட்டாதார். [போகாதென்றும்—பாடபேதம்.]

(ப-ரை). ஒன்று என்று—உள்ள பொருள் ஒன்றென்றும், சிறிது என்று – சிறிதென்றும், உதவுவதொன்றில்லை என்று – (ஆதலால்) நாம் எடுத்துக்கொண்ட காரியத்தை முடிக்கப் போதுமான உதவி இல்லையென்றும், இருப்பின்—முயலாமல் சோம்பியிருப்பின், இழுக்கம் பெரிதாகும்—குற்றம் பெரிதாகும். நின்றது சென்றது பேராதவர்—தம்மிடத்திருந்த பொருளைப் பிறரிடத்துக் கொடுத்தும் பிறரிடத்துக் கொடுத்த பொருளை மீளக்கொண்டும் எவ்விதத்திலும் முயற்சி செய்ய மாட்டாதவர். அன்றைப் பகலேயும் வாழ்கலார்—ஒருநாளும் வாழமாட்டார். [ஆல்—ஆல்—ஆல்—ஆங்கு—அசை].

(க-து). போதுமான பொருள் இல்லை; போதுமான உதவியில்லை; ஆதலால் எடுத்த காரியம் இனிது முடியாதென்று சோம்பியிருப்பது குற்றம். தம்முடைய பொருளைப் பிறரிடம் கொடுத்தும் பிறரிடம் கொடுத்த பொருளைக் கேட்டு வாங்கியும் முயலாதவர் ஒருநாளளவும் வாழமாட்டார்.

"குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு."—திருக்குறள்.

153. வெருது முயல்பவர் விரும்பிய தடைவர்

இனியாரு மில்லாதார் எம்மிற் பிறர்யார்
தனியேம்யாம் என்றொருவர் தாமடியல் வேண்டா:
முனிவில ராகி முயல்க. முனிவில்லார்
முன்னிய செய்தாமை யில். 161

(ப-பொ). இப்பொழுது பற்றாக ஒருவரையும் இல்லாதார் எம்மைப்போல் பிறர் யாவர்? தாம் தனியேம் ஆயினேம் என்று ஒருவர் நினைத்து முயற்சி தவிர வேண்டா. வெறுப்பிலராய் முடியாதே கருமம் செய்யவே முயல்க: மனத்தின் வெறுப்பில்லாதார் தாம் நினைத்தது பெருதொழிதல் இல்லை ஆகலான்.

(ப-ரை). யாம் தனியேம்—யாம் தனியே மாயினேம்; இனி யாரும் இல்லாதார் எம்மின் பிறர் யார் என்று—இப்பொழுது (சார்வாக) ஒருவரையும் இல்லாதார் எம்மைப்போல் எவருளர் என்று நினைத்து, ஒருவர் தாம் மடியல்வேண்டா—ஒருவர் தாம் (முயற்சி தவிர்ந்து) சோம்புதல் வேண்டா. முனிவு இல்லார்—(கருமத்தில்) வெறுப்பில்லாதவர், முன்னியது—நினைத்ததை, எய்தாமை இல்—பெருதொழிதல் இல்லை; (ஆதலால்), முனிவு இலராகி முயல்க—வெறுப்பு இல்லாராய் (கருமம் செய்யவே) முயல்க.

(க-து). நமக்குச் சார்பானவர் இல்லையேயென்று சோம்பலடையாமலும் வெறுப்படையாமலும் முயற்சிசெய்தால் முடியாத காரியம் இல்லை.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."—திருக்குறள்.

154. காரியசித்தி அடையும் வழி

தற்றூக்கித் தன்றுணையுந் தூக்கிப் பயன்றூக்கி
மற்றவை கொள்வ மதிவல்லார்.—அற்றன்றி
யாதானும் ஒன்றுகொண் டியாதானும் செய்தக்கால்
யாதானும் ஆகி விடும். 321

(ப—பொ). தான் செய்துகொள்ளத்தக்க தன்மையும் விசாரித்து, தனக்குத் துணையாவாரையும் விசாரித்து, ஒன்றைச் செய்து முடித்தால் அதனால் பெறும்பயனையும் விசாரித்து, உற்றிருந்ததாகில் அதனைச் செய்துகொள்ளுவார் அறிவுடையார். அப்பெற்றியானவை ஆராயாதே தான் முடித்துக்கொள்ளவேண்டும் பொருட்டுத் தகுதியில்லாததோர் கருவிகொண்டு அதற்குத் தகுதியில்லாத செய்கையைச் செய்தால், தான் நினைந்தபொருளன்றி மற்றொன்று விளைந்து தனக்கு இடும்பையைத் தரும்.

(ப—ரை). தன் தூக்கி—தான் செய்துகொள்ளத்தக்க தன்மையை ஆராய்ந்து, தன் துணையும் தூக்கி—தனக்குத் துணையாவாரையும் ஆராய்ந்து, பயன் தூக்கி—(நினைத்த காரியத்தை முடித்தலால்) பெறுதலான பயனையும் ஆராய்ந்து, அவை-வாய்க்கத்தக்கவைகளை, கொள்வர்—செய்துகொள்வர், மதிவல்லார்—அறிவுடையார். அற்று · அன்றி — அவ்விதத்தால் அவைகளை ஆராயாதே, யாதானும் ஒன்றுகொண்டு—தம் காரியத்துக்குத் தகுதியல்லாத ஒரு கருவிகொண்டு, யாதானும் செய்தக்கால்—அதற்குத் தகுதியில்லாத செய்கையைச் செய்தால், யாதானும் ஆகிவிடும்—தான் நினைத்ததன்றி மற்றொன்று விளைந்து தனக்குத் துன்பத்தைக் கொடுக்கும். [மற்று—அசை].

(க—து). அறிவுடையோர், தம்முடைய திறத்தையும் துணைவருடைய திறத்தையும் எடுத்த காரியத்தை முடித்தலால் உண்டாகும் பயனையும் ஆராய்ந்து, அப்பால் காரியத்தில் புகுந்து சித்தியடைவர். இங்ஙனம் ஆராயாமல், தகுதியல்லாத கருவியைக் கொண்டு தகுதியல்லாத செய்கையைச் செய்தால் நினைத்த காரியம் நினைத்தபடி முடியாமல் வேறாகித் துன்பத்தைக் கொடுக்கும்.

"முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்."—திருக்குறள்.

155. முடியுந் திறத்தால் முயலுதல்

நீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பில்
தூங்கு மெயிலும் தொலைத்தலால்,—ஆங்கு
முடியும் திறத்தால் முயல்க.தாம் கூரம்
படியிழுப்பின் இல்லை யரண். 49

(ப—பொ). உயர்ந்த தோளையுடைய செம்பியன் சிற்றம் மிக்க விசும்பின்கண் இயங்கியொழுகும் அசுரருடைய ஊரினையும் தேவர்கட்காக வென்று தொலைவித்தலான், எப்பொழுதும் ஒரு கருமத்தை முடியும் திறத்தால் எண்ணி அரிதென்னாது முயல அமையும். கூரிய அம்பை அடியமைய இழுக்கத் தொடுக்கப்பெறின் அது பட்டு உருவமாட்டாத கவசம் இல்லை.

(ப—ரை). வீங்கு தோள் செம்பியன் சீற்றம்—உயர்ந்த தோளையுடைய செம்பியனது கோபமானது, விறல் விசும்பில் தூங்கும் எயிலும்—மிக்க ஆகாயத்தின்கண் இயங்கியொழுகும் அசுரருடைய ஊரினையும், தொலைத்தலால்—(தேவர்கட்காக) வென்று தொலைவித்தலால், முடியும் திறத்தால் முயல்க—(எப்பொழுதும்) ஒரு காரியத்தை முடியும் வகையால் எண்ணி (அரிது என்னுமல்) முயற்சி செய்க. கூர் அம்பு—கூரிய அம்பை, அடி இழுப்பின்—அடியமைய இழுத்துத் தொடுக்கப் பெற்றால், அரண் இல்லை—அதுபட்டு உருவமாட்டாத கவசம் இல்லை. [ஆங்கு—தாம்-அசை].

(க—து). அம்பைச் சரியாகத் தொடுத்து அடியுற இழுத்துவிட்டால் உருவமாட்டாத கவசம் இல்லை. சரியான உபாயத்தை அனுசரித்து முயன்றால் முடியாத காரியம் இல்லை. ஆகாயத்தில் இயங்கும் அசுரரூரினைச் செம்பியன் தேவர்பொருட்டு வென்று தொலைத்ததே இதற்குப் போதுமான சாட்சி.

"ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்."—திருக்குறள்.

இச்செய்தி பல நூல்களில் குறித்திருக்கிறது.

"சார்தல்
ஒன்னார் உட்கும் துன்னருங் கடுந்திறல்
தூங்கெயில் எறிந்தநின் ஊங்கணோர் நினைப்பின்"

(புறம்—39)

"உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை"

(சிலப்—வாழ்த்து—அம்மானை)

"தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்"

(மணிமேகலை—விழாவறை)

"ஒன்னார்

ஓங்கெயிற் கதவம் உருமுச்சுவல் சொறியும்
தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்"

(சிறுபாண்—79–82)

156. பெறலாகும் பெருமையை முயன்று பெறுதல்

எங்கணொன் றில்லை எமரில்லை என்றொருவர்
தங்க ணழிவுதாம் செய்யற்க.—எங்கானும்,
நன்கு திரண்டு பெரியவாம், ஆற்றவும்
முன்கை நெடியார்க்குத் தோள். 267

(ப—பொ). எம்மிடத்து ஒருபொருள் இல்லை, எமக்கு ஒரு சுற்றத்தார் இல்லையென்று விசாரித்து, தாம் மனந் தளர்ந்து தம்மிடத்து வரும் பெருமையை அழிக்கத் தக்கனவற்றைச் செய்யாதொழிக. (அப்படிச் செய்யா தொழியவே எல்லா நன்மையும் உளவாம்). அஃது என் போல என்னில், எவ்விடத்துப் பிறந்தார்க்காயினும் மிகவும் திரண்டு பெரியவாயிருக்கும், மிகவும் முன்கை நெடியராயினோர்க்குத் தோள்கள், அதுபோல.

(ப—உரை). எங்கண் ஒன்று இல்லை—எம்மிடத்தில் ஒருபொருளும் இல்லை, எமர் இல்லை என்று—எமக்கோ சுற்றத்தாரும் இல்லை என்று, ஒருவர்—ஒருவர், தாம் தங்கண் அழிவுசெய்யற்க—ஒருவர் தாம் மனம் தளர்ந்து தம்மிடத்து வரும் பெருமையை அழிக்கத்தக்கனவற்றைச் செய்யாதொழிக: (அப்படிச் செய்யா தொழியவே எல்லா நன்மையும் உளவாம்). (அஃது என்போல என்னில்), எங்கா(யி)னும்—எவ்விடத்துப் பிறந்தார்க்காயினும், ஆற்றவும் முன்கை நெடியார்க்கு—மிகவும் முன்கை நெடியானவருக்கு, தோள் நன்கு திரண்டு பெரியவாம்—தோள்கள் மிகவும் திரண்டு பெரியவாயிருக்கும்.

(க—து). பெருமையை அடையத்தக்கவர்க்கு அதற்கேற்ற முயற்சி செய்யும் திறம் அமைந்திருக்கும். ஆகவே அன்னார் முயற்சிசெய்து பெருமையை அடைக என்பதாம்.

"அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்."—திருக்குறள்.

157. தொழின்முயற்சியில் நிலையாதவர் நன்மை பெறார்

நிலத்தின் மிகையாம் பெருஞ்செல்வம் வேண்டி,
நலத்தகு வேந்தருள் நல்லாரைச் சார்ந்து,
நிலத்து நிலைகொள்ளாக் காலரே காணின்,
உலக்கைமேல் காக்கையென் பார். 328

(ப—பொ). நிலத்தின் கண்ணே வாழ்தற்கு மிகுதியாகிய பெரிய செல்வத்தை விரும்பி, நன்மைக்குத் தகுதியையுடைய வேந்தர்க்குள் நல்லார் யாவரென்று ஒருவரைச் சேர்ந்து வாழாமல் யாவரிடத்தும் சென்று, நிலத்தின்கண் ஓரிடத்தும் நிலைகொள்ளாத காலினையுடையாரை விசாரித்துப் பார்க்கில், அவரன்றோ உலக்கைமேல் காக்கை (உரலின்கண் அரிசியை விரும்பி அதனையும் நுகரப்பெறாது ஒருகாலும் இருக்கவும் பெறாமல்) நின்றுழலும் தன்மை எத்தன்மை அத்தன்மை போல்வார்.

(ப—ரை). நிலத்தில் மிகையாம் பெருஞ்செல்வம் வேண்டி — நிலத்தின்கண்ணே வாழ்தற்கு மிகுதியாகிய பெரிய செல்வத்தை விரும்பி, நலம் தரு வேந்தருள் நல்லாரை சார்ந்து—நன்மைக்குத் தகுதியையுடைய வேந்தருக்குள் நல்லவரான ஒருவரைச் சேர்ந்து, (அவரிடம் வாழாமல் யாவரிடத்தும் சென்று), நிலத்து நிலைகொள்ளா காலரே — நிலத்தின்கண் ஓரிடத்தும் நிலைகொள்ளாத காலினையுடையவரே, காணின் — விசாரித்துப் பார்க்கில், உலக்கைமேல் காக்கை என்பார்— உலக்கைமேல் காக்கையானது நின்றுழலும் தன்மை போன்றவராவர்.

(க—து). பெருஞ்செல்வம் அடைதற்குரிய இடத்தைச் சார்ந்து அங்கே நிலைவரமாக நில்லாதவர், உலக்கைமேல் காக்கைபோல் ஒரு நன்மையும் பெறார்.

பழமொழி.—A rolling stone gathers no moss.

158. தங்கருமத்தைத் தாமே கடைப்பிடித்தல்

தலைக்கொண்ட தங்கருமம் தாமடி கொண்டு,
கடைப்பிடி யில்லாதார் பால்வைத்துக்—கடைப்பிடி
மிக்கோடி விட்டுத் திரியின், அதுபெரி
துக்கோடிக் காட்டி விடும். 377

(ப—பொ). தாம் செய்ய மேற்கொண்ட கருமத்தைத் தாம் மடிமையின்கண்ணே கொண்டொழுகி, கடைப்பிடி யில்லாதவர்மாட்டே வைத்துத் தாமும் கடைப்பிடி கைவிட்டுச் செருக்கின் மிகுந்தோடித் திரியின், தாம் மேற்கொண்ட கருமம் மிகவும் சிந்தியோடிக் காட்டிவிடும்.

(ப—ரை). தாம் தலைக்கொண்ட தம் கருமம்—தாம் மேற்கொண்ட தமது கருமத்தை, மடி கொண்டு—சோம்பல் கொண்டு, கடைப்பிடி இல்லாதார்பால் வைத்து—முடிக்கும் துணிபு இல்லாதவரிடம் வைத்து, மிக்கு ஓடி—செருக்கில் மிகுந்தோடி, கடைப்பிடி விட்டு திரியின்—முடிக்குந் துணிவைக் கைவிட்டுத் திரிந்தால், அது—தாம் மேற்கொண்ட கருமம், பெரிது உக்கு ஓடிக்காட்டிவிடும்—மிகவும் சிதைந் தழியும்.

பழமொழி.—உடையவன் போகா வேலை ஒருமுழம் கட்டை.
Never trust to another what you should do yourself.

159. தம்மால் முடிவதைத் தாமே செய்தல்

தம்மால் முடிவதனைத் தாமாற்றிச் செய்கல்லார்
பின்னை ஒருவரால் செய்வித்து மென்றிருத்தல்,
சென்னீ ரருவி மலைநாட! பாய்பவோ
வெந்நீரு மாடாதார் தீ. 293

(ப—பொ). தாம் செய்து முடிக்கலானதொரு காரியத்தைத் தாம் முடித்துச் செய்யமாட்டாது வேறொருவரால் செய்விக்கின்றோம் என்று சொல்லியிருத்தல், பரந்துசெல்லும் அருவிநீரையுடைய மலைநாடனே! வெந்நீரிலும் குளியாதவர் தீயிலே பாயவல்லரோ? பாயமாட்டாரே, அத்தன்மை போலும்.

(ப—ரை). செல் நீர் அருவி மலைநாட—பாய்ந்து செல்லும் அருவி நீரையுடைய மலைநாடனே! தம்மால் முடிவதனை—தாம் செய்து முடிக்கவல்லதொரு காரியத்தை, தாம் ஆற்றி செய்கல்லார்—தாம் முடிக்கமாட்டாது, பின்னை ஒருவரால் செய்வித்தும் – வேறொருவராலே செய்விப்போம், என்று இருத்தல்—என்று சொல்லியிருத்தலானது, வெந்நீரும் ஆடார்—வெந்நீரினும் குளியாதவர், தீ பாய்பவோ—தீயிலே பாயவல்லரோ? (பாயமாட்டாரே. அத்தன்மை போலும்). [அத்தன்மைபோலும் என்பது தோன்றாப் பயனிலை].

(க—து). பிறரால் ஒரு காரியம் நிறைவேறுமென்று நம்பியிருக்கவேண்டா.

பழமொழி.—வெதுவெதுவென்ற தண்ணீர் குளிக்காதவனா உடன்கட்டை ஏறப்போகிறான்.

160. அல்லலை முயற்சியால் நீக்கல்

முழுதுடன் முன்னே வகுத்தவ னென்று
தொழுதிருந் தக் கண்ணே ஒழியுமோ அல்லல்?
இழுகினு னாகாப்ப தில்லையே முன்னம்
எழுதினான் ஓலை பழுது. 29

(ப—பொ). முழுதுலகத்தையும் முன்னே படைத்தவன் நாம் உறுகின்ற அல்லலையும் நமக்குப் படைத்தான் என்று கருதி, அவனே அவ்வல்லலைத் தீர்ப்பானாக அவனைத் தொழுது ஒரு காரியத்தை முயலாதிருந்தால், தம் அல்லல் ஒழியுமோ? (அவ்வல்லலைத் தப்ப நினைக்கவே, தன்னை அவ்வல்லல் வந்து பிணிக்கமாட்டாது). முற்பட எழுதின ஓலை பழுதுபட்டால் அப்பழுதுதீரப் பின்னையும் எழுதுவா ராதலான், முன்செய்த தீவினைப் பயனை இப்பொழுது செய்யும் முயற்சி யானே நீங்கலாம்.

(ப—ரை). முழுதுடன் முன்னே வகுத்தவன் என்று—முழுதுலகத்தையும் முன்னே படைத்தவன் (நாம் அடைகின்ற அல்லலையும் படைத்தான்) என்றெண்ணி, தொழுது இருந்தக் கண்ணே—அவனைத்

தொழுது (ஒரு காரியத்தையும் முயலாமல்) இருந்தால், அல்லல் ஒழியுமோ—தம்முடைய அல்லல் நீங்குமோ? முன்னம் ஓலை பழுது எழுதினான்—முன்னே ஓலையைப் பழுதுபட எழுதினவன், இழுகினான்—தாமதித்தவனாய், ஆ(று)—பழுதுபட்ட விதத்தை, காப்பது—(பரிகரிக்காமல்) போற்றுதல், இல்லை—இல்லை. [ஏ—அசை].

இழுகுதல்—தாமதித்தல், பின்போதல். ஆறு என்பது கடைக் குறையாய் ஆ என நின்றது. இங்ஙனமன்றி, இழுகினானைக் காப்பது என்பது இழுகினான் காப்பது எனத் தொகுத்தலாயிற்றென்று கொள்வது எளிது.

(க—து). ஓலையைத் தப்பாக எழுதினவன் உடனே தப்பைத் திருத்திவிடுவான். அங்ஙனமே அல்லலடைந்தவன் உடனே முயற்சி செய்து அவ்வல்லலினின்றும் நீங்குவானாக.

"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்."—திருக்குறள்.

161. போது

முடிந்ததற் கில்லை முயற்சி. முடியா
தொடிந்ததற் கில்லை பெருக்கம். வடிந்தற
வல்லதற் கில்லை வருத்தம். உலகினுள்
இல்லதற் கில்லை பெயர். 319

(ப—பொ). ஒருவனால் முடியப்பட்டு முடிந்த கருமத்துக்குப் பின்னை முயலவேண்டுவ தில்லை. முயன்று முடிக்கப்படாது இடையே சிதைந்த கருமத்துக்கு ஆக்கமும் இல்லை. கோதற ஒன்றை வல்லதற்கு அதனை முடிக்கும் பொழுது வருத்தமும் இல்லை. உலகினுள் இல்லாத பொருட்குப் பேர் இல்லை, அதுபோல. [முயலப்பட்டு—பாட பேதம்.]

(ப—ரை). முடிந்ததற்கு முயற்சி இல்லை—முடிவுபெற்ற காரியத்துக்குப் பின்னே முயற்சி வேண்டுவதில்லை. முடியாது ஒடிந்ததற்கு

பெருக்கம் இல்லை—முயற்சிசெய்து முடியாது இடையே சிதைந்த காரியத்துக்கு ஆக்கமும் இல்லை. வடிந்து அற வல்லதற்கு வருத்தம் இல்லை—தெளிந்து குற்றமற ஒன்றைச் செய்ய வல்லதற்கு அதனை முடிக்கும்பொழுது வருத்தம் இல்லை. உலகினுள் இல்லதற்கு பெயர் இல்லை—உலகத்தில் இல்லாத பொருளுக்குப் பெயர் இல்லை. [ஆக்கம் – இலாபம்].

(க—து). முற்றுப்பெற்ற காரியத்திற்கு முயற்சி வேண்டா. இடையிலே சிதைவுற்ற காரியத்தால் இலாபம் இல்லை. நன்காராய்ந்து செய்யத் தொடங்கின காரியம் இனிது முடியும். உலகில் (உள்ள பொருள்களுக் கன்றி) இல்லாத பொருளுக்குப் பெய ரில்லை.

## 2. கருமம் முடித்தல்

162. ஏற்றபெற்றி ஒழுகிக் கருமம் முடித்தல்

*செந்நீரார் போன்று சிதைய மதிப்பார்க்கும்,*
*பொய்ந்நீரார் போன்று பொருளை முடிப்பார்க்கும்,*
*அந்நீ ரவரவர்க்குத் தக்காங் கொழுகுபவே.*
*வெந்நீரிற் றண்ணீர் தெளித்து.* 90

(ப—பொ). தம் கருமத்தைக் கெட வொழுகுகின்ற பிறர்க்கும் செவ்விய நீர்மையினை உடையாரைப் போன்றும், பொருளைப் பாதுகாத்து முடிக்கின்ற பிறர்க்கும் அவர்க்கு அன்புபட்டில்லாதாரைப் போன்றும், இப்பெற்றியால் அந்நீர்மைகளையுடைய அவரவர்க்குத்தக்க பெற்றியால் ஒழுகவேண்டும், வெய்ய நீரில் குளிர்ந்த நீரை அளாவி ஆற்றிநாற்போல.

(ப—ரை). சிதைய மதிப்பார்க்கு செம்மை நீரார் போன்றும்—தம்முடைய காரியத்தைக் கெடும்படி செய்கின்ற பிறரிடம் நல்ல தன்மையுடையாரைப் போலவும், பொருளை முடிப்பார்க்கு பொய் நீரார் போன்றும்—பொருளைப் பாதுகாத்து முடிக்கின்ற பிறரிடம் அன்பு உண்டாகாதவரைப் போலவும், வெந்நீரில் தண்ணீர் தெளித்து—வெய்ய

நீரில் குளிர்ந்த நீரைக் கலந்து ஆற்றினும்போல, அ நீர் அவரவர்க்கு தக்காங்கு – அந்நீர்மைகளையுடைய அவரவர்க்குத் தக்க பெற்றியால், ஒழுகுப–ஒழுகுவர். [ஏ–அசை].

(க–து). கெட்டவர்க்கு நல்லவர் போன்றும் அன்புள்ளார்க்கு அன்பில்லார் போன்றும் காட்டிக் கருமம் முடிக்க.

163. ஆதரவானவரை விரோதித்தலால் விளையும் கேடு

தாமாற்ற கில்லாதார் தாஞ்சாரப் பட்டாரைத்
தீமாற்றத் தாலே பகைப்படுத்திட்——டேமாப்ப
முன்னோட்டுக் கொண்டு முரணஞ்சிப் போவாரே,
உண்ணோட் டகலுடைப் பார். 28

(ப–பொ). தாம் தம்மை ஆற்றமாட்டாதார் தாம் சாரப்பட்டவர்களைத் தீய சொலவுகளால் பகையாக்கித் தமக்குச் சேமமாக அவர்க்குமுன் ஓட்டுக்கொண்டு பகை கோடலை அஞ்சிப் போவார், தாம் உண்கின்ற ஓட்டகலை உடைக்கின்றாரோடு ஒப்பர்.

(ப–ரை). தாம் ஆற்றகில்லாதார்–தாம் தம்மைச் செவ்வை செய்து கொள்ளமாட்டாதார், தாம் சாரப்பட்டாரை–தமக்கு ஆதரவாயிருப்பவரை, தீ மாற்றத்தால் பகைப்படுத்திட்டு–தீய வார்த்தைகளால் பகையாக்கி, முரண் அஞ்சி – அவரோடு பகை கொள்ளுதலை அஞ்சி ஏமாப்ப–தமக்குச் சேமமாக, முன் ஓட்டுக்கொண்டு போவாரே – முன் ஓடுதலை மேற்கொண்டு செல்பவர்தாம், உண் ஓட்டகல் உடைப் பார்–தாம் உண்கின்ற ஓட்டகலை உடைக்கின்றாரோ டொப்பர். [ஓட்டகல்–ஓடாகிய அகல்].

(க–து). வலியில்லாராய், தமக்கு ஆதரவா யிருப்பாரைத் தீய வார்த்தைகளால் பகைத்துக்கொண்டு, அப்பால் அப்பகைமைக் கஞ்சி இருந்த இடம்விட்டு ஓடிப்போகின்றவர், தாம் உண்கின்ற ஓட்டகலை உடைக்கின்றவரை ஒப்பவராவர்.

## 164. பதறுமல் நல்வார்த்தையால் கருமங்கொள்ளல்

புரையக் கலந்தவர் கண்ணும் கருமம்
உரையின் வழுவா துவப்பவே கொள்க.
வரையக நாட! விரையிற் கருமம்
சிதையும்: இடராய் விடும். 227

(ப—பொ). உள்ளம் ஒக்க நட்புக் கொண்டவரிடத்தும் கொள்ளும் கருமத்தைத் தகுதியாக உரைக்கும் உரைகளின் வழுவாமல் மனம் உவப்பவே கொள்க. மலை மேல் உண்டாகிய நாடனே! தமக்கு வேண்டியபொழுதே அந்தக் கருமங்கொள்ள விரைவாராயின் கருமம் கெடும். அது கெடுமாயின் தமக்கும் இடராய்விடும்.

(ப—ரை). வரை அகம் நாட—மலைமேல் உண்டாகிய நாடனே! புரைய கலந்தவர் கண்ணும்—மனதொக்க நட்புக்கொண்டவரிடத்தும், உரையின் வழுவாது—உரைக்கும் உரைகளின் வழுவாமல், உவப்பவே—மனம் உவப்பவே, கருமம் கொள்க—கொள்ளுங் கருமத்தைக் கொள்க, விரையின்—தமக்கு வேண்டியபொழுதே அக்கருமங்கொள்ள விரைவாராயின், கருமம் சிதையும்—கருமம் கெடும். இடராய்விடும்—அது கெடுமாயின் தமக்கும் இடராய்விடும்

(க—து). மனதொத்த நண்பினரிடம் கொள்ளலான கருமத்தையும் அவர் மனம் உவக்கும்படி நல்வார்த்தை சொல்லிப் பதறுமல் முடித்துக் கொள்க. பதறிச் செய்கிற காரியம் சிதறிக் கெட்டுப்போகும்: கெடவே தமக்குத் துன்ப முண்டாகும்.

## 165. உளைய உரையாது உறுதிகொள்ளல்

நிலைஇய பண்பிலார் நேரல்ல ரென்றுன்
றுளைய உரையா துறுதியே கொள்க.
வளையொலி ஐம்பாலாய்! வாங்கி யிருந்து
தொளையெண்ணுர் அப்பந்தின் பார். 253

(ப—பொ). நிலைநின்ற குணம் இல்லாதவர் நடுவுநிலையை உடையரல்லரென்று ஒரு வார்த்தையும் வெறுக்கத் தக்கது சொல்லாதே, அவர் மாட்டுத் தாம் கொள்ள வேண்டும் உறுதியாகிய பயனைக் கொண்டுவிடுக: சுருண்டு தழைத்த ஐந்து பகுதியையுடைய கூந்தலையுடையாய்! அப்பத்தைத் தின்னக் கையிலே வாங்கித் தொளையை எண்ணிக் குற்றமென்று நீக்குவாரில்லை ஆதலான், அது போல.

(ப—ரை). வளை ஒலி ஐம்பாலாய்—சுருண்டு தழைத்த கூந்தலையுடையாய்! அப்பம் தின்பார் வாங்கியிருந்து தொளை எண்ணார்—அப்பத்தைத் தின்ன விரும்பினவர் அதனைக் கையிலே வாங்கிக்கொண்டு அதிலுள்ள தொளையை எண்ணிக்கொண்டிராமல் அதைத் தின்பர். அதுபோல, நிலைய பண்பு இல்லார்—நிலைநின்ற குணமில்லாதவர், நேர் அல்லர் என்று—நடுவுநிலைமை யுடையரல்லரென்று, உளைய ஒன்று உரையாது—வெறுக்கத்தக்கவிதமாக ஒரு வார்த்தையும் சொல்லாமல், உறுதியே கொள்க—அவரிடம் தாம் கொள்ளவேண்டும் உறுதியாகிய பயனையே கொண்டுவிடுக.

(க—து). வடையைப் பெற்றவர் அதில் உள்ள தொளையை எண்ணிக் குற்றங் கூறியிராமல் அதைத் தின்பர். ஒருவரிடம் நன்மையைக் கொள்ள வேண்டுவோர் அவர் வெறுக்கும் விதமாக வார்த்தை சொல்லாமல் நன்மையைக் கொள்வர்?

பழமொழி.—வடையைத் தின்னச் சொன்னார்களா, தொளையை எண்ணச் சொன்னார்களா.

166. பிறரிடம் பெறலான நன்மையைச் சமயமறிந்து பெறுதல்

அன்பின் நெகிழ வழிபட்டுக் கொள்ளாது
நின்ற பொழுதின் முடிவித்துக் கொள்வது,
கன்றுவிட் டாக்கறக்கும் போழ்தில் கறவானாய்
அம்பவிட் டாக்கறக்கு மாறு. 77

(ப—பொ). அன்பினால் ஒருவன் நெகிழும்படி தான் வழிபட்டொழுகி அவனாலுள்ள பயன் கொள்ளாது,

தான் நினைத்த பொழுதே முடித்துக்கொள்வேன் என்று கருதி முயறல், ஆவினைக் கறக்கும்பொழுது அறிந்து கன்றுவிட்டுக் கறவாதே, அவ்வாவினை அம்புவிட்டுக் கறக்கும் நெறியோ டொக்கும்.

(ப-ரை). அன்பின் நெகிழ—அன்பினால் ஒருவன் மனம் நெகிழும்படி, வழிபட்டு—தான் வழிபட்டொழுகி, கொள்ளாது—அவனு ளுள்ள பயனைக் கொள்ளாது, நின்றபொழுதின்—தான் நினைத்தபொ ழுதே, முடிவித்துக்கொள்வது—முடித்துக்கொள்வேனென்று கருதி முயலுதல், ஆ கறக்கும்போழ்தில்—பசுவை வழக்கமாகக் கறக்கின்ற வேளையில், கன்றுவிட்டு கறவானாய்—கன்றுவிட்டுக் கறவாமல், ஆ—பசுவை, அம்புவிட்டு கறக்கும் ஆறு—(தான் நினைத்தபோது) அம்பு விட்டுக் கறக்கும் விதத்தை ஒக்கும்.

(க-து). ஒருவரிடத்தில் பெறலான நன்மையை உசிதமாய்ச் சமய மறிந்து பெற்றுக்கொள்ளாமல் தான் நினைத்தபோது பெற்றுக்கொள்ள முயலுதல் உசிதமன்று.

167. சோம்பனை ஏவிய காரியம் முடிவுபெறாது

மடியை வியங்கொள்ளின் மற்றைக் கருமம்
முடியாத வாறே முயலும்.—கொடியன்னாய்!
பாரித் தவனை நலிந்து தொழில்கோடல்,
மூரி உழுது விடல். 389

(ப-பொ). சோம்பனை ஒரு கருமத்தின் கண்ணே ஏவின் அந்தக் கருமங்கள் முடியாதபடியே முயலும். கொடிபோலும் இடையை யுடையாய்! ஒரு கருமத்தைச் செய்யப் பாரித்தவரை நலிந்து தொழில்கொள்ளுதல், மூரியெருத்தான் உழுவதனோ டொக்கும்.

(ப-ரை.) கொடி அன்னாய்—கொடிபோலும் இடையை உடையாய்! மடியை வியம் கொள்ளின்—சோம்பனை (ஒரு கருமத்தின்கண்) ஏவினால், மற்றை கருமம் முடியாத ஆறே முயலும்—அந்த ஏவலை யடுத்த காரியம் முடியாத விதமாகவே (அவன்) முயல்வான். பாரித்

த்தவனை-(ஒரு காரியம் செய்யப்) பாரித்தவனை, கலிந்த தொழில் கோடல்-வருத்தித் தொழில்கொள்ளுதலானது, மூரி உழுதவிடல்-கிழவெருதுகொண்டு உழுவதனோ டொக்கும்.

பாரித்தவன்-(பாரி-பருமன்)-பருமனானவன்: மனத்தில் ஊக்கமில்லாத உடல் பருமனானவன். வியம்-ஏவல்.

(க-து). சோம்பனை ஏவிய காரியம் முடிவுபெறாது. ஊக்கமில்லானும் உடல் பெருத்தவனை வருத்திக்கொள்ளும் தொழில் செவ்வி பெறாது.

பாரித்தவரை-பாடபேதம்.

“இன்னா மூரியெருத்தா லுழவு.”—இன்னாநாற்பது.

168. காணிகோடாமல் காரியம் முடியாமை

ஆணியாக் கொண்ட கருமம் பதிற்றாண்டும்
பாணித்தே செய்ப வியங்கொள்ளின்.—காணி
பயவாமல் செய்வாரார்? தஞ்சாகா டேனும்
உயவாமல் சேறலோ வில். 308

(ப-பொ). படியாணிபோலக் கொண்ட கருமத்தைச் சிலர்க்கு ஒன்றைக் கொடாதே செய்ய ஏவினால், அவ்வேவப்பட்டவர் பதிற்றியாண்டைக் காலமும் இவர்க்குக் கருமஞ் செய்வோமென்று காலத்தை நீட்டித்துப் படியாணி செய்வார் ஆதலால், காணிப்பொருளாயினும் கொடாமல் செய்வார் யாவர் உளர்? தம்முடைய சகடமாயினும் உயவுநெய் இடாமல் செல்லாது, அதுபோல.

(ப-ரை). தம் சாகாடு எனும்-தம்முடைய சகடமாயினும், உயவாமல்-உயவுநெய் யிடாமல், சேறல் இல்-செல்லுதல் இல்லை. (அதுபோல), காணி-காணியளவு பொருளாயினும், பயவாமல்-கொடாமல், செய்வார் ஆர்-கருமம் செய்பவர் இல்லை. ஆணியா(க) கொண்ட கருமம்-படியாணிபோலக் கொண்ட கருமத்தை, வியம் கொள்ளின்—சிலர்க்கு ஒன்றும் கொடாமல் செய்ய ஏவினால், பதிற்றாண்டும் பாணித்தே செய்ப-(ஏவப்பட்டவர்) பத்துவருஷ கால

மும் (இவர்க்குக் கருமம் செய்வோமென்று) காலதாமதம் பண்ணியே (படியாணி) செய்வார். [ஓ—அசை]. உயவுநெய்—Grease.

(க—து). சிறிது பொருளாயினும் கொடாமல் ஏவிய காரியம் எவ்வளவு காலமாயினும் இனிது முடியாது.

பழமொழி.—கையிலே மஞ்சள் ஆனால் காரியம் மஞ்சூர்தான். Money is the best bait to fish for man with. Money makes the old wife trot.

169. காரியம் செய்பவனை எச்சரித்தல்

விட்டுக் கருமம் செயவைத்த பின்னரும்
முட்டா தவரை வியங்கொளல் வேண்டுமால்.
தொட்டக்கால் மாழ்கும் தளிர்மேலே நிற்பினும்
தட்டாமல் செல்லா துளி. 279

(ப—பொ). ஒருவர்மேலே கருமத்தை விட்டுச் செய்யவைத்த பின்னரும் இடையறவுபடாதே அவரை ஏவி ஆராயவேண்டும்: தொட்டவாறே துவளும் தளிர்மேலே நின்றதாயினும் தன்னைத் தட்டாமல் அத்தளிரை அறுது உளி ஆதலான்.

(ப—ரை). தொட்டக்கால் மாழ்கும்-தொட்ட அளவிலே துவளுதலான, தளிர்மேலே-தளிரின்மேலே, நிற்பினும்-நின்றதாயினும், உளி-உளியானது, தட்டாமல்-தன்னை ஒருவன் தட்டாமல், செல்லாது-(அத்தளிரை) அறுத்துச் செல்லாது. (ஆதலால்), கருமம் விட்டு செயவைத்த பின்னரும்—(ஒருவர் மேலே) ஒரு காரியத்தை விட்டுச் செயவைத்த பின்னரும், அவரை முட்டாது வியங்கொளல் வேண்டும் – அவரை இடையறவுபடாது ஏவியாராய்தல்வேண்டும். [ஆல்—அசை].

(க—து). மிகவும் சொப்பமான தளிர்மேல் நின்ற உளியும் தட்டாமல் தளிரில் இறங்காது. ஒருவரை ஒரு காரியத்தில் ஏவிச் செய்யவைத்த பின்னரும் அவரை அடிக்கடி எச்சரிக்கை பண்ணிக்கொண்டே இருக்கவேண்டும்.

"தளிர்மேலே நிற்பினும் தட்டாமல் செல்லா
உளிநீரர் மாதோ கயவர்."—நாலடியார்.

170. கயவர்மேல் காரியம் வைத்தவர் நன்மையடையார்

காட்டிக் கருமம் கயவர்மேல் வைத்தவர்
ஆக்குவ ராற்ற எமக்கென்றே அமர்ந்திருத்தல்,
மாப்புரை நோக்கின் மயிலன்னாய்! பூசையைக்
காப்பிடுதல் புன்மீன் றலை. 128

(ப—பொ). தம் கருமத்தைக் கீழ்மக்கள்மாட்டே காட்டிக்கொடுத்து மற்றவர் தம் கருமத்தை ஆக்குவர் என்று நினைத்து மேவியிருத்தல், மான்விழியை ஒவ்வா நின்ற மயிலன்னாய்! பூசையைப் புன்மீன் உணங்குகின்ற விடத்துக் காக்கவைத்ததனோ டொக்கும்.

(ப—ரை). மா புரை நோக்கின் மயில் அன்னாய்—மானை ஒக்கும் விழியையுடைய மயில்போன்றவளே! கருமம்—தம்கருமத்தை, கயவர்மேல் காட்டிவைத்து—கீழ்மக்களிடம் காட்டிக்கொடுத்து, அவர் எமக்கு ஆற்ற ஆக்குவர்—அவர் எமக்குக் கருமத்தைச் செவ்வையாகச் செய்துகொடுப்பர், என்று அமர்ந்திருத்தல்—என்று நினைத்துச் சும்மா உட்கார்ந்திருத்தலானது, பூசையை—பூனையை, புல் மீன் தலை—அல்பமான மீன் (உலர்கின்ற) இடத்தில், காப்பு இடுதல்—காவல் வைத்ததனோ டொக்கும்.

(க—து). தம்முடைய காரியத்தைக் கீழ்மக்களிடம் ஒப்பித்திருப்பவர் ஒரு நன்மையும் அடையார்.

பழமொழி.—நாறல் மீனைப் பூனை பார்ப்பதுபோல. "காக்கையைக் காப்பிட்ட சோறு." நரியின் கையிலே குடலைக் கழுவக் கொடுத்தாற்போல. To set the fox to keep the geese. Give never the wolf the wether to keep.

171. கருமஞ்செய்ய அறிவுள்ளாரை நியமித்தல்

தெற்ற அறிவுடையார்க் கல்லால் திறனிலா
முற்றலை நாடிக் கருமஞ் செயவையார்,
கற்றொன் றறிந்து கசடற்ற காலையும்
மற்றதன் பாற்றேம்பல் நன்று. 373

(ப—பொ). தெளிய அறிந்த அறிவுடையார்க்கன்றித் திறப்பாடில்லாத அறிவோடு பொருந்திய முற்றனவுடையோனை நாடித் தம் கருமத்தைச் செய்யவையார். ஒன்றைக் கற்றறிந்து கல்வியின்கண் கசடற்றவிடத்தும் குணமற்றார்பால் கொண்ட நட்புத் தேம்புதல் நன்று.

(ப—ரை). தெற்ற அறிவுடையார்க்கு அல்லால் – தெளிய அறிந்த அறிவுடையாரிடத்தன்றி, திறன் இலா முற்றலை – சாமர்த்தியமில்லாத அறிவோடு பொருந்திய முற்றனவுடையோனை, நாடி—நாடி, கருமம்—தம் கருமத்தை, செயவையார்—செய்யவையார். ஒன்று கற்றறிந்து—ஒன்றைக் கற்றறிந்து, கசடு அற்ற காலையும்—கல்வியின்கண் குற்றமற்றவிடத்தும், மற்றதன்பால்—குணமற்றாரிடம் கொண்ட நட்பு, தேம்பல் நன்று—மெலிதலே நன்று. [திறனிலா முற்றல்—அறிவின்மை முற்றியவன். முற்றனவு—முற்றல்—முதிர்ச்சி].

(க—து). தம் கருமத்தைச் செய்ய அறிவுள்ளாரையே நியமித்தல் வேண்டும். கற்றவிடத்தும் குணமில்லாரிடம் நட்பு வளர்தலாகாது.

172. கற்றவனுக்குக் கோடுத்த போருள்

உற்றான் உறாஅன் எனல்வேண்டா. ஒண்பொருளைக்
கற்றானை நோக்கியே கைவிடுக்க.—கற்றான்
கிழவ னுரைகேட்கும். கேளா னெனினும்
இழவன் றெருதுண்ட உப்பு. 38

(ப—பொ). தனக்குச் சுற்றத்தான் அல்லன் என்று ஆராயவேண்டுவதில்லை. தனது ஒள்ளிய பொருளைக் கற்றறிந்தோனை நோக்கியே அவன் மாட்டே கைவிடுக்க.

கற்றவன், தன்னையாக்கிய தலைவன் சொல்லைக் கேட்டுச் செய்யும். செய்யானாயினும், எருதுண்ட உப்பு ஒருவற்கு இழவன்று. (ஆதலால் அவன் கொண்ட பொருளும் கடைக்கால் தனக்கே உதவும்). [சுற்றத்தான் சுற்றத்தானல்லன்—பாடபேதம்.]

(ப—ரை). உற்றான்—இவன் தனக்குச் சுற்றத்தான், உறான்—இவன் அயலான், எனல் வேண்டா—என்று ஆராய வேண்டுவதில்லை. ஒண் பொருளை—ஒள்ளிய பொருளை, கற்றானையே நோக்கி—கற்றறிந்தவனையே நோக்கி, கைவிடுக்க—கொடுக்க. கற்றான்—கல்விமான், கிழவன் உரை—தன்னையாக்கிய தலைவன் சொல்லை, கேட்கும்—கேட்டுச் செய்யும். கேளான் எனினும்—கேட்டுச் செய்யானாயினும், எருது உண்ட உப்பு இழவு அன்று—எருதுண்ட உப்பு நஷ்டமாகாமைபோல் அது ஒருவனுக்கு நஷ்டமன்று.

(க—து). கொள் முதலியவற்றை உப்பிட்டு உண்பிப்பது நோயைத் தவிர்த்து எருதுக்கு உரஞ்செய்வதால் எருது சலிக்காமல் தலைவனுக்கு வேலைசெய்யும். அதுபோல் கற்றவன் காரியம் செய்யும்போது அவனுக்கு ஈந்த பொருள் நஷ்டமாகாமல் தலைவனுக்கு லாபத்தையே உண்டாக்கும்.

**173. கருமஞ்செய்ய அயோக்கியரை வையாமை**

கட்டுடைத் தாகக் கருமஞ் செயவைப்பின்
பட்டுண்டாங் கோடும் பரியாரை வையற்க.
தொட்டாரை ஒட்டாப் பொருளில்லை: இல்லையே
அட்டாரை ஒட்டாக் கலம். 118

(ப—பொ). அரணுடைத்தாம் வகை ஒரு கருமத்தை ஒருவரைச் செய்யவைப்பின் அக்கருமத்தை உளப்பட்ட தன்கண் உள்ள பயனைத் தாம் உண்டு செல்லும் பரிவிலாதாரை அக்கருமத்தின் கண்ணே வையாதொழிக. ஒரு பொருளைக் கையால் தொட்டாரை ஒட்டாத பொருள் இல்லை: அட்டாரைப் பொருந்திப் பயன்படாத கலமும் இல்லை, ஆதலால்.

(ப—ரை). தொட்டாரை – கையால் தொட்டவரை, ஒட்டா—ஒட்டாத, பொருள் – பொருள், இல்லை—இல்லை. அட்டாரை – சமைத்தவரை, ஒட்டா—பொருந்திப் பயன்படாத, கலம்—கலமும், இல்லை—இல்லை. (ஆதலால்), கட்டு உடைத்தாக—அரண் உடையதாம் வகை, கருமம்—ஒரு கருமத்தை, செய வைப்பின்—ஒருவரைச் செய்யவைப்பின், பட்டு—அக்கருமத்தை உளப்பட்டு, ஆங்கு உண்டு – அதன்கண் உள்ள பயனைத் தாம் உண்டு, ஓடும்—செல்லும், பரியாரை—பரிவிலாதாரை, வையற்க—அக்கருமத்தின்கண் வையாதொழிக. [கட்டு என்பது காவல்].

(க—து). தான் செய்யும்படி நியமிக்கப்பட்ட காரியத்தால் உண்டாகும் பயனைக் கைக்கொள்பவனைக் காரியத்தில் நியமிக்கலாகாது.

174. நன்மையில்லாதவனைக் காரியத்தினின்று களையுமாறு

நாட்டிக் கொளப்பட்டார் நன்மை இலராயின்
காட்டிக் களைதுமென வேண்டா—ஓட்டி
இடம்பட்ட கண்ணாய்! இறக்குமை யாட்டை
உடம்படுத்து வெளவுண்டா ரில். 39

(ப—பொ). தம்மாலே ஆக்கிக் கொள்ளப்பட்டார் தாம் ஏவப்பட்ட காரியத்தின்கண் நின்று தம்மை ஏவினார்க்கு நன்மையாவதைச் செய்யிலராயின், அச்செய்யாமையைப் பிறர்க்கறிவித்துக் காரியத்தின் நிறுத்துதலைக் களைவேம் என்று கருதாதே. குழைகளை யோட்டி இடமுண்டாகவே அகன்ற கண்ணினையுடையாய்! சாவக் கடவ மையாட்டை உடன்படுத்திக் குருதிகொள்வார் இல்லை.

(ப—ரை). ஓட்டி—குண்டலங்களை ஓட்டி, இடம்பட்ட—இடமுண்டாகவே அகன்ற, கண்ணாய்—கண்ணினையுடையாய்! இறக்கும் மையாட்டை உடம்படுத்து – சாவக்கடவ காராட்டை உடன்படுத்தி, வெளவுண்டார் இல் – அதன் இரத்தத்தை வெளவுவார் இல்லை. (அதுபோல), நாட்டிக் கொளப்பட்டார்—தம்மாலே ஆக்கிக் கொள்ளப்

பட்டவர், நன்மை இலராயின்—(தாம் ஏவிய காரியத்தின் கண் நின்று ஏவினார்க்கு) நன்மையாவதைச் செய்யிலராயின், காட்டி—அச்செய்யாமையைப் பிறர்க்கு அறிவித்து, களைதும்—காரியத்தின்கண் நிறுத்துதலைக் களைவேம், எனவேண்டா—என்று கருதவேண்டா.

(க—து). தாம் வளர்த்த வெள்ளாடு பயன்படுதலின்றி இறப்பதாயின், இறப்பதற்குமுன்னே அதற்கு ஆதாரமான அதன் இரத்தத்தை வெளவுதல் இல்லை. தாம் ஆதரித்து நட்பாகக் கொள்ளப்பட்டவர், தாம் ஏவிய காரியத்தில் நின்று நன்மையானதைச் செய்யாவிட்டால், அதனைப் பிறர்க்கறிவித்து அக்காரியத்தில் நின்றும் அவரைக் களைய வேண்டா. அவர் குற்றத்தைப் பிறரறிய வெளியிடாமலே அவரை நீக்கிவிடுக என்பதாம்.

175. வஞ்சகர் தூரத்தில் ஏவப்பட்ட கருமமுடித்துத் திரும்பார்

அகந்தூய்மை யில்லாரை ஆற்றப் பெருக்கி
இகந்துழி விட்டிருப்பின் அஃதால்—இகந்து
நினைந்து தெரியானாய் நீள்கயத்துள் யாமை
நனைந்துவா என்று விடல். 263

(ப—பொ). மனத்தால் தூய்மை யில்லாதாரை மிகப் பெருகப்பண்ணித் தனக்குச் சேய்த்தாய இடத்திலே போய்த் தனக்கு ஒரு கருமம் செய்ய ஒருவன் ஏவியிருப்பானாயின், அஃது, ஆராய்ந்தறியானாய் யாமையை அகப்படுத்தானொருவன் நீள்கயத்துள்ளே புக்கு நனைந்துவா என்றுசொல்லி அவ்வாமையை விட்டதனோ டொக்கும்.

(ப—ரை). அகம் தூய்மை இல்லாரை—மனத்தால் தூய்மையில்லாதவரை, ஆற்ற பெருக்கி—மிகப் பெருகப்பண்ணி, இகந்த உழி—தனக்குத் தூரமாகிய இடத்திலே, விட்டிருப்பின்—தனக்கு ஒரு கருமஞ் செய்ய ஒருவன் ஏவியிருப்பானாயின், அஃது—அது, நினைந்து தெரியானாய்—ஆராய்ந்தறியானாய், யாமை—(யாமையைப் பிடித்த ஒருவன் அந்த)

யாமையை, இகந்து-போய், நீள்கயத்துள் நனைந்துவா-நீண்ட கயத்துள்ளே புகுந்து நனைந்துவா, என்று-என்றுசொல்லி, விடல் விட்டதனேடொக்கும்

(க-து). ஆமையைப் பிடித்தவன் அதனைக் குளித்துவா என்று பெரிய குளத்தில் விட்டால், அது திரும்பவும் அவன் கைக்கு அகப்படாது. சுத்தமன மில்லாதவரைத் தூரமாகிய இடத்தில் தனக்கு ஒரு கருமம் செய்யும்படி ஏவினுல், அவர் அக்கருமத்தை முடித்து அவனிடம் திரும்பார்.

176. நுண்ணறிவுடையானுக்கும் கருமங்கெடுதல்

உழையிருந்து நுண்ணிய கூறிக் கருமம்
புரையிருந்த வாறறியான் புக்கான் விளிதல்,
நிரையிருந்து மாண்ட அரங்கினுள் வட்டுக்
கரையிருந் தார்க்கெளிய போர். 86

(ப-பொ). முதன்மையுடையா னெருவன் அருகிருந்து நுண்ணிய காரியங்களை ஆராய்ந்துசொல்லிக் குற்றமிருந்த நெறியறியாதே அக்கருமத்தைச் செய்யப்புக்கவன் கெடுதல் உளதாம்: மக்களாக நிரையிருக்கப்பட்டு மாட்சிமைப்பட்ட வட்டாடும் அரங்கின்கண் பொராதே மருங்கிருந்தார் கூறுதற் கெளியவாய்த் தோன்றும் வட்டுப் போர்கள் பொருதல் அரியவாமாறு போல.

(ப-ரை). நிரை இருந்து-வரிசையாக இருந்து, மாண்ட அரங்கினுள் - மாட்சிமைப்பட்ட அரங்கின்கண், வட்டு போர் - வட்டுப் போர்கள், கரை இருந்தார்க்கு எளிய-பொராது பக்கத்திருந்தவர் சொல்லுதற் கெளியவாய்ப் பொருதல் அரியவாம். (அதுபோல), உழை இருந்து-முதன்மையுடையான் ஒருவன் அருகிலிருந்து, நுண்ணிய கூறி-நுண்ணிய காரியங்களை ஆராய்ந்து சொல்லி, புரை இருந்த ஆறு அறியான்-குற்றமிருந்த நெறியறியாதே, கருமம் புக்கான்-கருமத்தைச் செய்யப் புக்கவன், விளிதல்-கெடுதல் உளதாம்.

(விளிதல்) உளதாம் எனப் பயனிலே வருவித்துக்கொள்ளவேண்டும். அரங்கு—வகுத்த தானம். வட்டாடுதல்—உண்டையுருட்டல். "கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக், கல்லாச்சிறாஅர்நெல்லிவட்டாடும்" என நற்றிணையில் வருகின்றது. "அரங்கின்றி வட்டாடியற்றே" என்பது திருக்குறள்.

(க—து). பக்கத்திலிருந்தவர் இது செய் அது செய்யென்று சில நுட்பங்களைச் சொல்வது எளிதாயினும், அரங்கிலே வட்டாடுவோர் தமது தவறு இன்னதென் றறியாமல் தோல்வியடைவ துண்டு. முதன்மையுடையோர் அருகிலிருந்து சில நுட்பங்களைச் சொல்வது எளிதாயினும் குற்றமிருந்த வகையை அறியாமல் காரியஞ்செய்யப் புகுந்தோர் கெடுவதுண்டு. ஆகவே கருமத்துக்குரியவர் அத்தவற்றைப் பொறுத்தல் வேண்டும் என்பதாம்.

## 3. மறை பிறரறியாமை

177. மறைவான காரியத்தில் எவரையும் நம்புதலாகாது

சுற்றத்தார் நட்டார் எனச்சென் றொருவரை
அற்றத்தால் தேறார் அறிவுடையார்.—கொற்றப்புள்
ஊர்ந்துலகம் தாவின அண்ணலே யாயினும்
சீர்ந்தது செய்யாதா ரில். 67

(ப—பொ) சுற்றத்தாரென்றும் நட்டாரென்றும் கொண்டு ஒருவரை மறைத்துச் செய்யும் காரியத்தின் கண் அறிவுடையார் தேறார். வென்றியையுடைய புள்ளை ஊர்வதுஞ் செய்து உலகத்தைக் காலால் கடப்பதுஞ் செய்த உயர்ந்த முதல்வனேயாயினும் தனக்குச் சீர்க்கப் பெற்ற தொன்றை ஒழிய விடுவா ரில்லை.

தன்பேறு சிறிதா யிருந்ததாயின் பழியும் பாவமும் பாராதே யாவராயினும் மனந்திரிந்து வெளவுவர்.

(ப—ரை). கொற்றம் புள் ஊர்ந்து—வெற்றியையுடைய பறவையை ஊர்தலும் செய்து, உலகம் தாவின—உலகத்தைக் காலால் கடப்பதும்

செய்த, அண்ணலே ஆயினும்—முதல்வனேயாயினும், சேர்ந்து—தனக்கு மிக்க வூதியம் தருவதொன்றை, செய்யாதார் இல்—ஒழியவிடுவோர் இல்லை (ஆகையால்), அறிவுடையார்—அறிவுள்ளவர், அற்றத்தால்—பிறரறியாமல் மறைத்துச் செய்யும் காரியத்தின்கண், ஒருவரை—ஒருவரை, சுற்றத்தார் நட்டார் எனச்சென்று—சுற்றத்தாரென்றும் சினேகரென்றும் கொண்டு, தேறுர்—தெளியார்.

கொற்றப்புள்—கருடன் (பெரிய திருவடி). உலகம் தாவின அண்ணல்—திரிவிக்ரமன் (திருமால்).

(க—து). மிக்க செல்வம் பெறுவதாயிருப்பின் பழியும் பாவமும் பாராதே யாவராயினும் மனம் வேறுபட்டு அதனை வெளவுவர். ஆகையால், பிறரறியாமல் தாம் மறைத்துச் செய்யும் காரியத்தை எவரையும் நம்பி வெளியிடவேண்டா.

178. மறைவான சூழ்ச்சியில் மாண்பிலாரை நீக்குக

வெள்ளமாண் பெல்லாம் உடைய தமரிருப்ப,
உள்ளமாண் பில்லா ஒருவரைத்—தெள்ளி
மறைக்கண் பிரித்தவரை மாற்று தொழிதல்,
பறைக்கண் கடிப்பிடு மாறு. 180

(ப—பொ). வெள்ளம்போல அளத்தற்கரிய மாண்ட குணமெல்லாம் உடைய தமர் அவ்விடத் திருப்பக் கொண்டு, உளத்தின்கண் மாட்சிமையில்லாத ஒருவரை ஆராய்ந்து சூழ்ச்சிக்கண் நீக்கி அவரை மாற்றுதொழிதல், பறையின்கண் கடிப்பிட் டெறிதலோ டொக்கும்.

(ப—ரை). வெள்ளம் மாண்பு உடைய தமர் இருப்ப—வெள்ளம் போல் அளத்தற்கரிய சிறந்த குணமெல்லா முடைய உறவினர் இருப்பவும், உள்ளம் மாண்பு இல்லா ஒருவரை—மனத்தின்கண் மாட்சிமையில்லாத ஒருவரை, தெள்ளி—ஆராய்ந்து, மறைக்கண் பிரித்து அவரை மாற்றுது ஒழிதல்—சூழ்ச்சிக்கண் நீக்கி அவரை விலக்காது விடுதல், பறைக்கண் கடிப்பு இடும் ஆறு—பறையின்கண் குறுந்தடியிட்டு எறிதலோ டொக்கும்.

(க—து). இரகசியமான ஆலோசனையில் மாட்சிமையுள்ள உறவினரைக் கூட்டிக்கொள்ளலாம்; மாட்சிமையில்லாரை நீக்கிவிடவேண்டும். அங்ஙனம் செய்யாக்கால் பறையறைந்தாற்போல இரகசியம் வெளியாகிவிடும்.

"அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்."—திருக்குறள்.

179. அன்பறியுமுன் மறையை வெளியிடலாகாது

அன்பறிந்த பின்னல்லால் யார்யார்க்குந் தம்மறையே
முன்பிறர்க் கோடி மொழியற்க.—தின்குறுவான்
கொல்வாங்குக் கொன்றபி னல்ல துயக்கொண்டு
புல்வாய் வழிப்படுவா ரில். 257

(ப—பொ). தம்மேலுள்ள அன்பு அறிந்த பின்பன்றி யாவர் யாவர்க்காயினும் தம்மறத்தை முந்துறவே பிறரொருவர்க்கு உள்ளஞ்சென்று உரையாதொழிக. தின்ன வேண்டிக் கொல்லும்படியே கொன்றபி னல்லது உய்ந்து போன பின்பு புல்வாயின் ஊனை அடுதற்கு வேண்டும் நெறியாகிய காயமுதலிய அரைப்பா ரில்லை.

"கொன்றிடி னல்ல" தென்று பாடமாயின், கொல்லுமத் துணையல்லதே வழிப்படுவா ரில்லை என்றவாறு.

(ப—ரை). தின்குறுவான்—தின்னவேண்டி, கொல்வாங்கு கொன்றபின் அல்லது—கொல்லும்படியே கொன்றபின் அல்லது, உயக்கொண்டு—தப்பிப்போன பின்பு, புல்வாய் வழிப்படுவார் இல்—மானின் ஊனை அடுதற்கு வேண்டும் நெறியாகிய காயம் முதலியனவற்றை அரைப்பாரில்லை. யார் யார்க்கும் பிறர்க்கு—யாவர் யாவர்க்காயினும் பிறர்க்கு, அன்பு அறிந்தபின் அல்லால் முன்—தம்மேலுள்ள அன்பை அறிந்த பின்பன்றி முந்துற, தம் மறை—தம்முடைய ரகசியத்தை, ஓடி—உள்ளஞ் சென்று, மொழியற்க—சொல்லாதொழிக. [ஏ—அசை].

தின்குறுவான்—தின்ன (வினையெச்சம்). கொல்வாங்கு — செல்வுழி என்பதிற்போல வகரம் உடம்படுமெய் யல்லாதமெய். புல்வாய்—கலைமான்.

(க—து). மானைத் தின்னவேண்டினோர் மானைக் கொன்றபினல் லது கொல்லுமுன் அதைச் சமைத்தற்குரிய காயவகைகளைத் தேடார். பிறர் நம்மிடம் வைத்துள்ள அன்பின் ஆழத்தை அறிந்தபி னல்லது அறியுமுன் நம்முடைய ரகசியங்களை அவரிடம் சொல்லுதலாகாது.

180. கயவர்க்கு மறைபுரையாமை

நயவர நட்டொழுகு வாரும்தாம் கேட்ட
துயவா தொழிவா ரொருவரு மில்லை.
புயலமை கூந்தற் பொலந்தொடி! சான்றோர்
கயவர்க் குரையார் மறை. 229

(ப—பொ). அன்புபடத் தம்மோடு நட்டொழுகு வாரும் தாம் கேட்ட மறையைப் பிறரோடு சொல்லி ஆராயாதொழிவார் ஒருவரு மில்லை. ஆதலால், புயல் போல அமைந்த கூந்தலையுடைய பொலந்தொடி! அறி வினு னமைந்தார் தாம் மறைத்துச் செய்யும் காரியங் களைக் கீழ்மக்கட்கு உரையார்.

(ப—ரை). புயல் அமை கூந்தல் பொலம் தொடி—மேகம்போல் அமைந்த கூந்தலையும் பொன்னாலாகிய தொடியையும் உடையாய்! நயவர நட்டொழுகுவாரும்—அன்புபடத் தம்மோடு சிநேகம்பண்ணி நடப்பவரும், தாம் கேட்டது—தாம் கேட்ட ரகசியத்தை, உயவாது ஒழிவார்—பிறரொடு சொல்லி ஆராயா தொழிவார், ஒருவரும் இல்லை— எவரும் இல்லை. (ஆகையால்), சான்றோர் கயவர்க்கு மறை உரை யார்—அறிவினுல் அமைந்தார் தாம் மறைத்துச் செய்யும் காரியங்களைக் கீழ்மக்கட்கு உரையார்.

நயவர—நயம்வர — அன்புண்டாக. உயவாது — உயாவாது — உசா வாது.

(க—து). அன்புள்ள சிநேகரே யாயினும் தாம் கேட்ட ரகசியத் தைப் பிறரிடம் சொல்லி உசாவாம விருப்பவர் இல்லை. ஆகையால் கீழ்மக்களிடம் ரகசியத்தை வெளியிடவேண்டா.

181. சிறியா ரறிந்த மறை வெளிப்படும்

பெருமலை நாட! பிறரறிய லாகா
அருமறையை ஆன்றோரே காப்பர்.—அருமறையை
நெஞ்சிற் சிறியார்க் குரைத்தல், பனையின்மேல்
பஞ்சிவைத் தெஃகிவிட் டற்று. 91

(ப—பொ). பெருமலை நாடனே! பிறர் அறியலாகாத அருமறையை அமைந்த அறிவுடையாரே காக்கவுல்லார். அரிய மறையை நெஞ்சினற் சிறிய குணத்தார்க்குச் சொல்லுதல், நெடும்பனையின்மேல் பஞ்சியை வைத்து எஃகினற் போலும்

(ப—ரை) பெருமலை நாட—பெருமலை நாடனே! பிறர் அறியல் ஆகா அருமறையை-பிறர் அறியததகாத அரிய ரகசியத்தை, ஆன்றோரே—அமைந்த அறிவுடையோரே, காப்பர்—(வெளிவிடாமல்) காக்கவல்லார். நெஞ்சின் சிறியார்க்கு—நெஞ்சினல் சிறிய குணத்தார்க்கு, அருமறையை உரைத்தல்—அரிய ரகசியததைச் சொல்லுதல், பனையின்மேல் பஞ்சி வைத்து எஃகிவிட்டற்று—உயரமான பனையின்மேல் பஞ்சியைவைத்து எஃகினற்போலும். [எஃகுதல்—பஞ்சிகொட்டுதல்].

(க—து). பனையின்மேல வைத்தக கொட்டிய பஞ்சி ஊரெல்லாம் பரத்தல்போல, அற்பரிடத்தில் வெளியிட்ட ரகசியம் ஊரெல்லாம் பரவிவிடும்.

182. பிறரை நம்பி மறையை வெளியிட்டவன் கெடுதல்

விளிந்தாரே போலப் பிறராகி நிற்கும்
முளிந்தாரைத் தஞ்சம் மொழியலோ வேண்டா.
அளிந்தார்க ணாயினும் ஆராயா னாகித்
தெளிந்தான் விளிந்து விடும். 42

(ப—பொ). எப்பொழுதும் வெகுண்டாரே போலப் பிறராகி நிற்கும் ஈரமற்றாரைத் தேறவேண்டா என்று எளிதாக மொழிந்து கற்பிக்கவேண்டுவ தில்லை. தமக்கு அன்புடையாராய் ஈரமுடையார் மாட்டும் ஆராயானாகித் தெளிந்தான் கெடும்.

(ப—ரை). அளிந்தார் கண் ஆயினும்—தமக்கு அன்புடையராய் ஈரமுடையாரிடத்தும், ஆராயனுகி தெளிந்தான்—ஆராயாநகி நம்பினவன், விளிந்துவிடும்—கெடுவான். விளிந்தாரே போல—எப்பொழுதும் வெகுண்டாரே போல, பிறராகி நிற்கும் முனிந்தாரை—பிறராகி நிற்கும் ஈரமற்றாரை, தஞ்சம் மொழியலோ வேண்டா—(நம்பவேண்டா என்று) எளிதாக மொழிந்து கற்பிக்கவேண்டுவ தில்லை. [முனிதல்—காய்தல்· தஞ்சம்—எளிமை].

(க—து). அன்பரை நம்பி ரகசியம் வெளிவிட்டவன் கெடுவானென்றால், பிறரை நம்பலாகாது என்பது சொல்லவேண்டா.

"அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு."—திருக்குறள்.

## 4. தெரிந்து செய்தல்

183. அவரவர் துன்பத்துக்கு அவரவரே காரணம்

ஆஅ மெனக்கெளி தென்றுலக மாண்டவன்
மேஎந் துணையறியான் மிக்குநீர் பெய்திழந்தான்.
தோஒ முடைய தொடங்குவார்க் கில்லையே
தாஅம் தரவாரா நோய். 7

(ப—பொ). மூவடி நிலம் கொடுப்பது எனக்கு எளிதாம் என்று சொல்லிப் பண்டொருநாள் உலகமுழுதாண்ட மாவலியும் தன்மந்திரி சொல்லை விரும்புமளவு அறியானுய்ச் செருக்கினுல் மிக்கு நிர்த்தானமாக நீர் வார்த்து உலகமெல்லாம் இழந்தான். ஆதலால் குற்றமுடைய காரியங்களைச் செய்யத் தொடங்குவார்க்குத் தமக்குத் தாம்தர வாராத நோய்கள் இல்லை.

(ப—ரை). உலகம் ஆண்டவன்—உலகமுழுதாண்ட மாவலியும், மே(வு)ம் துணை அறியான்—தன் மந்திரி சொல்லைக் கேட்கும் அளவு அறியானுய், எனக்கு எளிதாம் என்று—(மூவடி நிலம் கொடுப்பது) எனக்கு எளிதாம் என்று சொல்லி, மிக்கு—செருக்கினுல் மிக்கு

நீர்பெய்து — நிர்த்தானமாக நீர்வார்த்து, இழந்தான் — உலகமெல்லாம் இழந்தான். (ஆதலால்), தோம் உடைய தொடங்குவார்க்கு— குற்றமுடைய காரியங்களைச் செய்யத் தொடங்குவார்க்கு, தாம் தர வாரா நோய் இல்லையே—தமக்குத் தாமே தர வாராத நோய்கள் இல்லை.

(க—து): முன்பின் ஆராயாமல் குற்றமுள்ள காரியத்தைச் செய்யத் தொடங்குவார் தாமே துன்பங்களை வருவித்துக்கொள்வர்: அவர்களுக்கு வரும் துன்பங்களுக்கு அவர்களே காரணமன்றி வேறில்லை. இவ்வுண்மைக்கு மாபலி சரித்திரம் உதாரணம்.

மாபலியினது செருக்கை ஒழிக்கத் திருமால் காசிபருக்கும் அதிதிக்கும் வாமனரூபமா யவதரித்து, அவனிடஞ்சென்று மூன்றடி மண் இரந்தபோது, அது வஞ்சனையென் றறிந்த சுக்கிரன் கொடுக்க வேண்டா என்று தடுத்தானாகவும், அதனை ஆராயாது மாபலி தானநீர் வார்த்தழிந்தான் என்பது இங்கே சுட்டிய புராண கதை.

பழமொழி.—A man may cause his own dog to bite him.

184. சொற்சோராமையின் அருமை

நற்பால கற்றாரும் நாடாது சொல்லுவர்.
இற்பால ரல்லார் இயல்பின்மை நோவதென்?
கற்பால் இலங்கருவி நாட!மற் றியாரானும்
சொற்சோரா தாரோ இலர். 94

(ப—பொ). நல்ல குடிப்பிறந்து கற்றாரும் ஆராயாது சில சொல்லுவார். ஆம் குடிப்பிறவாதா ரியல்பின்மை நோவது என்? கற்பால் இலங்கருவி நாடனே! சொல்லின்கண் சோர்வுபடாதார் உலகின்கண் யாவரும் இல்லை.

(ப—ரை). கல்பால் இலங்கு அருவிநாட — மலையினிடம் விளங்கும் அருவி பாயும் நாடனே! நற்பால கற்றாரும்—நல்ல குடியில் பிறந்து கற்றவரும், நாடாது — ஆராயாது, சொல்லுவர் — சில சொற்களைச் சொல்லுவர். (ஆகவே), இற்பாலர் அல்லார் இயல்பின்மை—குடிப் பிறவாதவரிடம் இயல்பின்மையை, நோவது என்—நோவதனால் நன்மை

என்ன? யாரானும்—எவராயினும், சொல் சோராதார் – சொல்லின் கண் சோர்வுபடாதவர், இலர்—(உலகில்) இலர். [மற்று—ஓ—அசை].

(க—து). கல்விமான்களும் ஆராயாது பேசுவதுண்டு என்றால், மற்றவர்கள் அங்ஙனம் பேசுவதை நோவதில் என்ன பயன்? யாரேனும் பேசத் தகாததைப் பேசிவிட்டால் நாம் அதைப் பொறுப்பதே தகுதி.

"அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு."—திருக்குறள்.

பழமொழி.—Good Homer sometimes nods. ஔவையார் மேலும் குற்றம் உண்டு, அண்ணாவியார்மேலும் பழுதுண்டு.

## 185. கண்டதையும் எண்ணிச் சொலல்

பூந்தண் புனற்புகார்ப் பூமிகுறி காண்டற்கு
வேந்தன் வினாயினான் மாந்தரைச்—சான்றவன்
கொண்டதனை நாணி மறைத்தலால், தன்கண்ணிற்
கண்டதூஉம் எண்ணிச் சொலல். 153

(ப—பொ). பூந்தண் புனலையுடைய புகாரின்கண் உள்ள விளைநிலத்தை இன்ன துணை என்றறிதற்கு அங்கு வாழும் மாந்தரை வேந்தன் வினாவினவிடத்து, மற்றொருவன் களவினால் ஆண்டுவருகின்ற நிலத்தை அறிந்து அந்நிலத்தை நீக்கிக் கரந்து இத்துணைநிலம் உள்ளதென்று ஒரு சான்றவன் அரசற்குச் சொல்லி அந்நிலங் கரந்தார்கின்றவனைப் பிழைப்பித்தான். ஆதலால், தன் கண்ணால் கண்டு தெளியவறிந்ததனையும் சொல்லலாம் சொல்லலாகாதென்று ஆராய்ந்து சொல்லுக.

(ப—ரை). பூ தண் புனல் புகார்—அழகிய குளிர்ந்த புனலையுடைய புகாரின்கண் உள்ள, பூமி—விளைநிலத்தை, குறிகாண்டற்கு—இன்ன அளவினதென்று அறிதற்கு, மாந்தரை—அங்கு வாழும் மனிதரை, வேந்தன் வினாயினான் – அரசன் கேட்டான். (கேட்டவிடத்து), கொண்டதனை—ஒருவன் களவினால்கொண்டு அனுபவித்து வருகின்ற நிலத்தை, நாணி—காட்டிக்கொடுக்க அஞ்சி, சான்றவன்—ஒரு சான்ற

வன், மறைத்தலால்—அந்நிலத்தை நீக்கி மறைத்து அரசனுக்கு வேறு கச் சொல்லி நிலத்தைக் களவினற் கொண்டவனைப் பிழைப்பித்தான். (ஆதலால்), தன் கண்ணின் கண்டதும்—தன் கண்ணால் கண்டு தெளிய அறிந்ததையும், எண்ணி சொலல்—சொல்லலாம் சொல்லலாகாதென்று ஆராய்ந்து சொல்லுக.

"வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும் தீமையிலாத சொலல்" என்னும் குறளின் உரையில் "இதனால் நிகழ்ந்தது கூறல் என்பது நீக்கப்பட்டது" என்றார். இதனால் "கண்டதூஉம் எண்ணிச் சொலல்" என்பது நன்கு விளங்கும்.

பழமொழி.—Tell not all you know.

186. சொல் கேளாதவனைத் திருத்தப் புகலாகாது

ஒருவன் உணரா துடன்றெழுந்த போருள்
இருவ ரிடைநட்பான் புக்கால்,—பெரிய
வெறுப்பினால் பேர்த்துச் செறுப்பின், தலையுள்
குறுக்கண்ணி யாகி விடும். 294

(ப-பொ). ஒருவன் விசாரியாமல் இருவர் வேறுபட்டெழுந்த போரின்கண்ணே அவ்விருவருக்கு நடுவே நட்பாக்குவான் சென்று புகுந்தால், அவன்சொல் கேளாதே பெரிய வெறுப்பாலே மீண்டும் செறுத்துப் போர்செய்யும் உள்ளத்தராயின், பெற்றத்தின் தலையில் கைக்கெட்டாத குறிய கண்ணியாய்விடும்.

குறுங்கண்ணி 'குறுக்கண்ணி' என வலித்தது. தன் சொல் கேளாதவரைத் திருத்தப் புகலாகாது என்றதாம். 'தலையுள் குறுங்கண்ணி' எனவே பெற்றமாயிற்று.

(ப—ரை). ஒருவன் உணராது—ஒருவன் விசாரியாமல், உடன்று எழுந்த போருள்—இருவர் வேறுபட்டெழுந்த போரின்கண், இருவர் இடை—அவ்விருவருக்கு நடுவே, நட்பான் புக்கால்—நட்பாக்குவான் சென்று புகுந்தால், பெரிய வெறுப்பினால் — (அவன் சொல்லைக்

கேளாமல்) பெரிய வெறுப்பாலே, பேர்த்து செறிப்பின் — அவர் மீண்டும் செறுத்துப் போர்செய்யும் மனமுடையவராயின், (நட்பாகும்படி புகுந்த செய்கை), தலையுள் குறுங்கண்ணி ஆகிவிடும் — எருதின் தலையில் கைக்கெட்டாத குறிய கண்ணியாய்விடும்.

(க—து). இருவர் வேறுபட்டுப் போர்செய்யும்போது ஒருவன் அவர்களை நட்பாக்க முயன்றவிடத்தில், அவன் சொல்லைக் கேளாமல் அவர்கள் மீண்டும் போர்செய்யும் மனத்தராயின், எருதின் தலையில் கட்டியிருக்கும் குறிய கயிற்றைத் திருத்தலாகாத வாறுபோல, அவர்களைத் திருத்துவது முடியாத காரியம்.

187. அண்மையிற் கொள்ளும் நன்மையை நாடல்

எனைப்பலவே யாயினும் சேய்த்தாற் பெறலின்
தினைத்துணையே யானும் அணிக்கோடல் நன்றே.
இனக்கலை தேன்கிழிக்கு மேகல்சூழ் வெற்ப!
பனைப்பதித் துண்ணார் பழம். 68

(ப—பொ). எத்துணைப் பலவாயினும் காலம் நெடிது சென்றால் பெறுமதனின் தினையளவே யாயினும் அணித்தாக ஒரு பொருளைப் பெற்றுத் தான் கோடல் மிகவும் நன்று. இனக்கலைகள் தேன்பொதிகளைக் கிழிக்கும் பிறங்கிய கற்கள் சூழ்ந்த வெற்பனே! பனையை நட்டுப் பனை பழுத்தால் பழம் உண்போம் என்றிருப்பார் ஒருவருமில்லை.

(ப—ரை). இனம் கலை — இனமாகிய கலைகள், தேன் — தேன் கூடுகளை, கிழிக்கும்—கிழிக்கும், மே கல் சூழ்—ஓங்கிய கற்கள் சூழ்ந்த, வெற்ப—வெற்பனே! எனை பலவே ஆயினும் — எத்துணைப் பலவாயினும், சேய்த்தால் பெறலின் — நெடுங்காலத்துக் கப்புறம் பெறுவதைக் காட்டிலும், தினை துணையே ஆனும்—தினையளவேயாயினும், அணி கோடல்—சமீப காலத்தில் ஒரு பொருளைத் தான பெற்றுக்கொள்ளுதல், நன்றே—மிகவும் நன்று. பனை பதித்து பழம் உண்ணார்—பனையை நட்டுப் பனை பழுத்தால் பழம் உண்போமென்றிருப்பார் ஒருவருமில்லை. (கலை—ஆண் முசு; முசு—ஒரு சாதிக் குரங்கு).

பழமொழி.—நாளைக்கு வருகிற பலாக்காயினும் இன்றைக்கு வருகிற களாக்காய் நல்லது. A bird in the hand is worth two in the bush (ten fleeing).

188. சனங்கள் உவந்தன செய்தல்

மனங்கொண்டக் கண்ணும் மருவில செய்யார்.
கனங்கொண் டுரைத்தவை காக்கவே வேண்டும்.
சனங்கள் உவப்பன செய்யாவும் செய்க.
இனங்கழு வேற்றினா ரில்.

(ப-பொ). தம்முடைய மனம் விரும்பிக்கொண்ட விடத்தும் பழகச்செய்து வாராதனவற்றைச் செய்யார். நல்லார் ஆகாவென்று உரைத்தனவற்றைத் திண்மை கொண்டு காக்கவேண்டுவர். நல்லார் செய்யவேண்டாவென்று உரைத்தவற்றையும், சனங்கள் உவந்துரைத்தனவாயின், செய்க: செய்யாவிடின் தம்மைத் தண்டம் செய்தலால், அச்சனங்களாகிய கணங்களைத் தண்டமாகக் கழுவேற்றுவார் இல்லை ஆதலான்.

(ப-ரை). மனம் கொண்டக்கண்ணும்-தம்முடைய மனம் விரும்பினும், மருவில செய்யார் - பழகியும் வாராதனவற்றைச் செய்யார். உரைத்தவை-நல்லார் ஆகாதனவென் றுரைத்தவைகளை, கனம் கொண்டு காக்கவே வேண்டும்-உறுதிகொண்டு காக்கவேண்டும். செய்யாவும்-நல்லார் செய்யவேண்டா என்றுரைத்தவைகளினும், சனங்கள் உவப்பன செய்க-சனங்கள் உவப்பனவற்றைச் செய்க. இனம் கழு ஏற்றினர் இல்-(செய்யாவிடின் தம்மை அவர் தண்டம் செய்வதல்லது) அச்சனங்களைத் தண்டமாகக் கழுவேற்றுவார் இல்லை.

(க-து). விரும்பிப் பழகியும் வாராதனவற்றைச் செய்யலாகாது. நல்லார் விலக்கியவற்றையும் செய்யலாகாது. நல்லார் விலக்கியவற்றையும், சனங்கள் உவந்துரைத்தால், செய்க: செய்யாவிடின் சனங்கள் தன்னைத் தண்டஞ்செய்வார். அதுபற்றிச் சனங்களைக் கழுவேற்றுவார் இல்லை.

189. துன்பம்பட வருவன செய்யாமை

கடுப்பத் தலைக்கீறிக் காலும் இழந்து
நடைத்தாரா என்பதூஉம் பட்டு—முடத்தோடு
பேர்பிறி தாகப் பெறுதலால், போகாரே
நீர்குறி தாகப் புகல். 146

(ப—பொ). மிகத் தலைகிழிந்து, தம் காலும் இழந்து, அக்கால்கள் நடையைத் தரா என்று சொல்லவும் பட்டு, முடத்துடனே பிறிதொரு பெயர் பெறுவா ராதலால், நீர்சுருங்கி அளவுபட்ட வழி இழிந்து போகலாயிருக்கப் போதல் அரிய பண்பு முதலாயினவற்றால் போகார்.

இதனாற் போந்த பொருள், தம்முயிர்க்கு ஏதம்பட வருவன செய்யலாகா என்பதாம்.

(ப—ரை). தலை கடுப்ப கீறி—தம் தலை மிகவும் கிழிந்து, காலும் இழந்து—தம் காலும் இழந்து, நடைத்தாரா என்பதும் பட்டு—அக்கால் கள், நடையைத் தரா என்று சொல்லவும்பட்டு, முடத்தோடு—முடத் துடனே, பிறிது பேர் ஆக பெறுதலால்—வேறொரு பெயர் பெறு வாராதலால், நீர் குறிதாக புகல் போகார்—ஒருவர் இழிந்து போகத் தக்க அளவாக நீர் சுருங்கியவிடத்தும் போவதன் அபாயத்தை நோக்கி இழிந்துபோகார்.

(க—து). இதனால் ஆசிரியர்சொல்லக் கருதிய பொருளாவது, தம் உயிருக்குத் துன்பம்பட வருவனவற்றைச் செய்யலாகாது என்பதாம்.

இங்ஙனம் கூறுதலால் இச்செய்யுள் (ஒட்டணி) பிறிது மொழி தல் என்னும் அலங்காரமாகும்.

190. இருக்க இடம் பெற்றால் படுக்க இடம் பெறுவார்

சிறிதாய கூழ்பெற்றுச் செல்வரைச் சேர்ந்தார்
பெரிதாய கூழும் பெறுவர்.—அரிதாம்
இடத்துள் ஒருவன் இருப்புழிப் பெற்றால்
கிடப்புழியும் பெற்று விடும். 235

(ப-பொ). செல்வரைச் சேர்ந்தவர்கள் முன் சிறிதாகிய கூழ் பெற்றால் பின்னைப் பெரிதாகிய கூழும் பெறுவர். பெறுதற்கரிய இடத்துள் ஒருவன் இருப்புழிப் பெற்றால் கிடப்புழியும் பெறுவான் ஆதலான்.

(ப-ரை). அரிதாம் இடத்துள்—பெறுதற்கரிய இடத்துள், ஒருவன்—ஒருவன், இருப்புழி பெற்றால்- இருக்க இடம் பெற்றால், கிடப்புழியும்—படுக்க இடமும், பெற்றுவிடும் — பெறுவான். (ஆதலால்), செல்வரை சேர்ந்தார் — செல்வரைச் சேர்ந்தவர்கள், சிறிதாய கூழ் பெற்று—முன் சிறிதாகிய கூழ்பெற்றால், பெரிதாய கூழும் பெறுவர்—பின்னைப் பெரிதாகிய கூழும் பெறுவர்.

பழமொழி.—இருக்க இடங்கொடுத்தால் படுக்க இடம் தேடிக் கொள்வான். கொஞ்ச இடம் கொடுத்தால் மிஞ்ச இடம் தேடிக் கொள்வான். எறும்பு நுழைய இடங்கொடுத்தால் எருதும் பொதியும் உள்ளே செலுத்துவான். Give him an inch and he will take an ell.

191. இன்சொல் இடர்ப்படுக்காமை

புன்சொல்லு நன்சொல்லும் பொய்யின் றுணர்கிற்பார்
வன்சொல் வழியராய் வாழ்தலும் உண்டாமோ?
புன்சொல் இடர்ப்படுப்ப தல்லால் ஒருவனை
இன்சொல் இடர்ப்படுப்ப தில். 217

(ப-பொ). புன்சொல்லால் வரும் பயனையும் நன்சொல்லால் வரும் பயனையும் ஆராய்ந்து பழுதின்றி உணரவல்லார், பிறரை வன்சொல் சொல்லி ஒழுகு நெறியாய் ஒழுகுதலுண்டாமோ? தான் பிறரைச் சொல்லும் புன்சொல் தன்னை இடர்ப்படுப்பதல்லது, தான் பிறரைச் சொல்லும் இன்சொல் தனக்கு இடரைத் தருவதொன்றில்லை.

(ப-ரை). புன்சொல்லும் நன்சொல்லும்—புன்சொல்லால் வரும் பயனையும் நன்சொல்லால் வரும் பயனையும், பொய்யின்று—பழுதில்லா

மல், உணர்கிற்பார்—உணரவல்லவர், வன்சொல் வழியராய் வாழ்தலும் உண்டாமோ—பிறரை வன்சொல் சொல்லி ஒழுகுநெறியராய் ஒழுகுதலும் உண்டாமோ? ஒருவனை—ஒருவனை, புன்சொல்—தான் பிறரைச் சொல்லும் புன்சொல், இடர்ப்படுப்பது அல்லால்—துன்பத்துட் படுத்துவதன்றி, இன்சொல்—தான் பிறரைச் சொல்லும் இன்சொல் இடர்ப்படுப்பது—தன்னைத் துன்பத்துட்படுத்துவது, இல்—இல்லை.

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது."—திருக்குறள்.

பழமொழி—Politeness costs nothing, and gains everything.

192. தம் தம் தன்மையராய் ஒழுகுதல்

மெய்ந்நீர ராகி விரியப் புகுவார்க்கும்
பொய்ந்நீர ராகிப் பொருளை முடிப்பார்க்கும்
எந்நீர ராயினு மாக. அவரவர்
தந்நீர ராதல் தலை. 395

(ப—பொ). உண்மையொழுக்கத்தை உடையாராகிமேன்மைக்குணத்தின் விரியப் புகுவார்க்கும், வஞ்சனை நீர்மையை உடையாராகித் தாம் கருதிய பொருளை முடிப்பார்க்கும், அவர்கள் எத்தன்மையராயினும் ஆக. அவரவர் தம்முடைய தன்மையராய் ஒழுகுதல் தலைமை.

(ப—ரை). மெய்நீரர் ஆகி விரிய புகுவார்க்கும்—உண்மையொழுக்கத்தை உடையராகி (மேன்மைக் குணத்தின்கண்) விரம்பப் புகுவாருக்கும், பொய் நீரர் ஆகி பொருளை முடிப்பார்க்கும்—வஞ்சனைத் தன்மையை உடையராகித் தாம் கருதிய பொருளை முடிப்பாருக்கும், எ நீரர் ஆயினும் ஆக—எத்தன்மையர் ஆயினும் ஆக. அவரவர் தம் நீரர் ஆதல் தலை—அவரவர் தமக்கியல்பான தன்மையாய் ஒழுகுதல் சிறந்தது.

(க—ரை). காரியம் முடிக்கு மளவில் அவரவருக்கு ஏற்ற தன்மையராய்த் தோன்றினும், ஒழுக்கவளவில் எவரும் தம்முடைய தன்மையராய் ஒழுகுவதே சிறந்தது.

193. தம்மை ஐயுற்றவனைப் பொறுத்தல்

யாவரே யானும் இழந்த பொருளுடையார்
தேவரே யாயினுந் தீங்கோர்ப்பர்.—பாவை
படத்தோன்று நல்லாய்! நெடுவேல் கெடுத்தான்
குடத்துளு நாடி விடும். 179

(ப—பொ). கெடுத்ததொரு பொருளையுடையார், எல்லாவறிவினை உடையராயினும், தேவர்களேயாயினும், தீங்குசெய்தாராக மனத்தின்கண் கருதுவர். சித்திரப் பாவையின் தன்மை உளதாகத் தோன்றும் வடிவை யுடைய நல்லாய்! நெடுவேலைக் கெடுத்தவன் குடத்துள்ளே நாடு மாதலால், தம்மை அயிர்த்தானென்று அவனைக் குற்றங்கொள்ள அடாது.

(ப—ரை). பாவை பட தோன்றும் நல்லாய்—பாவையின் தன்மை உளதாகத் தோன்றும் வடிவையுடைய நல்லாய்! இழந்த பொருள் உடையார்—தொலைந்ததொரு பொருளுக் குரியவர், யாவரே ஆயினும்—எல்லா அறிவினை உடையராயினும், தேவரே ஆயினும் – தேவர்களே யாயினும், தீங்கு ஓர்ப்பார்—தீங்கு செய்தாராக மனத்தின்கண் கருதுவர். நெடுவேல் கெடுத்தான்—நெடுவேலைத் தொலைத்தவன், குடத்துளும் – குடத்துள்ளேயும், நாடிவிடும் – நாடுவான். (ஆதலால் தம்மைச் சந்தேகித்தானென்று அவனைக் குற்றங் கொள்ளாது பொறுக்க என்பதாம்).

(க—து). தன் பக்கத்தி லுள்ளவர் மிக்க அறிவினராயினும் தேவரே யாயினும், ஒருபொருளை இழந்தவன் அவர்கள்மேல் சந்தேகங்கொள்வது இயற்கை. ஆகையால், சந்தேகங்கொண்டானே யென்று அவனை வெறுக்காமல் பொறுக்க.

194. மயில்போலும் கள்வர்

துயிலும் பொழுதத் துடைவூண்மேற் கொண்டு
வெயில்விரி போழ்தின் வெளிப்பட்டா ராகி
அயில்போலுங் கண்ணாய்! அடைந்தார்போல்காட்டி
மயில்போலுங் கள்வ ருடைத்து. 353

(ப—பொ). பலரும் உறங்குகின்ற அரையாமத்துக் களவு கண்டுண்ணும் உணவை மேற்கொண்டு செய்து, ஞாயிறு எழுந்து வெயில் விரிந்த பொழுதின்கண் உறக்கந் தவிர்ந்து புறப்பட்டாராகி, அயில்போலுங் கண்ணாய்! எல்லார்க்கும் தம்மை நட்டார்போல அறிவித்து, பாம்பை விழுங்கிக் கண்டார்க்கு அடக்கமுடைத்தாம் மயில் போலும் கள்வரை உலகம் உடைத்து. ஆதலான் அவரை அறிந்து பாதுகாக்க.

(ப—ரை). அயில்போலும்கண்ணாய்—வேல்போலும் கண்ணையுடையாய்! துயிலும் பொழுதத்து—பலரும் உறங்குகின்ற நடுராத்திரியில், உடைவு ஊண் மேற்கொண்டு—களவுகண் டுண்ணும் உணவை மேற்கொண்டு செய்து, வெயில் விரி போழ்தின்—ஞாயிறு எழுந்து வெயில் விரிந்த பொழுதின்கண், வெளிப்பட்டார் ஆகி – உறக்கந்தவிர்ந்து வெளிப்பட்டவராகி, அடைந்தார்போல்—எல்லார்க்கும் தம்மை நட்டார் போல, காட்டி—அறிவித்து, மயில்போலும் கள்வர்—பாம்பை விழுங்கிக் கண்டார்க்கு அடக்கமுடைத்தாகிய மயில்போலும் கள்வரை, உடைத்து—உலகம் உடைத்து. [உடைவு—தகர்த்தல்: கதவு முதலியன தகர்த்துக் களவு செய்தல்].

(க—து). மயில்போலும் வஞ்சக் கள்வரை அறிந்து தம்மைப் பாதுகாக்க.

195. போது

செல்லற்க சேர்ந்தார் புலம்புறச். செல்லாது
நில்லற்க நீத்தார் நெறியொரீஇப்.—பல்காலும்
நாடுக தான்கண்ட நுட்பத்தைக். கேளாதே
ஓடுக ஊரோடு மாறு. 392

(ப—பொ). தம்மை அடைந்தார் துன்புற ஒழுகாதொழிக. நீத்தார் ஒழுகிய நெறியை நீங்கி நில்லாதொழிக. தான் கற்றுவ் வல்லனை பொருளின் நுட்பத்தைப் பலகாலும் ஆராய்க. ஊர் ஓடும் நெறியில் கேளாது ஓடுக.

(ப—ரை). சேர்ந்தார் புலம்புற செல்லற்க—தம்மை அடைந்தவர் துன்புற ஒழுகவேண்டா. நீத்தார் நெறி செல்லாது ஓரீஇ நில்லற்க—துறவிகள் ஒழுகிய நெறியில் நடவாமல் நீங்கி நிற்கவேண்டா. தான் கண்ட நட்பத்தை பலகாலும் நாடுக—தான் கற்றுவல்லனான பொருளின் நட்பத்தைப் பலகாலும் ஆராய்க. ஊர் ஓடுமாறு கேளாதே ஓடுக—ஊரினர் நடக்குமாறு (அது தக்கதா என்று ஒருவரையும்) கேளாமலே நடக்க.

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லா ரறிவிலா தார்."—திருக்குறள்.

பழமொழி.—ஊரோட ஒக்க ஓடு, நாட்டோட நடுவே ஓடு. When you are at Rome, do as Rome does. Do as most men do, and men will speak well of thee.

## 5. பொருள்

### 196. பொருளின் வலிமை

தெருளா தொழுகும் திறனிலா தாரைப்
பொருளா லறுத்தல் பொருளே.—பொருள்கொடுப்பின்
யாணித்து நிற்கிற்பார் யாருளரோ? வேற்குத்தின்
காணியின் குத்தே வலிது. 32

(ப—பொ). தன்னைத் தேறு தொழுகும் திறனில்லாத பகைவரைப் பொருளாலே கோறல் காரியமாவது. அப் பகைவரைக் கோறற்குச் சிலர்க்குப் பொருள் கொடுத்தால் அவரைக் கொல்லாது நீட்டித்து நிற்பார் யாவர் உளர்? வேற்குத்தின் காணியின் குத்தே வலிதாக.

(ப—ரை). தெருளாது ஒழுகும்—தன்னைத் தெளியாமல் ஒழுகும், திறன் இலாதாரை—திறனில்லாத பகைவரை, பொருளால் அறுத்தல்—பொருளாலே கொல்லுதல், பொருளே—காரியமாவது. பொருள் கொடுப்பின் – (அப்பகைவரைக் கொல்லுதற்குச் சிலர்க்குப்)

பொருள் கொடுத்தால், பாணித்து நிற்கிற்பார் – (அவரைக் கொல்லாது) தாமதம் செய்து நிற்பார், யார் உளர்–யாவர் உளர்? வேல் குத்தின்–வேலின் குத்தைக்காட்டிலும், காணியின் குத்தே – காணிப் பொருளின் குத்தே, வலிது–வலியதாம்.

காணி என்பது, "முந்திரிமேற் காணி மிகுவதேல்" என்பதிற் போல், பொருளின் சிற்றளவைக் குறித்துநின்றது.

"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்."—திருக்குறள்.

பழமொழி.—ஈட்டி எட்டினமட்டும் குத்தும், பணம் பதின்காதமட்டும் குத்தும். A golden dart kills where it pleases.

197. பொருளுடையார் காரியம் நன்குமுடிதல்

ஒல்லாத வின்றி உடையார் கருமங்கள்
நல்லவாய் நாடி நடக்குமாம்.—இல்லார்க்
கிடரா வியலும். இலங்குநீர்ச் சேர்ப்ப!
கடலுள்ளும் காண்பவே நன்கு. 145

(ப–பொ). இயலாதனவின்றிப் பொருளுடையார் செய்யத் தொடங்கிய கருமங்கள் நல்லனவே பெற்று நடக்கும். பொருளில்லாதார்க்குச் செய்யத் தொடங்கிய கருமங்கள் இடராயே நடக்கும். இலங்குநீர்ச் சேர்ப்பனே! அவ்வுடையார் கடலுள்ளே புக்காலும் தமக்கு நல்லனவாவனவே செய்துகொள்வர்.

(ப–ரை). இலங்குநீர் சேர்ப்ப – விளங்கும் நீர்ச் சேர்ப்பனே! உடையார் கருமங்கள்–பொருளுடையார் செய்யத்தொடங்கிய கருமங்கள், ஒல்லாத இன்றி–முடியாதன இல்லாமல், நல்லவாய் நாடி நடக்கும்–நல்லனவே பெற்று நடக்கும். இல்லார்க்கு – பொருளில்லாதவர்க்கு, இடரா(க) இயலும்–இடராயே நடக்கும். கடலுள்ளும் நன்கு எ காண்ப–(அவ்வுடையார்) கடலுள்ளே புக்காலும் (தமக்கு நல்லனவாவனவற்றையே செய்துகொள்வர். [ஆம்–அசை].

(க-து). பொருளுடையாருக்கு முடியாத காரியங்கள் இல்லை. கடலுள்ளே புகுந்தாலும் அவருடைய காரியங்கள் நல்லனவாகவே முடியும். பொருளில்லாருடைய காரியங்கள் முட்டுப்படும்.

198. பொருளுடையாரிடம் கருமமுள்ளவர் தேடிவருவர்

அருமை யுடைய பொருளுடையார் தங்கண்
கரும முடையாரை நாடார்.—எருமைமேல்
நாரை துயில்வதியும் ஊர! குளந்தொட்டுத்
தேரை வழிச்சென்றா ரில். 23

(ப-பொ). பெறுதற்கரிய பொருள் யாதானும் ஒன்றனை யுடையார், தம்மாட்டுக் கொள்ளும் கருமமுடையாரை ஆராயவேண்டுவ தில்லை. எருமைமேல் நாரை துயில்வதியும் ஊரனே! குளத்தைத் தோண்டி அதன்கண் உறைவதற்குத் தேரையுள்ள இடம் தேடிச்செல்வார் இல்லை.

(ப-ரை). எருமைமேல் நாரை துயில்வதியும் ஊர—எருமையின் மேல் நாரை தூங்கும் ஊரனே! அருமையுடைய பொருளுடையார்—பெறுதற்கரிய பொருள் யாதானும் ஒன்றையுடையார், தம்கண் கருமம் உடையாரை—தம்மிடத்துக் கொள்ளும் கருமமுடையவரை, நாடார்—ஆராய வேண்டுவ தில்லை. குளம் தொட்டு—குளத்தைத் தோண்டி, தேரை வழி சென்றார்—(அதன்கண் உறைவதாகத்) தேரையுள்ள இடத்தைத் தேடிச்செல்வார், இல்—இல்லை.

(க-து). குளம் தோண்டித் தவளையைக் கூப்பிட வேண்டுமோ? தவளை தானே வந்துசேரும். அதுபோல அருமையான பொருளுடையவரிடம் கருமமுள்ளவர் தாமே தேடிவருவர்.

199. பொருளுடையாரை எல்லாரும் புகழ்தல்

அருளுடை யாருமற் றல்லா தவரும்
பொருளுடை யாரைப் புகழாதா ரில்லை.
பொருபடைக் கண்ணாய்! அதுவே திருவுடையார்
பண்டம் இருவர் கொளல். 269

(ப—பொ). அருளுடைய நல்லவரும் அல்லாதவரும் பொருளுடையாரை மதித்துப் புகழாதார் இல்லை. பொருபடைக் கண்ணாய்! புண்ணிய முடையோர் விற்கின்ற பண்டத்தை விரும்பி இருவர் மாறுபட்டுக் கோடல் எத்தன்மை அத்தன்மைபோலும்.

(ப—ரை). பொரு படை கண்ணாய்—சண்டை செய்தலான வேல் போன்ற கண்ணாய்! அருள் உடையாரும் அல்லாதவரும்—அருளுடைய நல்லவரும் அல்லாதவரும், பொருள் உடையாரை — பொருளுடையவர்களை, புகழாதார்—மதித்துப் புகழாதவர், இல்லை — இல்லை. திருவுடையார் பண்டம் இருவர் கொளல் அதுவே-புண்ணியமுடையோர் (விற்கின்ற) பண்டத்தை (விரும்பி) இருவர் (போட்டி போட்டுக் கொண்டு) கொள்ளுதல் எத்தன்மை அத்தன்மையே போலும்.

"இல்லாரை யெல்லாரும் எள்ளுவர்: செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு." —திருக்குறள்.

"அத்திட்ட கூறை அரைச்சுற்றி வாழினும்
பத்தெட் டுடைமை பலருள்ளும் பாடெய்தும்
ஒத்த குடிப்பிறந்தக் கண்ணும்ஒன் றில்லாதார்
செத்த பிணத்திற் கடை."—நாலடியார்.

200. பொருளும் உடையானும்

உடையதனைக் காப்பான் உடையான்: அதுவே
உடையானைக் காப்பதூஉ மாகும்.—அடையின்
புதற்குப் புலியும் வலியே: புலிக்குப்
புதலும் வலியாய் விடும். 282

(ப—பொ). தானுடைய பொருளைச் சோர்வுபடாமல் காப்பான் அதனை உடையானே: அப்பொருள்தானே தன்னையுடையானைக் காப்பதுமாகும். சென்றணையுமாகில், புதற்குப் புலியும் வலியாகும்: புலிக்குப் புதலும் வலியாம், அதுபோல.

(ப-ரை). அடையின் – சென்றடைந்தால், புதற்கு – புதருக்கு, புலியும்–புலியும், வலியே–வலியாகும்: புலிக்கு–புலிக்கு, புதலும்–புதரும், வலியாய்விடும்–வலியாம். (அதுபோல), உடையதனை காப்பான்–கையிலுள்ள பொருளைச் சோர்வுபடாமல் காப்பவனே, உடையான்–அதனை யுடையானுவான்: அதுவே–அப்பொருள்தானே, உடையானை–தன்னுடையானை, காப்பதும் ஆகும்–காப்பதுமாகும்.

(க-து). காட்டுக்குப் புலி ஆதரவு; புலிக்குக் காடு ஆதரவு. அது போல் உடையவனுக்குப் பொருள் ஆதரவு; பொருளுக்கு உடையவன் ஆதரவு. பொருளை ஒருவன் காப்பாற்றினால் அவனைப் பொருள் காப்பாற்றும்.

பழமொழி.—The great and the little have need of one another.

201. சிறிதுசிறிதாய்ச் சேர்ந்து பெருஞ்செல்வ மாதல்

வருவாய் சிறிதெனினும் வைகலு மீண்டின்
பெருவாய்த்தாய் நிற்கும் பெரிதும்.—ஒருவா
றொளியீண்டி நின்றால் உலகம் விளக்கும்.
துளியீண்டில் வெள்ளந் தரும்.

(ப-பொ). ஒருவர்க்குப் பொருள்வருவாய் சிறிதாயி னும், நாடோறும் துஞ்சாமல் சிறிதாயினும் ஈண்டின், பெரிய அளவினை உடைத்தாய்ப் பெரிதும் தமக்குச் செல்வம் உளதாம். ஒரு படியே பல மீன்களும் ஈண்டி வெளிப்பட்டு நின்றால் உலகமெல்லாம் இருள்நீங்க விளக்கும்: மழைபெய்யும் துளிகளும் விடாதே நின்று ஈண்டின் கடல்போலும் நீரையும் தரும் ஆதலான்.

(ப-ரை). ஒருவாறு – ஒருபடியே, ஒளி ஈண்டி நின்றால் – பல நட்சத்திரங்களும் ஈண்டி வெளிப்பட்டு நின்றால், உலகம் விளக்கும்–உலகமெல்லாம் இருள்நீங்க விளக்கும். துளி ஈண்டில்–மழைபெய்யும் துளிகளும் நெருங்கிநின்று ஈண்டில், வெள்ளம் தரும்–கடல் போல் நீரையும் தரும். (அதுபோல), வருவாய் சிறிது எனினும்–

ஒருவர்க்கு வருமானம் சிறிதாயினும், வைகலும்–நாடோறும், ஈண்டின்–(சிறிதாயினும்) கூடின், பெருவாய்த்தாய்–பெரிய அளவினையுடைத்தாய், பெரிதும் நிற்கும்–தனக்குச் செல்வம் மிகும்.

வருவாய்–பொருள் வருகின்ற வழி–வருமானம்.

(க–து). வருமானம் கொஞ்சமாயினும் நாடோறும் சிறிதுசிறிது சேர்ந்துவந்தால் ஒருவனுக்குச் செல்வம் வளர்ந்து பெரிதாகும்.

"ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லைப்
போகா றகலாக் கடை."—திருக்குறள்.

பழமொழி.—ஒன்றொன்றாய் தூறு ஒருமிக்க தூறு? பல துளி பெருவெள்ளம். சன்னம் சன்னம் பர்வதம். Drops of water make an ocean.

202. சிறிய முதற்பொருளால் பெரிய தனிகனுதல்

உள்ளூ ரவரால் உணர்ந்தா முதலெனினும்
எள்ளாமை வேண்டும். இலங்கிழாய்!—தள்ளா
தழுங்கல் முதுபதி அங்காடி மேயும்
பழங்கன்றே றுதலும் உண்டு. 108

(ப–பொ). தன் உள்ளூரின்கண் வாழுமவர்களாலே 'அவனுக்குள்ள முதலாகிய பொருளின் சிறுமையை உணர்ந்தேம்' என்று மனத்தின்கண் கொண்டாராயினும், அவனைப் பொருளிலனென்று இகழாமை வேண்டும். இலங்கிழாய்! ஒலியினையுடைய முதுபதி அங்காடியின்கண் ஓவாதே மேய்ந்து திரியும் முதுகன்று வளர்ந்து வலிய ஏறுதலும் உண்டு.

(ப–ரை). இலங்கு இழாய்–விளங்கும் ஆபரணம் அணிந்தாய்! அழுங்கல் முதுபதி அங்காடி–ஒலியினையுடைய பழைய நகரின் அங்காடியின்கண், தள்ளாது மேயும் பழங்கன்று–ஒழியாமல் மேய்ந்து திரியும் முதுகன்றானது, ஏறு ஆதலும் உண்டு–(வளர்ந்து) வலிய எருதாதலும் உண்டு. (ஆதலால்), முதல் உள்ளூரவரால் உணர்ந்தாம் எனினும், (ஒருவனுக்குள்ள) முதலாகிய பொருளின் சிறுமையை தன் உள்ளூரின்கண் வாழுமவர்களாலே அறிந்தேமென்று மனத்தின்கண் கொ

டார்யினும், எள்ளாமை வேண்டும்-(அவனைப் பொருளிலனென்று) இகழாமை வேண்டும்.

(க-து). ஒருவன் சிறிது பொருள் உடையவனாயினும், அவன் அதனைப் பெருக்கிப் பெரிய தனிகன் ஆதலுங் கூடும். ஆதலால் அவனை இகழற்க.

203. வற்றாத செல்வம்

களமர் பலரானும் கள்ளம் படினும்
வளமிக்கார் செல்வம் வருந்தா.--விளைநெல்
அரிநீர் அணை திறக்கும் ஊர! அறுமோ
நரிநக்கிற் றென்று கடல். 177

(ப-பொ). தமக்குத் தொழில் செய்வார் பலராலும் களவு காணப்படினும், பொருள் வருவாயான் மிக்கார் செல்வம் குறைந்து வருந்தா. விளைந்த நெல்லையே அறுக்கப் புகுவார் நீர் வடிய அணையைத் திறக்கும் ஊரனே! நரி நக்கிற்றென்று கடல்நீர் அறுமோ? அதுபோல.

(ப-ரை). விளை நெல் அரி நீர் அணை திறக்கும் ஊர-விளைந்த நெல்லை அறுக்கப்புகுவார் நீர் வடிய அணையைத் திறக்கும் ஊரனே! நரி நக்கிற்றென்று கடல் அறுமோ-நரி நக்கினது காரணமாகச் சமுத்திர சலம் குறையுமோ? (அதுபோல), களமர் பலரானும்-தமக்குத் தொழில் செய்வார் பலராலும், கள்ளம் படினும்-களவு காணப்பட்டாலும், வளம் மிக்கார் செல்வம்-பொருள் வரவு மிக்கவருடைய செல்வம், வருந்தா-குறைந்து வருந்தா.

பழமொழி.—நாய் நக்கிச் சமுத்திரம் குறையுமா? An inch breaketh no square.

204. பெருஞ்செல்வர் தரித்திரப்பட்டாலும் தாழார்

நாடறியப் பட்ட பெருஞ்செல்வர் நல்கூர்ந்து
வாடிய காலத்தும் வட்குபவோ?—வாடி
வலித்துத் திரங்கிக் கிடந்தே விடினும்
புலித்தலையை நாய்மோத்த லில். 278

(ப—பொ). உலகம் அறியப்பட்ட பெருஞ்செல்வத்தை உடையவர் நல்குரவை உடையாராய்த் தளர்ந்த காலத்தும் பிறரொருவருக்குத் தாழ்வாரோ? ஊனொழுகி வாடி நரம்பு வலித்துத் திரங்கிக் கிடந்துவிட்டதாயினும், புலித்தலையை நாய் அஞ்சாது சென்று மோவாத தன்மைபோல.

(ப—ரை). நாடு அறியப்பட்ட பெருஞ்செல்வர் — உலகத்தாரால் அறியப்பட்ட பெரிய செல்வத்தை உடையவர், நல்கூர்ந்து வாடிய காலத்தும்—தரித்திரமடைந்து தளர்ந்த காலத்தும், வட்குபவோ—பிறரொருவருக்குத் தாழ்வரோ? வாடி—வாட்டமுற்று, வலித்து — நரம்பு வலித்து, திரங்கி—சுருங்கி, கிடந்தேவிடினும் — படுத்துவிட்டதாயினும், புலித்தலையை—புலியின் தலையை, நாய்—நாயானது, மோத்தல்—(அஞ்சாது சென்று) மோந்துபார்த்தல், இல்—இல்லை.

## 6. பொருளைப் போற்றுதல்

205. வேண்டும் அளவாகப் பொருள்செய்து பாதுகாத்தல்

தந்தம் பொருளும் தமர்கண் வளமையும்
முந்துற நாடிப் புறந்தர லோம்புக.
அந்தண் அருவி மலைநாட! சேணோக்கி
நந்துநீர் கொண்டதே போன்று. 69

(ப—பொ). தந்தமது பொருளின் அளவினையும் தமர்கள் செல்வத்தினது அளவினையும் முந்துறவே ஆராய்ந்தறிந்து உய்தற்குத் தக்கவகை புறந்தருதற்குப் பொருள் செய்து பாதுகாக்க. அந்தண் அருவி மலைநாடனே! பின் தனக்கு நீர்பெறலாம் காலநெடுமையைப் பார்த்து நந்து நீரைத் தாங்கியதுபோல.

(ப—ரை). அம் தண் அருவி மலைநாட — அழகிய தட்பமான அருவிகள் உள்ள மலைநாடனே! நந்து—நத்தையானது, சேண் நோக்கி—(பின் தனக்கு நீர் பெறலான) கால நெடுமையைப் பார்த்து, நீர்கொண்டது போன்று—நீரைத் தாங்கியதுபோல, தம்தம் பொருளும்—தந்தமது

பொருளின் அளவையும், தமர்கண் வளமையும்–உறவினரிடத்துள்ள பொருளின் அளவையும், முந்துற நாடி–முற்படவே ஆராய்ந்தறிந்து, புறந்தால்–தாம் உய்தற்குத் தக்க வகை காப்பாற்றுதற்கு, ஓம்புக–பொருள் செய்து பாதுகாக்க. [ஏ–அசை].

(க–து). பின்னல் நீர்பெறுதலான காலம் நெடிதாயின் அதற் கேற்ற அளவாக நத்தையானது நீரைக்கொண்டு தாங்கியிருக்கும். அதுபோல், பின்னல் தனக்கும் உறவினருக்கும் போதுமான பொருள் இல்லையாயின் ஏற்ற அளவாகப் பொருள்செய்து பாதுகாக்கவேண்டும்.

## 206. தம்பொருளைத் தாமே போற்றல்

மறந்தானும் தாமுடைய தாம்போற்றி னல்லால்
சிறந்தார் தமரென்று தேற்றார்கை வையார்.
கறங்குநீர்க் காலலைக்கும் கானலஞ் சேர்ப்ப!
இறந்தது பேர்த்தறிவா ரில். 43

(ப–பொ). தாமுடைய பொருளைத் தாம் பாதுகாத்த லல்லது, நமக்குச் சிறந்தார் இவர் தமர் இவரென்று தேறி, தேறப்பட்டார் கையின்கண் மறந்தானும் வைக்க லாகாது. கறங்கு நீர் காலலைக்கும் கானலஞ் சேர்ப் பனே! தம் கையினின்றும் போய பொருளை மீட்டறி வார் இல்லை ஆதலால்.

(ப–ரை). கறங்கு நீர்க்கால்–ஒலித்தலான நீர்க்கால்கள், அலைக் கும்–அலைவீசுதலான, அம்–அழகிய, கானல் சேர்ப்ப – கானல் சேர்ப் பனே! இறந்தது – தமது கையினின்றும் போன பொருளை, பேர்த்து அறிவார் இல்லை – மீட்டறிவார் இல்லை. (ஆதலால்), தாம் உடைய – தாம் உடைய பொருளை, தாம் போற்றின் அல்லால்–தாமே பாது காத்தலல்லது, சிறந்தார் தமர் என்று–நமக்குச் சிறந்தார் இவரென்றும் உற்றார் இவரென்றும், தேற்றார் கை–நம்பலாகாதவர் கையின்கண், மறந்தானும் வையார்–மறந்தாயினும் வைக்கலாகாது.

(க–து). கையைவிட்டுப் போன பொருள் திரும்புவது அரிது. தம் பொருளைத் தாமே பாதுகாக்கவேண்டும்: சிறந்தாரென்றும் சுற்றத் தாரென்றும் நம்பலாகாதவரிடம் வைக்கவேண்டா.

**207. அரியபொருளை அரணான இடத்தில் வைத்துக்காத்தல்**

*அமையா இடத்தோர் அரும்பொருள் வைத்தால்*
*இமையாது காப்பினும் ஆகா.—இமையோரும்*
*அக்காலத் தோம்பி அமிழ்துகோட் பட்டமையால்,*
*நற்காப்பின் தீச்சிறையே நன்று.* 336

(ப—பொ). காவல் அமையாத இடத்திலே ஓரரிய பொருளை வைத்தக்கால் இமையாது காப்பினும் ஆகா: தேவர்களும் முற்காலத்துப் பாதுகாத்தோம்பியும் கருடனால் தம் அமிழ்து கோட்பட்டமையால், சிறைசெய்யாது காக்கும் காவலின் எளிய அரணே நன்று, ஆதலான்.

(ப—ரை). அக்காலத்து – முற்காலத்து, இமையோரும் – தேவர்களும், ஓம்பி – பாதுகாத்தோம்பியும், அமிழ்து கோட்பட்டமையால் – தன் தாயான விநதையைச் சிறைமீட்கும்படி கருடனால் தம் அமிழ்து கொள்ளப்பட்டமையால், நல்காப்பின்–சிறைசெய்யாது காக்கும் காவலை விட, தீச்சிறையே–எளிய அரணே, நன்று–நன்று. (ஆதலால்), ஓர் அரும் பொருள்–ஓர் அரிய பொருளை, அமையா இடத்து வைத்தால்–காவல் அமையாத இடத்திலே வைத்தக்கால், இமையாது காப்பினும்–இமைகொட்டாது காவல்செய்யினும், ஆகாது–நன்மை உண்டாகாது.

(க—து). அருமையான பொருளை அரணான இடத்தில் வைத்துப் பாதுகாக்கவேண்டும். அரணல்லா இடத்தில் வைத்துக் கண்ணிமையாமல் காத்தாலும் வல்லார் எளிதில் கொள்வர்.

**208. கீழ்மக்களிடம் வைத்தபொருள் திரும்பாது**

*ஊக்கி உழந்தொருவர் ஈட்டிய ஒண்பொருளை*
*நோக்குமின் என்றிகழ்ந்து நொவ்வியார் கைவிடுதல்*
*போக்கினீர் தூஉம் பொருகழித் தண்சேர்ப்ப!*
*காக்கையைக் காப்பிட்ட சோறு.* 315

(ப—பொ). ஒருவர் தாம் முயன்று வருந்திக் குவித்த ஒண்பொருளைப் பாதுகாத்துத் தாருமென்று அப்பொ

ருளை இகழ்ந்து கீழ்மக்களாயினோர் வசத்திலே விடுதல், போக்கில்லாத நீரைக் கரைமேலே தூவாநின்ற கரை பொரு கழிசூழ்ந்த குளிர்ந்த சேர்ப்பனே! காக்கையைக் காவலாகவைத்த சோறுபோலும்.

(ப-ரை). போக்கு இல் நீர்-போக்கில்லாத நீரை, தூவும்-கரை மேலே தூவாநின்ற, பொரு-கரைபொருதலான, கழி-கழி சூழ்ந்த, தண்-குளிர்ந்த, சேர்ப்ப-சேர்ப்பனே! ஒருவர் ஊக்கி உழந்து-ஒருவர் தாம் முயன்று வருந்தி, ஈட்டிய-தேடிய, ஒண் பொருளை-ஒள்ளிய பொருளை, இகழ்ந்து-(தாம் காத்தலை) இகழ்ந்து, நோக்குமின் என்று-பாதுகாத்துத் தாரும் என்று சொல்லி, தொவ்வியார் கை விடுதல்-கீழ் மக்கள் வசத்திலே விடுதல், காக்கையை காப்பிட்ட சோறு-காக்கையைக் காவலாகவைத்த சோறு போலும்.

(க-து). கீழ்மக்களைக் காவலாக வைத்த பொருள், காக்கையைக் காவலாக வைத்த சோறு போலும்.

"பண்டாரம் பல்கணக்குக் கண்காணி பாத்தில்லார்
உண்டா ரடிசிலே தோழனிற்—கண்டாராய்
யாக்கைக்குத் தக்க அறிவில்லார்க் காப்படுப்பின்
காக்கைக்குக் காப்படுத்த சோறு"—சிறுபஞ்சமூலம்.

209. கீழ்மக்களிடம் வைத்தபொருள் தமக்குப் பயன்படாது

தொடிமுன்கை நல்லாய்!அத் தொக்க பொருளைக்
குடிமக னல்லான்கை வைத்தல்,—கடிநெய்தல்
வேரி கமழும் விரிதிரைத் தண்சேர்ப்ப!
மூரியைத் தீற்றிய புல். 396

(ப-பொ). தொடிபொருந்திய முன்கையையுடைய நல்லாய்! தான் தேடித் திரண்டபொருளை நற்குடிக்கண் பிறந்த மகனல்லாதவன் கையிலே வைத்தல், புதிய நெய்தல் மணங்கமழும் விரிந்த திரையையுடைய கடற்சேர்ப்பனே! மூரியெருத்தைத் தீற்றிய புல்லோடொக்கும்.

(ப—ரை). தொடி முன்கை நல்லாய்—தொடிபொருந்திய முன் கையையுடைய நல்லாய்! கடி செய்தல்—புதிய செய்தல், வெரி கமழும்—மணம் வீசும், விரி திரை—விரிந்த அலையையுடைய, தண் சேர்ப்ப- கடற் சேர்ப்பனே! தொக்க அப்பொருளை—தான்தேடித் திரண்ட அப்பொருளை, குடிமகன் அல்லான் கை வைத்தல்—நற்குடியில் பிறவாதவன் வசத்திலே வைத்தலானது, மூரியை தீற்றிய புல்—மூரியெருதை உண்பித்த புல்லோ டொக்கும்.

(க—து). கீழ்மகன் வசத்தில் வைத்த பொருள், கிழவெருதை உண்பித்த புல்லோ டொக்கும்.

210. கைவிட்ட பொருளைத் தேடிக்கோள்ளுதல் முடியாது.

முன்னே யுடையது காவா திகழ்ந்திருந்து
பின்னையஃ தாராய்ந்து கொள்குறுதல்—இன்னியல்
மைத்தடங்கண் மாதராய்! அஃதால் வெண்ணெய்மேல்
வைத்து மயில்கொள்ளு மாறு. 325

(ப—பொ). தனக்கு முன்னுள் உண்டாகிய பொருளைக் காவாதே சோரவிட்டிருந்து பின்னர் அதனைத் தேடிக் கொள்ளுதலை விசாரித்தல், இனிய இயல்பினையுடைய மைத்தடங்கண்மாதே! மயிலைப் பிடித்துக்கொள்வான் வேண்டி அதன் தலையின்கண்ணே வெண்ணெயை வைத்து உருகி அதன் கண்ணின்கண் புக்கால் அதனைப் பிடித்துக் கொள்ள நினைக்குமாறு போலும்.

(ப—ரை). இன் இயல்-இனிய இயல்பினையுடைய, மை-மையிட்ட, தட கண் மாதராய்-பெரிய கண்களையுடைய மாதே! முன்னே உடைய—தனக்கு முன்னுள் உண்டாகிய பொருளை, காவாது இகந்திருந்து—காவாமல் சோரவிட்டிருந்து, பின்னை—பின்னர், அஃது—அதனை, ஆராய்ந்து — விசாரித்து, கொள்குறுதல் அஃது — தேடிக் கொள்ளுதலாகிய அத்தன்மை, மயில்மேல் வெண்ணெய் வைத்து கொள்ளும் ஆறு ஆதல்—மயில் தலையின்மேல் வெண்ணெயை வைத்து (வெண்ணெய் உருகி அதன் கண்ணில் புகுந்தால் அப்பொழுது), அதனைப் பிடித்துக்கொள்ள நினைக்குமாறு போலும்.

(க-து). கையிலுள்ள பொருளைக் கைவிட்டிருந்து பின் அதனைத் தேடிக்கொள்ளுதலானது, மயிலின் தலையில் வெண்ணெய் வைத்து அது உருகிக் கண்ணில் விழும்பொழுது மயிலைப் பிடித்துக்கொள்வது போலும். இது முடியாத காரியம் என்பதாம்.

பழமொழி.—கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துக் கொக்கைப் பிடிக்கிறதுபோல.

211. கடன்கோடாமை

கைவிட்ட ஒண்பொருள் கைவரா இல்லென்பார்
மெய்ப்பட்ட வாறே உணர்ந்தாரால் —மெய்யா
மடம்பட்ட மானோக்கின் மாமயி லன்னாய்!
கடம்பெற்றான் பெற்றான் குடம். 57

(ப-பொ). தனிசென்று ஒருவன் பிறர்க்குக் கைவிட்ட ஒண்பொருள் பின்னைத் தன்கையின்கண் வருவதில்லை என்று சொல்லுவார் மெய்ம்மைப்பட்ட நெறியானே அறிந்தார்கள் மெய்ம்மையாகவே. மடமையை உடைத்தாகிய மானோக்கினையுடைய மாமயில் போல்வாய்! பிறர்க்குத் தனிசிட்டான் அத்தனிசு பெற்றபடியாவது சூளுறுதற்குப் பாம்புக் குடத்தைப் பெறுதல்.

"பாழ்ந்தனிசு வேண்டிப் பாம்புக்குடம் பெற்றான்" என்னும் பழமொழி இது.

(ப-ரை). மடம்பட்ட—மடமையை உடைத்தாகிய, மான் நோக்கின்—மானின் நோக்கினையுடைய, மா மயில் அன்னாய்-சிறந்த மயில் போல்வாய்! கைவிட்ட ஒண் பொருள்—(கடனென்று ஒருவர் பிறருக்குக்) கைவிட்ட ஒள்ளிய பொருள், கைவரா இல்லென்பார்—பின்பு தன் கையின்கண் வருவதில்லை என்று சொல்லுவார், மெய்ப்பட்ட ஆறே உணர்ந்தார்—உண்மையாகிய நெறியாலே உணர்ந்தவராவர். மெய்யாக — உண்மையாகவே, கடம்பெற்றான் — பிறர்க்குக் கடன் கொடுத்தவன் அக்கடனைப் பெற்றபடியாவது, குடம்பெற்றான்—பிரமாணம் செய்வதற்குப் பாம்புக்குடத்தைப் பெறுதலே. [ஆல்—அசை].

முன்னாளில் வழக்கு விசாரணையில் பாம்புக்குடத்தில் கையிடுவது திவ்வியப் பிரமாணங்களில் ஒன்று.

(க—து). கையைவிட்டுக் கடனாகக் கொடுத்த பணம் திரும்பிக் கைக்கு வருவதில்லை என்பது உண்மை. கடன் கொடுத்தவன் பெறுவது (பிரமாணம் செய்வதற்குப்) பாம்புக் குடமேயன்றி வேறொன்றும் இல்லை.

*பழமொழி.*—கும்பிட்டுக் கடன் கொடாதே, கும்பிட்டுக் கடன் வாங்காதே. Lend and lose, so play fools.

## 212. கொடுத்த கடன் கேட்டால் கைப்பாதல்

கடங்கொண்ட ஒண்பொருளைக் கைவிட் டிருப்பார்
இடங்கொண்டு தம்மினை என்றால்—தொடங்கிப்
பகைமேற்கொண் டார்போலக் கொண்டார் வெகுடல்
நகைமேலும் கைப்பாய் விடும். 304

(ப—பொ). தாம் கடனாகக் கொண்ட ஒள்ளிய பொருளைக் கைவிட்டிருப்பார் தாம் இருந்த இடத்தின்கண் சென்று "எம்பால் கொண்ட பொருளைத் தரல்வேண்டும்" என்று சொன்னால், தம்மோடு பகைமை மேற்கொண்டார் போலத் தொடங்கி, தனிசுகொண்டவர்கள் அவரைச் சீறுதல் விளையாட்டினும் இன்னாதாய்விடும்.

(ப—ரை). கடம் கொண்ட ஒண்பொருளைக் கைவிட்டிருப்பார் இடம்கொண்டு—தாம் கடனாகக்கொண்ட ஒள்ளிய பொருளைக் கைவிட்டுச் செலவு செய்திருப்பவரிடத்தில் சென்று, தம்மின் என்றால்—வாங்கின கடனைக் கொடும் என்று கொடுத்தவர் கேட்டால், கொண்டார்—கடன்வாங்கினவர், பகை மேற்கொண்டார் போலத் தொடங்கி—தம்மோடு விரோதம் கொண்டவர்போலத் தொடங்கி, வெகுடல்—கோபித்தல், நகைமேலும்—விளையாட்டாகச் செய்தவிடத்தும், கைப்பு ஆய்விடும்—துன்பந்தருவதாய்விடும். [வெகுடல்—வெகுள்தல்].

*பழமொழி.*—கடன் வாங்குகிறபோது இனிப்பு; கடன் கொடுக்கிறதென்றால் கசப்பு. கொடுத்தது கேட்டால் அடுத்தது பகை. Sweet is the wine, but sour is the payment.

## 7. நன்றியில் செல்வம்

213. பாவத்தால் வந்தபொருள் அறத்துக்கு ஆகாமை

அல்லது செய்வார் அரும்பொரு ளாக்கத்தை
நல்லது செய்வார் நயப்பவோ?—ஒல்லொலிநீர்
பாய்வதே போலும் துறைவ!கேள் தீயன
ஆவதே போன்று கெடும். 173

(ப-பொ). பாவத்தைச் செய்வா ரரும்பொருள் திட்டத்தை நல்ல அறத்தைச் செய்வார் விரும்புவரோ? ஒல்லொலி நீர் பார்மேல் ஏறிப் பாய்வதே போலும் துறைவனே! கேளாய்! தீய கருமங்கள் செல்வ மாவதொரு கருமம்போலேயிருந்து கெட்டுப்போம், ஆதலான்.

(ப-ரை). ஒல்லொலி நீர்-ஒல்லென்றொலிக்கும் நீர், பாய்வதே போலும்-பார்மேல் ஏறிப் பாய்வதேபோலும், துறைவ-துறைவனே! கேள்-கேளாய்:—தீயன-தீய கருமங்கள், ஆவதேபோன்று-செல்வமாவதொரு கருமம்போலே காணப்பட்டு, கெடும்-கெட்டுப்போம். (ஆதலால்), அல்லது செய்வார்-பாவத்தைச் செய்வாரது, அரும் பொருள் ஆக்கத்தை-அரிய பொருளின் ஈட்டத்தை, நல்லது செய்வார்-நல்லறத்தைச் செய்வோர், நயப்பவோ-விரும்புவரோ?

(க-து). பாவச்செய்கை உடையாரது பொருள் பாவவழியிலே தேடியதாகும்: அறஞ்செய்யும் பொருட்டும் அப்பொருளை விரும்புதலாகாது, அப்பொருள் ஆவதுபோல் கெடுமாகையால்.

"களவினா லாகிய வாக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும்."—திருக்குறள்.

214. அறிவில்லார் செல்வம் பெறுதல் துன்பம் பெறுதலே

தொன்மையின் மாண்ட துணிவொன்றும் இல்லாதார்
நன்மையின் மாண்ட பொருள் பெறுதல்,—இன்னொலிநீர்
கன்மேல் இலங்கு மலைநாட! மாக்காய்த்துத்
தன்மேல் குணில்கொள்ளு மாறு. 129

(ப—பொ). பழைய நூல்களில் மாட்சிமைப்பட்ட துணிவினையில்லாதார் நன்மையான் மாட்சிமைப்பட்ட செல்வத்தைப் பெறுதல், இனிய ஒலியையுடைய அருவி நீர் கற்பாறைமேல் வந்திழியாநின்ற மலைநாடனே! மா மிகக் காய்த்துத் தன்மேல் பிறர் எறியும் கல்லை ஏற்றுக் கொள்ளுமாறு போலும்.

(ப—ரை). இன் ஒலி நீர்—இனிய ஒலியையுடைய அருவிநீர், கல் மேல் இலங்கும்—கற்பாறைமேல் வந்திழியாநின்ற, மலைநாட—மலை நாடனே! தொன்மையில் மாண்ட துணிவு ஒன்றும் இல்லாதார்—பழைய நூல்களில் மாட்சிமைப்பட்ட துணிவு யாதொன்றும் இல்லாத வர், நன்மையின் மாண்ட பொருள் பெறுதல்—நன்மையால் மாட்சி மைப்பட்ட செல்வத்தைப் பெறுதல், மா காய்த்து—மா மிகவும் காய்த்து, தன்மேல் குணில் கொள்ளும் ஆறு—தன்மேல் பிறர் எறியும் கல்லை ஏற்றுக்கொள்ளுமாறு போலும். [குணில்-கவண்கல்—கல்].

(க—து). ஏழைகளுக்கு உதவாமையால் அறிவிலிகளுடைய செல் வம் தாயத்தார் முதலியோரால் வலிந்துகொள்ளப்பெறுகின்றது.

"இன்னுதே கல்லார்கட் பட்ட திரு."—திருக்குறள்.

215. இவறன்மை

பெற்றாலும் செல்வம் பிறர்க்கீயார் தாந்துவ்வார்
கற்றாரும் பற்றி இறுகுபவால்.—கற்றா
வரம்பிடைப் பூமேயும் வண்புனல் ஊர!
மரங்குறைப்ப மண்ணா மயிர். 107

(ப—பொ). செல்வம் பெற்றாலும் அச்செல்வத்தைப் பிறர்க்கும் இடார், தாமும் நுகராது, கற்றவர்களும் பற் றுள்ள முடையவராய் நெகிழாதே இறுகாநிற்பர்: கன் றினையுடைய ஆ வரம்பின்கண் கிடந்த பூவினை மேயும் வண்புனல் ஊரனே! மரத்தைக் குறைக்கவல்ல கருவிகள் மயிரினை மண்ணமாட்டா, அதுபோல.

(ப—ரை). கற்று—கன்றினையுடைய பசு, வரம்பிடை பூ—வரம்பின்கண் கிடந்த பூவினை, மேயும்—மேயும், வண் புனல் ஊர—வளவிய புனலூரனே! மரம் குறைப்ப—மரத்தைக் குறைக்கவல்ல கருவிகள், மயிர் மண்ணு—மயிரினை மண்ணமாட்டா. (அதுபோல), செல்வம் பெற்றாலும்—செல்வத்தைப் பெற்றாலும், பிறர்க்கு ஈயார்—அச்செல்வத்தைப் பிறர்க்கும் இடாராய், தாம் துவ்வார்—தாமும் அனுபவியாமல், கற்றாரும்—கற்றவர்களும், பற்றி — பற்றுள்ளமுடையராய், இறுகுபதனாவிடாமல் இறுகப் பிடிப்பர். [மண்ணல்—வெட்டுதல்].

தென்னாட்டில் 'மயிரைக் கத்தி மண்ணவில்லை' என்கிற வழக்கு இன்றும் உண்டு.

(க—து). சில கருவிகள் மரம்வெட்ட உதவுவதன்றி மயிரை வெட்ட உதவா. அதுபோல், சிலர் கற்ற கல்வி தம்முடைய செல்வத்தை இறுகப் பிடிப்பதற்கு உதவுவதன்றிப் பிறர்க்குக் கொடுத்தும் தாம் உண்டும் இல்வாழ்க்கையை இனிது நடத்துதற்கு உதவுவதில்லை.

216. லோபி செல்வம்

வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம்,—தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப! அதுவன்றோ
நாய்பெற்ற தெங்கம் பழம். 151

(ப—பொ). பிறர்க்குக் கொடுத்தலும் தான் நுகர்தலும் செய்யமாட்டாதான் பெற்ற முழங்கு முரசினையுடைய செல்வம், முழங்காநின்ற அருவிகளையுடைய வேய்முற்றி முத்துதிரும் வெற்பனே! அது நாய் பெற்ற தெங்கம்பழத்தோடொக்கும்.

(ப—ரை). தழங்கு அருவி — முழங்காநின்ற அருவிகளையுடைய, வேய் முற்றி முத்து உதிரும்—மூங்கில் முற்றி முத்து உதிர்தலான, வெற்ப—வெற்பனே! வழங்கலும்—பிறர்க்குக் கொடுத்தலும், துய்த்தலும் — தான் அனுபவித்தலும், தேற்றாதான் — செய்யமாட்டாதவன்,

பெற்ற—பெற்ற, முழங்கு முரசு உடை செல்வம் அது—முழங்கும் முரசினையுடைய செல்வமானது, நாய் பெற்ற தெங்கம்பழம்—நாய் பெற்ற தெங்கம்பழத்தோ டொக்கும். [முழங்கு முரசுடைச் செல்வம்—அரசச்செல்வம்].

"அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்."—திருக்குறள்.

பழமொழி.—நாய்க்கு முழுத்தேங்காய் தக்குமா?

217. ஈயாதான் செல்வம் பொலிவு பெறாது

முழவொலி முந்நீர் முழுதுட னாண்டார்
விழவூரில் கூத்தேபோல் வீழ்ந்தவிதல் கண்டும்,
இழவென் றொருபொருள் ஈயாதான் செல்வம்,
அழகொடு கண்ணி னிழவு. 343

(ப—பொ). முழவோசைபோலும் ஒலியையுடைய முந்நீரால் சூழப்பட்ட உலகம் முழுதையும் ஆண்ட மன்னவர்கள் திருநாள் நடந்த ஊரின்கண் ஆடிய கூத்துப் போல் பொலிவிழந்து அழகின்றிக் கெடுமாறுபோலச் செல்வமும் கெட்டுப் போமாறு கண்டிருந்தும், யாமும் இப்பொருளைக் காத்திருந்து இழந்துபோவதொழியக் கொண்டுபோவதில்லையென்று இரந்தோர்க் கொருபொருளைக் கொடாதவன் செல்வமும், அழகும் வடிவும் உடையானொருவன் கண்ணிழந்ததனோ டொக்கும்.

(ப—ரை). முழவு ஒலி முந்நீர்முழுதுடன் ஆண்டார்—முழவோசைபோலும் ஒலியையுடைய கடலால் சூழப்பட்ட உலகமுழுதையும் ஆண்ட அரசர்கள், விழ ஊரில் கூத்துபோல்—திருநாள் நடந்த ஊரின்கண் ஆடிய கூத்துப் பொலிந்த அழகின்றிக் கெடுமாறுபோல், வீழ்ந்து அவிதல் கண்டும்—செல்வமும் கெட்டுப்போமாறு கண்டிருந்தும், இழவு என்று—கொடுத்தமட்டில் நஷ்டந்தானே என்றெண்ணி, ஈயாதான் செல்வம்—இரந்தவர்க்கு ஒரு பொருளைக் கொடாதவனுடைய செல்வமும், அழகொடு கண்ணின் இழவு—அழகும் வடிவும் உடையானொருவன் கண்ணிழந்ததனோ டொக்கும்.

பேரரசர் செல்வமிழந்து சீர் கெடுவதற்குத் திருவிழா நடந்த ஊரில் ஆடிய கூத்து அழகுகெடுவது உவமானம்.

(க—து). அழகும் வடிவமும் கண்ணின்றிப் பொலிவு பெறுமை போல், செல்வம் ஈகையின்றிப் பொலிவு பெறாது.

## 218. ஈயாத பொருள் இருந்தும் பயன்படாது

நாவின் இரந்தார் குறையறிந்து தாமுடைய
மாவினை மாணப் பொதிகிற்பார்—தீவினை
அஞ்சிலென் அஞ்சா விடிலென்? குருட்டுக்கண்
துஞ்சிலென் துஞ்சாக்கா லென்? 238

(ப—பொ). வந்த குறிப்பை முகத்தால் அறிதலே யன்றி, வாக்கால் இரந்தவர் குறையை அறிந்தும், தமக் குண்டாகிய செல்வத்தை மாட்சிமைப்படப் பொதிந்து வைப்பார், மறைத்துத் தீவினைக்கு அஞ்சில் என்? அஞ்சா தொழிந்தால் என்? குருடாகிய கண் துஞ்சில் என்? துஞ் சாமலிருந்து என்? அதுபோல.

(ப—ரை). நாவின் இரந்தார் குறை அறிந்து—வாயாலே சொல்லி இரந்தவருடைய குறையை அறிந்து, தாம் உடைய மாவினை—தமக்குண் டாகிய செல்வத்தை, மாண—மாட்சிமைப்பட, பொதிகிற்பார்—பொதிந்து வைப்பவர், தீவினை—தீவினைக்கு, அஞ்சில் என்—அஞ்சினுல் என்ன? அஞ்சாவிடில் என்—அஞ்சாதொழிந்தால் என்ன? குருட்டுக்கண்—குரு டாகிய கண், துஞ்சில் என்—தூங்கினுல் என்ன? துஞ்சாக்கால் என்— தூங்காதிருந்தால் என்ன?

மா—செல்வம். அஞ்சில் (நன்மை) என், அஞ்சாவிடில் (தீமை) என் என எழுவாய் வருவித்துக் கொள்ளவேண்டும்.

ஏழைகளுக்குப் பொருள் உதவுவது தீவினையை ஒழிக்கும் உபா யம். உதவாத பொருள் குருட்டுக்கண் போன்றது: இருந்தும் பயன் தருவதில்லை.

(க—து). தீவினைப் பயனை அனுபவிக்கவேண்டுமே என்றஞ்சுகின் றவன் ஏழைகளுக்குத் தன் பொருளை உதவுவான்: அஞ்சாதவன் உத

வான்: குருட்டுக்கண் தூங்கினால் உண்டாகும் நன்மையும் இல்லை: தூங்காவிட்டால் உண்டாகும் கெடுதியுமில்லை. பொருள் உதவாதவன் தீவினைக்கு அஞ்சுதலால் அடையும் நன்மையும் இல்லை: அஞ்சாமையால் அடையும் தீமையும் இல்லை.

பழமொழி.—குருட்டுக்கண் தூங்கியென்ன? தூங்காதென்ன?

219. ஈயாது பொருளைவைத் திறப்பவர்

படரும் பிறப்பிற்கொன் றீயார் பொருளைத்
தொடருந்தம் பற்றினால் வைத்திறப் பாரே,
அடரும் பொழுதின்கண் இட்டுக் குடரொழிய
மீவேலி போக்கு பவர். 379

(ப—பொ). இனிவரும் பிறப்பிற்கு உதவுவதாய் ஒரு பொருளைத் தாம் கொடாது தம் பொருளைத் தொடர்ந்த பற்றுள்ளத்தால் ஈட்டிவைத்து இறந்துபோவார், வயிற்றின்கண் புண்பட்டிருக்கும் பொழுதின்கண் குடர் புறத்தாக மற்றொன்றினை உள்ளேயிட்டுப் போர் வழங்குங்கால் வல்லே வளநெடிது கோளோ டொப்பர்.

(ப—உரை). படரும்—இனி வருதலான, பிறப்பிற்கு-பிறப்பிற்கு உதவுவதாய், ஒன்று ஈயார்—ஒன்றுங் கொடாமல், தொடரும் பற்றினால்—மேன்மேல் தொடர்தலான பற்றுள்ளத்தால், பொருளை வைத்து—பொருளைப் பத்திரப்படுத்திவைத்து, இறப்பார்—சும்மா இறப்பவர், அடரும் பொழுதின்கண் – சத்துருக்கள் சண்டைசெய்யும் பொழுதின்கண், குடர் ஒழிய—வயிறு புண்பட்டுக் குடல் சரிந்து புறத்ததாக, இட்டு—மற்றொன்றினை உள்ளேயிட்டு, மீவேலி போக்குபவர்—மேலே கட்டுக் கட்டி வைத்திருப்பவரோ டொப்பர். [ஏ—அசை].

(க—து). யுத்த களத்தில் ஒருவனுக்குக் குடல் சரிந்தொழிய வேறொன்றை உள்ளிட்டுக் கட்டிவைத்தாலும் அதனால் அவனுக்கு நன்மை உண்டாகாது. அதுபோல மறுமையின் பொருட்டுச் செலவிடாமல் ஒருவன் பத்திரப்படுத்திவைத்த பொருளால் அவன் இறந்தபின் அவனுக்கு ஒரு நன்மையும் உண்டாகாது.

"வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்."—திருக்குறள்.

220. உற்றுருறவினர்க்கு உதவாமல் வம்பர்க்கு உதவுதல்

விரும்பி அடைந்தார்க்கும் சுற்றத் தவர்க்கும்
வருந்தும் பசிகளையார் வம்பர்க் குதவல்,
இரும்பணைவில் வென்ற புருவத்தாய்! ஆற்றக்
கரும்பனை யன்ன துடைத்து. 286

(ப-பொ). தம்மைக் காதலித் தடைந்தார்க்கும் கிளைகட்குமே வருந்தும் பசி களையாராய்ப் புதிய அயலார்க்கு உதவுதல், இரும்பணையாற் செய்யப்பட்ட வில் லினைவென்ற புருவத்தாய்! மிகவும் அது தன்னை வித்திட்டு ஆக்கினோர்க்கு உறுங்காலத் துதவாது நெடுங்காலம் சென்றால் பிறர்க்குப் பயன்படும் கரும்பனைபோலும் தன்மையை உடைத்து.

(ப-ரை). இரு பணை வில் வென்ற புருவத்தாய்—பெரிய மூங்கிலால் செய்யப்பட்ட வில்லினை வென்ற புருவத்தாய்! விரும்பி அடைந்தார்க்கும்—தம்மை விரும்பி அடைந்தவர்க்கும், சுற்றத்தவர்க்கும்—சுற்றத்தார்க்கும், வருந்தும் பசி களையார்—வருத்தும் பசியை நீக்காதவராய், வம்பர்க்கு உதவல்—புதிய அயலார்க்கு உதவுதல், ஆற்ற கரும்பனை அன்னது உடைத்து—மிகவும் (தன்னை வித்திட்டு ஆக்கினோர்க்கு உறுங்காலத் துதவாது நெடுங்காலஞ் சென்றால் பிறர்க்குப் பயன்படும்) கரிய பனை போலும் தன்மையை உடையது.

(க-து). நட்டுவளர்த்தவர்க்குப் பயன் தாராமல் பிறர்க்குப் பயன் தரும் கரும்பனையைப் போல்வர், உற்றார் உறவினர்க்கு உதவாமல் பிறர்க்கு உதவுவோர்.

"ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை."—திருக்குறள்.

"பொன்னிறச் செந்நெல் பொதியொடு பீள்வாட
மின்னொளிர் வானம் கடலுள்ளும் கான்றுகுக்கும்.
வெண்மை யுடையார் விழுச்செல்வம் எய்தியக்கால்
வண்மையு மன்ன தகைத்து."—நாலடியார்.

221\. பூர்வ புண்ணியத்தால் பொல்லார் பொருள் பெறுவர்

வழங்கார், வலியிலார் வாய்ச்சொல்லும் பொல்லார்,
உழந்தொருவர்க் குற்ருல் உதவலு மில்லார்.
இழந்ததில் செல்வம் பெறுதலும் இன்ஞர்,
பழஞ்செய்போர் பின்று விடல். 292

(ப—பொ). ஒருவர்க்கு ஒன்றைக் கொடார், தாமும் வலியில்லாமையால் சொல்லும் சொற்களானும் பொல்லார், ஒருவர்க்கு இடர் உற்ருல் வருந்தியாகிலும் அவர்க்கு ஒன்றை உதவமாட்டார். இப்பெற்றிப் பட்டார் கேடில்லாத செல்வம் பெறுதல், பழைதாகி உரம் பெற்று வந்த செய் இப்பொழுது ஒருரமும் பெருதே மிகப்போர் இடும்படி விளைந்ததனே டொக்கும். [பழஞ் செய்—முன்செய்த நல்வினைப்பயன்].

(ப—ரை). வழங்கார்—ஒருவர்க்கு ஒன்றைக் கொடார்: வலியிலார் வாய்ச் சொல்லும் பொல்லார்—தாமும் வலியில்லாமையால் சொல்லும் சொற்களாலும் பொல்லார்: ஒருவர்க்கு உற்ருல்—ஒருவர்க்கு இடர் உற்ருல், உழந்து உதவலும் இல்லார்—வருந்தியாகிலும் அவர்க்கு ஒன்றை உதவ்மாட்டார். இன்ஞர்—இத்தன்மையர், இழந்ததில் செல்வம் பெறுதலும்—கேடில்லாத செல்வத்தைப் பெறுதலும், பழஞ் செய்—பழையதாகி உரம் பெற்றுவந்த வயல், பின்று—உரம்பெருத பிற்காலத்தில், போர்—போரிடும்படி, விடல்—(கதிர்விட்டு) விளைந்ததனே டொக்கும். [பின்று—பின்றை—பின்னைநாள்—பிற்காலம்].

(க—து). முன்னே உரம் பெற்றுக் கொழுமையடைந்த வயல், பின்னே உரம் பெருவிடினும், முன்னே பெற்ற உரத்தின் பயனல் போரிடும்படி தானியக் கதிர்களை விளைத்தாற்போல, முன்பிறப்பில் புண்ணியஞ் செய்தோர், இப்பிறப்பில் புண்ணியஞ்செய்யாது பாபி களாயிருப்பினும், பூர்வ புண்ணியபலத்தால் மிக்க திரவியம் பெற்றிருப்பர்.

"நல்லார் நயவ ரிருப்ப நயமிலாக்
கல்லார்க்கொன் ருகிய காரணம்—தொல்லை
வினைப்பய னல்லது வேனெடுங் கண்ணய்!
நினைப்ப வருவதொன் றில்."—நாலடியார்.

222. உதவி செய்வார்போல் காட்டி ஒன்றும் செய்யாமை

ஒற்கப்பட் டாற்றூர் உணர உரைத்தபின்,
நற்செய்கை செய்வார்போல் காட்டி, நசையழுங்க
வற்கென்ற செய்கை யதுவால், அவ் வாயுறைப்
புற்கழுத்தில் யாத்து விடல். 283

(ப–பொ). வறுமைப்பட் டதனுக்கு ஆற்றுதவர் தம் வறுமையை ஒருவர்க்குத் தெளிய உரைத்தவிடத்தும், பின்னை அவர்களுக்கு நல்ல செய்கையைச் செய்வார் போலச் சொல்லிக் காட்டி, அவர் நச்சுதல் கெட வலிதா கிய செய்கையைச் செய்யுமது, பசுவின் கழுத்திலே வாயு றைப் புல்லைக் காட்டி கட்டிவிடும் தன்மையோ டொக் கும்.

(ப–ரை). ஒற்கப்பட்டு—வறுமைப்பட்டு, ஆற்றூர்—அதற்கு ஆற்றுத வர், உணர உரைத்தபின்-தம் வறுமையை ஒருவர்க்குத் தெளிய உரைத் தவிடத்தும், நல் செய்கை செய்வார்போல் காட்டி — அவர்களுக்கு நல்ல செய்கையைச் செய்வார்போலச் சொல்லிக்காட்டி, நசை அழுங்க—அவர் விருப்பம் கெடும்படி, வற்கென்ற செய்கை அது— வலிதாகிய செய்கையைச் செய்யுமது, கழுத்தில்—பசுவின் கழுத்தில், அவ் வாயுறைப் புல்—பசுவிற்குரிய வாயுறைப்புல்லை, யாத்துவிடல்— காட்டிக் கட்டிவிடும் தன்மையோ டொக்கும். [ஆல்—அசை].

வாயுறை—பசு முதலியவற்றிற்குக் கொடுக்கும் கைத்தீன்.

(க–து). வறியவருக்கு ஒருதவி செய்வதாகப் போக்குக்காட்டி ஒன்றும் செய்யாதிருப்பது, பசுவுக்கு வாயுறைப்புல்லைக் காட்டி அதற் கிடாமல் அதன் கழுத்தில் கட்டிவைப்பது போலும்.

223. இயலாததை இயல்வதாக ஒட்டேல்

அடையப் பயின்றார்சொல் ஆற்றுவராக் கேட்டால்
உடையதொன் றில்லாமை யொட்டின்,—படைபெற்
றடைய அமர்த்தகண் பைந்தொடி! அஃதால்
இடைய னெறிந்த மரம். 314

(ப—பொ). தம்மை அடைதற்பொருட்டுப் பலநாளும் பயின்றவர் ஒரு பொருளைப் பெறவேண்டிச் சொல்லிய சொல்லைக் கேட்டால், தமக்கில்லாத பொருளை உடைய தொன்றாக அவர்க்குச் செய்வாராக உடன்பட்டாரா யின், படைத்தன்மையைப் பெற்று முகமடைய நிறைந்த கண்ணையும் அழகிய தொடியையும் உடையாய்! அஃ தன்றோ இடையன் கொன்ற மரம்போ லாகும் தன்மை யை உடைத்து.

அல்லதூஉம், உடையதொன்றில்லாமை யொட்டின் என்பதற்குத் தம்மை அடைந்து வாழ்வார்க்குத் தாம் செய்யக்கடவதாக வைத்துக் கொடுத்ததனை இல்லையாக மறுப்பின் என்றுமாம்.

(ப—ரை). படை பெற்று—படைத்தன்மையைப் பெற்று, அடைய-முகமடைய, அமர்த்த கண்—நிறைந்த கண்ணையும், பைந்தொடி—அழ கிய தொடியையும் உடையாய்! அடைய—தம்மையடைய, பயின்றார்—பலநாளும் பயின்றவர், சொல்—ஒரு பொருளைப் பெறவேண்டிச் சொல் லிய சொல்லை, கேட்டால் — கேட்டால், இல்லாமை - தமக்கில்லாத பொருளை, உடையது ஒன்று—உடையதொன்றாக, ஆற்றுவாராக ஒட்டின்—அவர்க்குச் செய்வாராய் உடன்பட்டால், அஃது—அது, இடையன் எறிந்த மரம்—இடையன் வெட்டிய மரம்போ லாகும் தன் மையையுடைத்து.

இடைய னெறிந்த மரம்—ஆடுமாடுகள் எட்டித் தழை மேயலாம் படி இடையன் கிளைகளை வெட்டிச் சாய்த்த மரம். இடையன் வெட்டிய மரம் ஒருபுறம் வாடி ஒருபுறம் தளிர்த்திருக்கும்.

படைநின்ற பைந்தா மரையோ டணிநீலம்
மடைநின் றலரும் வயலாலி மணாளா!
இடைய னெறிந்த மரமேயொத் திராமே
அடைய வருளா யெனக்குன்ற னருளே.

8-ம் திருமொழி, 11-ம் பத்து, பெரிய திருமொழி.

(க—து). கிளைகளை வெட்டிச் சாய்த்த மரத்தில் தளிர்த்துள்ள பக்கம் களிப்புடன் மேய்ந்த ஆடுமாடுகள், வாடியிருந்த பக்கத்தில் ஒன்

றும் பெருமல் வெறுப்படைவதுபோல், பொருள் உடையாராக நடித்தவர் உதவிசெய்ய உடன்பட்டதைக் கண்டு மகிழ்ந்தவர், அப்பால் ஒன்றும் பெருமையால் வெறுப்படைவர்.

224. வன்னெஞ்சரிடம் இரந்தவர் ஒன்றும் பெருர்

மரம்போல் வலிய மனத்தாரை முன்னின்
றிரந்தார் பெறுவதொன் றில்லை.—குரங்கூசல்
வள்ளியி னூடு மலைநாட! அஃதன்றே
பள்ளியுள் ஐயம் புகல். 140

(ப—பொ). மரம்போலே வலியதொரு மனத்தை யுடையாரை முன்னே நின்று இரந்தார் அவரால் பெறுவதொரு பொருள் இல்லை. குரங்குகள் வள்ளிக்கொடியின் கண் இருந்து ஊசலாடும் மலைநாடனே! அது வன்றோ அருந்தவர் இருந்தேவாழும் பள்ளியுள் ஐயம்புகுதல்.

(ப—ரை). குரங்கு வள்ளியின் ஊசல் ஆடும் மலைநாட—குரங்குகள் வள்ளிக்கொடியின்கண் இருந்து ஊசலாடும் மலை நாடனே! மரம்போல் வலிய மனத்தாரை—மரம்போலே வலிய மனத்தையுடையாரை, முன் நின்று இரந்தார்—எதிரே நின்று இரந்தவர், பெறுவது—அவரால் பெறுவது, ஒன்று இல்லை—ஒரு பொருளும் இல்லை. அது—அச்செய்கை, பள்ளியுள்—அருந்தவர் இருந்து வாழும் பள்ளியில், ஐயம் புகல்—பிச்சையெடுத்தலோ டொக்கும்.

பள்ளி—ஆசீவகப்பள்ளி—(ஆசீவகர்—சமணமுனிவர்)—சமண முனிவர் இருக்கும் மடம்.

(க—து). சமணமுனிவர் பிச்சையெடுத் துண்பவர். அவரிருக்கும் மடத்தில் பிச்சையெடுப்பவருக்கு ஒன்றும் கிடைக்காது. வன்னெஞ்சுடையாரிடம் பிச்சையெடுப்பவர்க்கும் ஒன்றும் கிடைக்காது.

225. நம்பிவந்தவனை ஆதரியாதவனுக்கு மோக்ஷம் இல்லை

இசைவ கொடுப்பதூஉம் இல்லென் பதூஉம்
வசையன்று வையத் தியற்கை. அஃதன்றிப்
பசைகொண் டவனிற்கப் பாத்துண்ணு னாயின்,
நசைகொன்ருன் செல்லுலக மில். 24

(ப-பொ). தனக்கு இயன்றன கொடுத்தலும் இல்லா தன இல்லையென்றலும் ஒருவற்குக் குற்றமன்று, உலகத்தார் செயலே. அவ்வகையன்றி, இவன் எனக்குப் பசைப் படுவன் என்று தன்மனதிற் கொண்டு ஒருவன் நிற்பக் கண்டும் அவனுக்குப் பகுந்துண்ணுதலைத் தவிர்க்க. நசையாற் பிறரைத் துன்பமுறுத்தினாற்குச் செல்லும் மறுமையுலகத்தின்கண் இன்ப மில்லை. (ஆதலால் பசை கொண்டவற்குப் பகுத்துண்க).

(ப-ரை). இசைவ கொடுப்பதும்—தன்னால் கூடுமானவைகளைக் கொடுப்பதும், இல் என்பதும்— இல்லாதவைகளை இல்லை யென்பதும், வசை அன்று—ஒருவனுக்குக் குற்ற மன்று; வையத்து இயற்கை— உலகத்தார் செயலேயாம். அஃது அன்றி—அவ்வகையன்றி, பசை கொண்டவன் நிற்க—இவன் எனக்கு உதவுவானென்று நம்பி ஆசை கொண்டவன் எதிரில் நிற்கக்கண்டும், பார்த்து உண்ணுமயின்—அவ னுக்குப் பகுத்துண்ணுமயின், நசை கொன்றான்—அவன் ஆசை யைக் கெடுத்தவனாதலால், செல் உலகம் இல்—அப்படிப்பட்டவன் சென்று பெறுதலான மோக்ஷவின்பம் இல்லை.

(க-து). இவன் உதவுவான் என்று நம்பிவந்தவனை ஆதரிக்காத வன் மோக்ஷம் பெறுவதில்லை.

"இசையா ஒருபொருள் இல்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை.—நசையழுங்க
நின்றோடிப் பொய்த்தல் நிரைதொடீஇ! செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்ற முடைத்து."—நாலடியார்.

நட்டார்க்கும் நள்ளா தவர்க்கும் உளவரையால்
அட்டது பாத்துண்டல் அட்டுண்டல்.—அட்ட
தடைத்திருந் துண்டொழுகும் ஆவதின் மாக்கட்
கடைக்குமாம் ஆண்டைக் கதவு.—நாலடியார்.

"ஒல்லுவ தொல்லும் என்றலும் யாவர்க்கும்
ஒல்லா தில்லென மறுத்தலும் இரண்டும்
ஆள்வினை மருங்கில் கேண்மைப் பாலே.

ஒல்லா தொல்லும் என்றலும் ஒல்லுவ
தில்லென மறுத்தலும் இரண்டும் வல்லே
இரப்போர் வாட்ட லன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயி லத்தை."—புறம்.

226. திருப்தியடையார்க்கு ஈந்தபொருள் இழந்தபொருளே
தமராலும் தம்மாலும் உற்றுலொன் றாற்றி
நிகராகிச் சென்றாரு மல்லர். இவர் திரை
நீத்தநீர்த் தண்சேர்ப்ப! செய்த துவவாதார்க்
கீத்ததை யெல்லாம் இழவு. 307

(ப—பொ). சுற்றத்தாலாயினும் தம்மாலாயினும் அவர்க்கு ஓரிடர் உற்றால் முன்பு அவர்க்கு ஒன்றை உதவி அவர்க்கு நிகராக ஒழுகினாரு மல்லர். பரந்த திரைவெள்ளம் பரக்கு நீரையுடைய குளிர்ந்த சேர்ப்பனே! செய்த மாத்திரத்தானே உவத்தலைச் செய்யாதிருப்பார்க்குக் கொடுத்த பொருளெல்லாம் இம்மைக்கும் இல்லை மறுமைக்கும் இல்லையாதலால் இழந்த பொருள்.

(ப—ரை). இவர் திரை—பரந்த அலை, நீத்தம் நீர்—வெள்ளம் போல் பரக்கும் நீரையுடைய, தண் சேர்ப்ப—குளிர்ந்த சேர்ப்பனே! தமராலும்—சுற்றத்தாலாயினும், தம்மாலும்—தம்மாலாயினும், உற்றால்—ஒருவர்க்கு ஓர் துன்பம் உற்றால், ஒன்று ஆற்றி—முன்பு அவர்க்கு ஒன்றை உதவி, நிகராகி சென்றாரும் அல்லர்—அவர்க்கு நிகராக ஒழுகினாரு மல்லர். செய்தது உவவாதார்க்கு—செய்த அளவால் உவத்தலைச் செய்யாதிருப்பார்க்கு, ஈத்தது எல்லாம்—கொடுத்த பொருளெல்லாம், இழவு—(இம்மைக்கும் இல்லை மறுமைக்கும் இல்லையாதலால்) இழந்த பொருளே. [ஐ—சாரியை].

(க—து). தம்மாலாயினும் சுற்றத்தாலாயினும் துன்பமடைந்தார்க்கு உதவிய பொருள் இம்மை மறுமைக்கு நன்மை தருதலால், அது தனக்கு மீண்டும் உதவத்தக்க பொருளாம். கொடுத்த அளவில் திருப்தியடையாதவர்க்குக் கொடுத்ததெல்லாம் இம்மை மறுமைக்கு நன்மை தாராமையால் அது தன் கையைவிட்டு இழந்த பொருளோடொக்கும்.

## 8. ஊழ்

227. முயற்சியினும் முன்னைவினை வலியது

எவ்வந் துணையாய்ப் பொருள்முடிக்குந் தாளாண்மை
தெய்வ முடிப்புழி என்செய்யும்?—மொய்கொண்டு
பூப்புக்கு வண்டார்க்கும் ஊர! குறும்பியங்கும்
கோப்புக் குழிச்செய்வ தில். 63

(ப-பொ). துன்பமே தனக்குத் துணையாக ஒருவன் நினைத்த பொருளை முடிக்கும் தாளாண்மை, முற்பிறப்பில் செய்த தீவினை வந்து இடையூறு செய்தால் அவ்வினை வலிந்து என்செய வற்று? பூ புக்கு வண்டார்க்கும் ஊரனே! எங்கும் தடையின்றிச் செல்லவல்ல அரசன் கைக்கொண்ட நாட்டின்கண் குறும்பன் வலிந்து செய்வதொன் றில்லை ஆதலான்.

(ப-ரை). பூ புக்கு வண்டு ஆர்க்கும் ஊர—பூக்களில் புக்கு வண்டுகள் ஒலிக்கும் ஊரனே! இயங்கும் கோ புக்க உழி—எங்கும் தடையின்றிச் செல்லவல்ல அரசன் கைக்கொண்ட நாட்டின்கண், குறும்பு—குறும்பன், செய்வது—வலிந்துசெய்வது, ஒன்று இல்—ஒன்றுமில்லை. (ஆதலால்), எவ்வம் துணையாய்—துன்பமே தனக்குத் துணையாக, பொருள் முடிக்கும் தாளாண்மை—தான் நினைத்த பொருளை ஒருவன் முடிக்கும் முயற்சியானது, தெய்வம் முடிப்புழி—முற்பிறப்பிற் செய்த தீவினை வந்து இடையூறு செய்தால், மொய்கொண்டு என் செய்யும்—தான் வலிந்து என்செய வல்லது? [குறும்பன்—குறுநிலமன்னன்—தூர்ச்சனன்].

(க-து). பேரரசன் அரசுசெய்யும் நாட்டின்கண் குறும்பன் செய்யலாவது ஒன்றுமில்லை. தீவினைப்பயன் இடையூறு செய்யுமிடத்தில் ஒருவன் தன் முயற்சியால் செய்யலாவது ஒன்றுமில்லை.

“ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.”—திருக்குறள்.

பழமொழி.—'Tis vain to quarrel with our destiny.

228. கருமங்கள் வினையின் வகைய

சுட்டிச் சொலப்படும் பேரறிவி னார்கண்ணும்
பட்ட விருத்தம் பலவானால்,—பட்ட
பொறியின் வகைய கருமம். அதனால்
அறிவினை ஊழே அடும். 203

(ப—பொ). மதித்துச் சொல்லப்படும் முன்புள்ள பேரறிவினார்கண்ணும் உளவாய குற்றங்கள் பலவானால், தமக்கு முற்பிறப்பின் உள்ளவாய வினையின் வகையவாயிருக்கும் கருமங்கள். ஆதலால் தமது நல்லறிவினை முன்செய்த ஊழ்வினையே அடும்.

(ப—ரை). சுட்டி சொலப்படும் பேர் அறிவினார் கண்ணும்—மதித்துச் சொல்லப்படும் முன்புள்ள பேரறிவினாரிடத்தும், பட்ட விருத்தம்—உளவாய குற்றம், பல ஆனால்—பலவாயின், கருமம்—கருமங்கள், பட்ட பொறியின் வகைய — (தமக்கு முற்பிறப்பின்) உள்ளவாகிய வினையின் வகையினவா யிருக்கும். அதனால்—ஆதலால், அறிவினை—தமது நல்லறிவினை, ஊழே — முன்செய்த ஊழ்வினையே, அடும் — அடும்.

"பேதைப் படுக்கும் இழவூழ். அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை."—திருக்குறள்.

பழமொழி.—விதி எப்படியோ மதி அப்படி. No man can be wiser than destiny.

229. உறற்பால உறுதல்

அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் தீங்குறுதல் காண்டுமால்.—பொங்கி
அறைப்பாய் அருவி அணிமலை நாட!
உறற்பால யார்க்கு முறும். 15

(ப—பொ). அங்கண் விசும்பில் நின்று மிக்க நிலாவைப் பரப்பும் மதியமும் பாம்பினால் தீங்குறுதல் காணின்

றேம். ஆதலால், கற்பாறையின்கண் மிக்குவந்து பாயா நின்ற அருவியையுடைய மலைநாடனே! தமக்கு உறக் கடவ துன்பங்கள் யாவர்க்கும் வந்துறும்.

(ப—ரை). அறை பொங்கி பாய் அருவி அணி மலைநாட—கற்பாறை யின்கண் மிக்குவந்து பாயாநின்ற அருவியையுடைய அழகிய மலை நாடனே! அம் கண் விசும்பின்—அழகிய இடமகன்ற ஆகாயத்தினின் றும், அகல் நிலா பாரிக்கும்—மிக்க சந்திரிகையைப் பரப்பும், திங்க ளும்—சந்திரனும், தீங்குறுதல்—பாம்பினல் தீங்குறுதலை, காண்டும்— காண்கிறோம். (ஆதலால்), உறற்பால—தமக்கு உறக்கடவ துன்பங்கள், யார்க்கும்—யாவர்க்கும், உறும்—வந்துறும்.

(க—து). சந்திரனுக்கும் இராகுபீடை உள்ளது. அங்ஙனமே வரும் வினை வழியில் நிற்காது: வரக்கடவ துன்பங்கள் வருவது நிச்சயம்.

திருப்பாற்கடலைக் கடைந்துண்டான அமுதத்தை விண்டுவின் ஓரமிசம் ஜகன்மோகினியாக உருவங்கொண்டு தேவர்க்குப் பகிர்ந்து வருகையில், ஆதிசேடன் சகோதரரிருவர் தேவரூபம் பூண்டு அமுதம் வாங்கி உண்டனர். அருகிலிருந்த சந்திரனும் சூரியனும் அதனை உணர்ந்து ஜகன்மோகினிக்குக் குறிப்பாக உணர்த்தின அளவில், அவள் அவர்களைப் புடைத்தாள். புடைத்தும் அமுதமுண்ட பலத் தால் அவர்கள் உயிர்நீங்காமல் பிழைத்து, சந்திரசூரியர்களிடம் பகை பாராட்டி அவர்களை உட்கொண்டு கான்று வருத்திவருகின்றனர். இவர்களே இராகு கேதுக்கள்.

பழமொழி.—அம்புலியையும் அரவு விழுங்கும். வருவது வழி யில் நிற்காது. No flying from fate.

"உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா."—நாலடியார்.

"அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும், திங்களும்" என்று தொடங்கி நாலடியாரில் ஒரு வெண்பா உண்டு. "தம்மை யிகழ்வா ரைத் தாமவரின் முன்னிகழ்க....உறற்பால யார்க்குமுறும்" என நால டியிலும் இப்பழமொழி வருகின்றது.

230. உறற்பால தீண்டாது விடாமை

கழுமலத்தில் யாத்த களிறும் கருவூர்
விழுமியோன் மேற்சென் றதனல்,—விழுமிய
வேண்டினும் வேண்டா விடினும், உறற்பால
தீண்டா விடுதல் அரிது. 62

(ப—பொ). கழுமலமென்னும் ஊரின்கண்ணே பிணித்துநின்ற களிறும், கருவூரின்கண்ணே இருந்த கரிகால்வளவன் கடிதினேயனயினும் அவன் சிறப்புடையனதலால், அவன்மேற்சென்று தன்மிசை எடுத்துக்கொண்டு அரசிற்குரிமை செய்தது. ஆதலால், விழுமிய பொருளைக் காதலிப்பினும் காதலியாது விடினும் உறக்கடவன தீண்டாவாய் விடுதல் அரிது

(ப—ரை). கழுமலத்தில் யாத்த களிறும்—கழுமலம் என்னும் ஊரின் கண்ணே கட்டியிருந்த யானையும், கருவூர்—கருவூரின்கண்ணே யிருந்த, விழுமியோன்மேல்—சிறப்புடையவனை கரிகால்வளவனிடம், சென்றதனல்—சென்று தன்மேல் எடுத்துக்கொண்டுபோய் அரசிற் குரிமை செய்த தாதலால், விழுமிய—விழுமிய பொருள்களை, வேண்டினும் வேண்டாவிடினும் – விரும்பினும் விரும்பாவிட்டாலும், உறற்பால—உறக்கடவன, தீண்டாவிடுதல்—தீண்டாவாய்விடுதல், அரிது—அரிது.

சோழியை ஆட்சிசெய்திருந்த அரசனொருவன் சந்ததியின்றி இறந்தானக, மனக்கவலைகொண்ட மந்திரிமார்கள் பட்டத்து யானையைக் கண்களைக் கட்டி "இது எவரைத் தாங்கிவருகிறதோ அவரையே அரசனக்குவோம்" என்றுசொல்லி விடுத்தனர். அந்த யானை கருவூரிற் சென்று கரிகாற்சோழனை எடுத்து முதுகின்மேல் தாங்கிவந்தது. மந்திரிமார்கள் அவனை அரசனகக் கொண்டனர்.

"ஈண்டுநீர் வையத்துள் எல்லாரும் எத்துணையும்
வேண்டார்மன் தீயஃ விழைபமன் நல்லவை:
வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுத லரிது."—நாலடியார்.

"பரியினும் ஆகாவாம் பாலல்ல. உய்த்துச்
சொரியினும் போகா தம."—திருக்குறள்.

231. தீண்டுதற்குரியாரை இலக்குமி தீண்டுதல்

ஆஅய் வளர்ந்த அணிநெடும் பெண்ணையை
ஏஎய் இரவெல்லாம் காத்தாலும்—வாஅய்ப்
படற்பாலார் கண்ணே படுமே. பொறியும்
தொடற்பாலார் கண்ணே தொடும். 205

(ப—பொ). ஆகிவளர்ந்த அணிநெடும் பெண்ணையை மருவி இராப்பொழுதெல்லாம் அதன் பழத்தின் பொருட்டுக் காத்தாலும், பெண்ணைப் பழங்கள் தந்து விழற்பாலார் கண்ணே விழும். திருவும் சென்று தீண்டற்பாலார் கையே சென்று தீண்டும், அதுபோல.

(ப—ரை). ஆய் வளர்ந்த—உண்டாகி வளர்ந்த, அணி நெடும் பெண்ணையை—அழகிய நெடிய பனைமரத்தை, எய்—அடைந்து, இரவெல்லாம்—இராப்பொழுதெல்லாம், காத்தாலும்—அதன் பழத்தின் பொருட்டுக் காத்திருந்தாலும், வாய்—தம் வாயில், படல் பாலார் கண்ணே—படுதற்குரிய பான்மை யுடையாரிடத்தே, படும்—அப்பழம் விழும். (அதுபோல), பொறியும்—இலக்குமியும், தொடல்பாலார் கண்ணே—சென்று தீண்டுதற்குரியார் கையின்கண்ணே, தொடும் – சென்று தீண்டும்.

பொறி என்பது இலக்குமியைக் குறிப்பதற்கு மேற்கோள் "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே."

232. பெரிய செல்வம் பெறுதற்கு முன்வினை காரணம்

முற்பெரிய நல்வினை முட்டின்றிச் செய்யாதார்,
பிற்பெரிய செல்வம் பெறலாமோ?—வைப்போ
டிகலிப் பொருள்செய்ய எண்ணியக்கால் என்னும்?
முதலிலார்க் கூதிய மில். 312

(ப—பொ). முன்னர்ப் பிறப்பின்கண் நன்றாகிய புண்ணியத்தை இடையறாமல் செய்யாதார், பின்னைப் பிறக்கும் பிறப்பின்கண் பெரிய செல்வத்தைப் பெறுதல் கூடு

மோ? பிறர்வைத்த நிதியுடன் மாறுபட்டுச் செய்வோ மென்று நினைத்தக்கால் எத்தன்மை கூடும்? கூடாதே: முதலிலார்க்கு ஊதியம் இல்லையானற் போல.

(ப—ரை). முன்—முன்பிறப்பில், பெரிய நல்வினை—மிக்க புண்ணியத்தை, முட்டு இன்றி—இடையறாமல், செய்யாதார்—செய்யாதவர், பின்—பின்னைப் பிறக்கும் பிறப்பில், பெரிய செல்வம்—மிக்க செல்வத்தை, பெறல் ஆமோ—பெறுதல் கூடுமோ? வைப்போடு—பிறருடைய நிதியுடன், இகலி — மாறுபட்டு, பொருள் செய்ய எண்ணியக்கால்—பொருள் செய்வோமென்று நினைத்தக்கால், என் ஆம்—என்ன உண்டாகும்? (ஒன்றும் உண்டாகாது). முதல் இலார்க்கு—முதற்பொருள் இல்லாதவர்க்கு, ஊதியம் இல்—இலாபம் கிடைப்பதில்லை.

முற்பிறப்பில் செய்த நல்வினை முதற்பொருளும் பிற்பிறப்பில் பெற்ற பெருஞ்செல்வம் ஊதியமுமாகக் கொள்ளல்வேண்டும்.

"பெற்றி கருமம் பிழையாமல் செய்குறின்
பற்றின்கண் நில்லா தறஞ்செய்க.—மற்றது
பொன்றுப் புகழ்நிறுத்திப் போய்ப்பிறந்த ஊர்நாடிக்
கன்றுடைத் தாய்போல் வரும்."—அறநெறிச்சாரம்.

"முதலிலார்க் கூதிய மில்லை" என்கிற பழமொழி திருக்குறளிலும் வருகிறது.

233. கூடுங்காலத்தில் செல்வம் வந்து கூடுதல்

பன்னாளும் நின்ற விடத்தும் கணிவேங்கை
நன்னாளே நாடி மலர்தலால்,—மன்னர்
உவப்ப வழிபட் டொழுகினும், செல்வம்
தொகற்பால போழ்தே தொகும். 120

(ப—பொ). பலநாளும் தான் உளதாய் நின்றவிடத்தும் கணிகளைப்போல நாளை அறிவிக்கும் வேங்கை தாம் மலரக்கடவநாளை அறிந்து பூத்தலால், அரசர் மனமகிழும்

படி வழிபட் டொழுகினு ராயினும், செல்வம் ஒருவர்க் குக் கூடுங்காலத்தே வந்து கூடுமல்லது கூடாது.

(ப—ரை). பல் நாளும்—பல நாளும், நின்ற இடத்தும்—தான் உள தாய் நின்றவிடத்தும், கணி வேங்கை—கணிகளைப்போல நாளை அறி விக்கும் வேங்கை, நல் நாளே நாடி மலர்தலால்—தான் மலரக்கடவ நாளை யறிந்து பூத்தலால், மன்னர் உவப்ப—அரசர் மனம் மகிழும்படி, வழிபட்டு ஒழுகினும்—வழிபட்டொழுகினாராயினும், செல்வம்—செல்வ மானது, தொகல்பால போழ்தே—ஒருவர்க்குக் கூடுங் காலத்தே, தொகும்—வந்து கூடும்.

"கணி—சோதியன். கணிவேங்கை—உவமத்தொகை. "வேங்கை மரமு மருதமுங் கணியெனல்" (பிங்கலம்) ஆதலால், இருபெயரொட் டாகக் கொள்ளலுமாம். இங்கே உவமத்தொகையாகக் கொள்ளுதலே பொருட்பொருத்த முடைத்து. கணிகளைப்போல நாளை அறிவிக்கும் வேங்கை என்பது, கந்தபுராணம்—வள்ளியம்மை திருமணப்படலம்—148—வது விருத்தம்

குன்ற வாணர்கள் யாவரும் கொடிச்சியை நோக்கித்
"துன்று மேனல்கள் விளைந்தன; கணிகளும் சொற்ற
இன்று காறிது போற்றியே வருந்தினை: இனிநீ
சென்றி டம்மஉன் சிறுகுடிக்" கெனஉரை செய்தார்

என்பதனால் நன்கு விளங்கும்.

"ஆமிடத்தே யாகும் சிறுகாலைப் பட்ட பொறியும்" என்றது நாலடியார்.

## 234. உய்வதற்கு உய்யுமிடம் உளதாதல்

குறைத்துக் கொளப்பட்டார் கோளிழுக்குப் பட்டுப்
புறைத்தெழுந்து போகினும் போவர்.—அரக்கில்லுள்
பொய்யற்ற ஐவரும் போயினர். இல்லையே
உய்வதற் குய்யா விடம். 280

(ப—பொ). சிலர்க்குக் கட்டுரை பயிற்றி அவரால் அகப்படப் பிணித்துக் கொள்ளப்பட்டவர் அந்தக்

கோளிலே விதனப்பட்டுத் தப்பியெழுந்து போகினும் போகாநிற்பர். துரியோதனனது அரக்குமாளிகையிலே தீயிடுவிப்பதனைத் தப்பிக் குற்றமற்ற பாண்டவர்கள் ஐவரும் போயினார்கள். அதுபோல உய்யக்கடவ உயிர்க்கு உய்யமுடியாத இடம் இல்லை.

(ப—ரை). அரக்கு இல்லுள்—துரியோதனன் கட்டுவித்த அரக்கு மாளிகையில் இருந்த, பொய் அற்ற ஐவரும்—குற்றமற்ற பாண்டவர் ஐவரும், போயினார்—அவன் இடுவித்த தீயினின்றும் தப்பிப் போயினார். (ஆகவே), குரைத்து—(வஞ்சகரால்) கட்டுரை சொல்லி, கொளப்பட்டவர்—பிணித்துக்கொள்ளப்பட்டவர், கோள் இழுக்குப்பட்டு—(அவ் வஞ்சகருடைய) பிணிப்பினின்றும் தவறி, புரைத்து எழுந்துபோகினும் போவர்—தப்பியெழுந்து போகினும் போகாநிற்பர். (ஆதலால்), உய்வதற்கு—பிழைக்கக் கடவதான உயிருக்கு, உய்யா இடம்—பிழைக்க முடியாத இடம், இல்லையே—ஒன்றும் இல்லை.

(க—து). புண்ணியம் பலித்தலான விதியுடையார் பெரிய ஆபத்தில் அகப்பட்டாலும் அதினின்றும் தப்பிப் பிழைப்பர்.

தருமர் இளவரசு பட்டம் பெற்றுத் தம்பிமாரோடு வாரணவதத்துக்கு அனுப்பப்பெற்றனர். துரியோதனன் பொறாமைகொண்டு கனகன் என்னும் சிற்பியால் அவ்விடத்தில் ஓர் அரக்குமாளிகை கட்டுவித்து, அதில் பாண்டவரைவரையும் இருக்கச் செய்து, அதைத் தீமூட்ட ஓர் தினத்தைக் குறித்திருந்தான். அவ்வஞ்சகம் அறிந்த வீமன் அன்று நள்ளிரவில் தானே அம்மாளிகைக்குத் தீயிட்டு, அயர்ந்து தூங்கியிருந்த சகோதரர்களையும் தாயையும் தூக்கம் கெடாமல் தூக்கிக்கொண்டு அம்மாளிகையில் அமைத்திருந்த சுரங்கத்தின் வழியாக இடும்பவனம் சென்றடைந்தான். யாவரும் உயிர் துறவாது உய்ந்தனர்.

235. ஆவார்க்குத் தீமையும் நன்மையாதல்

இதுமன்னுந் தீதென் றிசைந்ததூஉம் ஆவார்க்
கதுமன்னும் நல்லதே யாகும்.—மதுமன்னும்
வீநாறு கானல் விரிதிரைத் தண்சேர்ப்ப!
நீநாள் திருவுடையார்க் கில். 84

(ப—பொ). இவ்வினை இவர்க்கு மிகவும் தீங்கினைத் தருவதொன்றே யென்று பிறர் சொல்லும் வகை வந்து பொருந்திய வினையும், செல்வம் ஆகக்கடவார்க்கு நல்லதேயாய் விளையும்: தேனையுடைய நெய்தற்பூக்கள் நாறுகின்ற கடற்சோலையையுடைய விரிதிரைத் தண்சேர்ப்பனே! தீமையைப் பயக்கும் நாட்கள் புண்ணிய முடையார்க்கு இல்லை, அதுபோல.

(ப—ரை). மது மன்னும் வீ—தேனையுடைய நெய்தற் பூக்கள், நாறு—மணம் வீசும், கானல்—கடற்சோலையையுடைய, விரிதிரை—விரிந்த அலைகள் வீசும், தண்—குளிர்ந்த, சேர்ப்ப—சேர்ப்பனே! இது மன்னும் தீது என்று இசைந்ததும் அது—இவ்வினை இவர்க்கு மிகவும் தீங்கினைத் தருவதொன்றேயென்று பிறர் சொல்லும் வகை வந்து பொருந்தியதாகிய வினையும், ஆவார்க்கு—செல்வம் ஆகக்கடவார்க்கு, மன்னும் நல்லதே ஆகும்—மிகவும் நல்லதேயாய் விளையும். (ஆதலால்), திருவுடையார்க்கு—புண்ணியமுடையார்க்கு, தீ நாள் இல்—தீமையைத் தரும் நாட்கள் இல்லை.

(க—து). புண்ணிய முடையார்க்குத் தீயனவும் நல்லனவேயாய் விளையும்; ஆதலால் அவர்க்குத் தீயநாள் என்பதே இல்லை.

"நல்லவை யெல்லாஅம் தீயவாம், தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு."—திருக்குறள்.

"நல்வினை யுடைய நீரார் நஞ்சுணின் அமுத மாகும்
இல்லையேல் அமுது நஞ்சாம் இன்னதால் வினையி னாக்கம்."
—சிந்தாமணி.

"அஞ்சமிகு தீவினையின் ஆரமிழ்து நஞ்சாம்
நஞ்சமமிழ் தாமுரிய நல்வினையு மாதோ."—வில்லிபாரதம்.

பழமொழி.—If God be with us, who will be against us?

236. விதிவழி யல்லது வேண்டியன கைகூடாமை

ஆற்றுந் தகைய அரசடைந்தார்க் காயினும்
வீற்று வழியல்லால் வேண்டினும் கைகூடா.
தேற்றூர் சிறிய ரெனல்வேண்டா. நோற்றார்க்குச்
சோற்றுள்ளும் வீழும் கறி. 150

(ப—பொ). எல்லாச் செல்வங்களையும் தரவல்ல தகைமையையுடைய அரசுகளை அடைந்தார்க்கே யாயினும், புண்ணியம் உள்ளவழியல்லது விரும்பி முயலினும் செல்வங்கள் கைகூடா. அறிவுடையரல்லார் குணத்தால் சிறியரேயாதலின் இவர்க்கு ஆவதொரு செல்வம் இல்லையென்று இகழவேண்டா. நோற்றார்க்குத் தாம் உண்கின்ற சோற்றுள்ளேயும் தேடிவருந்தாமே கறி வந்து வீழும் ஆதலானே.

(ப—ரை). நோற்றார்க்கு – தவம் செய்தார்க்கு, சோற்றுள்ளும்—தாம் உண்கின்ற சோறறுள்ளேயும், கறி வீழும்—(தேடி வருந்தாமலே) கறி வந்து வீழும். (ஆதலால்), ஆற்றும் தகைய அரசு அடைந்தார்க்கு ஆயினும்—எல்லாச் செல்வங்களையும் தரவல்ல தகைமையையுடைய அரசுகளை அடைந்தவர்க்கேயாயினும், வீற்றுவழி அல்லால்—புண்ணியம் உள்ளவழியல்லது, வேண்டினும்—விரும்பி முயன்றாலும், கைகூடா—செல்வங்கள் கைகூடா. தேற்றார்—அறிவிலாதார், சிறியர்—குணத்தால் சிறியரே, எனல் வேண்டா—(ஆதலின் இவர்க்கு ஆவதொரு செல்வம் இல்லை) யென்று இகழவேண்டா.

(க—து). சிறியராயினும் புண்ணியமுள்ளவர்க்குச் செல்வம் உண்டாகும். அது இல்லாதவர்க்கு அரசச் சார்பாலும் முயற்சியாலும் செல்வம் உண்டாகாது.

237. ஆகாதார்க்கு ஆகுவ தில்லாமை

ஆகும் சமயத்தார்க் காள்வினையும் வேண்டாவாம்.
போகும் பொறியார் புரிவும் பயமின்றே.
ஏகல் மலைநாட! என்செய்தாங் கென்பெறினும்
ஆகாதார்க் காகுவ தில். 127

(ப—பொ). செல்வம் ஆகக்கடவ காலத்தை வந்தெய்தினார்க்கு முயன்று வருந்தவும் வேண்டா: செல்வம் போகக்கடவ வினையையுடையார் முயன்று புரிந்தாலும் அவர்க்குப் பயன் இல்லை: பிறங்கிய கற்களையுடைய மலை

நாடனே! எல்லா முயற்சி செய்து எல்லாச் செல்வமும் பெற்றாராயினும், ஆகக்கடவ ரலாதார்க்கு நன்றாகுவ தில்லை ஆதலான்.

(ப—ரை). ஏ — ஓங்கும், கல் — கற்களையுடைய, மலைநாட — மலை நாடனே! என் செய்து — எல்லா முயற்சியும் செய்து, என் பெறினும்— எல்லாச் செல்வமும் பெற்றாராயினும், ஆகாதார்க்கு—ஆகக்கடவரல்லா தார்க்கு, ஆகுவது—நன்றாகுவது, இல்—இல்லை. (ஆதலால்), ஆகும் சமயத்தார்க்கு—செல்வம் ஆகக்கடவ காலம் வந்தடைந்தவர்க்கு, ஆள் வினையும் — வருந்தி முயலுதலும், வேண்டா — வேண்டுவதில்லை. போகும் பொறியார்—செல்வம் விட்டு நீங்கும் வினையையுடையார், புரிவும்—முயன்று செய்தலும், பயம் இன்று—அவர்க்குப் பயனில்லை. [ஆம்—ஏ—அசை].

(க—து). ஆகூழ் உள்ளவர்க்கு முயற்சி வேண்டா. போகூழ் உள்ள வர்க்கு முயற்சியாலும் பலன் இல்லை.

238. பகைவர் துன்புறுப்பது பழவினைப் பயனே

பண்டுருத்துச் செய்த பழவினை வந்தெம்மை
இன்றொறுக் கின்றதென வறியார்.—துன்புறுக்கும்
மேவலரை நோவதென்? மின்னேர் மருங்குலாய்!
ஏவலாள் ஊருஞ் சுடும். 191

(ப—பொ). முன்பு பிறந்து செய்த பழவினை வந்து எம்மை இப்பொழுது ஒறுக்கின்றதென்று உணராதே, தம்மைத் துன்பஞ்செய்யும் பகைவரை நோவது என்னை? மின்னேரிடையாய்! ஒருவனால் ஏவப்பட்ட ஏவ லாளன் இது மிக்க கொடிய செயலென்று பாராதே ஊரையும் சுடும் ஆதலான்.

(ப—ரை). முன் நேர் மருங்குலாய்—மின்னலை ஒத்த இடையை யுடையாய்! ஏவலாள் — தனக்கு ஏவல்செய்பவன், ஊரும் சுடும்— (தீவினை வந்த காலத்தில் தன்னைச் சுடுவதன்றித் தன் ஊரையும் சுடு வான். (ஆதலால்), பண்டு உருத்து செய்த பழவினை—யாம் முன்பு பிறந்து செய்த பழவினை, இன்று வந்து எம்மை ஒறுக்கின்றது — இப்பொழுது வந்து எம்மை வருத்துகின்றது, என அறியார்—என்று எண்ணாது

ராய், துன்புறக்கும்-தம்மைத் துன்பஞ்செய்யும், மேவலரை-பகைவரை, நோவது-நோவது, என்-என்னே?

"வினைப்பயன் வந்தக்கால் வெய்ய உயிரா
மனத்தின் அழியுமாம் பேதை—நினைத்ததனைத்
தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்
தெல்லை யிகந்தொருவு வார்."—நாலடியார்.

239. உயிருடையார் எய்தா வினை யில்லை
சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்ற—கடைக்கால்
செயிரறு செங்கோல் செலீஇயினான். இல்லை
உயிருடையார் எய்தா வினை. 105

(ப—பொ). இளமைப் பருவத்துப் பிறரால் சுடப்பட்டும் உயிருய்ந்துபோகிய கரிகாலனும் இரும்பிடர்த்தலையார் என்னும் பெயரையுடைய தன் மாமனைத் தனக்குத் துணையாகப் பெறுதலால், பின்னொரு காலத்தின்கண் தன் உரிமையரசு பெற்றுக் குற்றமற்ற செங்கோலை நடத்தினான்: ஆதலால், உயிருடையார் எய்தாததொரு நல்வினைப் பயன் இல்லை.

(ப—ரை). சுடப்பட்டு-இளமைப் பருவத்தில் பிறரால் சுடப்பட்டும், உயிர் உய்ந்த-உயிர் பிழைத்துப் போகிய, சோழன் மகனும்-கரிகாவலனும், பிடர்த்தலைப் பேரானை-இரும்பிடர்த்தலையார் என்னும் பெயரையுடைய தன் மாமனை, பெற்ற-தனக்குத் துணையாகப் பெற்ற, கடைக்கால்-பிற்காலத்தில், செயிர் அறு செங்கோல் செலீஇயினான்-(தன் உரிமையரசு பெற்றுக்) குற்றமற்ற செங்கோலை நடத்தினான். ஆகவே), உயிர் உடையார் – உயிருடையார், எய்தா – அணடயாத, வினை—ஒரு நல்வினைப்பயன், இல்லை—இல்லை.

"சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகன்" கரிகாற் பெருவளத்தான் என்பது, பொருநராற்றுப்படை யுரையின் இறுதியிலும் பட்டினப் பாலை யுரையின் இறுதியிலும் காட்டியிருக்கும் வெண்பாக்கள் மூன்றின் ஒன்றுன,

'முச்சக்கரமும் அளப்பதற்கு நீட்டியகால்
இச்சக்கரமே அளந்ததால்—செய்ச்செய்
அரிகான்மேல் தேன்தொடுக்கும் ஆய்புனனீர் நாடன்
கரிகாலன் கானெருப் புற்று"—

இதனால் விளங்கும். பொருநராற்றுப்படை 148-வது வரியின் உரையில் நச்சினார்க்கினியர் " 'முச்சக்கரமும்' என்னும் கவியானே கரிகாலாதல் உணர்க" என்றனர்.

செவ்வந்திப் புராணம் பின்வருமாறு கூறுகின்றது:—சாரமாமுனிவர் சிவபெருமானுக்குச் செய்துவந்த புஷ்ப கைங்கரியத்துக்கு இடையூறு செய்த பராந்தக சோழனுடைய ராஜதானியான உறையூரில் மண்மாரி பொழிந்தது. உடனே சோழன் கருவுற்றிருந்த தன் மனையாளோடு குதிரைமீதேறிக் காவிரியாற்றைக் கடக்கலுற்றான். கடக்கையில் வழுவிவிழுந்த மனைவியை ஆற்றுநீர் நெடுந்தூரத்தில் கரையின்பால் ஒதுக்கியது. அவள் பிரமமாநந்த முனிவரது பாதுகாப்பில் இருந்து சில மாதங்கள் கழிந்தவளவில் ஒரு பிள்ளையைப் பெற்றாள். அம்முனிவர் அப்பிள்ளையைக் கலைகள் கற்பித்து வளர்த்துவந்தார். இங்ஙனம் அரசிளங்குமரன் வளர்ந்திருக்கையில், உறையூரில் வசித்திருந்த சில முதியோர்கள் ஊரைச் சீர்திருத்தி, ஒருநாள் பட்டத்து யானையை விடுத்தனர். அந்த யானை, காவிரியாற்றின் கரையிலே விளையாடிருந்த ராசகுமாரனிடம் சென்று அவனை எடுக்கலுற்றது. எடுக்கமுடியாமல் நிற்கையில், அச்செய்தி உணர்ந்த அரசி முனிவரிடம் முறையிட்டாள். முனிவர் அவனுக்குப் பெருவாழ்வு வந்தது. அவன் காலில் கரிக்கோ டிடுக" என்றார். கரிக்கோ டிட்டவளவில் யானை அவனை எடுக்ககூடியதாகி அவனைக் கொண்டுபோய் உறையூரில் சிங்காதனத்தில் இருத்தியது. கரிக்கோடிட்ட காரணத்தால் அவனுக்குக் கரிகாற்சோழன என்று பெயர் வழங்கலாயிற்று.

240. அறிவுடையார் உறுகண் அஞ்சாமை
நணியஞ்சத் தக்க அவைவந்தால் தங்கண்
துனியஞ்சார் செய்வ துணர்வார்.—பனியஞ்சி
*வேழம் பிடிதழூஉம் வெய்சூழ் மலைநாட!
ஊழம்பு வீழா நிலத்து. 265

'(ப-பொ). மிகவும் தம்மால் அஞ்சத்தக்க வினைகள் வந்தால் தமது உறுகண் அஞ்சார் உணர்வுடையார்: பனியான் வரும் துயரை அஞ்சிப் பிடியை வேழம் தழுவும் வேய்சூழ் மலைநாடனே! தனக்கு இறுதியைத் தரும் ஊழினால் வரும் அம்பு தன்மேலல்லது நிலத்தின்மேல் வீழாவாம்; ஆதலால் தாம் ஒளித்திருப்பினும் வருவது வரும் என்பதறியாராகில்.

(ப-ரை). வேழம் பனி அஞ்சி—ஆண்யானை பனியால் உண்டாகும் துயரை அஞ்சி, பிடி தழுவும் – பெண்யானையைத் தழுவும், வேய் சூழ்—மூங்கில் சூழ்ந்த, மலைநாட—மலைநாடனே! ஊழ் அம்பு—தனக்கு இறுதியைத் தரும் ஊழினால் வரும் அம்பு, நிலத்து வீழா – தன்மேலல்லது நிலத்தின்மேல் வீழாவாம். (ஆகையால் தாம் ஒளித்திருப்பினும் வருவது வரும் என்பதைக் கவனிக்காமல்), செய்வது உணர்வார்—செய்யத்தக்கதைச் செய்வதான உணர்வுடையார், நனி அஞ்சத்தக்க அவை— மிகவும் தம்மால் அஞ்சத்தக்க வினைகள், வந்தால்—வந்தாலும், தம் கண் தனி—தமது உறுகண்ணுக்கு, அஞ்சார்—அஞ்சார்.

(க-து). அறிவாளர் தங்கண் வருதலான உறுகண்ணுக்கு அஞ்சார்.

"சாதலும் பிறத்த றானும் தம்வினைப் பயத்தி னாகும்
ஆதலும் அழிவு மெல்லாம் அவைபொருட் கியல்பு கண்டாய்
கோதலும் பரிவு மெல்லாம் நுண்ணுணர் வின்மை யன்றே."—சிந்தாமணி.

## IV

# 1. அரசியல்பு

241. குற்றஞ் செய்தவரை ஒறுத்தல் அரசியல்பு

எங்கண் இனையர் எனக்கருதின் ஏதமால்:
தங்கண்ண ரானும் தகவில கண்டக்கால்,
வன்கண்ண னாகி ஒறுக்க. ஒறுக்கல்லா
மென்கண்ணன் ஆளான் அரசு. 322

(ப—பொ). தமது கண்போல்வாராயினும் தகைமையேயின்றி ஒழுகும் ஒழுக்கத்தைக்கண்டால், 'எமது கண் போல்வார் இவர் இந்தக் குறையைப் பொறுக்கவேண்டும்' என்று உள்ளங்கொள்ளில், அது செங்கோன்மைக்குக் குற்றமாம். ஆதலால், தான் வன்கண்மையை உடையனேயாகிச் செய்த குற்றத்துக்குத் தக்க தண்டம் செய்க. செய்யாதே கண்ணோட்டம் உண்டாயிருக்குமவன் அரசினை ஆளமாட்டான்.

(ப—ரை). தம் கண்ணர் ஆனும்—தமது கண்போல்வாராயினும், தகவு இல கண்டக்கால்—தகுதியில்லாத செயல்களை (அவரிடம்) கண்டால், எம் கண் இனையர் என—எம் கண்போல்வார் இவர் (இந்தக் குற்றத்தைப் பொறுக்கவேண்டும்) என்று, கருதின்—உள்ளங்கொள்ளின், ஏதம்—அது செங்கோன்மைக்குக் குற்றமாம்: (ஆதலால்), வன்கண்ணன் ஆகி—தான் வன்கண்மை உடையனாகி, ஒறுக்க—(செய்த குற்றத்துக்குத் தக்க) தண்டஞ் செய்க. ஒறுக்கல்லா—தண்டியாத, மென்கண்ணன்—கண்ணோட்ட முள்ளவன், அரசு ஆளான்—அரசினை ஆளமாட்டான். [ஆல்—அசை].

(க—து). கண்போல்வாராயினும் குற்றஞ்செய்யக்கண்டால் அரசன் தாட்சணியமின்றி அவரைத் தண்டித்தல் வேண்டும்: தாட்சணியமுள்ளவன் அரசாட்சிக்கு அருகனாகான்.

"ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை."—திருக்குறள்.

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்."—திருக்குறள்.

"தீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி."—புறம்.

242. மூப்பிளமை முறைமையில் பரிகாரம் ஆகா
சால மறைத்தோம்பிச் சான்றவர் கைகரப்பக்
காலே கழிந்ததன் பின்றையும்—மேலைக்
கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையு மூர்ந்தான்.
முறைமைக்கு மூப்பிளமை யில். 93

(ப—பொ). மிகவும் மறைத்தோம்பிச் சான்றோராயிருப்பார் புலனாகாமை அச்செயலை ஒளிப்பவும், பலகாலம் கழிந்ததன்பின்பு, முன்னொருகாலத்துக் கறவையின் கன்றை ஊர்ந்த புதல்வனைத் தந்தையாகிய சோழனும் தேரால் ஊர்ந்தான். ஆதலால் வழக்கிற்கு மூப்பிளமை இல்லை.

(ப—ரை). மேலை—முன்னாளில், கறவைக்கன்று ஊர்ந்தானை—கறவைக்கன்றின்மேல் தேரூர்ந்து அக்கன்றைக் கொன்றவனாகிய தன் மகனை, சான்றவர்—சான்றோரான மந்திரிமார், சால மறைத்து ஓம்பி கைகரப்ப—மிகவும் மறைத்தோம்பி அச்செயலை வெளிப்படாமல் ஒளிப்பவும், காலே கழிந்ததன் பின்றையும் — நெடுங்காலம் சென்ற பின்பும், தந்தையும்—தந்தையாகிய சோழனும், ஊர்ந்தான்—தேரைச் செலுத்திக் கொன்றான். (ஆதலால்), முறைமைக்கு—வழக்கிற்கு, மூப்பு இளமை—மூப்பென்பதும் இளமையென்பதும், இல்—இல்லை.

(க—து). மனுநீதிகண்ட சோழமகாராசன் பசுக்கன்றைத் தேர்க்காலின் கீழ்க் கொன்ற தன் இளங்குமாரனையும் தேர்க்காலின் கீழிட்டுக் கொன்றான். ஆதலால் இளையோன் முதியோன் என்ற பேதங்கொள்ளாது நடுவுநிலைமையோடு நீதிசெலுத்தல் வேண்டும்.

இச்செய்தி பெரியபுராணத்தில் பின்வருமாறு உரைத்திருக்கின்றது:—மனுநீதிகண்ட சோழனது குமாரன் ஒருநாள் ஆலயஞ் செல்லும்பொருட்டுத் தேரேறிப் போகையில் ஒரு பசுக்கன்று துள்ளிவந்து

அத்தேர்க்காலினடியில் அகப்பட்டிறந்தது. அதுகண்ட தாய்ப்பசு கதறிச்சென்று அரமனையின் ஆசாரவாசலில் ஆராய்ச்சிமணியைக் கொம்பினால் அடித்தது. மணியொலிகேட்ட சோழன்வந்து, பசுவின் துன்பத்துக்குக் காரணமான செய்தியை அறிந்து, தன் மகனைத் தேர்க்காலிலிட்டுக் கொல்லும்படி கட்டளையிட்டான். மந்திரிகள் அது செய்யாமல் விலகச் சோழன் தானே தன் மகனை அங்ஙனம் செய்தான்.

சிலப்பதிகாரம் வாழ்த்துக் காதையில், அம்மானை வரியில், "குறைவிலுடம்பரிந்த கொற்றவன் முன்வந்த, கறவை முறைசெய்த காவலன் காணம்மானை" என்றும், கட்டுரை காதையில் "கறவை முறைசெய் தோன்" என்றும், இச்செய்தி குறித்திருக்கின்றது.

243. நடுவுநிலைமை

முறைதெரிந்து செல்வர்க்கு நல்கூர்ந் தவர்க்கும்
இறைதிரியான் நேரொக்க வேண்டும்.—முறைதிரிந்து
நேரொழுகா னாயின் அதுவாம் ஒருபக்கம்
நீரொழுகிப் பாலொழுகு மாறு. 206

(ப—பொ). செல்வர்க்கும் வறியார்க்கும் செய்முறைமையைத் தெரிந்து அரசன் வழுவாதே நடுவாகச் செய்ய வேண்டும். முறையை வழுவி அரசன் நடுவாகச் செய்யானாயின், அதுவாம் ஒருபிள்ளை பக்கத்துத் தாய் தன் முலையால் நீரொழுகி ஒருபிள்ளை பக்கத்துப் பாலொழுகுமாறு போலும்.

(ப—ரை). முறை தெரிந்து — செய்யும் முறைமையைத் தெரிந்து, இறை—அரசன், திரியான்—வழுவானாய், செல்வர்க்கும் நல்கூர்ந்தவர்க்கும்-செல்வர்க்கும் ஏழைகளுக்கும், நேர் ஒக்கவேண்டும்—நடுவாகச் செய்யவேண்டும். முறைதிரிந்து—முறைதவறி, நேர் ஒழுகான் ஆயின்—அரசன் நடுவாகச் செய்யானாயின், அது—அது, ஒரு பக்கம் நீர் ஒழுகி—தாயினது மார்பினின்று ஒருபிள்ளையின் பக்கம் நீர் ஒழுக, (ஒருபக்கம்) பால் ஒழுகும் ஆறு—மற்றொருபிள்ளையின் பக்கம் பால் ஒழுகுமாறு போலும்.

(க-து). தாய் மார்பு ஒரு பக்கம் உண்கின்ற குழந்தைக்குப் பாலும் மறுபக்கம் உண்கின்ற குழந்தைக்கு நீருமாகச் சுரப்பதில்லை. அரச னும் செல்வர்க்கு ஒருவகையும் வறியர்க்கு வேறுவகையுமாக நீதி செலுத்தாமல் நடுவாகச் செலுத்தவேண்டும். எல்லாக் குடிகளையும் அரசன் பெற்ற தாய்போல் பாராட்டுக என்பதாம்.

"தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்."—திருக்குறள்.

241. வருத்தாமல் வரி வாங்குதல்

பொருத்த மழியாத பூந்தண்டார் மன்னர்
அருத்தம் அடிநிழ லாரை—வருத்தாது
கொண்டாரும் போலாதே கோடல் அதுவன்றோ
வண்டுதா துண்டு விடல். 242

(ப-பொ). உலகத்துப் பொருந்திய செங்கோன் முறைமை கோடாத பூவாற்செய்த குளிர்ந்த மாலையை யுடைய மன்னர், இறைகொள்ளும் பொருளைத் தம் அடி நிழலுள் வாழும் குடிகளை வருத்தாதே, கொள்வதும்போ லக் கொள்ளாதே, கொள்ளத்தக்க ஆறிலொன்றும் கொள் வர்: அதுவன்றோ வண்டு தாதுண்ணும் பூவை வருத் தாதே விடுதல் போல்வது.

(ப-ரை). பொருத்தம் அழியாத—செங்கோல் முறைமை கோடாத, தண் பூதார் மன்னர்—குளிர்ந்த பூமாலையணிந்த அரசர், அடிநிழலாரை— தம் அடிநிழலுள் வாழும் குடிகளை, வருத்தாது—வருத்தாமல், கொண் டாரும் போலாதே—வருத்தி வாங்கினவரும்போ லாகாமல், அருத்தம்— இறைப்பொருளை, கோடல்—காலமறிந்து கொள்க. அது—அங்ஙனம் செய்வது, வண்டு—வண்டானது, தாது உண்டுவிடல் அன்றோ—தாதுண் ணும்பூவை வருத்தாதே உண்டுவிடுதலோ டொக்கும்.

(க-து). வண்டு மலரினின்று தேனை மெள்ளக் கிரகிப்பதுபோல அரசர் குடிகளிடத்தினின்று வரிப்பொருளை வருத்தாமல் வாங்குக.

பழமொழி.—The orange that is too hard squeezed yields a bitter juice.

245. நிலுவை வைக்காமல் வரி தண்டேல்

பாற்பட்டு வாழ்ப வெனினும் குடிகண்மேல்
மேற்பட்ட கூட்டு மிகநிற்றல் வேண்டாவாம்.
கோற்றலையே யாயினும் கொண்டீக. காணுங்கால்
பாற்றலைப் பாலூற வில். 333

(ப—பொ). தன் ஆணை வழுவாது வாழத்தக்கவர்களே யாயினும் குடிமக்களாயினர்கள்மேல் தாம் கொள்ளும் இறை மிகுதியாக நிறுத்த வேண்டாவாகும். சூடு மிதிக்கும் தலையேயாயினும் நின்று அந்த இறையைக் கொள்க. ஆராயுங்கால் பாலைக் கறவாமல் நிறுத்திச் சேரக் கறக்க வென்றால் அஃது ஊராதவாறுபோல் அவர்பால் கொள்ளத்தக்கன மேல் இல்லையாம்.

கோற்றலை யென்பது நெல்லரிவதற்கு முன்னே தாட்டலையிலே நிற்கச்செய்தே என்றுமாம்.

(ப—ரை). பால் பட்டு வாழ்ப எனினும்—தன் ஆட்சிக்குட்பட்டு வழுவாது வாழத்தக்கவர்களேயாயினும், குடிகள்மேல்—குடிகள்மீது, மேற்பட்ட—நிலுவையாயுள்ள, கூட்டு—இறைப்பொருள், மிக நிற்றல் வேண்டா—மிகுதியாக நிற்றல் வேண்டா. காணுங்கால்—ஆராயுமிடத்து, பால் தலை பால் ஊறல் இல்—(சேரக் கறக்கலாமென்று கறவாது விட்ட) பாலின்மேல் (அதிகமாகப்) பால் சுரத்தல் இல்லை. (ஆகவே), கோல் தலையேயாயினும்—சூடுமிதிக்கும் இடத்திலேயாயினும் நின்று, கொண்டீக—அந்த இறையைக் கொள்க.

சூடுமிதித்தல்—சூடடித்தல், சூடு—அரிக்கட்டு.

(க—து). சிலவேளை சேர்த்துவைத்துப் பாலைக் கறந்தால், சுரத்தலான அளவு சரியாகச் சுரவாது (குறைந்துபோகும்): கறப்பது கொஞ்சமே யாயினும் உரிய காலத்தில் அதனைக் கறந்துகொள்க. அங்ஙனமே, அதிகம் நிலுவையாக வைத்து இறைப்பொருளை ஒருசேரத் தண்டினால், சேரவேண்டிய அளவு சரியாக வாராது: குடிகள் தாக்

கடவது தாளடிப்போர் செல்லேயாயினும் அரசர் காலமறிந்து அத னைத் தண்டிக்கொள்க.

இங்ஙனம் செய்யாக்கால் குடிகளை வீணுக வருத்துதலான நிமித் தம் சேரிடும்: அல்லது அரசன் பெறக்கடவ இறைப்பொருளை இழத்த லான நிமித்தம் சேரிடும்.

பழமொழி.—சேர்த்துவைத்துப் பசுக் கறக்கலாமா. Quick land-lords make careful tenants.

## 246. அதிகப்படி வரிகோண்டு அளிசெய்தல்

அடைய வடைந்தாரை அல்லவை செய்து
கொடைவேந்தன் கோல்கொடிய னாகிக் குடிகண்மேல்
கூட்டிறப்பக் கொண்டு தலையளிப்பின் அஃதன்றோ
சூட்டறுத்து வாயி விடல். 329

(ப-பொ). தன்னைச் செறிய அடைந்தவரைத் தீங்கு செய்து, கொடைத்தொழிலையுடைய வேந்தன் கொடுங் கோலை உடையனாகிக் குடிமக்கள்பால் கொள்ளும் இறை யை அடைவிற் கொள்ளாது மிகக்கொண்டு, அந்தக் குடி மக்களைப் பின்னை அளிசெய்யின், அதுவன்றோ, கோழியி னது சூட்டை அறுத்து அந்தக் கோழிக்கு இரையாக அதனை வாயுள் இடுதல் போலும்.

(ப-ரை). அடைய அடைந்தாரை—தன்னை நெருங்க அடைந்த வரை, அல்லவை செய்து—தீங்கு செய்து, கொடை வேந்தன்—கொ டைத்தொழிலையுடைய அரசன், கோல் கொடியன் ஆகி—கொடுங் கோலையுடையனாகி, குடிகள்மேல்—குடிமக்களிடம், கூட்டு—கொள்ளும் இறையை, இறப்ப கொண்டு—அடைவிற் கொள்ளாது மிகக் கொண்டு, தலையளிப்பின்—அந்தக் குடிகளைப் பின்னை அளிசெய்யின், அஃது—அது, சூடு அறுத்து வாயில் இடல் அன்றோ—கோழியினது சூட்டை யறுத்து அந்தக் கோழிக்கு இரையாக அதனை வாயுள் இடுதல்போலும்.

(க-து). இறுத்தலான அளவைக் கடந்து இறைகொண்டு பின் குடிகளுக்கு அளிசெய்வதானது, சேவற்சூட்டை அறுத்து அந்தச் சேவலுக்கு இரையாக இடுதல்போலாம்.

247. கொடுங்கோலுக்குக் குடிகள்செய்யும் பரிகாரம் இல்லை

வெண்குடைக்கீழ் வாழும் குடிகட்கு வேந்தனும்
செங்கோல னல்லாக்கால் செய்வதென்?—பொங்கு
படுதிரைச் சேர்ப்ப!மற் றில்லையே யானை
தொடுவுண்ணின் மூடுங் கலம். 391

(ப—பொ). தனது தவளச் சத்திரத்தின் கீழே வாழத் தக்க குடிகளாயுள்ளார்க்கு வேந்தனானவன் செங்கோன்மை நடாத்தாமல் கொடுங்கோன்மையைச் செய்வானாயின் அதற்குச் செய்யும் பரிகாரம் யாதும் இல்லை: அஃது, மிக்க திரை பொங்கி எழப்படாநின்ற கடற்சேர்ப்பனே! யானை உருட்டி உண்ணின் அதனை மூடுங்கலம் இல்லை, அதுபோல.

(ப—ரை). படு திரை பொங்கு சேர்ப்ப—மிக்க அலைகள் பொங்கியெழாநின்ற கடற்சேர்ப்பனே! வெண் குடைக்கீழ் வாழும் குடிகட்கு—தனது வெண்குடையின்கீழ் வாழத்தக்க குடிகளுக்கு, வேந்தன் – அரசனானவன், செங்கோலன் அல்லாக்கால் – செங்கோன்மை நடாத்தாமல் கோடுங்கோன்மையைச் செய்வானாயின், செய்வது என்—அதற்குச் செய்யும் பரிகாரம் யாது? (யாதும் இல்லை). யானை தொடு உண்ணின் மூடும் கலம் மற்று இல்லை—யானை உருட்டி உண்டால் அதனை மூடுங்கலம் வேறில்லை (அதுபோல).

(க—து). கலத்தி விருப்பதை யானை உருட்டி உண்ண லுற்றால் அதனை உண்ணுதபடி மூடத்தக்க கலம் வேறில்லை. அரசன் கொடுங்கோலனாயின் குடிகள் செய்யலான பரிகாரம் இல்லை.

248. பகைவரை அடாதவரும் நீதி தவறினவரும் எளியராவர்

ஒளியாரை மீதூர்ந் தொழுகுவ தல்லால்
களியானை மன்னர்க்கோ கைகடத்தல் ஏதம்.
துளியுண் பறவைபோல் செவ்வனோர்ப் பாரும்
எளியாரை எள்ளா தாரில். 287

• (ப—பொ). ஒளியினையுடைய பிற மன்னரை அடர்த் தொழுகாமையன்றிக் களியானை மன்னர்க்குத் தம் அரச நீதி கெட வொழுகுதலும் தமக்கு இளிவரவேயாம் (ஆத லால் தாம் எளிய ராகாதவகை இவ்விருதிறமும் ஒழிய வேண்டும்): துளியுண் பறவையாகிய வானம்பாடிபோல ஒருபாங் கோடாமல் செவ்வையே பார்ப்பாரும் எளியா ரை இகழாதார் இல்லை, ஆதலான்.

(ப—ரை). ஒளியாரை—புகழ் பொருந்திய பிற மன்னரை, மீது ர்ந்து ஒழுகுவது அல்லால்—அடர்த்தொழுகாமையோடு, கைகடத்தல்—தம் அரசநீதி கெட ஒழுகுதலும், களி யானை மன்னர்க்கு—மதமயக்க முள்ள யானைச் சேனையையுடைய மன்னர்க்கு, ஏதம்—கௌரவக் குறைவேயாம். (ஆதலால், தாம் எளியராகாத வகை இவ்விரண்டும் ஒழியவேண்டும்). துளி உண் பறவை போல்—மழைத்துளியை உண்ணும் பறவையாகிய வானம்பாடிபோல், செவ்வன் ஓர்ப்பாரும்—(ஒரு பாங்கு ஓடாமல்) செவ்வையே பார்ப்பாருள்ளும், எளியாரை எள்ளாதார்—எளியாரை இகழாதவர், இல்—இல்லை. [ஓ—அசை].

(க—து). பிற மன்னரை அடர்த்தொழுகாமையும் நீதிகெட வொழு குதலும் அரசர் எளியராதற்குக் காரணமாம். எளியாரை எல்லாரும் இகழ்வாராதலால், அரசர் எளியராகாதபடி இவ்விரண்டும் ஒழிய வேண்டும்.

'ஒழுகுவதல்லால்' என்பதில் 'அல்' என்பதை 'ஒழுகுவது' என்ப தோடு ஒட்டி எதிர்மறையாகக் கொண்டால், 'ஒழுகாமையன்றி' என்ற பழைய வுரை பொருத்தமாகும்.

பழமொழி.—ஏழையைக் கண்டால் மோழையும் பாயும். ஏழை யென்றால் எவர்க்கும் எளிது. Every poor man is counted a fool.

249. பகைவரை வெல்லும் படை அரசனுடைய அன்பே

மறுமனத்த னல்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்த னாகி ஒழுகின்,—செறுமனத்தார்
பாயிரங் கூறிப் படைதொக்கால் என்செய்ப?
ஆயிரங் காக்கைக்கோர் கல். 165

(ப—பொ). குற்றமுடைய மனத்தனல்லாத பெரிய கலத்தினையுடைய வேந்தன் எல்லார்மேலும் அன்புற்ற மனத்தனுகி ஒழுகுவனுயில், செறுமனத்தையுடைய பகைவர் வீரத்துக்கு வேண்டும் முகவுரைகள் சொல்லித் தம் படையைத் திரட்டினுல், அவ்வேந்தனை என்செய்ய வல்லார்? ஆயிரம் காக்கைக்கும் ஒரு கல்லேறுபோல நிற்கும் அவ்வரசு.

(ப—ரை). மறு மனத்தன் அல்லாத—குற்றமுடைய மனத்தா னல்லாத, மா கலத்த வேந்தன்—பெரிய கலத்தினையுடைய அரசன், உறு மனத்தனுகி ஒழுகின்—எல்லார்மேலும் அன்புற்ற மனத்தையுடையவனுய் ஒழுகுவனுகில், செறு மனத்தார்—கொல்லும் மனத்தையுடைய பகைவர், பாயிரம் கூறி — வீரத்துக்கு வேண்டும் முகவுரைகள் சொல்லி, படை தொக்கால்—தம்படையைத் திரட்டினுல், என் செய்ப—அவ்வரசனை யாது செய்ய வல்லார்? ஆயிரம் காக்கைக்கு ஓர் கல்—ஆயிரம் காக்கையை ஓட்டுதற்கு ஒருகல் போதுமன்றோ.

(க—து). கூவிவந்த ஆயிரம் காக்கைகளை ஓட்டுதற்குப் பெரிய படைக்கலங்கள் வேண்டா: கல் ஒன்றே போதும். பாயிரங்கூறிப் படையெடுத்துவந்த பகைவரை ஒட்டப் பெரிய படைவேண்டா: அன்பொன்றே போதும்.

"கான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்."—புறம்.

"வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்."—திருக்குறள்.

"நீர்வி லன்பு செலுத்தலிற் செவ்வியோர்
ஆர்வ மன்னவற் காயுத மாவதே."—கம்பராமாயணம்.

250. பகைவர் வலியைக் கெடுப்பது கோலின் தட்பமே

அங்கோ லவிர்தொடி! ஆழியா னுயினும்
செங்கோல னல்லாக்கால் சேர்ந்தாரும் எள்ளுவரால்.
வெங்கோன்மை வேந்தர்கண் வேண்டும் சிறிதெனினும்
தண்கோ லெடுக்குமா மெய். 248

(ப—பொ). அழகிய கோல்போலும் திரண்டு விளங்கிய வளையை யுடையாய்! தன் பகைவேந்தர்மாட்டு வெங் கோன்மை சிறிது வேண்டிஞ ஞயினும், தன்கீழ் வாழ் வார்க்குச் செங்கோல னல்லாதவிடத்துச், சக்கரப்படை யை யுடையவனேயாயினும், சேர்ந்தாரும் (சேராத வரும்) இகழ்வர். தண்ணளியையுடைய கோல் தானே தன் பகைவரது வலியைக் கெடுக்கும் போரைத் தரும் மெய்யாக.

(ப—ரை). அம் கோல் அவிர் தொடி—அழகிய கோல்போலும் திரண்டு விளங்கிய வளையை யுடையாய்! வேந்தர்கண் வெங்கோன்மை சிறிது வேண்டும் எனினும்—தன் பகைவேந்தரிடத்து வெங்கோன்மை சிறிது வேண்டிஞஞயினும், செங்கோலன் அல்லாக்கால்—(தன்கீழ் வாழ்வார்க்குச்) செங்கோல னல்லாதவிடத்து, ஆழியான் ஆயினும்—சக்கரப்படையை உடையவனேயாயினும், சேர்ந்தாரும் எள்ளுவர்—சேர்ந்தாரும் (சேராதவரும்) இகழ்வர். தண் கோல்—தண்ணளியை யுடைய கோல்தானே, மெய்—மெய்யாக, எடுக்குமாம்—தன் பகைவ ரது வலியைக் கெடுக்கும் போரைத் தரும். [ஆல்—அசை].

ஆம்—பிறர்மதத்தை விளக்கும் இடைச்சொல். ஆழியான்—திருமால்.

(க—து). செங்கோல னல்லாத அரசன் திருமாலேயாயினும் அவனை எல்லாரும் இகழ்வர். பகைவர்பொருட்டு அரசனிடம் வெங்கோன்மை சிறிது வேண்டுமாயினும், பகைவரை வெல்வதற்குச் செங்கோன் மையே சிறந்ததாம்.

251. அரச ஞணையின்கீழ்ப் பிறராணை நடவாமை
மன்னவ ஞணைக்கீழ் மற்றையார் மீக்கூற்றம்
என்ன வகையால் செயப்பெறுப?—புன்னைப்
பரப்புநீர் தாவும் படுகடல் தண்சேர்ப்ப!
மரத்தின்கீழ் ஆகா மரம். 311

(பு—பொ). அரசனணை செல்கின்றவிடத்து மற்றுள் ளார் தம்மை மிகுத்துக் கூறும் தமதாணையை எப்பெற்றி யால் செய்யப்பெறுவார்? (தமதாணை நடத்தப்பெருர்.)

புன்னைப் பாப்பின்கண் வந்து நீர் பாக்கின்ற மிக்க கடற் சேர்ப்பனே! ஒரு வாழ்மாத்தின்கீழ் ஒரு வாழ்மாம் வைத்தால் ஆகா, ஆதலான்.

(ப—ரை). புன்னை பாப்பு நீர் தாவும் படு கடல் தண் சேர்ப்ப—புன்னைப் பாப்பின்கண் வந்து நீர் பாவுதலான மிக்க கடலின் குளிர்ந்த சேர்ப்பனே! மாத்தின்கீழ் மாம் ஆகா — ஒரு மாத்தின்கீழ் வேறு மாங்கள் வைத்தால் அவை ஓங்கி வளாமாட்டா. (ஆதலால்), மன்னவன் ஆணை கீழ்—அாசன் ஆக்கினை செலுத்துமிடத்தில், மற்றையார்—மற்றுள்ளார், மீக்கூற்றம்—தம்மைச் சிறப்பித்துச் சொல்லும் தம்முடைய ஆக்கினையை, என்ன வகையால் — எவ்விதத்தால், செயப்பெறுப—செய்யப் பெறுவர் (தம்முடைய ஆக்கினை நடத்தப்பெறுர்). [ஒ-அசை].

(க—து). ஒரு மாத்தின்கீழ் வைத்த வேறு மாம் ஓங்காதவாறு போல, அாசனுணையின் கீழ்ப் பிறாணை நடவாது.

252. அரசர் ஆக்கலும் அழித்தலும்
வழிப்பட் டவரை வலியராச் செய்தார்
அழிப்பினும் ஆக்கினு மாகும்.—விழுத்தக்க
பையமர் மாலைப் பணைத்தோளாய்! பாத்தறிவென்
மெல்லக்? கவுட்கொண்ட நீர். 364

(ப—பொ). தம்மை வழிப்பட்டொழுகியவரை வலியராம் வகை அவர்க்கு முதன்மையைக் கொடுத்தார், தாமே பின்னையும் அவரை ஆக்கிச்செய்யினும் அழியச்செய்யினும் அவ்விரண்டும் தமக்கியலும். விழுத்தக்க மெத்தெனவுள்ள மாலை யணிந்த பணைத்தோளாய்! இதனுக்கு மெல்ல ஆராய்ந்தறிவதென்னை? கவுளிலே கொண்டடக்கிய நீர் குடித்தலுமாம் உமிழ்தலுமாம், அதுபோல.

(ப—ரை). விழு தக்க பை அமர் மாலை பணைதோளாய் — மேன்மையான மிருதுவுள்ள மாலைதரித்த பெரிய தோளையுடையாய்! கவுள் கொண்ட நீர்—கவுளில் கொண்டடக்கிய நீரைக் குடிக்கலுமாம் உமிழ்தலுமாகும். (அதுபோல), வழிப்பட்டவரை — தம்மை வழிப்பட்டொழுகியவரை, வலியரா(க)ச் செய்தார்—வலியராம் வகை அவர்க்கு முதன்மையைக் கொடுத்தார், அழிப்பினும் ஆக்கினும் ஆகும்—தாமே

பின்னையும் அவரை அழியச்செய்யினும் ஆகச்செய்யினும் அவ்விரண்டும் தமக்கு இயலும். மெல்ல பாத்தறிவு—இதற்கு மெல்ல ஆராய்ந்தறிவு, என்—என்னே?

(க—து). நீரை வாயில்கொண்டவர் அந்நீரை உட்கொள்ளலும் கூடும், உமிழ்தலும் கூடும். ஒருவருக்கு முதன்மை செய்த அரசர் அவரை அழித்தலும் கூடும், ஆக்கலும் கூடும். இது அரசர் மனம் போனவாறு.

பெரிய திருமொழி 10–ம் பத்து 9–ம் திருமொழி 8–ம் பாசுரம் "பெருந்தடங் கண்ணி கரும்புறு கோதை பெருமையை நினைந்திலை பேசில், கருங்கடல் வண்ண கவுட்கொண்ட நீரா மிவளெனக் கருதுகின் ருயே" என வருகின்றது. இதற்கு "வாயில் போகட்ட நீர் இழிச்சவுமாம் கொப்பளிக்கவுமாம்" என்பது பொருள்.

## 253. தலைமை கருதுவோரை நேர்செய்திருத்தலின் அபாயம்

தலைமை கருதும் தகையாரை வேந்தன்
நிலைமையால் நேர்செய் திருத்தல்—மலைமிசைக்
காம்பனுக்கு மென்ரோளாய்! அஃதன்றோ ஓரறையுள்
பாம்போ டுடனுறையும் ஆறு. 349

(ப—பொ). முன்னமே தமக்குத் தலைமை செய்து கொள்ள வேண்டுமென்று கருதியிருக்கும் தகைமைப் பாட்டை யுடையாரை வேந்தனனவன் பலவரிசை நிலைமையைத் தன்னே டொக்கச்செய்து மற்றவரோடு கூடியிருத்தல், மலைமேல் உண்டாகிய மூங்கிலை அழகழிக்கும் தோளையுடையாய்! பாம்பு வாழுவதோர்ந்து அவ்வறையின்கண்ணே பாம்பொடுகூட உறையும் தன்மை போல்வது.

(ப—ரை). மலை மிசை காம்பு அனுக்கும்—மலைமேல் உண்டாகிய மூங்கிலை அழிக்கும், மென் தோளாய்—மெல்லிய தோளையுடையாய்! தலைமை கருதும் தகையாரை – தமக்குத் தலைமை செய்து கொள்ளவேண்டும் என்று கருதியிருக்கும் தன்மையுடையாரை, வேந்தன்—அரசனனவன், நிலைமையால் நேர்செய்திருத்தல் அஃது—பல

கௌரவ நிலைமையைத் தனக்குச் சமானமாகச்செய்து அவரோடு கூடி யிருத்தலாகிய அது, ஓர் அறையுள் பாம்போடு உடனுறையும் ஆறு அன்றோ—பாம்பு வாழுவ தறிந்த அவ்வறையின் கண்ணே பாம்போடு கூடி உறையும் தன்மையோ டொக்கும்.

(க—து). தமக்குத் தலைமை செய்துகொள்ளக் கருதியிருப்பவரை அரசன் தனக்குச் சமானமாகச் சிறப்புச்செய்து அவரோடு கூடியிருப்பது, பாம்போடு சகவாசம் செய்வதை ஒக்கும். அதனால் அரசனுக்கு இறுதி உண்டாகும் என்பதாம்.

"உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போ டுடனுறைந் தற்று"—திருக்குறள்.

பெரிய திருமொழி 11–ம் பத்து 8–ம் திருமொழி 3–ம் பாசுரம்

"தூங்கார் பிறவிக்க ணின்னம் புகப்பெய்து,
வாங்காயென்று சிந்தித்து நானதற் கஞ்சிப்
பாம்போ டொரு கூரையிலே பயின்றாற்போல்
தாங்காதுள்ளம் தளருமென் தாமரைக் கண்ணா!"

என்றிப் பழமொழியை உள்ளிட்டு வருகின்றது.

254. அரசன் அடிமைகொண்டால் ஒருப்படுதேல்

கூற்றும் உயிர்கொள்ளும் போழ்து குறிப்பறிந்து
மாற்ற முடையாரை ஆராயா—தாற்றவும்
முல்லை புரையும் முறுவலாய்! செய்வதென்
வல்லை அரசாட் கொளின். 110

(ப—பொ). கூற்றம் தமதுயிரைக் கொள்ளும்பொழுது அவர் சொல்லும் மாற்றத்தை ஆராய்ந்தன்று கொள்வது. அதுபோல, முல்லை புரையும் முறுவலையுடையாய்! செய்வதொன் றுண்டோ? மிகவும் விரைந்து அரசனே பிறரை முறையன்றி அடிமையாகக் கொள்ளின்.

(ப—ரை). முல்லை புரையும் முறுவலாய்—முல்லை முகையை ஒத்த பல்வரிசையை யுடையாய்! உயிர் கொள்ளும்போழ்து — உயிரைக் கொள்ளும்பொழுது, கூற்றும் — யமனும், மாற்றம் உடையாரை —

வார்த்தை சொல்லுகின்றவர்களை குறிப்பு அறிந்து ஆராயாது—வார்த்தையின் குறிப்பை ஆராய்ந்தறிவதில்லை. (அதுபோல), அரசு—அரசன், ஆற்றவும் வல்லே—மிகவும் விரைந்து, ஆட்கொளின்—பிறரை முறையன்றி அடிமைகொண்டால், செய்வது என் — செய்வதொன்றுண்டோ?

(க—து). யமன் உயிர்கொள்ளும்போதும் அரசன் ஒருவரை அடிமைகொள்ளும்போதும் மறுக்குமாறில்லை: ஒருப்படுதலேவேண்டும்.

255. அற்பரிடத்தில் அதிகாரம் கோடார்

உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்த னாகி—நடக்கையின்
ஒள்ளிய னல்லான்மேல் வைத்தல், குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல். 200

(ப—பொ). உடைப்பெருஞ் செல்வத்தான் வரும் உயர்ந்த முதன்மையைத் தான் நல்லாரால் அடக்கவும் அடங்காத உள்ளத்தனாகி ஒழுக்கத்தால் நல்லனல்லாதான் பக்கத்தே வைத்தல், குரங்கின்கையிலே ஒருகொள்ளியைக் கொடுத்து விட்டதனோ டொக்கும்.

(ப—ரை). அடக்கம் இல் உள்ளத்தனாகி—தான் (நல்லாரால் அடக்கவும்) அடங்காத மனதுற்றவனாகி, நடக்கையின் ஒள்ளியனல்லான் மேல்—ஒழுக்கத்தால் மேன்மையில்லாதவன் மேலே, உடைப்பெருஞ் செல்வத்து உயர்ந்த பெருமை—உடைய பெருஞ் செல்வத்தான் வரும் உயர்ந்த முதன்மையை, வைத்தல்—வைத்தலானது, குரங்கின் கை—குரங்கின் கையிலே, கொள்ளி கொடுத்துவிடல்—கொள்ளிக் கட்டையைக் கொடுத்ததனோ டொக்கும்.

(க—து). அற்பனிடத்தில் அதிகாரங்கொடுப்பது குரங்கின் கையில் கொள்ளி கொடுப்பது போலாம்.

பழமொழி.—தேளுக்கு மணியம் கொடுத்தால் நிமிஷத்துக்கு நிமிஷம் கொட்டும். நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால் கிடைக்கு இரண்டாடு கேட்கும். An ill man in office is a mischief to the public.

256. பொல்லாங்கு செய்தாரும் வணங்கும்படி செய்தல்

எல்லையொன் றின்றியே இன்னாசெய் தாரையும்
ஒல்லை வெகுளார், உலகாடு மென்பவர்,
சொல்லின் வளாஅய்த்தம் தாணிழல் கொள்பவே,
கொல்லையுள் கூழ்மரமே போன்று. 272

(ப—பொ). எண்ணுதற்கு அளவென்ப தொன்றின்றிப் பொல்லாது செய்தாரையும் விரைந்து கோபியார், உலகை ஆள்வேமென்னும் வேந்தர், தமது சொல்லாலே வளைத்துத் தம் அடிநிழலின்கண்ணே ஒதுங்கும்படி கொள்வர், புனஞ்செய்த கொல்லையின்கண்ணே தமக்கு உண்கைக்கு இடமாக நிறுத்திய மரம்போலும்.

(ப—ரை). கொல்லையுள்—புனத்தின்கண், கூழ்மரமே போன்று—தமக்கு உண்கைக் கிடமாக நிறுத்திய மரம் போலும், உலகு ஆடும் என்பவர்—உலகை ஆள்வேம் என்னும் அரசர், எல்லை ஒன்று இன்றியே இன்னா செய்தாரையும்—அளவு ஒன்று மின்றியே பொல்லாது செய்தாரையும், ஒல்லை வெகுளார்—விரைந்து கோபியாராய், சொல்லின் வளாய்—தமது சொல்லாலே வளைத்து, தம் தாள் நிழல்—தம் அடி நிழலின் கண்ணே, கொள்ப—ஒதுங்கும்படி கொள்வர்.

ஆடும்—(ஆள் + தும்)—ஆள்வோம்: தன்மைப் பன்மை.

(க—து). நல்லரசர் தமக்கு மிக்க பொல்லாங்கு செய்தாரையும் கோபியாமல் வசப்படுத்தித் தமது ஆதரவில் ஒதுங்கும்படி செய்வர், வெட்டுகிறவனையும் தம் நிழலில் கொள்ளும் கூழ்மரம் போல.

257. பெரியாரைச் சார்ந்து பயன்பெறுதல்

பொலந்தா ரிராமன் துணையாகத் தான்போந்
திலங்கைக் கிழவற் கிளையான்—இலங்கைக்கே
போந்திறை யாயதூஉம் பெற்றான். பெரியாரைச்
சார்ந்து கெழீஇயிலா ரில். 92

(ப—பொ). பொன் தாரையுடைய இராமனைத் தனக்குத் துணையாகக் கருதிப் போந்து இலங்கைக் கிழவனாகிய இராவணற்கிளையான் இலங்கைக்கே மீட்டும் இறைவனானன். ஆதலால், பெரியராயிருப்பாரைச் சார்ந்தால் அச்சார்ச்சியால் பயன் பெறாதார் இல்லை.

(ப—ரை). பொலம் தார் இராமன்—பொன்மாலையுடைய இராமனை, தான் துணையாக போந்து—தனக்குத் துணையாகக் கருதிப் போந்து, இலங்கை கிழவற்கு இளையான்—இலங்கைக் குரியவனாகிய இராவணனுக்கு இளையானான விபீஷணன், இலங்கைக்கே போந்து இறையாயதும் பெற்றான்—இலங்கைக்கே மீட்டும் அரசனாகும் பதவியையும் பெற்றான். (ஆதலால்), பெரியாரை சார்ந்து—பெரியரா யிருப்பாரைச் சார்ந்தால், கெழு இலார்—அந்தச் சார்பினாலே பயன் பெறாதவர், இல்—இல்லை. [கெழு—(கெழுமை—வளம்)—பயன்].

"குன்றிய சீர்மைய ராயினும் சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மை கொளின்."—திருக்குறள்.

## 2. அமைச்சர்

258. அரசன் திறத்துக்கு அவன் சபை அறிகுறி

கல்வி யகலமும் கட்டுரை வாய்பாடும்
கொல்சின வேந்தன் அவைகாட்டும்.—மல்கி
தலைப்பாய் இழிதரு தண்புனல் நீத்தம்
மலைப்பெயல் காட்டுந் துணை. 264

(ப—பொ). பகைவரிடத்துக் கொலைத்தொழிலையும் சினத்தையுமுடைய வேந்தனது கல்வியின் பெருமையையும் அவன் சொல்லும் சொல்வன்மையையும் அவனைச் சுற்றியிருந்த அவையார் களம் அறிவிக்கும். அஃது எவ்வாறெனில், நிறைந்து குன்றினிடமெல்லாம் பரந்து வந்து வீழாநின்ற குளிர்ந்த வெள்ளத்தினது பெருமை மலையிலே மழை பெய்த பெயலை அறிவிக்கும் அளவு போல

(ப—ரை). மல்கி—நிறைந்து, தலை பாய்—குன்றிடமெல்லாம் பரந்து, இழிதரு—வந்து வீழாநின்ற, தண் புனல் நீத்தம்—குளிர்ந்த வெள்ளத்தினது பெருமை, மலை பெயல்—மலையிலே மழைபெய்த பெயலை, காட்டும் துணை—அறிவிக்கும் அளவாம். (அதுபோல), கொல் சின வேந்தன்—பகைவரிடத்துக் கொலைத்தொழிலையும் கோபத்தையும் உடைய அரசனது, கல்வி அகலமும்—கல்வியின் பெருமையையும், கட்டுரை வாய்பாடும்—அவன் சொல்லும் சொல்வன்மையையும், அவை—அவனைச் சுற்றியிருக்கும் அவையார் களம், காட்டும்—அறிவிக்கும்.

"கலையினதகலமும்" என்றார் சிந்தாமணியில்.

(க—து). மழையின் அளவை வெள்ளத்தால் அறியலாம். அரசனுடைய ஞானத்தையும் சொல்வன்மையையும் அவனுடைய சபையால் அறியலாம்.

"எச்ச மென்பது வெள்ளவே துவினுல்
நிச்சயித் தத்தலை மழைநிகழ் வுரைத்தல்."—மணிமேகலை.

259. அரசன் எப்படி அமைச்சரும் அப்படி

செயிரறு செங்கோல் சினவேந்தன் தீமை
பயிரறு பக்கத்தார் கொள்வர்.—துகிர்புரையும்
செவ்வாய் முறுவனற் சின்மொழியாய்! செய்தானை
ஒவ்வாத பாவையோ வில். 226

(ப—பொ). குற்றமற்ற செங்கோலையுடைய சினவேந்தனது கொடிய தொழிலை ஐயமற்ற அறிவால் அவன் மருங்கு வாழ்வாரும் செய்வர். பவளத்தை ஒக்கும் சிவந்த வாயையும் வெள்ளிய முறுவலையும் நல்ல மெல்லிய மொழியையும் உடையாய்! எழுதுமவன் கருத்துக்கு ஒவ்வாத சித்திரம் இல்லை, அதுபோல.

கருத்தாவது சோகம் வீரம் இன்பம் முதலியன.

(ப—ரை). துகிர் புரையும் செவ்வாய் முறுவல் நல் சில் மொழியாய்—பவளத்தையொக்கும் சிவந்த வாயையும் வெள்ளிய பல்வரிசையையும் நல்ல மெல்லிய மொழியையும் உடையாய்! செய்தானை ஒவ்வாத

பாவையோ இல்—எழுதுமவன் கருத்துக் கொள்ளாத சித்திரம் இல்லை. (அதுபோல), செயிர் அற செங்கோல்—குற்றமற்ற செங்கோலையுடைய, சினவேந்தன் தீமை—சினவேந்தனது கொடிய தொழிலை, பயிர் அற—அருவருப்பற்ற, பக்கத்தார்—அமைச்சரும், கொள்வர்—செய்வர்.

மந்திரிகளைப் பக்கத்தார் என்றும் உழையர் என்றும் வழங்குவர், அமைச்சர் (அமாத்யர்) என்னும் வடசொல் அப்பொருளுள்ளதாகலின்.

(க—து). எழுதிய சித்திரம் எழுதினவன் பாவனையை ஒட்டியிருக்கும். மந்திரி முதலானோர் அரசன் தன்மையை ஒட்டி நடப்பர்.

260. அமைச்சரைக் கண்ணாகக் கொள்ளாத அரசன்

கற்றார் பலரைத்தன் கண்ணாக இல்லாதான்
உற்றிடர்ப் பட்ட பொழுதின்கண் தேற்றம்,
மரையா துணைபயிரும் மாமலை நாட!
சுரையாழ் நரம்பறுத் தற்று. 228

(ப—பொ). இராசநீதிக் கேற்ற நூல்களைக் கற்ற மந்திரிகள் பலரைத் தனக்குக் கண்ணாக இல்லாத வேந்தன், தனக்கு யாதானும் ஓரிடர் வந்துற்ற பொழுதின்கண், தான் ஒரு தலையாகத் துணியும் தெளிவு, மரையாக்கள் தம் துணைகளை அழைக்கும் பெரிய மலைநாடனே! ஒரு நரம்பை யுடைய செங்கோட்டியாழின் அந்த ஒரு நரம்பையும் அறுத்தாற்போலும்.

(ப—ரை). மரையா—மரையாக்கள், துணை பயிரும்—தம் துணைகளை அழைக்கும், மா மலைநாட—பெரிய மலைநாடனே! கற்றார் பலரை—இராசநீதிக்கேற்ற நூல்களைக் கற்ற மந்திரிகள் பலரை, தன் கண்ணாக இல்லாதான்—தன் கண்ணாக இல்லாத அரசன், உற்று இடர்ப்பட்ட பொழுதின்கண்—தனக்கு ஏதாயினும் ஒரு துன்பம் வந்தபோது, தேற்றம்—தான் ஒருதலையாகத் துணியும் தெளிவு, சுரை யாழ்—(ஒரு நரம்பை யுடைய) செங்கோட்டியாழின், நரம்பு—(அந்த) ஒரு நரம்பையும், அறுத்தற்று—அறுத்தாற்போலும்.

(க—து). மதிமந்திரிகள் பலரைத் தனக்குக் கண்ணுகப் படைத்துக் கொள்ளாத அரசன் இடகுற்றபோது செய்யத்தகுவது இன்னதென்று தானே துணியும் துணிபு, உள்ள ஒரு நரம்பும் அற்ற செங்கோட்டி யாழ்போல் பயன்படாது.

"சூழ்வார் கண்ணுக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்."—திருக்குறள்.

261. அமைச்சரை ஆராய்ந்து வசப்படுத்தல்

நல்லவும் தீயவும் நாடிப் பிறருரைக்கும்
நல்ல பிறவும் உணர்வாரைக் கட்டுரையின்
வல்லிதி னுடி வலிப்பதே புல்லத்தைப்
புல்லம் புறம்புல் லு மாறு. 104

(ப—பொ). இவை நல்லவென்றும் இவை தீயவென் றும் ஆராய்ந்து பிறர் உரைக்கின்ற நல்லவற்றையும் நல்ல வல்லாத வற்றையும் அறியவல்லாரைக் கட்டுரைவலத் தால் விரைந்தாராய்ந்து தம் வயத்தாகச் செய்வது, ஆனேற்றை ஆனேற்றினுலே தன்மாட்டு அணைக்குமாறு போலும்.

(ப—ரை). நல்லவும் தீயவும் நாடி—இவை நல்லவென்றும் இவை தீயவென்றும் ஆராய்ந்து, பிறர் உரைக்கும் நல்ல (உம்) பிறவும் உணர் வாரை—பிறர் உரைக்கும் நல்லவற்றையும் நல்லவல்லாதவற்றையும் அறியவல்லாரை, வல்லிதின் நாடி—விரைந்து ஆராய்ந்து, கட்டுரை யின்—கட்டுரைவலத்தால், வலிப்பது—தம் வயமாகச் செய்வது, புல் லத்தை—எருதை, புல்லம்—எருதால், புறம்புல்லும் ஆறு—தன்மாட் டணைக்குமாறு போலாம். [ஏ—அசை].

(க—து). அரசன் மதிமந்திரிகளை ஆராய்ந்து நற்சொல்லால் தன் வயமாகச் செய்வது, எருதை எருதால் தன்னிடம் அணைக்குமாறு போலாம்.

"நன்மையுந் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்."—திருக்குறள்

262. உயிர்கள் இனிது வாழ்தற்கு அமைச்சர் காரணம்

மனத்தினும் வாயினும் மெய்யினும் செய்கை
அனைத்தினும் ஆன்றவிந்தா ராகி—நினைத்திருந்
தொன்றும் பரியலராய் ஓம்புவார் இல்லெனின்,
சென்று படுமாம் உயிர். 359

(ப—பொ). செய்கை யனைத்தின்கண்ணும் மனத்தானும் வாயானும் மெய்யானும் அடங்கியவிந்தாராய் ஓர்ந்திருந்து ஏதும் பரியாராய்க் காக்கும் பெரியோர் இல்லையாயின், எல்லா உயிரும் இடர்ப்படும்.

(ப—ரை). செய்கை அனைத்தினும்—செய்கை எல்லாவற்றின் கண்ணும், மனத்தினும் வாயினும் மெய்யினும்—மனத்தாலும் வாயாலும் உடம்பாலும், ஆன்றவிந்தார் ஆகி—அடங்கியொடுங்கினவராய், நினைத்திருந்து—நன்மையே கருதியிருந்து, ஒன்றும் பரியலராய்—எதற்கும் வருந்தாமல், ஓம்புவார்—காக்கும் பெரியோர், இல்லெனின்—இல்லையாயின், உயிர்—எல்லா உயிரும், சென்றுபடும்—அழிவுறும். [ஆம்—அசை].

(க—து). மனோ வாக்குக் காயங்களை அடக்கி நன்மையே நாடும் மந்திரிமாரே மன்னுயிர்கள் இனிது வாழ்தற்குக் காரணமாவர்.

263. அமைச்சர் சொல்லை அரசன் கொள்ளுதல்

செயல்வேண்டா நல்லன செய்விக்கும்: தீய
செயல்வேண்டி நிற்பின் விலக்கும்: இகல்வேந்தன்
தன்னை நலிந்து தனக்குறுதி கூறலால்
முன்னின்னா மூத்தார்வாய்ச் சொல். 357

(ப—பொ). செய்யப்படா நல்லனவற்றைச் செய்விக்கும்; பிறரோடு பகைமை செய்யவேண்டி நிற்பின் அதனை விலக்கும்; இகல்வேந்தன் தன்னை நலிந்து தனக்கு உறுதியாயினவே சொல்லும்; ஆதலான், அறிவினால் மூத்தார் வாய்ச்சொல் முன் இன்னா.

(ப—ரை). மூத்தார் வாய்ச்சொல்—பெரியோரது வாய்ச்சொல்லானது, செயல் வேண்டா நல்லன—தான் செய்தலை விரும்பாத நல்லனவற்றை, செய்விக்கும்—செய்யும்படி செய்யும்; தீய செயல் வேண்டிநிற்பின்—தீமைகளைச் செய்தலை விரும்பிநிற்பின், விலக்கும்—அதனை விலக்கும். இகல் வேந்தன் தன்னை—வலிமை பொருந்திய அரசனை, நலிந்து—வருந்தி, தனக்கு – அவனுக்கு, உறுதிகூறலால்—நன்மையாயினவற்றையே சொல்லுதலால், முன் இன்னு—அவர் சொல் முன்னே துன்பம் தருவதாகும்.

(க—து). மூத்தார் வாய்ச்சொல், நல்லன செய்விக்கும்; தீயன விலக்கும். ஆயினும் அரசனை வருந்தி உறுதி கூறுதலால், அது முன்னே துன்பமாகத் தோன்றும். அதனைப் பொறுத்து அரசன் அவர் சொல்லைக் கொள்க.

"உற்றநோய் நீக்கி உறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்."—திருக்குறள்.

264. பொய்யுரைத்தாயினும் அரசனை நல்வழிப் படுத்தல்

செறிவுடைத் தார்வேந்தன் செவ்வியல பெற்றால்
அறிவுடையார் அவ்வியமும் செய்வர்.—வறிதுரைத்துப்
பிள்ளை களைமருட்டும் தாயர்போல் அம்புலிமேல்.
ஒள்ளியகாட் டாளர்க் கரிது. 323

(ப—பொ). அறிவுடைய மந்திரிகள், செறிதலையுடைய மாலையையுடைய வேந்தன் (தாங்கள் இன்னபடி செய்க வென்று கற்பித்தவதனைச் செய்யாது) நெறியல்லா வழியிலே நடக்கக் கண்டால், பொய் உரைத்து வஞ்சித்தாயினும் (அதன்கணின்று மீள்வித்து) நல்ல வழியின்கண் ஒழுகுவிப்பர்; அம்புலியைக் காட்டிப் பயனல்லாதன சொல்லித் தாயார் பிள்ளைகளை மருட்டுமாறு போல: அஃதன்றி உண்மையாய் ஒள்ளியவா யிருப்பனவற்றால் தெருட்டுதல் அவனின் ஆளப்பட்ட மந்திரிகட்கு அரிதாகலான்.

(ப—ரை). செறிவு உடை—நெருங்கியுள்ள, தார்வேந்தன்—மாலை தரித்த அரசன், செவ்வி அல பெற்றால்—தகுதி அல்லாதவைகளைச் செய்யப்பெற்றால், அம்புலிமேல் வறிது உரைத்து—சந்திரனைக் காட்டிப் பயனல்லாததைச் சொல்லி, பிள்ளைகளை மருட்டும் தாயர்போல்—பிள்ளைகளை மருட்டும் தாய்மார்போல், அறிவுடையார்—அறிவுடைய மந்திரிகள், அவ்வியமும் செய்வர்—பொய்யுரைத்து வஞ்சித்தாயினும் அரசனை (அச்செயல்களினின்றும் விலக்கி) நல்லவற்றை விரும்பி நடக்கும்படிசெய்வர். ஆளர்க்கு – அவனால் ஆளப்பட்ட மந்திரிகளுக்கு, ஒள்ளியகாட்டு—(உண்மையாய்) ஒள்ளியவற்றால் தெளிவித்தல், அரிது—அரிதாகும். [அவ்வியம்—மனக்கோட்டம். அவ்வியம் செய்தலாவது, வஞ்சகமாகப் பொய்யுரைத்தல்].

(க—து). அடாத காரியங்களை அரசன் செய்யலுறின், உண்மை சொல்லி அவனைத் தெளிவிப்பது அரிதாதலால், சந்திரனைக் காட்டிப் பொய்வார்த்தை சொல்லிக் குழந்தைகளை மருட்டும் தாய்மாரைபோல, மந்திரிமார்கள் ஒரு போக்கைக் காட்டிப் பொய்யுரைத்தாயினும் அரசனை நல்லவற்றை விரும்பி நடக்கும்படி செய்வர்.

265. அரசன் செய்த தீங்கைக் கல்விமான்கள் பொறுக்க

தீயன வல்ல செயினும் திறல்வேந்தன்
காய்வன சிந்தியார் கற்றறிந்தார்.—பாயும்
புலிமுன்னர்ப் புல்வாய்க்குப் போக்கில். அதுவே
வளிமுன்னர் வைப்பாரம் இல். 234

(ப—பொ). தீமையைத் தருவனவாகிய பாவங்களை வெற்றிக் கூறுபாட்டையுடைய வேந்தன் செய்தானாயினும், அவன் வெறுக்கத்தக்கன செய்தொழுகார் கற்றறிந்தவர்கள். அஃது என்னென்னில், புலி பாயும் தன்மை கொண்டெழுந்தால், அதன்முன் நின்ற புல்வாய்க்குப் போக்கில்லாத வாறுபோலவும், அதுபோலவே மிக எழுந்த காற்றின்முன்னர் நிற்கும் வைக்கோற் பாரமும் இல்லாதவாறு போலவும்.

(ப—ரை). பாயும் புலிமுன்னர்—(தன்மீது) பாய்தலான புலியின் முன், புல்வாய்க்கு—மானுக்கு, போக்கு இல்—தப்பிப்போகும் உபாயம் இல்லை. வளிமுன்னர்—மிகவெழுந்த காற்றின்முன், வை பாரம் இல்—வைக்கோல் சுமை நிலைத்துநிற்றல் இல்லை. அதுவே—அது போலவே, தீயன அல்ல — தீமையைத் தருவனவாகிய பாவங்களை, திறல் வேந்தன்—வெற்றிபெறும் இயல்புள்ள அரசன், செயினும்—செய் தானாயினும், கற்றறிந்தார் — கற்றறிந்தவர்கள், காய்வன சிந்தியார்— அவன் வெறுக்கத்தக்கனவற்றைச் செய்ய நினையார்.

அல்ல—நல்ல வல்லாதன, பாவச் செய்கைகள்: "அல்லவை செய் தார்க் கறங்கூற்றம்" என்பதிற்போல. தீயன அல்ல என்பது இருபெய ரொட்டு.

(க—து). புலியின் எதிரில் அகப்பட்ட மான் தப்புமா றில்லை: சூறைக்காற்றின் எதிரில் உள்ள வைக்கோல் சுமை நிலைத்துநிற்குமா றில்லை. அங்ஙனமே, அரசனது கோபத்துக் கிலக்கானவன் தப்புமா றில்லை. ஆகையால், அரசன் தீய பாவங்களைச் செய்தாலும், கல்வி மான்கள் அவன் வெறுக்கத்தக்கவைகளைச் செய்ய நினையார்.

"யாண்டுச்சென் றியாண்டும் உளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்."—திருக்குறள்.

## 3. மன்னரைச் சேர்ந்தொழுகல்

266. பேரரசர் ஏவியதைச் சோம்பாமற் செய்க

கொடித்திண்டேர் மன்னரால் கூட்டுண்டு வாழ்வார்
எடுத்துமேற் கொண்டவ ரேய வினையை
மடித்தொழிதல் என்னுண்டாம்? மாணிழாய்! கள்ளைக்
குடித்துக் குழைவாரோ இல். 331

(ப—பொ). கொடியையுடைய சிக்கென்ற தேரை யுடைய மன்னவராலே திறைகொள்ளப்பட்டு உயிர்வாழும் மன்னவர்கள், ஒரு காரியத்தை உட்கொண்டு அம்மன்

னர் ஏவிய வினையைச் செய்யாதே மடித்திருந்து அதனைத் தவிர்தலால் என்ன பயன் உண்டாம்? மாட்சிமைப்பட்ட ஆபரணத்தை யுடையாய்! கள்ளைக் குடித்துவைத்துக் குடித்தோமென்று வருந்துவார் ஒருவரும் இல்லை, அது போல.

(ப—ரை). மாண் இழாய்—மாட்சிமைப்பட்ட ஆபரணத்தை உடையாய்! கள்ளை குடித்து—கள்ளைக் குடித்துவைத்து, குழைவார்—(குடித்தோமென்று) வருந்துவார், இல்—ஒருவரும் இல்லை. கொடி திண் தேர் மன்னரால் – கொடிகட்டிய திண்ணிய தேரையுடைய அரசரால், கூட்டுண்டு வாழ்வார்—பகுதிப்பணம் கொள்ளப்பட்டு உயிர்வாழ்கின்ற சிற்றரசர்கள், அவர் எடுத்து மேற்கொண்டு ஏ(வி)ய வினையை—அவ்வரசர் ஒரு காரியத்தை உட்கொண்டு ஏவிய வினையை, மடித்தொழிதல் – செய்யாமல் சோம்பியிருத்தலால், என் உண்டாம் – என்ன பயன் உண்டாகும்? (ஒன்றும் இல்லை). [ஓ—அசை.]

(க—து). கள்ளைக் குடித்தவர் கள் குடித்ததைக் குறித்து வருந்தாராயினும் கள்ளினு லுண்டான கஷ்ட நஷ்டங்களால் வருந்துவர். பேரரசர் ஏவிய காரியத்தைச் செய்யாமல் சோம்பியிருந்த சிற்றரசர் சோம்பியிருந்ததற்காக வருந்தாராயினும் பேரரசர் ஒறுக்கும்போது தமக்குண்டான துன்பத்தால் வருந்துவர். ஆதலால், செய்வது செய்யாமல் சோம்பியிருப்பதில் நன்மை யில்லை.

267. அரசன் ஏவியது செய்வோர் நன்மை பெறுதல்

வெற்றிவேல் வேந்தன் வியங்கொண்டால் யாமொன்றும்
பெற்றிலே மென்பது பேதைமையே.—மற்றதனை
எவ்வ மிலராகிச் செய்க. அதுவன்றோ
செய்கென்றான் உண்கென்னு மாறு. 181

(ப—பொ). வென்றியையுடைய வேல்வேந்தன் ஒன்றனைச் செய்கவென்று ஏவல்கொண்டால், யாம் ஒன்றும் பெற்றிலோ மென்று மறுத்தல் ஒருவர்க்கு அறியாமையே யாம். அவர் ஏவிய கருமத்தைத் துன்பம் இலராகிச் செய்க. ஒரு கருமத்தைச் செய்க என்றவன் உண்க என்னுமா றன்றோ அது.

(ப-ரை). வெற்றி வேல் வேந்தன் – வெற்றியையுடைய வேல் வேந்தன், வியம் கொண்டால்–(ஒன்றைச் செய்கவென்று) ஏவல்கொண்டால், யாம் ஒன்றும் பெற்றிலேம் என்பது–யாம் ஒன்றும் பெற்றிலோமென்று மறுத்தல், பேதைமையே–அறியாமையேயாம். அதனை–அவர் ஏவிய காரியத்தை, எவ்வம் இலராகி–துன்பம் இலராகி, செய்க–செய்க. அது–அது, செய்க என்றான்–ஒரு காரியத்தைச் செய்க என்றவன்; உண்க என்னும் ஆறு அன்றே–உண்க என்னுமா றன்றே.

(க-து). ஒரு வேலையைச் செய்யென்றவன், வேலையைச் செய்த பின், உண்ணென்பான். ஆதலால், அரசனிடம் ஏவல் செய்வோர் ஒரு நன்மையும் பெற்றிலோமே என்று வெறுமல் செய்க.

268. அரசன் ஏவியதைத் தமர் செய்யாமை தவறு

எமரிது செய்க எமக்கென்று வேந்தன்
தமரைத் தலைவைத்த காலைத்—தமரவற்கு
வேலின்வா யாயினும் வீழார் மறுத்துரைப்பின்,
ஆலென்னிற் பூலென்னு மாறு. 31

(ப-பொ). "நீர் எமராகலான் எமக்கு இக்காரியத்தைச் செய்து தரவேண்டும்" என்று வேந்தன் தமரைத் தலைவைத்து அக்காரியத்தினிடத்தே ஏவிய காலை, அவ் ஏவப்பட்ட தமர்கள் அவ்வேந்தற்காக வேலின்கண்ணாயினும் இறவாது "எமக்கு இயலாது" என்று மறுத்துரைப்பின், ஒருவன் ஆலமரத்தை ஆலமரமென்று சொல்லின் மற்றொருவன் பூலாமரம் என்றதனோ டொக்கும்.

(ப-ரை). எமர் எமக்கு இது செய்க என்று–நீர் உறவின ராதலால் எமக்கு இக்காரியத்தைச் செய்துதரவேண்டு மென்று, வேந்தன்–அரசன், தமரை தலைவைத்த காலை – உறவினரை அக்காரியத்தினிடத்தே ஏவிய காலை, தமர்–ஏவப்பட்ட அந்த உறவினர், வேலின் வாய் ஆயினும் வீழார்–அவ்வரசனுக்காக வேலின் வாயின்கண்ணாயினும் இறவாது, மறுத்து உரைப்பின்–எம்மால் முடியாதென்று மறுத்துரைப்பின், (அது), ஆல் என்னில்–ஒருவன் ஆலமரத்தை ஆலமர

மென்று சொன்னால், பூல் என்னும் ஆறு—மற்றொருவன் பூலாமரம் என்றதனோ டொக்கும்.

(க—து). அரசன் ஏவியதைச் செய்யாது மறுத்துரைக்கின்ற உறவினர் ஆலென்னில் பூலென்பாரை ஒப்பர்.

ஒருவன் தன் ஏவலாளை அழைத்து, "ஆலம்விழுது அறுத்துவா. அதோ இருக்கிறது ஆலமரம்" என்றான். ஏவலாள் "பல்விளக்கப் பூலம் வளார் நல்லது. இதோ இருக்கிறது" என்றான். ஒன்று சொன்னால் மற்றொன்று சொல்லும் ஏவலாளைச் சுட்டி இவ்வைதிகமே "ஆலே பூலே என்று அலப்பிக்கொண்டிருக்கிறது" எனப் பழமொழியாக வழங்கலுற்றது.

269. அரச ருவப்பன செய்பவர் அரிய பொருள் பெறுவர்

விடலைமை செய்து வெருண்டகன்று நில்லா
துடலரு மன்னர் உவப்ப வொழுகின்,
மடலணி பெண்ணை மலிதிரைச் சேர்ப்ப!
கடல்படா வெல்லாம் படும். 225

(ப—பொ). பிறரால் உடற்றுதற்கரிய அறிவினையுடைய மன்னர் விடலமையச் செய்தாரென்று வெருவி அகன்று செல்ல நில்லாதே பின்னும் அவர் உவப்பனவே செய்தொழுகுவாராகில், மடலுடைய பெண்ணைகள் மலிந்த திரைச் சேர்ப்பனே! அவ்வாறு ஒழுகினவர்க்குக் கடலிலுண்டாகாதன வெல்லாம் உண்டாம்.

(ப—ரை). மடல் அணி பெண்ணை மலி திரை சேர்ப்ப—மடலுடைய பனைமரங்கள் மலிந்த திரைச்சேர்ப்பனே! உடல் அரு மன்னர்—பிறரால் வருத்தமுடியாத அறிவினையுடைய அரசர், விடலமை செய்து—விடலமை(யச்) செய்தாரென்று, வெருண்டு—அஞ்சி, அகன்றுநில்லாது—விட்டு நீங்காமல், உவப்ப ஒழுகின்—பின்னும் அவர் உவப்பனவே செய்தொழுகுவாராகில், (அங்ஙனம் ஒழுகினவருக்கு), கடல்படா எல்லாம்—கடலில் உண்டாகாதனவெல்லாம், படும்—உண்டாம்.

விடலமைய—விடுதல் அமைய—விட்டுநீங்குதல் பொருந்த. கடல்படா எல்லாம் என்றது பல அரிய பொருள்களை.

(க-து). பராக்கிரமமுள்ள அரசனைவிட்டு நீங்காமல் அவருக்கு உவப்பானவற்றைச் செய்வார்க்கு அரிய பொருள்கள் கிடைக்கும்.

270. கரும முடித்தவன்மேல் முடித்த புகழ் நிற்கும்

உவப்ப உடன்படுத்தற் கேய கருமம்
அவற்றவற் றுந்துணைய வாகிப் பயத்தால்
வினைமுதிரின் செய்தான்மே லேறும். பனைமுதிரின்
தாய்தாண்மேல் வீழ்ந்து விடும். 327

(ப-பொ). அரசன் தான் உவக்கும்படி செய்துமுடித்தற்கு ஒருவனை ஏவிய காரியங்கள், அந்தவந்த கருமங்களின் அளவாகிய பயனோடுங்கூடி அவ்வினையை முடித்த பயனாலே செய்து முடியில், அவ்வினை செய்தான்மேல் நிற்கும். அஃது, பனையினது பழம் முற்றின் தாயது தாண் மேலே வீழ்ந்துவிடுமாறுபோல.

(ப-ரை). பனை முதிரின்-பனையினது பழம் முற்றின், தாய் தாள் மேல்-தாய்ப்பனையது தாளின்மேலே, வீழ்ந்துவிடும்-விழும். (அங்ஙனமே), உவப்ப உடன்படுத்தற்கு ஏய கருமம் – அரசன் தானுவக்கும் படி செய்துமுடித்தற்கு ஒருவனை ஏவிய காரியங்கள், அவற்றவற் றுந் துணைய பயத்தால் ஆகி-அந்த அந்தக் காரியங்களின் அளவாகிய பயனோடும் கூடி, வினை முதிரின்-அவ்வினை செய்துமுடியில், செய்தான் மேல் ஏறும்-அவ்வினை செய்தான்மேல் நிற்கும்.

(க-து). அரசன் ஏவிய கருமங்கள் பயன்பட முடிந்தால், முடித்த புகழ் முதலியன முடித்தவன்மேல் நிற்கும்.

பழமொழி.—மரத்துப் பழம் மரத்தடியிலே விழும்.

271. பேரரசரை யடைந்தவர் பிறரை யஞ்சார்

செருக்கெழு மன்னர் திறலுடையார்ச் சேர்ந்தார்
ஒருத்தரை யஞ்சி உலைதலும் உண்டோ?
உருத்த சுணங்கின் ஒளியிழாய்! கூரி
தெருத்து வலியதன் கொம்பு.

(ப—பொ). திறலுடைய செருமேவியிருந்த மன்னவரை அடைந்தவர்கள் பிறரொருவரை அஞ்சித்தளர்தலும் உண்டோ? தோன்றிய சுணங்கினையுடைய ஒளியிழாய்! வலிய எருத்தின் கொம்பு கூரிதாகலான்.

எருத்து வலியதன் கொம்பு என்பதனைப் பிடர் வலிய தன் கொம்பு என்பாருமுளர்.

(ப—ரை). உருத்த சுணங்கின் ஒளியிழாய்—தோன்றிய சுணங்கினையுடைய ஒளியிழாய்! வலிய எருத்துதன் கொம்பு கூரிது—வலிய எருத்தின் கொம்பு கூரிது. (ஆதலால்), திறல் உடையார் செருகெழு மன்னர் சேர்ந்தார்—வலியுள்ள போர்மேவியிருந்த அரசரை அடைந்தவர்கள், ஒருத்தரை அஞ்சி—பிறரொருவருக்கு அஞ்சி, உலைதலும்—தளர்தலும், உண்டோ—உண்டோ.

(க—து). எருது வலிதாயிருந்தால் அதன் கொம்பு கூரிதாயிருக்கும். அரசர் பராக்கிரமமுள்ளவராயிருந்தால் அவரை யடைந்தவர் பிறருக்குத் தளராத பராக்கிரமமுள்ளவரா யிருப்பர்.

272. மன்னன் மதித்தவனை மாந்தரும் மதிப்பர்

வேந்தன் மதித்துவப்பப் பட்டாரைக் கொண்டேனை
மாந்தரும் ஆங்கே மதித்துணர்வர்.—ஆய்ந்த
நலமென் கதுப்பினுய்! நாடினெய் பெய்த
கலனேநெய் பெய்து விடும். 397

(ப—பொ). வேந்தனால் நன்குமதித்து நன்றென்னப்பட்டவரை விரும்பிக்கொண்டு மற்றுள்ள மாந்தரும் அவனைப் போல நன்குமதித்துணரப்படுவார். ஆராயப்பட்ட நல்ல மெல்லிய கூந்தலையுடையாய்! விசாரிக்கில் நெய்யிட்ட கலமே நெய்யிட்டு வருமாறுபோல.

(ப—ரை). ஆய்ந்த ந(ல்)ல மென் கதுப்பினுய்-ஆராய்ந்த நல்ல மெல்லிய கூந்தலையுடையாய்! நாடின்—விசாரிக்கில், நெய் பெய்த கலனே—நெய்யிட்ட கலமே, நெய் பெய்துவிடும்—நெய்யிட்டு வரும். (அது

போல), வேந்தன் மதித்து உவப்பப்பட்டாரை—வேந்தனுல் நன்கு மதித்து நன்றெனப்பட்டவரை, கொண்டு—விரும்பிக்கொண்டு, ஏனை மாந்தரும்—மற்றுள்ள மாந்தரும், ஆங்கே—அவனைப்போல, மதித்து உணர்வர்—நன்குமதித் துணர்வர்.

(க—து). முன்னே செய்யிட்டு வந்த கலமே பின்னும் செய்யிடுதற் கேற்றதாக மதிக்கப்படும். முன்னே அரசன் நன்கு மதித்தவனையே பின்னும் மற்றவர்கள் நன்குமதிப்பர்.

273. அரசனை யடைந்தவர் ஒன்றும் வேண்டாமை

ஆண்டகை மன்னரைச் சார்ந்தார்தாம் அல்லுறினும்
ஆண்டொன்று வேண்டுது மென்ப துரையற்க.
பூண்டாங்கு மார்ப! பொருடக்கார் வேண்டாமை
வேண்டிய தெல்லாந் தரும். 178

(ப—பொ). ஆண்டகைமையை யுடைய அரசரைச் சேர்ந்தொழுகுவார், தாம் வறுமையால் அல்லல் உற்றாராயினும், அவர்மாட் டொன்றனை வேண்டுவோ மென்பதனை மனத்தால் நினையாதொழிக; பூண் தாங்கு மார்பனே! பிறரால் மதிக்கப்படுவார் ஒன்றனை வேண்டா தொழுகுதல், தாந்தாம் வேண்டிய பொருளெல்லாவற்றையும் தரும் ஆதலான்.

(ப—ரை). பூண் தங்கு மார்ப—அணிகலன்களைத் தரித்த மார்பனே! ஆண்டகை மன்னரைச் சார்ந்தார்—ஆண்டகைமையையுடைய அரசரைச் சேர்ந்தொழுகுவார், தாம் அல் உறினும்—தாம் வறுமையால் அல்லலுற்றாராயினும், ஆண்டு—அவர் மாட்டு, ஒன்று வேண்டுதும் என்பது—ஒன்றனை வேண்டுவோம் என்பதனை, உரையற்க—சொல்லற்க. பொருள் தக்கார்—பிறரால் மதிக்கப்படுவார், வேண்டாமை—ஒன்றனை வேண்டா தொழுகுதல், வேண்டியது எல்லாம் தரும்—தாம் வேண்டிய பொருளெல்லாவற்றையும் தரும்

(க—து). நன்குமதிக்கப்படுபவர் ஒன்று வேண்டுமென்று சொல்லா திருந்தாலும், அவர்க்கு வேண்டிய பொருள்களெல்லாம் வந்துசேரும். ஆதலால், அரசரைச் சேர்ந்தொழுகுவோர் வறுமையால் வருந்தினும் இன்னது வேண்டுமென்று அரசரிடம் சொல்லவேண்டா.

274. சேவகரால் காரியங்கோள்வது செவ்விதன்று

காவலனை ஆக வழிபட்டார் மற்றவ
னேவல் வினைசெய் திருந்தார்க் குதவடுத்தல்,
ஆமணைய நின்றதன் கன்று முலையிருப்பத்
தாயணல் தான்சுவைத் தற்று. 20

(ப—பொ). அரசனைத் தமக்கு நட்பாம் வகை வழி பட்டொழுகினார், மற்றவ்வரசனால் ஏவப்பட்ட வினை செய்திருந்த பிறர்க்கு உதவியை அடுத்து மற்றவரால் காரியங்கோடல், தன்னை அணையாநின்ற ஆவினை அதன் கன்று முலையைத் தவிரத் தாயணலைச் சுவைத்தாற் போல்வதொன்று.

(ப—வி). காவலனை—அரசனை, ஆக—தமக்கு நட்பாம் வகை, வழிபட்டார்—வழிபட்டொழுகினார், அவன் ஏவல் வினை செய்திருந் தார்க்கு—அவனால் ஏவப்பட்ட வேலை செய்திருந்த பிறருக்கு, உதவு அடுத்தல்—உதவியை அடுத்து அவரால் காரியங்கோடல், அணையநின்ற ஆ—தன்னை அணையநின்ற பசுவினை, தன் கன்றுதான்—அதன் கன்று, தாய் முலை இருப்ப—தாயின் மடி இருக்க (அதனைத் தவிர்த்து), அணல்—தாயின் அணலை, சுவைத்தற்று—சுவைத்ததுபோலாம். [மற்று—அசை]. அணல்—கீழ்வாய், மிடறு.

(க—து). அரசனுக்கு நட்பானவர் அவனால் காரியங் கொள்ளாது அவனுடைய சேவகரால் காரியங் கொள்வது, கன்றானது தாய்ப் பசு வின் மடியைச் சுவைக்காமல் அதன் அணலைச் சுவைப்பது போலும்.

275. காலமறிந்து சொல்வோர்க்குக் கருமம் முடிதல்

சிறப்புடை மன்னவரைச் செவ்வியி னோக்கித்
திறத்தின் உரைப்பார்க்கொன் றாகாத தில்லை.
விறற்புகழ் மன்னர்க் குயிரன்ன ரேனும்
புறத்தமைச்சின் நன்றகத்துக் கூன். 295

(ப—பொ). சிறப்புடைத்தாகிய மன்னவரைச் செவ்வி யுள்ள காலம் அறிந்து நோக்கி நெறிப்பட உரைப்பார்க்கு

ஒரு கருமம் முடியாததில்லை. மிக்க புகழையுடைய மன்னர்க்கு உயிர்போல்வரே யாயினும், அமைச்சர் புறத்தே ஒழுகலான், அவ்வமைச்சரின் கோயிலுள்ளே வாழும் கூடனே நன்று.

(ப—ரை). சிறப்புடை மன்னவரை—சிறப்புடைய அரசரை, செவ்வியின் நோக்கி—செவ்வியுள்ள காலமறிந்து நோக்கி, திறத்தின் உரைப்பார்க்கு—திறப்பட உரைப்பார்க்கு, ஆகாதது ஒன்று இல்லை—முடியாத கருமம் ஒன்று மில்லை. விறல் புகழ்—மிக்க புகழையுடைய, மன்னர்க்கு—அரசருக்கு, உயிர் அன்னரேனும்—உயிர் போல்பவரே யாயினும், புறத்த அமைச்சின்—கோயிலின் புறத்தே ஒழுகும் அமைச்சரைக் காட்டிலும், அகத்த கூன் நன்று—கோயிலினுள்ளே வாழும் கூனே நன்று.

(க—து). அரசரிடம் சமயமறிந்து சொல்வோர்க்கு முடியாத காரியம் இல்லை. அரமனையிலே வாழும் கூனர்க்கு அவ்வித சமயம் வாய்ப்பது எளிது; புறத்தே ஒழுகும் அமைச்சர்க்கு அது அரிது. இவர்க்கு முடியாத கருமமும் அவர்க்கு எளிதில் முடியும்.

பழமொழி.—The servant of a king is a king.

276. மன்னர் விரும்புவதைத் தாமும் விரும்பற்க

இடுகுடைத்தேர் மன்னர் எமக்கமைய மென்று
கடிதவர் தாம் காதலிப்ப தாம்காதல் கொண்டு
முடிய எனைத்தும் உணரா முயறல்,
கடிய கனைத்து விடல். 309

(ப—பொ). இடப்படும் தவளக் குடையை யுடைய தேர் மன்னர் எமக்கு இது பொருந்துமென்று மிகவும் அவர் தாம் விரும்பின பொருளைத் தாமும் விருப்பங் கொண்டு தமக்கு அப்பொருள் முடியும்படி ஆராயாது எத்தனையும் முயறல், கடிய புலி முதலாயினவற்றைத் தம்மாட்டு வருதற்கு அழைத்ததனோ டொக்கும்.

(ப—ரை). இடு குடை தேர் மன்னர்—இடப்படும் தவளக்குடையையுடைய தேர் மன்னர், எமக்கு அமையுமென்று—எமக்கு இது

தக்கதென்று, அவர் தாம் கடிது காதலிப்ப(து)—அவர் தாம் மிகவும் விரும்பின பொருளை, தாம்—தாமும், காதல் கொண்டு — விரும்பி, எனைத்தும் உணரா(து)—எவ்வளவும் ஆராயாது, முடிய முயறல்—தமக்கு அப்பொருள் முடியும்படி முயற்சிசெய்தலானது, கடியன—கடிய புலி முதலாயினவற்றை, கனைத்துவிடல் — தம்மிடம் வர அழைத்ததனோ டொக்கும்.

"மன்னர் விழைப விழையாமை மன்னரால்
மன்னிய ஆக்கந் தரும்."—திருக்குறள்.

"பெரியா ருவப்பன தாமுவவார்." — ஆசாரக்கோவை.

277. அரசன் சீர்கெட்டவிடத்தும் அவனை இகழார்

சீர்த்தகு மன்னர் சிறந்தனைத்துங் கெட்டாலும்
நேர்த்துரைத் தெள்ளார் நிலைநோக்கிச்—சீர்த்த
கிளையின்றிப் போஒய்த் தனித்தாயக் கண்ணும்
இளைதென்று பாம்பிகழ்வா ரில். 383

(பு—பொ). சீர்மைதக்க மன்னவர் எல்லாங் கெட்டவிடத்தும், அந்நிலையை நோக்கி அவரோடு மாறுபட்டுரைத்து இகழார்: மிக்க கிளையின்றிப் போய் ஒன்றியானவிடத்தும், இளையதென்று பாம்பினை இகழ்ந்திருப்பார் இல்லை, அதுபோல.

(ப—ரை). சீர்த்த கிளை இன்றி போய் தனித்து ஆயக்கண்ணும்—மிக்க சுற்றம் இல்லாதொழிந்து ஒன்றியானவிடத்தும், பாம்பு—பாம்பினை, இளைதென்று—சிறிய தென்று, இகழ்வார்—(எச்சரிக்கையின்றி) இகழ்ந்திருப்பவர், இல்—இல்லை, (அதுபோல), சீர் தகு மன்னர்—சீர்மை தக்க அரசர், சிறந்த அனைத்தும் கெட்டாலும்—சீர்மையெல்லாம் கெட்டவிடத்தும், நிலைநோக்கி—அந்நிலையை நோக்கி, நேர்த்து உரைத்து—அவரோடு மாறுபட் டுரைத்து, எள்ளார்—இகழார்.

(க—து). பாம்பு சிறியதென்று இகழ்ந்து எவரும் எச்சரிக்கையில்லாம லிரார். அரசன் சீர்கெட்டிருக்கிறு னென்று இகழ்ந்து எவரும் மாறுபட்டுரையார்.

"இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும்."—திருக்குறள்.

"அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும்
முழையுறை சீயமும் என்றிவை நான்கும்
இளைய வெளிய பயின்றனவென் றெண்ணி
இகழின் இழுக்கந் தரும்."—ஆசாரக்கோவை.

278. அரசர் இருவரிடையில் புகுந்தவன் தீமையடைவான்

செருக்குடைய மன்ன ரிடைப்புக் கவருள்
ஒருத்தற் குதவாத சொல்லின் தனக்குத்
திருத்தலு மாகாது தீதாம். அதுவே
எருத்திடை வைக்கோல் தினல். 187

(ப-பொ). களிப்புடைய மன்ன ரிருவரிடையே ஒருவன் புக்கு அவருள் ஒருத்தற்குப் பயன்படாத சொற்களைச் சொல்லுதலான் அவர்களிருவரும் வேறுபட்டுண்பவரைத் தன்னால் திருத்தலு மாகாதே தீதாய் விளையும். இரண்டேற்றின் நடுவே இட்ட வைக்கோலை ஒருழப்பெருது புக்குத் தின்னலுற்றால் அவ்விரண்டாலும் துன்பமுற்றுத் தின்னவும் பெறுது: அதுபோலாம்.

(ப-ரை). செருக்குடை மன்னர் இடை புக்கு-களிப்புடைய அரசர் இருவரிடையே ஒருவன் புகுந்து, அவருள் ஒருத்தற்கு உதவாத சொல்லின்-அவருள் ஒருவனுக்கு ஆகாத சொற்களைச் சொன்னால், (அவர்கள் இருவரும் வேறுபட் டுண்டான விரோதத்தை), தனக்கு திருத்தலும் ஆகாது-தன்னால் திருத்தலும் ஆகாமல், தீது ஆம்-தனக்குத் தீமையாய் விளையும். அது எருத்திடை வைக்கோல் தினல்-அது இரண்டெருதின் நடுவே யிட்ட வைக்கோலை ஓர் உழப்பெருது புகுந்து தின்னலுற்றால் அவ்விரண்டாலும் துன்பமுற்றுத் தின்னவும் பெறாதது போலும். [ஏ-அசை].

(க—து). இரண்டெருதுகளின் இடையில் வைக்கோல் தின்னப் புகுந்த வேறேரெருது வைக்கோலும் தின்னப்பெருது அவ்விரண்டா லும் துன்ப மடையும். அதுபோலவே, பேராச ரிடையில் புகுந்தா ெருவன் ஓரரசனிடம் உதவாத வார்த்தை சொல்லின், அவ்விருவர்க் கும் விரோத முண்டாக, அதனையும் திருத்தமுடியாமல் அவ்விருவரா லும் அவன் தீமையடைவான்.

279. அரசனிடம் கவர்ந்த பொருளால் அவனை வசப்படுத்தல்

பன்னாள் தொழில்செய் துடைய கவர்ந்துண்டார்,
இன்னமை செய்யாமை வேண்டி இறைவர்க்குப்
பொன்யாத்துக் கொண்டு புகுதல், குவளையைத்
தன்னரால் யாத்து விடல். 365

(ப—பொ). அரசர்க்குப் பலநாளும் காரியஞ்செய்து அவருடைய பொருளை விரும்பி நுகர்ந்தவர், அவ்வரசர் தம்மைப் பின்னைப் பொல்லாங்கு செய்யாமையைக் கரு தித் தம்மாட் டுண்டாகிய பொருளைச் சேரக் கட்டிக் கொண்டுபோய்க் கொடுத்தல், செங்கழுநீரை அதன் நாராலே தொடுப்பதனே டொக்கும்.

(ப—ரை). இறைவர்க்கு பல் நாள் தொழில்செய்து—அரசர்க்குப் பலநாளும் காரியஞ்செய்து, உடைய—அவருடைய பொருள்களை, கவர்ந்து உண்டார்—விரும்பி உண்டவர், இன்னமை செய்யாமை வேண்டி—அவ்வரசர் பின்பு பொல்லாங்கு செய்யாமையைக் கருதி, பொன்—தம்மிடத்துண்டாகிய பொருளை, யாத்துக்கொண்டு—சேரக் கட் டிக்கொண்டு, புகுதல்—போய்க்கொடுத்தல், குவளையை—செங்கழுநீர் மலரை, தன் நாரால்—அதன் நாரால‍ே, யாத்துவிடல்—தொடுப்பதனே டொக்கும்.

(க—து). பறித்த குவளைமலரை அதன் தண்டிலுள்ள நாரைக் கொண்டே மாலையாகத் தொடுப்பர். அங்ஙனமே சிலர் அரசனிடம் தொழில்செய்து கவர்ந்த பொருளையே அவனுக்குக் கொடுத்து அவனை வசப்படுத்திக்கொள்வர்.

280. தம்மை யாக்கிய அரசனை வஞ்சித்துக் கொன்றவர்
மெய்ம்மையே நின்று மிக்நோக்கப் பட்டவர்
கைம்மேலே நின்று கறுப்பன செய்தொழுகிப் [ப்பர்
பொய்ம்மேலே கொண்டவ் விறைவற்கொன் றார்குறை
தம்மேலே வீழப் பனை. 201

(ப—பொ). தம்மைத் தெளிதற்கண்ணே நின்று மிகுதி யை யுடையராக நோக்கி அரசனால் சிறப்புச்செய்யப் பட்டவர், தமக்காம் திறத்தின்மேலே நின்று தம்மை யாக்கின அரசன் வெகுள்வனவற்றைச் செய்தொழுகி, வஞ்சனை மேற்கொண்டு அவ்வரசனைக் கொன்றவர்கள், பனை தம்மேலே வீழும்படி குறைத்தாரோ டொப்பர்.

(ப—ரை). மெய்ம்மையே நின்று – தெளிதற்கண்ணே நின்று, மிக நோக்கப்பட்டவர்–மிகுதியை உடையராக நோக்கி அரசனால் சிறப்புச் செய்யப்பட்டவர், கைமேலே நின்று–தமக்காம் திறத்தின் மேலே நின்று, கறுப்பன செய்தொழுகி–(தம்மை உயர்வாக்கிய) அர சன் கோபிப்பனவற்றைச் செய்தொழுகி, பொய் மேலே கொண்டு– வஞ்சனையை மேற்கொண்டு, அ இறைவன் கொன்றார்–அவ்வரச னைக் கொன்றவர், பனை தம்மேலே வீழ குறைப்பர் – பனை தம்மேலே விழும்படி வெட்டினவரோ டொப்பர்.

(க—து). தம்மை உயர்வாக்கிய அரசனை வஞ்சித்துக் கொன்றவர் தமக்குத் தாமே கேடு விளைவித்துக்கொள்பவ ராவர்.

281. அரசன் கறுவு கொள்ளத்தக்கன செய்யார்
வெஞ்சின மன்னவன் வேண்டாத வேசெயினும்
நெஞ்சத்துட் கொள்வ சிறிதும் செயல்வேண்டா.
என்செய் தகப்பட்டக் கண்ணும் எழுப்புபவோ
துஞ்சு புலியைத் துயில்? 33

(ப—பொ). வெய்ய சினத்தையுடைய அரசன் தன்கீழ் வாழ்வாரைத் தகாதன செய்தானாயினும், அவன் மனத்

திற் கறுவுகொள்ளத்தக்கன சிறிதும் அவன்கீழ் வாழ் வார்க்குச் செய்யல் ஆகாது. எல்லாத் துன்பங்களையும் தமக்குச் செய்து அகப்பட்டக் கண்ணும் எழுப்புவரோ உறங்குகின்ற புலியைத் துயில்.

(ப—ரை). என் செய்து அகப்பட்டக்கண்ணும்—எல்லாத் துன்பங்களையும் தமக்குச் செய்து அகப்பட்ட விடத்தும், துஞ்சு புலியை—உறங்குகின்ற புலியை, துயில் எழுப்புபவேோ – துயிலெழுப்புவரோ? வெஞ்சினம் மன்னவன்—கொடிய கோபத்தையுடைய அரசன், வேண்டாதன செயினும்—தன்கீழ் வாழ்வாரைத் தகாதன செய்தானாயினும், நெஞ்சத்துள் கொள்வ-அவன் மனத்தில் கறுவுகொள்ளத் தக்கவற்றை, சிறிதும் செயல் வேண்டா—சிறிதும் (அவன் கீழ் வாழ் வார்) செய்ய லாகாது.

(க—து). தன்கீழ் வாழ்வார்க்கு அரசன் அடாதன செய்தாலும், அவன் கறுவுகொள்ளத் தக்கவைகளை அவர் செய்யாதொழிக.

பழமொழி.—தூங்குகிற புலியைத் தட்டி யெழுப்புவா னேன்?
Wake not a sleeping lion.

282. அரசனைக் கோபிப்பது உயிர்க்கிறுதியாகும்

தாமேயும் தம்மைப் புறந்தர வாற்றுதார்
வாமான்றேர் மன்னரைக் காய்வ தெவன்கொலோ?
ஆமா உகளும் அணிவரை வெற்ப!கேள்
ஏமரார் கோங்கேறி னார். 341

(ப—பொ). தம்மைத் தாமாகவும் பாதுகாத்துக் கொள்ள மாட்டாதார், வாவும் பரி பூண்ட தேரை யுடைய மன்னரை வெகுள்வது என்ன பயனை நோக்கி? தம் உயிர்க்கு இறுதியாகிய பயனை நோக்கிப் போலும். ஆமாப் பாயும் அழகிய மலைநாடனே! கேட்பாயாக. கோங்கு மரத்தை ஏறினார் தம்முயிர்க்குக் காவலிலாதவரதுபோலும்.

(ப—ரை). ஆமா – காட்டுப்பசு, உகளும் – பாயும், அணி – அழகிய, வரை வெற்ப—மலைநாடனே! கேள்—கேட்பாயாக. கோங்கு

ஏறினார் — கோங்கமரத்தை ஏறினார், ஏமரார் — தம்முயிர்க்குக் காவல் இல்லாதவர். தம்மை தாமேயும் புறந்தர ஆற்றாதார்—தம்மைத் தாமாக வும் பாதுகாத்துக்கொள்ள மாட்டாதார், வா(வு)ம் மான் தேர் மன்னரை— வாவிப்பாயும் குதிரை கட்டிய தேரையுடைய அரசரை, காய்வது— கோபிப்பது, எவன்—என்ன பயனை நோக்கி? (தம் உயிர்க்கு இறுதி யாகிய பயனை நோக்கிப் போலும்). [கொல்—ஓ—அசை].

ஏமரார்—ஏமம் மருவார் — (ஏமம்—காவல்) — காவல் பொருந்ாதவர், காவல் இல்லாதவர். திருக்குறளில் "ஏமரா மன்னன்" என வருகின்றது.

(க—து). கோங்கமரத்தில் ஏறுவது தீமையை உண்டாக்கும். தம் மைப் பாதுகாத்துக்கொள்ள மாட்டாதவர் அரசனைக் கோபிப்பது உயிர்க் கிறுதியை உண்டாக்கும்.

283. அரசன் பொறுத்தானென்று மேலும் பொறாதன செய்தல்

உறாஅ வகையது செய்தாரை வேந்தன்
பொறாஅன் போலப் பொறுத்தால்—பொறாஅமை
மேன்மேலும் செய்து விடுதல் அதுவன்றோ
கூன்மேல் எழுந்த குரு. 305

(ப—பொ). உறுதியில்லாத கருமத்தைச் செய்தாரை வேந்தன் புறத்தாற் பொறாதானைப் போல மனத்தால் பொறுத்தால், பின்னும் அவன் பொறாதன மேன்மேலும் செய்துவிடுத லதுவன்றோ கூனின் மேலே எழுந்த கழலை யோ டொப்பது.

(ப—ரை). உறா வகையது செய்தாரை—உறுதியில்லாத கருமத் தைச் செய்தாரை, வேந்தன்—அரசன், பொறான்போல பொறுத் தால்—வெளியில் பொறாதவனைப்போலக் காட்டி மனத்தால் பொறுத் தால், பொறாதவை—பின்னும் அவன் பொறாதனவற்றை, மேன்மே லும் செய்துவிடுதல்—மேன்மேலும் செய்தலாகிய அது, கூன்மேல் எழுந்த குரு அன்றோ—கூனின்மேல் எழுந்த கழலைக்கட்டியோ டொக்கும்.

(க–து). அரசன் ஒருமுறை பொறுத்தானென்று மேன்மேலும் பொருதலைகளைச் செய்வது கூனின்மேல் எழுந்த கழலைக்கட்டி போல் துன்பந்தருவதாம்.

284. குறளையைப் பொய்யென்று அரசனைத் தெருட்டல்

பொருளல்லார் கூறிய பொய்க்குறளை வேந்தன்
தெருளுந் திறந்தெரித லல்லால்.—வெருளவெழுந்
தாடு பவரோடே ஆடார் உணர்வுடையார்;
ஆடுபணைப் பொய்க்காலே போன்று. 147

(ப–பொ). ஒரு பொருளிற் கொள்ளப்படாதோர் சொல்லிய பொய்யாகிய குறளையைப் பொய்யென்று வேந்தன் தெளியுந் திறங்களை ஆராய்ந்து வேந்தனைத் தெருட்டுதலல்லால், குறளையைச் சொல்லப்பட்டவர்கள் வெருளும்படி அரசன் மருங்கே யிருந்த உணர்வுடையார், குறளைசொல்லி ஆடுகின்றவர்களுடனே தாமும் எழுந்து, ஆடு பணைப் பொய்க்காலே போன்று, ஆடார்.

(ப–ரை). பொருளல்லார்–ஒருபொருளாகக்கொள்ளப்படாதோர், கூறிய–சொல்லிய, பொய் குறளை–பொய்யாகிய குறளையை, வேந்தன் தெருளும் திறம்–(பொய்யென்று) அரசன் தெளியும் திறங்களை, தெரிதல் அல்லால் – ஆராய்ந்து அரசனைத் தெளிவித்தலல்லாமல், உணர்வுடையார் – (அரசனிட முள்ள) உணர்வுடையார், வெருள– குறளையைச் சொல்லப்பட்டவர் அஞ்சும்படி, ஆடுபவரோடு–குறளை சொல்லி ஆடுகின்றவர்களோடு, எழுந்து–தாமும் எழுந்து, ஆடு பணை பொய்க்காலே போன்று–மூங்கிலால் செய்த பொய்க்கால் ஆடுவது போன்று, ஆடார்–ஆடார்.

குறளையைச் சொல்லப்பட்டவர்–எவர்மேல் குறளை சொல்லப் பட்டதோ அவர்.

(க–து). பொய்க்கால் பொய்க்காலே; ஒருவன் மற்றொருவனைக் குறித்து அரசனிடம் சொன்ன பொய்யான குறளை பொய்யே; அது மெய்யாகாது. ஆகவே அரசனிடம் உள்ள உணர்வுடையார், குறளை சொன்னவனோடு தாமும் கூடிக்கொள்ளாமல், அரசன் உண்மையைத் தெளியும்படி செய்வர்.

## 4. பகைத்திறம்

285. தம்வலி யில்லார் புகழெய்தாமை

*வன்சார் புடைய ரெனினும் வலிபெய்து*
*தஞ்சார் பிலாதாரைத் தேசூன்ற லாகுமோ?*
*மஞ்சுசூழ் சோலை மலைநாட! யார்க்கானும்*
*அஞ்சுவார்க் கில்லை யரண்.* 254

(ப-பொ). வலியராயினுரைச் சார்பாக உடையாராயி னும் தம்வலி இல்லாதாரை வலியுண்டாக்குவித்துப் புக ழாக்கும் செயலின்கண்ணே ஊன்றுவிக்க ஒருவரால் முடியுமோ? முடியாது. அஃது ஏதென்னில், மேகம் தங்கும் சோலையையுடைய மலைநாடனே! யாவர்க்காயி னும் அஞ்சுவார்க்கு ஓர் அரண் இல்லை.

(ப-ரை). மஞ்சு சூழ் சோலை மலைநாட—மேகம்தங்கும் சோலையை யுடைய மலைநாடனே! வன்சார்பு உடையர் எனினும்—வலியாரைச் சார்பாக உடையவராயினும், தம் சார்பு இலாதாரை—தம்வலி இல்லா தாரை, வலி பெய்து — வலி உண்டாக்குவித்து, தேசு ஊன்றல் ஆகுமோ—புகழை உண்டாக்கும் செயலின்கண்ணே ஊன்றுவிக்க ஒருவரால் முடியுமோ? யார்க்கானும்—யாவர்க்காயினும், அஞ்சுவார்க்கு அரண் இல்லை—அஞ்சுவோர்க்கு ஓர் அரண் இல்லை.

(க-து). தம்வலி யில்லார்க்குத் துணைவலியால் மாத்திரமே நிலைத்த புகழ் உண்டாகாது.

"அச்ச முடையார்க் கரணில்லை" என்பது திருக்குறள்.

பழமொழி.—தம் பலங்கொண்டு அம்பல மேறவேண்டும். Self do, self have.

286. உண்டான போதே பகையைக் களைதல்

*எதிர்த்த பகையை இளைதாய போழ்தே*
*கதித்துக் களையின் முதிராதே. தீர்த்து*
*நனிநயப்பச் செய்தவர் நண்பெல்லாந் தீரத்*
*தனிமரம் காடாத லில்.* 390

(ப—பொ). தம்மோடு மாறுபட்டுத் தோன்றிய பகையை அந்தப் பகையினது தோற்றத்தே மிக்குக் களைந்தால் அந்தப் பகை முதிராது: அது களையுமிடத்து மற்றவருடைய நண்பினரையெல்லாம் தம்மொடு நயப்பச் செய்து பிரிக்கப் பிரித்தால், தனியே ஒருமரம் நின்று காடாவதில்லை, அதுபோல.

(ப—ரை). எதிர்த்த பகையை—தம்மொடு மாறுபட்டுத் தோன்றிய பகையை, இளைதாய போழ்தே—அது உண்டான போதே, கதித்து களையின்—விரைந்து களைந்துவிட்டால், முதிராது — அது முதிராது. அவர் நண்பெல்லாம் — அவருடைய நண்பினரையெல்லாம், நனி நயப்ப செய்து—தம்மொடு நயப்பச் செய்து, தீரத் தீர்த்து—பிரிக்கப் பிரித்தால், தனிமரம் காடு ஆதல் இல் — தனியே ஒரு மரம் நின்று காடாவதில்லை. [அதுபோல் அவர் தான் அஞ்சத்தக்க பகைவராகார்].

(க—து). பகை உண்டான போதே அதை முதலறக் களைதல் வேண்டும்: பகைவருக்கு நட்பாய் உதவிசெய்வாரை அவரினின்றும் பிரித்துத் தனக்குரியராகச் செய்துகொள்ளல் வேண்டும். இங்ஙனம் செய்தால் தனியாகிய அப்பகைவர் தான் அஞ்சத்தக்க பகைவ ராகார்.

"இளைதாக முண்மரங் கொல்க: களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து."—திருக்குறள்.

பழமொழி.—ஒருவனும் பிறப்பா, ஒன்றிமரம் தோப்பா. ஒரு பிள்ளையும் பிள்ளையல்ல, ஒரு மரமும் தோப்பல்ல. One and none is all one.

287. நலிந்த பகைவரை உடனே நலிதல்

முன்னலிந் தாற்ற முரண்கொண் டெழுந்தோரைப்
பின்னலிது மென்றிருத்தல் பேதைமையே.—மின்னின்று
காம்பன்ன தோளி! கலத்திற் கடித்தோடும்
பாம்பின்பல் கொள்வாரோ இல். 148

(ப—பொ). முரண்கொண் டெழுந்து முந்துறத் தம்மை நலிந்தாரைப் பொறுத்தே தாமும் நலிவேமென்று கருதியுரைத்தல் அறிவின்மையே யாம். மூங்கிலன்ன

தோள்களையுடையாய்! கடித்தோடும் பாம்பினைப் பின்னேடிச் சென்று பல்லினைப் பறித்துக்கொள்வார் இல்லை, ஆதலான்.

(ப—ரை). மின் நின்று — மின்னல்போல் காந்தி நிலைபெற்று, காம்பு அன்ன தோளி—மூங்கில் போன்ற தோள்களையுடையாய்! கலத்தின் — கலத்தினின்றும், கடித்து — ஒருவரைக் கடித்துவிட்டு, ஓடும்—ஓடும், பாம்பின்பல் — பாம்பின் பல்லை, கொள்வார் — பிடுங்குவார், இல்—இல்லை. ஆற்ற முரண் கொண்டு—மிகவும் மாறுபாடு கொண்டு, முன் நலிந்தோரை—முந்துறத் தம்மை நலிந்தவரை, பின்—பின்பு, நலிதும் என்று—நலிவோமென்று, இருத்தல்—கருதியிருத்தல், பேதைமையே—அறியாமையே யாம்.

(க—து). கடிப்பதற்கு முன்னே பாம்பின் பல்லைப் பிடுங்கிவிட வேண்டும் தம்மை நலிவதற்கு முன்னே பகைவரை நலிதல் வேண்டும்.

288. பகைவரை வேரறுத்தல்

நிரம்ப நிரையத்தைக் கண்டாநிரையம்
வரம்பில் பெரியானும் புக்கான்.—இரங்கார்,
கொடியார மார்ப! குடிகெட வந்தால்,
அடிகெட மன்றி விடல். 103

(ப—பொ). தான் பொய்யுரைத்தால் புகும் நிரயத்தை அறிந்தும் அந்நிரயம புகுதற்கே அமைந்த தொரு பொய் உரைத்துக் குணத்தால் வரம்பில் பெரியானாகிய தருமனும் தான் காணக்கடவதல்லாத நரகம் புக்கான். ஆதலால், முத்துத் தனிவடத்தையுடைய மார்பனே! தாம் பிறந்த குடிகெடுவ தொருகாலம் வந்தால், அது கெடாதவகை, தம் பகைவர்க்கு இரங்காதே அவர் வேரறத் தண்டம் செய்துவிடுக.

(ப—ரை). ஆரம் கொடி மார்ப—முத்துத் தனிவடத்தையுடைய மார்பனே! வரம்பு இல் பெரியானும்—குணத்தால் அளவில்லாத பெரியானாகிய தருமனும், நிரயத்தை—(பொய் உரைத்தால் புகும்) நரகத்தை, நிரம்ப கண்டு—நன்றாக அறிந்திருந்தும், அ நிரயம் புகுந்தான்—(ஒரு பொய் உரைத்து) அந்த நரகத்தில் புகுந்தான். (ஆதலால்), குடி கெட வந்தால்—தாம் பிறந்த குடி கெடுவதொரு காலம் வந்தால் (அது

கெடாத வகை), இரங்கார்—பகைவர்க் கிரங்காமல், அடிகெட—அவர் வேரற, மன்றிவிடல்—தண்டஞ்செய்துவிடுக.

தருமன் உரைத்த பொய்யாவது, துரோணன் இறக்குமாறு கண்ணன் செய்த சூழ்ச்சியால், "அச்வத்தாமோ ஹத: குஞ்சர:" என்று கூறியது.

(க—து). பாரத யுத்தத்தில் வெற்றி பெறும்பொருட்டுத் தான் உரைத்த பொய்யினிமித்தம் தருமபுத்திரனும் நரகில் புகுந்தான். ஆதலின், பகைவரால் தன் குடிக்குத் துன்பம் வருவதாயின், அவர்கள் நிர்மூலமாகும்படி இரக்கமின்றித் தண்டம் செய்துவிடுக.

289. பகைவர் ஒட்டாமை

தமரல் லவரைத் தலையளித்தக் கண்ணும்
அமராக் குறிப்பவர்க் காகாதே தோன்றும்.
சுவர்நிலஞ் செய்தமையக் கூட்டியக் கண்ணும்
உவர்நிலம் உட்கொதிக்கு மாறு. 141

(ப—பொ). தமக்கு உறவல்லாத பகைவரைத் தாம் தலையளித்தாலும் அத்தலையளிப்பு ஆகாதே விரும்பாத குறிப்பாய்ப் பகைவர்க்குத் தோன்றும். சுவர்நிலமாகச் செய்து நிரம்பச் செறியக் கூட்டினவிடத்தும் அவ்வுவர் மண் உட்கொதித்து உதிருமாறு போலும் அது.

(ப—ரை). சுவர்நிலம் செய்து அமையக் கூட்டியக்கண்ணும்—சுவர் மண்ணைச் செய்து நிரம்பச் செறியும்படி கூட்டினவிடத்தும், உவர் நிலம்—உவர்மண், உட்கொதிக்கும் ஆறு—உட்கொதித்து உதிருமாறு போல, தமர் அல்லவரை—உறவல்லாத பகைவரை, தலையளித்தக் கண்ணும் — தாம் காத்தாலும், ஆகாதே — அத்தலையளிப்பு ஆகாதே, அமரா குறிப்பு தோன்றும்—விரும்பாத குறிப்பாகப் பகைவர்க்குத் தோன்றும்.

(க—து). உவர்மண்ணைச் சுவர்மண்ணாகப் பிசைந்துவைத்தாலும் அது ஒட்டியிராமல் உதிரும். பகைவரைக் காத்துப் போற்றினாலும் அவர் நட்பினராக ஒட்டியிராமல் வேறுபடுவர்.

"இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்."—திருக்குறள்.

290. பகைவரை வசப்படுத்த லாகாமை

முகம்புறத்துக் கண்டால் பொறுக்கலா தாரை
அகம்புகுது மென்றிரக்கும் ஆசை, இருங்கடத்துத்
தக்க நெறியிடைப் பின்னும் செலப்பெறார்
ஒக்கலை வேண்டி அழல். 46

(ப-பொ). தம்முகத்தைப் புறத்துக் கண்டாலும் பொறுக்கிலாதாரை எம்மனையின் கண்ணே புகுதுமின் என்று அவரை இரந்துரைக்கும் ஆசை, பெரிய சுரத்தின்கண் பின்செல்ல எளிதாம் வழியின்கண் தம்பின் செல்லப்பெறாத புதல்வர் அவருடைய மருங்கிலே ஏறிப் போக வேண்டி அழுதலோ டொக்கும்.

(ப-ரை). முகம் புறத்து கண்டால் பொறுக்கலாதாரை—தம் முகத்தைப் புறத்துக் கண்டாலும் பொறுக்காதவரை, அகம் புகுதும் என்று இரக்கும் ஆசை—எம்மனையின் கண்ணே இன்று வாரும் என்று அவரை வேண்டிக்கொள்ளும் ஆசையானது, இரு கடத்து-பெரிய காட்டில், தக்க நெறியிடை—(பின் செல்ல எளிதான) தகுந்த வழியின் கண், பின்னும் செலப்பெறார்—பெற்றோர்பின்னும் செல்லப்பெறாத புதல்வர், ஒக்கலை வேண்டி—அவருடைய இடுப்பிலே ஏறிப்போக வேண்டி, அழல்—அழுதலோ டொக்கும்.

"ஒக்கலை மருங்கின் பக்க மாகும்" என்பது பிங்கலம்.

(க-து). பெரிய காட்டில் பின் செல்வது எளிதான வழியின்கண்ணும் பெற்றோர்பின் செல்லப்பெறாத புதல்வர், தம்மை இடுப்பிலே ஏற்றிக்கொள்ளும்படி அழுதாலும் பெற்றோர் அதற்கு இசையார். தம்மைக் கண்டால் பொறாத பகைவரை ஒருவர் தம்மகத்து வருமாறு அழைத்தாலும் அதற்கு அவர் இசையார்.

291. பெரியாரோடு பகைகொள்ளாமை

ஆற்றப் பெரியார் பகைவேண்டிக் கொள்ளற்க.
போற்றாது கொண்டரக்கன் போரின் அகப்பட்டான்.
தோற்ற பெருமை யுடையாரும் கூற்றம்
புறங்கொம்மை கொட்டினா ரில். 126

(ப—பொ). மிகவும் வலியாற் பெரியாரோடு கொள்ளும் பகையை விரும்பிக் கொள்ளாதொழிக: அறிவினால் ஆராய்ந்து பாதுகாவாது பண்டு ஓரரக்கன் போரின் கண்ணே அகப்பட் டிறந்துபோயினான்; தவம்பண்ணின பெரியோரும் கூற்றத்தை முதுகினைக் கொம்மைகொட்டிப் பிழைத்தா ரில்லை, ஆதலான்.

(ப—ரை). கோற்ற பெருமை உடையாரும்—தவம்பண்ணின பெரியோரும், கூற்றம் புறம்—யமனுடைய முதுகில், கொம்மை கொட்டினார்—கொம்மைகொட்டிப் பிழைத்தவர், இல்—இல்லை. (ஆதலால்), ஆற்ற பெரியார் பகை—மிகவும் (வலியால்) பெரியாரோடு கொள்ளும் பகையை, வேண்டி – விரும்பி, கொள்ளற்க – கொள்ளா தொழிக. அரக்கன் – (முற்காலத்தில்) ஓரரக்கன், போற்றாது கொண்டு – அறிவினாலாராய்ந்து பாதுகாவாது பெரியாரோடு பகைகொண்டு, போரின்—போரின் கண்ணே, அகப்பட்டான்—அகப்பட் டிறந்துபோயினான்.

(க—து). தன்னின் வலியாரிடம் சாம தானங்களை அனுசரிப்ப தல்லது தண்டத்தை விரும்பலாகாது.

"கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்
காற்றாதார் இன்னா செயல்."—திருக்குறள்.

"கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை."—நாலடியார்.

292. பெரியாரைச் சார்ந்தாரோடு மாறுகொள்ளாமை

பெரியாரைச் சார்ந்தார்மேல் பேதைமை கந்தாச்
சிறியார் முரண்கொண் டொழுகல்,—வெறியொலி
கோனா யினம்வெரூஉம் வெற்ப! புலம்புகின்
றீநாய் எழுப்புமாம் எண்கு. 139

(ப—பொ). வலியாற் பெரியாரைச் சார்ந்தார்மேல் தமது அறியாமையே கந்தாகப் பற்றாத வலியாற் சிறியார் மாறுகொண்டொழுகுதல், வெறியாட் டொலியை ஓநாயினங்கள் வெருவாநின்ற வெற்பனே! எண்கு உறை

யும் காட்டின்கண் தீய நாய் புக்கால், அங்கு வாழும் எண்கினைத் துரந்து அங்கு நின்றும் எழுப்புதலோ டொக்கும்.

(ப—ரை). வெறி ஒலி—வெறியாட் டொலியை, கோனாய் இனம்—ஓநாயினங்கள், வெருவும்—அஞ்சாநின்ற, வெற்ப—வெற்பனே! பெரியாரை சார்ந்தார்மேல்—வலியாற் பெரியாரைச் சார்ந்தவர்மேல், சிறியார்—பற்றாத வலியாற் சிறியார், பேதைமை கந்து ஆ (க)—தமது அறியாமையே பற்றுக்கோடாக, முரண் கொண்டு ஒழுகல்—மாறு கொண் டொழுகுதல், புலம்—(கரடி வசிக்கும்) காட்டின் கண், தீநாய் புகின்—தீய நாய் புக்கால், எண்கு எழுப்புமாம்—அங்கு வாழும் கரடியை எழுப்புமதனோ டொக்கும். [வெறியாட்டு—வேலனாடல்.]

(க—து.) காட்டைச் சார்ந்துவாழும் கரடியை நாய் சென்று எழுப்புதல்போலும், வலியாற் பெரியாரைச் சார்ந்திருப்பார்மேல் வலியாற் சிறியார் விரோதங்கொண்டு செல்வது.

293. வலியாரோடு போருதல் குற்றம்

இகலின் வலியாரை எள்ளி எளியார்
இகலின் எதிர்நிற்றல் ஏதம்—அகலப்போய்
என்செய்தே யாயினும் உய்ந்தீக. சாவாதான்
முன்கை வளையுந் தொடும். 384

(ப—பொ). இகலின் வலியாரை எள்ளி எளியார் இகலின் எதிர் நிற்றல் ஏதம். நீங்கப்போய்த் தானும் ஒன்றைச் செய்தேயாயினும் உய்க. சாவாதவன் தன் முன்கையினிடும் கடகமும் பெறும்.

(ப—ரை). எளியார்—எளியார், இகலின் வலியாரை—போரில் வல்லவரை, எள்ளி—இகழ்ந்து, இகலின்—போரில், எதிர் நிற்றல்—அவரெதிர் நின்று பொருதல், ஏதம்—குற்றமாம். என் செய்தேயாயினும்—ஏதோ உபாயம் செய்தேயாயினும், அகல போய்—தூரப்போய், உய்ந்தீக—பிழைக்க. சாவாதான்—சாவாதவன், முன்கை வளையும்—தன் முன்கையினிடும் கடகமும், தொடும்—பெறுவான்.

(க-து). வலியில்லாத காலத்தில் உயிர் தப்பிப் பிழைத்திருக்கும் எளியார், வலிபெற்ற காலத்தில் பகைவரை வென்று கடகம் அணிதலுங்கூடும். ஆகையால் எளியார் வலியாரை இகழ்ந்து போர்செய்யப் புகுதல் குற்றமாம்.

"ஒல்லும்வா யெல்லாம் வினை நன்றே. ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்."—திருக்குறள்.

294. வலிய பகைவருக்குக் கோபம் உண்டாக்காமை

வென்றடு கிற்பாரை வெப்பித் தவர்காய்வ
தொன்றோடு நின்று சிறியார் பலசெய்தல்,
குன்றோடு தேன்கலாம் வெற்ப! அதுபெரிதும்
நன்றோடு வந்ததொன் றன்று. 65

(ப-பொ). வென்று தம்மைக் கொல்லவல்லாரை மனத்தைக் கொதிப்பித்து அவர் வெகுள்வதொரு காரியத்தோடு நின்று எளியராய்ப் பல குற்றங்களைச் செய்தல், குவடுகளும் தேன்பொதிகளும் தம்முள் விரவி நெருங்கிய வெற்பையுடையானே! மிகவும் அது தனக்கு நன்றோடு வந்ததன்று.

குன்றென்பதும் வரும்.

(ப-ரை). குன்றோடு தேன் கலாம் வெற்ப—குவடுகளும் தேன் பொதிகளும் தம்முள் விரவி நெருங்கிய வெற்பை யுடையானே! வென்று அடுகிற்பாரை—வென்று தம்மைக் கொல்ல வல்லவரை, வெப்பித்து—மனத்தைக் கொதிப்பித்து, அவர் காய்வது ஒன்றோடு நின்று—அவர் கோபிப்ப தொரு காரியத்தோடு நின்று, சிறியார்—எளியார், பல செய்தல் அது—பல குற்றங்களைச் செய்தலாகிய அது, பெரிதும் நன்றோடு வந்ததொன் றன்று—தனக்கு மிகவும் நன்மையோடு சேர்ந்ததொன் றன்று.

(க-து). தம்மை வென்றடர்க்கவல்ல பகைவருக்கு மனக்கொதிப் புண்டாக்கிக் கோபமூட்டுதலான செய்கைகளைச் செய்வது எளியார்க்கு நன்றன்று.

"ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை."—திருக்குறள்.

295. வலியாரை வெகுள்வித்து உயிரிழத்தல்

உரைத்தவர் நாவோ பருந்தெறியா தென்று
சிலைத்தெழுந்து செம்மாப் பவரே—மலைத்தால்
இழைத்த திகவா தவரைக் கனற்றிப்
பலிப்புறத் துண்பார் உணா. 176

(ப—பொ). பிறரை உரைக்கத் தகாதனவற்றை உரைத்தவர் நாவினைப் பருந்தெறியா தென்று சொல்லி எல்லாருடனும் வெகுண்டெழுந்து களிப்பாரே, தம்மோடு மாறுபட்டால் அம்மாறுபட்டாரைச் செய்ய நினைத்தன செய்து முடிக்கவல்லாரை வெகுள்வித்து, மற்றவரால் தாம் இறந்துபோய்ப் பலியிடும் கல்லின்புறத்திட்ட உணவினை உண்பார்.

(ப—ரை). உரைத்தவர் நா பருந்து எறியாதென்று—பிறரை உரைக்கத்தகாதனவற்றை உரைத்தவரது நாவினை(ச் செத்தபிறகு) பருந்தும் எறியாதென்று கருதி, சிலைத்து எழுந்து—எல்லாருடனும் கோபித்தெழுந்து, செம்மாப்பவரே—கர்வித்திருப்பவரே, மலைத்தால்—தம்மோடு மாறுபட்டால், இழைத்தது—(அம்மாறுபட்டாரைத் தாம்) செய்ய நினைத்ததை, இகவாதவரை—தப்பாது முடிக்க வல்லவரை, கனற்றி—வெகுள்வித்து, (மாறுபட்டாரால் தாம் இறந்துபோய்), பலி புறத்து—பலியிடும் கல்லின் புறத்திட்ட, உணா—உணவினை, உண்பார்—உண்பவராவர்.

பலியிடும் கல்-நடுகல். போரில் வீரர் இறந்தவிடத்து அவருருவஞ்செய்து பெயரைப் பொறித்து நட்ட கல். "விழுத்தொடை மறவர் வில்விடத் தொலைந்தோர், எழுத்துடை நடுகல்" என்பது ஐங்குறுநூறு. அவரால் கொலையுண்டல் நிச்சயம் என்பதைப் "பலிப்புறத்துண்பாருணா" என உரைத்தார். [ஓ—அசை].

(க—து). எல்லாரையும் இகழ்ந்து உதாசீனமாய்ப் பேசிச் செருக்குற்றிருப்பவர், தம்மின் வலிய பகைவரைக் கோப மூட்டி, அவரால் உயிரிழப்பர்.

"எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம்: உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்."—திருக்குறள்.

## 296. பழம் பகைவரை நள்ளாமை

தழங்குரல் வானத்துத் தண்பெயல் பெற்றால்
கிழங்குடைய வெல்லாம் முளைக்குமோ ராற்றால்.
விழைந்தவரை வேர்சுற்றக் கொண்டொழுகல் வேண்டா.
பழம்பகை நட்பாத லில். 97

(ப—பொ). முழங்கும் ஓசையையுடைய முகிற்கண் உள்ள தண்பெயலைப் பெற்றால் கிழங்குடைய புல் முதலாயின வெல்லாம் ஒருவகையான் முளையாநிற்கும். பழைதாகப் பகைவராய் வாழ்கின்றாரை விரும்பி ஒருவரும் நட்பாகக் கொண்டொழுக வேண்டா: பழம்பகை நட்பாதல் இல்லை, ஆதலான்.

(ப—ரை). தழங்கு குரல் வானத்து தண்பெயல் பெற்றால் – முழங்கும் ஓசையை யுடைய மேகத்தின்கண் உள்ள குளிர்ந்த பெயலைப் பெற்றால், கிழங்கு உடைய எல்லாம்—கிழங்குடைய புல் முதலாயின வெல்லாம், ஓர் ஆற்றால்—ஒரு வகையால், முளைக்கும்—முளையாநிற்கும். பழம் பகை நட்பு ஆதல் இல்லை—பழம் பகைவர் நட்பாதல் இல்லை. (ஆகையால்), அவரை விழைந்து—பழம் பகைவரை விரும்பி, வேர்சுற்றக் கொண்டொழுகல் வேண்டா—வேரூன்றும்படி ஒருவரும் நட்பாகக் கொண்டொழுக வேண்டா.

நட்பிற்குத் தண்பெயலும், பழம்பகைவர்க்குக் கிழங்குடையனவும், நட்பின் சார்பால் பழம் பகைவர் தலையெடுப்பதற்கு மழையின் சார்பால் கிழங்குடையன முளைப்பதும், உவமானமாகப் பொருத்திக் கொள்ளவேண்டும்.

(க—து). நட்பாகிய ஆதரவைப் பெற்றுத் தலையெடுத்தபொழுது, பழம் பகைவர் தீங்கிழைக்கவே முயல்வர். ஆதலால் அவரிடம் நட்பாதல் விரும்பற்பால தன்று.

சீவக சிந்தாமணியில், கனகமாலையா ரிலம்பகத்தில், "பழம்பகை நட்புமாமே" என வருகின்ற இடத்தில், நச்சினார்க்கினியர் "பழம்

பகை நட்பாதலில் என்னும் பழமொழியும் உளதன்றே" என்றுரைக்கின்றனர்.

"பகைநட்பாங் காலம் வருங்கால் முகநட்
டகநட் பொரீஇ விடல்."—திருக்குறள்.

பழமொழி.—பகைவர் உறவு புகையெழு நெருப்பு. He that dallies with his enemy gives him leave to kill him.

297. உட்பகை துன்பந்தரும்

வெள்ளம் பகையெனினும் வேறிடத்தார் செய்வதென்?
கள்ளம் உடைத்தாகிச் சார்ந்த கழிநட்புப்
புள்ளொலிப் பொய்கைப் புனலூர! அஃதன்றோ
அள்ளில்லத் துண்ட தனிசு. 98

(ப-பொ). தமக்கு இடையிட்ட நாட்டின்கண் உள்ள பகைவர் வெள்ளம்போல் மிகப் பலராயினும் அவர்கள் வந்து தம்மை நலிந்து செய்யும் துன்பமென்? மனத்தின் கண் வஞ்சனையுடைத்தாய்த் தம்மைச் சார்ந்த மிகநட்டார் செய்யும் துன்பத்தைச் செய்யமாட்டார். ஆதலால், புள்ளொலிப் பொய்கை நல்லூரனே! அந்நட்புத் தம்மோ டொக்க ஓரில்லின் கண் இருந்தார் மாட்டுக் கொண்ட தனிசுபோலும்.

(ப-ரை). புள் ஒலி பொய்கை—பறவைகளின் ஒலி பொருந்திய தடாகங்கள் உள்ள, புனல் ஊர—புனலூரனே! வேறு இடத்தார் பகை—தமக்கு இடையிட்ட நாட்டின்கண் உள்ள பகைவர், வெள்ளம் எனினும்—வெள்ளம் என்கிற கணக்காய் மிகப் பலராயினும்; செய்வது—அவர்கள் வந்து (தம்மை நலிந்து) செய்யும் துன்பம், என்—என்ன? கள்ளம் உடைத்தாகி சார்ந்த கழி நட்பு அஃது—மனத்தில் வஞ்சனை பொருந்தித் தம்மைச் சார்ந்த (உட்பகையுள்ளவாது) மிக்க நட்பானது, அள் இல்லத்து உண்ட தனிசு அன்றோ—மனம் நெருங்கினவராய் வீட்டிலுள்ளாரிடம் கொண்ட கடன்போலும்.

தமக்கு இடையிட்ட நாட்டின்கண் உள்ள பகைவர்—தமது நாட்டுக் கப்பால் காடு மலை முதலியன இடையிட்ட வேறு நாட்டிலுள்ள பகை

வர். "ஊரிடையிட்ட நாடு" என்றும் "ஊரிடையிட்டகாடு" என்றும் வருகின்றன. அள்—நெருக்கம் (அள்ளல்—நெருங்கல்) அள்ளில்லம்—இல்லில் நெருங்கி யிருப்பவர்: தம்மோ டொக்க ஓரில்லின்கண் இருந்தார். தனிசு—கடன்.

(க—து). காடு மலைகள் இடையிட்ட நாட்டிலுள்ள பகைவர் மிகப் பலராயினும் அவரால் துன்பம் உண்டாகாது. உட்பகை யுள்ளவர் கட்பானது உள்வீட்டுக் கடன்போல் துன்பந்தருவதாம்.

"வாள்போல் பகைவரை அஞ்சற்க. அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு."—திருக்குறள்.

பழமொழி.—உள்வீட்டுக் கடனும் உள்ளங்கைச் சிரங்கும் கெட்டு.

298. வெளிப்பகை தீயதன்று

இம்மைப் பழியும் மறுமைக்குப் பாவமும்
தம்மைப் பரியார் தமரா யடைந்தாரின்
செம்மைப் பகைகொண்டு சேராதார் தீயரோ?
மைம்மைப்பின் நன்று குருடு. 188

(ப-பொ). இம்மைக்கு விளையும் பழியையும் மறுமைக்கு விளையும் பாவத்தையும் தம்மாட்டு நின்று நீக்காராய்த் தமர்போல் உட்பகையாய் வாழ்வார்போல, நேரே பகைகொண்டு சேர்ந்தொழுகார்தார் தீயரோ? தீயரல்லர்: தோன்றிற்றுந் தோன்றுதுமாம் கண்ணின் தன்மையின் குருட்டுக் கண்ணின் தன்மையே நன்றாதலான்.

(ப—ரை). இம்மை பழியும்—இம்மைக்கு விளையும் பழியையும், மறுமைக்கு பாவமும்—மறுமைக்கு விளையும் பாவத்தையும், தம்மை பரியார்—தம்மிடத்தினின்றும் நீக்காராய், தமராய் அடைந்தாரின் — (உட்பகைகொண்டு) உறவினராய் வாழ்வார்போல், செம்மை பகை கொண்டு—நேரே பகைகொண்டு, சேராதார்—சேர்ந்தொழுகாதார், தீயரோ—தீயரா? (தீயரல்லர்). மைம்மைப்பின் — தெரிவதும் தெரியாது

மாகும் கண்ணின் தன்மையைக் காட்டிலும், குருடு நன்று—குருட்டுக் கண்ணின் தன்மையே நன்று.

மைம்மைப்பு—(மை—இருள். மைகரம்—மயக்கம். மைமல்—மாலை நேரம்)—மாலைநேரத்தில் இதுவோ அதுவோ என்று மயங்குந் தன்மை: அங்ஙனம் மயங்குதலான கண்ணின் தன்மை — மாலைக்கண். (மாலைக் கண்ணன்—a purblind person). சீவக சிந்தாமணியில், பூமகளிலம் பகத்தில், "மைத்துன நீண்டவாட்கட் டடங்கண்ணார்" என்பதற்கு (வாள் மைத்து உன்ன நீண்ட கண்) வாள் ஒளிமழுங்கி நினைக்கும்படி நீண்ட கண் என்று பொருள் கூறி, நச்சினார்க்கினியர் "மைத்தல்-ஒளி கெடுதல். 'மைம்மைப்பி னன்று குருடு' என்றாற்போல்" என்பர்.

(க—து). அந்தரங்க விரோதிகள் போல் பிரத்தியட்ச விரோதிகள் தீயரல்லர்.

"உட்பகை அஞ்சித்தற் காக்க: உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்."—திருக்குறள்.

299. வென்ற பகைவரை வெகுளல்

பொருந்தா தவரைப் பொருதட்ட கண்ணும்
இருந்தமையா ராகி இறப்ப வெகுடல்,
விரிந்தருவி வீழ்தரும் வெற்ப! அதுவே
அரிந்தரிகால் நீர்ப்படுக்கு மாறு. 281

(ப—பொ). தம்முடன் மாறுபட்டவரைப் பொருது வென்ற விடத்தும் தப்பிப்போனதற்கு மனம் பொருந்தி யிருத்தலைச் செய்யாராகி, இறக்கும்படி மேலும் கோபத்தைச் செலுத்துதல், அருவி பரந்துவீழும் வெற்பனே! அதுவன்றோ நெல்லை முன்னர்த் தலையரிந்துவைத்த அரிகாலை உழுது நீரிலே அழுகப் புதைக்கும் தன்மைபோல்வது.

(ப—ரை) அருவி விரிந்து வீழ்தரும் வெற்ப-அருவி பரந்து வீழும் வெற்பனே! பொருந்தாதவரை-பகைவரை, பொருது அட்ட கண்ணும் - போர்செய்து வென்றவிடத்தும், இருந்து அமையாராகி - அவ்வளவோடு பொருந்தியிருத்தலைச் செய்யாராகி, இறப்ப வெகுடல்

அது – இறக்கும்படி மேலும் கோபத்தைச் செலுத்துதலானது, அரிந்த அரிகால்–முன்னே தலையரிந்து வைத்த அரிகாலை, நீர்ப்படுக்கும் ஆறு – உழுது நீரிலே அழுகப் புதைக்கும் தன்மைபோலும். [ஏ–அசை].

அரிகால்–நெற்கதிரை அரிந்துவிட்ட தாள்.

(க–து). பகைவரை வென்ற பிறகும் அவர் இறக்கும்படி அவர் மீது கோபஞ் செலுத்துதலானது, தலையரிந்துவைத்த அரிகாலை உழுது நீரிலே அழுகப் புதைக்கும் விதம்போலும்.

300. வலியிலாரோடு பகைகோள்ளல் பயனின்று

வன்பாட் டவர்பகை கொள்ளினும் மேலாயார்
புன்பாட் டவர்பகை கோடல் பயமின்றே.
கண்பாட்ட பூங்கழிக் கானலந் தண்சேர்ப்ப!
வெண்பாட்டம் வெள்ளந் தரும். 71

(ப–பொ). வலிய தகைமையை யுடையாரோடு பகை கொள்ளினும் மேலாயார் எளிய தகைமையை யுடையாரோடு பகை கோடல் ஒரு பயனும் படாது; கண்களின் தகைமையாயுள்ள பூங்குவளைகளையுடைய கானலந்தண் சேர்ப்பனே! பருவமழை யன்றியே வெண்பாட்டமும் வெள்ளந் தரும், ஆதலான்.

(ப–ரை). கண் பாட்ட பூ கழிக்கானல் அம் தண் சேர்ப்ப–கண்களின் தன்மையாயுள்ள பூங்குவளையுடைய கானலந்தண் சேர்ப்பனே! வெண்பாட்டம்–(பருவமழை யன்றியே) வெண்பாட்டமும், வெள்ளம் தரும் – வெள்ளத்தரும். (ஆதலால்), மேலாயார் – மேலானவர், வன்பாட்டவர் பகை கொள்ளினும்–வலிய தகைமையை யுடையாரோடு பகை கொண்டாலும், புன்பாட்டவர் பகை கோடல்–எளிய தகைமையை யுடையாரோடு பகை கொள்ளுதல், பயம் இன்றே–யாதொரு பயனும் படாது.

பாட்டம்—அச்சல் மழை: (அச்சல்—தாம், முறை) சிறிது சிறிதாக முறை முறையாகப் பெய்யும் மழை. மழை பாட்டம் பாட்டமாகப் பெய்தது என்றால், மழை பலதரம் முறை முறையாகப் பெய்தது என்பதாம். வன்பாட்டவர்—(வன்பாடு—வலிமை யுண்டாதல்) வலிய தன்மை உண்டானவர்:

(க—து). வலியுளாரோடு பகைகொண்டாலும் வலியிலாரோடு பகை கொள்ளற்க.

பருவகாலத்தில் கார்மேகம் ஒருமுறையாகப் பெய்ய வெள்ளம் பெருகிச் சேதம் உண்டாயினும், நன்மையும் உண்டாவ தியல்பு. அகாலத்தில் வெண்மேகமும் சிறிது சிறிதாய் அச்சலச்சலாகப் பெய்ய வெள்ளமுண்டாகி அதனால் மிக்க சேதம் உண்டாகுமே யன்றி நன்மை உண்டாகாது. அதுபோல, வலியாரோடு பகைகொண்டால் கெடுதி விளையினும் நன்மையும் உண்டாம்: வலியிலாரோடு பகை கொள்ளின் கெடுதியன்றி நன்மை விளையாது.

## 5. பகையறுக்கும் உபாயம்

### 301. உருவு பகை தவிர்த்தல்

வாட்டிறலானை வளைத்தார்கள் அஞ்ஞான்று
வீட்டிய சென்றார் விளங்கொளி—காட்டப்
பொருவறு தன்மைகண் டஃதொழிந்தார். அஃதால்
உருவு திருவூட்டு மாறு. 106

(ப—பொ). நாந்தகம் என்னும் வாளினால் திறலுடைய மாயவனைப் பண்டொருகால் கடலின்கண் புக்கு வளைத்த மதுவும் கைடவனும் என்னும் அசுரர் இருவரும் கொல்ல வேண்டிச் சென்றவிடத்து, அம்மாயவன் திருவுருவம் விளங்கி நின்று ஒளியைக் காட்ட, அவ்வொப்பில்லாத வடிவின் தன்மை கண்டு நினைத்துத் தாம் சென்ற கொலை

யைத் தவிர்ந்தார்கள். அதுவன்றே, அழகிய தன்னுருவே செல்வத்தை நுகர்விக்கும் நெறியாம்.

(ப—ரை). வாள் திறலானை – நாந்தகம் என்னும் வாளினால் வலியுள்ள விஷ்ணுவை, அ ஞான்று—முன்னொருகால், வீட்டிய சென்றார் விளைத்தார்கள்—கொல்லவேண்டிச் சென்று கடலின்கண் புகுந்து விளைத்த மதுவும் கைடவனும் என்னும் அசுரர் இருவரும், விளங்கு ஒளி காட்ட—அவ்விஷ்ணு திருவுருவம் விளங்கநின்று ஒளியைக் காட்ட, பொருவு அறு – அவ்வொப்பில்லாத, தன்மை – வடிவின் தன்மையை, கண்டு—கண்டு, அஃது—தாம் நினைத்துச் சென்ற கொலையை, ஒழித்தார் – தவிர்த்தார்கள். அஃது உருவு திரு ஊட்டும் ஆறு – அது அழகிய தன் உருவே செல்வத்தை நுகர்விக்கும் நெறியாம் [ஆல்—அசை].

பழமொழி.—உருவேறத் திருவேறும். உருப்படத் திருப்படும்.
A fair face is half a portion. Beauty is potent.

இன்ன விழைத்துவந்த இவ்வசுர சகோதரர் விஷ்ணுவின் சூழ்ச்சியால் "உன்னால் நாங்கள் இறக்க" என்று வரம்பெற்று மாண்டதாகப் புராணம் கூறும்.

302. வலியாரிடம் அடங்கி மெலியாரை மீதூர்தல்

வலியாரைக் கண்டக்கால் வாய்வாளா ராகி
மெலியாரை மீதூரு மேன்மை யுடைமை,
புலிகலாங் கொள்யானைப் பூங்குன்ற நாட!
வலியலாந் தா யக்கு வலிது. 157

(ப—பொ). தம்மில்வலியாரைக் கண்டக்கால் வாயால் ஒன்றும் பேசாராகித் தம்மின் மெலியாரைக் கண்டால் அடர்த்துச் சொல்லும் மேம்பாடுடைமை, புலியொடு கலாங்கொள்ளும் யானையை யுடைய பூங்குன்ற நாடனே! வலிதன்றே மக்காலம் வலிதாயின வாறு போலும்.

(ப—ரை). புலி – புலியொடு, கலாம்கொள் யானை – பகைகொள்ளும் யானையையுடைய, பூ குன்றம் நாட—அழகிய குன்றநாடனே!

வலியாரை – தம்மின் வலியாரை, கண்டக்கால் – கண்டால், வாய் வாளார் ஆகி–வாயால் ஒன்றும் பேசாராகி, மெலியாரை – தம்மின் மெலியாரை(க் கண்டால்), மீதூரும் மேன்மையுடைமை—அடர்த்துச் சொல்லும் மேம்பாடுடைமையானது, வலியலாம் தாய்க்கு வலிது—வலி தன்று மக்காலம் வலிதாயின வாறுபோலும். [தாயம்—சமயவாய்ப்பு-காலம்].

வலியில்லாத காலத்தில் அரசன் பகைவரிடம் அனுசரிக்க வேண்டிய உபாயம் கூறியவாறு. உபாயமாவது வலியாரிடம் அடங்கி நடத்தலும் மெலியாரை மீதூரு மேன்மையுமாம்.

"வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக. ஓம்பா
மெலியார்மேல் மேக பகை."—திருக்குறள்.

## 303. பலரைத் துணையாகக் கொள்க

ஒன்னார் அடநின்ற போழ்தின் ஒருமகன்
தன்னை எனைத்தும் வியவற்க.—துன்னினார்
நன்மை யிலராய் விடினும், நனிபலராம்
பன்மையிற் பாடுடைய தில். 306

(ப—பொ). தனது பகைவர் போர்செய்யத் தொடங்கிய பொழுதில் தனியனுயுள்ளவன், தான் பகைவரை வெல்ல வல்லனுகத் தன்னை எத்துணையும் வியவாதொழிக. தன்மேல் போர்செய்யச் செறிந்தவர் வீரத்தின்கண் நன்மையிலராயினும், அவர் மிகவும் பலராம் பன்மையின் பெருமையுடையதில்லை. (ஆதலால், 'தான் வீரத்தன்மையுடையனுயினும் பலரைத் துணையாகக் கொள்க.)

(ப—ரை). ஒன்னார் அடநின்ற போழ்தின்—தனது பகைவர் போர் செய்யத் தொடங்கிய பொழுதில், ஒரு மகன்—தனியனு யுள்ளவன், தன்னை எனைத்தும் வியவற்க—தான் பகைவரை வெல்ல வல்லனுகத் தன்னை எத்துணையும் வியவாதொழிக துன்னினார்—தன்மேல் போர் செய்யச் செறிந்தவர், நன்மை இலராய்விடினும் – வீரத்தின்கண் நன்மை இலராயினும், நனி பலராம் பன்மையின்—அவர் மிகவும் பலராம் பன்மையின், பாடு உடையது இல்—பெருமையுடையது இல்லை.

(க-து). தான் வீரத்தன்மை உடையவனாயினும் பலரைத் துணை யாகக் கொள்க.

"அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்."—திருக்குறள்.

"ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்."—திருக்குறள்.

304. வலிய பகைவனைத் தமது துணைவலியால் தவிர்த்தல்

தன்னலி கிற்பான் தலைவரின் தானவற்குப்
பின்னலி வானைப் பெறல்வேண்டும்.—என்னதூஉம்
வாய்முன்ன தாக வலிப்பினும் போகாதே
நாய்பின்ன தாகத் தகர். 156

(ப-பொ). தன்னை நலியவல்லான் தன்மேல் படை யெழுவனாயில், அவருக்குப் பின்னே நின்று நலிவானைத் தான் அமைத்துள ளுக்கவேண்டும். முன்னதாம்படி பிணித் தீர்ப்பினும், தகர் தன்பின்னே நாய் வர யாதும் போகாது, ஆதலான்.

(ப-ரை). வாய் முன்னது ஆக-வாய் முன்னது ஆம்படி, வலிப் பினும்-கட்டியிழுத்தாலும், தகர்-ஆடு, நாய் பின்னது ஆக-தன் பின் னே நாய் வர, என்னதும்-யாதும், போகாது-போகாது. (ஆகை யால்), தன் நலிகிற்பான்-தன்னை நலியவல்லான், தலைவரின்-தன் மேல் படையெழுவனாயின், அவற்குப் பின்-அவனுக்குப் பின்னே நின்று, நலிவானை-வருத்தும் பகைவனை, தான் பெறல்வேண்டும்- தான் தேடிக்கொள்ளல் வேண்டும். [ஏ-அசை].

(க-து). வாய் முன்னதாம்படி ஒருவன் வலியக் கட்டியிழுத்தா லும், ஆட்டுக்கடாவானது, தன்பின் நாய்வரின், நின்ற நிலைவிட்டுப் பெயராது. அதுபோல், தன்மேல் படையெடுத்து வரும் வலிய பகை வனுக்குப்பின் நின்று வருத்தத்தக்கவனை தான் துணையாகத் தேடிக் கொண்டால், அந்தப் பகைவனை வலியப் போருக்கு அழைத்தாலும் அவன் வரமாட்டான்.

305. பகைவரைச் சார்ந்தாரை வசப்படுத்தல்

யானுமற் றிவ்விருந்த எம்முனும் ஆயக்கால்
வீரஞ் செயக்கிடந்த தில்லென்று கூடப்
படைமாறு கொள்ளப் பகைதூண்டல் அஃதே
இடைநாயிற் கென்பிடு மாறு. 73

(ப-பொ). "யானும் இவ்விடத்திருந்த என் முன்னோனுமாக ஒரு வினை செய்யத் தொடங்கியக்கால், பகைவரால் வீரம் செய்யக்கிடந்தது ஒன்றுமில்லை" என்று சொல்லிப் பிறரும் தம்மொடு கூடிப் படைத்தொழிலின்கண் மாறுகொள்ளும் வகை பகைமையை மிகச் சொல்லுதலாகிய அது, ஆடுகாத்துக்கிடக்கும் இடையர் நாய்க்குக் கள்ளர் எலும்பிடுமாறு போலும்.

(ப-ரை). யானும்—யானும், இ இருந்த எம்முனும்—இவ்விடத்திருந்த என் தமயனுமாக, ஆயக்கால்—ஒருவினை செய்யத்தொடங்கினால், வீரம் செயக்கிடந்தது—பகைவரால் வீரம் செய்யக் கிடந்தது, இல் என்று—ஒன்றுமில்லையென்று சொல்லி, கூட—பகைவருக்குத் துணை செய்யத்தக்கவரும் தம்மொடு கூடி, படை மாறுகொள்ள—படைத்தொழிலின்கண் மாறுகொள்ளும் வகை, பகை தூண்டல் அஃது—பகைமையைத் தூண்டுதலானது, இடை நாய்க்கு—இடையருடைய நாய்க்கு, என்பு இடும் ஆறு—(கள்ளர்) எலும்பிடுமாறு போலும்.

(க-து). ஆடுதிருட விரும்புங் கள்வன், இடையருடைய மந்தையைக் காக்கின்ற நாய்க்கு எலும்பிட்டு வசப்படுத்திக்கொள்வான். அதுபோல், பகைவரை அடக்க விரும்பும் அரசன், பகைவருக்குத் துணை செய்யத்தக்கவரைப் புகழ்ந்து தனக்குத் துணையாக வசப்படுத்திக் கொண்டு, பகைவரிடம் விரோதம் கற்பிக்கவேண்டும்.

306. பகைவனுக்கும் மற்றொருவனுக்கும் பகையாக்கல்

இயற்பகை வெல்குறுவா னேமாப்ப முன்னே
அயற்பகை தூண்டி விடுத்தோர்—நயத்தால்
கறுவழங்கிக் கைக்கெளிதாய்ச் செய்க. அதுவே
சிறுகுரங்கின் கையாற் றுழா. 51

(ப—பொ). தனக்கு இயற்பகையாகிய பகையை வெல்லுதலுற்ற ஒருவன், முன்னே தனக்கு அரணாகத் தன் பகைக்கு வேறே ஒரு பகை வளர்த்துவிட்டு, ஒரு நெறியால் கறுவினொடொழுகித் தன் கைக்கு எளிதாகத் தன் பகைவனை நெருக்குக. அப்பெற்றி செய்தல், முது குரங்கு சிறுகுரங்கின் கையாலே வேவுறு கூழைத் துழாவிய செயலை ஒக்கும்.

(ப-ரை). இயற்பகை வெல்குறுவான்—தனக்கு இயல்பான பகையாகிய பகைவனை வெல்லத் தொடங்கினவன், முன்னே ஏமாப்ப—முன்னே தனக்கு அரணாக, அயல் பகை தூண்டிவிடுத்து—(தன் பகைவனுக்கு) வேறொரு பகைவனை வளர்த்துவிட்டு, ஓர் நயத்தால்—ஒரு வழியால், கறு வழங்கி—கறுவினுடன் ஒழுகி, கைக்கு எளிதாய்—தன் கைக்கு எளிதாக, செய்க—தன் பகைவனை நெருக்குக. அது—அங்ஙனம் செய்தல், சிறு குரங்கின் கையால் துழா—பெரிய குரங்கு குட்டிக் குரங்கின் கையாலே வேகின்ற கூழைத் துழாவிய செயலை ஒக்கும். [கறு-கோபம்].

(க—து). தன் பகைவனை வெல்வதற்கு உபாயமாவது, அவனுக்கும் மற்றொருவனுக்கும் பகையை உண்டாக்கி, அவனை நெருக்குவதாம்.

பழமொழி.—குட்டியின் கையைப் பிடித்துக் குரங்கு கொள்ளிக் கட்டையைச் சூடு பார்த்தாற் போல.

307. தம்பகைவரை அவர்பகைவரைக் கொண்டு களைதல்

மாற்றத்தை மாற்றம் உடைத்தலான், மற்றவர்க்
காற்றும் பகையால் அவர்க்களைய வேண்டுமே;
வேற்றுமை யார்க்குமுண் டாகலான். ஆற்றுவான்
நூற்றுவரைக் கொன்று விடும். 369

(ப—பொ). உணர்வு வேறுபாடு யாவர்க்கும் உண்டு ஆகலானும், அவ்வுணர்வு வேற்றுமை ஒருவர் மாற்றத்தை ஒருவர் முடித்தலானும், அவ்வாறு மாறுபட்டவர்கட்கு ஆற்றவல்லானே அவர்களை மாற்றத்தால் வென்றுகளையவேண்டும்: ஆற்றவல்லா னொருவன் நூற்றுவரை ஆற்றவல்லான் ஆதலான்.

(ப—ரை). வேற்றுமை—உணர்வு வேறுபாடு, யார்க்கும் உண்டு ஆகலான்—யாவர்க்கும் உண்டு ஆகையாலும், மாற்றத்தை—பகையை, மாற்றம்—பகை, உடைக்கலான்—கெடுத்தலாலும், மாற்றவர்க்கு—தம் பகைவருக்கு, ஆற்றும் பகையால்—அவ்வாறு கெடுதிசெய்யக்கூடிய பகையால், அவர்—தம்பகைவரை, களையவேண்டும்—ஒழிக்கவேண்டும். ஆற்றுவான்—அங்ஙனம் செய்யவல்லவன், நூற்று வரை—பல பகைவரை, கொன்றுவிடும்—நாசம் செய்யக்கூடும்.

(க—று). தம் பகைவரை அவர்பகைவரைக் கொண்டு கெடுதி செய்வித்து ஒழிக்கவேண்டும். இது செய்யவல்லவன் பல பகைவரையும் நாசம் செய்வான்.

*பழமொழி.*—One man is sufficient for revenge.

308. உட்பகையுடையாரைக் கொண்டு பகைவரைக் களைதல்

*தெள்ளி யுணரும் திறனுடையார் தம்பகைக்*
*குள்வாழ் பகையைப் பெறுதல் உறுதியே.*
*கள்ளினுல் கள்ளறுத்தல் காண்டும். அதுவன்றே*
*முள்ளினுல் முட்களையு மாறு.* 54

(ப—பொ). ஆராய்ந்துணரும் திறத்தையுடையார் தம் பகைவர்க்குள்ளே வாழும் உட்பகையைப் பெறுதல் தமக்கு உறுதியே. தான் முன்பு குடித்ததொரு கள்ளை மற்றொரு கள்ளைப் பின் குடித்தறுத்தல் காணுகின்றோம். அதுவன்றோ மற்றொரு முள்ளினுலே தன்காலில் பாய்ந்த முள்ளைக் களையுமாறு.

(ப—ரை). தெள்ளி உணரும் திறன் உடையார்—ஆராய்ந்துணரும் திறத்தையுடையார், தம் பகைக்குள் வாழ்—தம் பகைவருக்குள்ளே வாழும், பகையை—உட்பகையாரை, பெறுதல்—(தமக்கு வசமாகப்) பெறுதல், உறுதியே—தமக்கு நன்மையே. கள்—முன் குடித்த ஒரு விதமான கள்ளின் வெறியை, கள்ளினுல் அறுத்தல்—பின் குடிக்கும் மற்றொரு விதமான கள்ளினுல் நீக்குதலை, காண்டும்—காண்கின்றோம். அது முன் முள்ளினுல் களையுமாறு அன்றோ—அது தன் காலில் பாய்ந்த முள்ளை மற்றொரு முள்ளினுலே களையும் விதமாகும்.

(க-து). தமது பகைவரிடத்தில் உட்பகை யுடையாரைக் கொண்டு தம் பகைவரைக் களைவது முள்ளைக்கொண்டு முள்ளைக் களைவது போலாம்.

சீவகசிந்தாமணி விமலையாரிலம்பகத்தில், "மோதி முள்ளொடு முட் பகை கண்டிடல் பேது செய்து" என வருகின்றது: "முள்ளைக் கொண்டு முள்ளைக் களையுமாறுபோலே தமக்கு ஒன்றாய் உறவா யிருப்பவரைத் தம்மிற் பேதுசெய்து ஒருவரைக்கொண்டு ஒருவரை மோதியிடுதல்" என்பது பொருள்.

பழமொழி.—முள்ளாலே முள்ளை எடுக்கவேண்டும். One nail drives out another.

309. நலிந்த விடத்துத் தளராதவனை நட்டல் நன்றன்று
நலிந்தொருவர் நாளும் அடுபாக்குப் புக்கால்
மெலிந்தொருவர் வீழாமை கண்டு—மலிந்தடைதல்
பூப்பிழைத்து வண்டு புடையாடும் கண்ணினாய்!
ஏப்பிழைத்துக் காக்கொள்ளு மாறு. 354

(ப—பொ). ஒருவர் ஒருவனை நாடோறும் நலிந்து கெடுக்கப் புக்கால், அப்படிக் கெடுக்கப் புக்கவன் தான் நலியப்பட்டாரால் தளர்ந்து வீழாமையைக் கண்டு, பின்னை அவரை மிக்குச் சென்று நட்பாக அடைதல், பூக்களைத் தப்ப உணர்ந்து வண்டுகள் இவை பூவென்று தெளிந்துவந்து புடையாடப்படும் கண்ணையுடையாய்! முந்துற ஒருவனை எய்தால் அந்த அம்பு தப்புதலானே எய்யப்பட்டவனைப் பின்னைத் தனக்கு அரணாகக் கொண்டதனோ டொக்கும்.

(ப—ரை). பூ பிழைத்து வண்டு புடையாடும் கண்ணினாய்—பூக்களைத் தப்ப உணர்ந்து வண்டுகள் (இவை பூ வென்று தெளிந்து வந்து) பக்கத்தில் ஆடப்பெறும் கண்ணையுடையாய்! ஒருவர் நாளும் நலிந்து அடுபாக்கு புக்கால்—ஒருவர் ஒருவனை நாடோறும் நலிந்து கெடுக்கப் புகுந்தால், ஒருவர் மெலிந்து வீழாமை கண்டு—அவன் தளர்ந்து வீழா மையைக் கண்டு, மலிந்து அடைதல்—பின்பு அவனிடம் மிக்குச்

சென்று நட்பாக அடைதல், எ பிழைத்து கா கொள்ளும் ஆறு—முந்துற ஒருவனை எய்த அம்பு தப்புதலால் எய்யப்பட்டவனைப் பின்பு தனக்கு அரணாகக் கொண்டதனோ டொக்கும்.

(க—து). ஒருவனை வருத்தப் புகுந்து, அதற்கு அவன் தளராமையைக் கண்டு, அவனை நட்பாக அடைதலானது, தான் எய்த அம்புக்குத் தப்பிப் பிழைத்தவனைத் தனக்கு ஆதரவாகக் கொள்வது போலும். அந்நட்புத் தனக்குத் தீங்கு விளைவிக்கும் என்பதாம்.

310. சத்துருவை வெல்லும் சதுர்வித உபாயம்

மறையா தினிதுரைத்தல், மாண்பொரு ளீதல்,
அறையா னகப்படுத்துக் கோடல்,—முறையால்
நடுவணுச் சென்றவரை நன்கெறித லல்லால்,
ஓடியெறியத் தீரா பகை. 387

(ப—பொ). கரவாதே வெளிப்பட இன்சொல் சொல்லுதல், மாட்சிமைப்பட்ட பொருளைக் கொடுத்தல், சூழ்ச்சி பொருந்திய வஞ்சனையால் தமக்கு எளிய நட்பாக வேறுபடுத்திக்கோடல், முறைமையாலே பின்னைக் கெட்டார்க்கு நல்ல நடுநிலைமையாம்படி மேலடர்த்துச் சென்று பகைவரை மிகவும் எறிதல் என்று சொல்லப்பட்ட இந்நான்கு பெற்றியாலு மன்றி, இடையன் மரத்தை வெட்டி ஓடியெறிந்து வைக்குமாறுபோலப் பகை கொண்டு வைத்தால் பகை தீராது.

இனி துரைத்தல்—வழிபாடுரைத்தல். பொருளீதல்—திறையிடுதல்.

(ப—ரை). மறையாது இனிது உரைத்தல்—ஒளிக்காமல் வெளிப்படையாக இன்சொல் சொல்லுதல், மாண் பொருள் ஈதல்—மாட்சிமைப்பட்ட பொருளைக் கொடுத்தல், அறையான் அகப்படுத்துக்கோடல்—சூழ்ச்சி பொருந்திய வஞ்சனையால் பகைவருடைய நட்பினரைத் தமக்கெளிய நட்பாக வேறு படுத்திக் கொள்ளுதல், முறையால் நடுவணு (க) சென்று அவரை நன்கு எறிதல் – முறைமையாலே பின்னைக் கெட்டார்க்கு நல்ல நடு நிலைமையாம்படி மேலடர்த்துச்

சென்று பகைவரை மிகவும் எறிதல், அல்லால்—ஆகிய இந்நான்கு விதத்தாலுமன்றி, ஒடி எறிய—இடையன் மரத்தை வெட்டி ஒடியெறிந்து வைக்குமாறுபோலப் பகைகொண்டு வைத்தால், பகை தீரா(து)—பகை தீராது.

அறையான் அகப்படுத்துக் கொள்ளுதல் என்றது பகைவரைச் சார்ந்தாரை.

(க—து). சாம தான பேத தண்டமாகிய சதுர்வித வுபாயத்தால் பகைவரை வசப்படுத்தல் வேண்டும்.

பெரிய திருமொழி, 11-ம் பத்து, 8-ம் திருமொழி, 6-ம் பாட்டில் "இடைய னெறிந்த மரமேயொத் திராமே, அடைய வருளா யெனக் குன்ற னருளே" என்பது வருகின்றது. "இடையரானவர்கள் ஆடுகள் மேய்வதற்குக் கையில் கத்தியை யிட்டு ஒடியெறிந்து சாய்த்துப்போவர்க ளாயிற்று மரங்களை. அவை ஓரிடம் பச்சையாய் ஓரிடம் உலர்ந்து கிடக்கும்" என்பது பொருள்.

223-ம் பாட்டில் "இடைய னெறிந்த மரம்" என வருகின்றது.

## 6. படை வீரர்

### 311. பகைவரைத் தாக்கி வெல்பவரே வீரர்

*தூக்கி அவர்வெலினும் தாம்வெலினும் வெஞ்சமத்துள்*
*தாக்கி எதிர்ப்படுவர் தக்கவர். அஃதன்றிக்*
*காப்பி னகத்திருந்து காய்வார் மிகவுரைத்தல்*
*யாப்பினுள் அட்டிய நீர்.* 296

(ப—பொ). வெவ்விய களத்துப் போர்செய்ய ஒருவரை யொருவர் தலைப்படின், அவர் வெல்லினும், தாம் வெல்லினும், அடர்த்துத்தள்ளித் தோற்றமிருவர் வீரத்துக்குத் தக்கவர். அத்தன்மையின்றி, அரணகத்திருந்து வெகுள்வாராய் மிகவும் வீரஞ்சொல்லுதல், அழுந்தக் கட்டிய கட்டிலே குத்தின நீர்போலப் பகைவரைத் தம் மேல் மிக்க சினம் உண்டாக்கு மத்துணை.

(ப—ரை). வெம் சமத்துள்—வெவ்விய போர்க்களத்திலே, அவர் வெலினும் தாம் வெலினும்—பகைவர் வென்றாலும் தாம் வென்று

னும், தாக்கி நூக்கி — அடர்த்துத் தள்ளி, எதிர்ப்பவேர் — தோற்றமிகு வோர், தக்கவர்—வீரத்துக்குத் தக்கவர். அஃதன்றி—அத்தன்மையின்றி, காப்பின் அகத்து இருந்து — அரணகத்திருந்து, காய்வார் — கோபிப்பவ ராய், மிக உரைத்தல்—மிகவும் வீரஞ்சொல்லுதலானது, யாப்பினுள்— அழுந்தக் கட்டிய கட்டிலே, அட்டிய நீர்—குத்திய நீர்போல் பகை வரைத் தம்மேல் மிக்க சினமுண்டாக்கு மவ்வளவே.

(க—து). போர்முகத்தில் இருதிறத்தாரில் அடர்த்து மிக்கவர் எவ ராயினும் அவரே வீரத்துக் குரியவர். அரணகத்திருந்து மிகவும் வீரம் பேசுவோர், அழுந்தக் கட்டிய கட்டிலுள்ள நீர் குத்தினபோது வீறிட் டுப் பாய்வதுபோல், பகைவருடைய கோபத்தைத் தம்மீது வீறிட்டுப் பாயும்படி செய்பவ ராவர்.

"நோக்கினுள் நோக்கி இறைஞ்சினுள்; அஃதவள் யாப்பினுள் அட்டிய நீர்" என்னுங் குறளில், 'அஃதவள் யாப்பினுள் அட்டிய நீர்' என்பதைப் பரிமேலழகர் "அக்குறிப்பு இருவேமிடையும் தோன்றிய அற்புப்பயிர் வளர அதன்கண் அவள் வார்த்த நீராயிற்று" என்று விளக் குதலால், இச்செய்யுளின் பின்பாதிக்கு, அரணகத்திருந்து கோபிப் பார் மிகவும் வீரஞ்சொல்லுதலானது பகைப்பயிர் வளர அதன்கண் அவர் வார்த்த நீராயிற்று என்று பொருள்கொள்வதும் பொருந்தும்.

312. தன்அரசனுக்குத் தன்உடம்பை உதவல்

உற்று விறைவற் குடம்பு கொடுக்கிற்பான்
மற்றவற் கொன்னூரோ டொன்றுமோ?—தெற்ற
முரண்கொண்டு மாறுய உண்ணுமோ? உண்ணு
இரண்டே ருருதுறையுள் நீர். 239

(ப—பொ). தன்னுடைய இறைவற்கு ஓர் இடையூறு வந்துற்றால் தன்னுடம்பை அவற்குக் கொடுக்கவல்லவன், மற்றவற்குப் பகைவராயினுரோடு பொருந்துமோ? தெளி யத் தம்முள் பகைகொண்டு மாறுய இரண்டெருதுகள் ஒருதுறையில் புக்கு நீர் உண்ணுமோ? அவ்விரண்டெருது கள் தம்மிற் பொருந்தி உண்ணு: அதுபோல.

(ப—ரை). தெற்ற—தெளிவாக, முரண்கொண்டு—தம்முள் விரோதங் கொண்டு, மாறுய இரண்டு ஏறு—மாறுகிய இரண்டெருதுகள், ஒரு துறையுள் — ஒரு துறையில் (புகுந்து), நீர் உண்ணுமோ — நீர் உண்ணு மோ? உண்ணு—(அவையிரண்டும் தம்மிற் பொருந்தி) உண்ணமாட்டா. (அதுபோல), இறைவற்கு உற்றுல்—தன்னுடைய அரசனுக்கு ஒரு துன்பம் உற்றுல், உடம்பு—தன்னுடம்பை, கொடுக்கிற்பான்—அவனுக் குக் கொடுக்கவல்லவன், மற்றவற்கு ஒன்னுரோடு—அவ்வரசனுக்குப் பகைவரானவரோடு, ஒன்றுமோ—பொருந்துவானே?

(க—து). தம்முள் விரோதங்கொண்ட இரண்டெருதுகள் ஒரு துறையில் நீர் உண்ணமாட்டா. தம்முள் விரோதங்கொண்ட இரண் டரசர் ஒரு வீரனுடைய உதவியை நாடார். ஆகையால், வீரனுகின்ற வன் தன்னரசனுக்கு ஒரு துன்பம் நேரிட்டால் அவனுக்குத் தன் னுடம்பையீனுனும் உதவுவதன்றிப் பகையரசனேடு சேர்ந்துகொள்ள மாட்டான்.

313. வீரமில்லாதார் சிறப்படையார்

ஆற்ற வினைசெய்தார் நிற்பப் பலவுரைத்
தாற்றுதார் வேந்தனை நோவது சேற்றுள்
வழாஅமைக் காத்தோம்பி வாங்கும் எருதாங்
கெழாஅமைச் சாக்கா டெழல். 155

(ப—பொ). போரின்கண் ஆற்றவல்லாராய் வினைசெய் தார் நிற்ப, போரின்கண் புக்கு ஒருவினை செய்யமாட்டா தார், வேந்தனைப் பலவுரைத்து ஒரு சிறப்புச் செய்தில னென்று நோவது, சேற்றின்கண் வழுவி யழுங்காமைக் காத்துப் போற்றி ஈர்க்கும் எருது புடை பெயர்ந்து செல்லாமைச் சாக்காடு சென்றதுபோலும்.

(ப—ரை). ஆற்ற வினைசெய்தார் நிற்ப—போரின்கண் ஆற்றவல்லா ராய் வினைசெய்தார் ஒன்றும் நொந்துகொள்ளாமல் நிற்ப, ஆற்றுதார்— போரின்கண் புக்கு ஒருவினை செய்யாதார், வேந்தனை பல உரைத்து நோவது—வேந்தனைப் பல வார்த்தை சொல்லி ஒரு சிறப்பும் செய்

திலனென்று கோவதானது, சேற்றுள்—சேற்றின்கண், வழாமை காத்து ஓம்பி வாங்கும் எருது — வழுவியழுந்தாதபடி காத்துப்போற்றி ஈர்க்கக் கூடிய எருது, எழாமை—புடைபெயர்ந்து செல்லாமல், சாக்காடு எழல்—சாவதுபோலும்.

(க—து). சேற்றில் அழுந்தாமல் இழுக்கக்கூடிய எருது கெட்டியி ழுக்காமல் சாகுமாறுபோல், போரில் வினைசெய்யாமல் அரசன் யாதொரு சிறப்பும் செய்திலனென்று நொந்துகொள்பவன் தீமை யடைவான்.

314. அரசன் நன்குமதிக்காவிட்டாலும் வீரர் வினை செய்க

தாரேற்ற நீண்மார்பின் தம்மிறைவன் நோக்கியக்கால்
போரேற்று மென்பார் பொதுவாக்கல் வேண்டுமோ?
யார்மேற்றுக் கொள்ளினும் கொண்டீக. காணுங்கால்
ஊர்மேற்ற தாமமணர்க் கோடு. 231

(ப—பொ). மாலைபொருந்திய பெரிய மார்பையுடைய தம்முடைய வேந்தன் பகைவரை வெல்வான் வேண்டித் தனது வீரரைக் குறித்து நோக்கியக்கால், போரை ஏற் றுக்கொண்டு பொருவேமென்று தம்மை மதித்துரைப் பார், அந்த நோக்கினைத் தம்மேல் கொள்ளாது பொதுப் பட நோக்கினான் என்று கொள்ளவேண்டா. யாவர் மேற் றுக நோக்கினானாயினும், தம்மேலே நோக்கினானாகக் கொண்டு, அதனை முற்றுப்பெறச் செய்யத் தொடங்குவர். ஆராயுங்கால், காட்டுள் இருந்து தவஞ்செய்யும் அமணர்க் கும் இரந்துண்ணும் ஓட்டாற் பயன் பலர் உறையும் ஊரின் கண்ணது ஆதலால்.

(ப—ரை). காணுங்கால்—ஆராயுங்கால், அமணர்க்கு—காட்டிலிருந்து தவஞ்செய்யும் அமணர்க்கும், ஓடு—இரந்துண்ணும் ஓட்டாற்பயன், ஊர்மேற்றது—பலர் உறையும் ஊரின் கண்ணது. தார் ஏற்ற நீள் மார் பின் தம் இறைவன் – மாலைபொருந்திய பெரிய மார்பையுடைய அர சன், நோக்கியக்கால்—பகைவரை வெல்லவேண்டித் தனது வீரரைக் குறித்து நோக்கியக்கால், போர் ஏற்றும் என்பார்—போரை ஏற்றுக் கொண்டு போர்செய்வோமென்று தம்மை மதித்துரைப்பார், பொது

வாக்கல் வேண்டுமோ – அந்த நோக்கினைத் தம்மேற் கொள்ளாது பொதுப்பட நோக்கினுனென்று கொள்ளவேண்டா. யார் மேற்று(க)க் கொள்ளினும்–யாவர்மேற்றாக நோக்கினுலுயினும், கொண்டு–தம்மே லே நோக்கினுகக் கொண்டு அதனை முற்றுப்பெறச் செய்யத்தொடங்குக.

(க–து). தம்முடைய வீரத்தன்மையை அரசன் தம்மைக்குறித்து நோக்கவில்லை என்றிராமல் வீரர் அரசனுடைய பகைவரை வெல்வதற்குப் போர் செய்ய ஒருப்படுதல் வேண்டும்.

பலர் உறையும் ஊரில் இடுபவர் இடாதவரை அறியாமல் தவசிகள் பொதுவாகப் பிக்ஷாபாத்திரத்தை ஏந்திச்சென்றாலும், "நம்மை நோக்கிப் பிக்ஷை கேட்கவில்லையே" என்றிராமல் புண்ணியத்தைப் பெரிதாக நினைத்து இடுவார் இடுபவர். போரில் பகைவரோடு பொரவல்லாரையும் அல்லாரையும் அரசன் பொதுவாக நோக்கினுலும், பொரவல்ல வீரர் "நம்மைக் கருதி அரசன் நோக்கவில்லையே. பொதுவாகத்தானே நோக்கினன்" என்றிராமல் பகைவரை வெல்வதைப் பெரிதாக நினைத்துப் போர்செய்யப் புகுவர்.

ஓடு ஊரின் மேலதாவதுபோல் வெற்றி சேனையின் மேலது. இடுவார் இடுவதனுல் ஓடு நிரம்புவதுபோல், பொருவார் பொருவதனுல் வெற்றி உண்டாகும்.

315. தம் வீரத்தைத் தாமே புகழ்த லாகாது

செம்மாந்து செல்லும் செறுநரை அட்டவர்
தம்மேல் புகழ்பிறர் பாராட்டத் —தம்மேற்றும்
வீரஞ்சொல் லாமையே வீழ்க. களிப்பினும்
சோரப் பொதியாத வாறு. 131

(ப–பொ). செம்மாந்து செருக்குடையராய் ஒழுகும் பகைவரை வென்று கொன்றவர் தாங்கள் தம்மேலுள்ள புகழைப் பிறர் பாராட்டத் தம்மாட்டுள்ள வீரத்தைத் தாம் சொல்லாதொழிக. கள்ளுண்டு மிகக் களித்தாராயினும் தம்பொருளைச் சோரப் பொதியாதவாறு போலும் அது.

(ப—ரை). செம்மாந்து செல்லும்—கர்வமுடையவராய் நிமிர்ந்தொழுகும், செறுநரை—பகைவரை, அட்டவர்—வென்று கொன்றவர், தம்மேல் புகழ்—தம்மே லுள்ள புகழை, பிறர் பாராட்ட — பிறர் பாராட்ட, தம்மேற்று ஆம் வீரம் — தம்மிடத்துள்ள வீரத்தை, சொல்லாமையே வீழ்க—தாம் சொல்லாதொழிக. (அங்ஙனம் சொல்லாமை), களிப்பினும்—கள்ளுண்டு மிகக்களித்தாராயினும், சோர பொதியாத ஆறு—தம் பொருளைச் சோரப் பொதியாத வாறுபோலும்.

சோரப் பொதியாத வாறு—விழும்படி திணிக்காத வாறு: அதாவது விழாதபடி திணிக்குமாறு.

(க—து). பகைவரை வென்றபோதும் தம் புகழைத் தாமே எடுத்துச் சொல்லாமையானது, கள்ளுண்டு களித்த விடத்தும் தம் பொருளை விழாதபடி திணிக்குமதனோ டொக்கும்.

316. சொல்லாலன்றிப் பகைவரைச் செயலால் அடுதல்

உரைத்தாரை மீதூரா மீக்கூற்றம், பல்லி
நெரித்த சினைபோலும் நீளிரும் புன்னைப்
பொரிப்பூ இதழுறைக்கும் பொங்குநீர்ச் சேர்ப்ப!
நரிக்கூக் கடற்கெய்தா வாறு. 22

(ப—பொ). தம்மால் அடர்த்துச் சொல்லப்பட்டாரைச் செயலால் அடர்க்கமாட்டாது வாயால் அடர்த்துச் சொல்லும் சொலவு, பல்லியினுடைய முட்டையை நெரித்தாற்போலும் மலர்ந்த நீளிரும் புன்னையினுடைய பொரிநிறம் போன்ற பூக்களினுடைய இதழ்கள் பெய்யாநின்ற பொங்குநீர்ச் சேர்ப்பனே! நரியின் கூப்பீடு கடலினோசையைத் தாழ்படுக்க மாட்டாதவாறு போலும்.

(ப—ரை). பல்லி சினை நெரித்தது போலும்—பல்லியினுடைய முட்டையை நெரித்ததுபோல, நீள் இரு புன்னை பொரி பூ—மலர்ந்த நீண்ட பெரிய புன்னையின் பொரிநிறம்போன்ற பூக்களின், இதழ் உறைக்கும்—இதழ்கள் பெய்யாநின்ற, பொங்குநீர் சேர்ப்ப—பொங்குநீர்ச்சேர்ப்பனே! உரைத்தாரை—தம்மால் அவமதித்துச் சொல்லப்பட்டாரை, மீதூரா மீக்கூற்றம்—செயலால் அடர்க்கமாட்டாது வாயால் அடர்த்துச்

சொல்லும் வார்த்தை, நரிக்கூட்டம் கடற்கு எய்தாத ஆறு—நரியின் கூப்பிடு கடலின் ஓசையைத் தாழ்விக்கமாட்டாத வாறுபோலும்.

(க—து). நரி கூப்பிட்டுக் கடல் முட்டுமோ? ஒருவரை அவமதித்துப் பேசினால் அவர் அடங்கிவிடுவாரா? அவரைச் செயலால் அடுதல் வேண்டும்.

317. வலிய பகைவர்மேல் எளிய வீரர் படை விடேல்

அமர்நின்ற போழ்தின்கண் ஆற்றுவா ரேனும்,
நிகரின்றி மேல்விடுதல் ஏதம்—நிகரின்றி
வில்லொடுநே ரொத்த புருவத்தாய்! அஃதன்றோ
கல்லொடு கையெறியு மாறு. 382

(ப—பொ). ......முட்டின் தாமவர்க்கு நிகர்போகா திருந்துவைத்து அவர்மேல்சென்று படைவிடுதல் தமக்கு ஏதமாம். வில்லொடு நேரொத்த புருவத்தினையுடையாய்! கல்லுடனே தன்கை எறியுமாறு போலும் அது.

(ப—ரை) வில்லொடுநேர் ஒத்த புருவத்தாய்—வில்லொடு நேரொத்த புருவத்தினையுடையாய்! அமர்நின்ற போழ்தின்கண்—யுத்த மில்லாத காலத்தில், நிகர் இன்றி ஆற்றுவாரேனும்—சமானமில்லாமல் பகைவர் மேல் வீரம் காட்டத்தக்கவரெனினும், (அமர் முட்டின்), நிகர் இன்றி—தாம் அவர்க்கு நிகர்போகா திருந்துவைத்து, மேல்விடுதல் — அவர்மேல் சென்று படைவிடுதல், ஏதம்—தமக்குத் துன்பமாம். அஃது கல்லொடு கையெறியும் ஆறு அன்றோ—அது கல்லுடனே தன்கை எறியுமாறு போலும்.

(க—து). யுத்தமில்லாத காலத்தில் சமானமில்லாமல் வீரம் காட்டத் தக்கவரானாலும், யுத்தம் நேரிட்டபோது பகைவருக்கு இளைத்திருந் தால், அவர்மேல் படைவிடுதல் துன்பந் தருவதாகும்.

318. வலியடங்கியபின் பகைவரை வெல்வோமென்பது வீண்

வரைபுரை வேழத்த வன்பகையென் றஞ்சா
உரையுடை மன்னருள் புக்காங் கவையுள்
நிரையுரைத்துப் போகாதொன் றுற்றத் துணிக.
திரையவித் தாடார் கடல். 317

(ப-பொ). புகழுடைய மன்னர்நடுவே புக்கு, அவ்வி டத்திருந்த அவையுள் நிறையாகச் சில சொற்களைப் 'பகைவரை வெல்லக்கடவோம்' என்று சொல்லிவைத்து, போரின்கண் புகாராய், 'மலைபோலும் யானைகளை உடையவாயிருந்தன வலிய பகை: இப்பொழுதைக்கு வெல்ல முடியாது' என்று நினைந்து அஞ்சிப்போகாதே, ஒரு வென்றியைச் செய்யத் துணிக: திரையை நீக்கிக் கடலாடுவம் என்று பார்த்திருப்பார் இல்லாதவாறு போல.

(ப-ரை). திரை அவித்து கடல் ஆடார்—அலையை நீக்கிச் சமுத்திரத்தில் நீராடுவோம் என்று பார்த்திருப்பார் இல்லை. (அதுபோல), உரை உடை மன்னருள் புக்கு—புகழுடைய மன்னர்நடுவே புகுந்து, ஆங்கு அவையுள் நிரை உரைத்து—அவ்விடத்திருந்த சபையுள் 'பகைவரை வெல்லக்கடவோம்' என்று ஒழுங்காகச் சில சொற்களைச் சொல்லிவைத்து (போரின்கண் புகாராய்), வன்பகை வரைபுரை வேழத்த என்று அஞ்சா—வலியபகை மலைபோலும் யானைகளை உடையவாயிருந்தன (ஆதலால் இந்தச் சமயம் வெல்ல முடியாது) என்று நினைத்து அஞ்சி, போகாது—போய்விடாமல், ஒன்று ஆற்ற துணிக—ஒரு வெற்றியைச் செய்யத் துணிக.

(க-து). தந்திரியானவன், இராசசபையில் வீரம் பேசிவிட்டு, அப்பால் பகைவருடைய வலிமையைக் கண்டு அஞ்சிப்போகாமல் வெற்றி பெறத் துணிதல்வேண்டும். அலை ஓய்ந்தபின் கடலாடுவோமென்று காத்திருப்பது வீணையாதல் போல், பகைவர் வலியடங்கியபின்பு வெல்வோமென்று காத்திருப்பது வீணே.

இப்பழமொழி நாலடியாரில்,

"பெருங்கட லாடிய சென்றார் ஒருங்குடன்
ஓசை அவிந்தபின் ஆடுது மென்றற்றால்
இற்செய் குறைவினை நீக்கி அறவினை
மற்றறிவாம் என்றிருப்பார் மாண்பு,"

என வழங்கியிருக்கின்றது.

பழமொழி.—அலை ஓய்ந்து கடலாடலாமா? அலை எப்பொழுது ஒழியும், தலை எப்பொழுது முழுகுகிறது?

319. எளிய பகைவரை இரக்கமின்றி அடுதல் இழிவே

காத்தாற்று கிற்பாரைக் கண்டால் எதிருரையார்
பார்த்தாற்றா தாரைப் பரியாது மீதூர்தல்,
யாத்ததே சில்லார் படையாண்மை, நாவிதன்வாள்
சேப்பிலைக்குக் கூர்ந்து விடல். 284

(ப—பொ). போரைக் காத்து ஆற்றவல்லாரைக் கண்டால் எதிர் உரையாராய்த் தமக்கு ஆற்றாதாரைப் பாத்திரங்காது அடர்க்கும், தமக்குளதாகிய புகழில்லாதார் செய்யும் படையாண்மை, நாவிதனது வாள் சேப்பிலையை அறுக்கக் கூர்த்ததனோடொக்கும்.

(ப—ரை). காத்து ஆற்றுகிற்பாரை கண்டால்—போரைக் காத்து ஆற்றவல்லாரைக் கண்டால், எதிர் உரையார்—எதிருரையாராய், ஆற்றாதாரை—தமக்கு ஆற்றாதாரை, பார்த்து பரியாது—பார்த்து இரங்காது; மீதூர்தல்—அடர்த்தலாகிய, யாத்த தேசு இல்லார் படையாண்மை—தமக்குளதாகிய புகழ் இல்லாதவர் செய்யும் படையாண்மையானது, நாவிதன் வாள்—அம்பட்டன் கத்தி, சேப்பிலைக்கு—சேப்பிலையை அறுக்க, கூர்த்துவிடல்—கூர்த்ததனோடொக்கும்.

மீதூர்தலாகிய படையாண்மை எனக் கூட்டிக்கொள்க.

(க—து). வலிய பகைவரைக் கண்டால் எதிருரையாது எளிய பகைவரைக் கண்டவிடத்து இரக்கமின்றி அடுதலாகிய ஆண்மையானது, மயிர்வினைக் குரிய கூர்மையின்றிச் சேப்பிலையைக் கொய்வதற்குரிய கூர்மையுடைய அம்பட்டன் கத்தி போலாம்.

பழமொழி.—சேம்பு கொய்யச் சிற்றரிவாள் ஏன்.

320. ஆற்றாதார் பகைவர்கையில் அகப்படுதல்

இஞ்சி அடைத்துவைத் தேமாந் திருப்பினும்
அஞ்சி அகப்படுவார் ஆற்றாதார்.—அஞ்சி
இருள்புக் கிருப்பினும் மெய்யே வெருஉம்புள்
இருளின் ஹிருந்தும் வெளி. 164

(ப—பொ). மதிலினை அடைத்துவைத்து அரணுடையேம் என்றிருப்பினும் பகைவர்க்கு ஆற்றமாட்டாதார் அஞ்சி அகப்படுவர். இரவின்கண் இருளிலே இருந்தாயினும் தன் அச்சத்தாலே வெளியின்கண் இருந்தாற்போலக் கூகை காக்கைக்கு அஞ்சும்.

(ப—ரை). இஞ்சி அடைத்துவைத்து—மதிலினை அடைத்துவைத்து, ஏமாந்திருப்பினும் – காவலுடையோம் என்றிருப்பினும், ஆற்றுதார்—பகைவர்க்கு ஆற்றமாட்டாதார், அஞ்சி அகப்படுவார்—அஞ்சி அகப்படுவர். இருள் புக்கிருப்பினும்—இரவாகியிருந்தும், இருளின் இருந்தும்—இருளாகிய இடத்தில் இருந்தும், புள்—கோட்டான், அஞ்சி வெளி—அச்சங்கொண்டு வெளியிலிருந்தாற்போல, மெய்யே வெருவும்—உள்ளபடி காக்கைக்குப் பயப்படும்.

(க—து). இரவில் இருட்டான இடத்தில் உட்பொருந்தி யிருந்தும் கோட்டான் வெளியில் இருந்தாற்போல் காக்கைக்கு அஞ்சும். அதுபோல், அரணான இடத்தில் அடைபட்டிருந்தும் வீரமில்லாதவர் வெளியிலிருந்தாற்போல் அஞ்சிப் பகைவர் கையில் அகப்படுவர்.

321. ஆடம்பரங்காட்டி அரசனிடம் சோறுண்ணல்

உருத்தெழு ஞாட்பினுள் ஒன்னார் தொலையச்
செருக்கினால் செய்கல்லார் செய்வாரே போலத்
தருக்கினால் தம்மிறைவன் கூழுண் பவரே
கருக்கினால் கூறைகொள் வார். 378

(ப—பொ). வெகுண்டெழுந்த போரின்கண் பகைவர் தொலையும்படி தம் படைச்செருக்கினால் போர் செய்யமாட்டாதார் செய்வாரைப் போலே வலிசொல்லி அவ்வலியினால் தம் இறைவன் கூழ் உண்பவரே,......கூறை வாங்குவாரோ டொப்பர்.

(ப—ரை). உருத்து எழுந்த ஞாட்பினுள்—வெகுண்டெழுந்த போரின்கண், ஒன்னார் தொலைய—பகைவர் தொலையும்படி, செருக்கினும்

செய்கல்லார்—தம் படைச்செருக்கினால் போர்செய்ய மாட்டாராய், செய்வாரேபோல—செய்வாரைப்போலே வலிசொல்லி, தருக்கினால்—ஆடம்பரத்தால், தம் இறைவன் கூழ்—தம் அரசன் சோற்றை, உண்பவரே — உண்ணும் போலிவீரரே, கருக்கினால் — படாடோபத்தால், கூறைகொள்வார்—புதுவஸ்திரம் பரிசுபெறுபவரோ டொப்பர்.

(க—து). வீரங்கொண்டு போர்செய்ய மாட்டாமல் ஆடம்பரத்தால் அரசன்சோ றுண்பவர், திறம் ஒன்றும் காட்டாமல் படாடோபத்தால் புதுவஸ்திரம் பரிசுபெறுவாரோ டொப்பர்.

## 322. முன்னோர் பெருமையைச் சொல்லி வயிறுவளர்த்தல்

அமர்விலங்கி ஆற்ற அறியவும் பட்டார்
எமர்மேலை இன்னரால் யார்க்குரைத்தும்' என்று
தமர்மறையால் கூழுண்டு சேறல் அதுவே
மகன்மறையத் தாய்வாழு மாறு. 116

(ப—பொ). "போரின்கண் பகையை விலங்கி மிகவும் எல்லாராலும் அறியவும் பட்டார் எங்குடியினுள்ளார் பண்டு இப்பெற்றியாரால்; இத்தன்மையை யாவர்க்குச் சொல்லுவோம்" என்று பிறர்க்குச் சொல்லி, தங்குடியில் வந்து முன் மேம்பட்ட தமராலே சோறுபெற்றுண்டு ஒழுகுதலான பெற்றி, மகனால் பெற்ற தாய் தன் கணவனோடு வாழுமாறு போலும்.

(ப—ரை). "அமர் விலங்கி—போரின்கண் பகையை விலங்கி, ஆற்ற அறியவும் பட்டார்—மிகவும் எல்லாராலும் அறியவும் பட்டார், மேலை எமர் இன்னர்—பூர்வத்தில் எங்குடியினுள்ளார் இத்தன்மையர்: யார்க்கு உரைத்தும்—இத்தன்மையை யாவர்க்குச் சொல்லுவோம்", என்று—என்று பிறருக்குச் சொல்லி, தமர் மறையால் கூழ் உண்டு சேறல் அது—தம் குடியில் பிறந்து முன் மேம்பட்ட உறவினராலே சோறுபெற்று உண்டொழுகுதலான தன்மை, தாய் மகன் மறைய வாழும் ஆறு—பெற்ற தாய் மகனால் தன் கணவனோடு வாழுமாறு போலும்.

(க—து) போரில்சென்று நிற்கத் துணிவில்லாத வீரர் "எம்முன்ஞேர் போரில் வெற்றிபெற்றவர் என்பது பூர்வத்தில் பலர் அறிந்ததே. இது இப்பொழுது எவருக்குத் தெரியும்? நாங்கள் யாரிடத்தில் சொல்லிக்கொள்வோம்?" என்று முன்ஞேர் பேரைச் சொல்லி, அந்த ஆதாரவால் சோறுபெற் றுண்பது, கற்பு மாட்சிமையில்லாத மனைவி தான் பெற்றுக்கொடுத்த பிள்ளையின் ஆதாரவால் கணவனிடம் சோறுபெற்று வாழுமதனே டொக்கும்.

323. பேதை தறுகணன் ஆகான்

உறுகண் பலவும் உணராமை கந்தாத்
தறுகண்மை யாகாதாம் பேதை—தறுகண்
பொறிப்பட்ட வாறல்லால் பூணுதென் றெண்ணி
அறிவச்சம் ஆற்றப் பெரிது. 220

(ப—பொ). வந்து தனக்குற்ற உறுகண் பலவற்றை உணரத்தக்க அறிவில்லாமையே பற்றுக்கோடாகத் தறுகண்மையினை உடைத்தென்று சொல்லப்படாத பேதை, தறுகண்மை புண்ணியம் உண்டான வழியல்லால் பொருந்தாதென்று விசாரித்த அறிவினுல் வந்த அச்சம் பேதைக்கு மிகப் பெரிது.

(ப—ரை). உறுகண் பலவும் உணராமை—வந்து தனக்குற்ற உறுகண் பலவற்றையும் உணரத்தக்க அறிவில்லாமையே, கந்து ஆ(க) பற்றுக்கோடாக, தறுகண்மை ஆகாதாம் பேதை—தறுகண்மை உடையனென்று சொல்லப்படாத பேதை, தறுகண்—தறுகண்மை, பொறிப் பட்ட ஆறு அல்லால்—புண்ணியம் உண்டான வழியல்லது, பூணுது—பொருந்தாது, என்று எண்ணி—என்று விசாரித்து, அறிவு அச்சம்—அவ்வறிவினுல் வந்த அச்சம், ஆற்ற பெரிது—பேதைக்கு மிகப் பெரிது. [ஆம்—அசை].

(க—து). பல துன்பங்களைப் பட்டறியாமையாலேயே பேதை தறுகண்மை உடையஞகான். பூர்வ புண்ணியம் இல்லாவிட்டால் அது உண்டாகாது என்பதறிந்த அளவில் அவனுக்கு அச்சம் பெரிதாம்.

**324. வலிய பகைவ ரில்லாதார் படைவீரரை வேண்டார்**

தன்னின் வலியானைத் தானுடைய னல்லாதான்
என்ன குறையன் இளையரால்? மன்னும்
புலியிற் பெருந்திறல வாயினும் பூசை
எலியில் வழிப்பெறா பால். 330

(ப-பொ). தன்னின்மிக்க வலியுடையனாகிய பகைவனைத் தான் உடையனல்லாத வேந்தன் என்ன காரியம் உடையன் இளையராயுள்ள படையாளரால்? புலிபோல் மன்னும் பெரிய திறலை யுடையவாயினும் எலியால் நலி வில்லாத மனையின்கண் பூனைகள் பாலைப் பெறாதவாறு போல.

(ப-ரை). புலியின் மன்னும் பெருந்திறல வாயினும்—புலிபோல மன்னும் பெரிய வலியை உடையனவாயினும், பூசை—பூனைகள், எலி இல் வழி—எலியால் நலிவில்லாத மனையின்கண், பால்பெறா—பாலைப் பெறா. (அதுபோல), தன்னின் வலியானை—தன்னைக் காட்டிலும் மிக்க வலியுடையனாகிய பகைவனை, தான் உடையனல்லாதான்—தான் உடையனல்லாத அரசன், இளையரால்—இளையராயுள்ள படைவீரரால், என்ன குறையன்—என்ன காரியம் உடையன்?

(க-து). எலியால் வருந்துத லில்லாத வீட்டில் பூனைக்குப் பால் கிடைக்காது. தம்மின் வலிமிக்க பகைவ ரில்லாத அரசரிடத்தில் இளைய படைவீரருக்குச் சேவை கிடைக்காது.

**325. வலியிலார் தம் படையைப் போலியச்செய்தல் நன்று.**

கொடையும் ஒழுக்கமும் கோளுள் ளுணர்வும்
உடைய ரெனப்பட் டொழுகிப் பகைவர்
உடையமேற் செல்கிற்கும் ஊற்றம் இலாதார்
படையின் படைத்தகைமை நன்று. 324

(ப-பொ). கொடைத் தொழிலும் செங்கோன் முறைமையும் படை குடி முதலியவற்றாற் கோட்பாடுள்ள உணர்வும் இவர் உடையார் என்னும்படி தாம் ஒழுகி,

மாற்றலர் கெட்டோட மேற்சென்றுவிடுதற்கு மிகுதி வலி யில்லாதவர், படையெழுந்து சென்று வலியப் போர் செய்தலின், தம்படையைப் பொலிவுடைத்தாகப் பண்ணிப் பாதுகாத்திருக்கு மதுவே நன்று.

(ப—ரை). கொடையும் – கொடைத்தொழிலும், ஒழுக்கமும் – செங்கோன் முறைமையும், கோளுள் உணர்வும்—படை குடி முதலியவற்றால் கோட்பாடுள்ள உணர்வும், உடையர் எனப்பட்டொழுகி— இவர் உடையர் என்னும்படி தாம் ஒழுகி, பகைவர் உடைய— பகைவர் கெட்டோட, மேல் செல்கிற்கும் ஊற்றம் இலாதவர்—மேற் சென்றுவிடுதற்கு மிக்க வலியில்லாதவர், படையின்—படையெழுந்து சென்று வலியப் போர் செய்தலின், படைத் தகைமை—தம்படையைப் பொலிவுடைத்தாகப் பண்ணிப் பாதுகாத் திருக்கு மதுவே, நன்று—நன்றாம்.

(க—து) வலியில்லாதவர் பகைவர்மீது படையெடுத்துச் செல்லுதைக் காட்டிலும் தமது படையைப் பொலிவுடைத்தாகச் செய்து பாதுகாத்திருப்பதே நன்றாம்.

326. மகண் மறுத்து மொழிதல்

இருகயல் உண்கண் இளையவளை வேந்தன்
தருகென்றாற் றன்னையரு நேரார்:—செருவறைந்து
பாழித்தோள் வட்டித்தார். காண்பாம். இனிதல்லால்
வாழைக்காய் உப்புறைத்த லில். 338

(ப—பொ). இரண்டு கயல்போன்ற மையுண்ட கண்களையுடைய இளையளாயினு ளிவளை வேந்தன் தருகவென்று தூது வாவிட்டால், இவளன்னைமாரும் கொடுத்தற்கு உடம்படாராகிச் செருவிற்குப் பறையறையப் பண்ணி, வலிமையுடைய தோள்களைப் புடைத்தார்கள். நாம் இதனால் பின் விளைவதனைக் காண்பேம். எக்காலத்தும் இனிதாயிருப்ப தல்லது வாழைக்காய் உப்புறைத்தல் இல்லை.

அதுபோல மறக்குடியில் பிறந்தார்க்கு மகளிர்க்கே யாயினும் மறத்தன்மை ஒழிந்துண்டாமோ என்றவாறு.

காண்பாம் இனியென்றார், "வேந்தனும் வென்று இவ ளைக் கொண்டல்லது போகான்: மேல் விளைவதொன்று காண்பாம்" எனத் தாமும் போருக்குத் துணிந்தார் என்பது குறித்தற்கு இது மகண்மறுத்துமொழிதல். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கும் சொன்னா ராதலால், அகப்புறமும் இதனுள் அடங்கும் என்பது தோன்றக் கூறினாராம்.

(ப—ரை). இருகயல் உண்கண் இளையவளை — இரண்டு கயல் போன்ற மையுண்ட கண்களையுடைய இளையவளாகிய இவளை, வேந் தன் தருக என்றால்—வேந்தன் தருக என்று தூதனுப்பினால், தன்னை யரும்—இவள் அன்னைமாரும், நேரார்—கொடுத்தற்கு உடம்படாராய், செரு அறைந்து—செருவிற்குப் பறையறையப் பண்ணி, பாழிதோள் வட்டித்தார்—வலியுள்ள தோள்களைப் புடைத்தனர். காண்பாம்—நாம் இதனால் பின் விளைவதனைப் பார்ப்போம். வாழைக்காய் இனிதல் லால் உப்பு உறைத்தல் இல்—வாழைக்காய் எக்காலத்தும் இனிதா யிருப்பதல்லது உப்பு உறைத்தல் இல்லை.

மகண்மறுத்து மொழிதலுக்கு இலக்கணம்:—"வெம்முரணான் மகள்வேண்ட, அம்மதிலோர் மறுத்துரைத்தன்று".—புறப்பொருள் வெண்பாமாலை.

"வாழைக்காயில் உப்புறைப்பதில்லாமைபோல நம்மறக்குடியில் பிறந்த மகளிரிடத்தில் இரக்கம் உண்டாவதில்லை. நம்மறக்குடியில் பிறந்த இவ்விளையாளைத் தருகவென்று அரசன் தூதுவிட்டானுக்கவும், இவளுடைய தாய்மார் அதற்கு உடன்படாமல் போருக்கு ஆயத்தம் செய்விக்கின்றனர். அரசன் இவளைக் கொள்ளாமல் விடான். இது எங்ஙனம் முடிகின்றதோ பார்ப்போம்" என்று தாமும் போருக்குத் துணிந்தாராய் உடனிருந்த சில மறவீரர் தம்முள்ளே கூறிக்கொண் டதாகக் கூறியது இச்செய்யுள்.

# V

## 1. இல்வாழ்க்கை

327. போது

*நாணின்றி ஆகாது பெண்மை. நயமிகு*
*ஊணின்றி ஆகா துயிர்வாழ்க்கை.—பேணுங்கால்*
*கைத்தின்றி ஆகா கருமங்கள். காரிகையாய்!*
*வித்தின்றிச் சம்பிரத மில்.* 400

(ப—பொ). *நாணின்றிப் பெண்மைக்குணம் உளதா காது. இனிய ஊணின்றி உயிர்வாழ்க்கை உளதாகாது. ஆராயுங்கால், கைப்பொருளின்றிக் காரியங்கள் உள வாகா. வித்தின்றி விளையும் விளைவும் இல்லை.*

(ப—ரை). *காரிகையாய் – பெண்ணே! பேணுங்கால் – ஆராயுங் கால், பெண்மை – பெண்மைக்குணம், நாண் இன்றி – நாணின்றி, ஆகாது—உளதாகாது.*

*உயிர்வாழ்க்கை–உயிர்வாழ்க்கை, நயம் மிகு–சுவைமிக்க, ஊண் இன்றி–உணவின்றி, ஆகாது–உளதாகாது.*

*கருமங்கள் – காரியங்கள், கைத்து இன்றி – கைப்பொருளின்றி, ஆகா–உளவாகா.*

*வித்து இன்றி–வித்தின்றி, சம்பிரதம்–விளையும் விளைவு, இல்– இல்லை.*

*"உண்டி முதற்றே உணவின் பிண்டம்".—புறம்.*

*பழமொழி.—வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை.*
Of nothing comes nothing.

328. பெற்ற அளவால் உவக்க

*உரிதனிற் றம்மோ டுழந்தமை கண்டு*
*பிரிவின்றிப் போற்றப் படுவார்—திரிவின்றித்*
*தாம்பெற் றதனுல் உவவார். பெரிதகழின்*
*பாம்புகாண் பாரும் உடைத்து.*

(ப—பொ). உரிமையால் தம்மொடு பிரிவின்றிப் பயின்று பழகினமை கண்டு பாதுகாக்கப்படுவார், மனத்தின்கண் ஒரு வேறுபாடின்றிப் பாதுகாப்பானல் தாம் பெற்ற பொருளினன் உவவாது பின்பும் ஆசைப்படாநிற்பார். பெரிதகழ்ந்தால் பாம்பு காண்பாரையும் உலகம் உடைத்தாதலால், பெற்றதனல் உவக்க.

(ப—ரை). உரிதனில்–உரிமையால், தம்மோடு பிரிவின்றி உழந்தமை கண்டு–தம்மோடு பிரிவின்றிப் பழகினமை கண்டு, போற்றப் படுவார் – பாதுகாக்கப்படுவார், திரிவு இன்றி – மனத்தின்கண் ஒரு வேறுபா டின்றி, தாம் பெற்றதனல்–பாதுகாப்பானல் தாம் பெற்ற பொருளினல், உவவார் – உவவாது பின்பும் ஆசைப்படாநிற்பர். பெரிது அகழின்–மிகவும் அகழ்ந்தால், பாம்பு காண்பாரும் உடைத்து–பாம்பு காண்பாரையும் உலகம் உடைத்து.

(க—து). இரத்திஞகரத்தைக் கிண்டினல் அதனிடத்துப் பொருந்திய ரத்தினத்தின் அளவிலே திருப்தியடைதல் வேண்டும். போவாவால் பின்னும் கிண்டினல் அங்குள்ளும் பாம்பு வெளிவந்து தூர்த்துதல் கூடும். அதுபோல, நாம் பிறரிடம் உதவிபெறுங் காலத்தில் பெற்ற அளவால் உவத்தல் வேண்டும். மேலும் பெறும்பொருட்டு வருத்தினல் அவர் நம்மை வெறுத்தல் கூடும்.

"எலிச்செலவென்று தோண்டப் பாம்பு புறப்பட்டாற்போலும்" என்று கிராம்ய வழக்காக வழங்கப்படுகிறது என்று செந்தமிழ்ப் பதிப்பு எடுத்துக்காட்டுகின்றது.

### 329. புறத்தாற் பொலிவுறல்

அகத்தா லழிவு பெரிதாயக் கண்ணும்
புறத்தாற் பொலிவுறல் வேண்டும் எனைத்தும்.
படுக்கை இலாயக் கண்ணும், உடுத்தாரை
உண்டி வினவுவா ரில். 185

(ப—பொ). தம் மனையிலுள்ள வறுமை பெரிதாயினவிடத்தும், புறத்தால் காணத் தம்முடைய மேனி பொலிவு பெற்றிருத்தலைச் செய்யவேண்டும், எப்படி யா

னும்; பாயலுள் படுக்கும் ஆடையில ராகியவிடத்தும், உடுத்த உடையால் பொலிந்தாரை உண்டி வினவுவார் இல்லை ஆதலான்.

(ப—ரை). படுக்கை இலர் ஆயக்கண்ணும் – பாயலுள் படுக்கும் ஆடை இலராகியவிடத்தும், உடுத்தாரை—உடுத்த உடையால் பொலிந்தாரை, உண்டி வினவுவார் இல்—உண்டிரோ என்று கேட்பவர் இல்லை. (ஆதலால்), அகத்தால் அழிவு—தம் வீட்டிலுள்ள வறுமை, பெரிது ஆயக்கண்ணும்—பெரிதாயின விடத்தும், எனைத்தும்—எவ்விதத்தானும், புறத்தால் பொலிவு உறல்வேண்டும்—புறத்தால் காணத் தம்முடைய மேனி பொலிவுபெற்றிருத்தலைச் செய்யவேண்டும்.

(க—து). உள்ளபடி வறியராயினும் இல்வாழ்வார் தோற்றப்பொலிவுக் குரியவற்றைச் செய்தல்வேண்டும்.

330. நன்மனைவிய ருடையார்

சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பிற்றம்
இல்லாளே வந்த விருந்தோம்பிச்—செல்வத்
திடரின்றி யேமாந் திருந்தாரே, நாளும்
கடலுள் துலாம்பண்ணி னார். 255

(ப—பொ). தாம் நினைத்த காரியத்தைத் தாம் சொல்லாமைத் தம்முகத்தை நோக்கித் தம் கருத்தறியும் குணத்தையுடைய மனையாளை வந்த விருந்துகளை ஓம்பிச் செல்வமுடையராய் அரண்பெற்று இடரின்றி யிருந்தார், நாடோறும் இறைத்தற்குக் கடல்மருங்கிலே ஏற்றமிட்டாரோ டொப்பர்.

(ப—ரை). சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பின்—தாம் சொல்லாமலே தாம் நினைத்த காரியத்தைத் தம்முடைய முகக்குறிப்பால் அறிந்துகொள்ளும் குணத்தையுடைய, தம் இல்லாளே—தம்முடைய மனையாளே, வந்த விருந்து—தம்மிடத்துவந்த விருந்தினரை, ஓம்பி—உபசரிக்க, இடர் இன்றி செல்வத்து ஏமாந்து இருந்தாரே—யாதோர் இடரு மின்றிச் செல்வத்தில் அரண்பெற் றிருந்தவரே, நாளும் கடலுள் துலாம் பண்ணினார்—நாடோறும் இறைத்துக்கொள்வதற்குக் கடலினிடத்தில் ஏற்றமிட்டாரோ டொப்பர்.

(க-து) கொண்டவன் குறிப்பறிந்து நடப்பவளாய் வந்த விருந்தினரை உபசரிக்கும் மனைவியோடு இல்வாழ்க்கையை நன்கு நடத்துவோர், கடலில் ஏற்றமிட் டிறைப்பார்போல், என்றும் குறைவுடையவராகார்.

"கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி."—திரிகடுகம்.

331. நெறிமேல் மக்களை நிற்பச் செய்தல்

எந்நெறி யானும் இறைவன்றன் மக்களைச்
செந்நெறிமேல் நிற்பச் செயல்வேண்டும்.—அந்நெறி
மான்சேர்ந்த நோக்கினாய்! ஆங்க வணங்காகும்
தான்செய்த பாவை தனக்கு. 8

(ப-பொ). எல்லாவற்றானும் தந்தை தன் புதல்வனைச் செவ்விய நெறிமேல் நிற்கும் வகை அறிவுண்டாகச் செய்ய வேண்டும். அச் செய்த நெறி, மான் சேர்ந்த நோக்கினாய்! தாதைக்கே தெய்வமாகும் தான்செய்த பாவை; அதுபோலும் அத்தந்தை தனக்கு.

தாதை—தெய்வபிம்பத்தைப் பிரதிட்டை செய்தவன்.

(ப-ரை). மான் சேர்ந்த நோக்கினாய்-மானின் கண்ணையொத்த நோக்கினையுடையாய்! இறைவன்-தந்தை, தன் மக்களை-தன் புதல்வரை, எ நெறியானும்-எல்லா விதத்தாலும், செம்மை நெறிமேல் நிற்ப—நல்வழியில் நிற்கும் வகை, செயல்வேண்டும்—அறிவுண்டாகச் செய்தல்வேண்டும், தான் செய்த பாவை-தான் அமைத்த அர்ச்சாவிக்கிரகம், தனக்கு அணங்காகும்-அமைத்த தனக்கே தெய்வமாகும். அ நெறி-மக்களைச் செந்நெறியில் நிற்பச்செய்தல், ஆங்க-அதுபோலும் அத்தந்தை தனக்கு.

(க-து). பிரதிஷ்டைபெற்ற ஒரு விக்கிரகம் அதனை நிர்மித்த சில்பியால் வணங்குதற்கு உரியதாதல்போல, நன்னெறியில் நிற்கும்படி செய்யப்பட்ட புத்திரர் பெற்ற பிதாவால் போற்றுதற்கு உரியவராவர்.

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே."—புறம்.

### 332. தாயர்க்குச் சில பிள்ளைகளிடம் கண்ணோட்டம்

*ஒக்கும் வகையான் உடன்பொரும் சூதின்கண்*
*பக்கத் தொருவன் ஒருவன்பாற் பட்டிருக்கும்.*
*மிக்க சிறப்பின ராயினும் தாயர்க்கு*
*மக்களுள் பக்கமோ வேறு.* 260

(ப-பொ). தம்முள் ஒக்கும்படி சிலருடனே பொரும் சூதின்கண் மருங்கிருந்தான் ஒருவன்பால் அன்புபட்டுப் போர் காட்டும். அதுபோலத் தம்புதல்வ ரெல்லார்க்கும் ஒக்கத் தாயாகச் சிறந்தாராயினும் புதல்வருள் சிலர் பக்கத்தே அத்தாயர்க்குக் கண்ணோட்டத்தின் வேறுபா டுளதாம்.

(ப-ரை). ஒக்கும் வகையான் - தம்முள் ஒக்கும்படி, உடன் பொரும் சூதின்கண் - சிலருடனே பொருதலான சூதின்கண், பக்கத்து ஒருவன் - பக்கத்திலிருந்தவ னொருவன், ஒருவன்பால் பட்டிருக்கும் - ஒருவனிடம் அன்புபொருந்திப் போர்செய்யும் விதத்தைக் காட்டுவான். (அதுபோல), மிக்க சிறப்பினராயினும் - தம் புதல்வரெல்லார்க்கும் ஒக்கத் தாயாகச் சிறந்தாராயினும், தாயர்க்கு - தாய்மாருக்கு, மக்களுள் பக்கமோ வேறு - புதல்வருள் சிலர் பக்கத்தே கண்ணோட்டத்தில் வேறுபா டுளதாம்.

(க-து). இருவர் சூதாடுகையில் பக்கத்திலிருப்பவன் அவ்விருவருள் ஒருவன்பால் அன்புடையனாய்ப் போர் காட்டுவான். அங்ஙனமே பெற்ற பிள்ளைகளை ஒப்பப் பாரக்கத்தக்க தாய்மார் சில பிள்ளைகளிடம் கண்ணோட்டங் கொண்டிருப்பர்.

### 333. பாணற்குத் தலைமகள் வாயின்மறுத்தது

*தொடித்தோள் மடவார் மருமத்தன் ஆகம்*
*மடுத்தவர் மார்பில் மகிழ்நன் மடுப்ப*
*நெறியல்ல சொல்லனீ பாண! அறிதுயில்*
*ஆர்க்கும் எழுப்பல் அரிது.* 222

(ப—பொ). தொடியணிந்த தோளினை உடையாராகிய மடவாருடைய மருமம் தன்னுடைய ஆகத்திலே மடுப்ப, அவருடைய ஆகத்திலே மகிழ்நன் தான் மடுப்ப நிகழ்ந்ததொன்றை நெறியல்ல வென்று சொல்லா தொழிவாயாக பாணனே! பொய்யுறக்கம் உறங்குவாரை யாவராலும் எழுப்பல் அரிது. [அதுபோலும் நீ சொல்லும் வார்த்தை எங்களுக்கும்].

(ப—ரை). தொடி தோள் மடவார் மருமம்—தொடியணிந்த தோளினையுடையாராகிய மடவாருடைய மருமம், தன் ஆகம் மடுத்து—தன்னுடைய மார்பிலே மடுப்ப, அவர் மார்பில் மகிழ்நன் மடுப்ப—அவருடைய மார்பிலே மகிழ்நன் தான் மடுப்ப, நெறியல்ல சொல்லல் நீ—(நிகழ்ந்ததொன்றை) நெறியல்லவென்று நீ சொல்லா தொழிவாயாக, பாண—பாணனே! அறிதுயில் எழுப்பல் ஆர்க்கும் அரிது — பொய்யுறக்கம் உறங்குவாரை எழுப்பல் யாவர்க்கும் அரிது. (அதுபோலும் நீ சொல்லும் வார்த்தை எங்களுக்கு.)

இது பாணற்குத் தலைமகள் வாயின்மறுத்தது.

"கொடியவை கூறாதி பாணநீ கூறின்
அடிபைய விட்டொதுங்கிச் சென்று—துடியின்
இடக்கண் அனையம்யாம் ஊரற் கதனால்
வலக்கண் அனையார்க் குரை."—நாலடியார்.

**334. மகளிரைச் சார ஒழுகாமை**

விழுமிழை நல்லார் வெருள்பிணைபோல் நோக்கம்
கெழுமிய நாணை மறைக்கும்.—தொழுனையுள்
மாலையுள் மாலை மயக்குறுத் தாள்.அஃதால்
சால்பினைச் சால்பறுக்கு மாறு. 12

(ப—பொ). விழுமிய அணியினையுடைய நல்லார் வெருண்ட மான்பிணை போன்ற நோக்கங்கள், ஆடவர் மாட்டுச் செறிந்த நாணினைக் கெடுத்து மயக்கவல்ல. யமுனை என்கிற ஆற்றின்கண் மாயவனையும் மயக்கத்தின்கண்ணே

விழப்பின்னை என்பாள் தன் அழகினால் மயக்குறுத்தினாள். அம் மிகுதியை அதனினும் மிக்கதொன்று கெடுக்கு நெறி அதுவன்றே.

இதனாற் போந்த பொருள்:—நிறையினால் மிக்கம் ஆதலான் மயங்கேமென்று அறிவுடையார் மகளிரைச் சாரவொழுகல் ஆகாது என்பதாம்.

(ப—ரை). விழும் இழை நல்லார்—சிறந்த ஆபரணங்களை அணிந்த பெண்களது, வெருள் பிணைபோல் நோக்கம்—வெருண்ட மான்பிணை போன்ற நோக்கங்கள், கெழுமிய நாணை—ஆடவரிடம் செறிந்த நாணை, மறைக்கும்—கெடுக்கும். தொழுநையுள்—யமுனை என்கிற ஆற்றின்கண், மாலை—மாயவனையும், மாலையுள்—மயக்கத்தின்கண்ணே விழ, மயக்குறுத்தாள்—பின்னை என்பாள் தன் அழகினால் மயக்குறுத்தினாள். அஃது—அச்செய்கை, சால்பினை—மிகுதியை, சால்பு—அதனினும் மிக்கதொன்று, அறுக்கும் ஆறு—கெடுக்குமாறன்றே. [ஆல்—அசை].

சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில்

வஞ்சஞ் செய்தான் தொழுனைப் புனலுள்
நெஞ்சங் கவர்ந்தாள் நிறையென் கோயாம்
நெஞ்சங் கவர்ந்தாள் நிறையும் வளையும்
வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம்

என்றும்

வைய மளந்தான்றன் மார்பிற் றிருநோக்காப்
பெய்வளைக் கையாள்நம் பின்னைதா னாமென்றே
ஐயென்றாள்

என்றும் வருகின்றன.

"ஒப்புயர்வில் வேட்டோன் ஒருநிலைப்பட் டாழ்ந்தசெயல்
நப்பின்னை ஞாலம் ஒருங்கறிக....".—இன்னிலை.

335. பிறர் மனையில் தமியராய்ப் புகாமை

தூய்மை மனத்தவர் தோழர் மனையகத்தும்
தாமே தமியர் புகல்வேண்டா.—தீமையான்
ஊர்மிகின் இல்லை கரியோ. ஒலித்துடன்
நீர்மிகின் இல்லை சிறை. 190

(ப—பொ). தூய்மையையுடைய மனத்தார் தம் தோழர் மனையின்கண்ணும் தமியராகத் தாமே புகல் வேண்டா: ஒருவன் செய்தானென்று ஊரெல்லாம் உடன் பட்டு மிகுமாயின், பிறிதொரு சான் றில்லை; நீர் மிகின் சிறையு மில்லை, ஆதலான்.

(ப—ரை). தீமையான் ஊர் மிகின்—ஒருவன் தீமைசெய்தானென்று ஊரெல்லாம் உடன்பட்டு மிகுமாயின், கரியோ இல்லை—(அதனைத் தவிர்க்கத்தக்க வேறொரு) சாட்சி யில்லை. நீர் ஒலித்து உடன்மிகின்—நீர் ஒலிசெய்து மிக்கால், சிறை இல்லை—(அதனைத் தவிர்க்கத்தக்க) சிறையு மில்லை. (ஆதலால்) தூய மனத்தவர்—சுத்தமான மனமுள்ளவர், தோழர் மனையகத்தும்—தம்முடைய தோழரது மனையின் கண்ணும், தமியர்—தமியராக, தாமே புகல்வேண்டா—தாமே புகுதல் வேண்டா.

(க—து). ஒருவன் கெடுதி செய்தானென்று ஊரெல்லாம் நம்பி விட்டால், அதனைப் பரிகரிக்கும் சாட்சி கிடைக்காது. ஆகையால், நல்லார் தோழருடைய மனையின் கண்ணும் தனியாகப் புகுதல் தகுதி யன்று.

336. நிறை காவாரைச் சிறை காவாமை

நிறையான் மிகுகல்லா நேரிழை யாரைச்
சிறையான் அகப்படுத்தல் ஆகா.—அறையோ!
வருந்த வலிநினின் யாப்பினும், நாய்வால்
திருந்துதல் என்றுமோ இல். 30

(ப—பொ). ஐம்பொறிகளையும் நிறுத்தும் நிறையால் மிக மாட்டா நேரிழையாரைக் காவலான் அகப்படுக்க இயலா: அகப்படுக்கலாம் என்பார்க்கு அறைகூவுகின் றேன். வருந்த வலிபெறக் கட்டினும், நாயின்வால் செவ்வே நின்று திருந்துதல் என்றும் இல்லை, அது போல.

(ப—ரை). வருந்த—வருந்தும்படி, நாய்வால்—நாயின் வாலை, வலி நினின் யாப்பினும்—வலிபெறக் கட்டிவைத்தாலும், திருந்துதல்—அது ஒழுங்காக நின்று திருந்துதல், என்றும் இல்—என்றும் இல்லை. (அது

போல), நிறையால்-ஐம்பொறிகளையும் நிறுத்தும் நிறையால், மிகு கல்லா-மாட்சிமைப்படமாட்டாத, நேரிழையார் தம்மை-நேரிழையாரை, சிறையான்-காவலால், அகப்படுத்தல் ஆகா(து)-வசப்படுத்துதல் முடியாது. அறையோ - முடியுமென்பார்க்கு அறைகூவுகின்றேன். [ஓ-அசை].

அறைகூவுதல்-பொர அழைத்தல், Challenge.

"சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை."—திருக்குறள்.

"உண்டியுட் காப்புண் டுறுபொருட் காப்புண்டு
கண்ட விழுப்பொருட் கல்விக்குக் காப்புண்டு
பெண்டிரைக் காப்ப திலமென்று வைத்துக்
கண்டு மொழிந்தனர் கற்றறிந் தோரே."—வளையாபதி.

பழமொழி.—நாயின் வாலைக் குணக்கெடுக்க லாமா. Crooked by nature is never made straight by education. A bag of fleas is easier to keep guard over than a woman.

337. வறியாரிடம் செல்வர் விருந்து செல்லவேண்டா

நல்கூர்ந் தவர்க்கு நனிபெரிய ராயினுர்
செல்விருந் தாகிச் செலவேண்டா.—ஒல்வ
திறந்தவர் செய்யும் வருத்தம், குருவி
குறங்கறுப்பச் சோருங் குடர். 100

(ப-பொ). மிகப்பெரிய செல்வராயினுர் வறுமையுடையார்க்கு விருந்தாகிச் செல்லவேண்டா. செல்வாராயின் அச்செல்லப்பட்ட வறுமையுடையாராயினுர் தமக்கு இயல்வதனைக் கடந்து விருந்துசெய்யும் வருத்தம், குருவி குறங்கறுப்பவே குடர் சோருமது போலும்.

(ப-ரை). நனி பெரிய ராயினுர் - மிகப் பெரிய செல்வராயினுர், நல்கூர்ந்தவர்க்கு-வறுமையுடையாருக்கு, செல்விருந்து ஆகி செ(ல்)ல வேண்டா-விருந்தாகிச் செல்லவேண்டா. (செல்வாராயின்), அவர்-அவ்வறியவர், ஒல்வது இறந்து-தமக்குக் கூடுமானதைக் கடந்து, செய்

யும்—விருந்து செய்யும், வருத்தம் – வருத்தமானது, குருவி குறங்கு அறுப்ப குடர் சோரும்—குருவியின் தொடையை அறுத்தவளவில் அதன் குடல் சோருவது போலும்.

(க—து). தம்முடைய சக்தியைக் கடந்து விருந்திட்டால் வறியவர் மிகவும் நொந்துபோவ ராதலால், செல்வர் அவர்க்கு விருந்தாகிச் செல்லவேண்டா.

338. ஏனைய ஈந்தும் இன்சொல் ஈயாமை

உடுக்கை மருந்துறையுள் உண்டியோ டின்ன
கொடுத்துக் குறைதீர்த்த லாற்றி—விடுத்தின்சொல்
ஈயாமை யென்ப, எருமை எறிந்தொருவர்
காயக்கு லோபிக்கும் ஆறு. 167

(ப—பொ). உடுக்கையும் மருந்தும் உறையுமிடமும் உணவும் என் இப்பெற்றிப்பட்டனவற்றைப் பிறர்க்குக் கொடுத்து மற்றவர் வறுமை தீர்த்தலை வல்லாராய் விடுத்துவைத்து இனிய சொற்களைச் சொல்லாமை என்று சொல்லுவர், தின்னவேண்டி எருமையெறிந்த ஒருவர் காயக்கு லோபஞ் செய்யுமாறுபோலும.

(ப—ரை). உடுக்கை மருந்து உறையுள் உண்டியோடு—உடுக்கையும் மருந்தும் உறைவிடமும் உணவும், இன்ன – என இப்பெற்றிப்பட்டவைகளை, கொடுத்து—பிறர்க்குக் கொடுத்து, குறை—அவர் வறுமையை, தீர்த்தல் ஆற்றி விடுத்து—தீர்த்தலை வல்லராய் அனுப்பி வைத்து, இன்சொல் ஈயாமை – இனிய சொற்களைச் சொல்லாமையானது, எருமை எறிந்த ஒருவர்—தின்ன வேண்டி எருமையைக் கொன்ற ஒருவர், காயக்கு – (அதனைச் சமைத்தற்குரிய) காயத்துக்கு, லோபிக்கும் ஆறு—லோபஞ் செய்யுமாறு போலும், என்ப – என்று பெரியோர் சொல்லுவர். [காயம்—Condiments].

(க—து). பிறருடைய வறுமையைத் தீர்ப்பதற்கு எவ்வளவு செய்தும் இனிய வார்த்தை சொல்வதற்குப் பின்வாங்குவதானது, உண்ணும்படி எருமையைக் கொன்றவர் அதைச் சமைப்பதற்குரிய காயம் வாங்க லோபஞ்செய்வது போலும்.

339. நடுவு நிலைமை

தத்தமக்குக் கொண்ட குறியோ தவமல்ல.
செத்துக, சாந்து படுக்க, மனன்—ஒத்துச்
சகத்தனாய் நின்றொழுகும் சால்பு தவமே,
நுகத்துப் பகலாணி போன்று. 95

(ப—பொ). தத்தமக்குச் சமயத்தார் கொண்ட வேறுபட்ட குறிகளையுடைய வேடங்களன்று தவமாவது. தன்னை ஒருவன் வாச்சியால் செத்துக, சந்தனக் குழம்பை மேலே பூசுக, தான் மனம்பொருந்தி அவ்விரு திறத்தார்க்கு நடுவனாய் நின்றொழுகும் அமைதி தவமாவது; நுகத்தின்கண் நடுவுநிற்கும் பகலாணி போல.

(ப—ரை). தத்தமக்குக் கொண்ட குறி அல்ல தவம்—தத்தமக்குச் சமயத்தார் கொண்ட வேறுபட்ட குறிகளையுடைய வேடங்களன்று தவமாவது. செத்துக—தன்னை ஒருவன் வாச்சியால் கொல்லுக; சாந்து படுக்க-சந்தனக்குழம்பு தன்மேலே பூசுக; நுகத்து பகலாணிபோன்று—நுகத்தின்கண் நடுவுநிற்கும் பகலாணிபோல, மனன் ஒத்து சகத்தனாய் நின்று—தான் மனம்பொருந்தி அவ்விரு திறத்தாருக்கும் நடுவனாய் நின்று, ஒழுகும் சால்பே தவம்—ஒழுகும் அமைதியே தவமாவது. [ஓ—அசை].

(க—து). இன்னா செய்வோனுக்கும் இனிது செய்வோனுக்கும் நடுவு நிலைமையாய் ஒழுகுவதே ஒருவனுக்குத் தவமாம்.

'சமத்தனாய்' என்றும் பிரதிபேதம் உண்டு.

340. அடைக்கலப் பொருளைக் கொள்ளாது கொடுத்தல்

உள்ள தொருவர் ஒருவர்கை வைத்தக்கால்
கொள்ளும் பொழுதே கொடுக்கதாம்—கொள்ளார்:
நிலைப்பொரு ளென்றதனை நீட்டித்தல் வேண்டா.
புலைப்பொருள் தங்கா வெளி. 17

(ப—பொ). தமக்கு உள்ளதொரு பொருளை ஒருவர் தம் கையின்கண் வைத்தக்கால், அப்பொருளை வைத்த

வர்கள் வேண்டிய போதே வைக்கப்பட்டார் தாம் கொள்ளாதே கொடுக்க. தமக்கு நிலைமையுடைய பொருளென்று கருதி அவர்க்குக் கொடாதே நீட்டித்தல் வேண்டா. புலையர்மாட்டுள்ள பொருள் அடங்காவாய் வெளியாம் ஆதலான் அடைக்கலப் பொருளை மறைக்க இயலாது.

(ப—ரை). உள்ளது—தனக்குள்ள தொருபொருளை, ஒருவர்—ஒருவர், ஒருவர்கை — மற்றொருவர் கையின்கண், வைத்தக்கால் — வைத்தால், கொள்ளும் பொழுதே—அப்பொருளை வைத்தவர் கொள்ளவேண்டிய பொழுதே, தாம் கொள்ளார் கொடுக்க—வைக்கப்பட்டார் தாம் அப்பொருளைக் கொள்ளாமல் கொடுத்துவிடுக. நிலைப்பொருள் என்று—தமக்கு நிலைமையுடைய பொருளென்று நினைத்து, அதனை நீட்டித்தல் வேண்டா — அதனைக் கொடாமல் தாமதித்தல் வேண்டா. புலைப் பொருள் தங்கா வெளி—புலையர்மாட் டுள்ள பொருள் அடங்காவாய் வெளியாம்.

(க—து). வைத்தவர் கேட்டபோதே அடைக்கலப் பொருளைக் கொடுத்துவிடுக. கொடாவிட்டால் அப்பொருள் வெளிப்பட்டுவிடும்.

341. துணை யுடைமை

நன்றே ஒருவர்த் துணையுடைமை. பாப்பிடுக்கண்
நண்டேயும் பார்ப்பான்கண் தீர்த்தலான்,—விண்டோயும்
குன்றகல் நன்னாட! கூறுங்கால் இல்லையே
ஒன்றுக் குதவாத ஒன்று. 111

(ப—பொ). ஒருவரைத் துணையாகக் கொண்டு ஒருவன் துணையுடையனாவது நல்லதொன்றே காண். பாம்பிற் கடியுண்டொரு பார்ப்பான் பட்ட இடும்பையை அவனால் உதவியைப்பெற்ற ஞெண்டு தீர்த்தலான், விண்தோயும் குன்றகல் நன்னாடனே! சொல்லுங்கால் ஒன்றற்குதவாத ஒன்று இல்லை.

(ப—ரை). விண் தோயும் குன்று அகல நன்னாட—ஆகாயத்தை அளாவிய குன்றுகளுள்ள அகன்ற நன்னாடனே! ஒருவர் துணையுடைமை நன்றே—ஒருவரைத் துணையாகக்கொண்டு ஒருவன் துணையுடைய

னுவது நல்லதொன்றே. பார்ப்பான்கண் நண்டேயும்—ஒரு பார்ப்பா னிடத்து (அவன் தாய் துணையாகக் கொடுத்த) நண்டு தானும், பாப்பு இடுக்கண்—ஒரு பாம்பினுலே சேர்தலான துன்பத்தை, தீர்த்தலான்—ஒழித்தலால், கூறுங்கால்—சொல்லுமிடத்து, ஒன்றுக்கு உதவாத ஒன்று இல்லை—ஒன்றற் குதவாத ஒன்று இல்லை. [ஏ—அசை].

கதை பஞ்சதந்திரத்தில் உரைத்திருக்குமாறு:—தத்தன் என்னும் பார்ப்பனச் சிறுவன் அன்னையிடம் சென்று, "யான் ஆசிரியன் கரும மாய் வேற்றூர்க்குச் செல்லுதல் வேண்டும். கட்டமுது முடிந்து தருதி" என்று வேண்டினுன். அன்னை, "நன்று 'துணையோடல்லது நெடுவழி போகேல்' என்பர். உனக்கு வேறு துணை இல்லாமையால் ஒரு நண்டை ஒரு மட்கலயத்தில் பெய்து தருவேன். அதையேனும் துணையாகக் கொண்டுசெல்க" என்று சொல்லிக் கட்டமுதோடு நண்டு பெய்த கலயத்தையும் கொடுத்தாள். சிறுவன் சென்ற கருமத்தை முடித்துத் திரும்பிவருகையில் வேனிலால் இளைப்புண்டு ஒரு மரநிழ லில் அயர்ந்து கண்வளர்ந்தான். கண்வளராநிற்கையில் ஒரு பாம்பு அவனைத் தீண்டவந்தது, அருகிலிருந்த கலயத்தை ஆராய்தற்பொருட்டு அதனுள் தலையை நீட்டியது. அப்போது கலயத்திருந்த நண்டு பாம் பின் தலையைத் தன் கொடுக்கால் இடுக்கிக் கொன்றது.

பழைய பொழிப்புரையில் சுட்டிய கதை வேருக இருக்கிறது.

*பழமொழி.*—Nothing so bad as not to be good for something. Even a pin is good for something.

342. புலான் மறுத்தல்

விடலரிய துப்புடைய வேட்கையை நீக்கிப்
படர்வரிய நன்னெறிக்கண் நின்ருர்—இடருடைத்தாய்ப்
பெற்ற விடக்கு நுகர்தல், கடனீந்திக்
கற்றடியு ளாழ்ந்து விடல். 26

(ப—பொ). விடுதற்கரிய நுகர்வினை விரும்பும் வேட் கையை நீக்கி ஒழுகுதற்கரிய நன்னெறி யாகிய தவத் தின்கண் நின்ருர். மெய்ப்பிணியால் தமக்கு இடர்வந்த

காலத்தின்கண் அழிந்து, தாம் கொண்ட சீலத்துக்குக் குற்றமாம்படி பெற்றதொரு விடக்கைத் தின்றுய்தல், கடலை நீந்தி ஏறிக் கன்றின் உள்ளடியின் நீரிலே அழுந்தி யதனோ டொக்கும்.

(ப-ரை). விடல் அரிய துப்புடைய வேட்கையை நீக்கி-விடுதற் கரிய நுகர்ச்சியை விரும்பும் விருப்பத்தை நீக்கி, படர்வு அரிய நன்னெறிக்கண் நின்றார்-ஒழுகுதற்கரிய நன்னெறியாகிய தவத்தின்கண் நின்றார், இடர் உடைத்தாய்-(வியாதியால் துன்பம் நேரிட்டபோது) தாம் கொண்ட ஒழுக்கத்துக்குக் குற்றமுண்டாம்படி, பெற்ற விடக்கு-பெற்ற மாமிசத்தை, நுகர்தல்-உண்டு பிழைத்தல், கடல் நீந்தி கற்றடியுள் ஆழ்ந்துவிடல்-கடலை நீந்தியேறிக் கன்றின் குளம்படி நீரிலே அழுந்தியதனோ டொக்கும்.

(க-து). எல்லா ஆசையும் விட்டுத் தவநெறியிலே நிற்பவர், வியாதியின் கொடுமையால் மாமிசம் உண்ண விரும்புதல், கடனீரைக் கடந்தவன் பின் கன்றடிநீரிலே அழுந்துதல் போலாம்.

343. அருள்புரியாது உயிர்ப்பலி கொடுத்தல்

செறலிற் கொலைபுரிந்து சேணுவப்பா ராகி
அறிவின் அருள்புரிந்து சொல்லார்—பிறிதின்
உயிர்செகுத் தூன்றுய்த் தொழுகுத லோம்பார்,
தயிர்சிதைத்து மற்றொன் றடல். 164

(ப-பொ). செற்றம் கொண்டாரைப் போலக் கொலையை விரும்பி, தமக்கு மறுமையின்கண்ணே தாம் மேற் செய்ததா நின்ற இன்பத்தைப் பெற உவப்பாராகி, தம் அறிவினால் பிறர்க்கு அருளைச் செய்து விரும்பிச் சொல்லாராய், பிறிதொன்றினுடைய உயிரை மறுமைக்கு நன்மைக்குக் காரணமாமென்று அதனைக் கொன்று ஊனினை நுகர்ந்து, நல்லாராய் ஒழுகுதல் பாதுகாவாதே தான் சோற்றுக்குக் கறியாகிய தயிரைச் சிதைத்து மற்றொரு கறியாக அடுதலோ டொக்கும்.

(ப—ரை). செறலின் கொலை புரிந்து—கோபங் கொண்டாரைப் போல் கொலையை விரும்பி; சேண் உவப்பார் ஆகி—தாம் மறுமையின் கண் இன்பத்தைப் பெற உவப்பாராகி, அறிவின் அருள் புரிந்து சொல்லார்—தம் அறிவினால் பிறர்க்கு அருளைச்செய்து விரும்பிச் சொல்லாராய்; பிறிதின் உயிர் செகுத்து—பிறிதொன்றினுடைய உயிரை (மறுமை யின்பத்துக்குக் காரணமாமென்று அதனைக்) கொன்று, ஊன் துய்த்து—ஊனை உண்டு, ஓம்பார் ஒழுகுதல்—(நல்லாராய் ஒழுகுதலைப்) பாதுகாவாதே இங்ஙனம் ஒழுகும் ஒழுக்கம், தயிர் சிதைத்து—சோற்றுக்குக் கறியாகிய தயிரைச் சிதைத்து, மற்றொன்று அடல்—மற்றொரு கறியாக அடுதல்போலும்.

இது உயிர்ப்பலி கொடுத்து உண்டலை விலக்கியது.

(க—து). அருள்செய்து பெறலான நன்மையை விட்டு உயிர்ப்பலி கொடுத்துப் பெறலான நன்மையானது, தன்னியல்பில் கறியாகத்தக்க தயிரைச் சிதைத்து மற்றொரு கறியாக அடுதல்போலாம்.

## 344. நன்மை செய்தவர்க்கு உறுதி சூழ்தல்

நன்கொன் றறிபவர் நாழி கொடுப்பவர்க்
கென்றும் உறுதியே சூழ்க. எறிதிரை
சென்றுலாம் சேர்ப்ப! அதுபோல நீர்போயும்
ஒன்றிரண்டாம் வாணிக மில். 275

(ப—பொ). நன்றாக ஒன்றை உணர்ந்தவர் நாழி அரிசியே யாயினும் தருவார்க்கு ஒருநாள் ஒழியாதே உறுதியே நினைக்க. எறிதிரை சென்றுலாம் சேர்ப்பனே! கடலின் நடுவே போயும் ஒன்று இரண்டாம் வாணிகம் அது போல்வது இல்லை.

(ப—ரை). எறி திரை சென்று உலா(வு)ம் சேர்ப்ப—எறியும் அலைகள் போய் உலாவும் கடற்சேர்ப்பனே! ஒன்று நன்கு அறிபவர்—(ஒருவர் செய்த) ஒரு நன்றியை மறவாதவர், நாழி கொடுப்பவருக்கு—நாழி அரிசியேயாயினும் தருவாருக்கு, என்றும்—ஒருநாளொழியாமல், உறுதியே சூழ்க—உறுதியே நினைக்க. நீர் போயும்—கடலின் நடுவே

போயும், ஒன்று இரண்டாம். வாணிகம்—ஒரு பொருள் இரட்டித்த லான லாபத்தைக் கொடுக்கும் வியாபாரம், அதுபோல இல்லை—அது போல வேறில்லை.

(க—து). வைத்த முதற்பொருள் இருமடியாகத்தக்க வர்த்தகம், நன்றி செய்தவர்க்கு என்றும் நன்மை நினைத்தலே.

345. நன்மை செய்தவர் காயினும் அவரைக் காயாமை
தமனென் றிருநாழி ஈத்தவ னல்லால்
நமனென்று காயினும் தான்காயான் மன்னே
அவனிவ னென்றுரைத் தெள்ளி.மற் றியாரே
நமநெய்யை நக்கு பவர். 35

(ப—பொ). தன்னை உறவென்று தனக்கு இருநாழியா யினும் உதவினவன் தன்னைக் காயுமத்துணையல்லது, நம் சுற்றத்தானென் றிகழ்ந்து தனக்கு உதவியவன்றன்னை அவனிவனென்று இகழ்ந்துரைத்துத் தான் காயல் ஆகாது: தெய்வத்தை ஆட்டிய நெய்யைக் கூசாதே நக் குவார் யாவரும் இல்லை, ஆதலால்.

(ப—ரை). தமன் என்று—தன்னை உறவினனென்று, இருநாழி—இருநாழியாயினும், ஈத்தவன்—உதவினவன், காயினும் (காய்தல்) அல் லால்—காய்ந்தாலும் காயுமவ்வளவல்லது, நமன் என்று எள்ளி—நம் சுற் றத்தான் என்றிகழ்ந்து, அவன் இவன் என்று மன் உரைத்து—(உத வினவனை) அவனிவனென்று மிகவும் உதாசினமாகப் பேசி, தான் காயான்—ஒருவன் காய்தல் ஆகாது. நம நெய்யை நக்குபவர் யார்—தெய்வத்தை மூழுக்காட்டி அதன்மேல் ஒட்டியுள்ள நெய்யைக் கூசா மல் நக்குவார் யாவரு மில்லை. [ஏ—மற்று—ஏ—அசை].

(க—து). தமக்கு நன்மைசெய்யும் தெய்வம் தம்மை ஒறுத்தாலும், அதனை மூழுக்காட்டி அதன்மேல் ஒட்டியுள்ள நெய்யைக் கூசாமல் நக்கார். தமக்கு நன்மை செய்தவர் தம்மைக் காய்ந்தாலும், தாம் அவ ரை இகழ்ந்து காயார்.

### 346. உபகாரத்துக்கு அபகாரம்

நாடி நமரென்று நன்குபுறந் தந்தாரைக்
கேடு பிறரோடு சூழ்தல், கிளர்மணி
நீடுகல் வெற்ப! நினைப்பின்றித் தாமிருந்த
கோடு குறைத்து விடல். 81

(ப—பொ). ஆராய்ந்து நமக்கு இவர் தமராவரென்று மதித்து மிகவும் தம்மைப் புறந்தந்தாரைப் பிறரோடு கேடு சூழ்தல், கிளர்மணி நீடுகல் வெற்பனே! உணர்வின்றித் தாம் ஏறியிருந்த மரக்கொம்பினைக் குறைத்துவிட்டதனோ டொக்கும்.

(ப—ரை). கிளர்—விளங்குதலான, மணி—மணிகள் பொருந்திய, நீடு கல்—நீண்ட பாறைகள் உள்ள, வெற்ப—வெற்பனே! நமர் என்று நாடி—இவர் நம் உறவினரென்று கருதி, நன்கு புறந்தந்தாரை—மிகவும் தம்மைக் காப்பாற்றினவருக்கு, பிறரோடு கேடு சூழல்—அயலவரோடு கூடிக் கேட்டைத் தருவனவற்றைச் செய்ய எண்ணுதலானது, தாம் இருந்த கோடு—தாம் ஏறியிருந்த மரக்கொம்பினை, நினைப்பு இன்றி—உணர்வின்றி, குறைத்துவிடல்—வெட்டிவிடுவதனோ டொக்கும்.

(க—து). தான் ஏறியிருந்த மரக்கிளையை நினைவின்றி வெட்டினவன் அங்குநின்றும் விழுந்து அழிவது போல, ஒருவர் செய்த உபகாரத்தை மறந்து அவருக்கு அபகாரத்தைச் செய்தவன் அழிவடைவது நிச்சயம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்: உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."—திருக்குறள்.

### 347. நன்மை செய்தவரைப் புறங்கூறுதல்

பண்டின்ன ரென்று தமரையும் தம்மையும்
கொண்ட வகையால் குறைதீர நோக்கியக்கால்,
விண்டவரோ டொன்றிப் புறனுரைப்பின், அஃதாலவ்
உண்டவில் தீயிடு மாறு. 133

(ப—பொ) பண்டு இவர் இப்பெற்றியார் என்று தம் சுற்றத்தாரையும் தம்மையும் மனத்தின் மதித்துக் கொண்ட வகைக்குத் தக்கபடியான் தம் வறுமை தீரச் சிலரைச் சிலர் நோக்கினால், அந்நோக்கப்பட்டவர்கள் அந்நோக்கினாருடைய பகைவருடனே ஒன்றிப் புறங் கூறின், அதுவன்றோ தாம் உண்ட இல்லைத் தீயிடு மாறு.

(ப—ரை). பண்டு—முன், இன்னர் என்று—இவர் இச்சிறப்புடையாரென்று, தமரையும்—தம் சுற்றத்தாரையும், தம்மையும்—தம்மையும், கொண்ட வகையால்—மனத்தில் மதித்துக்கொண்ட விதத்துக்கு ஏற்றபடி, குறை தீர—தம் வறுமை தீர, நோக்கியக்கால்—தம்மைச் சிலர் நோக்கினால், விண்டவரோடு ஒன்றி—அவ்வாறு நோக்கப்பட்டவர் (அந் நோக்கினாருடைய) பகைவருடனே இணங்கி, புறன் உரைப்பின்—புறங்கூறினால், அஃது—அது, உண்ட அ இல்—தாம் உண்ட அவ் வீட்டை, தீ இடுமாறு—தீயிடுவதனோ டொக்கும். [ஆல்—அசை].

(க—து). தன்னையும் தன் சுற்றத்தாரையும் ஆதரித்தவருடைய பகைவரோடு தான் சேர்ந்துகொண்டு அவரைப் பழிதூற்றுதல், உண விட்டவர் வீட்டிலே தீ வைப்பது போலாம்.

## 2. உறவினர்

348. அநுதாபம் இல்லாதவர் உறவு

தமக்குற்ற தேயாகத் தம்மடைந்தார்க் குற்ற
தெமக்குற்ற தென்றுணரா விட்டக்கால் என்னும்?
இமைத்தருவி பொன்வரன்றும் ஈர்ங்குன்ற நாட!
உமிக்குற்றுக் கைவருந்து மாறு. 368

(ப—பொ). தம்மை யடைந்தார்க்கு வந்துற்ற துன்பம் அவர் தமக்கு வந்துற்றதாகக் கருதி எமக்கு வந்துற்ற தென்று நினையாமல் இருந்துவிடுவாராகில், அவரை அடைந்தார்க்கு அதனால் என்ன பயன் உண்டாகும்? அருவி விளங்கிப் பொன்னைக் கொழிக்கும் ஈரபாகமுடைத்தாகிய குன்றநாடனே! உமியைக் குற்றுக் கை வருந்தும் நெறியோ டொக்கும்.

(ப—ரை). அருவி இமைத்து பொன் வான்றும் ஈரம் குன்றம் நாட—அருவி விளங்கிப் பொன்னைக் கொழிக்கும் குளிர்ந்த குன்ற நாடனே! தம் அடைந்தார்க்கு உற்றது—தம்மை யடைந்தார்க்கு வந்துற்ற துன்பம், தமக்கு உற்றதே ஆக—தமக்கு வந்துற்றதாகவே எண்ணி, எமக்கு உற்றதென்று உணராவிட்டக்கால்—எமக்கு வந்துற்றதென்று ஒருவர் நினையாமல் இருந்துவிடுவாராகில், என் ஆம்—அவரை அடைந்தார்க்கு அதனால் என்னபயன் உண்டாம்? உமி குற்று கைவருந்தும் ஆறு—உமியைக் குற்றுக் கைவருந்தும் நெறியொடொக்கும்.

(க—து). உற்றார்க் குற்ற துன்பத்தைத் தமக்குற்றதாகக் கொள்ளாதவரோடு உறவாடுதல், உமிக் குற்று ஒரு நன்மையும் பெறாமல் கைசலிப்பதுபோல், ஒரு நன்மையும் பெறாமல் மனஞ்சலிப்பதற்கு இடமாகும்.

திரிகடுகத்தில் "வெல்வது வேண்டி" என்னும் பாட்டில் "உமிக் குற்றுக் கைவருந்து வார்" என இப்பழமொழி வருகின்றது.

349. வறுமையை உறவினர் தீராவிடத்துச் செய்யத்தக்கது

சேர்ந்தா ரொருவரைச் சேர்ந்தொழுகப் பட்டவர்
தீர்ந்தாராக் கொண்டு தெளியினும்,—தேர்ந்தவர்க்குச்
சொல்லாமை காணுக்கால் செல்லும்வாய் என்னுண்டாம்?
எல்லாம்பொய் அட்டூணை வாய். 213

(ப—பொ). தம்மைச் சேர்ந்தா ரொருவரை அவரால் சேர்ந்தொழுகப்பட்டவர் தமக்குத் தீர்ந்த உறவாகக் கொண்டு ஒழுகினாராயினும், ஆராய்ந்து அச்சேர்ந்தவர்க்குச் சொல்லாத வறுமையைக் கண்டு தீராக்கால், அவர்க்குச் செல்லுநெறி மற்றென் உண்டாம்? யாவரும் அட்டுண்ணும் ஊணுக்கு ஆவன செய்வது மெய், அல்லாத செயலெல்லாம் பொய்.

(ப—ரை). சேர்ந்தார் ஒருவரை—தம்மைச் சேர்ந்தார் ஒருவரை, சேர்ந்தொழுகப்பட்டவர்—அவரால் சேர்ந்தொழுகப்பட்டவர், தீர்ந்தாரா(க்)க் கொண்டு தெளியினும்—முடிந்த உறவினராகக்கொண்டு ஒழுகினாராயினும், தேர்ந்து—ஆராய்ந்து, அவர்க்கு—அவருக்கு, சொல்லாமை—சொல்லாத வறுமையை, காணுக்கால்—கண்டு தீராக்கால், செல்லும்வாய்—

அவர் செல்லும் நெறி, என் உண்டாம்—வேறு என்ன உண்டாம்? அட்டேனே வாய்—யாவரும் சமைத்துண்ணும் உணவினுக்கு அவசியமான வைகளைச் செய்வதே மெய்: எல்லாம் பொய்—அல்லாத செயலெல்லாம் பொய்.

(க—து). தீர்ந்த உறவினராகத் தம்மைக் கொண்ட செல்வர் தமது வறுமையைத் தீர்க்காவிட்டால், தாம் செய்யலாவது உணவுபெறுதற்கான முயற்சியைத் தாமே செய்தலாம்: அச்செல்வரால் நன்மைபெற முயல்வது வீணே.

350. சுற்றத்தா ரிலக்கணம்

அல்ல லொருவர்க் கடைந்தக்கால் மற்றவர்க்கு
நல்ல கிளைகள் எனப்படுவார்—நல்ல
வினைமரபின் மற்றதனை நீக்கும் அதுவே
மனைமர மாய மருந்து. 53

(ப—பொ). ஒருவர்க்குத் துன்பம் வந்தக்கால் அவர்க்கு மிக்க கிளைகள் என்று சொல்லப்படுகின்றவர்கள் நல்ல செய்கை மரபினாலே அத்துன்பத்தை நீக்கிய செய்கை, மனையின்கண் நின்ற மருந்தாய மரத்தோடொக்கும்.

(ப—ரை). ஒருவர்க்கு அல்லல் அடைந்தக்கால்—ஒருவர்க்குத் துன்பம் வந்தக்கால், அவர்க்கு நல்ல கிளைகள் எனப்படுவார் — அவர்க்கு மிக்க உறவினரென்று சொல்லப்படுகின்றவர், நல்ல வினை மரபின்—நல்ல செய்கை மரபினாலே, அதனை—அத்துன்பத்தை, நீக்கும்—நீக்குதலான, அது—அச்செய்கை, மனை மருந்து ஆய மரம்—மனையின்கண் நின்ற மருந்தாய மரத்தோடொக்கும். [மற்று—ஏ—அசை].

(க—து). தன்னை அடைந்தாருடைய நோயைத் தீர்ப்பது மருந்து மரத்துக் குரிய தன்மை. அங்ஙனமே தம்மை அடைந்தாருடைய துன்பங்களைக் களைதலே சுற்றத்தாருக் குரிய இலக்கணம்.

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்."—திருக்குறள்.

351. உதவுவோர் உறவினரே

மெய்யா உணரிற் பிறர்பிறர்க்குச் செய்வதென்?
மையார் இருங்கூந்தல் பைந்தொடி! எக்காலும்
செய்யா ரெனினும் தமர் செய்வர். பெய்யுமாம்
பெய்யா தெனினு மழை. 109

(ப—பொ). உண்மைத் தன்மையால் ஆராயின் பிறர்க்குப் பிறர் செய்வது என்னுண்டாம்? மையார்ந்த பெரிய கூந்தலையும் பைந்தொடியையும் உடையாய்! எப்பொழுதும் செய்யார் என்று கருதும்படி இருந்தாராயினும் தமராயினாரே தமக்கு ஒன்றைச் செய்வார்: தன்பருவத்தில் பெய்த தில்லையாயினும் பின்னையும் பெய்வது மழையே, அதுபோல.

(ப—ரை). மை ஆர் இருங் கூந்தல் பைந்தொடி—கருமை ஆர்ந்த பெரிய கூந்தலையும் பைந்தொடியையும் உடையாய்! மெய்யா உணரின்—உண்மைத் தன்மையால் ஆராயின், பிறர்க்கு பிறர் செய்வது என்—பிறர்க்குப் பிறர் செய்வது என்னுண்டாம்? மழை பெய்யாது எனினும் பெய்யும்—மழை பருவத்தில் பெய்ததில்லையாயினும் பின்னையும் பெய்யும். (அதுபோல), எக்காலும்—எப்பொழுதும், செய்யார் எனினும்—செய்யாரென்று எண்ணும்படி இருந்தாராயினும், தமர்—உறவினரே, செய்வர்—தமக்கு ஒன்றைச் செய்வார்.

(க—து). ஒருதவியும் செய்யார்போல் தோன்றினும் உறவினர் போல் மற்றவர் உதவிசெய்யார்.

352. உறவினர் பிரியாமல் பொருந்துதல்

முன்னின்னா ராயினும் மூடும் இடர்வந்தால்
பின்னின்னா ராகிப் பிரியார் ஒருகுடியார்.
பொன்னுச் செயினும் புகாஅர், புனலூர!
துன்னினா ரல்லார் பிறர். 66

(ப—பொ). முன்பு ஒரு காரணத்தால் இன்னாராயினும் தம்மை முழுத்தும் இடர் வந்தால் பின் இன்னாராகிப்

பிரியாதே பொருந்துவர் ஒருகுடிப் பிறந்தார். பொன்னாகப் பிறரைச் செய்யினும் பிறர் தமக்கு ஓரிடர் வந்தால் அவ்விடத்தின் வந்து புகுதார்: புனலூரனே! ஒரு குடிப் பிறவாதார் துன்னினாரல்லர் ஆதலான்.

(ப—ரை). புனல் ஊர — நீர்வளம் உள்ள ஊரனே! ஒரு குடியார்—ஒரு குடிப்பிறந்தார், முன் இன்னார் ஆயினும்—முன்பு ஒரு காரணத்தால் இன்னாராயினும், மூடும் இடர் வந்தால்-தம்மை முழுத்தும் துன்பம் வந்தால், பின் இன்னாராகி பிரியார்—பின் இன்னாராகிப் பிரியாமலே பொருந்துவர். பிறர் துன்னினார் அல்லார்—ஒருகுடிப் பிறவாதவர் துன்னினாரல்லர் ஆதலால், பொன்னா செய்யினும்—பொன்னாகப் பிறரைச் செய்யினும், புகார்—தமக்கு ஓரிடர் வந்தால் பிறர் அவ்விடத்தில் வந்து புகுதார்.

(க—து). பிறருக்கு ஒருவர் எவ்வளவு நன்மை செய்திருப்பினும், அவருக்குப் பேரிடர் வந்தபோது சுற்றத்தார்போல் பிறர் உதவியாகார்.

> "பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
> சுற்றத்தார் கண்ணே யுள."—திருக்குறள்.

### 353. உறவினர் உரைக்கும் உறுதியைக் கேட்டல்

> உளைய உரைத்து விடினும் உறுதி
> கிளைகள்வாய்க் கேட்பதே நன்றே.—விளைவயலுள்
> பூமிதித்துப் புட்கலாம் பொய்கைப் புனலூர!
> தாய்மிதித்த ஆகா முடம். 299

(ப—பொ). தம்மை உளைய உரைப்பாராயினும் தமக்கு உறுதியாயினவற்றைத் தம் கிளைகள்வாய்க் கேட்டுக்கொள்வது நன்று: விளைவயலுள் பூக்களை மிதித்துப் புள்ளினங்கள் தம்மில் செறியும் பொய்கைப் புனலூரனே! தாய் மிதித்தன முடமாகா, ஆதலான்.

(ப—ரை). விளை வயலுள்—தானியங்கள் விளைகின்ற வயலில், பூ மிதித்து — பூக்களை மிதித்து, புள் கலாம்—பறவைகள் தம்மில் செறியும்,

பொய்கை புனல் ஊர-பொய்கைப் புனலூரனே! தாய் மிதித்த – தாய் மிதித்தன, முடம் ஆகா – முடமாகா. (ஆதலான்), உளைய உரைத்து விடினும் – தம்மை மனம் வருந்த உரைப்பாராயினும், உறுதி – தமக்கு உறுதியாயினவற்றை, கிளைகள்வாய் கேட்பது – தமது உறவினரிடம் கேட்டுக்கொள்வது, நன்று–நன்றாகும். [ஏ-ஏ-அசை].

(க–து). தனது நன்மையின் பொருட்டு உறவினர் கடினவார்த்தை சொன்னாலும் தான் அதைக் கேட்டல்வேண்டும்.

பழமொழி.—கோழி மிதித்துக் குஞ்சு முடமாகுமா. The kick of the dam hurts not the colt.

354. உறவினர் செய்வதை உற்றார் செய்க

தன்னை மதித்துத் தமரென்று கொண்டக்கால்
என்ன படினும் அவர்செய்வ செய்வதே.
இன்னொலி வெற்ப! இடரென்னை? துன்னூசி
போம்வழி போகு மிழை. 358

(ப–பொ). ஒருவர் தாம் தன்னை மதித்து எமக்கு இவன் தமனுவா னென்று கொண்டக்கால் எல்லாத் துன்பமும் படினும் அவர் செய்வனவற்றைத் தானும் செய்வதே தகுதியாவது: இனிய ஓசையை யுடைய வெற்பனே! அதனால் வரும் இடர் என்னை? துன்னூசி போம்வழியே இழையும் போவது, அதுபோல.

(ப–ரை). இன் ஒலி வெற்ப–இனிய ஓசையையுடைய வெற்பனே! துன்னூசி போம் வழி இழை போகும் – தையலூசி போகின்ற வழியே இழையும் போகும். (அதுபோல), தன்னை மதித்து–ஒருவர் தன்னை மதித்து, தமர் என்று கொண்டக்கால்–எமக்கு இவன் உறவினனுவானென்று கொண்டக்கால், என்ன படினும் - எவ்வகை ஆபத்து நேர்ந்தாலும், அவர் செய்வ செய்வதே - உறவினர் செய்வனவற்றைத் தானும் செய்வதே தகுதியாவது. இடர் என்னை - அதனால் வரும் இடர் என்ன உண்டு?

(க—து). தன்னை உறவாக மதித்தவர்க்குத் துன்பம் நேர்ந்தால் அவர்க்குத் தானும் உறவினன்போல் உதவிசெய்வதே நன்று. அதனால் இடர் இல்லை

355. நெடுநாள் சேர்ந்துறைதலால் நேரும் துன்பம்

கருவினுட் கொண்டு கலந்தாரும் தம்முள்
ஒருவழி நீடும் உறைதலோ துன்பம்.
பொருகடல் தண்சேர்ப்ப! பூந்தா மரைமேல்
திருவொடும் இன்னாது துச்சு. 123

(ப—பொ). தாய் வயிற்றினுள் கருவினுள் தங்கிய பொழுதே தொடங்கிக் கலந்தவர்களும், ஓரிடத்தே தம் முள் நெடுநாள் உறைந்தால், அவ்வுறைவு தமக்குத் துன் பமாம்: பொருகடல் தண் சேர்ப்பனே! பூந்தாமரைமேல் வாழும் திருவோடாயினும் கூட நெடுநாள் சேர்ந்துறை தல் இன்னா தாதலான்.

(ப—ரை). பொரு கடல் தண் சேர்ப்ப - கரையோடு அலைபொருத லான கடலின் குளிர்ந்த சேர்ப்பனே! பூ தாமரைமேல் திருவொடும் - அழகிய தாமரைமேல் வாழும் இலக்குமியோடாயினும், துச்சு - கூட நெடுநாள் சேர்ந்துறைதல், இன்னாது - துன்பந்தருவதாம். (ஆதலால்), கருவின் உட்கொண்டு கலந்தாரும் - தாய் வயிற்றினுள் தங்கியபொழு தே தொடங்கிக் கலந்தவர்களும், ஒருவழி - ஓரிடத்தே, தம்முள் நீடும் உறைதல் - தம்முள் நெடுநாள் உறைந்தால் அவ்வுறைவு, துன்பம் - தமக்குத் துன்பமாம். [ஓ - அசை].

(க—து). சகோதரரும் ஓரிடத்து ஒன்றாய் நெடுநாள் வசிப்பது துன்பந்தருவதாம்.

பழமொழி.—தூர இருந்தால் சேர உறவு.

356. சுற்றத்தாரோடு சூதாட லாகாது

பாரதத் துள்ளும் பணையம்தம் தாயமா
ஈரைம் பதின்மரும் போரெதிர்ந் தைவரோ
டேதில ராகி இடைவிண்டார். ஆதலால்
காதலோ டாடார் கவறு. 52

(ப—பொ). பாரதத்துள்ளும் தம்முடைய தாயமே பணயமாகக் கொடுத்து ஈரைம்பதின்மரும் சூதுபோரை எதிர்ந்து மற்றை ஐவரோடும் பகைவராகி வேறுபட்டு நீங்கினார்கள். ஆதலால் உற்றாரோடு கவறாடார்.

(ப—ரை). பாரதத்துள்ளும் தம் தாயம் பணயமா(க) - பாரதத்துள்ளும் தம்முடைய தாயப்பொருளே பந்தயப்பொருளாகக் கொடுத்து, ஈர் ஐம்பதின்மரும் - கௌரவரான நூற்றுவரும், போர் எதிர்ந்து - சூதுபோரை எதிர்ந்து, ஐவரோடு - மற்றைப் பஞ்சபாண்டவரோடும், எதிலர் ஆகி - பகைவராகி, இடைவிண்டார் - வேறுபட்டு நீங்கினர். ஆதலால் - ஆகையாலே, காதலோடு கவறு ஆடார் - உற்றாரோடு சூதாடார்.

(க-து). கௌரவர் பாண்டவரோடு சூதாடிப் பகைகொண்டு வேறாயினர். ஆகையால் உற்றாரோடு சூதாடுத லாகாது.

## 3. அறஞ்செய்தல்

357. செல்வர் அறஞ்செய்து அருளுடைய ராகுதல்

சிறந்த நுகர்ந்தொழுகும் செல்வ முடையார்
அறஞ்செய் தருளுடைய ராதல்—பிறங்கல்
அமையொடு வேய்கலாம் வெற்ப! அதுவே
சுமையொடு மேல்வைப்பா மாறு. 215

(ப—பொ). புகழுக்கு வேண்டுவன செய்து அதனாலே சிறப்புடையராய்த் தாம் வேண்டிய போகத்தை நுகர்ந்தொழுகும் செல்வமுடையார் அறத்தையும் செய்து யாவர்மாட்டும் அருளுடைமை பூண்டொழுகுவா ராதல், மலையில் மூங்கிலுடனே வேய்கள் நெருங்கிச் செறியும் வெற்பனே! அது வன்றோ பொன்னைச் சுமந்துபோவான் அதற்குமேல் பாரமாக மாணிக்கத்தை வைத்துப் போமாறு போலும்.

(ப—ரை). பிறங்கல் அமையொடு வேய் கலாம் வெற்ப - மலையில் மூங்கிலுடனே வேய்கள் நெருங்கிச் செறியும் வெற்பனே! சிறந்த -

(கீர்த்திக்கு வேண்டுவன செய்து அதனாலே) சிறப்புடையராய், நுகர்ந் தொழுகும் – தாம் வேண்டிய போகத்தை நுகர்ந்தொழுகும், செல்வம் உடையார்–செல்வமுடையோர், அறம் செய்து–அறத்தையும் செய்து, அருள் உடையராகுதல் அது – யாவரிடத்தும் அருளுடைமை பூண் டொழுகுவா ராதலாகிய அச்செய்கை, சுமையொடு மேல்வைப்பாம் ஆறு–பொன்னாகிய சுமையின்மேல் அதற்கு மேற்பாரமாக மாணிக்கத் தை வைத்துப் போமாறு போலும்.

வேய்–உட்டுளையுள்ள மூங்கில்: இது வடமொழியில் கீசகம் எனப் பெறும். அமை–கெட்டி மூங்கில்: இது வடமொழியில் மஸ்கரம் எனப்பெறும். பொன் மறுமையாகவும் மாணிக்கம் மோக்ஷமாகவும் கொள்ளலாம்.

(க–து). சீருஞ் சிறப்புமாய் வாழ்கின்றவர் அறஞ்செய்தலோடு அருள்பூண் டொழுகுதலானது மறுமைக்கு நன்மையோடு மோக்ஷமும் தருவதாகும்.

"ஆற்ற அறஞ்செய் தருளுடையீ ராகுமின்".—நாலடியார்.

358. செய்த அறமே எய்ப்பினில் வைப்பாம்

வைத்ததனை வைப்பென் றுணரற்க. தாமதனைத்
துய்த்து வழங்கி இருபாலும்—அத்தகத்
தக்குழி நோக்கி அறஞ்செய்யின், அஃதன்றோ
எய்ப்பினில் வைப்பென் பது. 37

(ப–பொ). தாம் தேடிச் சேமித்துவைத்த பொருளைத் தமக்குதவும் வைப்பென்று கருதற்க; தாம் அப் பொருளை நுகர்ந்தொழுகி இருமைக்கும் அழகிதாகத் தகுதியுள்ள இடம்பார்த்து அறத்தைச் செய்க. அவ்வறஞ் செய்கையன்றோ தாம் தளர்ந்த காலத்துத் தமக்குதவும் வைப்பென்று சொல்லப்படுவது.

(ப–ரை). வைத்ததனை – தாம் தேடிப் பத்திரப்படுத்தி வைத்த பொருளை, வைப்பென்று உணரற்க–தமக்குதவும் நிதியென்று எண்ண வேண்டா. அதனை – அந்தப் பொருளை, தாம் துய்த்து வழங்கி–

தாமும் அனுபவித்துப் பிறருக்கும் கொடுத்து, இருபாலும் அத்தக தக்குழி நோக்கி—இருமைக்கும் அழகிதாகத் தகுதியுள்ள இடம் பார்த்து, அறம் செய்யின்—அறம் செய்தால், அஃது அன்றோ—அங்ஙனம்செய்வ தன்றோ, எய்ப்பினில் வைப்பு என்பது—தாம் தளர்ந்த காலத்துத் தமக்கு உதவும் நிதியென்று சொல்லப்படுவது.

(க—து). தானும் அனுபவித்துச் சற்பாத்திரத்திலே தானஞ்செய்த பொருளே ஒருவனுக்கு நிக்ஷேபதனமாவது.

"அற்றா ரழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி."—திருக்குறள்.

செல்வத்தைப் பெற்றார் சினங்கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு—நல்ல
தான மறவாத தன்மையரேல் அஃதென்பார்
வானகத்து வைப்பதோர் வைப்பு.—அறநெறிச்சாரம்.

"ஈசனை இலங்கும் சுடர்ச்சோதியை எந்தையை எனக்கெய்ப்பி னில் வைப்பினை" என இப்பழமொழி பெரிய திருமொழி 7-ம் பத்தில் 10-ம் திருமொழி 4-ம் பாசுரத்தில் வருகின்றது.

359. அறத்தால் மறுமையின்பம் பெறுதல்

மல்லற் பெருஞ்செல்வம் மாண்டவர் பெற்றக்கால்
செல்வுழியும் ஏமாப்பச் செய்வதாம்—மெல்லியல்
சென்றொசிந் தொல்கு நுசுப்பினாய்! பைங்கரும்பு
மென்றிருந்து பாகு செயல். 289

(ப—பொ). மாட்சிமை யுடையார் முன்செய்த நல் வினையால் வளவிய பெரிய செல்வத்தை இம்மையின் கண்ணே பெற்றவிடத்து, மறுமையும் இன்புறும்படி அறத்தைச் செய்வதாவது, மெல்லிய இயல்பினையும் தேய்ந்தொசிந்து வருந்தும் மருங்கையும் உடையாய்! அழகிய கரும்பைத் தானும் தின்றுவைத்து மேலும் பயன்படும் பாகைச் செய்வதனோ டொக்கும்.

(ப-ரை). மெல் இயல் சென்று ஒசிந்து ஒல்கும் நுசுப்பினாய்—மெல்லிய இயல்பினையும் தேய்ந்து துவண்டு சிறிதான இடையையு முடையாய்! மாண்டவர்-மாட்சிமையுடையவர், மல்லல் பெருஞ்செல்வம் பெற்றக்கால்—வளமான பெருஞ் செல்வத்தை (இம்மையில்) பெற்றவிடத்து, செல்வுழியும்—மறுமையிலும், ஏமாப்ப—இன்புறும்படி, செய்வது—அறத்தைச் செய்வது, பைங்கரும்பு மென்றிருந்து பாகு செயல் ஆம்—அழகிய கரும்பைத் தானும் தின்றுவைத்து மேலும் பயன்படும் பாகைச் செய்வதனோ டொக்கும்.

(க-து). கரும்பு இப்பொழுது தின்பதற்கும் ஆகும்: பாகாகக் காய்ச்சிவைத்தால் பின்னால் உண்பதற்கும் ஆகும். அங்ஙனமே, செல்வம் இம்மையின்பம் பெறுதற்கும் ஆகும்: அறஞ்செய்தால் மறுமையின்பம் பெறுதற்கும் ஆகும்.

"கொடுப்பதன்கண்
ஆற்ற முடியா தெனினுந்தா மாற்றுவார்
மாற்றார் மறுமைகாண் பார்".—அறநெறிச்சாரம்.

360. அறம் இம்மைப்புகழும் மறுமையின்பமும் தரும்
ஈனுலகத் தாயின் இசைபெறூஉம்: அஃதிறந்
தேனுலகத் தாயின் இனிதரூஉம்:—தானொருவன்
நாள்வாயும் நல்லறஞ் செய்வாற் கிரண்டுலகும்
வேள்வாய் கவட்டை நெறி. 6

(ப-பொ). இவ்வுலகின் திறத்து ஆராய்வோமாயின் புகழைப் பெறும்: புகழைத் தவிர மறுமையுலகின் திறத்து ஆராய்வோமாயின் மறுமையுலகமும் இனிதாம். ஆதலால் நாள்தோறும் நல்லறம் செய்யும் ஒருவர்க்கு இரண்டுலகமும் கவட்டை நெறியின்கண் உளவாகிய கல்யாணங்கள் போலும்.

(ப-ரை). ஒருவன் தான்—தினம் நல்லறம் செய்வா னொருவன், ஈனுலகத்தாயின்—இவ்வுலகத்திலாயின், இசைபெறும்—புகழைப் பெறுவான்: அஃது இறந்து—புகழைத் தவிர, ஏனுலகத்தாயின்—மறுமை யுலகத்திலாயின், அது உம் இனிது—மறுமையுலகும் இனிதாகும். (ஆதலால்), நாள்வாயும் நல்லறம் செய்வாற்கு—நாள்தோறும் நல்லறம்

செய்யுமவனுக்கு, இரண்டு உலகும் – இரண்டுலகமும், கவட்டை நெறி வாய் வேள்–கவட்டை நெறியில் உளவாகிய கல்யாணங்கள் போலும்.

ஈனுலகம்—இ + உலகம். ஏனுலகம்–(ஏனை + உலகம்)–இவ்வுலக மல்லாத ஏனையுலகம்–மறுமையுலகம். இரண்டுலகும் வேள்வாய் கவட்டைநெறி என்பதற்கு இரண்டுலகும் கல்யாணங்கள் நடக்கும் கவட்டை நெறிபோலும் எனவும் கொள்ளலாம்.

(க—து). வழிப்பட்டவன், கவட்டை வழியில் நடக்கும் கல்யாணங்களில் விருந்துண்டு சுகிப்பதுபோல, அறவழியிற் பட்டவன் இம்மையிலும் புகழுடைவான் மறுமையிலும் இன்புறுவான்.

361. இறக்குமுன்னே அறஞ்செய்க

மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை
ஆய்வின்றிச் செய்யாதார், பின்னை வழிநினைந்து
நோய்காண் பொழுதின் அறஞ்செய்வார்க் காணுமை,
நாய்காணின் கற்காணு வாறு. 261

(ப—பொ). தமக்கிட்ட நாள் மாய்வதன்முன்னே கூறுபாட்டையுடைய புண்ணியத்தை இன்னநாள் செய்வேமென்று விசாரியாமல் கையில் சிறிது பொருள் பெற்ற பொழுதே செய்யாதார், பின்பே செய்வேமென்று நினைத்திருந்து, தமக்கு ஒரு நோய் இறுதியாகி வந்துற்ற பொழுதே அறஞ்செய்யக் கருதி, தம்பொருளைக் கொண்டு அறஞ்செய்க என்று சொன்னல் அவர் சொன்ன வகையே அறஞ்செய்வாரைப் பெறுமை, நாய்கண்ட பொழுது கல் காணுதவாறு போலும்.

(ப—வ). மாய்வதன் முன்னே–இறப்பதன் முன்னே, வகைப்பட்ட – பலவகைப்பட்ட, நல்வினையை – புண்ணியத்தை, ஆய்வு இன்றி–இன்ன காலத்தில் செய்வோமென்று விசாரியாமல், பின்னை

கழி நினைந்து—பின்பே செய்வோமென்று நினைத்திருந்து, செய்யாதார்—கையில் பொருள் பெற்றபோதே செய்யாதவர், நோய் காண் பொழுதின்—தமக்கு ஒருநோய் இறுதியாகி வந்துற்றபோதே, அறம் செய்வார் காணுமை—(அறஞ்செய்ய நினைத்துத் தம்பொருளைக் கொண்டு அறஞ்செய்க என்று சொன்னுல் அவ்விதம்) அறஞ்செய்வாரைப்பெரு மை, நாய் காணின் கல் காணு ஆறு—நாய் கண்டபொழுது கல்லைக் காணுத விதம்போலும்.

"அறம்புரிந் தாற்றுவ செய்யாது நாளும்
உறங்குதல் காரணம் என்னை?—மறந்தொருவன்
காட்டு விடக்கூர்தி அச்சிறுங் காலத்துக்
கூட்டுந் திறமின்மை யால்."—அறநெறிச்சாரம்.

பழமொழி.—நாயைக் கண்டால் கல்லைக் காணேம், கல்லைக் கண்டால் நாயைக் காணேம். பிள்ளையாரைக் கண்டால் தேங்காயைக் காணேம்; தேங்காயைக் கண்டால் பிள்ளையாரைக் காணேம்.

## 362. உடையானை அறஞ்செய்யத் தூண்டுதல்

தக்கமில் செய்கைப் பொருள்பெற்றுல், அப்பொருள்
தொக்க வகையும் முதலும் அதுவானுல்,
மிக்க வகையால் அறஞ்செய் கெனவெகுடல்,
அக்காரம் பால்செருக்கும் ஆறு. 199

(ப—பொ). நிலையில்லாத செய்கையையுடைய பொருள் தமக்கு வந்து கிடைத்தால், அப்பொருள் தமக்குத் திரண்ட திறத்தின் அருமையும் அதுவானுல், அப்பொருள் தமக்குத் தொகுதற்குக் காரணமும் அவ்வறமானுல், மிக்க தன்மையால் அறத்தைச் செய் எனவெகுடல், அக்காரத்தையும் பாலையும் செருக்கிக்காலு மதனே டொக்கும்.

(ப—ரை). தக்கம் இல் செய்கை பொருள் பெற்றுல்—நிலையில்லாத செய்கையையுடைய செல்வத்தை ஒருவன் அடைந்தால், அ பொருள் தொக்க வகையும்—அச்செல்வம் தன்னிடம் திரண்ட காரியமும், முதலும்—காரணமும், அ து வா னு ல்—அவ்வறமேயானுல், அறம்—

அறத்தை, மிக்க வகையால்—சிறந்த விதங்களால், செய்க என—செய்கவென்று, வெகுடல்—கோபித்துத் தூண்டுதல், அக்காரம் பால்—சர்க்கரையையும் பாலையும், செருக்கும் ஆறு—மயங்கிச் சொரியும் விதத்தை ஒக்கும்.

அறத்தைச் சுட்டிநின்ற 'அது' முன் வந்தது, செய்யுளாதலின்.

(க—து). அறம் காரணமாகச் செல்வம் நிரம்பப்பெற்றவன் தானே அறஞ்செய்வான். அவனை அறஞ்செய்யும்படி தூண்டுவது அக்காரமும் பாலும் சேர்ந்தது போலும்.

363. நல்லோர் மற்றவரை அறநெறிப் படுத்தல்

உலப்பி லுலகத் துறுதியை நோக்கிக்
குலைத்தடக்கி நல்லறம் கொள்ளார்க் கொளுத்தல்,
மலைத்தழு துண்ணுக் குழவியைத் தாயர்
அலைத்துப்பால் பெய்து விடல். 212

(ப—பொ). முடிவில்லாத உலகத்தின்கண் உறுதியாகிய நன்மையை நோக்கி நல்லறம் கொள்ளாதாரைக் குலைத்தடக்கி நல்லறத்தை அவர்க்கு நல்லார் கொளுத்துதல், மாறுபட்டழுதுண்ணாத குழவியைத் தாயர் ஒறுத்துப் பால் ஊட்டியதனோ டொக்கும்.

(ப—ரை). உலப்பு இல் உலகத்து—முடிவில்லாத உலகத்தின்கண், உறுதியை நோக்கி—உறுதியாகிய நன்மையை நோக்கி, நல்லறம் கொள்ளார்—நல்ல அறநெறியை அடையாதவரை, குலைத்து அடக்கி—(நல்லார்) அந்நிலையினின்றும் பிரித்து அறநெறியில் சேர்த்து, கொளுத்தல்—அவரை நல்லறத்தை அடையும்படி செய்தலானது, மலைத்து அழுது உண்ணு (த) குழவியை—மாறுபட்டழுது முலையுண்ணாத குழந்தையை, தாயர் அலைத்து பால் பெய்துவிடல்—தாயார் வருத்திப் பாலை ஊட்டுதலோ டொக்கும்.

(க—து). தாய்மார் குழந்தைகளை வருத்திப் பாலூட்டுதல் போல, நல்லோர் மற்றவரை வற்புறுத்தி அறநெறியில் சேர்ப்பர்.

364. பொருளை அறத்துறையில் செலவிடுதல்

அறஞ்செய் பவர்க்கும் அறவுழி நோக்கித்
திறந்தெரிந்து செய்தக்கால் செல்வுழி நன்றும்.
புறஞ்செய்யச் செல்வம் பெருகும் அறஞ்செய்ய
அல்லவை நீங்கி விடும். 159

(ப-பொ). அறத்தைச் செய்பவர்க்கும், அறத்தைச் செய்யுமிடத்தைப் பார்த்து வேறுபாடு தெரிந்து செய்தக்கால், செல்லும் மறுமையுலகத்தின்கண் மிகவும் நன்றாம்: செல்வத்துக்கு வேண்டும் அரண் செய்யச் செல்வம் பெருகுவதுபோல, அறத்தைச் செய்யப் பாவங்கள் நீங்கும் ஆதலான்.

(ப-ரை). புறம்செய்ய—வேண்டிய பாதுகாப்பைச் செய்ய, செல்வம் பெருகும்—செல்வம் வளரும். அறம் செய்ய—அறத்தைச் செய்ய, அல்லவை நீங்கிவிடும்—பாவங்கள் நீங்கிப்போம். (ஆதலால்), அறம் செய்பவர்க்கும்—அறத்தைச் செய்பவர்க்கும், அறம் உழிநோக்கி—அறத்தைச் செய்யுமிடத்தைப் பார்த்து, திறம் தெரிந்து செய்தக்கால்—வேறுபாடு தெரிந்து செய்தால், செல்வுழி நன்றும்—செல்லும் மறுமையுலகத்தில் நன்மை உண்டாகும்.

(க-து). பாதுகாத்தல் செய்தால் கள்வர் பயம் இன்றிச் செல்வம் பெருகும்: சௌக்கியம் உண்டாகும். செல்வத்தை அறத்துறையில் செலவிட்டால் பாவம் நீங்கிப் புண்ணியம் பெருகும்: மறுமையுலகில் நன்மை உண்டாம்.

365. ஆற்றுந் துணையும் அறஞ்செய்தல்

தோற்றம் அரிதாய மக்கட் பிறப்பினால்
ஆற்றுந் துணையும் அறஞ்செய்க.—மாற்றின்றி
அஞ்சும் பிணிமூப் பருங்கூற் றுடனியைந்து
துஞ்ச வருமே துயக்கு. 137

(ப-பொ). தோற்றுதற் கரிதாய மக்கட்பிறப்புப் பெற்றதனாலே தமக்கு இயலுமளவும் நல்லறத்தைச் செய்க. தடையின்றி அஞ்சப்படும் பிணியும் மூப்பும்

அருங்கூற்றுடனே கூடித் தனக்கு அறிவு திரிவாகிய மயக்கத்தான் இறந்துபட வரும்.

(ப—ரை). அஞ்சும் பிணி மூப்பு—அஞ்சப்படும் நோயும் மூப்பும், அருங் கூற்றுடன் இயைந்து — தடுத்தற்கரிய யமனோடு சேர்ந்து, துயக்கு—(தனக்கு அறிவு மாறுதலாகிய) மயக்கத்தால், மாற்றின்றி—தடையின்றி, துஞ்சவரும்—இறக்கும்படி நேரிடும். (ஆதலால்), தோற்றம் அரிதாய மக்கட்பிறப்பினால்—தோற்றுதற் கரிதாகிய மக்கட்பிறப்பைப் பெற்றதனால், அறம்—நல்லறத்தை, ஆற்றும் துணையும் செய்க—தமக்குக் கூடிய அளவு செய்க.

"அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்,
பெரும்பயனும் ஆற்றவே கொள்க."—நாலடியார்.

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்."—திருக்குறள்.

"மூப்பொடு தீப்பிணி முன்னுறீஇப் பின்வந்து
கூற்ற வரசன் குறும்பெறியும்.—ஆற்ற
அறவரண மாராய்ந் தடையினஃ தல்லால்
பிறவரண மில்லை உயிர்க்கு".—அறநெறிச்சாரம்.

366. இடை தவிர்தலின்றி அறஞ்செய்தல்

பட்ட வகையால் பலரும் வருந்தாமல்
கட்டுடைத் தாகக் கருதிய நல்லறம்
முட்டுடைத் தாகி இடைதவிர்ந்து வீழ்தலின்
நட்டமு றுதலே நன்று. 197

(ப—பொ). உண்மையாகிய வகையால் பலரும் வருந்தா வகை வரம்புடைத்தாகத் தம்மால் கருதிச் செய் தொழுகுகின்ற நல்லறத்தை இடையூறுடைத்தாக நடுவே தவிர்ந்து தான் நீங்குமதனின் செய்யை நட்டுவைத்துப் பயன் கொள்ளாததுவே நன்று.

(ப—ரை). பட்ட வகையால்—உண்மையாகிய வகையால், பலரும் வருந்தாமல்—பலரும் வருந்தாதபடி, கட்டுடைத்தாக கருதிய நல்லறம்—

வரம்புடையதாகத் தான் கருதிச் செய்தொழுகும் நல்லறத்தை, முட்டு உடைத்தாக—இடையூறு உடையதாக, இடைதவிர்ந்து—நடுவே தவிர்ந்து, வீழ்தலின்—தான் நீங்குவதைக் காட்டிலும், நட்டு அருஅதலே—வயலில் நட்டுவைத்துப் பயன் கொள்ளாததுவே, நன்று—நன்றாம்.

(க—து). பயிரை நட்டால் அதனை இடையில் உலரவிடாமல் போற்றி விளைப்பதே தகுதி. ஒரு நல்ல தருமத்தைத் தொடங்கினால் அதனை இடையில் தவிரவிடாமல் கடைபோக முடிப்பதே தகுதி.

367. சிலநாளாயினும் சிறந்த வழிகளில் அறஞ்செய்தல்

பலநாளும் ஆற்று ரெனினும் அறத்தைச்
சிலநாள் சிறந்தவற்றாற் செய்க.—கலைதாங்கி
நைவது போலும் நுசுப்பினாய்! நல்லறம்
செய்வது செய்யாது கேள். 134

(ப—பொ). அறஞ்செய்யப் பலநாளும் ஆற்றுரெனினும் மிக்க அறத்தைச் சிலநாளாயினும் செய்க. மேகலை தாங்கி இறுவதுபோலும் நுசுப்பினை உடையாய்! தான் செய்த நல்லறம் செய்வது தன் நற்கேளும் செய்யாது.

(ப—ரை). கலைதாங்கி—மேகலை தாங்கி, நைவது போலும்—இறுவது போலும், நுசுப்பினாய்—இடையையுடையாய்! நல்லறம் செய்வது—தான் செய்த நல்லறம் செய்யும் நன்மையை, கேள் செய்யாது—தன் சுற்றத்தாரும் செய்யார். (ஆதலால்), அறத்தை—அறத்தை, பலநாளும் ஆற்றுர் எனினும்—பலநாளும் செய்யாரெனினும், சில நாள்—சில நாளா யினும், சிறந்தவற்றால்—சிறந்த வழிகளால், செய்க—செய்யக்கடவர்.

(க—து). அறத்தால் உளதாகும் நன்மை சுற்றத்தாராலும் உளதா காது. ஆகையால் பலநாள் செய்யாவிடினும் சிலநாளாயினும் சிறந்த அறம் செய்க.

368. பொருளைக் கரத்தலைவிட அறஞ்செய்தல் நன்று

நோக்கி யிருந்தார் இமைக்கும் அளவின்கண்
நோக்கப் படினும் உணங்கலைப் புட்கவரும்.
போற்றிப் புறந்தந் தகப்பட்ட ஒண்பொருட்கும்
காப்பாரிற் பார்ப்பார் மிகும். 259

(ப—பொ). உணங்கலை நோக்கியிருந்தார் இமைக்கு மளவில், ஒழியாமல் விழிக்கப்பட்டனவாயினும், பறவைகள் உணங்கலைக் கவருமதுபோல், பாதுகாத்து அரண்செய்தே தனக்காக வைத்திருக்கப்பட்ட ஒண் பொருட்கும் காத்திருப்பாரில் அதனைக் களவுகொள்ளப் பார்த்திருப்பார் பலர்.

(ப—ரை). உணங்கலை நோக்கியிருந்தார்—வெய்யிலில் காயும் பண்டங்களை நோக்கியிருந்தவர், இமைக்கும் அளவின்கண்—கண்ணிமை கொட்டும் அளவிலே, புள்—பறவைகள், நோக்கப்படினும்—ஒழியாமல் விழிக்கப்பட்டனவாயினும், கவரும்—காயும் பண்டங்களைக் கவர்ந்து செல்லும். (அதுபோல்), போற்றி புறந்தந்து அகப்பட்ட ஒண்பொருட்கும்—பாதுகாத்து அரண்செய்தே தனக்காக வைத்திருக்கப்பட்ட ஒள்ளிய பொருளுக்கும், காப்பாரின்—காத்திருப்பாரைவிட, பார்ப்பார் — அதனைக் களவுகொள்ளப் பார்த்திருப்பவர், மிகும் — மிகப்பலராவர்.

ஆதலால் அறஞ்செய்துவிடுதல் நன்று என்றவாறும்.

"விழித்திருக்க மிணடையைக் கொள்வான்" என்பது ஒரு பழமொழி.—இதனை நச்சினார்க்கினியர் 8—வது முல்லைக் கலியில் காட்டியிருக்கின்றனர், "கட்குத்திக் கள்வன்" என்பதை விளக்குமிடத்து.

369\. பொருளைப் போற்றுது தக்க வழியில் அறஞ்செய்தல்
இன்றி யமையா இருமுது மக்களைப் [வோ?
பொன்றினமை கண்டும் பொருள்பொருளாக் கொள்ப
ஒன்றும் வகையான் அறஞ்செய்க. ஊர்ந்துருளின்
குன்று வழியடுப்ப தில் 303

(ப—பொ). தம்மையின்றி உயிர்வாழாத தாயும் தந்தையும் இறந்துபோயினமை கண்டுவைத்தும் பொருளைப் பொருளாக மனத்தில் கொள்வரோ? தமக்குப் பொருந்திய வகையால் அறத்தைச் செய்க. மலை ஊர்ந்துருளுமாயின் அஃது உருளும் வழியின்கண் அடை

யடுக்கலாவது ஒன்றில்லை. [அதுபோலத் தாம் இறக்கும்பொழுது முன் தேடிவைத்த பொருளால் தடுக்க இயலாது].

(ப-ரை). இன்றியமையா இருமுதுமக்கள்—தம்மையின்றி உயிர் வாழாத தாயும் தந்தையும், பொன்றினமைஐ கண்டும்—இறந்தமையைக் கண்டுவைத்தும், பொருள்—பொருளை, பொருளா(க)—பொருளாக, கொள்பவோ—மனத்தில் கொள்வரோ? ஒன்றும் வகையான்—பொருந்திய வகையால், அறம் செய்க—அறத்தைச் செய்க. குன்று வார்ந்து உருளின்—மலை நகர்ந்து உருளுமாயின், வழி அடுப்பது இல்—அஃதுருளும் வழியின்கண் அடை அடுக்கலாவதொன் றில்லை. (அது போலத் தாம் இறக்கும்பொழுது முன் தேடிவைத்த பொருளால் இறப்பைத் தடுப்பது முடியாது).

(க-து). மலை உருண்டால் அதைத் தவிர்க்கத்தக்க பொருள் இல்லை. தாய் தந்தையர் இறந்தபோது தம்முடைய பொருளால் அவர்களை இறவாமல் தடுப்பது முடியாமற்போயிற்று. தாம் இறக்கும்பொழுதும் தம்முடைய பொருளால் இறவாதபடி தடுப்பது முடியாது. ஆகையால் அப்படிப்பட்ட பொருளைப் போற்றாது தக்க வழியில் அறஞ்செய்க.

370. அருளோடு படாத அறம்

*அற்றாக நோக்கி அறத்திற் கருளுடைமை*
*முற்ற அறிந்தார் முதலறிந்தார்.— தெற்ற*
*முதல்விட் டஃதொழிந்தோர் ஓம்பா வொழுக்கம்,*
*முயல்விட்டுக் காக்கை தினல்.* 141

(ப-பொ). அறத்திற்குப் பண்பாவது அருள் என்று அத்தன்மைத்தாக ஆராய்ந்து நிரம்ப அறிந்தார், அறத்திற்குக் காரணமறிந்து அறஞ்செய் தொழுகுவார். தெளிய அறத்திற்குக் காரணமாகிய அருளைப் பிறரால் விட்டு, அதனோடு கூடி அறத்தையொழிந்தாருடைய பாதுகாவாத கொடையாளர் அறவொழுக்கத்தைச் செய்தல், முயலைவிட்டுக் காக்கையைத் தின்னுமதனோ டொக்கும்.

(ப—ரை). அறத்திற்கு அருளுடைமை அற்றாக நோக்கி—அறத்திற்குக் காரணமாவது அருளுடைமையென்று அத்தன்மைத்தாக ஆராய்ந்து, முற்ற அறிந்தார்—நிரம்ப அறிந்தவர், முதல் அறிந்தார் — அறத்திற்குக் காரணமறிந்து அறஞ்செய்தொழுகுவார். தெற்ற—தெளிய, முதல் விட்டு—அறத்திற்குக் காரணமாகிய அருளை விட்டு, அஃதொழிந்தோர்—அதனோடுகூட அறத்தை ஒழிந்தாருடைய, ஓம்பா ஒழுக்கம் — பாதுகாவாத ஒழுக்கம், முயல் விட்டு—முயலைவிட்டு, காக்கை தினல்—காக்கையைத் தின்னுமதனோடொக்கும்.

(க—து). அறத்துக்கு அருள் காரணமாதலால் அருளோடுகூடி அறஞ்செய்யாமல் வேறுகாரணம் பற்றிச் செய்பவர் அறப்பயனை அடையார்.

அப்பர் தேவாரத்தில்,

"என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்
டென்னையோர் உருவமாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட்
டென்னுள்ளங் கோயிலாக்கி
அன்பிருத்தி அடியேனைக் கூழாட்கொண்
டருள்செய்த ஆரூரர்தம்
முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக்
காக்கைப்பின் போனவாறே."

என இப்பழமொழி வருகின்றது.

371. அறநெறியிலும் தவநெறியிலும் படிற்றொழுக்கம்

இம்மைத் தவமும் அறமும் எனவிரண்டும்
தம்மை யுடையார் அவற்றைச் சலமொழுகல்,
இம்மைப் பழியேயு மன்றி, மறுமையும்
தம்மைத்தாம் ஆர்க்குங் கயிறு. 346

(ப—பொ). தம்மை வீட்டின்கண்ணே செலுத்துதற்குத் தக்க தகுதியையுடையார் இப்பிறப்பின்கண்ணே தாம் செய்யும் தவநெறியும் அறநெறியு மாகியவற்றைப்

படிறுபட ஒழுகுதல், இம்மையின்கண் விளையும் பழியை ஆக்குதலேயன்றி, மறுமையின் கண்ணும் தம்மைப் பிறப்பின்கண்ணே கட்டப்பட்ட கயிறும்.

(ப—ரை). தம்மையுடையார்—தம்மை வீட்டின்கண்ணே செலுத்தத் தக்க தகுதியை உடையார், இம்மை தவமும் அறமும் என இரண்டும்—இப்பிறப்பின் கண்ணே தாம்செய்யும் தவநெறியும் அறநெறியுமாகிய வற்றை, சலம் ஒழுகுதல் – பொய்பட ஒழுகுதலானது, இம்மை எயும் பழி அன்றி – இம்மையின்கண் விளையும் பழியை யாக்குதலே யன்றி, மறுமையும்—மறுமைக்கண்ணும், தாம் தம்மை ஆர்க்கும் கயிறு—தாம் தம்மைப் பிறப்பின்கண்ணே பந்திக்கும் கயிற்றை ஆக்குதலுமாம்.

(க—து). வீடு பெறுதலான தகுதியுள்ளவர்கள் தவநெறியிலும் அறநெறியிலும் வஞ்சகமாக ஒழுகுதலானது, இம்மையில் பழியும் மறுமையில் பிறப்பும் அடைவதற்குக் காரணமாகும்.

"பற்றற்றே மென்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவும் தரும்."—திருக்குறள்.

## 4. ஈகை

372. சிறிய பொருள் கொடுத்துப் பெரிய பேறு பெறுதல்

சிறிய பொருள்கொடுத்துச் செய்த வினையால்
பெரிய பொருள்கருது வாரே—விரிபூ
விராஅம் புனலூர! வேண்டயிரை யிட்டு
வராஅஅல் வாங்கு பவர். 302

(ப—பொ). ஒருவர்க்குச் சிறிய பொருளைக் கொடுத்துச் செய்த லுண்டாகிய கருமத்தாலே மறுமைக்குப் பெரிய பொருளையும் பெறுந் தன்மையைக் கருதுவார், முகையவிழ்ந்த பல பூவும் விரவும் புனலையுடைய ஊரனே! விரும்பத்தக்க அயிரையை இரையாகக் கோத்துப் போகட்டுத் தூண்டிலானே வராலை வாங்குமவரோ டொப்பர்.

(ப—ரை). விரிபூ – மலர்ந்த பல பூவும், விரா(வு)ம் – கலந்துள்ள, புனல் ஊர – புனலையுடைய ஊரனே! சிறிய பொருள் கொடுத்து – ஒருவருக்குச் சிறிய பொருளைக் கொடுத்து, செய்த வினையால்—சம்பா தித்த நல்வினையாலே, பெரிய பொருள் கருதுவாரே – மறுமையில் பெறலான பெரும்பேற்றைக் கருதுவோரே, வேண்டு அயிரை இட்டு— விரும்பப்படும் அயிரையென்னும் சிறிய மீனைத் தூண்டிலில் இரை யாகக் கோத்துப்போட்டு, வரால்—வரால் என்னும் பெரிய மீனை, வாங்குபவர் - பிடிப்பவரோ டொப்பர்.

(க—து). பெரிய மீனைப் பிடிக்க விரும்புவோர் சிறிய மீனை இரை யாக இடுவர். மறுமையில் பெரிய பேறு பெறவிரும்புவோர் இம்மை யில் ஏழைகளுக்குப் பொருளைக் கொடுப்பர். சிறிய மீனால் பெரிய மீன் கிடைப்பதுபோல் சிறிய பொருளால் பெரிய பேற்றைப் பெற லாம்.

பழமொழி —கெண்டையைப் போட்டு வராலை வலிக்கவேண்டும்.
Venture a small fish to catch a great one. You may lose a fly to catch a trout.

373. வறியவர்க் கீதல்

*கரப்புடையார் வைத்த, கடையும் உதவா;*
*துரப்புடை மன்னர்க்கே துப்புரவ தல்லால்.*
*நிரப்பிடும்பை மிக்கார்க் குதவஒன் றீதல்*
*சுரத்திடைப் பெய்த பெயல்.* 169

(ப—பொ). பகைவரைத் துரக்கும் துரப்பையுடைய அரசர்க்கே உதவுவதன்றி, பிறர்க்கு இல்லை யென்று கரக் கும் கரப்புடையார் வைத்த பொருள்கள், பின்பும் தமக்கு உதவமாட்டா. இடும்பை மிக்கார் இடும்பைக்கு உதவ ஒரு பொருளை ஈதல், வெயிலாற் சுடப்பட்ட வெஞ் சுரத்தின் கண்ணே மிகவும் மழை பெய்ததனோ டொக் கும்.

(ப—ரை). கரப்பு உடையார் - பிறருக்கு இல்லையென்று மறைத்து வைப்பவர், வைத்த - தேடிவைத்த பொருள்கள், துரப்பு உடை மன்

னர்க்கே—பகைவரைத் துரத்தும் துப்புடைய அரசர்க்கே, துப்புரவு—உதவுவனவாம். அது அல்லால்—அதுவன்றி, கடையும்—இறுதிக்காலத்திலும், உதவா—தமக்கு உதவுவன ஆகா. இரப்பு இடும்பை மிக்கார்க்கு—வறுமையால் துன்பம் மிக்கவர்க்கு, உதவ — உதவியாம்படி, ஒன்று ஈதல்—ஒரு பொருளைக் கொடுத்தல், சுரத்திடை பெய்த பெயல்—வெயிலால் சுடப்பட்ட வெஞ்சுரத்தின்கண் மிகவும் மழை பெய்ததனோடொக்கும்.

(க—து). ஏழைகளுக்குக் கொடாமல் மறைத்துவைத்த பொருள்கள் கடைசியாய் அரசர்க்கே உதவுவனவாம்: வைத்தவர்க்கு உதவியாவதில்லை. ஏழைகளுக்குக் கொடுத்த பொருள் பாலைவனத்தில் பெய்த மழைபோல நன்மையைச் செய்யும்.

“வறியார்க்கொன் றீவதே யீகை.”—திருக்குறள்.

“உலர்ந்த பாலைவனத்தில் பெய்யும் மழைபோலவும், பசியுடையானுக்குக் கொடுக்கும் உணவுபோலவும், தரித்திரனுக்குக் கொடுக்கும் கொடையே பயனுடையது.” —மஹாபாரதம்.

374. பாத்திர மறிந்து கொடுத்தல்

பல்லாண்டு மீண்டிப் பழுதாய்க் கிடந்தது
வல்லான் தெரிந்து வழங்குங்கால்—வல்லே
வளநெடிது கொண்ட தறாஅ தறுமோ
குளநெடிது கொண்டது நீர். 380

(ப—பொ). பலவாண்டும் ஈண்டிப் பலன்படாதே பழுதாய்க் கிடந்த பொருளினைக் கொடுக்கவல்லவன் அறந் தெரிந்து வழங்குங்கால், அதனான் வரும் ஆக்கம் நெடிதாகக் கொண்டு கடிதாக அறாது, நெடிதாகக் கொண்டு நிறைந்த குளம் நீரறாத வாறுபோல.

(ப—ரை). நெடிது கொண்டது குளம் நீர் அறுமோ—நெடிதாகக் கொண்டு நிறைந்தகுளம் நீர்வற்றாதவாறுபோல, பல் ஆண்டும் ஈண்டி—பல வருஷ காலமும் சேர்தலாகி, பழுதாய் கிடந்தது — பலன்படாமல்

பழுதாய்க் கிடந்த பொருளினை, வல்லான்-கொடுக்க வல்லவன், தெரிந்து வழங்குங்கால்-பாத்திரமறிந்து கொடுக்கும்போது, வளம் வல்லே அறுது கெடிதுகொண்டது (ஆம்)-அதனால் வரும் ஆக்கம் விரைவில் நீங்காது நீடித்து நிற்பதாம்.

(க-து). பெரிதாய் நீர்நிறைந்துள்ள குளத்தை நிலவளத்துக்கேற்ற படி இறைத்துவந்தால் நல்ல விளைவை விளைவிக்கலாம்: அக்குளமும் சீக்கிரத்தில் வற்ருது. அங்ஙனமே நெடுங்காலமாய் வளர்ந்து வீணுய்க் கிடந்த செல்வத்தைப் பாத்திரமறிந்து கொடுத்துவந்தால் அதிக நன்மை உண்டாகும்: அச்செல்வமும் சீக்கிரத்தில் வற்ருது.

### 375. குறிப்பறிந்து கோடுத்தல்

*நினைத்த திதுவென்றந் நீர்மையை நோக்கி*
*மனத்த தறிந்தீவார் மாண்டார்.—புனத்த*
*குடிஞை யிரட்டும் குளிர்வரை நாட!*
*கடிஞையில் கல்லிடுவா ரில்.* 246

(ப-பொ). இவன் குறித்துவந்த திதுவென்று அவன் வந்த நீர்மையைப் பார்த்துக் குறித்து வந்தபொருளை முகத்தால் அறிந்து கொடுப்பர் அறிவால் மாட்சிமைப் பட்டார்: புனத்திடத்துக் கூகை கூப்பிடும் குளிர்ந்த மலைமேல் உண்டாகிய நாடனே! ஒருவன் பிச்சையேற்கும் பாத்திரத்தில் அவன் இரந்த பொருளை இடுவதொழிந்து கல்லையிடுவார் இல்லை, ஆதலால்.

(ப-ரை). புனத்த குடிஞை இரட்டும் குளிர் வரை நாட—புனத்திடத்துக் கோட்டான் கூப்பிடும் குளிர்ந்த மலைமேல் உண்டாகிய நாடனே! கடிஞையில் கல் இடுவார் இல்-ஒருவன் பிச்சையேற்கும் பாத்திரத்தில் அவன் இரந்த பொருளை இடுவதல்லது கல்லை இடுவார் இல்லை. (ஆதலால்), நினைத்தது இது என்று-இவன் குறித்து வந்தது இதுவென்று, அ நீர்மையை நோக்கி-அவன் வந்த தன்மையைப் பார்த்து, மனத்தது அறிந்து-மனத்தில் குறித்துவந்த பொருளை

முகத்தால் அறிந்து, ஈவார்—கொடுப்பர், மாண்டார்—அறிவால் மாட்சிமைப்பட்டவர்.

(க—து). குறிப்பறிந்து கொடுப்பவரே அறிவாற் சிறந்தவர்.

376. பிறர் துன்பம் நீக்க வல்லவர்

கூஉய்க் கொடுப்பதொன் றில்லெனினும் சார்ந்தார்க்குத்
தூஉய்ப் பயின்றாரே துன்பந் துடைக்கிற்பார்.
வாய்ப்பத்தான் வாடியக் கண்ணும் பெருங்குதிரை
யாப்புள்வே றாகி விடும். 162

(ப—பொ). பிறரை அழைத்துக் கொடுப்ப தொரு பொருள் தமக்கு இல்லையாயினும், தம்மை அடைந்தார்க்குப் பொருளைத் தூவிப் பயின்று வந்தாரே பிறர் துன்பம் துடைக்கவல்லார்: வாய்ப்பத் தான் வாடியவிடத்தும், சிறப்புடைய குதிரை பண்ணிட்டு விசித்தவிடத்து வாடாக் குதிரைபோல் வேறாய் வினைக்கு உரித்தாம், அதுபோல.

(ப—ரை). பெருங் குதிரை—சிறப்புடைய குதிரை, வாய்ப்ப தான் வாடியக்கண்ணும் — பொருந்தத் தான் வாடியவிடத்தும், யாப்புள் — பண்ணிட்டுக் கட்டியவிடத்து, வேறு ஆகிவிடும்—வாடாத குதிரை போல் வேறாய்த் தொழிலுக்கு உரித்தாம். (அதுபோல), கூய் — பிறரை அழைத்து, கொடுப்பது ஒன்று—கொடுப்பதொரு பொருள், இல் எனினும்—தமக்கு இல்லையாயினும், சார்ந்தார்க்கு—தம்மை அடைந்தார்க்கு, தூய்—பொருளைத் தூவி, பயின்றார்—பயின்று வந்தார், துன்பம்—பிறர் துன்பத்தை, துடைக்கிற்பார்—நீக்கவல்லார். [பண்ணிடுதல்—சேணமிடுதல்].

(க—து). பண்ணிட்டுப் பழகிய குதிரை இளைத்தகாலத்தும் உபயோகமான வேலைசெய்ய வல்லதாம். அதுபோல், ஏழைகளுக்குக் கொடுத்துப் பயின்றவர் பொருள் வற்றியகாலத்தும் பிறர் துன்பத்தை நீக்கவல்லவ ராவர்.

"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரிதல் இன்று."—திருக்குறள்

377. ஏழைகளுக்குக் கொடுத்து ஏழையாவா ரில்லை
அடுத்தொன் றிரந்தார்க்கொன் றீந்தாரைக் கொண்டார்
படுத்தேழை யாமென்று போகினும் போக.
அடுத்தேறல் ஐம்பாலாய்! யாவர்க்கே யாநும்
கொடுத்தேழை யாயினார் இல். 218

(ப—பொ). தமது வறுமைகூறிச் சென்றடைந்து ஒரு பொருளை இரந்தவர்க்கு ஒரு பொருளைக் கொடுத்தவரை இரந்தவர் அறியாமையிலே தாழ்வுபடுத்து இவன் ஏழையாதலால் தந்தானென்று மனங்கொண்டு போகினும் போக. இருள் செறிந்து ஏறப்பட்ட ஐந்து பகுதியாகிய குழலினையுடையாய்! இரந்துவந்தோரெவர்க்கேயாயினும் கொடுத்து ஏழையாயினார் இல்லை, (கொண்டவரேழை யொழிந்து).

(ப—ரை). அல் அடுத்து ஏறு ஐம்பாலாய்—இருள்செறிந் தேறப்பட்ட குழலினையுடையாய்! அடுத்து—சென்றடைந்து, ஒன்று இரந்தார்க்கு—(தமது வறுமையைச் சொல்லி) ஒரு பொருளை இரந்தவர்க்கு, ஒன்று ஈந்தாரை—ஒருபொருளைக் கொடுத்தவரை, கொண்டார்—இரந்தவர், படுத்து—அறியாமையிலே தாழ்வுபடுத்தி, ஏழையாம் என்று—இவன் ஏழையாமென்று மனங்கொண்டு, போகினும் போக—போயினும் போக. யாவர்க்கே ஆயினும்—இரந்துவந்தோர் எவர்க்கேயாயினும், கொடுத்து ஏழையாயினார் இல்—கொடுத்து ஏழையானவர்கள் ஒருவரு மில்லை.

(க—து). பொருள் பெற்ற யாசகர் கொடுத்தவரை ஏழையென்று தாழ்த்திப் பேசினும் பேசுக. அதைப் பாராட்டாமல் தம்மால் இயன்ற மட்டும் தானம்செய்வதே செல்வர் கடமை, கொடுத்து ஏழையாவது இல்லையாதலால்.

பழமொழி.—Alms-giving never made any man poor.

378. கொடுக்கக் கொடுக்கச் செல்வம் பெருகும்
இரப்பவர்க் கீயக் குறைபடுமென் றெண்ணிக்
கரப்பவர் கண்டறியார் கொல்லோ?—பரப்பிற்
றுறைத்தோணி நின்றுலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப!
இறைத்தோறும் ஊறுங் கிணறு.

(ப—பொ). தம்மாட் டிரந்தவர்க்கு ஒருபொருளைக் கொடுத்தால் நாம் எண்ணிவைத்ததனிலே சில குறைந்து படும் என்று விசாரித்துக் கொடாதே ஒளிப்பவர் கண்டறியார்போல இருந்தது, பரப்பெங்கும் துறைத்தோணி நின்று உலாவுதலைச் செய்யும் செறிந்த நீரையுடைய சேர்ப்பனே! இறைக்குந்தோறும் மேன்மேல் ஊறும் கிணற்றை.

(ப—ரை). பரப்பின் – பரப்பெங்கும், துறைத்தோணி – துறைத் தோணி, நின்று உலா(வு)ம்–நிலைபெற்று உலாவுதலான, தூங்குநீர்— செறிந்த நீரையுடைய, சேர்ப்ப—சேர்ப்பனே! இரப்பவர்க்கு—யாசித் தவர்க்கு, ஈய—பொருள்கொடுக்க, குறைபடும்—நாம் எண்ணிவைத்ததில் சிறிது குறையுமே, என்று எண்ணி—என்று நினைத்து, கரப்பவர்— கொடாமல் ஒளிப்பவர், இறைத்தோறும்—இறைத்தல்தோறும், ஊறும் கிணறு—மேன்மேல் சுரக்கின்ற கிணற்றை, கண்டறியாரோ—பார்த் தறியாரோ. [கொல்—அசை].

1161—வது குறளில் "இறைப்பவர்க் கூற்றுநீர் போல மிகும்" என்பது வருகின்றது.

பழமொழி.—இறைக்க ஊறும் மணற்கேணி, ஈயப் பெருகும் பெருஞ்செல்வம்.

379. கோடையளவு கோடேப்போருடைய சீர்மையின் அளவே
இரவலர் தம்வரிசை யென்பார் மடவார்:
கரவலராய்க் கைவண்மை பூண்ட—புரவலர்
சீர்வரைய வாகுமாம், செய்கை சிறந்தனைத்தும்.
நீர்வரைய வாநீர் மலர். 381

(ப—பொ). கொடுக்கும் கொடையின தளவு வந்திரந்த இரவலர்க்குத் தக்க அளவாயிருக்கும் என்ப அறியார். கையிலுள்ளதை ஒளியாராய்க் கொடைவண்மையைப் பூண்ட புரவலருடைய சீர்மையின் அளவத்தாம் அவ் விரவலர்க்குச் சிறந்து செய்யும் செய்கையளவுகளெல்லாம்: நீரினவாம் நீரின்கண் உள்ள மலர்கள், அதுபோல.

(ப-ரை). செய்கை—கொடுக்கும் கொடையினதளவு, இரவலர் தம் வரிசை—வந்திரந்த யாசகர்க்குத் தக்க அளவாயிருக்கும், என்பார் மடவார்—என்று சொல்லுவர் மூடர். (அது அங்ஙனமன்று). நீர் மலர் நீர் வரையவாம்—நீரின்கண் உள்ள மலர்கள் நீரளவினவாம். (அதுபோல), சிறந்து செய்கை அனைத்தும்—யாசகர்க்குச் சிறந்து செய்யும் செய்கையளவுக ளெல்லாம், கரவலராய்—பொருளை மறையாதவராய், கை வண்மை பூண்ட—கைவண்மையை மேற்கொண்ட, புரவலர் சீர்—அரசருடைய சீர்மையின், வரைய ஆகும்—அளவினவாம். [ஆம்—அசை].

(க-து). யாசகரது தகுதிக்குத் தக்கபடி யிருக்கும் கொடையினதளவு என்பர் அறியார். கொடையினதளவு கொடுப்போருடைய பெருமையின் அளவா யிருக்கும்.

### 380. சேரன் குட்டுவனுடைய கோடை

தொடுத்த பெரும்புலவன் சொற்குறை தீர
அடுத்தர என்றாற்கு வாழியரோ என்றான்.
தொடுத்தின்ன ரென்னலோ வேண்டா. கொடுப்பவர்
தாமறிவார் தஞ்சீ ரளவு. 316

(ப-பொ). சேரன் குட்டுவன் புகழைச் செய்யுளாகத் தொடுத்த கௌதமனென்னும் பெரிய புலவன், "யானும் என் சுற்றமும் துறக்கம் புகும்படி பொருந்திய அறங்களை முடித்துத் துறக்கத்தைத் தா" என்றாற்கு, அவன் சொற்குறை தீர்ப்பான்பொருட்டு உவந்து யாகங்களை நடத்தி, "நீ வேண்டிய துறக்கத்தின்கண் நீடு வாழ்வாயாக" என்றான். ஆதலால் புனைந்து இப்பெற்றியாரென்று புகழவேண்டுவ தில்லை: இயற்கையாகக் கொடுக்கும் சீலத்தார் தம்மளவினால் கொடுக்க வல்லதனைத் தாமே அறிந்துகொடுப்பர்.

(ப-ரை). தொடுத்த பெரும்புலவன்—சேரன் குட்டுவனுடைய புகழைச் செய்யுளாகத் தொடுத்த கௌதமன் என்னும் பெரிய புலவன், அடு தர என்றாற்கு—(யானும் என் சுற்றமும் மோக்ஷம் பெறுமாறு பொருந்திய அறங்களை முடிவித்து) மோக்ஷத்தைத் தா என்றவ

னுக்கு, சொல் குறை தீர—சொற்குறை தீர்க்கும்பொருட்டு, வாழி யரோ என்றான்—(உவந்து யாகங்களை நடத்தி) நீ வேண்டிய மோக்ஷத் தின்கண் நீவோழ்வாயாக என்றான். (ஆதலால்), தொடுத்து—புனைந்து, இன்னர் என்னலோ—இப்பெற்றியாரென்று புகழ்தலோ, வேண்டா—வேண்டுவதில்லை. கொடுப்பவர்—இயற்கையாகக் கொடுக்கும் சீலத் தார், தம் சீர் அளவு தாம் அறிவர்—தம்மளவினால் கொடுக்கவல்லத னைத் தாமே அறிந்துகொடுப்பார்.

அடு என்பது முதனிலைத் தொழிலாகு பெயராகத் துறக்கத்தை உணர்த்துகின்றது போலும்.

இச்செய்தி பதிற்றுப்பத்தில் மூன்றாம்பத்தின் இறுதியில் உள்ள பதிகத்தால் விளங்கும்.—பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடினார் பத்துப்பாட்டு. பாடிப் பெற்ற பரிசில்: நீர் வேண்டியது கொண்மின் என, 'யானும் என் பார்ப்பனியும் சுவர்க் கம் புகல்வேண்டும்' என, பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு ஒன் பது பெருவேள்வி வேட்பிக்கப் பத்தாம் பெருவேள்வியிற் பார்ப் பானையும் பார்ப்பனியையும் காணாராயினர்.

381. பாரி மகளுடைய கோடை

மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு—நீருலையுள்
பொன்றிறந்து கொண்டு புகர்வாக நல்கினாள்.
ஒன்றாறு முன்றிலோ இல். 171

(ப—பொ). மாரி என்பதொன்றின்றி உலகம் வற்றி யிருந்த காலத்துப் பாரி மடமகள், இரந்து வந்தானொரு பாண்மகற்குச் சோறு பெறாமையால், உலையுள் பொன் னைப் பெய்துகொண்டு திறந்து சோறாகவே நல்கினாள். ஆதலால் ஒரு துன்பம் உறாத மனை இல்லை.

அல்லதூஉம், சோறும் அரிதாகிய காலத்துப் பொன் னே சோறாக உதவினாள் ஆதலால், சென்றிரந்தால் ஒரு பயன்படாத மனை இல்லை என்றுமாம்.

(ப—ரை). மாரி ஒன்றின்றி வறந்திருந்த காலத்தும்—மாரியென்ற தொன்றின்றி உலகம் வற்றியிருந்த காலத்தும், பாரி மடமகள்—பாரியின் மடமகள், பாண்மகற்கு – இரந்து வந்தவனான ஒரு பாணனுக்கு, (சோறு பெறாமையால்), நீர் உலையுள்— நீர் பொருந்திய உலையிலே, பொன் கொண்டு—பொன்னைப் பெய்துகொண்டு, திறந்து புகர்வாக நல்கினாள் – திறந்து சோறாகவே நல்கினாள். (ஆதலால்), ஒன்று உறா(த)முன்றில் இல்லை – சென்றிரந்தால் ஒரு பயன்படாத மனை இல்லை. [ஓ—அசை].

ஒரு துன்பம் உறாத மனை இல்லை என்றும் பொருள் கொள்ளலாம்.

பழமொழி.—வீட்டுக்கு வீடு மண்ணடுப்புத் தான். There is a skeleton in every house.

382. வள்ளன்மை

ஏற்றார்கட் கெல்லாம் இசைநிற்பத் தாமுடைய
மாற்றார் கொடுத்திருப்ப வள்ளன்மை—மாற்றாரை
மண்ணகற்றிக் கொள்கிற்கும் ஆற்றலார்க் கென்னரிதாம்.
பெண்பெற்றான் அஞ்சான் இழவு. 318

(ப—பொ). இரந்தவர்க்கெல்லாம் தமது புகழ் உலகத்தின் கண்ணே நிலைநிற்பத் தம்மிடத்துள்ள பொருள்களையெல்லாம் இல்லையென்னாமல் கொடுப்பது வள்ளற்றன்மை. தமது பகைவரை வென்று அவர்கள் ஆண்ட பூங்கிழத்தியை அவர்பானின்று நீக்கித் தமதாக்கிக்கொள்ளும் வெற்றியையுடையார்க்கு எப்பொருளும் அரிதாகாது எளிதாம்; பெறுதற்கரிய வனப்பையுடைய பெண்ணைத் தனக்கு நுகர்தற்குப் பெறலாவதா யிருந்தான், தன்பாலுற்ற எல்லாப்பொருளையும் கொடுத்து அவளைக் கொண்டால் வரும் பொருளிழவுக்கு அஞ்சான் ஆதலால்.

(ப—ரை). இசை நிற்ப—தமது புகழ் உலகத்தில் நிலைநிற்கும்படி, ஏற்றார்கட்கு எல்லாம் – இரந்தவர் எல்லாருக்கும், தாம் உடைய –

தம்மிடத்துள்ள பொருள்களையெல்லாம், மாற்றார் – இல்லையென்று மறுக்காமல், கொடுத்திருப்ப–கொடுத்திருப்பதே, வள்ளன்மை–வள்ளற்றன்மை. மாற்றாரை மண் அகற்றி கொள்கிற்கும்–பகைவரை வென்று அவர்களாண்ட பூமியை அவரிடத்தினின்று நீக்கித் தமக்காக்கிக்கொள்ளும், ஆற்றலார்க்கு–வெற்றியை யுடையார்க்கு, என் அரிது ஆம்–எப்பொருளும் அரிதாகாது (எளிதாம்). பெண்–பெறுதற்கரிய அழகுள்ள பெண்ணை, பெற்றான்–(மனைவியாகப்) பெறலாவதாயிருந்தான், இழவு–(தன்னிடத்துள்ளதையெல்லாம் கொடுத்து அவளைப் பெறுதலான) பொருள் இழவுக்கு, அஞ்சான்–அஞ்சான்.

(க–து). வள்ளற்றன்மைக் குரியார் பேரரசரே என்றவாறு.

"ஏற்றகை மாற்றாமை என்னானும் தாம்வரையா
தாற்றாதார்க் கீவதாம் ஆண்கடன்."—நாலடியார்.

383. இசைநோக்கி ஈதலின் பயன்

பயனோக்கா தாற்றவும் பாத்தறிவொன் றின்றி
இசைநோக்கி ஈகின்றார் ஈகை.—வயமாப்போல்
ஆலித்துப் பாயும் அலைகடற் றண்சேர்ப்ப!
கூலிக்குச் செய்துண்ணும் ஆறு. 40

(ப–பொ). அருளினால் பிறர்க்கு ஒன்றைக் கொடுத்தால் தமக்கு மறுமைக்கண் பயக்கும் பயனை ஆராயாதே மிகவும் பகுத்தறியும் அறிவொன்றின்றிப் புகழின் பொருட்டு ஈகின்றார். ஈகை, புலிபோல ஆலித்துப் பாயாநின்ற அலைகளையுடைய கடற்சேர்ப்பனே! கூலிக்குத் தொழில்செய்து உண்ணுநெறியோ டொக்கும்.

(ப–ரை). வயமாபோல்–புலிபோல், ஆலித்து–ஒலித்து, பாயும்–பாயாநின்ற, அலை–அலைகளையுடைய, தண்–குளிர்ந்த, கடல் சேர்ப்ப–கடற் சேர்ப்பனே! பயன் நோக்காது–(அருளினால் பிறர்க்கு ஒன்றைக் கொடுத்தால்) தமக்கு மறுமைக்கண் கிடைக்கும் பயனை ஆராயாமல், ஆற்றவும் பாத்தறிவு ஒன் றின்றி – மிகவும் பகுத்தறியும் அறிவு ஒன்றுமின்றி, இசை நோக்கி – புகழையே எண்ணி, ஈகின்றார்

ஈகை—கொடுப்பவர் கொடையானது, கூலிக்கு செய்து உண்ணும் ஆறு—கூலிக்குத் தொழில்செய்து உண்ணும் நெறியோ டொக்கும்.

(க—து). புகழையே கருதிப் பொருள் கொடுத்தல் கூலிக்கு வேலை செய்வது போலாம்.

"வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து."—திருக்குறள்.

384. ஒருவனிடத்தில் பலர் ஒன்றிரத்தல் ஆகாது

மறாஅ தவனும், பலரொன் றிரந்தால்,
பெறாஅஅன் பேதுறுதல் எண்ணிப்,—பொறாஅன்
கரந்துள்ள தூஉம் மறைக்கும். அதனால்
இரந்தாட்குப் பன்மையோ தீது. 240

(ப—பொ). ஒருவன் சென்றிரந்தால் இல்லை என்னாமல் கொடுக்கப்பட்ட குணத்தையுடையவனும், பலராகச் சென்று ஒரு பொருளை இரந்தாராகில், அப்பொருளைச் சிலர்க்குக் கொடாதிருந்ததே உண்டானால், அது பெறாதவன் மயக்க முறுதலைக் கருதி, உள்ள பொருளையும் சிலர்க்குக் கொடுக்கப்பொறானாய் இல்லையென்று கரந்து மறையாநிற்கும். ஆதலால், இரந்துண்ணு மதற்கே பலராக ஓரிடத்துச் செல்லுதல் தீது.

(ப—ரை). மறாதவனும்—ஒருவர் சென்றிரந்தால் இல்லையென்னாமல் கொடுக்கும் குணத்தையுடையவனும், பலர் ஒன்று இரந்தால்—பலராகச் சென்று ஒரு பொருளை இரந்தாராகில், பெறான்—(சிலர்க்குக் கொடுத்துச் சிலர்க்குக் கொடாவிடின்) அதனைப் பெறாதவன், பேதுறுதல் — மயக்கமுறுதலை, எண்ணி — எண்ணி, உள்ளதும் — உள்ளபொருளையும், பொறான்—சிலர்க்குக் கொடுக்கப்பொறாமல், கரந்து மறைக்கும்—இல்லையென்று கரந்து மறையாநிற்பன். அதனால்—ஆதலால், இரந்தாட்கு — இரந்துண்ணுமதற்கு, பன்மை தீது—பலராக ஓரிடத்துச் செல்லுதல் தீது. [ஓ—அசை].

(க—து). ஒருவனிடத்து ஒருபொருளை யாசிப்பதற்குப் பலர் செல்வது தீது.

385. தம் விருப்பத்தைத் தீர்க்காதவரை அடைதல் ஆகாது

தோற்றம் பெரிய நசையினர் அந்நசை
ஆற்ருதவரை அடைந்தொழுகல்,—ஆற்றுள்
கயல்புரை உண்கண் கனங்குழாய்? அஃதால்
உயவுநெய் யுட்குளிக்கும் ஆறு. 163

(ப—பொ). தோற்றத்தால் பெரிய ஆசையை யுடையார் அவ்வாசையைத் தீர்க்கலாற்ருதவரை அடைந்து வாழ்தல், யாற்றின்கண் கயலை ஒவ்வாநின்ற உண்கண் கனங்குழாய்! தேருருட்கு நடத்தற் கிடும் உயவுநெய் யின்கண் ஒருவன் குளிக்குமதனே டொக்கும்.

(ப—ரை). ஆற்றுள் கயல் புரை – ஆற்றிலுள்ள கயலை ஒத்த, உண் கண்—மையுண்ட கண்களையும், கனங்குழாய் – கனமான குழையை யும் உடையாய்! தோற்றம் பெரிய நசையினர் – தோற்றத்தால் பெரிய ஆசையை உடையார், அ நசை ஆற்ருதவரை அடைந்து ஒழுகல் அஃது – அவ்வாசையைத் தீர்க்கமாட்டாதவரை அடைந்து வாழ்த லானது, உயவு நெய்யுள் குளிக்கும் ஆறு – தேருருள் நடத்தற்கு இடும் உயவு நெய்யின்கண் ஒருவன் குளிக்குமதனே டொக்கும். [ஆல்—அசை].

(க—து). ஒரு பெரிய காரியத்தை முடிக்கவேண்டும் என்கிற ஆசையுள்ளவர் அதனைத் தீர்க்கமாட்டாதவரை அடைந்து வாழ்தலா னது, குளிக்க விரும்பினவன் உயவு நெய்யின்கண் குளிக்குமதனை ஒக்கும்.

386. சேலவாகாமல் மிகுதியாக உள்ள செல்வம்

காப்பிகந் தோடிக் கழிபெருஞ் செல்வத்தைக்
கோப்பெரியான் கொள்ளக் கொடுத்திரா தென்செய்வர்?
நீத்த பெரியார்க்கே யாயினும் மிக்கவை
மேவிற் பரிகாரம் இல். 320

(ப—பொ). தான் காக்கும் காவலைக் கடந்து கொடுங்கோல் நெறியிலே ஓடி, ஒருவன்மாட் டுள்ள மிக்க பெரிய செல்வத்தை அரசனானவன் மனம் வருந்தாளுய் வாங்கினால், அவன்கீழ் வாழ்வார் கொடுத்து உயிர்பிழைத்திராமல் என்ன பரிகாரம் செய்வார். பிறர்க்குப் பயன்பட்டியல்பாகவே ஆகக்கடவ நிலம் முதலாயின தாம் பயந்த பொருள்களைத் தாமே விரும்பி நுகரின் அதற்குச் செய்யும் பரிகாரம் இல்லை, எல்லாப் பொருளையும் நீத்தேயிருந்த துறந்தார்க்கே யாயினும், அதுபோல.

(ப—ரை). காப்பு இகந்து – தான் காக்கும் காவலைக் கடந்து, ஓடி – கொடுங்கோல் நெறியிலே ஓடி, கழிபெருஞ் செல்வத்தை – குடிகளிடத்துள்ள மிக்க பெரிய செல்வத்தை, கோப்பெரியான்–அரசனானவன், கொள்ள – வாங்கினால், கொடுத்து இராது – கொடுத்து உயிர் பிழைத்திராமல், என்செய்வர் – என்ன பரிகாரம் செய்வார்? நீத்த பெரியார்க்கே ஆயினும் – எல்லாப் பொருள்களையும் துறந்த துறவிகளுக்கே யாயினும், மிக்கவை – பிறர்க்குப் பயன்படத் தாம் தானமாக் கொடுத்த மிக்க பொருள்களை, மேவின்–தாமே விரும்பி அனுபவித்தால், பரிகாரம் இல்–அதற்குச் செய்யும் பரிகாரம் இல்லை.

(க—து). தாம் தேடிய பொருள்களில் தாம் உண்ணுமலும் ஏழைகளுக்குக் கொடாமலும் குடிகள் வைத்திருக்கும் மிக்க செல்வத்தை அரசன் கொண்டால் அதற்குச் செய்யும் பரிகாரம் இல்லை.

## 5. வீட்டுநெறி

387. தம் மனத்தைத் தம்வயப்படுத்தல்

எண்ணக் குறைபடாச் செல்வமும் இற்பிறப்பும்
மன்ன ருடைய உடைமையும்—மன்னரால்
இன்ன ரெனல்வேண்டா. இம்மைக்கும் உம்மைக்கும்
தம்மை யுடைமை தலை.

(ப—பொ). எண்ணுகைக்கு அளவுபடாத செல்வத்தாலும், குடிப்பிறப்பாலும், மன்னரைத் தமக்கு உறுதியாக உண்டாக்கிக்கொண்ட உடைமையாலும், பிறமன்னராலே தம்மை இத்தன்மைய தலைமையுடையரென்று மதிக்கும்படி நாம் மதிப்புப் பிடிக்கவேண்டுமென்று புகழுக்காயின செய்தல்வேண்டும் தன்னை யாதும் வேண்டா. இம்மைக்கும் மறுமைக்கும் உறுதிபயக்கும் தலைமையாகத் தம் மனத்தைத் தம்வயத்தாக்கித் தம்மை உணர்தலே தலையாய காரியம்.

(ப—ரை). எண்ண குறைபடா செல்வமும்—எண்ணுகைக்கு அளவுபடாத செல்வத்தாலும், இற்பிறப்பும்—உயர்குடிப் பிறப்பாலும், மன்னருடைய உடைமையும் — மன்னரைத் தம்வயப்படுத்திக்கொண்ட உரிமையாலும், மன்னரால் இன்னர் எனல் — மன்னராலே தம்மை இத்தன்மையரென்று புகழப்பெறுதல், வேண்டா—விரும்புவதன்று. இம்மைக்கும் உம்மைக்கும்—இம்மைக்கும் மறுமைக்கும் உறுதியாக, தம்மை உடைமை — தம் மனத்தைத் தம்வயத்தாக்கித் தம்மை உணர்தலே, தலை—தலையாய காரியம்.

(க—து). மன்னராலே புகழப்பெறுதலும் விரும்பத்தக்க தன்று தம் மனத்தைத் தம்வயப்படுத்தித் தம்மையுணர்தலே முக்கியமான காரியம்.

"தன்னெஞ்சுக்குந் தெய்வம் பிறிதில்லை தான்றன்னைப்
பின்னை மனமறப் பெற்றானேல்."—அறநெறிச்சாரம்.

பழமொழி. — தன்னையறிந்தவன் தானே தலைவன். Know thyself. All our knowledge is ourselves to know.

388. மறுமைக் கானவைகளைக் காலத்தாலே செய்க

அடங்கி அகப்பட ஐந்தினைக் காத்துத்
தொடங்கிய மூன்றினால் மாண்டீண்—டுடம்பொழியச்
செல்லும்வாய்க் கேமம் சிறுகாலைச் செய்தாரே
கொல்லிமேல் கொட்டுவைத் தார். 99

(ப—பொ). தாம் அடங்கித் தம் ஐம்பொறியும் தமக்கு அகப்படப் பாதுகாத்துத் தாம் தொடங்கிய ஒழுக்கங்களை மன மொழி மெய்களால் மாட்சிமைப்பட்டு இவ்வுலகத்தின் கண் உடம்பொழியத் தாம் செல்லும் மறுமையுலகத்துக்கு ஆம் உறுதியைக் காலத்தாலே செய்தார் கொல்லிமேல் நெற்கூடு புரிந்துவைத்தார். [கோட்டு—நெற்கூடு. கிழங்கு அகழ்ந்து உண்டற்குக் கருவியாம் கோட்டு என்பாரும் உளர்].

(ப—ரை). அடங்கி—தாம் அடங்கி, ஐந்தினை அகப்பட காத்து—தம் ஐம்பொறியும் தமக்கு அகப்படப் பாதுகாத்து, தொடங்கிய மூன்றினல் மாண்டு—தாம் தொடங்கிய ஒழுக்கங்களில் மன மொழி மெய்களால் மாட்சிமைப்பட்டு, ஈண்டு—இவ்வுலகத்தின்கண், உடம்பு ஒழிய—தேகம் நீங்க, செல்லும் வாய்க்கு—தாம் செல்லும் மறுமையுலகத்துக்காகிய, ஏமம்—உறுதியை, சிறுகாலை—காலத்தாலே, செய்தாரே—செய்தவரே, கொல்லிமேல்—கொல்லி மலையின்மேல், கோட்டு—நெற்கூடு, வைத்தார்—கட்டிவைத்தவ ராவர்.

கொல்லிமலை—சேரனது ராசதானிக்கு அணித்தானமலை. அதனல் சேரனுக்குக் கொல்லிவெற்பன் என்றொரு பெயர் உண்டு.

(க—து). கொல்லி மலைமீது நெற்கூடு கட்டிவைத்தவர் தாம் வேண்டினபோது நெல்பெறுதல் நிச்சயமாதல் போல, மறுமைக் கானவைகளைக் காலத்தாலே செய்தவர்கள் மோக்ஷம் பெறுவது நிச்சயம்.

389\. இல்லறம் நடத்திப் பின் துறவறம் மேற்கொள்க
நட்டாரை யாக்கிப் பகைதணித்து வையெயிற்றுப்
பட்டார் துடியிடை யார்ப்படர்ந்—தொட்டித்
தொடங்கின ரில்லத்த தன்பின் துறவா
உடம்பினன் என்ன பயன்? 398

(ப—பொ). தன்னுடன் நட்புச்செய்தாரை ஆக்கிச் செய்து, பகையாயினரைக் கெடுத்து, கூரிய எயிற்றையும் பட்டார்ந்த துடியிடையையுமுடைய மகளிர்மேல் காதலுள்ளம் சென்று, மனைவாழ்க்கையின்கண்ணே பொருந்தி

நடத்திஞர்க்கு, "காமஞ்சான்ற கடைக்கோட்காலே, ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி, அறம்புரி" யுள்ளத்த ராய், அதன் பின்பு துறவிற் செல்லாத உடம்பின் பயன் ஏது?

(ப—ரை) நட்டாரை—தன்னோடு சிநேகம் செய்தவரை, ஆக்கி—செல்வமுடையராகச் செய்து, பகை—பகைத்தவரை, தணித்து—கெடுத்து, வை எயிறு பட்டுஆர் துடியிடையார் படர்ந்து – கூரிய பல்லேயும் பட்டார்ந்த துடியிடையையும் உடைய மகளிர்மேல் காதல்கொண்டு, இல்லத்து ஒட்டி தொடங்கிஞர் – மனைவாழ்க்கையின் கண்ணே பொருந்தி நடத்திஞர்க்கு, அதன்பின் – அதன்பின்பு, துறவா உடம்பிஞல்—துறவிற்செல்லாத உடம்பால், பயன் என்ன—பயன் என்ன உண்டு.

"காமஞ்சான்ற . . ." என்பது தொல்காப்பியம் பொருளதிகாரம் கற்பியல் 51—வது சூத்திரம்.

(க—து). இல்லறம் இனிது நடத்தினபின்பு துறவறம் மேற்கொள்க.

390. இல்லறமேனும் துறவறமேனும் தழுவாதவர்

இல்வாழ்க்கை யானும் இலதானும் மேற்கொள்ளார்
நல்வாழ்க்கை போக நடுவுநின்—றெல்லாம்
ஒருதலையாச் சென்று துணியா தவரே
இருதலையும் காக்கழித் தார். 208

(ப—பொ). இல்லறத்தையாயினும் துறவறத்தையாயினும் தம்மிடத்துக் கொள்ளாராய், தமக்குள்ள நல்ல நாட்கள் போக, ஒன்றிற் படாதே இடையே நின்று, தருமா தருமத்தின் பகுதியெல்லாம் தேர்ந்து ஒரு நெறியாக ஒழுகிச்சென்று துணிதற்கு உள்ளமில்லாதவரன்றே, காவில் இருதலைப் பாரத்தி னுள்ள பொருளைப் போக்கிக் காத்தண்டைக்கொண்டு நின்றவர் போல்வர்.

(ப—ரை). இல்வாழ்க்கையானும் – இல்லறத்தையாயினும், இலதானும்—துறவறத்தையாயினும், மேற்கொள்ளார்—தம்மிடத்துக் கொள்ளாராய், நல்வாழ்க்கை—தமது நல்ல வாஞட்கண், போக – வீணுகக்கழிய,

நடுவே நின்று — இடையே நின்று, எல்லாம் ஒருதலையா சென்று துணி யாதவரே — தருமாதருமத்தின் பகுதியெல்லாம் தேர்ந்து ஒருநெறியாக ஒழுகிச்சென்று துணிதற்கு மனமில்லாதவரே, கா இருதலையும் கழித் தார்—காவடியின் இரண்டுபக்கத்துப் பாரத்தினுள்ள பொருளைப் போக் கிக் காவடியாகிய கம்பைக்கொண்டு நின்றவர் போல்வார்.

(க—து). தருமாதருமங்களை அறிந்து இல்லறநெறியையாவது துற வறநெறியையாவது துணிந்துகொள்ளாமல் வீணிலே காலங்கழிப்ப வர், காவடியின் இருதலைப் பொருளையும் போக்கினவர் போல், இம் மைப்பேறு மின்றி மறுமைப்பேறு மின்றி ஒழிவர்.

391. செல்வ முதலியன நிலையாமை

வளமையும் தேசும் வலியும் வனப்பும்
இளமையும் இற்பிறப்பும் எல்லாம்—உளவாய்
மதித்தஞ்சி மாறுமஃ தின்மையால் கூற்றந்
குதித்துய்ந் தறிவாரோ இல். 183

(ப—பொ). செல்வமும் விளக்கமும் வலியும் அழகும் இளமையும் குடிப்பிறப்பும் என்ற இவையெல்லாம் ஒரு வர்க்குக்கூட உளவாயினும், இவற்றை மதித்து அஞ்சி நீங்கும் செய்கை கூற்றிற் கின்மையால், அக்கூற்றைக் கடந்து பிழைத்தறிவார் இல்லை.

(ப—ரை). வளமையும்—செல்வமும், தேசும்—விளக்கமும், வலியும்—வலியும், வனப்பும்—அழகும், இளமையும்—இளமையும், இற்பிறப்பும்—குடிப்பிறப்பும், எல்லாம் - என்ற இவையெல்லாம், உளவாய் மதித்து—ஒருவனுக்கு உள்ளனவாய் மதித்து, அஞ்சி மாறும் அஃது - அஞ்சி நீங்கும் இயல்பு, இன்மையால் - யமனிடத்து இல்லாமையால், கூற் றம் குதித்து உய்ந்தறிவார் இல் - யமனைக் கடந்து பிழைத்தறிவார் இல்லை. [ஓ—அசை].

"இழைத்தநாள் எல்லை யிகவா. பிழைத்தொரீஇக்
கூற்றங் குதித்துய்ந்தார் ஈங்கில்லை."—நாலடியார்.

"கூற்றங் குதித்தலும் கைகூடும்" எனத் திருக்குறளிலும் வருகின் றது.

"இல்லம் இளமை எழில்வனப்பு மீக்கூற்றம்
செல்வம் வலியென் றிவையெல்லாம்—மெல்ல
நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்
தலையாயார் தாமுய்யக் கொண்டு."—நாலடியார்.

392. ஆசையைத் தவிர்த்தல்

கொண்டொழுகு மூன்றற் குதவாப் பசித்தோற்றம்
பண்டொழுகி வந்த வளமைத்தங்—குண்டது
கும்பியிலுந் திச்சென் றெறிதலால் தன்னாசை
அம்பாயுள் புக்கு விடும். 363

(ப—பொ). தான் கொண்டொழுகுகின்ற விருந்து புறந்தருதலும் தெய்வச் சிறப்பும் இரந்தார்க் குதவலும் என்னும் மூன்றற்கும் உதவவொட்டாத ஆசையால் உள் வந்த பசித்தோற்றம், முன்பில் தானொழுகிய நல்வினை யான் வந்த செல்வத்தைத் தன்னை உண்ணப்பண்ணி, பசித்தோற்றம் கும்பிநரகத்தில் உந்தித் தன்னைக்கொண்டுசென்று எறிதலால், தன் ஆசையானது அம்பாய்த் தன்மனத்தினுள்ளே புக்குவிடும்.

(ப-ரை). கொண்டொழுகும் - தான் கொண்டொழுகுகின்ற, மூன்றற்கு - (விருந்து புறந்தருதலும் தெய்வத்திற்குச் சிறப்புச் செய்தலும் இரந்தார்க் குதவலும் என்னும்) மூன்றற்கும், உதவா-உதவவொட்டாத, பசித்தோற்றம் - ஆசையால் உள்வந்த பசித்தோற்றம், பண்டு ஒழுகி வந்த வளமைத்து - முன்பிறப்பில் தான் ஒழுகிய நல்வினையால் வந்த செல்வத்தை, அங்கு உண்டு - தன்னை உண்ணப்பண்ணி, அது - அப் பசித்தோற்றம், சென்று கும்பியில் உந்தி எறிதலால் - தன்னைக் கொண்டுசென்று கும்பி நரகத்தில் தள்ளி எறிதலால், தன் ஆசை-தன் ஆசையானது, அம்பாய் உள் புக்குவிடும் - அம்பாய்த் தன் மனத்தினுள்ளே புக்குவிடும்.

(க—து). முற்பிறப்பில் செய்த நல்வினையால் வந்த செல்வத்தை நல்ல வழிகளில் செலவிடாமல் ஒருவன் தான் ஆசைப்பட்டவைகளை அனுபவிப்பதில் செலவிட்டால் அவனுக்கு நரகத்துன்பம் உண்டா

கும். ஆகையால் மனத்தில் சென்று புகுதாதபடி ஆசையாகிய அம் மையைத் தவிர்த்தல்வேண்டும்.

393. துறவாமல் இல்லிருந்து வாழ்தல்

செல்வத் துணையுந்தம் வாழ்நாட் டுணையுந்தாம்
தெள்ளி உணரார், சிறிதினால் செம்மாந்து,
பள்ளிப்பால் வாழார், பதிமகிழ்ந்து வாழ்வாரே
முள்ளித்தேன் உண்ணு மவர். 274

(ப-பொ). செல்வத்தினுடைய நிலையாத தன்மையினை யும் தம்வாழ்நாள் நிலையாத தன்மையினையும் ஆராய்ந்து தாம் உணராதே, இவை சிறிது பெற்றதனாலே களித்து, அருந்தவர் உறையும் பள்ளிமருங்கு வாழாதே மனையின் கண் மகிழ்ந்து வாழ்கின்றார், முள்ளிப்பூவில் தேனை உண்டு இன்புறுவாரோடு ஒப்பர்.

(ப-ரை). செல்வத்துணையும்-செல்வம் நிலையாத தன்மையினையும், தம் வாழ்நாள் துணையும் - தமது வாழ்நாள் நிலையாத தன்மையினையும், தாம் தெள்ளி உணரார் - தாம் ஆராய்ந்து உணராமல், சிறிதினால் - இவை சிறிது பெற்றதனாலே, செம்மாந்து - களித்து, பள்ளிப்பால் - அருந்தவர் உறையும் பள்ளியிடம், வாழார் - வாழாமல், மகிழ்ந்து பதி வாழ்வாரே - மகிழ்ந்து மனையின்கண் வாழ்கின்றவரே, முள்ளி தேன் உண்ணுமவர் - முள்ளிப்பூவின் தேனை உண்டு இன்புறுவாரோடு ஒப்பர்.

(க-து) துறவறம் மேற்கொள்ளாமல் இல்லறத்தில் மகிழ்ந்திருப்பது, முள்ளிப்பூவின் தேனை உண்டு இன்புறவு தொக்கும்.

394. இல்வாழ்க்கையில் அழிவுறுமல் துறத்தல்

வன்னெஞ்சி னார்பின் வழிநினைந்து செல்குவை
என்னெஞ்சே! இன்றிழிவை யாயினாய்.—சென்னெஞ்சே!
இல்சுட்டி நீயும் இனிதுரைத்துச் சாவாதே.
பல்கட்டப் பெண்டிர் மகார். 374

(ப—பொ). இரங்காத வலிய நெஞ்சையுடையார் பின்னே செல்லும் நெறியினை நினைத்திருந்து செல்குவையாயின், எனது நெஞ்சே! இன்றே அழிவாயாயினுய். மனை வாழ்க்கையை நன்குமதித்துப் பிறர்க்கு இனிய சொல்லை உரைத்து இறந்து போகாதே இங்கு நின்று துறந்துபோவாயாக அந்தப் பெண்டிரும் பிள்ளைகளும் பல தளை காண்.

(ப—ரை). என் நெஞ்சே—எனது நெஞ்சே! வல் நெஞ்சினுர் பின்—இரங்காத வலிய நெஞ்சையுடையார் பின்னே, வழி நினைந்து செல்குவை—செல்லும் நெறியை நினைத்திருந்து செல்குவையாயின், இன்று—இன்றே, இழிவை ஆயினுய் – அழிவாயாயினுய். நீயும் – நீயும், இல் சுட்டி—மனைவாழ்க்கையை நன்குமதித்து, இனிது உரைத்து—பிறர்க்கு இனியசொல்லை உரைத்து, சாவாதே – இறந்துபோகாமல், நெஞ்சே செல்—நெஞ்சே! இங்கு நின்றும் துறந்துபோவாயாக. அ பெண்டீர் மகார்—அந்தப் பெண்டிரும் பிள்ளைகளும், பல் கட்டு—பல தளைகளாவர்.

(க—து). வன்னெஞ்சினுரைப் பின்பற்றி மனைவாழ்க்கையை நன்குமதித்து அழிவுருமல் துறவை மேற்கொள்வது நன்று.

பழமொழி.—பெண்டாட்டி காற்கட்டு: பிள்ளை வாய்க்கட்டு. பெண்டாட்டி கால்விலங்கு: பிள்ளை சுள்ளாணி. Wedlock is a padlock.

395. எல்லாப் பற்றுக்களும் நீங்கித் தேகாபிமானம் நீங்காமை.

சிறந்ததம் சுற்றமும் செய்பொருளும் நீக்கித்
துறந்தார் தொடர்ப்பா டெவன்கொல்?—கறங்கருவி
ஏனல்வாய் வீழும் மலைநாட! அஃதன்றே
யானைபோய் வால்போகா வாறு. 342

(ப—பொ). சிறப்புடைத்தாகிய தமது சுற்றத்தையும் தாம் செய்யப்பட்ட பொருள்களையும் கைவிட்டு மனையைத் துறந்தவர் யாக்கைமேலே தொடர்ச்சியுடையராய் வாழ்தல், எவ்வாறு போல்வதெனில், முழங்காநின்ற அருவி தினைப்புனத்தின் கண்ணே வீழும் மலைநாடனே! அதுவன்றே ஓருவாயிலின் கண்ணே யானைபோக அதன் வால் போகாமல் தகைப்புண்டு நிற்குமாறு போலும்.

(ப—ரை). கறங்கு அருவி ஏனல்வாய் வீழும் மலைநாட — முழங்கா நின்ற அருவி தினைப்புனத்தின்கண்ணே வீழும் மலைநாடனே! தம் சிறந்த சுற்றமும்-தமது சிறப்புடைத்தாகிய சுற்றத்தையும், செய்பொருளும் — தாம் ஆக்கிய பொருள்களையும், நீக்கி துறந்தார் — கைவிட்டு மனையைத் துறந்தவர், தொடர்ப்பாடு எவன்கொல் — யாக்கைமேலே தொடர்ச்சியுடையவராய் வாழ்தல் எவ்வாறு போல்வதெனில், அஃதுஃ அது, யானை போய்—ஒரு வாயிலின்கண்ணே யானை போக, வால் போகா ஆறு அன்றே — அதன் வால் போகாமல் தகைப்புண்டு நிற்கு மாறு போலும்.

(க—து). எல்லாப் பந்தங்களும் நீங்கிய துறவிகளுக்குத் தேகாபிமானம் மாத்திரம் நீங்காதிருப்பது, யானை நுழைதலான வாயிலில் அதன் வால்மாத்திரம் போகாமல் தகைப்புண்டு நிற்பது போலாம்.

"மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை."—திருக்குறள்.

396. தீவினை கழிவதற்கு நல்வினை போதாமை
எனைப்பல் பிறப்பினும் ஈண்டித்தாம் கொண்ட
வினைப்பயன் மெய்யுறுதல் அஞ்சி—எனைத்தும்
கழிப்புழி ஆற்றாமை காண்டும். அதுவே
குழிப்புழி ஆற்றா குழிக்கு. 362

(ப—பொ). ..........................................
அஞ்சித் தாம் அவற்றை நுகர்ந்து கழிக்கும் காலத்திற்கு எனைத்தும் ஆற்றாமை காணாநின்றேம். குழித்தோண்டின பூழி அத்தோண்டப்பட்ட குழிக்கு ஆற்றமாட்டா. [பிறப்பறுத்தல் ஒருகாலத்தும் கூடாது என்பதாம்].

ஆதலால், கன்மம் தொலையொத்துச் சத்திநிபாதம் உண்டாய தேசிகனைத் தேடி வழிபட்டு அவனாலே சஞ்சித கன்மத்தை நீக்கிப் பிராரத்துவ கன்மத்தைப் பொசித்து ஆகாமிய கன்மம் வந்தேறாமல் காத்தாலொழியப் பிறப்பு அறாது என்பது கருத்தாம்.

(ப—ரை). வினை பல் பிறப்பினும்-எவ்வளவான பலவகைப் பிறப்பிலும், ஈண்டி — அடைந்து, தாம் கொண்ட வினைப்பயன் — தாம் தேடிக்கொண்ட தீவினைப் பயன்கள், மெய்—உண்மையாக, உறுதல்-மேல் வந்துசேருதலுக்கு, அஞ்சி — பயந்து, கழிப்பு உழி — தாம் அநுபவித்துக் கழிக்குங்காலத்தில், எனைத்தும்—தாம் செய்யும் அவற்றை நல்வினையின் பயன் எவ்வளவும், ஆற்றாமை — போதாமையை, காண்டும்—கண்டோம். அது அங்ஙனம் போதாமை, குழி பூழி குழிக்கு ஆற்றா—ஒருகுழியில் தோண்டிய புழுதி அக்குழியைத் தூர்த்தற்குப் போதாமை போலும்.

பழமொழி.—தோண்டக் குறுணி; தூர்க்க முக்குறுணி.

397. வினையற்றால் பிறப்பறுதல்

திரியும் இடிஞ்சிலும் நெய்யும்சார் வாக
எரியும் சுடரே ரனைத்தாய்த்—தெரியுங்கால்
சார்வற ஓடிப் பிறப்பறுக்கும். அஃதேபோல்
நீரற நீர்ச்சார் வறும். 219

(ப—பொ). விளக்கு எரியுமிடத்துத் திரியும் இடிஞ்சிலும் நெய்யும் சார்வாகவல்லது எரியாது. அவ்வாறு தெரியுமிடத்து அம்மூன்றும் அறவே, விளக்கும் அவியும். அதுவேயன்றிப் பிறப்புக்குச் சார்வாயுள்ள மற்றெல்லாம் அறவே, பிறப்பும் அறும். அவையிரண்டும் போல, நின்ற நீர் வற்றவே அந்நீரைச் சார்வாக வாழ்கின்ற சாதியெல்லாம் கெடும்.

(ப—ரை). நீர் அற நீர்ச்சார்வு அறும் — நின்ற நீர் வற்றவே அந்நீரைச் சார்வாக வாழ்கின்ற சாதியெல்லாம் கெடும். திரியும் இடிஞ்சிலும் நெய்யும் சார்வாக சுடர் ஏர் எரியும்—திரியும் அகலும் நெய்யும் சார்வாக விளக்கானது அழகாக எரியும்; (அம்மூன்றும் அறவே விளக்கு அவிந்தொழியும்). அஃதேபோல் - அங்ஙனமே, தெரியுங்கால்—ஆராய்ந்துபார்க்குங்கால், சார்வு அனைத்தாய் அற — பிறப்புக்குச் சார்வாயுள்ள மற்றெல்லாம் அறவே, ஓடி—அவ்வுறவானது விரைந்து, பிறப்பு அறுக்கும்—பிறப்பை ஒழிக்கும்.

(க-து). நீர் வற்றினும் குளத்திலுள்ள மீன் முதலியன கெடும். திரி முதலியன அற்றால் விளக்கு அவியும். அங்ஙனமே வினை அற்றால் பிறப்பு ஒழியும்.

393. யாதொரு நெறியிலும் பயிலாமை

ஓதநீர் வேலி உலகத்தார் அந்நெறி
காதலர் என்ப தறிந்தலால்,—யாதொன்றும்
கானக நாட! பயிலார்: பயின்றது
வானக மாகி விடும். 393

(ப-பொ). ஒலி பொருந்திய கடல் சூழ்ந்த உலகத்துள்ளோர் யாவரும் தாம் பயின்றொழுகுகின்ற அந்நெறியைக் காதலிப்பர் என்பதனை அறிந்தன்றி, யாதொன்றும் பயிலார்: கானகநாடனே! யாதோர் உலகத்து வாழ்வாரெல்லாரும் தாம் பயின்ற செய்கை பொல்லாதாயினும் துறக்கம்போல இனிதாய்ப் பின்னை விடுதல் அரிதாம் ஆதலின்.

(ப-ரை). கானக நாட—கானக நாடனே! பயின்றது வானகம் ஆகிவிடும்—யாதோர் உலகத்து வாழ்வோர் எல்லோரும் தாம் பயின்ற செய்கை பொல்லாதாயினும் துறக்கம்போல இனிதாய்ப் பின்னை விடுதல் அரிதா மாதலின், ஓத நீர்வேலி உலகத்தார் - ஒலிபொருந்திய கடல்சூழ்ந்த உலகத்துள்ளோர் யாவரும், அ நெறி — தாம் பயின் றொழுதுகின்ற அந்நெறியை, காதலர் என்பது—காதலிப்பர் என்பதனை, அறிந்தலால்—அறிந்தன்றி, யாதொன்றும் பயிலார் — யாதொரு நெறியிலும் பயிலார்.

(க-து). பழகிய செய்கை பொல்லாதாயினும் சுவர்க்கம்போல் இனிதாய்ப் பின் விடுதல் அரிதாதலால், தாம் மேற்கொண்ட நெறியை உலகத்தார் விரும்புவ ரென்பதை அறிந்தன்றி அந்நெறியில் பயிலார்.

பழமொழி.—பழக்கம் கொடியது பாறையினும் கோழி சீக்கும்.

## 399. சமயக்கோள்கைகளில் நல்லவைகளை மேற்கோள்க

பரந்தவர் கொள்கைமேல் பல்லாறும் ஓடார்
நிரம்பிய காட்சி நினைந்தறிந்து கொள்க.
வரம்பில் பெருமை தருமே. பிரம்பூரி
என்றும் பதக்கேழ் வரும். 143

(ப-பொ). பலவேறு வகைப்பட்டுப் பரந்த சமயத்தார் ஒழுக்கத்தின்மேல் பல நெறிக்கண்ணும் ஓடாதே, அச்சமயத்தார் கொள்கைக்குள் நன்மை நிரம்பிய கொள்கையை ஆராய்ந்தறிந்தே தமக்குக் கொள்கையாக ஒழுகுக. ஒழுகினல் அவ்வொழுக்கம் எல்லையில்லாத பெருமையைத் தரும்; பிரம்பூரி என்னும் பெயருடைய நெல் என்றும் பதக்கேழ் வருமால், அதுபோல.

(ப-ரை). பரந்தவர் கொள்கைமேல் – பலவேறு வகைப்பட்டுப் பரந்த சமயத்தாருடைய ஒழுக்கத்தின்மேல், பல் ஆறும் ஓடார்–பல நெறிக்கண்ணும் ஓடாராய், நிரம்பிய காட்சி – (அச்சமயத்தாருடைய கொள்கைகளுள்) நன்மை நிரம்பிய கொள்கையை, நினைந்து அறிந்து–ஆராய்ந்தறிந்தே, கொள்க–தமக்குக் கொள்கையாக ஒழுகுக. (ஒழுகினல் அவ்வொழுக்கம்), வரம்பு இல் பெருமை – எல்லையில்லாத பெருமையை, தரும்–கொடுக்கும். பிரம்பூரி – பிரம்பூரி என்னும் நெல், என்றும் – எக்காலத்தும், பதக்கு ஏழ் வரும் – பதக்கு ஏழாக விளையும்.

(க-து). பலசமயக் கொள்கைகளையும் ஆராய்ந்து அவற்றில் நல்லதையே மேற்கொண் டொழுகுதலானது, பிரம்பூரி என்னும் நெல் பதக்கேழாக விளையுமாறுபோல், மிக்க பெருமையைக் கொடுக்கும்.

# பழமொழி

## அரும்பத அகராதி

பதம். செய்யுள்.

அகத்தாலழிவு — மனையிலுள்ள வறுமை ... ... 329
அகலுணீர்—ஊர்வாரிநீர் ... 98
அடு—துறக்கம் ... ... 380
அட்டவர்—வென்றுகொன்றவர்.. 315
அட்டிய—குத்திய ... ... 311
அட்டிற்று — அட்டிலின் கண் உள்ளது ... ... ... 134
அணிக்கோடல் — அணித்தாக ஒரு பொருளைப் பெறுதல் ... 187
அரண்—கவசம் ... ... 155
அரிகால்—அரிதாள் ... ... 110
அரிந்தரிகால் — அரிந்துவைத்த அரிகால் ... .. ... 299
அலப்பின்—வறுமையுற்றால் ... 101
அலவலைத்தல் — நாணமில்லாத தன்மையைச் செய்தல் ... 23
அவ்வியம் செய்வர் — வஞ்சித்தாயினும் நல்வழியின்கண் ஒழுகுவிப்பர் ... ... 264
அழுங்க—தவிர ... 222—111
அளிந்தார் — அன்புடையராய் இரமுடையார் ... ... 182
அள்ளில்லம் — (அள் — நெருக்கம்)—ஒரே வீடு ... ... 297
அறிமடம் — அறிவின்கண் உள்ள மடம் ... ... ... 74
அறை — சூழ்ச்சி பொருந்திய வஞ்சனை ... ... 310
அறைபோதல்—அரசனைவிட்டுப் பகையரசனைச் சேர்தல் ... 83

அறையோ — அறை கூவுகின்றேன் ... ... ... 336
அற்றம் — மறைத்துச் செய்யும் காரியம் ... ... ... 177
ஆட்டியக்கால்—நலிந்தால் ... 47
ஆணம்—நயப்பு (அன்பு) ... 29
ஆணி—படியாணி ... ... 168
ஆலித்து—களித்து ... ... 383
ஆழி—வட்டம் ... ... 39
இகந்துழி—சேய்த்தாயவிடம் ... 175
இடிஞ்சில் — விளக் கெரிக்கும் அகல் ... ... ... 397
இடை நாய்—இடையர் நாய் ... 305
இடையனெறிந்த மரம்—இடையன் கொன்ற மரம். இது ஆடுமாடுகள் எட்டி மேயலாம்படி அரைவாசி வெட்டிச் சாய்த்திருத்தலால், பாதி பசுமையாகவும் பாதி உலர்ந்தும் இருக்கும் ... ... 228
இடையீடு—வேறுபாடு ... 138
இருங்கடம்—பெரியசுரம் ... 290
இருபால்—இருமை ... ... 358
இருப்புழி — உட்கார்ந்திருக்குமிடம் ... ... ... 190
இவர்தல்—விரும்புதல். 14. பரத்தல் ... ... ... 226
இழுகுதல்—தாமதித்தல் ... 160
இறைகொண்ட—தங்கிய ... 92
இறைவன்—தந்தை ... ... 331
இற்பாலர்—குடிப்பிறந்தவர் ... 184

பதம். செய்யுள்.

இன்சொலியாமை — இனியசொற்களைச் சொல்லாமை ... 338
இடு—வலி ... ... 40–71
இரைம்பதின்மர்—கௌரவர் ... 356
இனுலகம்—இவ்வுலகம் ... 360
உடைவூண் — களவு கண்டுண்ணும் உணவு ... ... 194
உணங்கல் — வெயிலில் உலரும் வற்றல் முதலிய பண்டம் ... 368
உண்ணோட்டகல் — (உண் + ஓடு + அகல்) — உண்கின்ற ஓட்டகல்... ... ... 163
உதவடுத்தல் — உதவியை யடுத்துக் காரியங் கேட்டல் ... 274
உயவாது—சொல்லி ஆராயாது... 180
உயவாமல் — உயவு செய்யிடாமல் ... ... ... 168
உயவுசெய் — தேருருள் நடத்தற்கு இடும் செய்... ... 385
உரி—உரிமை ... ... 328
உருத்து—தோன்றி—பிறந்து 238–271
உருத்து—வெகுண்டு ... ... 321
உழந்தமை — பயின்று பழகினமை ... ... ... 328
உளு—புழு ... ... ... 23
உறுமக்கள் — தனக்கு உறுதி செய்தார் ... ... ... 121
உறைக்கும்—பெய்யாநின்ற ... 316
ஊழம்பு — தனக்கு இறுதியைத் தரூவும் ஊழினால் வரும் அம்பு ... ... ... 240
ஊழ்—முறை ... ... 104
எமர் — எம்முடையவர் — எமது சுற்றத்தவர் ... ... 268
எம்முன்—எம் அண்ணன் ... 305
எய்ப்புழி வைப்பு—தாம் தளர்ந்த காலத்துத் தமக்குதவும் வைப்பு ... ... ... 198
எல்—விளக்கம் ... ... 20
எனை—எத்துணை ... ... 187
எஃகுதல்—பஞ்சிகொட்டுதல் ... 181
ஏ கல்—பிறங்கிய கல் ... 237
ஏமாரார் — காவல் இலார் (ஏமம் + மருவார்) ... ... 232
ஏமாந்திருத்தல்—அரணுடையோமென்றிருத்தல் ... 320–330
ஏமாப்ப—சேமமாக 163. அரணாக 306. இன்புறும்படி... 359
ஏற்றுக்கன்று—நல்ல ஏற்றுக்குப் பிறந்த கன்று ... ... 81
ஏனுலகம்—மறுமை ... ... 360
ஒக்கல்—மருங்கு ... ... 290
ஒடியெறிதல் — இடையன் மரத்தை வெட்டி ஒடியெறிந்து வைத்தல்போல் பகை கொண்டு வைத்தல் ... ... 310
ஒளி—விண்மீன்—நட்சத்திரம் ... 201
ஒக்கம்—உயர்வு—பெருமை [கடவுள் வணக்கம்]
ஓதநீர்—ஒலிபொருந்திய கடல்... 398
ஓர்த்தது - கருதியது ... ... 37
ஓர்ப்பார்—பார்ப்பவர்... ... 248
கடன்—செய்யக்கடவன ... 82
கடிசெய்தல்—புதிய செய்தல் ... 209
கடுப்ப—மிக ... ... ... 189
கடைபோகாது — கடைபோகநில்லாது ... ... ... 28
கட்டங்கம்—தண்டம் — சிவனடியார் திருவோட்டைத் தொங்கவிட்டுக்கொண்டு போகும் தண்டம் ... ... ... 124
கட்டியடை—பாகுபெய்த அடை 108
கட்டு—தளை ... ... ... 394
—அரண் ... ... 178
—வரம்பு ... ... 366
கட்டுரைவாய்ப்பாடு—சொல்லும் சொல்வன்மை ... ... 258
கணக்கு—நூல் ... ... 5
கணிவேங்கை—கணிகளைப்போல நாளை அறிவிக்கும் வேங்கை. 233

| பதம். | செய்யுள். |
|---|---|
| கண் பாட்ட—கண்களின் தகைமையாயுள்ள ... ... | 300 |
| கதித்து—மிக்கு ... ... | 286 |
| கதுப்பு—மயிர் 128. கூந்தல் ... | 272 |
| கரியர்—நடுச்சொல்வார்—சாட்சிகள் ... ... ... | 148 |
| கருந்தொழில் / கருவினை }—கொலைத்தொழில் ... ... ... | 97 |
| கருவூர் விழுமியோன்—கரிகால்வளவன் ... ... ... | 230 |
| கல்வியகலம்—கல்வியின் பெருமை ... ... ... | 258 |
| கவட்டைநெறி—கவர்வழி—பலகவராய்ப் போம் பாதை ... | 360 |
| கவுட் கொண்ட நீர்—கவுளில் கொண்டடக்கிய நீர் ... | 252 |
| கழுமலம்—சீகாழி ... ... | 230 |
| களமர்—தொழில் செய்வார் ... | 203 |
| கறவைக் கன்றூர்ந்தான்—வீதிவிடங்கன் ... ... | 242 |
| கறு—தணியாக் கோபம் ... | 306 |
| கற்றடி—(கன்று + அடி)—கன்றின் குளம்பு அழுந்திய குழியிலுள்ள நீர் ... ... | 342 |
| கற்றூற்றுவார்—கற்றுவல்லவராய்க் கல்வியை நடத்தவல்லார் ... ... ... | 16 |
| கன்றவிடல்—இளர்வித்தல் ... | 276 |
| கா—காத்தண்டு—காவடி ... | 390 |
| காடு—துரால்—துரும்பு ... | 78 |
| காட்சி—கொள்கை ... ... | 399 |
| காணி—காணியளவுபொருள் | 168—196 |
| காதலர்—உற்றார் ... ... | 356 |
| காயம்—சம்பாரம் ... ... | 338 |
| காயந்தியார்—கோபியர் ... | 131 |
| காரறிவு—அஞ்ஞானம் ... | 102 |
| காழ்—வடம் ... ... ... | 50 |
| கிடப்புழி—கிடக்கும் (படுக்கும்) இடம் ... ... ... | 190 |
| கிழவன்—தன்னையாக்கியதலைவன் | 172 |
| குணில்—கல் ... ... ... | 214 |
| குதித்து—கடந்து ... ... | 391 |
| குரு—கழலைக்கட்டி ... ... | 288 |
| குறுக்கண்ணி—குறுங்கண்ணி—மாட்டின் தலையில் கட்டும் கயிறு ... ... .. | 186 |
| குறுமக்கள்—பிள்ளைகள் ... | 121 |
| குறும்பு—குறும்பன் ... ... | 227 |
| கூ—கூப்பிடு—கூப்பாடு ... | 316 |
| கூட்டு—வரி—இறை ... | 245—266 |
| கூதறை—முறைமையின் ஒழுகாதவர் ... ... ... | 106 |
| கூழ்மரம்—கூழுண்கைக்கு இடமாக நிறுத்திய மரம் ... | 256 |
| கெழீஇயிலார்—(கெழு—கெழுமை—வளமை)—பயன் பெறுதார் ... ... ... | 257 |
| கெழீஇயின்மை—நட்பின்மை ... | 140 |
| கெழு—மேவிய ... ... | 271 |
| கை—செயல் 109.—ஒழுக்கம் கைப்பொருள் ... | 48—56 |
| கைகாவா—பாதுகாவாத ... | 50 |
| கைத்து—கைப்பொருள் ... | 327 |
| கைம்மேலே நின்று—தமக்காம் திறத்தின் மேலே நின்று ... | 280 |
| கையிகத்தல்—அகன்று நின்றல். | 10 |
| கொக்கு—மாமரம் ... ... | 91 |
| கொடும்பாடு—கொடியதன்மை... | 64 |
| கொண்மக—கொள்க ... ... | 245 |
| கொம்மை கொட்டுதல்—கைவிரித்துக்கொட்டுகை (கும்மியயடித்தல்) ... ... | 281 |
| கொல்லி—கொல்லிமலை ... | 388 |
| கொழித்து—ஆராய்ந்து ... | 180 |
| கொற்றப்புள்—கருடன் ... | 177 |
| கோட்டு—நெற்கூடு ... ... | 388 |
| கோவாத—பொருந்தாதன ... | 116 |
| கோற்றலை—குவியிருக்கும் இடம். | 245 |
| சகத்தன்—கடுவன் ... ... | 389 |

பதம். செய்யுள்.

சலமொழுக்கல் — படிறுபட ஒழு
குதல் ... ... ... 371
சம்பிரதம்—விளையும் விளைவு ... 327
சா மா—சாவக்கடவமாக்கள் ... 61
சிலைத்து—வெகுண்டு ... ... 295
சிறிதுரைத்தல் — சிறுமைப்பட
உரைத்தல் ... ... 123
சினை—முட்டை ... ... 316
சுடப்பட் டுயிருய்ந்த சோழன்
மகன்—கரிகாலன் ... ... 239
சுரையாழ்—ஒரு நரம்பையுடைய
செங்கோட்டியாழ் ... 260
சுனைத்தெழுதல் — மனவெழுச்சி
யால் மிக்கெழுதல் ... 16
செத்துக—தம்மை ஒருவன் வாச்
சியால் செத்துக ... ... 340
செம்மாந்து—இறுமாந்து 315.
களித்திருந்து ... ... 393
செம்மாப்பவர்—களிப்பவர் ... 295
செருவறைந்து — செருவிற்குப்
பறை அறையப்பண்ணி ... 326
செவ்வியல் — நெறியல்லாநெறி
யில் ஒழுகும் ஒழுக்கங்கள்... 264
சேண்—காலநெடுமை ... 344
சேய்த்தாற் பெறல்—காலம் நெ
டிது சென்றால் ஒரு பொரு
ளைப் பெறுதல் ... ... 187
சொல்லின் வளா — சொல்லி
னாலே வளைத்து ... ... 256
சொற் றூற்றுக்கொண்டு—சொல்
லைக் கொழித்துக்கொண்டு ... 16
தக்கம்—நிலை ... ... 362
தஞ்சம்—எளிமை ... ... 182
தணித்து—கெடுத்து ... ... 389
தந்நீரர்—தம்முடைய தன்மை
யர் ... ... ... 192
தம—தம்முடையன ... ... 66
தமன்—உறவினன் ... ... 345
தம்மையுடைமை — தம்மனத்
தைத் தம்வயத் தாக்குதல் ... 387

பதம். செய்யுள்.

தலைப்படுத்தல்—தம்மோடு சேர்த்
தல் ... ... ... 29
தலைப்பாடு—பெறுதல் — அறிந்து
செல்லுதல் ... ... 11
தனிசு—கடன் ... ... 297
தன்னையர்—தன் அன்னையர் ... 326
தாயம்—சமயவாய்ப்பு—காலம் ... 302
தாலவடைக்கலம் — அடகுவை
த்த நிலம் (தாலம்—பூமி) ... 87
தாருப்படினும்—த ற்றிப்போகப்
பட்டதாயினும் ... ... 69
தாற்றுதல்—கொழித்தல் ... 16
திரு—புண்ணியம் ... 33—199
—செல்வம் ... 33—301
துச்சு — நிலையுற்றிருத்தல் — நெடு
நாள் சேர்ந்துறைதல் ... 355
துடும்பலெறிந்துவிடல்—உடம்பு
சுத்தம் பெறுதற்குக் குளித்
துத் திளைத்தல் ... ... 98
துப்புரவது—உதவுவது ... 373
துயக்கு—தளர்வு — அறிவுதிரிவா
கிய மயக்கம் ... ... 365
துலாம்—ஏற்றம் ... ... 330
துளக்கம்—ஐயம்—கலக்கம் ... 3
துளியுண்பறவை—வானம்பாடி. 248
துனி—சினம் 127. உறுகண் ... 240
துன்னூசி—தையலூசி 73—354
தூங்கும் எயில்—இயங்கியொழு
கும் அசுரருடைய ஊர் ... 155
தேசு—விளக்கம் 391. புகழ் 285—
319
தேம்பல் மெலிதல்—வாடல் ... 171
தொல் வந்தார்—பழைய குடியுள்
ளே தோன்றி வந்தவர் ... 34
தொழுநை—யமுனையாறு ... 384
நகை—விளையாட்டு ... ... 212
நடலை—கவலை—துன்பம் ... 25
நடுவண்—நடுவுநிலைமை ... 310
நம நெய்-தெய்வத்தையாட்டிய
நெய் ... ... ... 345

| பதம். | செய்யுள். |
|---|---|
| நமன்—நம் சுற்றத்தான் ... | 345 |
| நவைக்க—துயர் செய்ய ... | 86 |
| நளிர்—பெரிய ... ... | 48 |
| நாராயம்—நாராயணாஸ்திரம் ... | 50 |
| நாவாய்—நாவினிடம் ... ... | 116 |
| —கப்பல் .. ... | 116 |
| நாறும்—மணம் வீசும் ... | 128 |
| நிரையுளரல்லார்—தூய குடிமரபின் உளரல்லாத கீழோர் ... | 122 |
| நீர்ச்சார்வு—நீரைச்சார்ந்து வாழ்கின்ற சாதி ... ... | 397 |
| நூக்கி—அடர்த்துத் தள்ளி ... | 311 |
| நெடுவரை—பெரிய சக்கரவாளமாகிய மலை ... ... | 39 |
| நொவ்வியார்—கீழ்மக்கள் ... | 208 |
| நோவச்செய் நோயின்மை—நோவச் செய்தால் பொறுக்கும் பொறை ... ... ... | 43 |
| நோன்றல்—பொறுத்தல் ... | 59 |
| பகலாணி—நுகத்தி னடுவாணி ... | 339 |
| படு—மிக்க... ... | 247—251 |
| படைத்தகைமை — படையைப் பொலிவுடைத்தாகப் பண்ணிப் பாதுகாத்திருப்பது ... | 325 |
| பதிப்படல்—நிலைமைப்படல் ... | 10 |
| பயிரும்—அழைக்கும் ... ... | 260 |
| பயிர்—ஐயம் ... ... ... | 259 |
| பரியலர்—இரங்குவாரல்லர் ... | 139 |
| பரியாதார்—துன்புறாதார் ... | 55 |
| பரியார்—நுண்ணறிவில்லார் ... | 30 |
| பரிவில்லாதார்—கீழோர் | 117—129—298 |
| பலி—புலியிடுங்கல் ... ... | 295 |
| பள்ளி — (முனிவர் வாசம்) — அருந்தவர் இருந்து வாழும் பள்ளி ... ... | 224—393 |
| பனி—துயர் ... ... ... | 42 |
| பனிப்ப—துயருறுவன ... | 44 |
| பாகம்—செம்பாகம் ... ... | 6 |
| பாணித்தல்—காலநீட்டித்தல் | 168—196 |
| பாண்சேரி — பாணரிருந்தசேரி. | 115 |
| பாத்தி—பகுதிபண்ணி ... ... | 93 |
| பாவை—சித்திரம் ... | 193—259 |
| பான்மேனியான் — பால்வண்ணன்—பலராமன் ... ... | 137 |
| பிடிப்பூணி—கைப்பாணிகொண்டுதவழ்வான் ... ... | 16 |
| பிரம்பூரி—ஒருவகை நெல் ... | 399 |
| புகர்வு—சோறு ... ... | 381 |
| புகுதும்—புகுதுமின் ... ... | 290 |
| புல்லம்—ஆனேறு ... ... | 231 |
| புலைப்பொருள் — புலையர்மாட்டுள்ள பொருள் ... ... | 340 |
| புறம்—அரண் ... ... | 364 |
| புறனழீஇ—புறங்கூறி ... ... | 115 |
| பூமி குறிகாண்டல் — விளைநிலத்தை இன்னதுணையென் றறிதல் ... ... ... | 185 |
| பூல்—பூலா—ஓர் செடி ... | 268 |
| பேது—மயக்கம் ... ... | 384 |
| பொதுமக்கள்—சிறப்பில்லாத மக்கள் ... ... | 7—119 |
| பொறி—வினை ... | 228—237 |
| —புண்ணியம் ... ... | 323 |
| —திரு ... ... ... | 231 |
| பொறித்தல் — பொலிவுபெறச் செய்தல் ... ... ... | 26 |
| பொற்ப—மாட்சிமைப்பட ... | 73 |
| பொற்ப—நல்லன ... ... | 31 |
| போகம் பொறியார் — செல்வம் போகக்கடவ வினையையுடையார் ... ... ... | 237 |
| மடியல்—முயற்சி தவிர்தல் ... | 153 |
| மடிகோள்—சோம்புகோடல் ... | 151 |
| மண்ணல்—வெட்டுதல் ... | 215 |
| மரம்—ஓடம் ... ... ... | 1 |
| மரிசாதி—மரியாதி — மரியாதை—நீதி ... ... ... | 118 |
| மரையா—பெண்மான் ... | 79 |

பதம். செய்யுள்.
மனைமரமாயமருந்து — மனையின் கண் நின்ற மருந்தாய மரம். 350
மன்றிவிடல் — தண்டஞ் செய்தல் ... ... ... 288
மா—செல்வம் ... ... 218
மாண்டிலார்—மாட்சிமையுடையரல்லார் ... ... ... 84
மாலை—மயக்கம் ... ... 384
மால்—பெரிய ... ... 78
மாற்றம்—பகை ... ... 307
மாற்றல்—வார்த்தை சொல்லல். 20
மீக் கூற்றம் — வாயாலடர்த்துச் சொல்லும் சொலவு. தம்மை மிகுத்துக் கூறும் தமதாணை. 251
மீதூர்தல் — அடர்த்தல்—நெருங்கல்—கொல்லல் 248–302–316–319
மீன்—நட்சத்திரம் ... ... 27
முசு—ஒருசாதிக் குரங்கு ... 57
முடலை—(மன) வலிமை ... 25
முட்டு—குறைவு 134. இடையூறு ... ... ... 366
முனிந்தார்—இரமற்றார் ... 182
முற்றல்—முற்றனவுடையோன். 171
முற்றும்—சூழ்ந்த ... ... 39
முன்றில்—மனை ... ... 381
முன்னி—முந்தி ... ... 19
மூன்று—மனமொழிமெய்—388—விருந்து புறந்தருதல் தெய்வச்சிறப்பு இரந்தவர்க்குதவல் ... ... ... 392
மென் கண்ணன்—கண்ணோட்டமுள்ளவன் ... ... 241
மேகல்—பிறங்கிய கல் ... 187
மைம்மைப்பு — தோன்றிற்றுந் தோன்றாதுமாங் கண்ணின் தன்மை ... ... ... 298
மையல்—பித்து ... ... 119
யாண்டு—காலம் ... ... 101
வடிந்தற—கோதற ... ... 161
வட்டித்தார்—புடைத்தார் ... 326
வட்டு-வட்டாட்டம் ... ... 176
வயமா—புலி ... ... ... 383
வரையகம்-எல்லையிடம் ... 39
வலியலாந் தாயம்—வலிதன்றாமக்காலம் ... ... 302
வல்—கடிதாக ... ... 374
வளா—வளைத்து ... ... 256
வழிப்படரும்-பின்செல்லும் ... 17
வளி—வாதநோய் ... ... 38
வற்கென்ற—வலிதாகிய ... 222
வற்பம்—பஞ்சம் ... ... 70
வன்பாட்டவர்—வலிய தகைமையை யுடையார் ... ... 300
வாங்குநீர்—வளைந்தநீர் ... 52
வாய்—அளவு—மெய் ... ... 349
வாய்வாளார் — வாயாலொன்றும் பேசாதவர் ... ... 302
விண்டல்—விடுதல் ... ... 140
வியம்—ஏவல் ... ... 167
விரகர்—சுற்றத்தார் ... ... 123
விழுத்தொடையர் — சீரிய தொடர்ச்சியை யுடையார் ... 84
விளிந்தார்—வெகுண்டார் ... 182
விறல் விசும்பு—மிக்க விசும்பு. 155
வீறு—புண்ணியம் ... ... 236
வெண்படைக்கோள் — பாவாகக் கட்டுதல் ... ... ... 125
வெண்பாட்டம்—(பாட்டம்-அச்சல்) வெண்மேகம் ... 300
வெள்ளம்-ஓரெண் ... ... 297
வெறியொலி—வெறியாட்டொலி. 292
வேள்—கலியாணம் ... ... 360
வேற்றுமை—பகை ... ... 44
வை—வைக்கோல் ... ... 265
வைப்பு — உதவும் வைப்பு — நிதி ... ... 282–358

# பழமொழி

## செய்யுள் முதற்குறிப்பகராதி


| முதற்குறிப்பு. | செய்யுள். |
| --- | --- |
| அகத்தாலழிவு ... | ... 329 |
| அகந்தூய்மை ... | ... 175 |
| அகலமுடைய ... | ... 21 |
| அங்கண்விசும்பின் ... | ... 229 |
| அங்கோழவிர்தொடி ... | ... 250 |
| அடங்கியகப்பட ... | ... 388 |
| அடர்ந்துவறியராய் ... | ... 82 |
| அடுத்தொன்... ... | ... 377 |
| அடையப்பயின் ... | ... 223 |
| அடையவடைந்தாரை | ... 246 |
| அமர்நின்றபோழ்தி ... | ... 317 |
| அமர்விலங்கி ... | ... 322 |
| அமையாவிடத் ... | ... 207 |
| அருமையுடைய ... | ... 198 |
| அருவிலைமாண் ... | ... 33 |
| அருளுடையாரு ... | ... 199 |
| அல்லதுசெய்வார் ... | ... 213 |
| அல்லவொருவர் ... | ... 350 |
| அல்லவைசெய்ப ... | ... 101 |
| அல்லவையுள் ... | ... 28 |
| அறஞ்செய்பவர் ... | ... 364 |
| அறிவன்றழகன் ... | ... 60 |
| அறிவினால் ... ... | ... 26 |
| அற்றாகநோக்கி ... | ... 370 |
| அன்பறிந்தபின் ... | ... 179 |
| அன்பின் ... ... | ... 166 |
| ஆஅமெனக் ... ... | ... 188 |
| ஆஅய்வளர்ந்த .. | ... 281 |
| ஆருஞ்சமயத்தார் ... | ... 287 |
| ஆணமுடைய ... | ... 29 |
| ஆணியாக்கொண்ட ... | .. 168 |
| ஆண்டகைமன்னரை | ... 278 |
| ஆண்டீண்டெடன ... | ... 84 |
| ஆமாலோவென்று ... | ... 61 |
| ஆயிரவரானு ... | ... 27 |
| ஆய்ந்தவறிவி ... | ... 57 |
| ஆவிற்கரும்பனி ... | ... 42 |
| ஆரூச்சினத்தன் ... | ... 52 |
| ஆற்றப்பெரியார் ... | ... 291 |
| ஆற்றவினைசெய் ... | ... 318 |
| ஆற்றவுங்கற்றார் ... | ... 4 |
| ஆற்றாரிவரென் ... | ... 45 |
| ஆற்றுந்தகைய ... | ... 286 |
| ஆற்றுமிளமை ... | ... 1 |
| இகலின்வலியாரை ... | ... 293 |
| இசைவகொடுப்ப ... | ... 225 |
| இஞ்சியடைந்து ... | ... 320 |
| இடுகுடைத்தேர் ... | ... 276 |
| இடையீடுடையார் ... | ... 138 |
| இணரோங்கி ... | ... 72 |
| இதுமன்னும் ... | ... 285 |
| இம்மைத்தவம் ... | ... 371 |
| இம்மைப்பழியும் ... | ... 298 |
| இயற்பகைவெல் ... | ... 306 |
| இரப்பவர்க்கீய ... | ... 378 |
| இரவலர்தம்வரிசை ... | ... 379 |
| இருகயலுண்க ... | ... 326 |
| இல்வாழ்க்கை ... | ... 390 |
| இறப்பச்சிறியவர் ... | ... 51 |
| இறப்பவெமக் ... | ... 87 |
| இனியாருமில்லாதார்... | ... 153 |
| இனியாரையுற்ற ... | ... 127 |

| முதற்குறிப்பு. | செய்யுள். | முதற்குறிப்பு. | செய்யுள். |
|---|---|---|---|
| இன்றியமையா ... | ... 369 | எவ்வந்துணை ... | ... 227 |
| ஈட்டியவொண் ... | ... 81 | எனக்குத்தகவன் ... | ... 76 |
| ஈனுலகத்தாயி ... | ... 360 | எனைப்பலவே ... | ... 187 |
| உடுக்கைமருந்து ... | ... 338 | எனைப்பல்பிறப்பினும் | ... 396 |
| உடைப்பெருஞ் ... | ... 255 | ஏற்றார்கட்கெல்லாம்... | ... 382 |
| உடையதனை ... | ... 200 | ஒக்கும்வகையானு ... | ... 332 |
| உணற்கினிய ... | ... 5 | ஒட்டியகாதல் ... | ... 124 |
| உரிஞ்சிநடப் ... | ... 41 | ஒருவருரைப்ப ... | ... 18 |
| உரிதனிற் ... ... | ... 328 | ஒருவனுணரா ... | ... 186 |
| உருத்தெழு ... ... | ... 321 | ஒல்லாதவின்றி ... | ... 197 |
| உரைசான்ற... ... | ... 122 | ஒளியாரை ... ... | ... 248 |
| உரைத்தவர்... ... | ... 295 | ஒற்கப்பட்டாற்றார் ... | ... 222 |
| உரைத்தாரை ... | ... 316 | ஒற்கந்தாமுற்ற ... | ... 70 |
| உரைமுடிவு ... | ... 6 | ஒன்றால்சிறிதால் ... | ... 152 |
| உலப்பிலுலகத் ... | ... 363 | ஒன்றாரடநின்ற ... | ... 308 |
| உவப்பஉடன் ... | ... 270 | ஓதநீர்வேலி ... ... | ... 398 |
| உழந்ததூஉம் ... | ... 100 | ஒருமொருவர் ... | ... 146 |
| உழையிருந்து ... | ... 176 | ஓர்த்தகருத்தும் ... | ... 94 |
| உளையவுரைத்து ... | ... 353 | கடங்கொண்ட ... | ... 212 |
| உள்ளதொரு ... | ... 340 | கடுப்பத்தலைக்கீறி ... | ... 189 |
| உள்ளூரவரால் ... | ... 202 | கட்டுடைத்தாக ... | ... 173 |
| உறாஅவகையது ... | ... 283 | கண்டறிவார் ... | ... 140 |
| உறுகண்பலவு ... | ... 323 | கண்ணில்கயவர் ... | ... 109 |
| உறுமக்களாக ... | ... 121 | கண்ணுண்மணி ... | ... 135 |
| உற்றதற்செல் ... | ... 53 | கரப்புடையார் ... | ... 373 |
| உற்றாலிறைவற் ... | ... 312 | கருந்தொழிலராய் ... | ... 97 |
| உற்றானுறாஅனெனல் | ... 172 | கருவினுட்கொண்டு ... | ... 355 |
| ஊக்கிஉழந்தொரு ... | ... 208 | கல்லாதவரிடை ... | ... 15 |
| ஊழாயினாரை ... | ... 104 | கல்லாதான் கண்ட கழிநுட்பங் கற்றார் ... ... | ... 12 |
| எங்கணொன்றில்லை ... | ... 156 | கல்லாதான் கண்ட கழிநுட்பங் காட்டரிதால் ... | ... 13 |
| எங்கண்இனையர் ... | ... 241 | கல்லாதுங்கேளாதும்... | ... 20 |
| எண்ணக்குறைபடா ... | ... 387 | கல்வியகலமும் ... | ... 258 |
| எதிர்த்தபகையை ... | ... 286 | கல்வியானாய ... | ... 14 |
| எந்நெறியானும் ... | ... 331 | கழுமலத்தில் ... | ... 230 |
| எமக்குத்துணை ... | ... 149 | களமர் ... ... | ... 208 |
| எமரிதுசெய்க ... | ... 268 | கள்ளியகிலும் ... | ... 85 |
| எய்தாநகை ... ... | ... 54 | கறுத்தாற்றி ... ... | ... 59 |
| எய்ப்புழி ... ... | ... 136 | | |
| எல்லாத்திறத்து ... | ... 62 | | |
| எல்லையொன் ... | ... 256 | | |

| முதற்குறிப்பு. | செய்யுள். |
|---|---|
| கற்றதொன்றின்றிவிடினுங் கருமத்தை ... ... ... | 150 |
| கற்றதொன்றின்றிவிடினுங்குடிப் பிறந்தார் ... ... ... | 73 |
| கற்றறிந்தார் ... ... ... | 9 |
| கற்றூர்பலரை ... ... | 260 |
| கற்றூற்று ... ... ... | 16 |
| கற்றூனும் ... ... ... | 11 |
| கன்றிமுதிர்ந்த ... ... | 80 |
| காடுறைவாழ்க்கை ... ... | 96 |
| காட்டிக்கருமங் ... ... | 170 |
| காத்தாற்று ... ... ... | 319 |
| கீரப்பான்மடகள் ... ... | 147 |
| காப்பிகந்தோடி ... ... | 386 |
| காவலனையாக ... ... | 274 |
| காழாரமார்ப ... ... | 59 |
| குரைத்துக்கொள ... ... | 234 |
| குலத்துச்சிறியார் ... ... | 111 |
| கூஉய்க்கொடு ... ... | 376 |
| கூறிவிஞர் ... ... ... | 102 |
| கூற்றுமுயிர் ... ... ... | 254 |
| கெடுவல் ... ... ... | 39 |
| கேட்பாரை ... ... ... | 17 |
| கையார ... ... ... | 56 |
| கைவிட்ட ... ... ... | 211 |
| கொடித்திண் ... ... | 266 |
| கொடையும்... ... ... | 325 |
| கொண்டொழுகு ... ... | 392 |
| கொழித்துக்கொள ... ... | 130 |
| கோவாதசொல்லும் ... ... | 116 |
| சாலமறைத் ... ... ... | 242 |
| சிறப்புடை ... ... ... | 275 |
| சிறந்ததஞ் ... ... ... | 395 |
| சிறந்தநுகர் ... ... ... | 357 |
| சிறிதாயகூழ்... ... ... | 190 |
| சிறியபொருள் ... ... | 372 |
| சிறியவரெய்திய ... ... | 89 |
| சீர்த்தருமன்னர் ... ... | 277 |
| சுடப்பட் ... ... ... | 239 |
| சுட்டிச்சொல ... ... | 228 |
| சுற்றத்தார் ... ... ... | 177 |
| செங்கீரார் ... ... ... | 162 |
| செம்மரந்து ... ... ... | 315 |
| செயல்வேண்டா ... ... | 263 |
| செயிராறுசெங் ... ... | 259 |
| செய்தகருமம் ... ... | 65 |
| செய்தகொடுமை ... ... | 118 |
| செருக்குடைய ... ... | 278 |
| செருக்கெழு ... ... | 271 |
| செல்லற்க ... ... ... | 195 |
| செல்வத்துணை ... ... | 393 |
| செறலிற்கொலைபுரி ... ... | 343 |
| செறிவுகூட்டத்தார் ... ... | 264 |
| சேர்ந்தாரொரு ... ... | 249 |
| சொல்லாமை ... ... | 330 |
| சொல்லெதிர்ந்து ... ... | 112 |
| சொற்றொறும் ... ... | 2 |
| தக்கமில் ... ... ... | 362 |
| தக்காரோ ... ... ... | 91 |
| தங்குற்றம் ... ... ... | 38 |
| தத்தமக்கு ... ... ... | 339 |
| தந்தம்பொருளும் ... ... | 205 |
| தந்தீமையில்லாதார் ... ... | 132 |
| தந்தொழிலாற்றும் ... ... | 92 |
| தந்நடைநோக்கார் ... ... | 36 |
| தமக்குற்றதே ... ... | 348 |
| தமரல்லவுரை ... ... | 289 |
| தமராலுந்தம் ... ... | 226 |
| தமரேயுந் ... ... ... | 66 |
| தமனென்றிரு ... ... | 345 |
| தம்மான்முடிவ ... ... | 159 |
| தருக்கியொழுகி ... ... | 120 |
| தலைக்கொண்ட ... ... | 158 |
| தலைமைகருதும் ... ... | 253 |
| தழங்குகுரல் ... ... | 296 |
| தற்றூக்கி ... ... ... | 154 |
| தன்னலிகிற்பான் ... ... | 304 |
| தன்னின்வலியானை ... ... | 324 |
| தன்னைமதித்து ... ... | 354 |
| தாக்குற்றபோழ்தில் ... ... | 115 |

| முதற்குறிப்பு. | செய்யுள். | முதற்குறிப்பு. | செய்யுள். |
|---|---|---|---|
| தாநட்டொழுகுதற்கு... | ... 128 | நற்கறிவில்லாரை ... | ... 28 |
| தாமசத்தால் ... ... | ... 189 | நற்பாலகற்றுரு ... | ... 184 |
| தாமாற்றகில் ... | ... 163 | நனியஞ்சத்தக்க ... | ... 240 |
| தாமேயுந்தம்மை ... | ... 282 | நன்கொன்றறி ... | ... 344 |
| தாயானும் ... ... | ... 67 | நன்றேயொருவர் ... | ... 341 |
| தாரேற்றநீண்மார்பி ... | ... 314 | நாடறியப்பட்ட ... | ... 204 |
| திரியுமிடிஞ்சிலு ... | ... 397 | நாடிநமரென்று ... | ... 346 |
| திருந்தாய்நீ ... ... | ... 110 | நாட்டிக்கொள ... | ... 174 |
| தீப்பால்வினை ... | ... 77 | நாணூர்பரியார் ... | ... 118 |
| தீர்ந்தேமென ... | ... 129 | நாணின்றியா ... | ... 327 |
| தீயனவல்ல ... ... | ... 265 | நாவின் ... ... | ... 218 |
| துயிலும்பொழுதத்து ... | ... 194 | நிரந்துவழி ... ... | ... 103 |
| துன்னியிருவா ... | ... 19 | நிரம்பநீரைய ... | ... 288 |
| தூய்மைமனத்தவர் ... | ... 385 | நிரைதொடி .. ... | .. 79 |
| தெரியாதவர் ... ... | ... 55 | நிலத்தின்மிகை ... | ... 157 |
| தெரியாதார் ... ... | ... 117 | நிலைஇய ... ... | ... 165 |
| தெரிவுடையாரோடு ... | ... 80 | நிறையான்மிகு ... | ... 336 |
| தெருளாதொழுகும் ... | ... 196 | நினைத்தநிது ... ... | ... 375 |
| தெள்ளியுணரும் ... | ... 408 | நீர்த்தகவில் ... ... | ... 49 |
| தெற்றப்பகைவரிடர் ... | ... 86 | நீர்த்தன்றொரு ... | ... 37 |
| தெற்றப்பரிந்தொரு ... | ... 183 | நீரூர்ந்தும் ... ... | ... 69 |
| தெற்றவறிவுடையார் ... | ... 171 | நூக்கியவர் ... ... | ... 311 |
| தெற்றவொருவரை ... | ... 95 | நெடியதுகாண் ... | ... 46 |
| தேர்ந்துகண் ... | ... 123 | நெடுங்காலம் ... | ... 64 |
| தொடித்தோள் ... | ... 333 | நெறியாலுணராது ... | ... 107 |
| தொடிமுன்கை ... | ... 209 | நோக்கியறிகல்லா ... | ... 145 |
| தொடுத்தபெரும் ... | ... 380 | நோக்கியிருந்தார் ... | ... 368 |
| தொன்மையின் ... | ... 214 | நோவவுரைத்தாரை ... | ... 58 |
| தோற்றத்தால் ... | ... 47 | படரும்பிறப்பிற் ... | ... 219 |
| தோற்றமரிதாய ... | ... 365 | பட்டவகையால் ... | ... 366 |
| தோற்றம்பெரிய ... | ... 385 | பண்டின்னரென்று ... | ... 347 |
| நடலையிலராகி ... | ... 25 | பண்டுருத்து... ... | ... 239 |
| நட்டாரையாக்கி ... | ... 389 | பயனொக்கா ... ... | ... 388 |
| நண்பொன்றி ... | ... 131 | பரந்திறலாரை ... | ... 82 |
| நயவரநட்டொழு ... | ... 180 | பரந்தவர் ... ... | ... 390 |
| நவிந்தொருவர் ... | ... 309 | பரியப்படுபவர் ... | ... 85 |
| நல்கூர்ந்தவர் ... | ... 337 | பலநாளுமாற்று ... | ... 367 |
| நல்லவுந்தீயவும் ... | ... 261 | பல்கிளையுள் ... | ... 68 |
| நல்லவைகண்டு ... | ... 24 | பல்லாண்டு ... ... | ... 374 |
| நல்லார்கலத்தை ... | ... 8 | பல்லாரவை :.. ... | ... 75 |

| முதற்குறிப்பு. | செய்யுள். | முதற்குறிப்பு. | செய்யுள். |
|---|---|---|---|
| பன்னாளும்நின்ற ... | ... 288 | மாணப்பகைவரை ... | ... 99 |
| பன்னாள்தொழில் ... | ... 279 | மாய்வதன்முன் ... | ... 361 |
| பாப்புக்கொடியாற்கு... | ... 137 | மாறியொன்றின்றி ... | ... 381 |
| பாரதத்துள்ளும் ... | ... 356 | மாற்றத்தை ... ... | ... 307 |
| பாற்பட்டுவாழ்ப ... | ... 245 | மானமுநாணும் ... | ... 22 |
| புரையக்கலந்தவ: ... | ... 164 | மிக்கபழி ... ... | ... 98 |
| புரையின்றிநட்டார் ... | ... 125 | மிக்குடையராகி ... | ... 48 |
| புலமிக்கவரை ... | ... 7 | மிக்குப்பெருகி ... | ... 90 |
| புன்சொல்லு ... | ... 191 | முகம்புறத்து ... | ... 290 |
| பூத்தாலுங்காயா ... | ... 93 | முடிந்ததற்கில்லை ... | ... 161 |
| பூந்தண்புனற்புகார் ... | ... 185 | முட்டின்றொருவர் ... | ... 134 |
| பூவுக்குங்கண்ணாய் ... | ... 43 | முதுமக்க ... | ... 119 |
| பெரியகுடிப்பிறந்தார் | ... 88 | முயலவோ ... ... | ... 148 |
| பெரியநட்டார் ... | ... 141 | முல்லைக்குத்தேரு ... | ... 74 |
| பெரியாரைச் சார்ந்தார் | ... 292 | முழவொலி ... ... | ... 217 |
| பெரியார்க்குச்செய்யும் | ... 105 | முழுதுடன் ... ... | ... 16) |
| பெருமலைநாட ... | ... 181 | முறைதெரிந்து ... | ... 243 |
| பெற்றாலுஞ்செல்வம்... | ... 215 | முற்பெரிய ... ... | ... 232 |
| பேதுறவுதீர... ... | ... 106 | முன்னலிந்தாற்ற ... | ... 287 |
| பேருலையுட்பெய்த ... | ... 142 | முன்னின்னார் ... | ... 352 |
| பொருத்தமழியாத ... | ... 244 | முன்னும் ... ... | ... 68 |
| பொருந்தாதவரை ... | ... 299 | முன்னையுடை ... | ... 210 |
| பொருந்தாப்பழி ... | ... 40 | மெய்ந்நீரராகி ... | ... 192 |
| பொருளல்லார ... | ... 284 | மெய்ம்மையேநின்று ... | ... 280 |
| பொலந்தாரிராமன் ... | ... 257 | மெய்யாவுணரிற் ... | ... 351 |
| பொல்லாதசொல்லி ... | ... 114 | மொய்கொண்டெழுந்த | ... 83 |
| பொற்பவும்பொல்லாத | ... 31 | யாந்தியசெய்த ... | ... 143 |
| மடங்கிப்பசி ... | ... 78 | யாவரேயாலும் ... | ... 193 |
| மடியைவியங் ... | ... 167 | யானுமற்றிவ்விருந்த ... | ... 305 |
| மரம்போல் ... ... | ... 224 | வருவாய் ... ... | ... 201 |
| மல்லற்பெருஞ் ... | ... 359 | வரைபுரை ... ... | ... 318 |
| மறந்தானும் ... ... | ... 206 | வலியாரை ... ... | ... 302 |
| மறுஅதவனும் ... | ... 384 | வழங்கலும் ... ... | ... 216 |
| மறுமனத்த ... ... | ... 249 | வழங்கார் ... ... | ... 221 |
| மறுமையொன் ... | ... 108 | வழிப்பட்டவரை . . | ... 252 |
| மறையாகினிதுரைத்தல் | ... 319 | வளமைபு ... .. | ... 391 |
| மனங்கொண்ட ... | ... 188 | வன்சார்பு ... ... | ... 285 |
| மனத்தினும்வா ... | ... 262 | வன்பாட்டவர் ... | ... 200 |
| மன்னவனை ... | ... 251 | வன்னெஞ்சினார் ... | ... 394 |
| மாடமழிந்தக்கால் ... | ... 71 | வாட்டிறலானை ... | ... 301 |

| முதற்குறிப்பு. | செய்யுள். | முதற்குறிப்பு. | செய்யுள். |
|---|---|---|---|
| விடலரிய ... ... | ... 342 | வீங்குதோட்... ... | ... 155 |
| விடலமை ... ... | ... 269 | வெஞ்சினமன்னவன் ... | ... 281 |
| விட்டுக்கருமம் ... | ... 169 | வெண்குடைக்கீழ் ... | ... 247 |
| விதிப்பட்ட... ... | ... 10 | வெள்ளமாண். ... | ... 178 |
| விரும்பி ... ... | ... 220 | வெள்ளம்பகை ... | ... [illegible]7 |
| விலங்கேயும் ... | ... 126 | வெள்ளம்வருங் ... | ... 144 |
| விழுத்தொடை ... | ... 34 | வெற்றிவேல்... ... | ... 267 |
| விழுமிழைநல்லார் ... | ... 334 | வென்றடுகிற் ... | ... 294 |
| விளக்குவிலை... ... | ... 3 | வேந்தன்மதித்து ... | ... 272 |
| விளிந்தாரேபோல ... | ... 182 | வேளாண்மை ... | ... 151 |
| வினைப்பயன் ... | ... 44 | வைத்ததனை ... ... | ... 358 |


---

## விடுபட்ட சில

### பாடபேதங்கள்

| செய்யுள். | பாரம். | வரி. | பாடம். | பாடபேதம். |
|---|---|---|---|---|
| 116. | பாட்டு | 4. | இடுவாரோ | கெறிவாரோ |
| 135. | பாட்டு | 8. | கொள்வான்வேண்டி | கொள்வானென்று. |
| 136. | பாட்டு | 2 | உதவலார் | உதவலராய்ப். |

PRINTED AT THE DIOCESAN PRESS, VEPERY, MADRAS—1930. B9435.